தேவாரம்

முதல் திருமுறை

THEVARAM



திருவாவடுதுறை ஆதீனம்

1995

C.S.S.

திருவாவடுதுறை ஆதீனம்
சீர் - வளர் - சீர்
குரு மகா சன்னிதானம்
அவர்கள் வாழ்த்தி வழங்கி
அருளியது ....

5 MAR 2003

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனம் குருமுதல்வர்

அருள்திரு நமசிவாயமூர்த்திகள்

மகரத் தலைநாள்

குருபூசை விழாமலர்

பவ - தை - அசுவதி

6 — 2 — 1995

விலை ரூபா. 60-00

குறிப்புரை ஆசிரியர்
திருவாவடுதுறை ஆதீனப் புலவர்
திரு. ஆதி. முருகவேள் எம். ஏ.,
திருச்சிராப்பள்ளி.

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்,
— திருவாவடுதுறை —

வெளியீடு எண். 428.

உ

சிவமயம்

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்

அருளிச் செய்த

தேவாரத் திருப்பதிகங்கள்

முதல் திருமுறை

(அருஞ்சொற்பொருளுடன்)

THE TAMIL HYMNS TO LORD SIVAM

Sung by

St. Thiru Jnana Sambandhar

Vol. I

இது

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்து மூன்றாவது குரு மகாசந்நிதானம்

சீர் வளர் சீர்

சிவப்பிரகாச பண்டாரச் சந்நிதி அவர்கள்

கட்டளையிட்டருளியபடி

வெளியிடப் பெற்றது

திருவாவடுதுறை ஆதீனம்

1995

உ

சிவமயம்

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

— *தவத்திரு மாதவச்சிவஞானயோகிகள்.*

திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனம் குருமுதல்வர்

அருள்திரு நமசிவாயமூர்த்திகள்

உ

சிவமயம்

முன்னுரை

"நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நான் அறிவிச்சையும்
நமச்சிவாயவே நாநவின்று ஏத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே"

— திருநாவுக்கரசர்.

சைவ சமய நெறியில் முதன்மை வாய்ந்த அருள் நூல்கள் இருவகையுள் அடங்கும். ஒன்று தோத்திர நூல்கள் எனப்படும் திருமுறைகள். மற்றது சாத்திர நூல்கள்.

தோத்திர நூல்கள் சிவபெருமானைத் துதிக்கும் பாடல்களின் தொகுப்பு. சாத்திர நூல்கள் சைவ நெறியின் அமைந்துள்ள கோட்பாடுகளை முறைப்படுத்துக் கூறுவன. இரண்டுமே சிவபெருமான் திருவருளால் மக்களுக்குக் கிடைக்கப்பெற்ற அருட் கருவூலங்கள்.

உண்மையை அறிந்துகொள்ளத் துணையாவன **சாத்திரங்கள்**. அவற்றைக் கொண்டு செயல் முறைக்கு வந்து பயன் பெறுவது என்பது பக்குவம் உடையார் சிலர்க்கே வாய்ப்பாகும். அப்படியென்றால் மற்றவர் நிலை என் ஆவது!

சிறப்பாக அவரையும் கருதித் திருவருளால் வெளிப்படுத்தப்பட்டனவே **திருமுறைகள்**. **"என்து உரை தனது**

உரை ஆக'' என்ற திருஞான சம்பந்தப் பெருமான் திருவாக்கால் இஃது துணியப்படும்,

திருமுறைகள் பெரிதும் தோத்திரமாகவே அமைந் திருப்பினும் சாத்திரக் கருத்துக்களையும் ஆங்காங்கே காணலாம். சாத்திரங்களில் போல முறையாகவும் விரிவா கவும் காணமுடியாது ஆயினும் திருமுறைகளை முறையாக அன்போடு ஓதிவருவார்க்கு இன்றியமையாத சாத்திரக் கருத்துக்களை வழங்குவதிலும் அவை குறையவில்லை.

தேவாரம் முதலான திருமுறைகளைப் பொருள் உணர்ந்து ஓதுவார்க்கு இருவகைப் பயன்களும் கைகூடி வரக்காணலாம். அந்த அவர் சைவ சமய அடிப்படைக் கருத்துக்களை அறிகின்றனர். இஃது அறிவுக்குப் பயன். மனித மன இயற்கையின்படி மற்றோர் பெருநன்மையும் விளையக் காணலாம்.

மீண்டும் மீண்டும் தோத்திரப்பாக்களை, திருமுறை களைப் பொருள் உணர்வோடும் மிகுந்த அன்போடும் ஓதி வருவார் மனமும் உணர்வும் படிப்படியாகப் பக்குவம் அடைந்து வருகிறது. திருமுறைகள் அவரைக் கடும் முயற்சி எதுவும் வேண்டாமலே சமய ஒழுக்கத்தில் செவ் வனே செலுத்துகின்றன. சமய ஒழுக்கத்தை மேற் கொண்டு எளிதில் பேற்றினைப்பெற விரும்புவார்க்குத் திருமுறைகள் மிகவும் துணை செய்து நிற்கின்றன.

இந்த உண்மை திருஞான சம்பந்தர் அருளிய பதிகங்களின் திருக்கடைக் காப்புச் செய்யுள்களால் தெளிவாகத் தெரியலாம்.

"திருநெறிய தமிழ் வல்லவர்
தொல்வினை தீர்தல் எளிதாமே" (1-1-11)

என்றது காண்க. இது திருமுறைகளுக்கு ஓர் தனிச் சிறப்பாகும்.

ஆகவே சைவ சமயத்தைத் தம் வாழ்க்கைச் சமயமாகக் கொண்டார்க்கு உற்ற முதற் பொருளாய் இருப்பன சைவத் திருமுறைகள் ஆகும்.

அவை தொகுத்துத்தரப்பட்ட முறையில் பன்னிரண்டாகும். ஆதலால் சைவத் திருமுறைகள் பன்னிரண்டு ஆயிற்று.

திருக்கயிலாய பரம்பரைத் திருஆவடுதுறை ஆதீனம் உலக அளவில் நினைத்தாலும் சைவத் திருமடங்களில் தலைமை சான்றதாகும். சைவ சித்தாந்த முழு நெறியை நந்தி பெருமான் வழி நின்று முறையாகத் தமிழகத்தில் வெளிப்படுத்தியருளிய அருள்திரு மெய்கண்ட தேவர் வழி வந்த ஞானசிரியரால் முதன் முதல் நிறுவப்பட்டது இவ் ஆதீனம்.

இத்திருமடத்தை நிறுவிய முதல் குரவர் அருள்திரு நமசிவாய தேசிகர் ஆவார். அவர்க்குப் பின்னர் அவர் மரபில் வழிவழியாக வந்த அனுபவம் உடைய தேசிகர் பலர் ஞான இருக்கையில் இனிதமர்ந்து சைவத் தமிழ் நெறியினைப் பக்குவம் உடையராய்த் தம்பால் வருவார்க்கெல்லாம் விளக்கம் செய்து வீடு பெறச் செய்து வந்துள்ளனர்.

இத்தகைய ஞான அருளாளர் மரபில் இவ் ஆதீனத்தின் இருபத்து மூன்றாவது குரு மகாசந்நிதானமாக விளங்குபவர்கள் **சீர் வளர் சீர் சிவப்பிரகாச பண்டாரச் சந்நிதி அவர்கள்.**

இறைவன் தான் அமர்ந்திருக்கும் திருக்கோயிலின் இடத்தே தன்னை நாடி வந்தார்க்குத் தனது அருளை வழங்குகின்றான் என்பது மாத்திரம் அன்று. புறத்தேயும் உரிய காலங்களில் உலாப்போந்து அங்கு உற்றார்க்கெல்லாமும் தன் அருளை வழங்கியருள் செய்வதும் காண்கின்றோம்.

அவ்வாறே, இன்று நமக்கெல்லாம் ஞானாசிரியராக வீற்றிருந்தருளும் சீர் வளர் சீர் குரு மகாசந்நிதானம் அவர்கள் இத்திருமடத்தில் தம்பால் நாடி வருவார்க்கு மாத்திரம் அன்றி ஆங்காங்கே இருக்கும் மக்கள் பலர்க்கும் வாய்க்கும் வழியெல்லாம் சமய உணர்வையும், சமய ஒழுக்கத்தில் ஊக்கத்தையும் அருளி வருகின்றார்கள்.

அவர்களின் அருளாணை ஞான வேட்கை உடையார்க்கு மட்டும் அன்றி, இன்றைய உலக வாழ்க்கையிலும் அனைவரும் நெறிப்பட வாழ்ந்து இன்புற வேண்டும் என்ற பெருங்கருணையால் பல்வேறு சமய சமுதாயப் பணிகள் வாயிலாகவும் மக்களை வாழ்வுபெறச் செய்து வருகின்றமையை உலகம் அறியும்.

அந்த முறையில் நூல் வெளியீட்டுப் பணியும் ஒன்று, இவர்கள் காலத்தில் எண்ணற்ற சிறிய பெரிய வெளியீடுகள் மலர்ந்துள்ளன. நீண்ட நாளாகப் பெறுதற்கு இல்லையே என்றிருந்த பழைய ஆதீன வெளியீடுகள் பலவற்றைக் காலத்திற்கு ஏற்றவாறு புதுப்பொலிவுடன் வரச்

செய்துள்ளார்கள். அந்த வரிசையில் ஒன்ருக இன்று மலர்ந்து வருகின்றது **திருஞான சம்பந்தர் தேவாரம் முதல் திருமுறை - அருஞ்சொற்பொருளுடன்** என்ற இந்த வெளியீடு.

நூல் வெளியீட்டு வரிசையில் ஆண்டுதோறும் இவ் **ஆதீனக் குரு முதல்வர் சிவப்பேற்றில் நிறைவுற்றுத் திளைத்த திருநாளான தைத் திங்கள் தலை நாள்** (முதல் நட்சத்திரம்) **ஆன அசுவதி நன்ளுளில்** (மகரத் தலை நாளில்) **நடந்து வரும் குருபூசைத் திருநாளில்** விழா மல ராகக் கடந்த சில ஆண்டுகளாகத் திருமூலரின் திருமந்திர உரையின் புதுப் பதிப்புக்கள் குரு மகாசந்நிதானம் அவர்களின் அருளால் வெளிவந்து பலரையும் மகிழ் வித்தன.

இந்த ஆண்டு முதல் பிற சைவத்திருமுறை களையும் முறையாக வெளியிட்டருளத் திருவுளம் கொண்டார்கள். அந்த முறையில் இவ்வாண்டுக் குரு பூசை மலராக முதல் திருமுறை மலர்ந்து வருகிறது.

இக்காலத்து மக்கள் பலர் நிலைக்கு ஏற்பப் பயன் செய்விக்க வேண்டும் என்ற கருத்தால் பாடல்களைச் சொல் பிரித்தும், அரும் சொல் பொருள் தந்தும் வெளியிடுமாறு பணித்தார்கள்.

சொல் பிரிப்பில் பொருள் உணர்வு இன்றியமை யாதது, திருமுறைகளில் ஆசிரியர் கருத்தினை உள்ள வாறே உணர்வது என்பது எம் போன்ருர்க்கு ஆம் செயல்

அன்று. ஆம் அளவில் பொருள் கருதிப் பிரித்தலே இயல்வதாகும், அவ்வளவில் முயன்றுள்ளேன். இம் முயற்சியில் துணை நின்றது புதுச்சேரி பிரெஞ்சு நிறுவனத்தாரின் தேவார நூல் வெளியீடு. அந் நிறுவனத்தார்க்கும் பதிப்பாசிரியர்க்கும் பெரிதும் கடப்பாடுடையேனுவேன்.

பாடல்களில் சொற்பிரிப்பே முதன்மை பெற்றதால் இலக்கண முறையில் சீர்ப்பிரிவும் பிறவும் அமையப் பெற்றிருக்காது.

அடுத்து அருஞ்சொற்பொருள். மேலே கூறிய வண்ணமே இயன்ற அளவில் முயன்றுள்ளேன். இதற்கு உதவியாயிருந்தது தருமையாதீனப் பதிப்பு. இவ்வகைக்கு உதவியாயிருந்த தருமை ஆதீனத்திற்கும் குறிப்புரை ஆசிரியர் மகா வித்துவான் உயர்திரு ச. தண்டபாணி தேசிகர் அவர்கட்கும் அடியேனது நன்றியுணர்வு என்றும் உரியதாகும்.

அருஞ் சொற் பொருள் எழுதுங்கால் திருவருள் துணையால் விளங்கிக் கொண்ட இடங்கள் அன்றி விளங்கிக் கொள்ள முடியாதுபோன இடங்களும் பல உள. அதே போன்று ஒரு பதிகம் முழுவதுமே (127 ஆம் பதிகம் - ஏகபாதம்) பழைய உரை இருந்தும், அதனையும் அடியேன் அறிவின் போக்கிலே கொள்ளாது ஓதும் அன்பரின் உரிமைக்கே விட்டுள்ளேன்.

திருமுறைப் பாடல்களின் பொருள் உணர்வு அவரவர் பக்குவத்திற்கும் அதன் வழி விளக்கி நிற்கும் திருவருட்கும் பொருந்தவே அமையும். ஆதலின், இப்பதிப்பில் காண்பதே முடிவு என்பது ஆகாது. சிந்திப்பார்க்கு இந்த முயற்சி ஒரு சிறு தூண்டுகோலாய் அமையும்.

பொருந்தாமையும் பிழைபாடும் அன்பர்க்குத் தோன்றும் அவற்றையும் மேலும் சிறந்தனவாகக் கொள்ளத் தக்கன அறிந்தால் அவற்றையும் அருள் கூர்ந்து அடியேற்கு உணர்த்தியருள வேண்டிக்கொள்வேன்.

எம்போலியர்க்கு எளிதலாத ஒரு பெரும் பணியை, அடியோன் தகுதி நோக்காது, இவ்வாற்றானும் இன்னும் திருத்தம் பெறவும், சிவபெருமான் திருவருட்கு அவ்வளவிலேனும் ஆளாகவும் சிறந்ததோர் வழியாக அமைத்து அருளிவரும் சீர் வளர் சீர் குரு மகாசந்நிதானம் அவர்களின் பொன்னர் திருவடி மலர்களைச் சென்னிமேல் கொண்டு வணங்கி மகிழ்வேன்.

அடியேன்,

ஆதி. முருகவேள்,

ஆதீனப் புலவர்.

Sivamayam

PREFACE

The Sacred Tamil Literature on Saiva Religion of Tamil Land have been classified into two categories. One is named as *Thirumurai*. The other is specified as *Sitthantha Satthiram*.

The former one is a compilation of the hymns to Lord Sivan where as the latter one is a collection of philosophical treatises on Saiva Sitthantham, the doctrinal literature of Saiva Religion, pertained to the Tamils.

There are twelve Thirumurais, the major Portion of which is the collection of the devotional songs of the Tamil Saivite Mystics. The first seven of them are collectively referred to as Moovar Thevaram, or Moovar Thamizh.

The hymns of Thevaram are the poeting expressions together with musical elements,

sung by three mystic poets, and so the name Moovar Thevaram.

The three mystics are *St. Thiru Jnana Sambandhar, St. Thiru Navukkarasar* and *St. Sundarar.*

The Thevaram of St. Sambandhar consists in three volumes, and so the first three Thirumurais. The fourth, fifth and the sixth are authored by St. Navukkarasar. And the seventh one belongs to St. Sundarar.

These three, and including another one, the fourth Saintly Poet named as St. Manickavasagar, whose devotional songs are collectively known as Thiruvasakam, are popularly known as Saiva Samaya Aasiriyanmar.

Of the twofold canonical literature of Tamil Saivam, Satthirams are more helpful to one, only in knowing the truth, but not much in the religious conduct, as they are philosophical. With the knowledge gained from those works, no one, except a few aspirants, could progress on the pathway to God, the Final Goal.

Thirumurais differ from this. They are helpful to one in awaring the truth, but not systematically, but more than that, they lead everyone to the attainment of the Eternal Bliss.

Those who recite the verses of Thirumurais repeatedly with an awareness of the sense of the songs, and with intense devotion, get into matureness in his self, by gradation, and finally enjoy the communion with the supreme one, Sivam, This is the uniqueness of the Saiva-th-Thirumurais.

Thiru Avaduthurai Adheenam is the foremost mutt among the Saiva institutions. The Founder Head of this Adheenam Arul Thiru Nsmasivaya Desigar comes under the chronological order of the preceptors of Saiva Sitthantham, headed by Lord Sivam Himself.

In the line of those preceptors, the 23rd Guru Maha Sannidhanam of this Adheenam, His Holiness *Seer Valar Seer Sivaprakasa Pandara Sannithi* avarkal is the present head of the mutt.

His Holiness is more practical than theoritical; just like a bridge between traditionalism and modernism; embraces all the people by gracious services.

It is a tradition to publish a book from the sacred works on Saivam on the auspicious day of Aswathi in the month of Thai. every year, the day on which the Founder Head of this Adheenam, Arul Thiru Namasivaya Desikar attained the Sacred Feet of Siva Peruman.

Last year, Thirumanthiram of Thirumular, was presented on the Guru Puja Day.

This year, the 1st Vol. of the Thevaram of St. Thiru Jnana Sambandhar blossoms by the grace of our Guru Maha Sannidhanam.

This is truely a timely gift to the Tamil knowing people who are in thirst of getting Thevaram editions for many years.

We are more indebted to our Guru Maha Sannidhanam on this occasion and we live for ever in his Glorious Light.

உ

சிவமயம்

உள்ளுறை

		பக்கம்
i.	முன்னுரை	ரு
ii.	பதிக அட்டவணை	கஎ
iii.	தல அட்டவணை	கஅ
iv.	நூல்	1 - 699
v.	பாட்டு முதற்குறிப்பு அகராதி	700

உ

சிவமயம்

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்.

(முதல் திருமுறை)

பண் - பக்கம்

எண்.	பண்கள்	பதிகங்கள்	பக்கம்
1.	நட்டபாடை	22	1-147
2.	தக்கராகம்	24	148-262
3.	பழந்தக்கராகம்	16	263-348
4.	தக்கேசி	12	349-418
5.	குறிஞ்சி	29	419-539
6.	வியாழக் குறிஞ்சி	25	540-655
7.	மேகராகக் குறிஞ்சி	7	656-693
8.	யாழ்மூரி	1	694-699

உ

சிவமயம்

தல அட்டவணை

அச்சிறுபாக்கம் 432
அண்ணுமலை 57,383
அதிகைவீரட்டானம் 258
அம்பர்மாகாளம் 462
அன்பிலாலந்துறை 189
அன்னியூர் 506
ஆப்பனூர் 481
ஆரூர் 492,,545
ஆலங்காடு 252
ஆலவாய் 501
ஆவூர்ப்பசுபதீச்சரம் 45
இடும்பாவனம் 103
இடைச்சுரம் 439
இடைமருதூர் 185, 503, 565, 614, 618
இராமநதீச்சுரம் 585
இலம்பையங்கோட் 425
ஈங்கோய்மலை 389
ஊறல் 549
எருக்கத்தம்புலியூர் 485
ஐயாறு 201, 610, 663
ஒத்தூர் 305
கச்சிஏகம்பம் 681
கடைமுடி 569
கண்ணார்கோயில் 526
கயிலாயம் 378
கரவீரம் 321
கழுக்குன்றம் 536
கள்ளில் 606
கற்குடி 239
காட்டுப்பள்ளி 27
காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம் 361
கானூர் 407
குடந்தைக்காரோண 401
குரங்கணின்முட்டம் 180
குற்ருலம் 518
கொடிமாடச்செங் குன்றூர் 553
கொடுங்குன்றம் 85
கோயில் 451
கோலக்கா 148
கோளிலி 343
சிராப்பள்ளி 513
சிவபுரம் 132. 573. 630
செங்காட்டங்குடி 33, 337
செம்பொன்பள்ளி 156
சேய்ஞலூர் 269
சோபுரம் 287
சோற்றுத்துறை 168
தருமபுரம் 694

தூங்கானைமாடம் 325
நல்லம் 470
நல்லூர் 474
நள்ளாறு 39. 275
நறையூர்ச்சித்தீச்சரம் 172, 395
நாகைக்காரோணம் 466
நின்றியூர் 110
நெடுங்களம் 294
நெய்த்தானம் 91
பரங்குன்றம் 522
பராய்த்துறை 690
பருப்பதம் 601
பழனம் 372
பறியலூர் 686
பனையூர் 205
பாச்சிலாச்சிராமம் 245
பாதாளீச்சரம் 557
பாம்புரம் 227
பாற்றுத்துறை 313
பிரமபுரம் 1, 349, 489 594. 645, 648
வேணுபுரம் 51
புகலி 176. 540
வெங்குரு 419
தோணிபுரம் 331
சிரபுரம் 263, 561
புறவம் 413, 509
சண்பைநகர் 367
சீகாழி 152, 193, 455 531
கழுமலம் 116, 445, 634 656
புகலூர் 8
புத்தூர் 160
புள்ளமங்கை 97
புன்கூர் 164
பூவணம் 355
பேணுபெருந்துறை 233
பொது 589
மயிலாடுதுறை 209
மருகல் 33
மறைக்காடு 140
மாற்பேறு 309, 581
முதுகுன்றம் 72, 300, 498 669
வடுகூர் 478
வலிதாயம் 14
வலிவலம் 281, 622
ல்லம் 577
வாழ்கொளிபுத்தூர் 221
வியலூர் 79
வீழிமிழலை 21, 63, 125 197, 458, 495, 626 675
வேட்களம் 214
வேற்காடு 317

உ

சிவமயம்

திருஞானசம்பந்த சுவாமிகள் வாழ்த்து

பரசமய கோளரியைப் பாலரு
வாயனைப்பூம் பழனம்சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப்
பெருமானைத் தேயம்எல்லாம்
குரவையிட்த் தமிழ்வேதம் விரித்துஅருளும்
கவுணியர்தம் குலதீபத்தை
விரவிஎமை ஆளுடைய வென்றிமழ
இளம்களிற்றை விரும்பிவாழ்வாம்.

— தவத்திரு மாதவச் சிவஞான யோகிகள்

உ

சிவமயம்

திருஞானசம்பந்தர் வரலாற்றுக் குறிப்பு

நாடு	:	தமிழ்நாடு – சோழமண்டலம்
மாவட்டம்	:	தஞ்சாவூர்
நகரம்	:	சீகாழி
காலம்	:	7 ஆம் நூற்றாண்டு கி. பி. 638-654
குலம்	:	மறையவர்
கோத்திரம்	:	கவுணியர்
தந்தையார்	:	சிவபாத இருதயர்
தாயார்	:	பகவதியார்
பிறந்த நாள்	:	திருஆதிரை

பிறப்பின் மேன்மை :

வேத நெறி தழைத்து ஓங்கவும், மேலான சைவத்துறை விளங்கிநிற்கவும், தமிழ் வழக்கே அயல் மொழி வழக்கினை வென்று உயரவும், இறைவன் திருவருள் எங்கும் விளங்கவும் பிறந் தருளினார்.

அருள் பெற்றமை :

மூன்று வயது. நீராடச் செல்லும் தந்தையாரொடும் திருக்குளத்திற்குச் சென்றார். தந்தையார் மூழ்கிக் குளிக்கும்போது அவரைக் காணாது 'அம்மே அப்பா' என்று அழுதார். பக்குவம் கண்ட சிவ பெருமான் அம்மையப்பராக விடையின்மேல் காட்சி கொடுத்தார். உமையம்மை இறங்கிவந்தார், அழுத

குழந்தைக்குக் கிண்ணத்தில் கறந்த பாலொடும் ஞான அமுதைக் குழைத்து ஊட்டினர். அழுகை ஓய்ந்தது. குழந்தை சிவஞானசம்பந்தர் ஆயினர்.

திருநெறிய தமிழ் வந்ததும் வளர்ந்ததும்:

நீராடிய தந்தையார் கரைக்கு வந்தார் குழந்தைக்கு யாரோ பால் ஊட்டினர் எனக் கோபித்தார். தம்மைப் பால் ஊட்டி உள்ளம் கவர்ந்த கள்வன் இவனே என அடையாளம் காட்டி அருந்தமிழ் பாடினர் ஞானசம்பந்தப் பிள்ளையார். அன்று முதல் திருஞானசம்பந்தர் தமிழ்நாட்டுச் சிவன் திருக்கோயில்களுக்கெல்லாம் சென்றார். திருநெறிய செந்தமிழ்ப் பாடல்களால் சிவனைப் பாடிப் பரவினர். நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பிய ஞான சம்பந்தர் எனப் புகழ் மிகுந்தார்.

அருளால் பெற்ற அரும் பொருள்கள்:

திருக்கோலக்காவில், பொன் தாளம்.

திருநெல்வாயில் அரத்துறையில் முத்துப் பல்லக்கும், குடையும், சின்னமும்.

திருச்சத்தி முற்றம், திருப்பட்டீச்சரம். வழியில் முத்துப்பந்தர்.

திரு ஆவடுதுறையில் தந்தையார் செய் வேள்விக்கென உலவாப் பொற்கிழி.

திருவீழிமிழலையில் வாசிதீரப் பெற்ற காசு.

அருட் செயல்கள்: (அற்புதங்கள்):

திருநனிபள்ளியில் பாலை நெய்தல் ஆகப் பாடினர்.

திருப்பாச்சிலாச்சிராமத்தில் மன்னன் கொல்லி மழவன் மகளுக்கு முயலக நோயைத் தீர்த்தார்.

திருச்செங்குன்றூரில் பனியாகிய சுரநோய் நீக்கினார்.

திருமருகலில் பாம்பு தீண்டி உயிர் நீங்கிய வணிகனை உயிர்பெறச் செய்தார்.

திருவீழிமிழலையில் படிக்காசு பெற்று மக்களைப் பஞ்சக் கொடுமையில் பாதுகாத்தார்.

திருமறைக்காட்டில் திருக்கதவம் அடைக்கப் பாடினார்.

திரு ஆலவாயில் (மதுரையில்) பாண்டியன் நெடுமாறனின் வெப்புநோயை விலக்கினார்.

அருட்பாடலைக் கொண்டே முள்ளியாற்றைக் கடக்க ஓடம் செலுத்தினார்.

திருஓத்தூரில் ஆண் பனைகளைப் பெண் பனைகள் ஆக்கிக் காய்க்கச்செய்தார்.

திருமயிலையில் எரிக்கப்பட்ட பூம்பாவையின் எலும்பை மீண்டும் பெண்ணாய் உருப்பெற்று எழச் செய்தார்.

சமயப் பெருந்தொண்டு:

மதுரையில் சமணரை வாதில் வென்றார்.

தேவாரப் பாடலை எழுதிய ஏட்டினைத் தீயில் இட்டும் அழியாமையாலும், வைகை நீரில் இட்டு எதிரச் செய்தமையாலும் சைவத்தை நிலைபெறச் செய்தார்.

பாண்டிய மன்னனையும், நாட்டு மக்களையும் மீண்டும் சைவத்தில் திளைக்கச்செய்தார்.

தம் அடியாரைக்கொண்டே புத்தரை வெல்லச் செய்தார்.

சிவப்பேறு :

பதினாறாவது வயதில் திருநல்லூர்ப் பெருமணத்தில் தமது திருமணத்தின்போது தோன்றிய சிவப்பேரொளியில், மனையாளொடும் சேர்ந்து, கலந்து ஒன்றானார்.

சமகாலத்து நாயன்மார் :

திருநாவுக்கரசர், திருநீலகண்டப் பெரும்பாணர், முருக நாயனார், குங்குலியக்கலயர், சிறுத்தொண்டர், மற்றும் சிலர்.

இவரைப் பாடிப் பரவியவர் :

சுந்தரர், நம்பியாண்டார் நம்பிகள், திருவெண்காட்டு அடிகள் (பட்டினத்தடிகள்), சேக்கிழார் முதலானோர்.

இவர்க்கு வழங்கும் வேறு பெயர்கள் :

ஆளுடைய பிள்ளையார், கவுணியர் குலக்கொழுந்து, புகலி வேந்தர், பரசமய கோளரி, பாலறாவாயர், காழிவேந்து, தண்தமிழ் விரகன் மற்றும் பல.

பாடல் தொகை :

பாடியருளியன	16000	பதிகங்கள்
கிடைத்துள்ளன	385	பதிகங்கள்

உ
சிவமயம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர்

அருளிச்செய்த

தேவாரத் திருப்பதிகங்கள்

முதல் திருமுறை

திருமுறை எண்	பதிக எண்	பாடல் பெற்ற தலம்	பண்
1	1	திருப்பிரமபுரம்	நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

தோடு உடைய செவியன், விடை ஏறி,
ஓர் தூ வெண் மதிசூடிக்,
காடு உடைய சுடலைப் பொடி பூசி,
என் உள்ளம் கவர் கள்வன்,
ஏடு உடைய மலரான் முனைநாள்
பணிந்து ஏத்த, அருள்செய்த,
பீடு உடைய பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே. 1

---

1. விடை - எருது. தூ - தூய. மதி - பிறைச்சந்திரன். சுடலை - சுடுகாடு. பொடி-சாம்பர், நீறு. கள்வன்-மறைவாய் இருப்பவன். ஏடு - இதழ். முனை நாள் -முன் ஒருகாலம், பீடு - பெருமை, பிரமாபுரம் - சீகாழிக்கு உரிய பன்னிரு பெயர்களில் ஒன்று; பிரமன் சிவ பெருமானை வழிபட்ட தலம். மேவிய - விரும்பி எழுந்தருளிய; பெம்மான் - பெருமான். அன்றே - அல்லவோ;

முற்றல் ஆமை, இள நாகமோடு,
ஏன முளைக் கொம்பு - அவை பூண்டு,
வற்றல் ஓடு கலனுப், பலி தேர்ந்து,
எனது உள்ளம் கவர் கள்வன்,
கற்றல், கேட்டல் உடையார் பெரியார் - கழல்
கையால் தொழுது ஏத்தப்
பெற்றம் ஊர்ந்த, பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே. 2

நீர் பரந்த நிமிர் புன்சடை மேல்
ஓர் நிலா வெண் மதி சூடி,
ஏர் பரந்த இன வெள்வளை சோர,
என்உள்ளம் கவர் கள்வன்,
'ஊர்பரந்த உலகின் முதல் ஆகிய
ஓர் ஊர் இது' என்னப்,
பேர் பரந்த பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே. 3

---

2. முற்றல் ஆமை - முதிர்ந்த ஓர் ஆமையின் ஓடு. ஏனம் - ஆண்பன்றி. வற்றல் ஓடு - தசை இல்லாது உலர்ந்த ஓடு; மண்டை ஓடு. கலனு - பிச்சைப் பாத்திர மாக. பலிதேர்ந்து - பிச்சை ஏற்று. கற்றல் - மெய்ந் நூல்களைக் கற்றல். கேட்டல் — மெய்ந்நூல் பொருளை அறிந்தவர் சொல்லக் கேட்டல், கழல் - சிவபெருமான் திருவடி, பெற்றம் - எருது.

3. நீர் - கங்கை. நிமிர்சடை - உயர்ந்து எழுந்த சடை. புன்சடை - பொதுவாகப் பார்ப்பவர்க்குப் பொலிவற்றதாகத் தோன்றும் சடை. ஓர் நிலா மதி -

விண் மகிழ்ந்த மதில் எய்ததும் அன்றி,
விளங்கு தலை ஓட்டில்,
உண் மகிழ்ந்து, பலி தேரிய வந்து,
எனது உள்ளம் கவர் கள்வன்,
மண் மகிழ்ந்த அரவம், மலர்க் கொன்றை
மலிந்த வரை மார்பில்
பெண் மகிழ்ந்த, பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே. 4

ஒரு நாள் பிறை மதி. ஏர் - அழகு, இன வெள்வளை - உயர்ந்த இன வெண் சங்கால் ஆன வளையல். சோர - கைகளில் இருந்து நழுவி விழும்படி. ஊர் பரந்த உலகு - ஊர்கள் எங்கும் பரந்திருக்கும் உலகம். உலகின் முதல் ஆகிய ஓர் ஊர் இது-எல்லாம் அழிக்கப்பட்டு மறுபடியும் ஆக்கப்படும் பொழுது அவற்றிற்கெல்லாம் முதலாக இருந்த ஒரே ஊர் இத்தோணிபுரம் ஆகிய சீகாழி. பேர் - புகழ்.

4. விண் மகிழ்ந்த மதில் - வானத்தில் அசுரர் மூவர் மகிழ்ச்சியோடு கொண்டிருந்த பொன் வெள்ளி இரும்புகளால் ஆன மூன்று கோட்டைகள். எய்தது - மேரு மலையை வில்லாகவும் வாசுகியை நாணாகவும் திருமாலை அம்பாகவும் கைக்கொண்டு அழித்தது. உண் மகிழ்ந்து - உண்டலை விரும்பி; உள் மகிழ்ந்து எனப் பிரித்து ‘ மனம் மகிழ்ந்து ’ என்றும் கொள்ளுவர். பலி தேரிய வந்து - பிச்சை கேட்டு வந்து. மண்-மண் புற்று. அரவம்-பாம்பு. மலர்க்கொன்றை-கொன்றை மலர் என மாற்றுக. மலிந்த-மிகுந்து விளங்குகிற. வரை மார்பு - மலைபோல் உயர்ந்த திண்ணிய மார்பு. பெண் - உமை.

'ஒருமை பெண்மை உடையன், சடையன்,
விடை ஊரும் இவன்' என்ன
அருமையாக உரைசெய்ய, அமர்ந்து,
எனது உள்ளம் கவர் கள்வன்,
'கருமை பெற்ற கடல் கொள்ள மிதந்தது
ஓர் காலம் இது' என்னப்
பெருமை பெற்ற பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே. 5

மறை கலந்த ஒலி பாடலோடு ஆடலர் ஆகி,
மழு ஏந்தி,
இறை கலந்த இன வெள் வளை சோர,
என் உள்ளம் கவர் கள்வன்,
கறை கலந்த கடி ஆர் பொழில்
நீடு உயர் சோலைக், கதிர் சிந்து அப்
பிறை கலந்த, பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே. 6

---

5. ஒருமை பெண்மை உடையன் - ஆண்மை ஒன்றிலேயே பெண்மையையும் ஒன்றுகக் கொண்டவன். அமர்ந்து - விரும்பி வந்து இருந்து, கடல் - ஊழிக் காலத்துப் பெருவெள்ளம்,

6. ஒலி கலந்த மறை என மாற்றுக. ஆடலர் - ஆடுபவர், மழு - கருவிவகை. இறை - மணிக்கட்டு, கறை கலந்த - மரச்செறிவு காரணமாக உண்டான இருட்சி பொருந்திய, கடி - மணம், நீடு உயர் - நீண்டு உயர்ந்த;

சடை முயங்கு புனலன், அனலன்,
எரி வீசிச் சதிர்வு எய்த,
உடை முயங்கும் அரவோடு உழிதந்து,
எனது உள்ளம் கவர் கள்வன்,
கடல் முயங்கு கழிசூழ் குளிர் கானல்
அம் பொன்னம் சிறகு அன்னம்
பெடை முயங்கு பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே. 7

வியர் இலங்கு வரை உந்திய
தோள்களை வீரம் விளைவித்த,
உயர் இலங்கை அரையன் வலி செற்று,
எனது உள்ளம் கவர் கள்வன்,
துயர் இலங்கும் உலகில் பல ஊழிகள்
தோன்றும் பொழுதெல்லாம்,
பெயர் இலங்கு பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே. 8

---

7. முயங்குதல் - 1 பொருந்தியிருத்தல். 2. கட்டப்பட்டிருத்தல் 3. சார்ந்திருத்தல். 4. தழுவுதல். புனலன் - கங்கையை உடையவன். அனலன் - தீயை உடையவன். சதிர்வு - பெருமை. உழிதந்து - திரிந்து. கானல் - கடற்கரைச் சோலை. அம் - அழகிய. பெடை- பெண் அன்னம்.

8. வியர் - வியர்வை. இலங்கு - விளங்குகின்ற. வரை - கயிலை மலை. உந்திய - பெயர்த்து எடுத்த. அரையன் - அரசன். வலி-வலிமை. செற்று-கெடுத்து. துயர் - துயரம். ஊழி - அழிவுக்காலம். பெயர் - புகழ்.

தாள் நுதல்செய்து, இறை காணிய,
 மாலொடு தண் தாமரையானும்
நீணுதல் செய்து, ஒழிய, நிமிர்ந்தான்
 எனது உள்ளம் கவர் கள்வன்,
வாள் நுதல்செய் மகளிர் முதலாகிய
 வையத்தவர் ஏத்தப்,
பேணுதல்செய் பிரமாபுரம் மேவிய
 பெம்மான் இவன் அன்றே. 9

புத்தரோடு, பொறிஇல் சமணும் புறம் கூற,
 நெறி நில்லா
ஒத்த சொல்ல, உலகம் பலி தேர்ந்து,
 எனது உள்ளம் கவர் கள்வன்,
மத்த யானை மறுக உரி போர்த்தது
 ஓர் மாயம் இது என்னப்,
பித்தர் போலும், பிரமாபுரம் மேவிய
 பெம்மான் இவன் அன்றே. 10

---

9. தாள்-முயற்சி, தாள் நுதல் செய்து-தம்தம் முயற்சியையே கருத்தாகக் கொண்டு சொல்லி, இறை காணிய-தம் தலைமையை அறியச்செய்யும் பொருட்டு. தாமரையான் - நான்முகன். நீணுதல் செய்து ஒழிய - கீழும் மேலுமாக அடியையும் (தோற்றத்தையும்) முடியையும் (முடிவையும்) காண நீண்ட தொலைவு சென்றும் காண இயலாது தளர்ந்து முயற்சியைக் கைவிடுமாறு. நிமிர்ந்தான் - மேலும் மேலும் நீண்டு சென்றவன். வாள் நுதல் - ஒளிபொருந்திய நெற்றி. வையத்தவர் - உலகத்தவர்.

10. பொறி இல்-மெய்யுணர்வு இல்லாத. நெறி நில்லா - முறைமை இல்லாதவற்றை. ஒத்த சொல்ல

அரு நெறிய மறை வல்ல முனி,
அகன் பொய்கை அலர் மேய,
பெரு நெறிய பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன்தன்னை
ஒரு நெறிய மனம் வைத்து உணர்
ஞான சம்பந்தன் உரைசெய்த
திரு நெறிய தமிழ் வல்லவர்
தொல் வினை தீர்தல் எளிது ஆமே. 11

திருச்சிற்றம்பலம்

எல்லாரும் ஒன்றுபோலவே சொல்ல. உலகம்-உலகத்தில். மத்த-மதம் உடைய, மறுக-நிலை கலங்க.

11 அகன் பொய்கை-அகலமான குளம். அலர்-மலர். ஒரு நெறிய மனம் - ஒன்றியமனம். திருநெறி-சிவஞான நெறியும் அதன் முதிர்ச்சியில் விளங்கி நிற்கும் காதல் நெறியாகிய அன்புநெறியும் இங்குத் திருநெறி எனப்பட்டது. (இஃது 1, 3, 6 ஆம் பாடல்களில் வெளிப்படையாகப் புலப்படும்.) தொல்வினை-பழவினை.

1:2 திருப்புகலூர் பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

குறி கலந்த இசை பாடலினன்,
நசையால், இவ் உலகு எல்லாம்
நெறி கலந்தது ஒரு நீர்மையனாய்,
எருது ஏறிப், பலி பேணி,
முறி கலந்தது ஒரு தோல் அரைமேல்
உடையான் இடம் – மொய்ம் மலரின்
பொறி கலந்த பொழில் சூழ்ந்து,
அயலே புயல் ஆரும் புகலூரே. 1

காது இலங்கு குழையன், இழை சேர்
திரு மார்பன், ஒரு பாகம்
மாது இலங்கு திரு மேனியினன்,
கருமானின் உரி ஆடை
மீது இலங்க அணிந்தான், இமையோர்
தொழ மேவும் இடம் – சோலைப்
போதில் அங்கு நசையால் வரி வண்டு
இசை பாடும் புகலூரே. 2

---

1. குறி-சுரத்தானங்கள். நசை-விருப்பம். நீர்மையன் - தன்மையன். மொய்ம்மலர் - நிறைந்துகிடக்கும் மலர்கள். பொறி-புள்ளிகளை உடைய வண்டுகள். புயல்-மேகம்.

2. குழை-காதணி வகை. இழை-முப்புரிநூல். கருமான்-ஒருவகை மான். உரி-தோல். கருமான் உரி-

பண் நிலாவும் மறை பாடலினன்,
இறை சேரும் வளை அம்கைப்
பெண் நிலாவ உடையான், பெரியார் -
கழல் என்றும் தொழுது ஏத்த,
உள் நிலாவி அவர் சிந்தையுள்
நீங்கா ஒருவன் இடம் என்பர்,
மண் நிலாவும் அடியார் குடிமைத்
தொழில் மல்கும் புகலூரே. 3

நீரின் மல்கு சடையன், விடையன்,
அடையார்தம் அரண் மூன்றும்
சீரின் மல்கு மலையே சிலையாக
முனிந்தான், உலகு உய்யக்
காரின் மல்கு கடல் நஞ்சம் அது
உண்ட கடவுள் இடம் என்பர்,
ஊரின் மல்கி வளர் செம்மையினால்
உயர்வு எய்தும் புகலூரே. 4

கருநிறம் உடைய விலங்கான யானையின் தோல் எனவும் ஆம். இமையோர்-தேவர்கள். போது-மலர்.

3. பண் - இசை. அம் கை - அழகிய கை. உள் நிலாவி-உள்ளத்தில் பொருந்தியிருந்து, மண்-உலகம். அடியார் குடிமைத் தொழில் - அடியவர் குடிப் பண்பிற்குப் பொருந்தும் தொண்டுச் செயல்கள்.

4. மல்கு-மிகுந்த. அடையார்-பகைவர். அரண் - மதில், கோட்டை. சிலை-வில். முனிந்தான்-கோபித் தான். கார்-கருநிறம்.

செய்ய மேனி வெளிய பொடிப்
பூசுவர், சேரும் அடியார்மேல்
பைய நின்ற வினை பாற்றுவர்,
போற்றிசைத்து என்றும் பணிவாரை
மெய்ய நின்ற பெருமான் உறையும்
இடம் என்பர், அருள் பேணிப்,
பொய் இலாத மனத்தார்
பிரியாது பொருந்தும் புகலூரே. 5

கழலின் ஓசை சிலம்பின் ஒலி ஓசை
கலிக்கப், பயில் கானில்,
குழலின் ஓசை குறள் பாரிடம்
போற்றக், குனித்தார் இடம் என்பர்.
விழவின் ஓசை, அடியார் மிடைவுற்று
விரும்பிப் பொலிந்து எங்கும்,
முழவின் ஓசை முந்நீர் அயர்வு
எய்த முழங்கும் புகலூரே. 6

---

5. செய்ய மேனி – சிவந்த உடம்பு. வெளிய பொடி-வெண்ணிறமான திருநீறு. பைய நின்ற வினை - வினையின் வாசனை மலம். வினைபைய பாற்றுவர் எனலும் ஆம். பாற்றுவர் - சிதறிப்போகச் செய்வார். மெய்ய - நிலைபெறுமாறு. பொய் - வஞ்சம்.

6. கழல்-காலணி, ஆண்பாலாகிய வலப்பாகத்துத் திருவடியில் அணிந்துள்ள வீரக் கழல். சிலம்பு - பெண்பாலாகிய இடப்பாகத்துத் திருவடியில் உள்ள காலணியாகிய சிலம்பு. கலிக்க-ஆரவாரிக்க. பயில் - நடம் ஆடும். குறள் பாரிடம் - குள்ளமான பூதங்கள். குனித்தார் - ஆடியவர். விழவு-விழா மிடைவுற்று - நெருக்கமாகக் கூடி. முந்நீர்-கடல், இங்குக் கடல் ஒலி, அயர்வு எய்த-அடங்க.

வெள்ளம் ஆர்ந்து, மிளிர் செம் சடைதன்மேல்,
விளங்கும் மதி சூடி,
உள்ளம் ஆர்ந்த அடியார் தொழுது ஏத்த,
உகக்கும் அருள் தந்து, எம்
கள்ளம் ஆர்ந்து கழியப்,
பழி தீர்த்த கடவுள் இடம் என்பர்,
புள்ளை ஆர்ந்த வயலின் விளைவால்
வளம் மல்கும் புகலூரே. 7

தென் இலங்கை அரையன்,
வரை பற்றி எடுத்தான் முடி, திண்தோள்,
தன் இலங்கு விரலால் நெரிவித்து,
இசை கேட்டு அன்று அருள் செய்த,
மின் இலங்கு சடையான் மட மாதொடு
மேவும் இடம் என்பர்,
பொன் இலங்கு மணி மாளிகைமேல்
மதி தோயும் புகலூரே. 8

---

7. வெள்ளம் - கங்கை நீர். ஆர்ந்து - சேர்ந்து. மிளிர் - விளங்கும், உகக்கும் அருள் - உயர்ச்சி பொருந்திய அருள். கள்ளம் ஆர்ந்து கழிய - பாசம் ஒரு சேர நீங்க. பழி - 'பசு' என்ற குற்றம். பழி தீர்த்த - பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் அருளிய. புள் - நாரை முதலான பறவைகள்,

8. இலங்கை அரையன் - இராவணன். இலங்கு - ஒளிவீசும். நெரிவித்து-நெரியும்படி அழுத்தி, 'அன்று' என்பதனைத் தொடக்கத்தில் சேர்த்து 'முன் ஒரு நாள்' எனவும், 'இசை கேட்டு அன்று' எனக் கொண்டு 'அப்பொழுதே' எனவும் பொருள் கொள்க. மின் - ஒளி. மடம் - பெண்மைக்கு உரிய நான்கு குணங்களில் ஒன்று.

நாகம் வைத்த முடியான்,
அடி கை தொழுது ஏத்தும் அடியார்கள்
ஆகம் வைத்த பெருமான்,
பிரமனொடு மாலும் தொழுது ஏத்த,
ஏகம் வைத்த எரியாய் மிக ஓங்கிய
எம்மான் இடம் போலும்,
போகம் வைத்த பொழிலின் நிழலால்
மது வாரும் புகலூரே. 9

செய்தவத்தர் மிகு தேரர்கள்,
சாக்கியர் செப்பில் பொருள் அல்லாக்
கைதவத்தர் மொழியைத் தவிர்வார்கள்
கடவுள் இடம் போலும்,
கொய்து பத்தர் மலரும்,
புனலும் கொடு தூவித், துதிசெய்து,
மெய் தவத்தின் முயல்வார்
உயர் வானகம் எய்தும் புகலூரே. 10

---

9. நாகம் - பாம்பு. அடியார்கள் ஆகம் வைத்த பெருமான் - அடியார்கள் தம் உடம்பாகிய இல்லத்தே எழுந்தருளப் பண்ணி வைத்த பெருமான். ஏகம் வைத்த எரியாய் - ஒரே சோதிப்பிழம்பாக. போகம் வைத்த பொழில் - தன்பால் வந்தாரை மகிழ்விக்கும் பொழில். மது வாரும் - தேன் சொரியும்.

10. 'செய்தவத்தர்' எனவும் 'செய்த அவத்தர்' எனவும் பிரிப்பர். செய்யப்பட்ட தவத்தை உடையவர்; தவம் எனக் கருதிப் பயனற்ற வற்றைச் செய்தவர். தேரர், சாக்கியர் - புத்தர் வகையினர். கைதவத்தர் - வஞ்சம் உடையார்;

புற்றில் வாழும் அரவம் அரை
　　ஆர்த்தவன் மேவும் புகலூரைக்
கற்று நல்லவர் காழியுள்
　　ஞானசம்பந்தன் தமிழ் மாலை
பற்றி என்றும் இசை பாடிய மாந்தர்
　　பரமன அடி சேர்ந்து,
குற்றம் இன்றிக், குறைபாடு ஒழியாப்,
　　புகழ் ஓங்கிப், பொலிவாரே. 11

திருச்சிற்றம்பலம்

மொழியை - சொல்லும் சொல்லை. கொடு - கொண்டு மெய்தவம் - மெய்த்தவம் - சரியை கிரியை யோகம் எனப்படும் மூவகையான உண்மைத் தவங்கள். இங்குக் கிரியைத் தவத்தைக் கருதியது.

11. ஒழியா - ஒழிந்து

1 : 3 திருவலிதாயம் பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

பத்தரோடு பலரும் பொலிய,
மலர் அங்கைப் புனல் தூவி,
ஒத்த சொல்லி உலகத்தவர்தாம்
தொழுது ஏத்த, உயர் சென்னி
மத்தம் வைத்த பெருமான்
பிரியாது உறைகின்ற வலிதாயம்
சித்தம் வைத்த அடியார் அவர்மேல்
அடையா, மற்று, இடர், நோயே. 1

படை இலங்கு கரம் எட்டு உடையான்,
படிறு ஆகக், கலன் ஏந்திக்,
கடை இலங்கு மனையில் பலி கொண்டு
உணும் கள்வன் உறை கோயில்
மடை இலங்கு பொழிலின் நிழல்வாய்
மது வீசும் வலிதாயம்
அடைய நின்ற அடியார்க்கு அடையா,
வினை, அல்லல், துயர்தானே. 2

---

1. அங்கை - உள்ளங்கை. மலரும் நீரும் தூவி, ஒத்த சொல்லி—ஒன்றையே எல்லாரும் கூடிச் சொல்லி. சென்னி - தலை. மத்தம் - ஊமத்த மலர். சித்தம் வைத்தல் - ஒன்றையே இடையறாது நினைந்திருத்தல்.

2. படை - ஆயுதம். கரம் - கை, படிறு - கள்ளம், பொய். கலன் - நான்முகன் தலையோடு. மனை இலங்கு கடை - வீட்டின் முன் விளங்கிநிற்கும் வாசல். மடை இலங்கு பொழில் - நீர் பாயும் மடைகளை உடைய

ஐயன், நொய்யன், அணியன்,
பிணி இல்லவர் என்றும் தொழுது ஏத்தச்,
செய்யன், வெய்ய படை ஏந்த வல்லான்,
திரு மாதோடு உறை கோயில்,
வையம் வந்து பணியப்,
பிணி தீர்த்து உயர்கின்ற வலிதாயம்,
உய்யும் வண்ணம் நினைமின் !
நினைந்தால், வினை தீரும் ; நலம் ஆமே. 3

ஒற்றை ஏறுஅது உடையான்,
நடம் ஆடி ஓர் பூதப் படைசூழப்,
புற்றில் நாகம் அரை ஆர்த்து
உழல்கின்ற எம் பெம்மான், மடவாளோடு
உற்ற கோயில், உலகத்து ஒளி
மல்கிட உள்கும் வலிதாயம்
பற்றி வாழும் அதுவே சரண்
ஆவது, பாடும் அடியார்க்கே. 4

பொழில். நிழல்வாய் - நிழலிடம். மது வீசும்-மலர்களி லிருந்து தேன் சொரியும்.

3. ஐயன் - உயர்ந்தோன், அழகன். நொய்யன் - மிகச் சிறியன். அணியன் - பக்கமாக இருப்பவன். பிணி இல்லவர் - பாசக் கட்டு நீங்கியவர். என்றும் - கட்டு நீங்கிய முத்திக் காலத்தும். செய்யன் - சிவப்பு நிறத்தவன். வெய்ய படை - வருத்தும் கருவி. திருமாது-உமையம்மை. வையம் - உலகத்து உள்ளார்.

4. ஏறு - எருது ஒற்றை ஏறு—தனக்கு இணையாக வேறொன்று இல்லாத எருது. ஆடி - ஆடுபவன், ஆர்த்து - கட்டி. பற்றி - உரிய இடமாகக் கொண்டு. சரண் - அடையப்பெறுவது; சார்பாக இருப்பது.

புந்தி ஒன்றி நினைவார் வினை ஆயின
 தீரப், பொருள் ஆய,
அந்தி அன்னது ஒரு பேர் ஒளியான்
 அமர் கோயில், அயல் எங்கும்
மந்தி வந்து கடுவனொடும்
 கூடி வணங்கும் வலிதாயம்
சிந்தியாத அவர்தம் அடும் வெம்துயர்
 தீர்தல் எளிது அன்றே. 5

ஊன் இயன்ற தலையில் பலி கொண்டு,
 உலகத்து உள்ளவர் ஏத்தக்,
கான் இயன்ற கரியின் உரி போர்த்து
 உழல் கள்வன், சடைதன்மேல்
வான் இயன்ற பிறை வைத்த
 எம் ஆதி, மகிழும் வலிதாயம்
தேன் இயன்ற நறு மா மலர்
 கொண்டு நின்று ஏத்தத் தெளிவு ஆமே. 6

---

5. புந்தி ஒன்றி நினைவார் - மனம் ஒன்றியிருந்து நினைப்பவர். பொருள் - நினைவார்க்கு என்றும் மெய்யான பொருள். அந்தி அன்னது - மாலைக் காலத்துச் செவ்வானம் போன்ற சிவந்த நிறம் உடையது. மந்தி - பெண்குரங்கு. கடுவன் - ஆண் குரங்கு. சிந்தியாத அவர் - நினையாதவர். அடும் - வாட்டி வருத்தும். எளிது அன்று - எளிது ஆகாது.

6. ஊன் இயன்ற தலை - புலால் தன்மை பொருந்திய தலையோடு. கான் இயன்ற கரியின் உரி - காட்டில் வாழ்வதான ஆண்யானையினை உரித்த் தோல். ஆதி - எல்லாவற்றிற்கும் தானே முதலான வன். தெளிவு ஆம் - அறிவில் தெளிவு உண்டாகும்.

கண் நிறைந்த விழியின் அழலால்,
வரு காமன் உயிர் வீட்டிப்,
பெண் நிறைந்த ஒருபால் மகிழ்வு எய்திய
பெம்மான் உறை கோயில்,
மண் நிறைந்த புகழ் கொண்ட
அடியார்கள் வணங்கும் வலிதாயத்து
உள் நிறைந்த பெருமானை கழல் ஏத்த,
நம் உண்மைக் கதி ஆமே. 7

---

7. கண் நிறைந்த விழி - கண்ணுக்கு அழகாய் நிறைந்ததான விழி. விழியின் அழல் - நெற்றிக்கண் விழியில் இருந்து வெளிப்பட்ட தீ. வருகாமன் - சிவபெருமானின் யோக நிலையைக் கலைக்க வேண்டும் என்று தேவர்களால் விடுக்கப்பட்டு வந்த மன்மதன். உயிர் வீட்டி - உயிரைப் போக்கி இறக்குமாறு செய்து, மண் - நில உலகம் 'புகழ் கொண்ட அடியார்கள்' என்பது 'கொண்டடியார்கள்' எனத் தொகுத்தல் விகாரம் பெற்றது எனலும் ஆம், 'வலிதாயத்துள் நிறைந்த பெருமான் கழல் ஏத்த' எனவும் 'நம் உள் நிறைந்த பெருமான் கழல் வலிதாயத்து ஏத்த' எனவும் இருவகையும் கொள்ளலாம். நம் உண்மைக் கதி - இடைக்காலத்துப் பெறுவனவான பத முத்திகளாகிய நிலையற்ற பேறுகள் அன்றி நமக்கு என்றும் நிலையானதான பர முத்தியாகிய சிவப்பேறு. ஆம் - கிடைக்கப் பெறுவோம்.

கடலின் நஞ்சம் அமுது உண்டு,
இமையோர் தொழுது ஏத்த நடம் ஆடி,
அடல் இலங்கை அரையன் வலி செற்று,
அருள், அம்மான அமர் கோயில,
மடல் இலங்கு கமுகின், பலவின்,
மது விம்மும் வலிதாயம,
உடல் இலங்கும உயிர் உள்ளளவும் தொழ,
உள்ளத் துயர் போமே. 8

பெரிய மேரு வரையே சிலையா,
மலைவுற்றார் எயில் மூன்றும்
எரிய எய்த ஒருவன்,
இருவர்க்கு அறிவொண்ணு வடிவு ஆகும்
எரியது ஆகி, உற ஓங்கியவன்
வலிதாயம் தொழுது ஏத்த
உரியராக உடையார் பெரியார்
என உள்கும உலகோரே.

---

8. நஞ்சம் அமுது உண்டு - நஞ்சை அமுதமாக உட்கொண்டு. அடல் - வலிமையுள்ள; பிறரை வருத்துவதில் வல்லவனுன. வலிசெற்று-வலிமையைக் கெடுத்து. அருள் அம்மான் - அவ்விடத்தேயே அவன் இசைக்கு இரங்கி அவனுக்கு வாளும் நாளும் அருளிய அம்மான். மடல் - யாளை. மது - தேன் விம்மும் - மேல் எழும். கமுகு, பலா மரங்களில் உள்ள தேன் அடைகளில் சேர்க்கப்பட்ட தேன் மேல் எழுந்து சொரியும். உடல் இலங்கு உயிர் உள்ளளவும் - அறிவற்ற உடம்பில் அறிவுள்ள உயிர் இருக்கும் வரையிலும்.

9. வரை - மலை. சிலை - வில். மலைவுற்றார் - மாறுபட்டுப் போர் செய்தவர், திரிபுரத் தலைவர்களான

ஆசி ஆர மொழியார் அமண் சாக்கியர்.
அல்லாதவர், கூடி
ஏசி, ஈரம் இலராய் மொழிசெய்தவர்
சொல்லைப் பொருள் என்னேல்
வாசி தீர அடியார்க்கு அருள்செய்து
வளர்ந்தான் வலிதாயம்
பேசும் ஆர்வம் உடையார் அடியார்
எனப் பேணும் பெரியோரே. 10

அசுரர் மூவர். இருவர் - மாலும் நான்முகனும். எரியது ஆகிஉற ஓங்கியவன் - தீவண்ண உருவாகி அளவில்லாது உயர்ந்தவன், தொழுது ஏத்தலை உரிமையாக உடையார் பெரியார் என உலகோர் நினைப்பர்.

10. ஆசி ஆர மொழியார் - பிறரை வாழ்த்திக் கூறும் மொழிகளையே நிரம்பச் சொல்லாதவர். அல்லாதவர் - சமணரும் புத்தரும் அல்லாத மற்றைய சைவர் அல்லாதார். ஏசி - இகழ்ந்து சொல்லி. ஈரம் - அன்பு. மனக்கசிவு. வாசி - தரவேறுபாடு. பெரியோர் பேணுவர் என்க.

வண்டு வைகும் மணம் மலகிய
சோலை வளரும் வலிதாயத்து,
அண்ட வாணனை அடி உள்குதலால்,
அருள் மாலைத் தமிழாகக்,
கண்டல் வைகு கடல் காழியுள்
ஞானசம்பந்தன் தமிழ் பத்தும்,
கொண்டு, வைகி, இசை பாட
வல்லார் குளிர் வானத்து உயர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. வைகும் - தங்கும், மல்கிய - மிகுந்து, நிறைந்த. அண்ட வாணன் - பேருலகம் முழுவதினும் ஒன்றுய்க்கலந்து இருப்பவன், அருள் மாலைத் தமிழ் - அருள் இயல்பினதான தமிழ், அண்டவாணன் அடி உள்குதலால் அருள் இயல்பினதான தமிழ், 'சம்பந்தன் தமிழ் பத்தும் அருள்மாலைத் தமிழாகக் கொண்டு இசை பாட வல்லார்' எனக்கூட்டுக. கண்டல்-தாழை. கடல் காழி - கடற்கரையைச் சார்ந்த காழி; ஊழி வெள்ளக் கடலில் மிதந்த காழி.

1 : 4 திருப்புகலியும் திருவீழிமிழலையும்

(வினாவுரை) பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

மைம் மரு பூங்குழல் கற்றை துற்ற
வாள்நுதல், மான்விழி - மங்கையோடும்,
பொய்ம் மொழியா மறையோர்கள் ஏத்தப்,
புகலி நிலாவிய புண்ணியனே !
எம் இறையே ! இமையாத முக்கண் ஈச !
என் நேச ! இது என்கொல் ? சொல்லாய்
மெய்ம் மொழி நால்மறையோர் மிழலை
விண் இழி கோயில் விரும்பியதே. 1

1. மை - கருமை. மரு - பொருந்திய. கற்றை- தொகுதி. துற்ற-நெருங்கிய, வாள்-ஒளி பொருந்திய. நுதல் - நெற்றி. மான் விழி - மான் போன்ற மருண்ட நோக்கு. புகலி - சீகாழியின் பன்னிரு பெயர்களுள் ஒன்று. நேச - அன்பிற்கு உரியவனே. என் கொல் - என்னவோ ? மெய்ம் மொழி - உண்மையைக் கூறும்.

கழல், மல்கு பந்தொடு, அம்மானை, முற்றில் –
கற்றவர், சிற்றிடைக் கன்னிமார்கள்,
பொழில் மல்கு கிள்ளையைச் சொல் பயிற்றும்,
புகலி நிலாவிய புண்ணியனே !
எழில் மலரோன் சிரம் ஏந்தி உண்டு ஓர்
இன்புஉறு செல்வம் இது என் கொல் ? சொல்லாய்!
மிழலையுள் வேதியர் ஏத்தி வாழ்த்த
விண்இழி கோயில் விரும்பியதே. 2

கன்னியர் ஆடல் கலந்து, மிக்க
கந்துக ஆடை கலந்து, துங்கப்
பொன்இயல் மாடம் நெருங்கு, செல்வப்
புகலி நிலாவிய புண்ணியனே !
இன் இசை யாழ் மொழியாள் ஓர் பாகத்து
எம் இறையே ! இது என்கொல் ? சொல்லாய் !
மின்இயல் நுண் இடையார் மிழலை
விண்இழி கோயில் விரும்பியதே. 3

---

2. கழல் - கழற்சிக் காய், முற்றில் - சிறுமுறம், கழல், பந்து, அம்மானை, முற்றில் : சிறு மகளிர் விளையாட்டுப் பொருள்கள். கற்றவர் - இவற்றை வைத்து விளையாடும் விளையாட்டுக்களைக் கற்றவர். சிற்றிடை - சிறிய இடுப்பு, கிள்ளை - கிளி. சொல் பயிற்றும் - பேசப் பழக்கும். எழில் - அழகு. மலரோன் - நான்முகன். சிரம் - தலைஓடு. விண்இழி கோயில் - திருவீழிமிழலையில் உள்ளகோயிலின் பெயர்.

3. கந்துகம் - பந்து. கந்துக ஆடை-பந்தாட்டத்தின் போது அணியும் ஆடை வகை. துங்கம் -உயர்ச்சி; மின் இயல் நுண் இடை - மின்னல் போன்று வளைந்தசையும் இடுப்பு.

நாக பணம் திகழ் அல்குல், மல்கு
நல நுதல், மான் விழி – மங்கையோடும்,
பூக வனம் பொழில் சூழ்ந்த, அம்தண்
புகலி நிலாவிய புண்ணியனே!
ஏக பெருந்தகை ஆய பெம்மான்!
எம் இறையே! இது என் கொல்? சொல்லாய்!
மேகம் உரிஞ்சு எயில் சூழ் மிழலை,
விண் இழி கோயில் விரும்பியதே. 4

சந்து அளறு ஏறு, தடங்கொள் கொங்கைத்-
தையலொடும், தளராத வாய்மைப்
புந்தியின் நால் மறையோர்கள் ஏத்தும்,
புகலி நிலாவிய புண்ணியனே!
எந்தமை ஆள் உடை ஈச! எம்மான்!
எம் இறையே! இது என்கொல்? சொல்லாய்!
வெந்த வெண் நீறு அணிவார் மிழலை,
விண் இழி கோயில் விரும்பியதே. 5

---

4. நாக பணம் திகழ் அல்குல் - பாம்பின் படம் போல அகன்று விளங்கும் அடிவயிறு. நல்நுதல் - அழகிய நெற்றி. மான் விழி - மான் போன்ற மருண்ட பார்வை. பூகம் - கமுகு. காடு போல் செழித்துள்ளமையால் ‘ வனம் ’ எனப்பட்டது. ஏக பெருந்தகை - ஒரே பெருந்தகுதியாளன். உரிஞ்சு - தழுவிச் செல்லும்.

5. சந்து அளறு - சந்தனக் குழம்பு, தடம் கொள்-பெரியதான. கொங்கை - மார்பகம். வாய்மை தளராத புந்தியின்' எனக் கூட்டுக. வேத வாக்கின் உண்மைப் பொருளைத் துணியும் முயற்சியில் சோர்வு அடையாத புத்தியினை உடைய; மெய்ப்பொருள் உணர்வில் தளர்ந்து போகாத புத்தியினை உடைய.

சங்கு, ஒளி இப்பி, சுறு, மகரம்,
தாங்கி, நிரந்து, தரங்கம் மேல்மேல்
பொங்கு ஒலி நீர் சுமந்து ஓங்கு, செம்மைப்
புகலி நிலாவிய புண்ணியனே!
எங்கள் பிரான், இமையோர்கள் பெம்மான்!
எம் இறையே! இது என்கொல்? சொல்லாய்!
வெம் கதிர் தோய் பொழில் சூழ் மிழலை,
விண் இழி கோயில் விரும்பியதே. 6

காமன் எரிபிழம்பு ஆக நோக்கிக்,
காம்பு அன தோளியொடும் கலந்து,
பூமரு நான்முகன் போல்வர் ஏத்தப்,
புகலி நிலாவிய புண்ணியனே!
ஈம வனத்து எரியாட்டு உகந்த
எம் பெருமான்! இது என்கொல்? சொல்லாய்!
வீ மரு தண் பொழில் சூழ் மிழலை,
விண் இழி கோயில் விரும்பியதே. 7

---

6. இப்பி - முத்துச்சிப்பி. சுறு, மகரம் - மீன் வகை. நிரந்து - வரிசையாக. தரங்கம் - அலை. மேல் மேல் பொங்கு ஒலி நீர் - மேலும் மேலும் மிகுந்து ஆரவாரித்து வரும் நீர். பிரான்-தலைவன். வெம்கதிர்-வெப்பமான சூரிய ஒளி.

7. எரிப் பிழம்பு ஆக - தீத்திரள் ஆக. உடம்பு தீப்பற்றி எரிய. நோக்கி-நெற்றிக் கண்ணால் பார்த்து. காம்பு - மூங்கில், அன - அன்ன - போன்ற, பூமரு நான்முகன் - தாமரை மலரில் வீற்றிருப்போன் ஆகிய நான்முகக் கடவுள், மறையவர் வேதம் ஓதுபவர் ஆதலால் நான்முகனை ஒப்பர், ஈம வனம் - சுடுகாடு. எரி ஆட்டு - தீ வண்ணனாய் நின்று ஆடும் ஆடல், வீ - மலர், மரு - பொருந்திய.

இலங்கையர் வேந்து எழில் வாய்த்த திண்தோள்
இற்று, அலறவ் விரல் ஒற்றி, ஐந்து
புலம் களைகட்டவர் போற்ற அம்தண்
புகலி நிலாவிய புண்ணியனே !
இலங்கு எரி ஏந்தி நின்று, எல்லி ஆடும் —
எம் இறையே ! இது என்கொல் ? சொல்லாய் !
விலங்கல் ஒண் மாளிகை சூழ்மிழலை,
விண்இழி கோயில் விரும்பியதே. 8

செறி முளரித் தவிசு ஏறி, ஆறும்
செற்று, அதில் வீற்றிருந்தானும், மற்றைப்,
பொறி அரவத்து அணையானும் காணாப்
புகலி நிலாவிய புண்ணியனே !
எறி மழுவோடு, இள மான் கை இன்றி
இருந்த பிரான்! இது என்கொல்? சொல்லாய் !
வெறி கமழ் பூம் பொழில் சூழ் மிழலை,
விண்இழி கோயில் விரும்பியதே. 9

---

8. இலங்கையர் வேந்து - இராவணன், இற்று - முறிந்து, தோள் இற்று வாய் அலற, விரல் ஒற்றி - விரலால் மெதுவாக அழுத்தி, புலம் களைகட்டவர் - ஐம் பொறிகளையும் தீயவற்றில் செல்லாது தடுத்து நல்ல வற்றின்பால் நிறுத்தியவர், அம் தண்-அழகிய குளிர்ச்சி பொருந்திய, இலங்கு எரி - ஒளி வீசி விளங்கும் தீ, எல்லி - நடு இரவு, விலங்கல் ஒண்மாளிகை - மலைபோல் உயரமான ஒளி பொருந்திய மாளிகை.

9. முளரி - தாமரை மலர். தவிசு - இருக்கை. ஆறு - காமம் குரோதம் உலோபம் மோகம் மதம் மாற்சரியம் ஆகிய பகைகள். முளரித் தவிசில் வீற்றிருந்தான் — நான்முகன், பொறி அரவத்து

பத்தர் கணம் பணிந்து ஏத்த வாய்த்த
 பான்மையது, அன்றியும், பல் சமணும்,
புத்தரும் நின்று அலர் தூற்ற, அம்தண்
 புகலி நிலாவிய புண்ணியனே !
எத்தவத்தோர்க்கும் இலக்காய் நின்ற
 எம் பெருமான் ! இது என்கொல்? சொல்லாய் !
வித்தகர் வாழ், பொழில் சூழ் மிழலை,
 விண்இழி கோயில் விரும்பியதே. 10

விண்இழி கோயில் விரும்பி மேவும்
 வித்தகம் என்கொல் இது என்று சொல்லிப்
புண்ணியனைப், புகலிந் நிலாவு
 பூங்கொடியோடு இருந்தானைப் - போற்றி,
நண்ணிய கீர்த்தி, நலம் கொள் கேள்வி,
 நால்மறை ஞானசம்பந்தன் சொன்ன
பண்இயல் பாடல் வல்லார்கள் இந்தப்
 பாரொடு விண் பரிபாலகரே. 11

திருச்சிற்றம்பலம்

அணையான் - புள்ளிகளை உடைய பாம்பினைப் படுக்கையாகக் கொண்ட திருமால், வெறி - மணம்.

10. கணம் - கூட்டம். அலர் தூற்ற - புறம் பேச. இலக்கு - குறிப்பொருள், பெறப்படும் பொருள். வித்தகர் - திறமை உடையவர்.

11. வித்தகம் - திறமை, சாமர்த்தியம், பூங்கொடி - பூத்த கொடிபோன்ற இடையை உடையாளாகிய உமை. கீர்த்தி - புகழ். பார் - நில உலகம், விண் - வானுலகம், பரிபாலகர் - காவலரான மன்னர்.

1 : 5 கீழைத் திருக்காட்டுப்பள்ளி

பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

செய் அருகே புனல் பாய, ஓங்கிச்
　　செங்கயல் பாய, சில மலர்த் தேன்,
கை அருகே கனி வாழை ஈன்று,
　　கானல் எல்லாம் கமழ் காட்டுப்பள்ளிப்,
பை அருகே அழல் வாய ஐவாய்ப்
　　பாம்பு அணையான், பணைத் தோளி - பாகம்
மெய் அருகே உடையானை உள்கி
　　விண்டவர் ஏறுவர் மேல் உலகே. 1

. ... 2

---

1. செய் - வயல். ஓங்கி - உயர்ந்து. 'செங்கயல் ஓங்கிப் பாய' எனக்கூட்டுக. மலர்த்தேன் கமழ் காட்டுப்பள்ளி. வாழை கைக்கு எட்டும் அளவில் கனி ஈன்றது. அப்பழத்தின் மணமும் கமழும் காட்டுப்பள்ளி. பை-நஞ்சுப் பை, அழல் வாய - தீத்தன்மை பொருந்திய கொடிய பல்லை உடைய. வாய் என்றது பல்லுக்கு ஆகு பெயர். ஐவாய் பாம்பு - ஐந்தலை நாகம், பாம்பு அணையான் - திருமால், பணை - மூங்கில். மெய் அருகே - தனது உடம்பில். உள்கி விண்டவர் - எண்ணித்துதித் தவர், திருமாலையும், உமையையும் தனது உடம்பில் பாகம் கொண்டவனை உள்ளத்தே நினைந்து துதித்தவர்.

திரைகள் எல்லா மலரும் சுமந்து,
செழும் மணி, முத்தொடு, பொன் வரன்றிக்,
கரைகள் எல்லாம அணி சேர்ந்து உரிஞ்சிக்
காவிரி கால் பொரு காட்டுப்பள்ளி
உரைகள் எல்லாம் உணர்வு எய்தி நல்ல
உத்தமராய் உயர்ந்தார் உலகில்
அரவம் எல்லாம் அரை ஆர்த்த செல்வர்க்கு
ஆள்செய அல்லல் அறுக்கல் ஆமே. 3

தோல் உடையான், வண்ணப் போர்வையினான்,
சுண்ண வெண் நீறு துதைந்து இலங்க,
நூல் உடையான், இமையோர் பெருமான்,
நுண் அறிவால் வழிபாடு செய்யும்
கால் உடையான், கரிது ஆய கண்டன், -
காதலிக்கப்படும் காட்டுப்பள்ளி,
மேல் உடையான் இமையாத முக்கண்,
மின் இடையாளொடும் வேண்டினனே. 4

---

3. திரை - அலை, வரன்றி - வாரிக் கொண்டு. அணி - அழகு. உரிஞ்சி - தழுவி. கால் – வாய்க்கால், பொரும்-மோதும். உரைகள்-மறைமொழிகள், உணர்வு எய்தி - பொருள் உணர்ந்து. அரவம் - பாம்பு, அரை ஆர்த்த – அரையில் கட்டிய, ஆள் செய - அடிமை செய்ய.

4. வண்ணம் - அழகு. சுண்ண வெண்நீறு - சுண்ணம் (சுண்ணம்பு) போன்ற தூய வெண்ணிறம் உடைய திரு நீறு துதைந்து இலங்கும் - செறிந்து விளங்கும். நூல் - முப்புரிநூல், நுண்ணறிவால் - சிவ ஞானத்தால், கால் - திருவடி, கரிது - கருநிறம் உடையது, கண்டன் - கழுத்து உடையவன். வேண்டினன் - விரும்பினன்.

சலசல, சந்து, அகிலோடும் உந்திச்,
　சந்தனமே கரை சார்த்தி, எங்தும்
பலபல வாய்த்தலை ஆர்த்து மண்டிப்
　பாய்ந்து இழி காவிரிப் பாங்கரின் வாய்க்,
கலகல நின்று அதிரும் கழலான்
　காதலிக்கப்படும் காட்டுப்பள்ளிச்
சொல வல தொண்டர்கள் ஏத்த நின்ற
　சூலம் வல்லான் கழல் சொல்லுவோமே. 5

தளை அவிழ் தண்நிற நீலம், நெய்தல்,
　தாமரை, செங்கழுநீரும் எல்லாம்
களை, அவிழும் குழலார் கடியக்.
　காதலிக்கப்படும் காட்டுப்பள்ளித்,
துளை பயிலும் குழல், யாழ் முரலத்,
　துன்னிய இன்னிசையால் துதைந்த,
அளை பயில் பாம்பு அரை ஆர்த்த செல்வர்க்கு
　ஆள்செய, அல்லல் அறுக்கல் ஆமே. 6

---

5. சல சல - சல சல என்று ஆரவாரித்து, அகில் - சந்தனவகை, வாய்த்தலை - கால்வாய்த் தொடக்க இடம். ஆர்த்து - ஆரவாரம் செய்து. இழி காவிரி - ஓடும் காவிரி. பாங்கர் - பக்கம். கல கல - கழலின் ஓசை, சொல வல - சொல்ல வல்ல, புகழ்ந்து பாட வல்ல. ஏத்த நின்ற - ஏத்துமாறு எழுந்தருளியுள்ள. சூலம் வல்லான் - சூலத்தால் தீமைகளை அழிக்க வல்லவன். கழல் சொல்லுவோம் - திரு வடியைப் புகழ்ந்து துதிப்போம்.

6. தளை - பூ இதழ்க்கட்டு. குழல் - கூந்தல். நீலம் முதலான மலர்களைக் களை எனக் கடிய. கடிய - பிடுங்கி எறிய. குழல், யாழ் இசைக் கருவிகள், துளைக்கருவி - குழல். நரம்புக் கருவி - யாழ், துன்னிய - நெருங்கிய. துதைந்த - செறிந்த, மிகுந்த, அளை - புற்று, ஆர்த்த - கட்டிய

முடி கையினுல் தொடும் மோட்டு உழவர்
முன்கைத் தருக்கைக் கரும்பின கட்டிக்
கடிகையினுல் எறி, காட்டுப்பள்ளி
காதல்செய்தான், கரிது ஆய கண்டன்,
பொடி அணி மேனியினுனை உள்கிப்
போதொடு நீர் சுமந்து, ஏத்தி. முன்நின்று
அடி கையினுல் தொழவல்ல தொண்டர் –
அருவினையைத் துரந்து ஆள்செய்வாரே. 7

பிறை உடையான், பெரியோர்கள் பெம்மான்,
பெய்கழல் நாள்தொறும் பேணி ஏத்த -
மறை உடையான், மழு வாள் உடையான்,
வார்தரும் மால் கடல் நஞ்சம உண்ட
கறை உடையான், கனல ஆடு கண்ணுல்
காமனைக் காய்ந்தவன், காட்டுப்பள்ளிக்
குறை உடையான், குறள் பூதச் செல்வன்
குரை கழலே கைகள் கூப்பினேமே. 8

---

7. முடி - நாற்று முடி, தொடும் – பறிக்கின்ற. மோட்டு - உடல் வலிமை உடைய, முன்கைத் தருக்கை - முன்னங்கையில் உள்ள வலிச்செருக்கை. கரும்பின் கட்டிக் கடிகையினுல் எறி - வெல்லக் கட்டியை உடைப்பதால் போக்கிக் கொள்ளும் இடமாகிய (காட்டுப்பள்ளி). கரிது ஆய கண்டன் - நஞ்சு காரணமாகக் கருமையான கழுத்தினன் நீல கண்டன், பொடி - திருநீறு உள்கி நினைந்து. போது மலர், அடி - திருவடியை. அருவினை - எளிதில் போக்க முடியாத வினை, துரந்து–விலகி ஓடச் செய்து

8. பெய்கழல் - கழல் அணியப்பெற்ற திருவடி. பேணி ஏத்த - போற்றித் துதிக்க வார்தரும் - ஒழுகும்

செற்றவர்தம் அரணம் அவற்றைச்
செவ்அழல்வாய் எரி ஊட்டி நின்றும்,
கற்றவர்தாம் தொழுது ஏத்த நின்றுன் -
காதலிக்கப்படும் காட்டுப்பள்ளி
உற்றவர்தாம் உணர்வு எய்தி, நல்ல
உம்பர் உள்ளார் தொழுது ஏத்த நின்ற,
பெற்றமரும் பெருமானை அல்லால்,
பேசுவது மற்று ஓர் பேச்சு இலோமே. 9

ஒண் துவர் ஆர் துகில் ஆடை மெய் போர்த்து,
உச்சி – கொளாமை உண்டே, உரைக்கும்,
குண்டர்களோடு, அரைக் கூறை இலலார் -
கூறுவ தாம் குணம் அலல கண்டீர்
அண்ட மறையவன் மாலும் காணு
ஆதியினுன் உறை காட்டுப்பள்ளி
வுண்டு அமரும் மலர்க் கொன்றை மாலை
வார் சடையான் கழல் வாழ்த்துவோமே. 10

மால் – பெரிய, கருமையான கனல் ஆடு கண் - தீக்கண் ஆகிய நெற்றிக்கண் காய்ந்தவன்-அழித்தவன். குரை கழல் - ஒலிக்கும் கழல் அணிந்த திருவடி.

9. செற்றவர் - பகைவர். அரணம்-மதில். அழல் - தீ. எரி யூட்டி - எரித்து. உற்றவர் - அடைந்தவர், உணர்வு எய்தி - ஞானததைப் பெற்று. மற்று ஓர் பேச்சு இலோம் - வேறு யார்பற்றியும் எதுபற்றியும் பேசுவதில்லை.

10 ஒண்துவர் ஆர்துகில் - காவி ஆடை, உச்சி கொளாமை உண்டு - உச்சிப் பொழுதில் வயிறு கொள்ளாத அளவுக்கு உண்டு. குண்டர் - சமணர்,

பொன் இயல் தாமரை, நீலம், நெய்தல் –
போதுகளால் பொலிவு எய்து பொய்கைக்,
கன்னியர்தாம் குடை, காட்டுப்பள்ளிக்
காதலனைக், கடல் காழியர் கோன்,
துன்னிய இன்னிசையால் துதைந்து
சொல்லிய, ஞான சம்பந்தன் நல்ல
தன் இசையால் சொன்ன மாலை பத்தும்
தாங்க வல்லார் புகழ் தாங்குவாரே. 11

திருச்சிற்றம்பலம்

அரைக் கூறை இல்லார் - அரையில் ஆடை இல்லாத திகம்பரச் சமணர். கூறுவ - சொல்லுபவை. குணம் அல்ல - நன்மை உடையன அல்ல. அண்ட மறையவன் - நான்முகன். ஆதியினுன் - முதல்வன். அமரும் - விரும்பும் கொன்றை மலர் மாலை எனக் கூட்டுக. வார் சடை - நீண்ட சடை

11. பொன் இயல் தாமரை - கதிரவன் முன் பொன்போல ஒளி வீசும் தன்மையை உடைய தாமரை மலர்; போதுகள் - மலர்கள். காட்டுப் பள்ளிக் காதலன் - காட்டுப் பள்ளியைத் தான் எழுந்தருள்வதற்கு ஓர் இடமாக விரும்பிக் கொண்டவன் சிவபெருமான், கடல் காழி - கடற்கரையைச் சார்ந்துள்ள சீகாழிப் பதி. துன்னிய - நெருங்கிய. துதைந்து – செறிவாக. தாங்கவல்லார் - சிந்தையில் கொள்ளவல்லார்.

1 : 6 திருமருகலும் செங்காட்டங்குடியும்

(வினவுரை) பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

அங்கமும் வேதமும் ஓதும் நாவர்,
அந்தணர் — நாளும் அடிபரவ,
மங்குல் மதி தவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்த, சொல்லாய் !
செங்கயல் ஆர் புனல் செல்வம் மல்கு
சீர்கொள் செங்காட்டங்குடி அதனுள்,
கங்குல், விளங்குளரி ஏந்தி ஆடும்
கணபதியீச்சரம் காமுறவே. 1

---

1. அங்கம் - வேதத்தை ஓதற்கும் உணர்தற்கும் துணையான கருவி நூல்கள். அவை நிருத்தம் முதலான ஆறு நூல்கள். நாவர் - நாவை உடையவர், அடி - சிவனது திருவடி. பரவ - துதிக்க, மங்குல் - வானம், மேகம். மங்குல் திங்கள் - வானத்தில் உள்ள சந்திரன்; மேகமும் சந்திரனும். மருகல் - திருமருகல். நிலாவிய - எழுந்தருளிய. மைந்த - எல்லாம் செய்ய வல்ல வலிமையை உடையவனே. செம் கயல் - சிவந்த கயல் மீன்கள். ஆர் - நிறைந்த. புனல் - நீர், புனல் செல்வம் - நீர் வளமாகிய செல்வம்; புனலும் செல்வமும். கங்குல்- நடு இரவு. எரி - தீ. காமுற - விருப்பம் கொள்ள.

ஒவ்வொரு பாடலிலும். 'கணபதியீச்சரம் காமுறக் காரணம் யாதோ ? கூறுவாயாக !' என்பார்.

நெய்தவழ் மூஎரி காவல் ஓம்பும்,
நேர்புரிநூல் மறையாளர் ஏத்த,
மைதவழ் மாடம் மலிந்த வீதி
மருகல் நிலாவிய மைந்த, சொல்லாய் !
செய்தவ நால்மறையோர்கள ஏத்தும்
சீர் கொள் செங்காட்டங்குடி அதனுள்,
கை தவழ் கூர்எரி ஏந்தி ஆடும்
கணபதியீச்சரம் காமுறவே. 2

தோலொடு நூல்இழை சேர்ந்த மார்பர்,
தொகு மறையோர்கள் வளர்த்த செந்தீ
மால் புகை போய் விம்மும் மாட வீதி
மருகல் நிலாவிய மைந்த, சொல்வாய் !
சேல் புல்கு தண் வயல் சோலை சூழ்ந்த
சீர் கொள் செங்காட்டங்குடி அதனுள்,
கால் புல்கு பைங்கழல் ஆர்க்க ஆடும்
கணபதியீச்சரம் காமுறவே. 3

---

2. நெய்தவழ் - நெய் பெய்யப் பெற்ற. மூ எரி - மூன்று தீ, ஆகவனீயம், காருகபத்தியம், தக்கிணாக்கினி. புரிநூல் - மார்பில் அணியும் முப்புரி நூல். மறையாளர் - வேதியர். மை - மேகம். கை தவழ் கூர் எரி - கையில் விளங்குகிற மிகுந்து எரியும் தீ.

3. தோல் - மான் தோல். நூல் இழை - முப்புரி நூல். தொகு - கூட்டமாகக் கூடிய. மால் புகை - பெரும் புகை. விம்மும் - மேலே உயர்ந்து எழும். சேல் - மீன் வகை. புல்கு - பொருந்திய தண் வயல், தண் சோலை, எனக் குளர்ச்சியை இரண்டற்கும் சேர்த்துக் கொள்க.

நா மரு கேள்வியர் வேள்வி ஓவா,
நால்மறையோர் வழிபாடு செய்ய,
மா மருவும் மணிக்கோயில் மேய
மருகல் நிலாவிய மைந்த, சொல்லாய் !
தே மரு பூம்பொழில் சோலை சூழ்ந்த
சீர்கொள் செங்காட்டங்குடி அதனுள்
காமரு சீர் மகிழ்ந்து எல்லி ஆடும்
கணபதியீச்சரம் காமுறவே. 4

பாடல் முழவும் விழவும் ஓவாப்,
பல்மறையோர் அவர்தாம் பரவ,
மாட நெடுங்கொடி விண் தடவும்
மருகல் நிலாவிய மைந்த, சொல்லாய் !
சேடக மாமலர்ச் சோலை சூழ்ந்த
சீர்கொள் செங்காட்டங்குடி அதனுள்,
காடகமே இடமாக ஆடும்
கணபதியீச்சரம் காமுறவே 5

கால் புல்கு - திருவடியில் அணியப்பெற்ற. பை-அழகிய. ஆர்க்க - ஒலிக்க.

4. கேள்வி - வேதம். நா மரு கேள்வி - நாவினில் எப்போதும் ஓதிக்கொண்டிருக்கும் வேதம். ஓவா - இடையறாத. யாமருவும் - பெருமை பொருந்திய, திருமகள் சேர்ந்த. மணி - அழகிய. தேம்-தேன். காமரு சீர் - பலராலும் விரும்பப்படும் சிறப்பு. எல்லி - இரவு.

5. பாட்டு ஒலி, முரசின் ஒலி, விழாவின் ஆரவாரம் இவை நீங்காத மருகல். சேடக மா மலர் - கேடயம் போன்று வட்ட வடிவமான பெரிய மலர். காடகம் - காட்டு இடம்,

புனைஅழல் ஓம்பு கை அந்தணாளர்
    பொன்அடி நாள்தொறும் போற்றிசைப்ப,
மனைகெழு மாடம் மலிந்த வீதி
    மருகல் நிலாவிய மைந்த, சொல்லாய் !
சினைகெழு தண் வயல் சோலை சூழ்ந்த
    சீர்கொள் செங்காட்டங்குடி அதனுள்,
கனைவளர் கூர்எரி ஏந்தி ஆடும்
    கணபதியீச்சரம் காமுறவே. 6

... ... 7

பூண் தங்கு மார்பின் இலங்கை வேந்தன்
    பொன் நெடுந் தோள் வரையால் அடர்த்து,
மாண்தங்கு நூல் மறையோர் பரவ,
    மருகல் நிலாவிய மைந்த, சொல்லாய் !
சேண் தங்கு மா மலர்ச் சோலை சூழ்ந்த
    சீர் கொள் செங்காட்டங்குடி அதனுள்.
காண் தங்கு தோள் பெயர்த்து, எல்லி ஆடும்
    கணபதியீச்சரம் காமுறவே. 8

---

6. புனை அழல்-உரிய கிரியைகளால் உண்டாக்கப் பட்ட வேள்வித் தீ. கை-கையாகிய உறுப்பும், செய லாகிய ஒழுக்கமும் ஆம். பொன் அடி - பொன்போல ஒளிவீசும் திருவடி. போற்றிசைப்ப-போற்றி இசைப்ப எனவும், போற்று இசைப்ப எனவும் கொள்க. சினை கெழு சோலை-விரிந்த கிளைகள் பரந்து நிற்கும் சோலை. கனை-தீ மிகுந்து எரியும்பொது உண்டாகும் ஓசை.

7. * * * *

8.. பூண் – அணிகலன். வரை – கயிலை மலை. அடர்த்து-அழுத்தி. மாண்-மாட்சி, சேண் தங்கு-வான் அளாவிய. காண்-அழகு.

அந்தமும் ஆதியும், நான்முகனும்
அரவணை யானும் அறிவு அரிய,
மந்திர வேதங்கள் ஓதும் நாவர்
மருகல் நிலாவிய மைந்த, சொல்லாய்!
செந்தமிழோர்கள் பரவி ஏத்தும்
சீர்கொள் செங்காட்டங்குடி அதனுள்,
கந்தம் அகில் புகையே கமழும்
கணபதியீச்சரம் காமுறவே. 9

இலை மருதே அழகாக, நாளும்
இடுதுவர்க்காயொடு சுக்குத் தின்னும்,
நிலை அமண் தேரரை நீங்கி நின்று,
நீதர் அல்லார் தொழும் மா மருகல்,
மலை மகள் தோள் புணர்வாய்! அருளாய்!
மாசு இல் செங்காட்டங்குடி அதனுள்,
கலை மல்கு தோல் உடுத்து எல்லி ஆடும்
கணபதியீச்சரம் காமுறவே. 10

---

9. அரவு அணையான்-திருமால். அடி முடி காணு வரலாற்றில் அடி என்றது தொடக்கம், முடி என்றது முடிவு என்னும் கருத்து இங்கு உணர்த்தப்பட்டது. இறைவன் தொடக்கமும் முடிவும். ஆதி அந்தம் இல்லான். மந்திர வேதங்கள் - மந்திரங்களின் வடிவான வேதங்கள். திருமால் தொடக்கம் அறிய முயன்றான், நான்முகன் முடிவு அறியமுயன்றான். இரண்டும் அறியார் ஆயினர். திருமருகலில் வேதமந்திர ஒலி மிகுதியும் திருச்செங்காட்டங்குடியில் தமிழ்த் துதி மிகுதியும் போலும்!

10. இலை மருது-மருதோன்றி இலை. துவர்க்காய்-பாக்கு. தேரர்-புத்தர். நீதர்-கீழ்மக்கள், கலைமல்கு தோல்-மான் தோல்.

நாலும் குலைக் கமுகு ஓங்கு காழி
ஞானசம்பந்தன் – நலம் திகழும்
மாலின மதிதவழ் மாடம் ஓங்கு
மருகலின், மற்று, அதன் மேல் மொழிந்த,
சேலும் கயலும் திளைத்த கண்ணார்
சீர்கொள் செங்காட்டங்குடி அதனுள்,
சூலம் வல்லான் கழல் ஏத்து பாடல்
சொல்ல வல்லார் வினை இல்லையாமே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. நாலும் - தொங்கும். கமுகு - பாக்குமரம். மால்-மேகம். மருகல், மற்று அதன் மேல் மொழிந்த செங்காட்டங்குடி என்க. சேல், கயல்-மீன் வகை.

1:7 திருநள்ளாறும் திருஆலவாயும்

பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

பாடக மெல்அடிப் பாவையோடும்,
    படு பிணக்காடு இடம் பற்றிநின்று,
நாடகம் ஆடும், நள்ளாறுடைய
    நம் பெருமான் ! இது என்கொல் ? சொல்லாய் !
சூட்க முன்கை மடந்தைமார்கள்
    துணைவ ரொடும் தொழுது ஏத்தி வாழ்த்த,
ஆடக மாடம் நெருங்கு கூடல்
    ஆலவாயின்கண் அமர்ந்தவாறே. 1

---

1. பாடகம் - காலணி வகை. பாவை - பாவை போன்ற உமையம்மை. படு பிணக்காடு-பிணம் படு காடு. சூடகம் - கைவளை. துணைவர் - கணவன்மார். ஆடகம்-பொன். கூடல் - மதுரை நகர். ஆலவாய் - திருக்கோயிலிடம். மதுரைக்கு ஒரு பெயரும் ஆகும் .

திங்கள் அம் போதும், செழும் புனலும்
    செழும் சடை மாட்டு அயல் வைத்து உகந்து
நம் கண் மகிழும் நள்ளாறுடைய
    நம் பெருமான்! இது என்கொல்? சொல்லாய்!
பொங்கு இள மென் முலையார்களோடும்
    புனமயில் ஆட, நிலா முளைக்கும்,
அம் களகச் சுதை மாடக் கூடல்
    ஆலவாயின்கண் அமர்ந்தவாறே. 2

தண்நறு மத்தமும், கூவிளமும்,
    வெண்தலை மாலையும் - தாங்கி, யார்க்கும்
நண்ணல் அரிய நள்ளாறுடைய
    நம் பெருமான்! இது என் கொல்? சொல்லாய்!
புண்ணியவாணரும், மாதவரும்
    புகுந்து உடன் ஏத்தப், புனை இழையார்
அண்ணலின் பாடல் எடுத்தும் கூடல்
    ஆலவாயின்கண் அமர்ந்தவாறே. 3

---

2. திங்கள் அம் போது - பிறைத் திங்களாகிய மலர், செழும் புனல் - கங்கை, மாட்டு - இடத்தில். அயல் - பக்கம், உகந்து - மகிழ்ந்து. நம் கண் - நம்மிடம். பொங்கு-மேலெழுந்த. புனம் - காடு. நிலா முளைக்கும்- நிலவொளி தோன்றும். களகம - களபம், கலவை. சுதை - சுண்ணும்புச் சாந்து.

3. தண் நறு மத்தம் - குளிர்ந்த மணம் கொண்ட ஊமத்தம் பூ. கூவிளம் - வில்வம், நண்ணல் அரிய - எளிதில் நெருங்க முடியாத, மாதவர் - சிறந்த தவத்தைச் செய்தவர், புனை இழையார் - அழகிய அணிலன் அணிந்துள்ள மகளிர். அண்ணலின் பாடல்.

பூவினில் வாசம், புனலில் பொற்புப்,
புது விரைச் சாந்தின் இன நாற்றத்தோடு
நாவினில் பாடல் நள்ளாறுடைய
நம் பெருமான்! இது என்கொல்? சொல்லாய்!
தேவர்கள், தானவர், சித்தர்,
விச்சாதரர் – கணத்தோடும் சிறந்து பொங்கி,
ஆவினில் ஐந்து உகந்து ஆட்டும் கூடல்
ஆலவாயின்கண் அமர்ந்தவாறே. 4

செம்பொன் செய் மாலையும், வாசிகையும்,
திருந்து புகையும், அவியும், பாட்டும் -
நம்பும் பெருமை நள்ளாறுடைய
நம் பெருமான்! இது என் கொல்? சொல்லாய்!
உம்பரும், நாகர் உலகம் தானும்,
ஒலிகடல் சூழ்ந்த உலகத்தோரும் –
அம்புதம் நால்களால் நீடும் கூடல்
ஆலவாயின் கண் அமர்ந்தவாறே. 5

தலைவனுகிய சிவபெருமானைப் பாடும் பாடல். பாடல் எடுக்கும் - பாடும்.

4. பூவினில் மணம் போல, நீரில் அதற்கு அழகு எனப்படும் குளிர்ச்சிபோல, அல்லது சுவை போல, சந்தனத்தில் மணம் போல. உலகத்தோடும் உயிர்களோடும் இரண்டறக் கலந்து நிற்கும் நம் பெருமான். தேவர் முதலியோரும் விண்ணவர் கூட்டத்துள்ள சிலர், ஆவினில் ஐந்து - ஆன் ஐந்து ஆகிய பஞ்சகௌவியம். பால், தயிர், நெய், கோமூத்திரம், சாணம்.

5. செம்பொன் செய்மாலை - பொன் மாலை. வாசிகை - திருவாசி, அவி - திரு அமுது. உம்பர் -

பாகமும் தேவியை வைத்துக்கொண்டு,
பை விரி துத்திப் பரிய பேழ் வாய்
நாகமும் பூண்ட நள்ளாறுடைய
நம் பெருமான்! இது என் கொல்? சொல்லாய்!
போகமும் நின்னை மனத்து வைத்துப்,
புண்ணியர் நண்ணும் புணர்வு பூண்ட
ஆகம் உடையவர் சேரும் கூடல்
ஆலவாயின்கண் அமர்ந்தவாறே. 6

கோவண ஆடையும், நீறுப் பூச்சும்,
கொடு மழு ஏந்தலும், செம் சடையும்,
நாவணப் பாட்டும், நள்ளாறுடைய
நம் பெருமான்! இது என்கொல் சொல்லாய்!
பூவண மேனி இளைய மாதர்
பொன்னும் மணியும் கொழித்து எடுத்து,
ஆவண வீதியில் ஆடும கூடல்
ஆலவாயின்கண் அமர்ந்தவாறே. 7

வானவர். நாகருலகம் - நாக உலகத்தார், கடல்சூழ் உலகத்தோர் - நிலவுலகத்து மக்கள், அம்புதம்-மேகம். நால்கள் - நான்கு மேகங்கள்,

6. பை - பாம்பின் படம். துத்தி - படத்தில் உள்ள புள்ளிகள், பேழ்வாய் - பிளந்த வாய், புணர்வு - கூட்டம். ஆகம் - உடம்பு.

7. பூவண மேனி - மலர் போன்ற மென்தன்மை யுடைய உடம்பு, ஆவண வீதி - கடைத்தெரு,

இலங்கை இராவணன் வெற்பு எடுக்க,
　　எழில் விரல் ஊன்றி, இசை விரும்பி,
நலம்கொளச் சேர்ந்த நள்ளாறுடைய
　　நம் பெருமான்! இது என்கொல்? சொல்லாய்!
புலன்களைச் செற்றுப், பொறியை நீக்கிப்,
　　புந்தியிலும் நினைச் சிந்தை செய்யும்
அலங்கல் நல்லார்கள் அமரும் கூடல்
　　ஆலவாயினகண் அமர்ந்தவாறே.　　8

பணிஉடை மாலும், மலரினேனும்,
　　பன்றியும் வென்றிப் பறவையாயும்,
நணுகல் அரிய நள்ளாறுடைய
　　நம் பெருமான்! இது என்கொல்? சொல்லாய்!
மணிஒலி, சங்கு ஒலியோடு, மற்றை
　　மா முரசின்ஒலி என்றும் ஓவாது,
அணிகிளர் வேந்தர் புகுதும் கூடல்
　　ஆலவாயின்கண் அமர்ந்தவாறே.　　9

---

8. வெற்பு - மலை. இசை - இராவணன் இசைத்த இசை. நலம் கொள - இராவணன் நன்மை பெறுமாறு அருளி. செற்று - வலி கெடுத்து. நீக்கி - புலன்களில் செல்லாமல் தடுத்து மாற்றி. அலங்கல் - மாலை.

9. பணி - பாம்பு. மலரினேன் - நான்முகன். மால் பன்றியாகவும் நான்முகன் அன்னப் பறவையாகவும். வேந்தர் - மன்னர்.

தடுக்கு உடைக் கையரும். சாக்கியரும் —
சாதியின் நீங்கி யவத்தவத்தர்
நடுக்குற நின்ற நள்ளாறுடைய
நம் பெருமான்! இது என்கொல்? சொல்லாய்!
எடுக்கும் விழவும், நல்நாள் விழவும்,
இரும்பலி இன்பினோடு எத்திசையும்
அடுக்கும் பெருமைசேர் மாடக் கூடல்
ஆலவாயின்கண் அமர்ந்தவாறே. 10

அன்பு உடையானை, அரனைக், 'கூடல்
ஆலவாய் மேவியது என்கொல்?' என்று
நன் - பொனை, நாதனை, நள்ளாற்றானை —
நயம்பெறப் போற்றி, நலம்குலாவும்
பொன் புடைசூழ்தரு மாடக் காழிப்
பூசுரன், ஞானசம்பந்தன் சொன்ன
இன்புடைப் பாடல்கள் பத்தும் வல்லார்
இமையவர் ஏத்த இருப்பர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

---

10 தடுக்கு - ஓலைத் தடுக்கு. சாதி - மரபு. அவத் தவத்தர் - பயனற்ற தவத்தைச் செய்பவர். எடுக்கும் விழவு - சிறப்பு விழாக்கள். நாள் விழவு - நாட்பூசை. பலி - நிவேதனம். அடுக்கும் பெருமை - பொருந்தும் பெருமை.

11. நயம் - நன்மை. பூசுரன் - மண்ணுலகத்துத் தேவர் எனப்படும் அந்தணர்.

1:8 திருஆவூர்ப் பசுபதீச்சரம்

பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

புண்ணியர், பூதியர், பூதநாதர்
புடை படுவார்தம் மனத்தார், திங்கள்
கண்ணியர் — என்றென்று காதலாளர்
கைதொழுது ஏத்த இருந்த ஊராம்.
விண்உயர் மாளிகை மாட வீதி,
விரைகமழ் சோலை சுலாவி, எங்கும்
பண் இயல் பாடல் அறாத ஆவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடு நாவே 1

முத்தியர் மூப்புஇலர், ஆப்பின் உள்ளார்,
முக்கணர், தக்கன்தன் வேள்வி சாடும்
அத்தியர் — என்றென்று அடியர் ஏத்தும்
ஐயன் அணங்கொடு இருந்த ஊராம்
தொத்து இயலும் பொழில் மாடு, வண்டு
துதைந்து, எங்கும் தூ மது பாயக்கோயில்
பத்திமைப் பாடல் அறாத ஆவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடு, நாவே! 2

---

1. பூதியர் - வெண்ணீற்றர், சிறந்த செல்வர். புடைபடுவார் - தன்பக்கம் அடைவார். சுலாவி - சூழ்ந்து. 'நாவே! நீபாடுக'! என நாவிற்கு உரைத்தது என்ப தொன்று. நா இவ்வாறு உரைக்கும் எனச் சொல்லியது ஒன்று.

2. முத்தியர் - இயல்பாகவே பாசக்கட்டு அற்றவர். மூப்புஇலர்-காலம் வசப்படாதவர். ஆப்பின்

பொங்கி வரும்புனல் சென்னி வைத்தார்.
போம்வழி வந்து இழிவு ஏற்றம் ஆனார்
இங்கு உயர் ஞானத்தர், வானோர் ஏத்தும்
இறையவர் என்றும் இருந்த ஊராம்
தெங்கு உயர் சோலை சேர் ஆலை, சாலி
திளைக்கும் விளைவயல் – சேரும் பொய்கைப்
பங்கய மங்கை விரும்பும் ஆவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடு, நாவே! 3

உள்ளார் - கன்றாப்பூரில் எழுந்தருளியுள்ளவர். சாடும் - அழிக்கும். அத்தியர் - அத்தன்மையை உடையவர். இரவலர் எனவும் உரைப்பர் ஐயன் - உயர்ந்தோன். அணங்கு - உமை. தொத்து - பூங்கொத்து. பொழில் மாடு – சோலையின் பக்கம். துதைந்து – செறிந்து. தூமது -தூயதேன்.

3. பொங்கிவரும் - மேல் எழுந்துவரும், சென்னி – தலை. உயர் ஞானத்தர் - சிவஞானம் பெற்றவர். இறையவர் - தலைவர், தெங்கு - தென்னை, ஆலை - கரும்பு ஆலைகள், சாலி - நெல், பங்கய மங்கை - தாமரையாள் ஆன திருமகள்.

தேவி ஓர் கூறினர் ஏறு அது ஏறும் செலவினர்,
நல்குரவு என்னை நீக்கும்
ஆவியர், அந்தணர், அல்லல் தீர்க்கும்
அப்பனூர் — அங்கே அமர்ந்த ஊராம்.
பூஇயலும் பொழில் வாசம் வீசப்
புரிகுழலார் சுவடு ஒற்றி முற்றப்
பாஇயல் பாடல் அருத ஆவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடு, நாவே! 4

இந்து அணையும் சடையார், விடையார்.
இப்பிறப்பு என்னை அறுக்க வல்லார்
வந்து அணைந்து இனஇசை பாடுவார்பால்
மன்னினர் — மன்னி இருந்த ஊராம்.
கொந்து அணையும் குழலார் விழவில்
கூட்டம் இடையிடை சேரும வீதிப்
பந்து அணையும் விரலார்தம் ஆவூர்ப்
பசுபதி யீச்சரம பாடு, நாவே 5

---

4. ஏறு - எருது. செலவு - போக்கு. நல்குரவு - வறுமை, அறிவு வறுமை, ஆவியர் - உயிரானவர், அந்தணர் - குளிர்ந்த அருள் தன்மை உடையவர், புரிகுழல் - சுற்றிக் கட்டிய கூந்தல், சுவடு ஒற்றி முற்ற - காலால் நிலத்தில் ஒற்றித் தாளம் இட்டு அறிய.

5. இந்து-சந்திரன், பிறைமதி. விடையர்-எருதினை ஊர்ந்துவருவார், மன்னினர் - நிலையாயிருந்தவர், கொந்து - பூங்கொத்து, குழல் - மகளிர் கூந்தல். விழ - விழா.

குற்றம் அறுத்தார், குணத்தின் உள்ளார்,
கும்பிடுவார்தமக்கு அன்பு செய்வார்.
ஒற்றை விடையினர், நெற்றிக்
கண்ணார்–உறைபதி யாகும்–செறிகொள்மாடம்
சுற்றிய வாசலின் மாதர்விழாச்
சொல்கவி பாட, நிதானம் நல்கப்,
பற்றிய கையினர் வாழும் ஆவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடு, நாவே! 6

நீறு உடையார்; நெடுமால் வணங்கும்
நிமிர்சடையார், நினைவார் தம் உள்ளம்
கூறு உடையார், உடை கோவணத்தார்
குவலயம் ஏத்த இருந்த ஊராம்
தாறு உடை வாழையில் கூழை மந்தி
தந்து கனி உண்டு, மிண்டிட்டு, இனத்தைப்
பாறிடப் பாய்ந்து பயிலும் ஆவூர்ப்
பசுபதியீச்சரம் பாடு, நாவே! 7

---

6. உறைபதி - தங்கியிருக்கும் ஊர், சொற்கவி பாட நிதானம் நல்கப் பற்றிய கையினர் - செந்தமிழ்ப் பாடல்கள் பாடியவர்க்குப் பொன் வழங்கப் பிடித்த கையினரான கொடையாளர்.

7. குவலயம் - நிலவுலகத்தார், தாறு – வாழைக் குலை. கூழை மந்தி - தழைவால் மந்தி என்பர். மிண்டிட்டு - பழம் உண்டமையால் உண்டான செருக்குடன், இனத்தைப் பாறிடப் பாய்ந்து - தன் இனத்தைக் கலைந்தோடச் செய்து பாய்ந்து.

வெண்தலை மாலை விரவிப் பூண்ட
மெய் உடையார், விறல் ஆர் அரக்கன்
வண்டு அமர் பூ முடி செற்று உகந்த
மைந்தர் - இடம் வளம் ஓங்கி எங்கும்
கண்டவர் சிந்தைக் கருத்தின் மிக்கார்
'கதி அருள் !' என்று கையாரக் கூப்பிப்,
பண்டு, அலர் கொண்டு பயிலும் ஆவூர்ப்
பசுபதிச்சரம் பாடு, நாவே! 8

மாலும் அயனும் வணங்கி நேட,
மற்று அவருக்கு எரி ஆகி நீண்ட
சீலம் அறிவு அரிதாகி நின்ற
செம்மையினர் அவர் சேரும் ஊராம்
கோல விழாவின் அரங்கு அது ஏறிக்,
கொடி இடை மாதர்கள் - மைந்தரோடும்,
பால் எனவே மொழிந்து ஏத்தும் ஆவூர்ப்
பசுபதியீச்சரம் பாடு, நாவே! 9

---

8. மெய்-உடம்பு, திருமேனி. விறல் ஆர்-வலிமை நிறைந்த. வண்டு விரும்பும்மண மலர் மாலை அணிந்த முடி. முடியைச் செற்று - முடியை அழுத்துவதால் அவன் செருக்கினைக் கெடுத்து. உகந்த - அவனது இசையை விரும்பி அருள் செய்த.

9. நேட - தேட, சீலம்-தன்மை. அறிவு அரிதாகி-அறிந்துகொள்ள முடியாமல். செம்மை - செப்பம், செந்நிறம். கோல விழா - அழகிய விழா. மைந்தர் - ஆடவர், பால் என மொழிந்து - தூய இனிய சொற்களால் புகழ்ந்து.

பின்னிய தாழ் சடையார், பிதற்றும்
பேதையராம் சமண் சாக்கியர்கள்
தன் இயலும் உரை கொள்ளகில்லாச்
சைவர் இடம் - தளவு ஏறு சோலைத்
துன்னிய மாதரும், மைந்தர்தாமும் சுனையிடை
மூழ்கித் தொடர்ந்த சிந்தைப்
பன்னிய பாடல் பயிலும் ஆவூர்ப்
பசுபதியீச்சரம் பாடு, நாவே! 10

எண்திசையாரும் வணங்கி ஏத்தும்
எம பெருமானை, எழில்கொள் ஆவூர்ப்
பண்டு உரியார் சிலர் தொண்டர் போற்றும்
பசுபதி யீச்சரத்து ஆதிதன் மேல்,
கண்டல்கள் மிண்டிய கானல் காழிக்
கவுணியன் ஞானசம்பந்தன் சொன்ன
கொண்டு, இனிதா இசை பாடி, ஆடிக்,
கூடும் அவர் — உடையார்கள் வானே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. தாழ் சடை - தொங்கும் சடை. தன் இயலும் உரை - தன்னைப்பற்றிச் சொல்லும் உரை. தளவு - முல்லை.

11. எண் திசையாரும் - எட்டுத் திசையிலும் உள்ள யாவரும், பண்டு உரியார் - வழி வழி அடியார். ஆதி - முதல்வன், கண்டல் - தாழை. மிண்டிய - மிகுந்த. கானல் - கடற்கரைச் சோலை, கவுணியன் - கவுணியர் குலத்தலைவன், சொன்ன - சொல்லிய பாடல்களை, உடையார்கள் வானே - வானுலக இன்பத்தைத் தாம் பெற்றவர் ஆவர்.

1:9 திருவேணுபுரம்

பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

வண்டுஆர் குழல் அரிவையொடு
பிரியா வகை பாகம்
பெண்தான் மிக ஆனான், பிறைச்
சென்னிப் பெருமான் ஊர் –
தண்தாமரை மலராள் உறை,
தவளந் நெடு மாடம்
விண் தாங்குவ போலும் மிகு
வேணுபுரம் அதுவே. 1

படைப்பும், நிலை, இறுதிப் பயன்,
பருமையொடு, நேர்மை,
கிடைப் பல் கணம் உடையான்,
கிறி பூதப்படை யானஊர் –
புடைப் பாளையின் கமுகின்னொடு,
புன்னைமலர் நாறும
விடைத்தே வரு தென்றல் மிகு
வேணுபுரம் அதுவே. 2

---

1. வண்டு ஆர் குழல் - வண்டு மொய்க்கும் கூந்தல், அரிவை - பெண், உமை. தவளம் - பொன். விண் தாங்குவபோலும் மாடம் - வானத்தைத் தாங்குவன போல் மிக உயர்ந்து நிற்கும் மாடங்கள், வேணுபுரம் - சீகாழியின் பெயர்களுள் ஒன்று.

2. படைப்பு நிலை இறுதி - படைத்தல் காத்தல் அழித்தல். பயன் - முத்திப் பயன், கிடை - வேதம்,

கடம் தாங்கிய கரியை,
அவள் வெருவ உரி போர்த்துப்,
படம் தாங்கிய அரவக் குழைப்
பரமேட்டிதன் பழஊர் -
நடம் தாங்கிய நடையார் நல
பவளத்துவர் வாய்மேல்
விடர் தாங்கிய கண்ணார் பயில்
வேணுபுரம் அதுவே. 3

ஓதும் கூட்டம். கிறி - வஞ்சம். புடைப்பாளை - பக்கம் வெடித்துள்ள முற்றிய பாளை, விடைத்து வரும்-வேறு படுத்தி வரும்,

3. கடம் - மதநீர். கரி - யானை. வெருவ - அஞ்சுமாறு. உரி - உரித்த தோல், அரவம் குழையாயிற்று, பரமேட்டி - பரம்பொருளாயிருப்பவன், பழஊர் - தொன்மையான ஊர், நடம் தாங்கிய நடையார் - நடனம் ஆடிவருவது போன்று அசைந்தாடிவரும் நடையை உடையவர். பவளத்துவர்வாய் - பவளம் போன்ற சிவந்த வாய். விடம தாங்கிய கண் - ஆடவரைக் கொல்லும் தன்மை காரணமாக நஞ்சு பொருந்திய கண் எனப்பட்டது.

தக்கன்தன சிரம் ஒன்றினை
அரிவித்து, அவன் தனுக்கு
மிக்கவ்வரம் அருள்செய்த எம
விண்ணோர் பெருமான் ஊர் –
பக்கம் பல மயில் ஆடிட,
மேகம் முழவு அதிர,
மிக்கம் மது வண்டு ஆர்
பொழில் வேணுபுரம் அதுவே. 4

நானுவித உருவான், நமை
ஆள்வான், அணுகார்தார்
பொன் ஆர் திரிபுரம் மூன்று
எரியுண்ணச் சிலை தொட்டான்,
தேன் ஆர்ந்து எழு கதலிக்கனி
உண்பான் திகழ் மந்தி
மேல்நோக்கி நின்று இறங்கும்
பொழில் வேணுபுரம் அதுவே. 5

---

4. அரிவித்து-அரியும்படிச்செய்து மிக்க வரம்-மிகுதியான வரங்கள். மேகம் முழவு அதிர - மேகம் முரசு போல் முழங்க. மிக்க மது வண்டு ஆர் பொழில்-வண்டு தேனை மிகுதியாக உண்ணும் இடமான மலர்ச்சோலை.

5. நானுவித உருவான் - உருவமற்றவன் உயிர்களுக் காகவேண்டிப் பல்வேறு உருவங்களைக் கொண்டவன். நானுவித உருவால் நமை ஆள்வான் - பல்வேறு உருவு கொண்டு வந்து நம்மை அடிமை கொள்வான் எனவும் பொருள் கொள்வர். நணுகாதார் - தன்னை அடையாத பகைவர். திரிபுரம் - வானத்தில் திரிந்து வரும் நகரம்.

விண்ணோர்களும் மண்ணோர்களும்
வெருவிம் மிக அஞ்சக்,
கண் ஆர் சலம் மூடிக் கடல்
ஓங்க உயர்ந் தான் ஊர் —
தண் ஆர் நறும் கமலம் மலர்
சாய இள வாளை
விண் ஆர் குதி கொள்ளும் 6
வியன் வேணுபுரம் அதுவே.

... ... 7

மலையான் மகள் அஞ்சவ் வரை
எடுத்தவ் வலி அரக்கன்
தலை தோள் அவை நெரியச், சரண்
உகிர் வைத்தவன் தன் ஊர் -
கலை ஆறொடு, சுருதித் தொகை
கற்றோர் மிகு கூட்டம்
விலை ஆயின சொல் தேர்தரு
வேணுபுரம் அதுவே. 8

எரியுண்ண - தீக்கு இரையாக. சிலை தொட்டான் - வில்லில் அம்பைத் தொடுத்தான்.

6. கண் ஆர் சலம் மூடி - இடமெல்லாம் நிறைய நீர்மூடி, உயர்ந்தான் ஊர் - ஊழிப் பெரு வெள்ளத்தின் மேலாக இருந்தவனது ஊர். கமலம் - தாமரை. வாளை-மீன்வகை. விண்ஆர்குதி கொள்ளும் - வானத்தில் துள்ளிக் குதிக்கும். வியன் - அகன்ற இடமான.

7. * * *

8. வலி-வலிமையை உடைய. தலைதோள் அவை- தலைகளும் தோள்களும்; சரண் உகிர் - கால் விரல்.

வயம் உண்ட அம் மாலும்
அடி காணாது அலமாக்கும்
பயன் ஆகிய பிரமன் படு
தலை ஏந்திய பரன் ஊர் –
கயம் மேவிய சங்கம் தரு
கழிவிட்டு, உயர் செந்நெல்
வியல் மேவி வந்து உறங்கும்
பொழில் வேணுபுரம் அதுவே. 9

விலை ஆயின சொல் தேர்தரும் - பொருள் மதிப்புடைய சொற்களை ஆராயும்.

9: வயம் உண்ட அ மாலும் - நிலத்தை உண்ட அந்தத் திருமாலும். அலமாக்கும் - மனம் சுழலும்: பயன் - பயத்தை உடையவன். படுதலை - கிள்ளி எடுக்கப்பட்ட தலை: பரன்-உயர்ந்தோன், கயம் மேவிய சங்கம் - ஆழ்கடலைச் சேர்ந்த சங்கு. தரு கழி விட்டு - அலையால் தரப்பட்ட உப்பங்கழியை விட்டு நீங்கி, உயர் செந்நெல் வியன் மேவி - உயர்ந்த செந்நெற் பயிர் விளையும் அகன்ற இடமாகிய வயலை அடைந்து,

மாசு ஏறிய உடலார் அமண்
குழுக்களொடு, தேரர் -
தேசு ஏறிய பாதம் வணங்
காமைத் தெரியான் ஊர் -
தூசு ஏறிய அல்குல், துடி
இடையார், துணை முலையார்,
வீசு ஏறிய புருவத்தவர் -
வேணுபுரம் அதுவே. 10

வேதத்து ஒலியானும் மிகு
வேணுபுரம் தன்னைப்,
பாதத்தினின் மனம் வைத்து
எழு பந்தன்தன பாடல்,
ஏதத்தினை இல்லா இவை
பத்தும் இசை வல்லார்
கேதத்தினை இல்லார் சிவ
கெதியைப் பெறுவாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. மாசு - அழுக்கு. தேசு - ஒளி. பாதம் - சிவன் திருவடி. தெரியான்-அறியமுடியாதவன். தூசு-ஆடை. தெரியான் - அறியமுடியாதவன். தூசு - ஆடை. துடி-உடுக்கு. துணை - இரண்டு,

11. ஏதம் - குற்றம். கேதம் - துன்பம்

1:10 திருஅண்ணாமலை

பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய ஒருவன்,
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ,
மண்ஆர்ந்தன அருவித்திரள்
மழலைம்முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ணம் அறுமே. 1

தேமாங்கனி கடுவன்கொள,
விடுகொம்பொடு தீண்டித்,
தூ மா மழை துறுகல் மிசை
சிறுநுண்துளி சிதற,
ஆமாம்பிணை அணையும்பொழில்
அண்ணாமலை அண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி
நினைவார் வினை இலரே. 2

---

1. உடனாகிய - வேறு அற நின்ற. திருமா மணி-அழகிய மாணிக்க மணி, மண் ஆர்ந்தன அருவித் திரள் - நிலத்தை நோக்கி விழும் அருவிக் கூட்டம்; மழலை முழவு அதிரும் - இள முரசு போல முழங்கும்.

2. தேமாங்கனி - இனிய மாம்பழம். கடுவன் - ஆண்குரங்கு; விடுகொம்பு - கனிக்காக இழுத்துப் பின்

பீலிம்மயில் பெடையோடு உறை
　　பொழில் சூழ் கழை முத்தம்
சூலிம்மணி தரைமேல் நிறை
　　சொரியும் விரி சாரல்
ஆலிம் மழை தவழும் பொழில்
　　அண்ணுமலை அண்ணல்
காலன் வலி தொலைசேவடி
　　தொழுவாரன புகழே. 3

உதிரும் மயிர் இடு வெண்தலை
　　கலஞ உலகெல்லாம்
எதிரும் பலி உணலாகவும்,
　　எருது ஏறுவது அல்லால்,
முதிரும் சடை, இள வெண் பிறை,
　　முடிமேல் கொள, அடிமேல்
அதிரும் கழல் அடிகட்கு இடம்
　　அண்ணுமலை யதுவே 4

விடப்பட்டு நிமிரும் கொப்பு. மழை துளி சிதற - நிமிர்ந்த கொப்பு உயர்ந்து சென்று வானத்தில் மேகத்தைத் தாக்க அது உடைந்து மழைத் துளியைச் சிறுபாறைக் கல்லின்மேல் சிதற. ஆமாம் பிணை - காட்டுப் பசு.

3. பீலி - தோகை. கழை முத்தம் - மூங்கிலில் விளைந்த முத்துக்கள். ஆலி - நிர்த்துளி.

4. கலஞ - பிச்சைப் பாத்திரமாக. எதிரும் பலி - எதிராக வந்து இடும் பிச்சை.

மரவம் சிலை தரளம் மிகு
மணி உந்து வெள் அருவி
அரவம் செய, முரவம் படும்,
அண்ணாமலை அண்ணல்.
உரவம் சடை உலவும் புனல்
உடனாவதும் ஓரார்,
குரவம் கமழ் நறு மென் குழல்
உமை புல்குதல் குணமே. 5

பெருகும் புனல் அண்ணாமலை
பிறை சேர் கடல் நஞ்சைப்
பருகும்தனை துணிவார், பொடி
அணிவார். அது பருகிக்
கருகும் மிடறு உடையார் கமழ்
சடையார் கழல் பரவி,
உருகும் மனம் உடையார்தமக்கு
உறு நோய் அடையாவே. 6

---

5. மரவம் - வெண் கடம்ப மரம், குங்கும மரம். சிலை - ஒரு மரப்பெயர். தரளம் - முத்து. மணி - மாணிக்கம், மணிவகை. உந்து - தள்ளிக்கொண்டு வரும், அரவம் - ஒலி. முரவம் படும் - முழக்கம் உண்டாகும், உரவம் - உரகம் - பாம்பு, குரவம் - குராமலர்.

6. பிறைசேர் கடல் - ஒரு நாள்பிறை பொருந்தும் கடல். கருகும் மிடறு - கரு நிறமான கழுத்து,

கரி காலன, குடர் கொள்வன,
கழுது ஆடிய காட்டில்,
நரி ஆடிய நகு வெண்தலை
உதையுண்டு, அவை உருள,
எரி ஆடிய இறைவர்க்கு இடம்-
இன வண்டு இசை முரல,
அரி ஆடிய கண்ணாளொடும்
அண்ணாமலை அதுவே. 7

ஒளிறூ புலி அதள் ஆடையன்
உமை அஞ்சுதல் பொருட்டால்
பிளிறூ குரல் மத வாரண
வதனம் பிடித்து உரித்து,
வெளிறூ பட விளையாடிய
விகிர்தன் இராவணனை
அளறூ பட அடர்த்தான் இடம்
அண்ணாமலை அதுவே. 8

---

7. கரிகாலன - கரிந்து போன கால்களை உடையன. குடர் - இறந்து கிடக்கும் பிணத்தின் குடர். கழுது - பேய். கழுகு எனவும் படங்கொள்வர். அரி ஆடியகண் - செவ்அரி படர்ந்த கண்.

8. ஒளிறூ - ஒளிவிடும். அதள்-தோல். வாரணம்-யானை. வதனம் - முகம். வெளிறூபட விளையாடிய-கள்ளம் இல்லாது விளையாடிய. அளறூபட - நசுங்கிப் போமாறு. அடர்த்தான் - அழுத்தியவன்.

விளவு ஆர்கனி படநூறிய
கடல்வண்ணனும், வேதக்
கிளர் தாமரை மலர்மேல் உறை
கேடுஇல் புகழோனும்
அளவா வணம் அழல்ஆகிய
அண்ணாமலை அண்ணல்,
தளரா முலை, முறுவல் உமை
தலைவன் அடி [illegible]ணே. 9

வேர் வந்துஉற, மாசு ஊர்தர,
வெயில் நின்று உழல்வாரும்,
மார்பம் புதை மலிசீவரம்
மறையா வருவாரும்,
ஆரம்பர்தம் உரை கொள்ளன்மின்!
அண்ணாமலை அண்ணல்
கூர் வெண்மழுப் படையான்
நல்ல கழல்சேர்வது குணமே. 10

---

9. விளவு ஆர் கனிபட நூறிய - விளாமரமாகி நின்ற அசுரனை அழியுமாறு கொன்ற. கடல் வண்ணன் - கடலின் நிறங்கொண்ட கண்ணன். மலர் மேல் உறை புகழோன் - நான்முகன். அளவாவணம் - அளந்தறிய முடியாதபடி. சரண் - சாரும் இடமாகும்.

10. வேர் - வியர்வை. மாசு - அழுக்கு. ஊர்தர - பரவ. மார்பம் - மார்பு. சீவரம் - மரவுரி. ஆரம்பர் - சமய அறிவில் தொடக்க நிலையில் உள்ளவர்.

வெம்பு உந்திய கதிரோன் ஒளி
விலகும் விரி சாரல்
அம்பு உந்தி மூ எயில் எய்தவன்
அண்ணுமலை யதனைக்
கொம்பு உந்துவ, குயில் ஆலுவ,
குளிர் காழியுள் ஞான
சம்பந்தன தமிழ் வலலவர்
அடிபேணுதல் தவமே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. வெம்பு உந்திய - வெப்பத்தை வெளிவிடும் அம்பு. உந்தி-அம்பினைச் செலுத்தி. மூ எயில்-திரிபுரம். கொம்பு - ஊதும் இசைக் கருவி. உந்துவ - ஒலிப்பன ஆலுவ - ஒலிப்பன

1 : 11 திருவீழிமிழலை பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

சடை ஆர் புனல் உடையான்,
ஒரு சரி கோவணம் உடையான்,
படை ஆர் மழு உடையான்,
பல பூதப் படை உடையான்,
மட மான் விழி உமை மாது இடம்
உடையான, எனை உடையான்,
விடை ஆர் கொடி உடையான
இடம் வீழிம்மிழலையே. 1

---

1. கோவணம் - கோவண ஆடை. படை - 1. கருவி, 2. வீரர்படை. இடம் - இடப்பாகத்தில். மடமான் - பெண்மான். எனை உடையான் - என்னைத் தனக்கு அடிமையாக உடையவன்.

ஈறு ஆய், முதல், ஒன்று ஆய்,
இரு பெண் ஆண், குணம் மூன்று ஆய்,
மாறு மறை நான்காய், வரு
பூதம் அவை ஐந்தாய்,
ஆறு ஆர் சுவை, ஏழ் ஓசையொடு,
எட்டுத் திசை தான் ஆய்,
வேறு ஆய், உடன் ஆனான்
இடம் வீழிம்மிழலையே. 2

---

2. ஈறு - தோற்றப்பட்ட எல்லாவற்றையும் தன்னிடம் ஒடுங்கச் செய்து முடிவில் இருப்பது. முதல் - தன்னிடம் ஒடுங்கிய எல்லாவற்றையும் மறுபடியும் தோற்றுவித்து அவற்றிற் கெல்லாம் முதலாய் இருப்பது. ஒன்று ஆய் - எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக்கொண்டு தான் ஒரு பொருளேயாய் நிற்பது. இப்பாடல் முதல்வன் உலகெலாம் ஆகி வேறாய், உடனுமாய் நின்றான் என்ற சைவ சித்தாந்தக் கருத்தை உணர்த்துகின்றது. இரு பெண் ஆண் ஆய் - பெண்ணும் ஆணும் என இரண்டு ஆய். குணம் மூன்று - மூலப்பகுதியிலிருந்தும் தோன்றிய சத்துவம், இராசதம், தாமதம் ஆகிய மூன்று குணங்கள். மாறு மறை - கருத்தில் மாறுபாடில்லா வேதங்கள். உணர்த்தும் பொருள் அளவில் காலத்தாலும் மாறு படாத வேதங்கள் எனவும ஆம். வரு பூதம் - தோற்றப் படும் கருவிகளாகிய பொருள்களில், தத்துவங்களில் கடைசியாகத் தோன்றிவருவனவாகிய பூதங்கள். பூதம் ஐந்து - நிலம், நீர், தீ, காற்று, வானம். சுவை ஆறு - உப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, புளிப்பு, இனிப்பு. ஓசை ஏழு - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. தான் ஆய் -

வம்மின் அடியீர்! நாள் மலர்
இட்டுத் தொழுது உய்ய,
உம் அன்பினொடு எம் அன்பு செய்து,
ஈசன் உறை கோயிலை,
'மும்' என்று இசை முரல் வண்டுகள்
கெண்டித், திசை எங்கும்
விம்மும் பொழில் சூழ்
தண் வயல் வீழிம்மிழலையே. 3

எல்லாவற்றோடும் இரண்டு அறக் கலந்து நிற்கும் நிலையில் அவையே ஆகி. வேறு ஆய் - அவ்வாறு கலப்பினால் ஒன்றானாலும் பொருள்தன்மையால் தான் வேறு, அவை வேறு ஆகி. உடன் ஆனான் - உயிரின் தொழிற்பாட்டில் அவற்றோடு உடனாகி நின்றவன்.

3. வம்மின்-வாருங்கள். அடியீர்!-சிவபெருமான் ஒருவனுக்கே அடிமைபூண்ட அடியவர்களே! நாள் மலர் - காலையில் மலர்ந்த புது மலர். மலர் இட்டுத் தொழுது உய்ய வம்மின் என்று இயைக்க. உம் அன்பினொடு எம் அன்பு செய்து தொழுது உய்யலாம், வம்மின் எனவும் ஆம், மும் - வண்டுகள் கூடி இசைக்கும் ஒலிக்குறிப்பு. இசை முரல்வண்டு - இசை போல ஒலிக்கும் வண்டுகள். கெண்டி - கிளரி. விம்மும் - உயர்ந்து எழும்.

பண்ணும், பதம் ஏழும், பல
ஓசைத் தமிழ் அவையும்,
உள்நின்றது ஓர் சுவையும்,
உறு தாளத்து ஒலி பலவும்,
மண்ணும், புனல் உயிரும், வரு
காற்றும், சுடர் மூன்றும்,
விண்ணும் முழுது ஆனான்
இடம் வீழிம்மிழலையே. 4

---

4. பண் - இசை. பதம் - சுரத்தானங்கள். பல ஓசை - எடுத்தல், படுத்தல், நலிதல் முதலான ஓசை வேறுபாடுகள். இசைப்பாரையும் கேட்பாரையும் இன்புறுத்துவதாக. இசைத் தமிழின் உள்ளாக உயிர்க்கும் சுவையினை 'உள் நின்றது ஓர் சுவை' என்றார். உறு தாளத்து ஒலி பல - இசையொடு பொருந்தவரும் பலவாகிய தாளத்தின் ஒலி. மண் - நிலம். சுடர் மூன்று - சூரியன், சந்திரன், தீ ஆகிய ஒளி வகை மூன்று. விண் - வானம். மண் முதலான ஐந்து பூதங்களும் சூரியன், சந்திரன் ஆகிய இரு சுடர்களும் உயிரும் ஆகிய எட்டும் இறைவனுக்கு உரிய எட்டு மா உரு (அட்ட மூர்த்தம்) எனப்படும். அவன் எட்டு மா உருவினன் (அட்ட மூர்த்தி) ஆக இருப்பது சொல்லப்பட்டது.

ஆயாதன சமயம் பல
அறியாதவன், நெறியின்
தாயானவன், உயிர்கட்கு முன்
தலையானவன், மறை முத்
தீ ஆனவன், சிவன், எம் இறை,
செல்வத் திரு ஆரூர்
மேயான், அவன் உறையும்
இடம் வீழிம்மிழலையே. 5

5. ஆயாதன சமயம் பல அறியாதவன் - தோற்றப்பட்ட பொருள்கள் அத்தனையையும் முறையாக ஆராய்ந்து அவற்றின் நிலையாத்தன்மையையும் அவற்றின் அடியில் ஆதாரமாக இருக்கும் பொருளின் நிலைத்தன்மையையும் பகுத்துக் கண்டு அனுபவத்தாலும் உண்மையை உணராத சமயங்கள் பலவற்றாலும் அறியப்படாதவன். நெறியின் தாய் ஆனவன் - எல்லாச் சமயங்களையும் படி முறையில் தானே முதலாக இருந்து உருவாக்கியவன் என்ற முறையில் அவ் எல்லாச் சமயங்களுக்கும், முடிவாகிய ஒரே நெறியாகிய சித்தாந்த சைவ நெறிக்கும் பிறப்பிடம் ஆனவன். முன் தலை ஆனவன் - பண்டு தொட்டே உயிர்க்குத் தானே தலைவனாக இருந்து வருபவன் மறை முத் தீ - வேத வேள்வித் தீ மூன்று. எம் இறை - எம் இடத்து என்றும் நிலையாகத் தங்கியிருக்கும் தலைவன்

'கல்லால் நிழற் கீழாய்! இடர்
காவாய்!' என, வானோர்
எல்லாம் ஒரு தேராய், அயன்
மறை பூட்டி நின்று உய்ப்ப,
வல்லாய் எரி, காற்று ஈர்க்கு, அரி
கோல், வாசுகி நாண், கல்
வில்லால் எயில எய்தான்
இடம் வீழிம்மிழலையே. 6

---

6. கல் ஆல் நிழல் கீழாய்! - கல் ஆல மரத்தின் நிழலில் இருந்து முனிவர்க்கு அறம் முதலாக நான்கினையும் உணர்த்திய ஆசிரியப் பெருமானே! இடர் - முப்புரத்து அசுரரால் உண்டான துன்பம். காவாய்! - நீக்கியருள்வாயாக! எல் - ஒளி, சூரியன். அயன் - நான்முகன். மறை - வேதங்களாகிய குதிரை. உய்ப்ப - செலுத்த வல்லாய் - வலிமை ஆக. எரி - தீ. ஈர்க்கு - வில்லின் இறகு. அரி - திருமால். கோல் - அம்பு. கல் - மேருவாகிய மலை. கயிலை என்றும் ஆம். எரி வலிமை ஆக, காற்று இறகு ஆக. திருமால் அம்பு ஆக, வாசுகிப் பாம்பு நாண் ஆக, மலை வில்லாகக் கொண்டு, என்க.

கரத்தான் மலி சிரத்தான,
கரி உரித்து ஆயது ஓர் படத்தான்,
புரத்தார் பொடி படத்,
தன் அடி பணி மூவர்கட்கு ஓவா
வரத்தால் மிக அளித்தான் இடம்
வளர் புன்னை முத்து அரும்பி,
விரைத்தாது பொன், மணி ஈன்று
அணி வீழிம்மிழலையே. 7

---

7. கரத்தான் - கையில். சிரத்தான் - அயனது தலை ஓட்டை உடையவன். கரி உரித்து ஆய படத்தான் - யானையை உரித்துக்கொண்ட போர்வையை உடையவன். புரம் - முப்புரம். பொடிபட - அழிந்து போக. மூவர் - தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்ற மூவர். ஓவா வரத்தால்மிக அளித்தான் - கெடாத வரத்தால் அவர்கட்குச் சிறப்பு நிலையை அருள் செய்தவன். புன்னை - புன்னை மரங்கள். முத்து அரும்பி - முத்துக்களைப் போன்ற அரும்பு விட்டு. விரை - மணம். தாது - மகரந்தம். புன்னைகள் அரும்புகளாகிய முத்துக்களைத் தோற்றுவித்து மணம் மிகுந்த மகரந்தமாகிய பொன்னையும் காய்களாகிய மணிகளையும் கொண்டு அழகு செய்யும் மிழலை என்க.

முன் நிற்பவர் இல்லா முரண்
அரக்கன், வடகயிலை
தன்னைப் பிடித்து எடுத்தான் முடி,
தடம் தோள் இற ஊன்றிப்,
பின்னைப் பணிந்து ஏத்தப், பெரு
வாள் பேரொடும் கொடுத்த,
மின்னின் பொலி சடையான்,
இடம் வீழிம்மிழலையே. 8

பண்டு ஏழ் உலகு உண்டான்,
அவை கண்டானும், முன் அறியா
ஒண் தீ உரு ஆனான், உறை கோயில்
நிறை பொய்கை
வண் தாமரை மலர்மேல் மட
அன்னம் நடை பயில,
வெண் தாமரை செம் தாது
உதிர் வீழிம்மிழலையே 9

---

8. முரண் - வலிமை, அரக்கன் - இராவணன், தட - பெரிய. இற - முறிய. மின்னின் - மின்னலைப் போல. பொலி - விளங்கும்.

9. உலகு உண்டான் - திருமால்; அவை கண்டான் - உலகைப் படைத்த நான்முகன்.

மசங்கல் சமண், மண்டைக் கையர்,
குண்டக் குணம் இலிகள்
இசங்கும் பிறப்பு அறுத்தான் இடம்—
இரும் தேன் களித்து இரைத்துப்
பசும்பொன் கிளி, களி மஞ்ஞைகள்,
ஒளி கொண்டு எழு பகலோன்
விசும்பைப் பொலிவிக்கும்
பொழில் வீழிம்மிழலையே 10

வீழிம் மிழலைம் மேவிய
விகிர்தன்தனை, விரைசேர்
காழிந் நகர்க் கலை ஞான
சம்பந்தன் தமிழ் பத்தும்,
யாழின் இசை வல்லார், சொலக்
கேட்டார் - அவர் எல்லாம்
ஊழின் மலி வினை போயிட,
உயர் வான் அடை வாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. மசங்கல் - அறிவில் உண்டான மயக்கம்: மண்டைக் கையர் - பிச்சை ஏற்கும் பாத்திரத்தை ஏந்திய கையினர். இசங்கும் - வந்து சேர்ந்த. இரும் தேன் - கரிய பெரிய வண்டுகள். களித்து இரைத்து - தேனை உண்ட மகிழ்ச்சியால் ஒலி செய்து. களி மஞ்ஞை - மகிழ்ச்சி கொண்ட மயில்கள்.

1:12 திருமுதுகுன்றம் பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

மத்தா வரை நிறுவிக், கடல்
கடைந்தவ் விடம் உண்ட,
தொத்து ஆர்தரு மணி, நீள் முடிச்
சுடர் வண்ணனது இடமாம் –
கொத்து ஆர் மலர், குளிர் சந்து,
அகில், ஒளிர் குங்குமம் கொண்டு,
முத்தாறு வந்து அடி வீழ்தரு
முதுகுன்று அடைவோமே. 1

---

1. வரை - மந்தரமலை. வரையை மத்தாக நிறுத்திக் கடலைக் கடைந்த விடம் - கடலைக் கடைந்த காலத்துத் தோன்றிய நஞ்சு. கொத்து - தொகுத்து. ஆர்தரு முடி - நெருங்கக் கட்டிய முடி. மணி நீள் முடி - அழகிய நீண்ட முடி. சுடர் வண்ணன் - தீச்சுடர் போன்ற செந்நிறம் உடையவன். மணி முத்தாறு மலர், சந்தனம், அகில், குங்குமம் கொண்டு வந்து இறைவன் திருவடியில் இட்டு வணங்கும் முதுகுன்று.

தழை ஆர் வட் விய வீதனில்
தவமே புரி சைவன்,
இழை ஆர் இடை மடவாளொடும்
இனிதா உறைவு இடம்ஆம் —
மழை வான் இடை முழவ, எழில் வளை
வாள் உகிர், எரி கண்,
முழை வாள் அரி குமிறும் உயர்
முதுகுன்று அடைவோமே. 2

---

2. தழை - இலை. வடம் - கல்ஆலமரம். விய - அகலமான. வீ - நிழல். தவம் - யோக நிலையில் இருத்தல். சைவன் - சிவன். இழை ஆர் இடை – நூல் போன்ற மெல்லிய இடுப்பு. கயிலையிடை ஆலின் கீழ் யோகியாயிருந்த சிவன், இங்கு முதுகுன்றில் போகியா யிருக்கின்றான் என்றார். வான் இடை மழை முழவ - வானத்தில் மேகம் முரசுபோல் முழங்க. எழில் வளை வாள் உகிர் - அழகிய வளைந்த ஒளி வீசும் நகம். எரிகண் - தீப் போன்ற சிவந்த கண். முழை வாள் அரி-குகையில் வாழும் ஒளிபொருந்திய சிங்கம். 'முழை வாழ் அரி' எனப்பாடம் கொள்ளலும் ஆம். குமிறும்- மேகம் முழங்குதலைக் கேட்டு யானையின் பிளிறல் எனக் கருதிச் சிங்கம் முழங்கியது போலும்.

விளையாதது ஓர் பரிசில் வரு
பசு, பாச, வேதனை, ஒண்
தனை – ஆயின தவிர அருள்
தலைவன்னது சார்பு ஆம்,
களை ஆர்தரு கதிர் ஆயிரம்
உடைய அவனோடு,
முளை மாமதி தவழும் உயர்
முதுகுன்று அடைவோமே. 3

சுரர், மாதவர், தொகு கின்னரர்
அவரோ, தொலைவு இல்லா
நரர் ஆன பல் முனிவர் தொழ
இருந்தான் இடம் – நலம் ஆர்
அரசார் வர, அணி பொன் கலன்
அவை கொண்டு, பல் நாளும்
முரசு ஆர் வரு மண மொய்ம்பு
உடை முதுகுன்று அடைவோமே. 4

---

3. பசு - பாசத்தோடு கூடிய தன்மை யாகிய பசுத்துவம். பாசம் - ஆணவம் என்னும் மூலமலம். வேதனை - துன்பமும் துன்பத்திற்குக் காரணமான வினையும். ஒண்தனை - விளக்குப் போல அறிவு விளக்கத் திற்குத் துணை: நிற்கும் மாயை என்னும் பாச வகை. விளையாதது ஓர் பரிசில் தவிர – கூறப்பட்ட மூவகைப் பாசக்கட்டும் நீங்கி யொழியுமாறு. சார்பு – எழுந் தருளியுள்ள இடம். களை - ஒளிவிளக்கம். ஆயிரம்-பல; ஆயிரம் கதிர் உடையவன் - சூரியன். முளை மா மதி – பிறைத்திங்கள்.

4. சுரர் – தேவர்கள். தொகு – கூட்டமாகவே இருக்கும். கின்னரர் - கின்னரி எனப்படும் கருவியை

அறை ஆர் கழல் அந்தன் தனை,
அயில் மூஇலை, அழகு ஆர்
கறை ஆர் நெடுவேலின் மிசை
ஏற்றான் இடம் கருதில்,
மறை ஆயின பல சொல்லி, ஒண்
மலர், சாந்து அவை கொண்டு,
முறையால் மிகும் முனிவர் தொழும்
முதுகுன்று அடைவோமே.

ஏ, வார் சிலை எயினன்
உரு ஆகி, எழில் விசயற்கு
ஓவாத இன் அருள் செய்த
எம் ஒருவற்கு இடம் - உலகில்
சாவாதவர், பிறவாதவர், தவமே
மிக உடையார்,
மூவாத பல் முனிவர் தொழு
முதுகுன்று அடைவோமே. 6

இசைப்பார். தொலைவு இல்லா - கேடில்லாத. நரர் - மக்கள். பல் - பல. நலம் ஆர் - நன்மை நிறைந்த. அணிபொற்கலன் - அழகிய பொன்னால் ஆன அணி கலன். முரசு ஆர்வரும் – முரசு முழங்கும்.

5. அறை - ஒலி. அந்தன் - அந்தகன் என்னும் அசுரன். அயில் - கூர்மையுள்ள. கறை - குருதிக்கறை.

6. ஏ - அம்பு. வார்சிலை - நீண்ட வில். எயினன்- வேடன். விசயன் - அருச்சுனன்.

தழல் சேர்தரு திருமேனியர்,
சசிசேர் சடை முடியர்,
மழ மால் விடை மிக ஏறிய
மறையோன் உறை கோயில்
விழவோடு ஒலி மிகும்
மங்கையர் தகும் ஆடக சாலை
முழவோடு இசை நடம் முன்
செயும் முதுகுன்று அடைவோமே. 7

செது வாய்மைகள் கருதி வரை
எடுத்த திறல் அரக்கன்
கது வாய்கள் பத்து அலறீயிடக்
கண்டான் உறை கோயில்
மதுவாய செங்காந்தள் மலர்
நிறையக், குறைவில்லா
முது வேய்கள் முத்து உதிரும்
பொழில் முதுகுன்று அடைவோமே. 8

---

7. தழல் சேர்தரு - தீயை ஒத்த செந்நிறமான. சசி - சந்திரன். மழ - இளமையான. ஆடகசாலை - நடன அரங்கம்.

8. செது வாய்மைகள் - பொல்லாத சொற்கள். கது வாய்கள் - பிளந்த வாய்கள், அலறீ - அலறி. கண்டான் - செய்தான். மது - தேன். முது வேய் - முற்றிய மூங்கில்கள்.

இயல் ஆடிய பிரமன், அரி
இருவர்க்கு அறிவு அரிய,
செயல் ஆடிய தீ ஆர்
உருவாகி எழு செல்வன் -
புயல் ஆடு வண் பொழில்
சூழ் புனல் படப்பைத் தடத்து அருகே
முயல் ஓட, வெண்கயல் பாய்தரு
முதுகுன்று அடைவோமே. 9

அருகரோடு புத்தர் அவர்
அறியா அரன், மலையான்
மருகன், வரும் இடபக்
கொடி உடையான் இடம் - மலர் ஆர்
கருகு குழல் மடவார் கடி
குறிஞ்சிஅது பாடி,
முருகன்னது பெருமை பகர்
முதுகுன்று அடைவோமே 10

---

9. இயல் ஆடிய - தம் தம் இயல்பையே பெரிதாக மதித்துப் பேசிய. தீ ஆர் - உருசெறிந்த தீஉருவம். புயல் ஆடும் - மேகம் தவழும். வண் பொழில் - வளமான சோலை. புனல் படப்பை - நீர் பரந்த இடம். தடம் - பொய்கை.

10. அருகர் - சமணர். மலையான் - இமவான். இடபம் - எருது. மலர் ஆர் - நிறைய மலர் சூடிய. கருகு குழல் - கரிய நிறமான கூந்தல். கடி - தெய்வ மணம் கமழும். குறிஞ்சி - குறிஞ்சிப்பண்.

முகில் சேர்தரு முதுகுன்று
உடையானை, மிகுதொல் சீர்ப்
புகலிந் நகர் மறை ஞான
சம்பந்தன் உரை செய்த,
நிகர் இல்லன தமிழ் மாலைகள்,
இசையோடு, இவை பத்தும்
பகரும் அடியவர்கட்கு, இடர்,
பாவம் அடையாவே. 11

திருச்சிற்றம்பலம்

11. முகில் - மேகம். நிகர் இல்லா - ஒப்பில்லாதன. பகரும் சொல்லிப் பாடும்.

1:13   **திருவியலூர்**   **பண்: நட்டபாடை**

திருச்சிற்றம்பலம்

குரவம் கமழ் நறு மென்குழல்
அரிவை அவள் வெருவப்,
பொரு வெம் கரி பட, வென்று,
அதன் உரிவை உடல் அணிவோன்,
அரவும், அலை புனலும்,
இள மதியும் நகு தலையும்
விரவும் சடை அடிகட்கு இடம்
விரிநீர் வியலூரே. 1

ஏறு ஆர்தரும் ஒருவன், பல
உருவன, நிலையானன்,
ஆறு ஆர்தரு சடையன், அனல்
உருவன, புரிவு உடையான்,
மாறூர் புரம எரியச் சிலை
வளைவித்தவன் மடவாள்
வீறு ஆர்தர நினைவான் இடம்
விரிநீர் வியலூரே. 2

---

1. குரவம் - குராமலர். அரிவை – பெண், உமை. பொரு வெம் கரி பட - போராடிய கருமையான யானை இறந்து போக. அலைபுனல் - கங்கை. இளமதி - பிறைத் திங்கள். நகுதலை - சிரிப்பது போன்றிருக்கும் மண்டை ஓடு.

2. ஏறு ஆர்தரும் - எருதினை ஊர்ந்து வரும். அனல் - தீ. புரிவு - அன்பு. மாறூர் - பகைவர். வீறு- தனக்கே உரிய பெருமை.

செம்மென் சடையவை தாழ்வுற,
மட்வார் மனைதோறும்,
'பெய்ம்மின் பலி' என நின்று,
இசை பகர்வார் அவர் இடமாம் -
உம் என்று எழும் அருவித் திரள்
வரை பற்றிட, உறைமேல்
விம்மும் பொழில் கெழுவும் வயல்
விரிநீர் வியலூரே, 3

அடைவு ஆகிய அடியார் தொழ,
அலரோன் தலையதனில்
மட்வார் இடு பலி வந்து உணல்
உடையான் அவன் இடமாம் -
கடை ஆர்தர அகில், ஆர் கழை
முத்தம நிரை சிந்தி,
மிடை ஆர் பொழில் புடை
சூழ்தரு விரிநீர் வியலூரே. 4

---

3. செம் மென் சடை - சிவந்த மெல்லிய சடை. மடவார் - முனிவர் மனைவியர். உறை - மழை. கெழுவும் - பொருந்திய. வயலும், விரிந்த நீரும் உடைய வியலூர்.

4. அடைவு ஆகிய - கூட்டமான. அலரோன் - தாமரை மலரோன் ஆகிய நான்முகன். தலை - மண்டை ஓடு. மடவார் - முனிவர் மனைவியரான பெண்கள். உணல் - உண்ணல். ஆர்கழை - செறிவா யுள்ள மூங்கில். முத்தம் - முத்துக்கள் நிரை - வரிசை, மிடை - செறிவு.

எண் ஆர்தரு பயனாய், அயன்
அவனாய், மிகு கலையாய்ப்,
பண் ஆர்தரு மறையாய், உயர்
பொருளாய், இறையவனாய்க்,
கண் ஆர்தரும் உருவாகிய
கடவுள் இடம் எனலாம்
விண்ணோரொடு மண்ணோர் தொழும்
விரிநீர் வியலூரே. 5

வசை வில்கொடு வரு வேடுவன்
அவனாய், நிலை அறிவான்,
திசை உற்றவர் காணச் செரு
மலைவான், நிலையவனை
அசையப் பொருது, அசையா வணம்
அவனுக்கு உயர் படைகள்
விசையற்கு அருள்செய்தான் இடம்
விரிநீர் வியலூரே. 6

---

5. எண் ஆர்தரு பயனாய் - நினைப்பார் நினைப்பிற்குப் பயனாகி. அயன் - நான்முகன். கண் ஆர்தரும் உரு - கண்ணுக்கு நிறைந்த உருவம்.

6. வசை - வளைந்த. கொடுவரும் - கொண்டு வரும். நிலை அறிவான் - அருச்சுனனின் தவநிலையை அறியும் பொருட்டு, திசை உற்றவர் - நாலாபக்கமும் உள்ளவர். செருமலைவான் - போர் செய்வான். நிலையவன் - ஒற்றைக் காலில் நின்று தவம் செய்பவன்.

'மான், ஆர் அரவு உடையான்,
இரவு உடையான் பகல் நட்டம்,
ஊன் ஆர்தரும் உயிரான், உயர்
விசையான், விளைபொருள்கள்
தான் ஆகிய தலைவன்' என
நினைவார் அவர் இடமாம்
மேல் நாடிய விண்ணோர் தொழும்
விரிநீர் வியலூரே 7

'பொருவார் எனக்கு எதிர் ஆர்?'
எனப் பொருப்பை எடுத்தான்தன்
கருமால் வரை கரம, தோள்,
உரம், கதிர் நீள்முடி நெரிந்து,
சிரம் ஆயின கதறச் செறி
கழல்சேர் திருவடியின்
விரலால் சுடர்வித்தான் இடம்
விரிநீர் வியலூரே. 8

---

7. இரவு - யாசித்தல். ஊன் ஆர் தரும் உயிரான் - உடம்பில் நிறைந்து நிற்கும் உயிரோடு கலந்து அந்த உயிரேயாய் நிற்பவன். விளை பொருள்கள் தான் ஆகிய தலைவன் - தன்னால் ஆக்கப்பட்ட பொருள்கள் அனைத்திலும் கலந்து அப்பொருள்களாயும் நிற்கும் தலைவன். மேல் நாடிய—உயர்வினை விரும்பிய.

8. பொருவார் - போரிடுவார், ஒப்பார். பொருப்பு - மலை. கருமால் வரை கரம் தோள் உரம் - கருநிறமுடைய பெரிய மலை போன்ற கை, தோள், மார்பு ஆகியன. கதிர் - ஒளிவீசும் சிரம் ஆயின கதற - தலைப்பகுதியில் உள்ள வாய் கதற.

வளம் பட்டு அலர் மலர் மேல்
அயன், மாலும் - ஒரு வகையால்
அளம்பட்டு அறிவு ஒண்ணுவகை,
அழல் ஆகிய அண்ணல்.
உளம்பட்டு எழு தழல் தூண்தன்
நடுவே, ஒரு உருவம்,
விளம்பட்டு அருள் செய்தான்
இடம் விரிநீர் வியலூரே 9

தடுக்கால் உடல் மறைப்பார் அவர்,
தவர், சீவரம் மூடிப்,
பிடக்கே உரை செய்வாரொடு
பேணார் நமர். பெரியோர்.
கடல் சேர்தரு விடம் உண்டு,
அமுது அமரர்க்கு அருள்செய்த,
விடை சேர்தரு கொடியான்
இடம் விரிநீர் வியலூரே. 10

---

9. வளம் பட்டு அலர் மலர் - வளம் உடையதாக மலர்ந்த தாமரை மலர். அளம் பட்டு - வருந்தி. விளம்பட்டு - வெளிப்பட்டு

10 தடுக்கு - ஓலைப்பாய். சீவரம்-மரவுரி, பிடக்கு - பிடகநூல். விடை - எருது

விளங்கும் பிறை சடைமேல்
உடை விகிர்தன் வியலூரைத்,
தளம் கொண்டது ஓர் புகலித, தகு
தமிழ் ஞான சம்பந்தன்
துளங்கு இல் தமிழ் பரவித்,
தொழும் அடியார் அவர் - என்றும்
விளங்கும் புகழ் அதனோடு,
உயர் விண்ணும் உடையாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. விகிர்தன் - பலவேறு வடிவம் கொள்பவன். துளங்கு இல் தமிழ் - பொருளை உணர்த்துவதில் அசைவற்ற, திட்பமான தமிழ்

1:14 திருக்கொடுங்குன்றம் பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

வானில் பொலிவு எய்தும் மழை
மேகம் கிழித்து ஓடிக்,
கூனல் பிறை சேரும், குளிர்
சாரல் கொடும்குன்றம் –
ஆனில் பொலி ஐந்தும் அமர்ந்து
ஆடி, உலகு ஏத்தத்,
தேனில் பொலி மொழியாளொடும்
மேயான் திருநகரே. 1

மயில் புல்கு தண் பெடையோடு
உடன் ஆடும் வளர் சாரல்,
குயில் இன்இசை பாடும்
குளிர் சோலைக் கொடுங்குன்றம் –
அயில் வேல், மலி நெடு வெம்சுடர்
அனல் ஏந்தி நின்று ஆடி,
எயில் முன் பட எய்தான்
அவன் மேய எழில் நகரே. 2

---

1. கூனல்-வளைவு. ஆனில் பொலி ஐந்து - ஆன் ஐந்து. தேனில் பொலி மொழியாள் - தேன் போன்ற இனிய மொழியைப் பேசுபவள், உமையம்மை.

2. புல்கு-தழுவும். அயில் - கூர்மையான. மலி நெடு வெம் சுடர்-மிகுந்து நீண்டு எரியும் வெப்பம்மிக்க ஒளியை உடைய. அனல் - தீ. முன் எயில் பட - முற்காலத்தில் முப்புரம் அழிய.

மிளிரும் மணி,பைம் பொன்னொடு,
 விரை மா மலர் உந்திக்,
குளிரும் புனல் பாயும் குளிர்
 சாரல் கொடுங்குன்றம் —
கிளிர் கங்கையொடு, இள வெண்மதி
 கெழுவும் சடைதன்மேல்
வளர் கொன்றையும், மத மத்தமும்
 வைத்தான் வளநகரே. 3

பரு மா மத கரியோடு
 அரி இழியும் விரி சாரல்,
குரு மா மணி, பொன்னொடு
 இழி அருவிக் கொடுங்குன்றம் —
பொரு மா எயில், வரைவில்
 தரு கணையில் பொடிசெய்த
பெருமான் அவன் உமையாளொடும்
 மேவும் பழநக்ரே. 4

---

3. மிளிரும் - ஒளிவீசும். கிளர் - பொங்கிவரும். இள வெண் மதி - வெண்ணிறமான பிறைத்திங்கள். கெழுவும்-பொருந்தியிருக்கும். மதமத்தம் - மதத்தை உண்டுபண்ணும் ஊமத்தம்பூ.

4. பரு-பெருத்த உடம்பினை உடைய. மா மத கரி-மிகுந்த மதம் பொருந்திய யானை. அரி - சிங்கம். இழியும் - இறங்கி வரும். விரி சாரல் – பரந்த மலைச் சாரல். குரு மாமணி-செந்நிறம் உடைய தலைமையான மாணிக்கம். பொரு மா எயில் - பகைவரின் மூன்று பெரிய கோட்டைகள், திரிபுரம். வரை வில்-மலையை

மேகத்து இடி குரல் வந்து எழ,
வெருவிவ் வரை இழியும்
கூகைக் குலம் ஓடித் திரி
சாரல் கொடுங்குன்றம் –
நாகத் தொடும் இள வெண் பிறை
சூடிங், நல மங்கை
பாகத்தவன், இமையோர் தொழ,
மேவும் பழநகரே. 5

கைம்மா மத கரியின் இனம்,
இடியின் குரல் அதிரக்,
கொய்ம் மா மலர்ச் சோலை
புக மண்டும் கொடுங்குன்றம் –
அம்மான் என உள்கித்,
தொழுவார்கட்கு அருள்செய்யும்
பெம்மான் அவன் இமையோர் தொழ
மேவும் பெருநகரே. 6

வளைத்துக் கொண்ட வில். கணை - அம்பு. பொடி செய்த-எரித்து நீருக்கிய.

5. வரை இழியும் - மலையிலிருந்து இறங்கும்: கூகைக் குலம்-கோட்டான்கள் கூட்டம். நல-ந(ல்)ல.

6. கைம்மா - துதிக்கையை உடைய விலங்கு. மண்டும்-நெருங்கிச் செல்லும்.

மரவத்தொடு, மண மாதவி
மௌவல்அது, விண்ட
குரவத்தொடு விரவும் பொழில்
சூழ்தண் கொடுங்குன்றம் –
அரவத்தொடும், இள வெண் பிறை,
விரவும் மலர்க் கொன்றை
நிரவச், சடைமுடிமேல் உடன்
வைத்தான் நெடுநகரே. 7

முட்டா முது கரியின் இனம்,
முது வேய்களை முனிந்து,
குட்டாச் சுனையவை மண்டிநின்று –
ஆடும் கொடுங்குன்றம்
ஒட்டா அரக்கன்தன முடி
ஒரு பஃதுஅவை உடனே
பிட்டான்அவன் உமையாளொடும்
மேவும் பெருநகரே. 8

---

7. மரவம் - கடம்பமரம். மாதவி - குருக்கத்தி. மௌவல்-முல்லை. விண்ட குரவம்-மலர்ந்த குராமரம். அரவம்-பாம்பு. நிரவ-நிரம்ப, உடன்-ஒருசேர.

8. முட்டா - தடையில்லாது திரியும். முது - 1. வயதான, 2. முற்றிய. வேய்-மூங்கில். முனிந்து-செருக்குடன் முறித்து. குட்டாச் சுனை - மக்களால் தோண்டப்படாமல் தாமே ஆழமான சுனைகள். மண்டி நின்று - கூடி நின்று. ஒட்டா - மனம் பொருந்தாத. பிட்டான்-ஒடித்தான்.

அறையும் அரி குரல் ஓசையை
அஞ்சி, அடும் ஆனை
குறையும் மனமாகிம் முழை
வைகும் கொடுங்குன்றம்—
மறையும் அவை உடையான் என,
நெடியான் என — இவர்கள்
இறையும் அறிவு ஒண்ணுதவன்
மேய எழில் நகரே. 9

மத்தக் களிறு, ஆளி வர
அஞ்சி, மலைதன்னைக்
குத்திப் பெரு முழைதன் இடை
வைகும் கொடுங்குன்றம் —
புத்தரொடு பொல்லா மனச்
சமணர் புறம் கூறப்,
பத்தர்க்கு அருள்செய்தான் அவன்
மேய பழ நகரே. 10

---

9. அறையும்-முழங்கும். அடும்-கொல்லவல்ல. குறையும் மனம் ஆகி - திடம் அற்று அஞ்சிய மனத்தோடு. முழை வைகும் - குகையில் தங்கியிருக்கும். மறை - வேதக்கள். மறையும் அவை உடையான் - வேதம் ஓதும் நான்முகன். நெடியான் - திருமால். இறையும் - சிறிதும். அறிவொண்ணுன் - அறியப் படாதவன்.

10. மத்தக் களிறு - செருக்குக் கொண்ட ஆண் யானை. ஆளி - சிங்கம். புறம் கூறல் - முன் நின்று தங்கள் கருத்துகளைச் சொல்லி வாது செய்யும் திறன் இல்லாமையால் புறத்தே நின்று இகழ்ந்து கூறல்.

கூனல் பிறை சடைமேல் மிக
உடையான் கொடுங்குன்றைக்,
கானல் கழுமல மா நகர்த்
தலைவன், நல கவுணி,
ஞானத்து உயர் சம்பந்தன
நலம்கொள் தமிழ் வல்லார்
ஊனதொடு துயர்தீர்ந்து,
உலகு ஏத்தும் எழிலோரே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. மிக - தேய்வதைத் தடுத்து வளருமாறு அருள் செய்து அணிந்து கொண்டவன். நல-ந(ல்)ல. கவுணி - கவுணியர் குலத் தலைவர். ஞானத்து உயர் சம்பந்தன் - உமை தந்த சிவஞானத்தால் உயர் நிலையில் தொடர்பு கொண்டவன். ஊனம் - ஆணவ மலத் தொடர்பாகிய குறைவு. ஊனமும் துயரும் என்றது ஆணவமலக் கட்டும் வினைக் கட்டும் ஆகிய இருவகையை. இனம்பற்றி மாயைக் கட்டும் கொள்ளப் படும். உலகு ஏத்தும் எழில் என்றது சீவன் முத்தி நிலையாகிய உயர்ந்து விளங்கும் நிலையை.

1:15 திருநெய்த்தானம் பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

மை ஆடிய கண்டன், மலைமகள்
பாகம் அது உடையான்,
கை ஆடிய கேடுஇல் கரிஉரி
மூடிய ஒருவன்
செய் ஆடிய குவளைம் மலர்
நயனத்தவ ளோடும்
நெய் ஆடிய பெருமான் இடம்
நெய்த்தானம் எனீரே ! 1

1. மை - நஞ்சினால் உண்டான இருள் நிறம். ஆடிய - பொருந்திய. கண்டன் - கழுத்தை உடையவன். கை ஆடிய - துதிக்கை உடைய. கேடு இல் கரி - உரித்தமையால் முன்னர் இருந்த தீமை நீங்கப் பெற்ற யானை. ஒருவன் - தன் ஒப்பார் யாரையும் இல்லாதவன். செய் ஆடிய - வயலில் உண்டான. நயனம் - கண். நெய் ஆடிய பெருமான் - இத்தலத்துப் பெருமானுக்கு உரிய சிறப்புத்திருப்பெயர். எனீரே - என்று சொல்லுங்கள்.

பறையும் பழி, பாவம்;
படுதுயரம் பலதீரும்;
பிறையும், புனல், அரவும் படுசடை
எம் பெருமான் ஊர் –
அறையும் புனல் வரு காவிரி
அலைசேர் வட கரைமேல்,
நிறையும் புனை மடவார் பயில்
நெய்த்தானம் எனீரே! 2

பேயாயின பாடப் பெரு நடம்
ஆடிய பெருமான்,
வேய் ஆயின தோளிக்கு ஒரு
பாகம் மிக உடையான்,
தாயாகிய, உலகங்களை நிலைபேறு
செய், தலைவன்,
நே ஆடிய பெருமான் இடம்
நெய்த்தானம் எனீரே! 3

---

2. பறையும் - நீங்கும். அறையும் - ஒலித்து வரும். நிறையும் புனை மடவார் - மனத்தை நெறிக்கண் நிறுத்தும் குணத்தாலும் அழகு செய்து கொள்ளும் பெண்கள்.

3. உலகங்களை நிலைபேறு செய் தாயாகிய தலைவன் எனக் கூட்டுக. நே - அன்பு.

சுடுநீறு அணி அண்ணல், சுடர்
சூலம், அனல் ஏந்தி,
நடுநள் இருள் நடம் ஆடிய
நபன் உறைவு இடமாம்,
கடுவாள் இள அரவு ஆடு
உமிழ் கடல் நஞ்சம் அது உண்டான்,
நெடு வாளைகள் குதிகொள்,
உயர் நெய்த்தானம் எனீரே! 4

நுகர் ஆரமொடு, ஏலம், மணி,
செம்பொன், நுரை உந்திப்,
பகராவரு புனல் காவிரி
பரவிப் பணிந்து ஏத்தும்,
நிகரான் மணல் இடு தண் கரை
நிகழ்வு ஆய நெய்த்தான
நகரான் அடி ஏத்த நமை
நடலை அடையாவே, 5

---

4. அண்ணல் - தலைவன். நடு நள் இருள் - நடு இரவாகிய செறிந்த இருள். வாள் - ஒளி.

5. ஆரம் - சந்தனம். உந்தி - தள்ளி. பகரா வரும் - விலை கூறி விற்பார் போல வரும். நிகழ்வு ஆய - இருக்கும். நடலை - துன்பம்.

விடை ஆர் கொடி உடைய
அணல், வீந்தார் வெளே எலும்பும்
உடையார், நறு மாலை சடை
உடையார் அவர் மேய,
புடையே புனல் பாயும் வயல்,
பொழில் சூழ்ந்த நெய்த்தானம்
அடையாதவர் என்றும் அமர்
உலகம் அடையாரே. 6

நிழல் ஆர் வயல் கமழ் சோலைகள்
நிறைகின்ற நெய்த் தானத்து
அழல் ஆனவன், அனல்
அங்கையில் ஏந்தி, அழகாய
கழலான், அடி நாளும் கழலாதே,
விடல் இன்றித்,
தொழலார் அவர், நாளும் துயர்
அகலத் தொழுவாரே. 7

---

6. விடை - எருது. அணல் - அ(ண்)ணல் - தலைவன். வீந்தார் - இறந்தவர். இங்கு நான்முகன், திருமால் ஆகியோரைக் குறிக்கும். வெளே - வெ(ள்)ளை நறு - மணம் உடைய. புடை - பக்கம். அமர் உலகம் - தேவர் உலகம் விரும்பிய மேல் உலகம் ஆகிய வீட்டுலகம்

7 அழல், அனல் - தீ. கழலாதே - நெகிழ்ந்து விடாமல். விடல் இன்றி - விட்டு விடாமல்.

அறை ஆர் கடல் இலங்கைக்கு
இறை, அணிசேர் கயிலாயம்
இறை ஆர முன் எடுத்தான்
இருபது தோள் இற ஊன்றி,
நிறை ஆர் புனல் நெய்த்தானன் நன்
நிகழ் சேவடி பரவக்
கறை ஆர் கதிர் வாள் ஈந்தவர்
கழல் ஏத்துதல் கதியே. 8

கோலம் முடி நெடுமாலொடு,
கொய் தாமரையானும்,
சீலம் அறிவு அரிதாய், ஒளி
திகழ்வு ஆய நெய்த்தானம்,
காலம் பெற மலர், நீர்
அவை தூவித் தொழுது ஏத்தும்,
ஞாலம் புகழ் அடியார் உடல்
உறு நோய் நலியாமே. 9

---

8. அறை ஆர் கடல் - முழங்கும் கடல். கடல் இலங்கை - கடலால் சூழப்பட்ட இலங்கை. இறை - அரசன். அணி - அழகு. இறை ஆர - முன் கையால். நன் நிகழ் சேவடி - யார்க்கும் நன்மையே செய்து வரும் சிவந்த திருவடிகள். கதி - முடிந்த பேறு. சென்றடையும் இடம்

9. கோலம் - அழகு. சீலம் - நல்லியல்பும் நற் செயலும்; இங்கு இறைவனின் அருட்பண்பும்செயலும். திகழ்வு - விளக்கம். உடல் உறுநோய் - ஊழ்வினைப் பயன்.

மத்தம் மலி சித்தத்து. இறை
மதி இல்லவர், சமணர்,
புத்தரவர் சொன்னம் மொழி
பொருளா நினையேன் மின்!
நித்தம் பயில் நிமலன் உறை
நெய்த்தானம் அது ஏத்தும்
சித்தம் உடை அடியார் உடல்
செறுநோய் அடையாவே. 10

தலம் மல்கிய, புனல் காழியுள்
தமிழ் ஞானசம்பந்தன்,
நிலம் மல்கிய புகழால் மிகு
நெய்த்தானனை, நிகர் இல்
பலம் மல்கிய பாடல் இவை
பத்தும் மிக வல்லார்,
சில மல்கிய செல்வன்
அடி சேர்வர், சிவகதியே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. மத்தம் - செருக்கு, பெருமிதம். இறைமதி - கடவுள் உணர்வு. நினையேன்மின் - நினைக்காதீர். நித்தம் பயில் நிமலன் - காலம் கடந்த, நிலைத் தன்மையை உடைய, இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன். செறு நோய் - அழித்தலை அல்லது துன்புறுத்தலைச் செய்யும் நோய்.

11. தலம் மல்கிய - தலங்களில் சிறந்த. நிலம் மல்கிய புகழ் - உலக முழுவதும் பரந்த புகழ். நிகர் இல் பலம் - ஒப்பற்ற பயன்கள்.

1:16 திருப்புள்ளமங்கை பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

பால் உந்து உறு திரள் ஆயின
பரமன், பிரமன் தான்
போலும் திறலவர் வாழ்தரு
பொழில் சூழ் புளமங்கைக்,
காலன் திறல் அறச் சாடிய
கடவுள் இடம் - கருதில்
ஆலந்துறை தொழுவார்தமை
அடையா வினைதானே. 1

1. பரமன்-உயர்ந்தோன். பிரமன்தான் போலும் திறலவர் - வேதியர்கள். காலன் திறல் அறச்சாடிய கடவுள்-மார்க்கண்டர்க்காக எமனை உதைத்த கடவுள். பால் உந்துறு திரள் - பாலைக் கடைதலால் திரண்டு வரும் வெண்ணெய்.

மலையான் மகள் கணவன்,
மலி கடல் சூழ்தரு தன்மைப்
புலை ஆயின களைவான்
இடம்—பொழில் சூழ் புளமங்கைக்,
கலையான் மலி மறையோர்
அவர் கருதித் தொழுது ஏத்த,
அலை ஆர் புனல் வரு
காவிரி ஆலந்துறையதுவே. 2

கறை ஆர் மிடறு உடையான்,
கமழ் கொன்றைச் சடை முடிமேல்
பொறை ஆர்தரு கங்கைப்
புனல் உடையான் புளமங்கைச்,
சிறை ஆர்தரு களி வண்டு
அறை பொழில் சூழ் திரு ஆலந்
துறையான் அவன் நறை
ஆர் கழல் தொழுமின் துதி செய்தே. 3

---

2. மலையான் மகள் - பார்வதி. கடல் சூழ்தரு தன்மை புலை ஆயின களைவான் இடம் - கடல் சூழ்ந் திருப்பதால் உண்டான புலால் நாற்றத் தன்மையை மாற்றும் சிறந்த இடம் (அங்குள்ள பொழிலிடம்.)

3. கறை - நஞ்சுக்கறை. மிடறு - கழுத்து. பொறை ஆர் தரு - ஒரு சுமை போல அமைந்துள்ள சிறை - சிறகு. களி - தேன் உண்டமையால் உண்டான மகிழ்ச்சி. அறை-ஒலிக்கும். நறை-மணம், கழல்-திருவடி.

தணி ஆர் மதி, அரவின்னெடு
வைத்தான் இடம் மொய்த்து எம்
பணி ஆயவன் அடியார்
தொழுது ஏத்தும் புளமங்கை
மணி, ஆர்தரு கனகம் அவை,
வயிரத் திரளோடும்
அணி ஆர் மணல் அணை
காவிரி ஆலந்துறையதுவே. 4

மெய்த்தன் உறும் வினை தீர்வகை
தொழுமின் செழுமலரின்
கொத்தின்னெடு, சந்து, ஆர்
அகில் கொணர் காவிரிக் கரைமேல்,
பொத்தின்இடை ஆந்தைபல
பாடும் புளமங்கை
அத்தன், நமை ஆள்வான்
இடம் ஆலந்துறையதுவே, 5

---

4. தணி ஆர் மதி - பிறைத் திங்கள். கனகம் - பொன். அணி - அழகு.

5. மெய்த்தன்னுறும் வினை – உடம்பு எடுத்ததன் வாயிலாக வந்தடையும் ஊழ்வினை. உண்மையே தன்னை வந்தடையும் பண்டைவினை. பொத்து - பொந்து. ஆள்வான் - தனக்கே அடிமையாக்கிக் கொள்வான்.

மன் ஆனவன் உலகிற்கு ஒரு
மழை ஆனவன், பிழைஇல்
பொன் ஆனவன், முதல் ஆனவன்
பொழில்சூழ் புளமங்கை,
என்ஆனவன், இசையானவன்,
இளஞாயிறின் சோதி
அன்னான் அவன் உறையும்
இடம் ஆலந்துறையதுவே. 6

முடி ஆர்தரு சடைமேல் முளை
இளவெண் மதி சூடிப்,
பொடி ஆடிய திரு மேனியர்
பொழில் சூழ் புளமங்கைக்,
கடி ஆர் மலர், புனல் கொண்டு,
தன் கழலே தொழுது ஏத்தும்
அடியார் தமக்கு இனியான்
இடம் ஆலந்துறையதுவே. 7

---

6. மன் - அரசன். பிழை இல் பொன் - மாசற்ற பொன். என் ஆனவன் - யான் ஆகி நின்றவன்; எனக்கு உரித்தானவன் எனினும் ஆம்.

7. பொடி - திருநீறு. கடி - மணம்.

இலங்கை மனன் முடி,தோள் இற,
எழில் ஆர் திரு விரலால்,
விலங்கல் இடை அடர்த்தான்
இடம்–வேதம் பயின்றேத்திப்,
புலங்கள்தமை வென்றார்,
புகழ்அவர் வாழ் புளமங்கை,
அலங்கல் மலி சடையான்
இடம் ஆலந்துறையதுவே. 8

செறி ஆர்தரு வெள்ளைத்
திருநீற்றின் திருமுண்டப்,
பொறி ஆர்தரு புரிநூல் வரை
மார்பன் புளமங்கை,
வெறி ஆர்தரு கமலத்து அயன்,
மாலும் தனை நாடி
அறியா வகை நின்றான்
இடம் ஆலந்துறையதுவே. 9

8: மனன் - ம(ன்)னன். முடிதோள் - முடிகளும் தோள்களும். இற-நசுங்க. விலங்கல்-மலை. அடர்த்தான் - அழுத்தினன். அலங்கல் - மாலை.

9: திரு முண்டம் - திரு நெற்றி. பொறி ஆர் தரு வரை மார்பன் - பொலிவுடன் விளங்கும் மலை போன்ற திண்ணிய மார்பினை உடையவன். வெறி - மணம். கமலம் - தாமரை. அயன் - நான்முகன். நாடி - ஆராய்ந்து.

நீதி அறியாதார் அமண்
கையரொடு, மண்டைப்
போதியவர் ஓதும் உரை
கொள்ளார், புளமங்கை,
ஆதியவர் கோயில் திரு
ஆலந்துறை தொழுமின் !
சாதிம் மிகு வானோர் தொழு-
தன்மை பெறலாமே. 10

பொங்கின் இடைத் தேன் ஊறிய
பொழில்சூழ் புளமங்கை,
அம் தண் புனல் வரு காவிரி
ஆலந்துறை யானைக்,
கந்தம் மலி கமழ் காழியுள்
கலை ஞான சம்பந்தன்
சந்தம் மலி பாடல் சொலி
ஆடத் தவம் ஆமே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. கையர் - கீழ்மக்கள். மண்டைப் போதியவர் - பிச்சை ஏற்கும் பாத்திரத்தைக் கையில் கொண்ட புத்தர்கள். சாதி மிகு வானோர் - பல வகையினரான தேவர் கூட்டத்தார்.

11. கந்தம் - மணம். சந்தம் - பா ஓசை.

1 : 17 **திருஇடும்பாவனம் பண்: நட்டபாடை**

திருச்சிற்றம்பலம்

மனம் ஆர்தரு மடவாரொடு
மகிழ் மைந்தர்கள், மலர் தூய்த்
தனம் ஆர்தரு, சங்கக் கடல்
வங்கத்திரள் உந்திச்,
சினம் ஆர்தரு திறல் வாள்எயிற்று
அரக்கன் மிகுகுன்றில்
இன மாதவர் இறைவர்க்கு இடம்
இடும்பாவனம் இதுவே. 1

---

1. மனம் ஆர்தரு மகளிர் - மனம் ஒன்றுபட்ட மகளிர். மலர் தூவி வழிபட்டு அதன் பயனாகச் செல்வத்தைப் பெறுதற்கு இடமாகிய இடும்பாவனம். சங்கக் கடல் - சங்குகளை உடைய கடல். வங்கத் திரள் - கப்பல் கூட்டம். உந்தி - தள்ளிச் செலுத்தி. வாள் எயிறு - ஒளியும் கூர்மையும் உடைய பல். அரக்கன் - இடும்பன்.

மலையார் தரு மடவாள் ஒரு
பாகம் மகிழ்வு எய்தி,
நிலை ஆர்தரு நிமலன் வலி
நிலவும் புகழ் ஒளி சேர்,
கலை ஆர்தரு புலவோர் அவர்
காவல் மிகுகுன்றில்
இலை ஆர்தரு பொழில் சூழ்தரும்
இடும்பாவனம் இதுவே. 2

சீலம் மிகு சித்தத்தவர்
சிந்தித்து எழும் எந்தை,
ஞாலம் மிகு கடல் சூழ்தரு
உலகத்தவர், நலம் ஆர்
கோலம் மிகு மலர் மென்முலை
மடவார் மிகுகுன்றில்,
ஏலம் கமழ் பொழில் சூழ்தரும்
இடும்பாவனம் இதுவே. 3

2: மலையார் - இமய அரசன். நிலை - நிலைத்த தன்மை. நிமலன் - மலமாசு அற்றவன். புகழ் ஒளி - புகழாகிய ஒளி. 'ஒளி சேர் புகழ்' எனினும் ஆம். கலை ஆர் தரு புலவோர் - ஒளி விளக்கமுடைய தேவர்கள்.

3. சீலம் - நல்லியல்பும் நன்னடையும். எந்தை - எம் தந்தை. ஞாலம் - நிலவுலகம்.

பொழில் ஆர்தரு குலை வாழைகள்
எழில் ஆர் திகழ் போழ்தில்,
தொழிலால் மிகு தொண்டர் அவர்
தொழுது ஆடிய முன்றில்,
குழல் ஆர்தரும், மலர் மென்முலை
மடவார் மிகு குன்றில்,
எழில் ஆர்தரும் இறைவர்க்கு இடம்
இடும்பாவனம் இதுவே. 4

'பந்து ஆர் விரல் உமையாள்
ஒரு பங்கா கங்கை முடிமேல்,
செந்தாமரை மலர் மல்கிய செழுநீர்
வயல் கரைமேல்,
கொந்து ஆர் மலர் புன்னை, மகிழ்,
குரவம் கமழ் குன்றில்,
எந்தாய்!' என இருந்தான் இடம்
இடும்பாவனம் இதுவே. 5

---

4. தொழிலால் மிகு தொண்டர் - சிவப்பணிகளால் சிறந்த தொண்டர். குழல் ஆர்தரு மலர் - கூந்தலில் சூட்டப்பெற்ற மலர்.

5. பந்து ஆர் விரல் - பந்தினை ஏந்திய விரல். உமையை ஒரு பாகத்தில் கொண்டவனே! (பங்கா!), எமக்கெல்லாம் தந்தையாயிருப்பவனே! (எந்தாய்!) என்று துதிக்க இருந்தான் இடம் என்க.

நெறி நீர்மையர், நீள் வானவர்,
    நினையும் நினைவாகி,
அறி நீர்மையில் எய்தும் அவர்க்கு
    அறியும் அறிவு அருளிக்,
குறி நீர்மையர், குணம் ஆர்தரும்
    மணம் ஆர்தரு குன்றில்,
எறி நீர் வயல் புடை சூழ்தரும்
    இடும்பாவனம் இதுவே. 6

நீறு ஏறிய திருமேனியர்,
    நிலவும் உலகெல்லாம்
பாறு ஏறிய படு வெண்தலை
    கையில் பலி வாங்காக்,
கூறு ஏறிய மடவாள் ஒரு
    பாகம் மகிழ்வு எய்தி,
ஏறு ஏறிய இறைவர்க்கு இடம்
    இடும்பாவனம் இதுவே. 7

---

6. நெறி நீர்மையர் - நெறிப்பட ஒழுகும் தன்மையை உடையவர். நீள் வானவர் - மேலாக உயர்ந்த விண்ணோர். நினையும் நினைவாகி - ஒன்றியிருந்து எண்ணுவார் எண்ணமும் ஆகி. அல்லது, அவரால் நினைக்கப்படும் உருவில் நின்று அவர்க்கு அருள்பவன் ஆகி. அறி நீர்மையில் எய்தும் அவர்க்கு அறியும் அறிவு அருளி - ஞானத்தால் தன்னை அடையத் தகுவார்க்குத் தன்னை அறிவிக்க வல்லதான சிவஞானத்தை அருளி, குறி நீர்மையர் - குணம் குறி அற்ற ஒரு பொருளை ஒரு குறியின் கண் எழப்பண்ணி வழிபடும் தன்மையர்.

7. பாறு ஏறிய - பருந்து விரும்பும். ஏறு - எருது;

தேர் ஆர்தரு, திகழ் வாள்
எயிற்று அரக்கன், சிவன் மலையை
ஓராது எடுத்து ஆர்த்தான் முடி
ஒருப∴து அவை நெரித்துக்,
கூர் ஆர்தரு கொலை வாளொடு,
குணம், நாமமும் கொடுத்த,
ஏர் ஆர்தரும் இறைவர்க்கு இடம்
இடும்பாவனம் இதுவே. 8

8. தேர் ஆர்தரு அரக்கன் - வானத்தில் தனது தேரைச் செலுத்தி வந்த இராவணன். சிவன் மலை - திருக்கயிலாய மலை. ஓராது - அம்மலைக்குரிய பெருமானது பெருமையையும் தனது சிறுமையையும் எண்ணிப்பார்க்காமல். கூர் - கூர்மை. அரக்கன் செருக்கு ஒழிந்து இறைவனை இசையால் துதித்து நின்றபொழுது அவனுக்கு இரங்கி வாளும் பெயரும் அருளினன். குண நாமம் - அழுகைக் குணத்தால் பெற்ற பெயர் இராவணன் என்பது என்பர்.

பொருள் ஆர்தரும் மறையோர்,
புகழ் விருத்தர், பொலி, மலி, சீர்த்
தெருள் ஆர்தரு சிந்தையொடு,
சந்தம் மலர் பல தூய்,
மருள் ஆர்தரு மாயன், அயன்
காணூர் மயல் எய்த
இருள் ஆர்தரு கண்டர்க்கு இடம்
இடும்பாவனம் இதுவே. 9

தடுக்கை உடன் இடுக்கித், தலை
பறித்துச் சமண் நடப்பார்,
உடுக்கை பல துவர்க் கூறைகள்
உடம்பு இட்டு உழல்வாரும்,
மடுக்கள் மலர் வயல்சேர்
செங்நெல் மலிநீர் மலர்க் கரைமேல்
இடுக்கண் பல களைவான்
இடம் இடும் பாவனம் இதுவே. 10

---

9. பொருள் ஆர் தரும் மறை - பொருள் செறிவுடைய வேதம். புகழ் விருத்தர் - விரிந்த புகழை உடையவர். பொலி சீர் எனவும் மலி சீர் எனவும் இயைக்க. தெருள் - உள்ளத் தெளிவு சந்த மலர் - அழகிய மலர். மருள் - தாமே பெரியர் என மயங்கிக் கொண்ட செருக்கு. மாயன் - திருமால். அயன் - நான்முகன். காணூர் - அடியும் முடியும், அஃதாவது ஆதியும் அந்தமும் அறியார். மயல் - திகைத்து நின்ற மயக்கம். இருள் - நஞ்சால் உண்டான இருண்ட நிறம்.

10. தடுக்கு - பனை ஓலைச்சிறுபாய். துவர்க் கூறை - காவி ஆடை, உடம்பு இட்டு - உடம்பில் அணிந்து. இடுக்கண் - துன்பம்.

கொடி ஆர் நெடு மாடக்
குன்றளூரில், கரைக் கோல,
இடி ஆர் கடல் அடி வீழ்தரும்
இடும்பாவனத்து இறையை,
அடி ஆயும் அந்தணர் காழியுள்
அணி ஞானசம்பந்தன்
படியால் சொன்ன பாடல் சொலப்,
பறையும், வினைதானே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. குன்றளூர் - இடும்பனது தலைநகரம். கரைக் கோல இடி ஆர் கடல் - கோலக்கரை இடி ஆர் கடல் - அழகிய கரையை மோதி முழங்கும் கடல் அலை. அடி ஆயும் அந்தணர் - இறைவன் திருவடி எனப்படும் திருவருளையே தம்முணர்வில் எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கும் அந்தணாளர். படியால் சொன்ன பாடல் - அருளில் தோய்ந்து நின்று அவ் அருள் இயக்கியபடியே சொன்ன பாடல்.

1:18 திருநின்றியூர் பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

சூலம் படை; சுண்ணப் பொடி
சாந்தம், சுடு நீறு;
பாலம் மதி பவளச் சடை
முடிமேலது; பண்டைக்
காலன் வலி காலினெடு
போக்கிக், கடிகமழும்
நீலம் மலர்ப் பொய்கை
நின்றியூரின் நிலேயோர்க்கே. 1

---

1. படை ஆவது சூலம். சாந்தம் ஆவது நீறு. முடிமேலது மதி - என இயைத்துக் கொள்க. பால் அம் மதி - பால் போன்ற வெண்ணிறம் உடைய பிறைமதி. காலன் வலி காலினெடு போக்கி - மார்க்கண்டர்க்காக எமனது வலிமையைத் தனது திருவடியால் உதைத்துக் கெடுத்த செய்தி. நிலேயோர் - என்றும் ஒருபடித்தாக நிலேயாயிருப்பவர். மெய், சத்து எனப் படுவதும் அது. நின்றியூரில் எழுந்தருளியிருப்பவர். எனவும் ஆம்.

அச்சம் இலர்; பாவம் இலர்;
கேடும் இலர்; அடியார்,
நிச்சம் உறு நோயும் இலர்
தாமும் - நின்றியூரில்
நச்சம் மிடறு உடையார், நறும்
கொன்றை நயந்து ஆளும்
பச்சம் உடை அடிகள்
திருப்பாதம் பணிவாரே. 2

பறையின் ஒலி, சங்கின் ஒலி
பாங்கு ஆரவும், ஆர
அறையும் ஒலி எங்கும் அவை
அறிவார்அவர் தன்மை;
நிறையும் புனல் சடைமேல்
உடை அடிகள் நின்றியூரில்
உறையும் இறை அல்லது
எனது உள்ளம் உணராதே! 3

---

2. நிச்சம் உறு நோய் - இது காறும் நிலையாய் இருந்து வரும் பாச நோயும் பிறவி நோயும். நச்சம் - நஞ்சு. நயந்து - விரும்பி பச்சம் - அன்பு.

3. பறை - முரசு வகை. பாங்கு - பக்கங்கள். ஆரவும் - முழங்கவும். ஆர-மிகுதியாக. அறையும் ஒலி. அடித்தலால் உண்டாகும் ஒலி. அடிகள் - உயிர்கள் அனைத்தையும் தனக்கு அடிமையாகக் கொண்ட முதல்வன், உடையவர். இறை - தலைவன்.

பூண்ட வரைமார்பில் புரிநூலன்
　　விரி கொன்றை
ஈண்ட, அதனோடும் ஒரு
　　பால் அம் மதியதனைத்
தீண்டும் பொழில் சூழ்ந்த
　　திருநின்றியூது தன்னில்,
ஆண்ட கழல் தொழல் அல்லது
　　அறியார் அவர் அறிவே! 4

குழலின் இசை, வண்டின் இசை
　　கண்டு, குயில் கூவும்
நிழலின் எழில் தாழ்ந்த பொழில்
　　சூழ்ந்த நின்றியூரில்,
அழலின் வலன் அங்கையது
　　ஏந்தி, அனல் ஆடும்
கழலின் ஒலி ஆடும்
　　புரிகடவுள் களைகண்ணே. 5

---

4. பூண்ட - அணிகள் அணியப்பெற்ற. வரை மார்பு - மலை போன்ற திண்ணிய உயர்ந்த மார்பு; ஈண்ட - செறிந்திருக்க. ஒருபால் அம்மதி - ஒருபக்கம் அழகிய பிறைச் சந்திரன். தீண்டும்-தொடும். அவ்வள விற்கு உயரமான. ஆண்ட கழல்-ஆளாக்கிக் கொண்ட அருள்.

5. குழலின் இனிய இசை, வண்டின் இசை யாகிய யாழிசை ஆகிய இரண்டும் கருவி இசையாக, அவற்றைக் கேட்ட பாடகர் உடன் இசைந்து பாடுவார் போலக் குயில் கூவும். அழலின் வலன்- வலன் அழல் என மாற்றி வலமாகச் சுழன்று எழுந்து

மூரல் முறுவல் வெண்நகை
உடையாள் ஒருபாகம்,
சாரல் மதியதனோடு உடன்
சலவம் சடை வைத்த
வீரன், மலி அழகு ஆர்
பொழில் மிடையும் திருநின்றி
யூரன் கழல் அல்லாது எனது
உள்ளம் உணராதே. 6

எரியும் தீ என்க. அனல் ஆடும் புரி கடவுள் - தீ வண்ணனாய் நின்று ஆடுதலை விரும்பிச் செய்யும் கடவுள். கழலின் ஒலி ஆடும் - கழலின் ஒலியும் ஒலிக்க. களைகண் - துன்பம் நீக்கி ஆதரிக்கும் புகலிடம்.

6. மூரல் முறுவல் - சிறிய புன்சிரிப்பு. வெண் நகை - வெள்ளை நிறம் விளங்கும் பல்வரிசை. சாரல் மதி - தன் வலி குறைந்த சந்திரன் - பிறைச் சந்திரன். சலவம் - சலசல என்ற ஒலிக்குறிப்பால் சலம் எனப் பெயர் பெற்ற, நீராகிய கங்கை. மிடையும் - சேர்ந்திருக்கும். கழல் என்றது கழல் அணிந்த அடிக்கு ஆகிக், குறிப்பால், கருதியது முடிக்கவல்ல அருளை உணர்த்திநின்றது.

பற்றி ஒரு தலை கையினில்
ஏந்திப், பலி தேரும்
பெற்றியது ஆகித், திரி,
தேவர் பெருமானர்,
சுற்றி ஒரு வேங்கை அதளோடும்,
பிறை சூடும்,
நெற்றி ஒரு கண்ணர்
நின்றியூரின் நிலையாரே. 7

... ... 8

நல்ல மலர் மேலானெடு,
ஞாலம் அது உண்டான்,
'அல்லர்' என, 'ஆவர்' என,
நின்றும், அறிவு அரிய
நெல்லின், பொழில் சூழ்ந்த
நின்றியூரின் நிலையார், எம்
செல்வர் அடி அல்லாது
என சிந்தை உணராதே! 9

---

7. ஒரு தலை - நான்முகனுக்கு இருந்த ஐந்து தலைகளில் கிள்ளி எடுத்த ஒரு தலையினது ஓடு. தலை கையினில் பற்றி ஏந்தி பலிதேரும் என இயைக்க. பெற்றி - தன்மை.

8. ... ...

9. ஞாலம் உண்டான் - திருமால். அல்லர் என ஆவர் என - ஆவர் என அல்லர் என என்று மாற்றி, யாராயிருத்தல் கூடும் என்று ஆராய முற்பட்டவர் இவர் இன்னர் ஆவார் என்றும் இன்னர் அல்லர் என்றும் இவ்வாறு மீண்டும் மீண்டும் சொல்லி ஒரு நிலைப்பட அறியார் ஆயினர் என உரைத்துக்

நெறியில் வருபேரா வகை
நினையா நினைவுஒன்றை,
அறிவு இல சமண் ஆதர் உரை
கேட்டும் அயராதே,
நெறி இல்லவர் குறிகள்
நினையாதே, நின்றியூரில்,
மறி ஏந்திய கையான் அடி
வாழ்த்தும் அது வாழ்த்தே! 10

குன்றம் அது எடுத்தான் உடல்,
தோளும் நெரிவாக,
நின்று அங்கு ஒரு விரலால்
உற வைத்தான் நின்றியூரை,
நன்று ஆர்தரு புகலித் தமிழ்
ஞானம் மிகு பந்தன்
குன்றாத் தமிழ் சொல்லக்,
குறைவு இன்றி நிறை புகழே. 11

திருச்சிற்றம்பலம்

கொள்க. நெல்லின், பொழில் சூழ்ந்த - வயலும் சோலையும் சூழப்பெற்ற.

10. நெறியில் வரு பேராவகை நினையா நினைவு ஒன்றை அறியா சமண் ஆதர் - மெய்யான நெறியில் பெறப்படுவதான, நிலை பெயராத் தன்மையில் நினைக்கப்படும் ஒரு பொருளை நினையுமாறு அறியாத சமணக் கீழ்மக்கள்.

11. குன்றம் - திருக்கயிலாயமலை. உடல் தோளும் - உடம்பும் தோளும்.

1:19 திருக்கழுமலம்

(திருஇராகம்) - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

பிறை அணிபடர் சடை முடியிடைப்
பெருகிய புனல் உடையவன்; நிறை
இறை அணி வளை, இணைமுலையவள்,
இணைவனது எழில் உடை இடவகை -
கறை அணி பொழில் நிறை வயல்
அணி கழுமலம் அமர் கனல் உருவினன்
நறை அணி மலர் நறு விரை புல்கு
நலம் மலி கழல் தொழல் மருவுமே ! 1

---

1. படர் சடை—விரிந்த சடை, பெருகிய புனல்-கங்கை. இறை-முன்கை. இணை-இரண்டு. இணைவன்-கூடியவன், பொருந்தியவன், கறை அணி பொழில்-மரச் செறிவால் உண்டான இருள்போன்ற நிழலைத் தனக்கு அழகாகக் கொண்ட சோலை. கனல் உருவினன்-தீயுருக்கொண்டவன், நறை-மணம். நறுவிரை-நன்மணம். புல்கு - பொருந்திய. நலம் மலி - நன்மை மிகுந்த. தொழல் மருவும்! - தொழுதலைப் பொருந்துங்கள்!

பிணிபடு கடல் பிறவிகள் அறல் எளிது;
உளது அது பெருகிய திரை;
அணிபடு கழுமலம் இனிது அமர்
அனல் உருவினன், அவிர் சடை மிசை
தணிபடு கதிர் வளர் இளமதி
புனைவனை, உமை தலைவனை, நிற
மணிபடு கறை மிடறனை, நலம்
மலி கழல் இணை தொழல் மருவுமே ! 2

---

2. பிணி படு கடல் பிறவிகள்-துன்பங்கள் நிறைந்த கடல்போன்ற கணக்கற்ற பிறப்புக்கள், அறல் எளிது-ஒழிப்பது, விட்டு நீங்குவது எளிமையாகும். உளது அது பெருகிய திரை-பெருகிய திரை அது உளது-மிகப்பல துன்ப அலைகளை அப் பிறவிக்கடல் உடையதாகும், அணிபடும் - அழகு தோன்றும். அவிர்சடை மிசை-ஒளிவிடும் சடையின்மேல். தணிபடு கதிர் வளர் இளமதி - தேய்ந்துபோம் கதிர் வளரப்பெறும் வரம் பெற்ற பிறைத்திங்கள். புனைவன்-சூடியவன். நிறமணி-நீல நிறம் உடைய மணி. கறை-நஞ்சால் உண்டான கறை. மிடறன்-கழுத்தை உடையவன். நலம் மலி கழல் இணை-உயிர்க்கு நன்மை எனப்படும் பேரின்பத்தை வழங்கவல்ல இருதிருவடிகள்.

வரி உறு புலி அதள் உடையினன்,
வளர் பிறை ஒளி கிளர் கதிர் பொதி
விரி உறு சடை, விரை புரை பொழில்
விழவு ஒலி மலி கழுமலம் அமர்,
எரி உறு நிற இறைவனது அடி
இரவொடு பகல் பரவுவர்தமது
எரி உறு வினை, செறி கதிர் முனை
இருள் கெட, நனி நினைவு எய்தும் அதே. 3

---

3. வரி-கோடு. அதள் - தோல். வளர் பிறை ஒளி கிளர் கதிர் பொதி சடை - வளர அருள்பெற்ற பிறைத்திங்களின் ஒளிவீசும் கதிர்கள் அடங்கிய திருச் சடை. விரை புரை பொழில்-மலர்களின் மணத்தைத் தனக்கு உயர்ச்சியாகக் கொண்ட சோலை. புரை-உயர்ச்சி. பரவுவர்-துதிப்பார். எரி உறு வினை - துன் பத்தை மிகுக்கும் கொடியவினைகள். செறி கதிர் முனை இருள்கெட-கதிரவனின் செறிவான ஒளிக்கதிர்களின் முன் இருள் கெட்டொழிவது போல ஒழிந்துபோமாறு. நனி-மிகுதியும். கதிர் முனை இருள்' என்பதற்கு மிக்க ஒளியையும் அடக்கவல்ல இருளைப்போன்ற வலிமை உடைய ஆணவம் என்னும் அக இருள் எனக் கொண்டு வினை மலமும் ஆணவ மலமும் கெட எனப் பொருள் கொள்ளலும் ஒன்று.

விளை கெட மன நினைவது முடிக எனின்,
நனி தொழுது எழு! குலமதி
புனை கொடிஇடை பொருள்தரு
படு களிறினது உரி புதை உடலினன்,
மனை குடவயிறு உடையன சில
வரு குறள் படை உடையவன், மலி
கனை கடல் அடை கழுமலம் அமர்
கதிர் மதியினன் அதிர் கழல்களே. 4

---

4. மன நினைவது முடிக-மனத்தில் நினைத்தது நினைத்தபடியே முடிவதாக. நனி தொழுது எழு-மிகுதியும் தொழுது நிற்பாயாக!. குலமதி-உயர்வாக மதிக்கப்படும் பிறைச் சந்திரன். உரி புதை உடல்-உரித்த தோலால் போர்க்கப்பெற்ற உடம்பு. மனை குட வயிறு - வீடுகளில் உள்ள நீர்க்குடம் போலப் பெரிதான வயிறு. கதிர் மதி-ஒளி பொருந்திய பிறைத் திங்கள். கதிரவனையும் திங்களையும் கண்களாகக் கொண்டவன் எனவும் கூறுவர்.

தலை. மதி, புனல், விட அரவு இவை,
தலைமையது ஒரு சடையிடை, உடன்
நிலை மருவ, ஓர் இடம் அருளினன்;
நிழல் மழுவினேடு, அழல் கணையினன்;
மலை மருவிய சிலைதனில் மதில்
எரியுண மனம் மருவினன்; நல
கலை மருவிய புறவு அணிதரு
கழுமலம் இனிது அமர் தலைவனே. 5

வரை பொருது இழி அருவிகள் பல
பருகு ஒரு கடல் வரிமணல்இடை,
கரைபொரு திரை ஒலி கெழுமிய
கழுமலம் அமர், கனல் உருவினன்;
அரை பொரு புலி அதள் உடையினன்;
அடியிணை தொழ, அருவினை எனும்
உரை பொடிபட, உறு துயர் கெட,
உயர் உலகு எய்தல் ஒருதலைமையே, 6

---

5. தலை மதி-முதல் நாள் பிறை. புனல்-கங்கை: தலைமையது ஒரு சடை-உச்சியினதாகிய சடை. உடன் நிலை மருவ ஓர் இடம் அருளினன் - சேர்ந்து தங்குமாறு ஒவ்வொன்றுக்கும் ஓர் இடம் தந்தருளியவன். நிழல்-ஒளி. மலை மருவிய சிலை-மலையால் அமைந்த வில். மதில்-மும்மதில். எரி உண - தீயால் வெந்து அழியுமாறு. மனம் மருவினன் - மனம் கொண்டவன். நல கலை மருவிய புறவு-அழகிய கலைமான்களை உடைய சிறிய காடு, இக் காடுகளையுடைய கழுமலம் ஆதலால் சீகாழிப் பெயர்கள் பன்னிரண்டனுள் 'புறவம்' என்பதும் ஒன்ருயிற்றுப்போலும்!

6, வரை பொருது இழி அருவிகள்-மலையைமோதி உடைத்துக்கொண்டு இறங்கி விழும் அருவிகள். அருவி

முதிர் உறு கதிர் வளர் இளமதி சடையனை,
நற நிறை தலைதனில்,
உதிர் உறு மயிர் பிணை தவிர்
தசை உடை புலி அதள் இடை, இருள்கடி
கதிர் உறு சுடர் ஒளி கெழுமிய கழுமலம்
அமர், மழுமலி படை,
அதிர் உறு கழல் அடிகளது அடிதொழும்
அறிவு அலது அறிவு அறியமே. 7

கள் பல பருகு கடல்-பல அருவிகளும் ஆறுகளாக ஓடிக் கலப்பதாகிய கடல். திரை-அலை. கெழுமிய-பொருந்திய. அரை பொரு—அரையில் கட்டிய. 'வருவினை' என்றால் மேல் வருவன ஆகிய ஆகாமிய வினையாகும். 'அருவினை' என்றால் தவிர்த்தலுக்கு எளிதல்லாத வினை எனவாகும். உரை பொடி பட—சொல்லளவிலும் நிற்காது. உறுதுயர்-மிக்க துன்பம். ஊழ்வினைப் பயனாகிவந்து பொருந்தும் துன்பம் எனவும்ஆம். உயர் உலகு-வானோர்க்கும் உயர்ந்த உலகமாகிய சிவலோகம்.

7. முதிர் உறு கதிர்-முற்றிய ஒளிக்கதிர், நறவு-தேன். உதிர் உறு மயிர் பிணை - உதிரக்கூடிய மயிர் உதிராதே சேர்ந்திருக்கும்; தவிர் தசை உடை புலி அதள்-தசை தவிர் உடை ...-தசை நீங்கிய உடையாகிய புலித்தோல் ஆடை. இருள் கடி கதிர் உறு சுடர் ஒளி-இருளை நீக்கும் கதிரவனின் சிறந்த சுடரொளி.

கடல் என நிற நெடுமுடியவன் அடுதிறல்
தெற, 'அடி சரண் !' என
அடல் நிறை படை அருளிய புகழ்
அரவு அரையினன், அணிகிளர் பிறை,
விடம் நிறை மிடறு உடையவன்,
விரி சடையவன், விடை உடையவன் உமை
யுடன் உறை பதி – கடல் மறுகு உடை
உயர் கழுமல வியன் நகரதே. 8

கொழுமலர் உறை பதி உடையவன்,
நெடியவன் - என இவர்களும் அவன்
விழுமையை அளவு அறிகிலர் இறை;
விரை புணர் பொழில் அணி விழவு அமர்
கழுமலம் அமர் கனல் உருவினன்
அடியிணை தொழும் அவர் அருவினை
எழுமையும் இல, நில வகைதனில்
எளிது இமையவர் வியன் உலகமே. 9

---

8. கடல் என நிற நெடு முடியவன் - ஆழ்ந்த கடலைப் போன்ற இருண்ட நிறமும் நீண்டு உயர்ந்த முடியும் உடைய இராவணன். அடு திறல் தெற - கொலைச் செயல் ஒழிய. அடி சரண் என-திருவடிக்கே அடைக்கலம் என்ன. அடல் நிறை படை - வலிமை நிறைந்த படைக்கலம். அரவு அரையினன்-பாம்பைச் சுற்றிக் கட்டிய இடுப்பை உடையவன். கடல் மறுகு உடை உயர் கழுமலம் - கடல் கலங்கிய பெரு வெள்ளக்காலத்து எல்லாம் மூழ்கியும் தான் மூழ்காதே மிதந்து உயர்ந்த தோணிபுரம் ஆகிய கழுமலம். வியல் நகர்-விரிவான நகரம்.

9. கொழு மலர் உறை பதி உடையவன் - செழுமையான தாமரை மலரை இருப்பிடமாகக்

அமைவன துவர் இழுகிய துகில் அணி
உடையினர். அமண் உருவர்கள்,
சமையமும் ஒரு பொருள் எனும் அவை,
சல நெறியன, அற உரைகளும்;
இமையவர் தொழு கழுமலம் அமர்
இறைவனது அடி பரவுவர்தமை
நமை அல வினை; நலன் அடைதலில்
உயர் நெறி நனி நணுகுவர்களே. 10

கொண்ட நான்முகன். நெடியவன் – திருமால். அவன் விழுமை - சிவபெருமானது தனிப் பெருமையை. அளவு அறிகிலர் இறை-சிறிதும் அளவிட்டு அறியார். எழுமையும் இல நில வகைதனில்-எழுவகைப் பிறவியில் செய்தனவும் ஒழிந்துபோம்.

10. துவர் இழுகிய துகில் - காவி தோய்க்கப் பெற்ற ஆடை. சல நெறியன–வஞ்சனை நெறிகளாகும். 'சலநெறியன' என்பதனை அவை என்பனோடும், அறவுரைகளோடும் தனித்தனிக் கூட்டுக. நமை அல-வருத்தா. நலன் அடைதலில் உயர் நெறி - உண்மையான வீட்டின்பத்தை அடையச் செய்யும் உயர்ந்ததான சிவநெறி.

பெருகிய தமிழ் விரகினன், மலி பெயரவன்,
உறை பிணர் திரையொடு
கருகிய நிற விரிகடல் அடை
கழுமலம் உறைவிடம் என, நனி
பெருகிய சிவன் அடி பரவிய, பிணை
மொழியன, ஒருபதும் உடன்
மருவிய மனம் உடையவர் மதி
உடையவர்; விதி உடையவர்களே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. விரகினன்-அறிவுத்திறன் உடையவன். மலி பெயர் - மிகுந்த புகழ். உறைபிணர் திரை – பிதிர்ந்து விழும் துளிகளோடும் மடங்கி வரும் அலை. பிணை மொழி – சொல்லும் பொருளுமாய்க் கூடிய பாடல். மருவிய மனம் – பொருளொடும் தோய்ந்த மனம்.

1:20 திருவீழிமிழலை

(திருவிராகம்) – பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

தட நிலவிய மலை நிறுவி, ஓர்
    தழல் உமிழ்தரு பட அரவுகொடு,
அடல் அசுரரொடு அமரர்கள்
    அலைகடல் கடைவுழி எழும்மிகு சின
விடம் அடைதரும் மிடறு உடையவன்,
    விடை மிசை வரும் அவன், உறை பதி
திடம் மலிதரு மறைமுறை உணர்
    மறையவர் நிறை திருமிழலையே. 1

---

1. தடம்நிலவிய மலை – அகன்ற பெரிய மந்தர மலை. அரவு - வாசுகி. அடல் – வலிமை. விடைமிசை - எருதின் மேல், திடம் - திட்பம், மறை முறை உணர் மறையவர் - வேதங்களை முறையாக ஓதி உணர் பவராகிய மறையவர்,வேதநெறி உணர்ந்த மறையவர் எனினும் ஆம்.

தரையொடு திவிதலம் நலிதரு, தகு
திறல் உறு சலதரனது
வரை அனதலை விசையொடு வரு
திகிரியை அரிபெற அருளினன்,
உரை மலிதரு சுர நதி, மதி, பொதி
சடையவன் உறை பதி – மிக
திரைமலி கடல் மணல் அணிதரு
பெறு திடர் வளர் திருமிழலையே. 2

மலைகள்தனை இகழ்வது செய்த மதி
அறு சிறு மனவனது உயர்
தலையினொடு, அழல் உருவன கரம் அற.
முனிவு செய்தவன் உறை பதி –
கலை நிலவிய புலவர்கள் இடர் களைதரு
கொடை பயில்பவர் மிகு,
சிலை மலி மதிள் புடை தழுவிய, திகழ்
பொழில் வளர் திருமிழலையே. 3

---

2. தரை - நிலஉலகத்தார், திவிதலம் - வானுலகத்தார், நலிதரு தகுதிறல் உறு-துன்புறுத்திய வலிமிகுந்த. சலதரன் - சலந்தரன் என்னும் அசுரன். வரை அனதலை - மலைபோன்று பருத்த தலை. விசை - வேகம். திகிரி - சக்கரப்படை, அரி - திருமால். உரை - புகழ். சுரநதி - வான் ஆறு ஆகிய கங்கை. நதியும் மதியும் பொதி சடை என்க. திடர் - மணல்மேடு.

3. மதி அறு சிறுமனவன் - அறிவற்ற சிறுமையை உடைய மனத்தினன் ஆன நான்முகன். அழல் உருவன் - தீக்கடவுள் கரம் - கை. சிலை மலி மதில் - மலைபோன்ற உயர்ச்சியை உடைய மதில்கள்

மருவலர் புரம் எரியினில் மடிதர
ஒரு கணை செல நிலவிய
பெருவலியினன், நலம் மலிதரு
கரன், உரம் மிகு பிணம் அமர் வன
இருளிடை அடை உறவொடு
நடவிசை உறுபரன், இனிதுஉறை பதி —
தெருவினில் வரு பெரு விழவு
ஒலி மலிதர வளர் திருமிழலையே. 4

அணிபெறு வடமர நிழலினில், அமர்
வொடும், அடிஇணை இருவர்கள்
பணிதர, அறநெறி மறையொடும்
அருளிய பரன் உறைவிடம் — ஒளி
மணி பொருவு அரு மரகத நிலம்
மலி புனல் அணைதரு வயல் அணி
திணி பொழில் தரு மணமது
நுகர் அறுபதம் முரல் திருமிழலையே. 5

---

4. மருவலர் - பகைத்தவர். கணை - அம்பு. நலம் மலிதரு கரன் - நன்மையே மிகச் செய்யும் திருக்கைகளை உடையவன். உரம் - வலிமை. நடவிசை - நடனத்தின் வேகம்

5. வடமரம் - கல் ஆல மரம். இணை இருவர்கள்- நான்கு முனிவர்கள். பணிதர - பணிந்து வேண்ட, அற நெறி மறையோடும் அருளி-வேதங்களோடும் அறநெறி சொல்லியருளிய. பரன் - உயர்ந்தோன்.

வசை அறுவலி வனசர உருஅது
கொடு, நினைவு அரு தவம் முயல்
விசையன திறல் மலைமகள் அறிவுறு
திறல் அமர் மிடல் கொடு செய்து,
அசைவு இலபடை அருள் புரிதரும்
அவன் உறை பதியது - மிகுதரு
திசையினில் மலர் குலவிய செறி
பொழில் மலிதரு திருமிழலையே. 6

நலம் மலிதரு மறை மொழியொடு, நதி
உறு புனல், புகை, ஒளிமுதல்,
மலர் அவை கொடு, வழிபடு திறல்
மறையவன் உயிரது கொளவரு,
சலம் மலிதரு மறலிதன் உயிர் கெட,
உதை செய்த அரன் உறை பதி -
'திலகம் இது' என உலகுகள் புகழ்தரு,
பொழில் அணி திருமிழலையே. 7

---

6. வசை அறு வலி-குற்றம் இல்லாத வலிமை. வனசர உரு-வேடன் உருவம். நினைவு அரு தவம்-நினைத்துப் பார்க்கவும் முடியாத கடும் தவம், விசையன் - அருச்சுனன். அமர்-போர், மிடல்-வலிமை. கொடு-கொ(ண்)டு. விசையன்வீரத்தை உமை அறியக் காட்டும் பொருட்டு அவனோடும் இறைவன் போர் செய்தான் என்று சொல்லப்பட்டது. அசைவு இல படை - தளராது செயல் புரியும் போர்க்கருவி, தோல்வி அடையாத பாசுபத அத்திரம். திசையினில் - நாலாபக்கமும்.

7. மந்திர மொழியொடு நீரும் புகையும் ஒளியும் மலரும் முதலானவற்றால் வழிபட்ட மார்க்கண்டர்;

அரன் உறைதரு கயிலையை நிலை
குலைவது செய்த தசமுகனது
கரம் இருபதும் நெரிதர, விரல் நிறுவிய
கழல் அடி உடையவன்,
வரன்முறை உலகு அவை தரு மலர்
வளர், மறையவன் வழிவழுவிய
சிரம் அது கொடு பலி திரிதரு சிவன்
உறை பதி – திருமிழலையே. 8

சலம்-வஞ்சம். மறலி-எமன். திலகம்-நெற்றிப்பொட்டு. உலக மகளுக்கு ஒரு பொட்டுப்போல விளங்கும் சிறப்பினை உடையது திருமிழலை.

8. தசமுகன்-பத்துத் தலை உடைய இராவணன். கரம் இருபதும் - இருபது கைகளும். வரல் முறை உலகவை தரும் மலர் வளர் மறையவன் - உலகங்களை முறையாகப் படைத்துவரும், மலரோன் ஆன நான்முகன் வழி வழுவிய-உமையம்மையை இகழ்ந்ததான தவற்றைச் செய்த.

அயனொடும், எழில அமர் மலர் மகள்
மகிழ் கணன, அளவிடல் ஒழிய, ஓர்
பயம் உறுவகை, தழல நிகழ்வது ஓர்
படி உருவது வர, வரலமுறை,
'சய சய!' என மிகுதுதி செய, வெளி
உருவிய அவன் உறை பதி –
செயம் நிலவிய மதில் மதியது
தவழ்தர உயர் திருமிழலையே. 9

இகழ் உருவொடு பறிதலை கொடும்
இழி தொழில் மலி சமண் விரகினர்,
திகழ் துவர் உடை உடல் பொதிபவர் கெட,
அடியவர் மிக, அருளிய,
புகழ் உடை இறை உறை பதி – புனல்
அணி கடல் புடை தழுவியபுவி
திகழ் சுரர்தரு நிகர் கொடையினர்
செறிவொடு திகழ் திருமிழலையே. 10

9, அயன்-நான்முகன். மலர் மகள் மகிழ்கணன்-திருமகள் மகிழும் கண்ணனாகிய திருமால். தழல் நிகழ்வது ஓர்படி உருவது வர-தீப்பிழம்பு ஆனதோர் திருவுருவம் கொள்ள. 'சய சய'-வெல்க, வெல்க என்பது. வெளி உருவியவன்-வான வெளியை ஊடுருவிக் கீழும் மேலுமாகச் சென்றவன். செயம்-வெற்றி. மதில் மதி தவழ்தர - சந்திரன் தழுவிச் செல்லும் அளவுக்கு உயர்ந்த மதில்கள்.

10. இகழ் உரு.- பிறர் இகழத்தக்க வடிவம். பறிதலை - மயிர் நீக்கிய தலை. புவி திகழ் சுரர் தரு நிகர் கொடையினர் - நிலவுலகத்தில் விளங்குகின்ற தேவர்

சினம் மலி கரி உரிசெய்த சிவன்
உறைதரு திருமிழலையை, மிகு
தன மனர், சிரபுர நகர் இறை, தமிழ்
விரகனது உரை ஒருபதும்
மன மகிழ்வொடு பயில்பவர், எழில் மலர்
மகள், கலைமகள், சயமகள்,
இனம் மலி புகழ்மகள் இசைதர,
இருநிலன் இடை இனிது அமர்வரே. 11

திருச்சிற்றம்பலம்

உலகத்து மரமான கற்பகத்தை ஒத்த கொடையாளாகள்,

11 கரி - யானை, மிகு தன மனர் - நிறைவான செல்வ மனத்தினர் மலர் மகள், கலைமகள், சயமகள், புகழ் மகள்-செல்வம், கல்வி, வீரமும் வெற்றியும், புகழ் எனப்படும் நான்கும்

1 : 21

திருச்சிவபுரம்

(திருஇராகம்) - பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

புவம், வளி, கனல், புனல், புவி, கலை,
உரை மறை, திரிகுணம், அமர் நெறி
திவம் மலிதரு சுரர் முதலியர் திகழ்தரும்
உயிர் அவை அவைதம
பவம் மலி தொழிலது நினைவொடு, பதும
நன் மலர்அது மருவிய
சிவனது சிவபுரம் நினைபவர் செழு
நிலனினில் நிலைபெறுவரே. 1

1: புவம் - வானம். வளி - காற்று. கனல் - தீ புனல் - நீர். புவி - நிலம். இவை ஐம் பூதங்கள். கலை - 64 கலைகள். உரை மறை - மெய் உரையாகிய வேதம். திரிகுணம் - சத்துவம் இராசதம் தாமதம் என்னும் முக்குணங்கள். அமர் நெறி - விரும்பத்தக்க நெறிகள். திவம் மலிதரு சுரர் - தேவருலகத்துள்ள தேவர்கள். உயிர் அவை - தேவர் முதலாகச் சொல்லப்படும் உயிர்கள். அவைதம பவம் மலி தொழில் - அவ் உயிரினங்களைப் பிறக்கச் செய்வதாகிய படைத்தல் தொழில். பதும நன் மலரது மருவிய-தாமரை மலரில் வீற்றிருக்கும்.

மலை பல வளர்தரு புவியிடை மறைதரு
வழி மலி மனிதர்கள்
நிலை மலி சுரர்முதல் உலகுகள் நிலை
பெறுவகை நினைவொடு மிகும்
அலைகடல் நடுவு அறிதுயில் அமர் அரி
உருவு இயல் பரன் உறை பதி –
இலை மலி மதில் சிவபுரம் நினைபவர்
திருமகளொடு திகழ்வரே. 2

2, புவி - நிலவுலகம். மறையில் கூறிய நெறிப்பட வாழ்க்கையை உடையரான மக்கள், மக்களைக் காட்டிலும் கூடுதல் கால வாழ்நாளை உடைய தேவர்கள் என்னும் இவர்கள் உலகங்களாகிய நிலவுலகத்தையும வானுலகத்தையும் மற்றும் பிற பல உலகங்களையும் உரிய காலத்தளவும் நிலைபெறுத்தும் எண்ணத்தொடு கடல் நடுவில் பாம்பு அணையில் பள்ளிகொண்ட திருமால் என்க. சிலைமலி மதில் - மலை போன்று உயர்ந்த மதில். திருமகள் என்றது செல்வத்தை.

பழுதுஇல கடல் புடை தழுவிய
 படிமுதலிய உலகுகள் மலி
குழுவிய சுரர், பிறர், மனிதர்கள், குலம்
 மலிதரும் உயிரவை அவை
முழுவதும் அழிவகை நினைவொடு முதல்
 உருவு இயல் பரன் உறை பதி –
செழு மணி அணி சிவபுர நகர் தொழும்
 அவர் புகழ் மிகும், உலகிலே. 3

நறை மலிதரும் அளறொடு முகை நகு
 மலர் புகை மிகுவளர் ஒளி
நிறை புனல்கொடு தனை நினைவொடும்
 நியதமும் வழிபடும் அடியவர்
குறைவு இலபதம் அணைதர அருள்
 குணம் உடை இறை உறைவன பதி –
சிறை புனல் அமர் சிவபுரம் அது
 நினைபவர் செயமகள் தலைவரே. 4

---

3. பழுது இலகடல் - குற்றமற்ற கடல்கள். புடை தழுவிய - சூழப்பெற்ற. படி – நிலவுலகம், முழுவதும் அழிவகை - படைப்புக்கு உட்பட உயிரினங்கள் முழுவதும் ஒடுங்குமாறு, முதல் உரு - உருத்திரன் உருவம்.

4. நறை - மணம். அளறு - அரைத்த சந்தனம். முகை நகு மலர் - மொட்டு விரிந்தமலர். மொட்டும், விரிந்த மலரும் எனவும் ஆம். நியதமும்-ஒழுங்காக, நாள்தோறும். வனபதி - அழகிய நகரம். சிறை புனல் - தேக்கப்பட்ட நீர். செயமகள் - வீரமும் வெற்றியும்.

சினம் மலி அறுபகை மிகு பொறி சிதை
தருவகை வளி நிறுவிய
மனன் உணர்வொடு மலர்மிசை
எழுதரு பொருள் நியதமும் உணர்பவர்
தனது எழில் உருஅது கொடு அடை
தகு பரன் உறைவது நகர், மதில்
கனம் மருவிய, சிவபுரம் நினைபவர்
கலைமகள் தர நிகழ்வரே. 5

---

5. சினம் மலி அறுபகை-நம்மைக் கெடுப்பனவாகிய கொடிய காமம் முதலான உட்பகை ஆறு. பொறி - மெய் முதலான ஐம்பொறிகள், சிதைதருவகை-அவற்றின் வலிமையைக் கெடுக்கும் பொருட்டு, வென்று அடக்குமாறு. வளி நிறுவுதல்-பிராணுயாமம் செய்தல். மனன் உணர்வு - ஒருங்கிய மனம். மலர் மிசை - ஆயிரம் இதழ்களொடு பொருந்திய தாமரை மலரின்மேல், இது சகஸ்ரதள கமலமலர் எனப்படும். நினைப்பவர் நெஞ்சமாகிய தாமரை எனவும் ஆம். நியதமும் - நாள்தோறும், உணர்பவர் - ஒன்றியிருந்து நினைப்பவர். எழில் உரு - அழகிய வடிவம். கனம் மருவிய - பெருமை பொருந்திய. மதில் கனம் மருவிய - மேகம் தவழும் மதில்கள். கலைமகள் - கல்வி

சுருதிகள் பல நல முதல் கலை துகள்
அறுவகை பயில்வொடு மிகு
உரு இயல் உலகுஅவை புகழ்தர, வழி
ஒழுகும் மெய் உறு பொறி ஒழி
அரு தவம் முயல்பவர் தனது அடி
அடைவகை நினை அரன் உறை பதி -
திருவளர் சிவபுரம் நினைபவர் திகழ் குலன்
நிலன் இடை நிகழுமே. 6

கதம் மிகு கரு உருவொடு உகிர் இட
வட வரை கணகண என
மதம் மிகு நெடுமுகன் அமர்வனை
மதி திகழ் எயிறுஅதன் நுதிமிசை
இதம் அமர் புவியது நிறுவிய எழில்
அரி வழிபட, அருள் செய்த
பதம் உடையவன் அமர் சிவபுரம்
நினைபவர் நிலவுவர், படியிலே. 7

---

6. சுருதி - வேதம். துகள் அறுவகை பயில்வு - உயிரைப் பற்றியுள்ள மலமாசு நீங்குமாறு கற்றலும் கேட்டலும் சிந்தித்தலும். ஐயம் திரிபு அறக் கற்றல் எனினும் ஆம். உருஇயல் உலகு அவை - உலகத்துச் சான்றோராகத் திகழ்பவர், வழி ஒழுகுதல் - ஆன்றோர் சென்ற வழியில் நடத்தல், மெய் உறு பொறி ஒழி அருதவ முயல்பவர் - உடம்பில் உள்ள ஐம் பொறிகளையும் அடக்கிச் செய்யும் அரிய தவத்தைப் புரிபவர். அடி அடை வகை - திருவடிப் பேற்றை அடையுமாறு.

7. கதம்-கோபம். கரு உரு-கருநிற மேனி, உகிர் - நகம். மதம் மிகு நெடுமுகன் அமர் - செருக்கு மிகுந்து

அசைவு உறு தவம் முயல்வினில், அயன்
அருளினில், வரு வலிகொடு சிவன்
இசை கயிலையை எழுதரு வகை
இருபது கரம் அவை நிறுவிய
நிசிசரன் முடி உடைதர ஒருவிரல்
பணிகொளும் அவன் உறை பதி -
திசை மலி சிவபுரம் நினைபவர்
செழுநிலனினில் நிகழ்வு உடையரே. 8

தோன்றும் நீண்ட முகத்தில் உள்ள. வளை மதி திகழ் எயிறு - வளைந்த பிறையைப் போல விளங்கும் கோரப் பல். நுதி-நுனி. இதம் அமர் புவி - இன்பத்தோடு இருக்கும் நில மகள். திருமாலின் பன்றி அவதாரச் செய்தி கூறப்பட்டது. பதம் - திருவடி. படி - உலகம்.

8. அசைவு உறுதவம் - மிகவும் வருந்திச் செய்த தவம். அயன் அருளினில் வரு வலி - நான்முகன் அருளிய வரத்தால் பெற்ற வலிமை, கொடு - கொ (ண்) டு. இசை - வீற்றிருந்த. எழுதரு வகை - எடுக்கும் பொருட்டு. கரம் நிறுவிய - கைகளை அடியில் வைத்த. நிசிசரன் - அரக்கர் தலைவனாகிய இராவணன். ஒரு விரல் பணி கொளும் - ஒரு விரலால் அழுத்து தலைச் செய்யும், அவன்-சிவபெருமான். திசை மலி - எட்டுத் திசையிலும் புகழ் பரவிய. நிகழ்வுடையர் - பலகாலம் நலம் பெற்று இருப்பர்.

அடல்மலி படை அரி அயனொடும் அறிவு
அரியதுஒர் அழல் மலிதரு
சுடர் உருவொடு நிகழ்தர, அவர்
வெருவொடு துதியது செய, எதிர்
விடம் மலி களம், நுதல் அமர் கண் அது,
உடை உரு வெளிபடும் அவன் நகர்
திடம் மலி பொழில் எழில் சிவபுரம்
நினைபவர் வழி புவி திகழுமே. 9

'குணம் அறிவுகள் நிலை இல, பொருள்
உரை மருவிய பொருள்களும் இல,
திணம்' எனும் அவரொடு, செது மதி
மிகு சமணரும், மலி தமது கை
உணல் உடையவர், உணர்வு அரு
பரன் உறைதரு பதி – உலகினில் நல
கணம் மருவிய, சிவபுரம் நினைபவர்
எழில் உரு உடையவர்களே. 10

---

9. அடல் மலி படை - பகைவரை அழிக்கவல்ல சக்கரப்படை. வெருவு - அஞ்சுதல். விடம் மலிகளம் - நஞ்சு பொருந்திய கழுத்து. நுதல் அமர் கண் - கண் அமர் நுதல் - கண்பொருந்திய நெற்றி. உருவெளி படும் அவன் - தனக்கே உரித்தான அடையாளங் களுடன் வெளிப்படத் தோன்றி நின்றவன். விடம் மலி களமும் கண் அமர் நுதலும் உடைய தனது உரு என்க. நினைப்பவர் வழி புவி திகழும்-நினைப்பவர் வழியில் வெளிப்படும் இறைவன் அருளால் உலகத்தார் நன்மை யெல்லாம் சிறக்கும்.

10. குணம் அறிவுகள் ... எனும் அவர் - பொருள் கள், குணங்கள், அறிவுகள் என்பன எல்லாம் கணந்

திகழ் சிவபுர நகர் மருவிய சிவன்
அடியிணை பணி சிரபுர
நகர் இறை, தமிழ் விரகனது, உரை
நலம் மலி ஒருபதும் நவில்பவர்,
நிகழ் குலம், நிலம், நிறை திரு, உரு,
நிகர் இல கொடை, மிகு சயமகள்,
புகழ், புவிவளர் வழியடிமையின் மிகை
புணர்தர, நலம் மிகுவரே. 11

திருச்சிற்றம்பலம்

தோறும் அழிவனவாகிய நிலையில்லாப் பொருள்கள் என்பது உறுதி எனச் சொல்லும் புத்தர்கள். செது மதி - குற்றமுடைய புத்தி. கை உணல் உடையவர் - கையில் பிச்சை வாங்கி உண்ணுவதைப் பழக்கமாகக் கொண்டவரான சமணர். நலகணம் மருவிய சிவபுரம் - நல்லோர் கூட்டம் நிறைந்த கழுமலம்.

11. நிகழ்குலம் ... மிகை புணர்தர - இப் பதிகத்தைப் பாடித் துதிப்பவர் குலம், நிலம், திரு, உரு, கொடை, சயமகள், புகழ், அடிமை - ஆகியவற்றில் சிறக்க.

1 : 22

திருமறைக்காடு

(திருவிராகம்) பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

சிலைதனை நடுஇடை நிறுவி, ஓர் சினம்
மலி அரவு அது கொடு, திவி
தலம் மலி சுரர், அசுரர்கள் ஒலி
சல சல கடல் கடைவுழி, மிகு
கொலை மலி விடம் எழ, அவர் உடல்
குலைதர, அது நுகர்பவன் எழில்
மலை மலி மதில் புடை தழுவிய
மறைவனம் அமர்தரு பரமனே. 1

---

1. சிலை-மந்தர மலை, சினம் மலி அரவு-கடுமை மிகுந்த வாசுகிப் பாம்பு. திவிதலம்-வானுலகம், சுரர்-தேவர்கள். ஒலி சல சல கடல் கடைவுழி–சல சல ஒலி (எழக்) கடல் கடைவுழி என்க. கடைவுழி - கடையும் பொழுது. குலை தர-நிலைகுலைந்து நடுங்க. மலைமலி மதில் - மலையை ஒத்து உயர்ந்த மதில். புடை தழுவிய-பக்கம் சூழப்பெற்ற. மறை வனம்-திருமறைக் காடு. இன்றைய வேதாரண்யம். (வேத ஆரண்யம்) பரமன் - உயர்த்தவன். யாவர்க்கும் யாவைக்கும் மேலானவன்.

கரம் முதலிய அவயவம் அவை
கடுவிட் அரவுஅது கொடுவரு
வரல்முறை அணிதரும் அவன், அடல்
வலி மிகு புலி அதள் உடையினன்
இரவலர் துயர் கெடுவகை நினை,
இமையவர் புரம் எழில் பெற வளர்
மரம் நிகர் கொடை மனிதர்கள்
பயில் மறைவனம் அமர்தரு பரமனே 2

---

2. கரம் முதலிய அவயவம் அவை கடு விட அரவது கொடு .. அணிதரும் - கை முதலான உறுப்புக்கள் எல்லாவற்றிலும் கொடிய நஞ்சினையுடைய பாம்புகளை அணிந்து கொண்டுள்ள. அடல் வலி – பிற விலங்குகளைக் கொல்லும் வலிமை, அதள் - தோல். இரவலர்-இரப்போர், யாசிப்போர். இமையவர் புரம் எழில் பெற வளர் மரம் - தேவர் உலகம் அழகுபெற வளர்கின்ற கற்பக மரம். இரவலர் துயர் கெடு வகை நினை இமையவர் புர மரம் நிகர் கொடை, மனிதர் என இயைக்க,

இழை வளர்தரு முலை மலைமகள்
இனிது உறைதரும் எழில் உருவினன்,
முழையினில் மிகு துயில் உறும் அரி
முசிவொடும் எழ, முளரியொடு எழு
கழை நுகர்தரு கரி இரிதரு கயிலையில்
மலிபவன, இருள் உறும்
மழை தவழ்தரு பொழில நிலவிய
மறைவனம் அமர்தரு பரமனே. 3

நலம் மிகு திரு இதழியின் மலர்,
நகுதலையொடு, கனகியின் முகை
பல, சுர நதி, பட அரவொடு, மதிபொதி
சடை முடியினன், மிகு
தலம் நிலவிய மனிதர்களொடு தவம்
முயல்தரும் முனிவர்கள் தம
மலம் அறுவகை மனம் நினைதரும்
மறைவனம் அமர்தரு பரமனே. 4

---

3. இழை - அணிகலன்கள். மலைமகள் இனிது உறைதரும் எழில் உருவினன் - உமை ஒரு பாகம் கொண்ட திருமேனியை உடையவன். முழை-குகை. துயில் உறும் அரி-உறங்கும் சிங்கம். முசிவொடும் எழ-களைப்பொடும் எழ. முளரி-தாமரை. கழை-கரும்பு. நுகர் தரு கரி - தின்னும் யானை. இரிதரும் - சிங்கம் உறக்கம் விட்டு எழுவதனால் உண்டான ஓசைகேட்டு யானை அஞ்சி ஓடும். மலிபவன்-வீற்றிருப்பவன். இருள் உறும் மழை - நீர் நிறைந்து இருண்டு தோன்றும் மேகங்கள்.

4. இதழி-கொன்றை. நகுதலை-மண்டையோடு. கனகியின் முகை-ஊமத்த மலர். பல சுர நதி - பரந்த

கதிமலி களிறது பிளிறிட உரிசெய்த
அதிகுணன், உயர் பசு
பதியதனமிசை வரு பசுபதி பல
கலையவை முறை முறை உணர்
விதி அறிதரும் நெறி அமர்
முனிகணனொடு மிகு தவம் முயல்தரும்
அதி நிபுணர்கள் வழிபட, வளர்
மறைவனம அமர்தரு பரமனே.

வந்த வாஞறு ஆகிய கங்கை. பட அரவு - படத்தை உடைய பாம்பு, மதி-பிறை. பொதிசடை-கொன்றை முதலியவற்றை அடக்கிக்கொண்ட சடை. தலம் - நிலவுலகம். மலம் அறும் வகை - பாசக்கட்டினை ஒழிக்கும் வகை. மனம் நினைதரும்-திருவுளம் கொண்ட.

5. கதி-நடை. களிறு - ஆண் யானை. அதிகுணன்-குணத்தில் சிறந்தவன். பசு பதி - 1. ஆன் ஏறு ஆகிய எருது. 2. உயிர்களுக்குத் தலைவன் ஆகிய சிவ பெருமான். நூற்பொருளை உணர்ந்து நெறிப்பட ஒழுகும் முனிவர் கூட்டம் என்க.

கறைமலி திரிசிகை படை, அடல்
கனல் மழு. எழுதர எறிமறி,
முறை முறை ஒலி தமருகம், முடை
தலை, முகிழ் மலி கணி, வடமுகம்,
உறைதரு கரன், உலகினில் உயர்
ஒளி பெறுவகை நினைவொடு மலர்
மறையவன் மறைவழி வழிபடும்
மறைவனம் அமர்தரு பரமனே. 6

6, கறை-குருதிக் கறை. திரி சிகை படை-முத்தலை வேல். அடல் கனல் மழு - அழிக்கவல்ல தீ விளங்கும் மழுப்படை. எழுதர வெறி மறி - எழுந்து ஓடும் எண்ணத்தோடு வெறித்துப் பார்த்துத் துள்ளி நிற்கும் மான் கன்று. தமருகம்-உடுக்கு. முடை தலை-முடை நாற்றம் உடைய மண்டையோடு. முகிழ் மலி கணி - முகிழ்போன்ற கூர்மையான கணிச்சி என்னும் குந்தாலிப்படை. வடமுகம் - வடமுகத் தீ. உறை தரு கரன்-முத்தலை வேல்முதலான படைகளை ஏந்திய திருக்கைகளைஉடையவன். உயர் ஒளி-உயர்ந்த புகழ், மலர் மறையவன்-நான்முகன். மறைவழி வழிபடும் - வேத நெறியில் வழிபாடு செய்யும்.

இரு நிலன் அது புனலிடை மடிதர,
எரிபுக, எரியது மிகு
பெரு வளியினில் அவிதர, வளி கெட,
வியன் இடை முழுவது கெட,
இருவர்கள் உடல் பொறையொடு திரி
எழில் உரு உடையவன் இனமலர்
மருவிய அறுபதம் இசை முரல்
மறைவனம் அமர்தரு பரமனே. 7

---

7. இப்பாடல் ஒடுக்கமுறை கூறுகிறது. நிலன், புனல், எரி, வளி, வியன், இவை ஐந்து பூதங்களின் பெயர்கள். வளி-காற்று, வியன-அகன்றதான வானம். மடிதர, புக, அவிதர, கெட, இங்கு-'ஒடுங்க' என்னும் பொருளை உணர்த்தி நின்றன. இருவர்கள் - மாலும் அயனும். அவரும் அழிந்து போக அவர் எலும்பினை அணிந்து திரியும் ஒருவன். அறுபதம் - ஆறுகால்களை உடையவான வண்டுகள், இசைமுரல் - இனிமையாக ஒலிக்கும்.

சனம் வெருவுற வரு தசமுகன்
ஒருபது முடியொடும் இருபது
கனம் மருவிய புயம் நெரிவகை,
கழல் அடியில் ஓர்விரல் நிறுவினன்,
'இனம் மலிகண நிசிசரன் மகிழ்வுற
அருள் செய்த கருணையன்' என
மனமகிழ்வொடு மறை முறை உணர்
மறைவனம் அமர்தரு பரமனே. 8

அணி மலர்மகள் தலைமகன், அயன்
அறிவு அரியது ஓர் பரிசினில் எரி
திணிதரு திரள் உரு வளர்தர, அவர்
வெருவுற லொடு, துதி செய்து
பணிவுற, வெளி உருவிய பரன் அவன்
நுரை மலிகடல் திரள் எழும்
மணிவளர் ஒளி வெயில மிகுதரு
மறைவனம் அமர்தரு பரமனே. 9

---

8. சனம் - மக்கள். வெருவுற - அஞ்சுமாறு. தசமுகன் - பத்துத்தலை இராவணன். கனம் - பருமை, பெருமை. கழல் அடி - கழல் அணியப்பெற்ற திருவடி. நிறுவினன் - அழுத்தினன். இனம் மலி கண நிசி சரன் - தன் இனத்தார் கூட்டம் மிகவும் உடைய இராக்கதர் தலைவனான இராவணன். மகிழ்வு உற அருள் செய்த - தலைகளும் கைகளும் முறிய அழுத்தப் பெற்று வருந்தியவன் பின்னர்த்தான் மகிழ்ச்சியுறுமாறு வாளும் நாளும் பெயரும் பெற அருள் செய்த. கருணையன் - இரக்கம் உடையவன்.

9. மலர் மகள் தலைமகன் - திருமகள் கணவனான திருமால். பரிசு- தன்மை. எரி திணிதரு திரள்உரு வளர்

இயல்வு அழிதர விது செல உறவு,
இனமயில் இறகு உறு தழையொடு
செயல் மருவிய சிறு கடம்முடி அடை
கையர், தலை பறிசெய்து தவம
முயல்பவர், துவர் படம் உடல் பொதிபவர்,
அறிவு அரு பரன் அவன் அணி
வயலினில் வளைவளம் மருவிய
மறைவனம் அமர்தரு பரமனே. 10

வசை அறு மலர்மகள் நிலவிய
மறைவனம் அமர் பரமனை நினை
பசையொடு மிகு கலை பல பயில்
புலவர்கள் புகழ் வழி வளர்தரு
இசை அமர் கழுமல நகர் இறை,
தமிழ் விரகனது உரை இயல்வல
இசை மலி தமிழ் ஒருபதும் வல
அவர் உலகினில் எழில பெறுவரே. 11

திருச்சிற்றம்பலம்

தர - தீச்செறிந்து திரண்டு உருவாகி கீழும் மேலுமாக நீண்டு செல்ல. வெருவுறல் - அஞ்சுதல். வெளி உருவிய - வெளியிடை ஊடுருவிச் சென்ற.

10. இயல்வு - உலக இயற்கை. விதுசெலவு உற - காற்று வீச. மயில் இறகு உறு தழை - மயிற்பீலிக் கற்றை. செயல் - வேலைப்பாடு. சிறு கடம் முடி - குண்டிகை வைக்கப்பட்ட உறி. துவர் படம் - காவி ஆடை. அறிவு அரு - அறிய முடியாத. வளை - சங்கு.

11. வசை - குற்றம். மலர் மகள் - செல்வவளம். பசை - அன்பு. இசை - புகழ்.

1 : 23 திருக்கோலக்கா பண் : தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

மடையில் வாளை பாய, மாதரார்
குடையும் பொய்கைக் கோலக்கா உளான்,
சடையும், பிறையும், சாம்பல் பூச்சும், கீள்
உடையும் கொண்ட உருவம் என்கொலோ ? 1

பெண்தான் பாகம் ஆக, பிறைச் சென்னி
கொண்டான், கோலக்காவு கோயிலாக்
கண்டான், பாதம் கையால் கூப்பவே,
உண்டான் நஞ்சை, உலகம் உய்யவே. 2

பூண் நல் பொறி கொள் அரவம், புன்சடை,
கோணல்பிறையன், குழகன், கோலக்கா
மாணப் பாடி, மறை வல்லானையே
பேண, பறையும் பிணிகள் ஆனவே. 3

---

1. மடை - நீர் பாயும் மடை. வாளை - மீன்வகை.

2. சென்னி - தலை. கண்டான் - ஆக்கிக் கொண்டான். உலகம் உய்ய நஞ்சை உண்டான் என மாற்றிக் கொள்க.

3. பொறி - படத்தில் உள்ள புள்ளி. பூண் - பூணுகக் கொண்டான். கோணல் பிறை - வளைவினை உடைய பிறை. குழகன் - இளமை உடையவன். மாணப் பாடி - பெருமை சிறக்கப் பாடி. மறை வல்லான் - சிவபெருமான். பேண - நினைவில் போற்றிக் கொள்வதால். பிணிகள் ஆன பறையும் - கட்டுக்கள் நீங்கும். துன்பமானவை விலகும்.

தழுக்கொள் பாவம் தளர வேண்டுவீர் !
மழுக்கொள் செல்வன், மறி சேர் அம் கையான்,
குழுக்கொள் பூதப்படையான் கோலக்கா
இழுக்கா வண்ணம் ஏத்தி வாழ்மினே ! 4

மயில் ஆர் சாயல் மாது ஓர்பாகமா,
எயிலார் சாய எரித்த எந்தைதன்
குயில் ஆர் சோலைக் கோலக்காவையே
பயிலா நிற்கப், பறையும் பாவமே. 5

வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர் !
கடி கொள் கொன்றை கலந்த சென்னியான்,
கொடி கொள் விழவு ஆர் கோலக்காவுள் எம்
அடிகள் பாதம் அடைந்து வாழ்மினே ! 6

---

4. தழுக்கொள் பாவம் - பொருந்தி நிற்கும் ஊழ்வினை. தளர - வலிமை இழந்து போக. வேண்டுவீர் - விரும்புவீர்களே ! மறி - மான் கன்று. குழு - கூட்டம். இழுக்கா வண்ணம் - தவறாமல்.

5. மயில் ஆர் சாயல் - மயில் போன்ற அழகும் மென்மையும். எயிலார் சாய - முப்புரத்தார் அழிய. பயிலா நிற்க - இடையறாமல் நினைக்க.

6. வெடிகொள் வினை - கிளைத்து வரும் வினைகள்; எடுத்த பிறவியில் அனுபவத்திற்கு வரும் ஊழ்வினை எனினும் ஆம். வீட்ட - ஒழிக்க.

நிழல் ஆர் சோலை நீலவண்டு இனம்
குழல். ஆர் பண்செய் கோலக்கா உளான்
கழலால் மொய்த்த பாதம் கைகளால்
தொழலார் பக்கல் துயரம் இல்லையே. 7

எறி ஆர் கடல் சூழ் இலங்கைக் கோன்தனை
முறி ஆர் தடக்கை அடர்த்த மூர்த்திதன்
குறி ஆர் பண்செய் கோலக்காவையே
நெறியால் தொழுவார் வினைகள் நீங்குமே 8

நாற்றமலர்மேல் அயனும், நாகத்தில்
ஆற்றல் அணைமேலவனும் காண்கிலாக்
கூற்றம் உதைத்த குழகன் கோலக்கா
ஏற்றன் பாதம் ஏத்தி வாழ்மினே! 9

---

7. குழல் ஆர் பண் - குழல் இசை போன்ற ஒலி. தொழலார் - தொழுவார். பக்கல் - பக்கம்.

8. எறி ஆர் கடல் - அலைவீசும் கடல்; கரையில் அலை வந்து மோதும் கடல். முறி ஆர் தட கை - முறிதலை உடைய பெரிய கைகள். அடர்த்த - அழுத்திய. மூர்த்தி - உருவுடையான். குறி - சுரத் தானம். நெறியில் தொழுவார்-பேற்றிற்கு உரிய வழியில்.

9. நாற்றம் - மணம். மலர் - இங்குத் தாமரை மலரைக் குறிக்கும். நாகத்தில் ஆற்றல் அணைமேலவன்-பாம்பு அணை மேலான் ஆகிய திருமால். ஏற்றன் - எழுந்தருளும் இடமாகக் கொண்டவன். எருதினை ஊர்தியாகக் கொண்டவன்.

பெற்ற மாசு பிறக்கும் சமணரும்,
உற்ற துவர் தோய் உருஇலாளரும்,
குற்றநெறியார், கொள்ளார் கோலக்காப்
பற்றிப் பரவப், பறையும் பாவமே. 10

நலம் கொள் காழி ஞானசம்பந்தன்
குலம் கொள் கோலக்கா உளானையே
வலம் கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலம் கொள் வினை போய், ஓங்கி வாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. பெற்ற மாசு பிறக்கும் சமணர் - அடைந்த அழுக்கைப் போக்காது பலரும் காணக் கொண்டிருக்கும் சமணர். துவர் - காவி. உரு இலாளர் - அழகில்லாதவர்.

11. குலம் - மேன்மை. வலம் - அருள் வலிமை. வாய்மையார் - வாய்மையை உடையவர். உலம் கொள்வினை - மலைபோன்று திரண்டுள்ள வலிய சஞ்சித வினை.

1 : 24 சீகாழி பண்: தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

'பூ ஆர் கொன்றைப் புரிபுன்சடை ஈசா !
காவாய் !' என நின்று ஏத்தும் காழியார்,
மேவார் புரம்மூன்றும் அட்டார் சுவர்போல் ஆம்,
பாஆர் இன்சொல் பயிலும் பரமரே. 1

'எந்தை !' என்று அங்க இமையோர் புகுந்து ஈண்டி,
கந்தமாலைகொடி சேர் காழியார்
வெந்த நீற்றர், விமலா அவர்போல் ஆம்,
அந்தி நட்டம் ஆடும் அடிகளே. 2

தேனை வென்ற மொழியாள் ஒருபாகம்,
கானமான் கைக்கொண்ட காழியார்,
வானம் ஓங்கு கோயிலவர்போல் ஆம்,
ஆன இன்பம் ஆடும் அடிகளே. 3

---

1. புரி - முறுக்குடைய. மேவார் - பகைவர். அட்டார் - அழித்தவர். பா ஆர் - பாக்களில் நிறைந்துள்ள. காழியார் - சீகாழித் தலைவன்.

2. ஈண்டி - கூடி. கந்தம் - மணம். கொடு - கொ(ண்)டு. அந்தி நட்டம் - ஊழிக்காலக் கூத்து.

3. கானமான் - காட்டில் வாழும் இனமான மானின் கன்று. ஓங்கு - உயர்ந்த. ஆன இன்பம் - நிறைவான இன்பம்.

மாணு வென்றிக் காலன் மடியவே
காணு மாணிக்கு அளித்த காழியார்,
நாண் ஆர்வாளி தொட்டார் அவர்போல் ஆம்,
பேணுர் புரங்கள் அட்ட பெருமானே. 4

மாடே ஓதம் எறிய, வயல் செந்நெல்
காடு ஏறிச் சங்கு ஈனும் காழியார்,
வாடா மலராள் பங்கர் அவர்போல் ஆம்,
ஏடார் புரம்மூன்று எரித்த இறைவரே. 5

---

4. மாணு வென்றி - பெருமையொடு பொருந்தாத வெற்றி. காலன் - எமன். காணுமாணி - உலகினை மறந்து வழிபாடு செய்த மார்க்கண்டர். நாண் ஆர் வாளி தொட்டார் - நாணில் அம்பினைத் தொடுத்தவர். பேணுர் - பகைவர்.

5. மாடு - பக்கம். ஓதம் - நீர் அலைகள். சங்கு ஈனும் - சங்குகள் கருவுயிர்க்கும், முத்து ஈனும்- கடலிலிருந்து அலைகளால் வீசப்பட்ட சங்குகள் பக்கத்தில் உள்ள மருத நிலத்து வயல்காட்டில் ஏறி முத்துக்களை உதிர்க்கும். வாடா மலராள் - வாடாத மலரைச் சூடிய உமையம்மை. பங்கர் - பாகம் உடையவர். ஏடு - குற்றம்.

கொங்கு, செருந்தி, கொன்றைமலர் கூடக்
கங்கை புனைந்த சடையார், காழியார்,
அம் கண் அரவம் ஆட்டுமவர் போல் ஆம்,
செங்கண் அரக்கர் புரத்தை எரித்தாரே. 6

கொல்லை விடைமுன் பூதம் குனித்து ஆடும்
கல்லவடத்தை உகப்பார் காழியார்,
அல்ல இடத்தும் நடந்தார் அவர்போல் ஆம்,
பல்ல இடத்தும் பயிலும் பரமரே. 7

எடுத்த அரக்கன் நெரிய, விரல் ஊன்றித்,
கடுத்து, முரிய அடர்த்தார் காழியார்,
எடுத்த பாட்டுக்கு இரங்குமவர் போல் ஆம்,
பொடிக் கொள் நீறு பூசும் புனிதரே. 8

---

6. கொங்கு - பூந்தாது, தேன். செருந்தி - மலர் வகை. அங்கண் - அவ்இடம். செங்கண் அரக்கர் - சினத்தால் சிவந்த கண்ணை உடைய முப்புரத் தலைவர்கள்.

7. கொல்லை - முல்லை நிலத்து வாழ்வதான; முல்லை நிலத்தெய்வமான திருமால் ஆகிய விடை எனவும் கூறுவர். குனித்து - வளைந்து. கல்லவடம் - பறைவகை. பல்ல இடம் - பல இடங்கள். பயிலும் - பழகும்.

8. எடுத்த - கயிலை மலையை எடுத்த. கடுத்து - சினந்து. நீறு - திருநீறு. புனிதர் - மாசு இல்லாதவர்.

ஆற்றல் உடைய அரியும் பிரமனும்
தோற்றம் காணு வென்றிக் காழியார்,
ஏற்றம் ஏறு அங்த ஏறுமவர்போல் ஆம்,
கூற்றம் மறுகக் குமைத்த குழகரே. 9

பெருக்கப் பிதற்றும் சமணர் சாக்கியர்
கரக்கும் உரையை விட்டார், காழியார்,
இருக்கின் மலிந்த இறைவர் அவர்போல் ஆம்,
அருப்பின் முலையாள் பங்கத்து ஐயரே. 10

கார் ஆர் வயல் சூழ் காழிக் கோன்தனைச்
சீர் ஆர் ஞான சம்பந்தன் சொன்ன
பாரார் புகழப் பரவ வல்லவர்
ஏர் ஆர் வானத்து இனிதா இருப்பரே. 11

திருச்சிற்றம்பலம்

---

9. தோற்றம் காணு - தோற்றமும் முடிவும் அறியப்படாத. ஏற்றம் - உயர்ச்சி. ஏறு - எருது. கூற்றம் - எமன். மறுக-கலங்க. குமைத்த - வருத்திய.

10. பெருக்க - மிகுதியாக. சாக்கியர் - புத்தர். கரக்கும் உரை-வஞ்சித்து உரைக்கும் உரை. விட்டார்-நீங்கினர். இருக்கின் - வேதத்தில். மலிந்த - மிகுதியாகப் பேசப்பட்ட. அருப்பு - அரும்பு. மொட்டு.

11. கார் ஆர் வயல் - பசுமையால் இருண்டு தோன்றும் வயல். காழிக் கோன் - சீகாழியில் எழுந்தருளியுள்ள சிவபெருமான், :ஏர் - மிகுந்த அழகு.

1:25 திருச்செம்பொன்பள்ளி பண் : தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

மரு ஆர் குழலிமாது ஓர்பாகம் ஆய்,
திரு ஆர் செம்பொன்பள்ளி மேவிய,
கரு ஆர் கண்டத்து ஈசன் கழல்களை
மருவா தவர்மேல் மன்னும் பாவமே. 1

வார் ஆர் கொங்கை மாது ஓர்பாகம் ஆய்,
சீர் ஆர் செம்பொன்பள்ளி மேவிய,
ஏர் ஆர் புரிபுன் சடை, எம் ஈசனைச்
சேராதவர்மேல் சேரும் வினைகளே. 2

வரை ஆர் சந்தோடு அகிலும் வரு பொன்னித்
திரை ஆர் செம் பொன்பள்ளி மேவிய
நரை ஆர் விடை ஒன்று ஊரும் நம்பனை
உரையாதவர் மேல் ஒழியா ஊனமே. 3

---

1. மரு - மணம். குழலி – கூந்தலை உடையவள். கரு - கருநிறம். மருவாதவர் - சேராதவர். மன்னும் - நிலைபெறும்.

2. வார் - கச்சு. கொங்கை - மார்பகங்கள்.

3. வரை - மலை. சந்தோடு அகிலும் - சந்தனமும் அகிலும். திரை - அலை. நரை - வெள்ளை நிறம். ஊனம் - குற்றம், பாசம்.

மழுவாள் ஏந்தி, மாது ஓர்பாகம் ஆய்,
செழு ஆர் செம்பொன்பள்ளி மேவிய,
எழில் ஆர் புரிபுன்சடை; எம் இறைவனைத்
தொழுவார் தம்மேல் துயரம் இல்லையே 4

மலையான் மகளோடு உடன் ஆய் மதில் எய்த
சிலை ஆர் செம்பொன் பள்ளியானையே
இலைஆர் மலர் கொண்டு, எல்லி நண்பகல்
நிலையா வணங்க, நில்லா, வினைகளே 5

அறை ஆர் புனலோடுஅகிலும் வரு பொன்னிச்
சிறை ஆர் செம்பொன்பள்ளி மேவிய
கறை ஆர் கண்டத்து ஈசன் கழல்களே
நிறையால் வணங்க நில்லா வினைகளே 6

---

4. மழுவாள்-மழுவும் வாளும். செழு-செழுமை. எழில் - அழகு.

5. சிலை - மலைவில். எல்லி - இரவு. நிலையா - நிலையாக.

6. அறை - ஒலி. சிறை - கரை. கறை - நஞ்சுக் கறை. நிறையால் - வேறிடம் செல்லாது ஓரிடத்தே நிலைபெற்ற உள்ளத்தால்.

பை ஆர் அரவு ஏர் அல்குலாளொடும்
செய் ஆர் செம் பொன் பள்ளி மேவிய,
கை ஆர் சூலம் ஏந்து கடவுளை
மெய்யால் வணங்க, மேவா வினைகளே. 7

வான் ஆர் திங்கள் வளர் புன் சடை வைத்து,
தேன் ஆர் செம்பொன் பள்ளி மேவிய,
ஊன் ஆர் தலையில் பலி கொண்டு உழல் வாழ்க்கை
ஆனான் கழலே அடைந்து வாழ்மினே ! 8

கார் ஆர் வண்ணன், கனகம் அனையானும்,
தேரார் செம்பொன் பள்ளி மேவிய,
நீர் ஆர் நிமிர் புன்சடை எம் நிமலனை
ஓராதவர்மேல் ஒழியா ஊனமே. 9

---

7. பை ஆர் அரவு ஏர் அல்குல் - பாம்பின் படம் போலும் அகன்றும் குறுகியும் உள்ள அடிவயிறு. செய்யார் - சிவந்த திருமேனியை உடையவர். மெய்யால் - வஞ்சம் இல்லாமல்; உடம்பால். மேவா - வந்து சேரா.

8. ஊன் - முடை நாற்றம்.

9. கார் ஆர் வண்ணன் - மேக நிறமேனியனாகிய திருமால். கனகம் அனையான் - பொன்னிற மேனியனாகிய நான்முகன். நிமலன் - மலம் அற்றவன். ஓராதவர் - நினையாதவர்

மாசு ஆர் உடம்பர், மண்டைத் தேரரும்,
பேசா வண்ணம் பேசித் திரியவே.
'தேசு ஆர் செம் பொன் பள்ளி மேவிய
ஈசா!' என்ன, நில்லா இடர்களே. 10

நறவு ஆர் புகலி ஞானசம்பந்தன்
செறு ஆர் செம்பொன்பள்ளி மேயானைப்
பெரும் ஆறு இசையால் பாடல் இவைபத்தும்
உறுமா சொல்ல, ஓங்கி வாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. மாசு - அழுக்கு. உடம்பர் - உடம்பினை உடையவர் - சமணர். மண்டைத்தேரர் - பிச்சைப் பாத்திரம் ஏந்திய புத்தர். பேசாவண்ணம் பேசி - பேசக் கூடாதவற்றைப் பேசி. தேசு - ஒளி. இடர் - துன்பம்.

11. நறவு - தேன். செறு - வயல். பெறுமாறு - அடையுமாறு. உறுமா - உள்ளம் பொருந்தி.

1 : 26 திருப்புத்தூர் பண் : தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

வெங்கள் விம்மு வெறி ஆர் பொழில் சோலை
திங்களோடு திளைக்கும் திருப்புத்தூர்,
கங்கை தங்கும் முடியார் அவர் போலும்,
எங்கள் உச்சி உறையும் இறையாரே. 1

வேனல் விம்மு வெறி ஆர் பொழில் சோலைத்
தேனும் வண்டும் திளைக்கும் திருப்புத்தூர்,
ஊனம் இன்றி உறைவார் அவர் போலும்
ஏன முள்ளும், எயிறும் புனைவாரே. 2

பாங்கு நல்ல வரிவண்டு இசை பாட,
தேம் கொள் கொன்றை திளைக்கும் திருப்புத்தூர்,
ஓங்கு கோயில் உறைவார் அவர்போலும்,
தாங்கு திங்கள் தவழ் புன்சடையாரே. 3

---

1. வெங்கள் விம்மு - விரும்பப்படும் தேன். மிகுந்து எழும். வெறி - மணம்.

2. ஊனம் - குற்றம். ஏன முள்ளும் எயிறும் - பன்றி முள்ளும், பல்லும். வராக அவதாரத்துப்பன்றி;

3. பாங்கு - பக்கம். தேம் - தேன்.

நாற விண்ட நறுமாமலர் கவ்வித்,
தேறல் வண்டு திளேக்கும் திருப்புத்தூர்,
ஊறல் வாழ்க்கை உடையார் அவர்போலும்,
ஏறு கொண்ட கொடி எம் இறையாரே 4

இசை விளங்கும் எழில் சூழ்ந்து, இயல்பு ஆகத்
திசை விளங்கும் பொழில் சூழ் திருப்புத்தூர்,
பசை விளங்கப் படித்தார் அவர் போலும்
வசை விளங்கும் வடிசேர் நுதலாரே. 5

---

4. நாற விண்ட நறுமா மலர் - நாலா பக்கமும் மணம் பரக்க மலர்ந்த மணமிக்க பெரிய மலர்கள். கவ்வி - தோய்ந்து. தேறல் - தேன். வண்டு மலர் தேறல் கவ்வி திளேக்கும் எனக் கூட்டுக. ஊறல் — ஊறிப்போன. ஏறுகொண்ட கொடி - எருது எழுதிய கொடி.

5. இசை - வண்டுகளின் ஒலி. புகழ் எனவும் உரைப்பர். எழில் - அழகு. திசை விளங்கும் - எல்லா இடத்தும் புகழால் விளங்கும்; நாலா பக்கமும் விளங்கி நிற்கும். பசை - அன்பு. வசை - கங்கையாகிய பெண் வடி - அழகு. நுதல் - இங்குத் தலேயைக் குறிக்கும்.

வெண்ணிறத்த விரையோடு அலர் உந்தி
தெண்ணிறத்த புனல் பாய் திருப்புத்தூர்,
ஒண்ணிறத்த ஒளியார் அவர்போலும்,
வெண்ணிறத்த விடைசேர் கொடியாரே 6

நெய்தல், ஆம்பல், கழுநீர் – மலர்ந்து எங்கும்
செய்கள் மல்கும் சிவனூர் திருப்புத்தூர்,
தையல் பாகம் மகிழ்ந்தார் அவர் போலும்
மை உண் நஞ்சம மருவும் மிடற்றுரே. 7

கருக்கம் எல்லாம கமழும் பொழில் சோலைத்
திருக்கொள செம்மை விழவு ஆர் திருப்புத்தூர்
இருக்க வல்ல இறைவர் அவர் போலும
அரக்கனை ஒல்க விரலால் அடர்த்தாரே 8

---

6. விரை-மணம் அலர் மலர். உந்தி-தள்ளிக் கொண்டு. தெண் நிறத்த-தெளிவான நிறம் பொருந்திய. ஒள் நிறத்த ஒளியார் - ஒளிவீசும் தீவண்ணர்.

7, நெய்தல், ஆம்பல் கழுநீர் - நீர்ப் பூ வகை. செய்-வயல். மல்கும்-மிகுந்திருக்கும், மை - இருள் நிறம். மிடற்றுர் கழுத்தை உடையவர்.

8. கருக்கம்-மேகம், திரு-செல்வ வளம. விழவு-விழா ஆர்-நிறைந்த. ஒல்க-நசுங்குமாறு

மருவி எங்கும் வளரும் மடமஞ்ஞை
தெருவு தோறும் திளைக்கும் திருப்புத்தூர்ப்
பெருகி வாழும் பெருமான் அவன் போலும்
பிரமன் மாலும் அறியாப் பெரியோனே. 9

கூறை போர்க்கும் தொழிலார், அமண் கூறல்
தேறல் வேண்டாத் தெளிமின் திருப்புத்தூர்,
ஆறு நான்கும் அமர்ந்தார் அவர் போலும்
ஏறு கொண்ட கொடி எம் இறையாரே. 10

நல்ல கேள்வி ஞான சம்பந்தன்
செல்வர் சேடர் உறையும் திருப்புத்தூர்ச்
சொல்லல் பாடல் வல்லார் தமக்கு என்றும்
அல்லல் தீரும்; அவலம் அடையாவே 11

திருச்சிற்றம்பலம்

---

9. பெருகி-பலவகையாலும் சிறந்து,

10, கூறை - ஆடை. அமண் கூறல் தேறல் வேண்டா. தெளிமின் - சமணர் சொல்லுவனவற்றைப் பொருளாகக் கொள்ளாமல் உண்மையைத் தெளிவு பெறுங்கள், ஆறும் நான்கும்-ஆறு அங்கங்கள், நான்கு வேதங்கள். நான்கு கூறுன அறுவகைச் சமயங்கள் எனவும் உரைப்பர் ஏறு-எருது

11. சேடர் – எல்லாம் ஒடுங்கிய காலத்திலும் ஒடுங்காது எஞ்சி நிற்பவர். மாப்பேருழி முதல்வர். அல்லல்-துன்பம். அவலம்-வருத்தம்.

1 : 27 திருப்புன்கூர் பண் : தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

முந்தி நின்ற வினைகள் அவை போகச்
சிந்தி, நெஞ்சே! சிவனுர் திருப்புன்கூர்.
அந்தம் இல்லா அடிகள்அவர் போலும்,
கந்தம் மல்கு கமழ்புன் சடையாரே. 1

மூவர் ஆய முதல்வர், முறையாலே
தேவர் எல்லாம் வணங்கும் திருப்புன்கூர்,
ஆவர் என்னும் அடிகள்அவர் போலும்
ஏவின் அல்லார் எயில்மூன்று எரித்தாரே. 2

பங்கயங்கள் மலரும் பழனத்துச்
செங்கயல்கள் திளைக்கும் திருப்புனகூர்க்,
கங்கை தங்கு சடையாரவர் போலும்
எங்கள் உச்சி உறையும் இறையாரே. 3

---

1. முந்தி நின்ற வினை-பழவினே. சிந்தி - நினைவாயாக. அந்தம் இல்லா அடிகள்-முடிவு அற்ற முதல்வர். கந்தம்-மணம்.

2, மூவர் - அயன் அரி உருத்திரன். ஏ - அம்பு. ஏவின்-அம்பு ஒன்றிஞல். அல்லார்-பகைவர்.

3, பங்கயம்-தாமரை. பழனம்-வயல், பொய்கையும் ஆம்.

கரை உலாவு கதிர்மா மணிமுத்தம்
திரை உலாவு வயல்சூழ் திருப்புன்கூர்,
உரையின் நல்ல பெருமான் அவர் போலும்,
விரையின் நல்ல மலர்ச் சேவடியாரே, 4

பவள வண்ணப் பரிசுஆர் திருமேனி
திகழும் வண்ணம் உறையும் திருப்புன்கூர்,
அழகர் என்னும் அடிகள் அவர் போலும்,
புகழ நின்ற புரிபுன் சடையாரே. 5

தெரிந்து இலங்கு கழுநீர் வயல், செந்நெல்
திருந்த நின்ற வயல், சூழ் திருப்புன்கூர்ப்
பொருந்தி நின்ற அடிகள்அவர் போலும்,
விரிந்து இலங்கு சடைவெண் பிறையாரே. 6

4, கதிர்-ஒளி. திரை-அலை. உரை-புகழ், விரை-மணம்.

5. பரிசு-தன்மை.

6. தெரிந்து இலங்கு - தனித் தனி தெரிய விளங்கும், கழுநீர் வயலும், செந்நெல் வயலும் சூழ்ந்த திருப்புன்கூர். விரிந்து இலங்கு சடை-விரிந்து விளங்கும் சடை.

பாரும் விண்ணும் பரவித் தொழுதேத்தும்
தேர்கொள் வீதி விழவுஆர் திருப்புன்கூர்,
ஆர நின்ற அடிகள்அவர் போலும்,
கூரம் நின்ற எயில்மூன்று எரித்தாரே 7

மலை அதனார் உடைய மதில்மூன்றும்
சிலை யதனால் எரித்தார் திருப்புன்கூர்த்
தலைவர்; வல்ல அரக்கன் தருக்கினை
மலையதனால் அடர்த்து மகிழ்ந்தாரே. 8

நாட வல்ல மலரான், மாலும் ஆய்த்
தேட நின்றார், உறையும் திருப்புன்கூர்
ஆட வல்ல அடிகள்அவர் போலும்,
பாடல் ஆடல் பயிலும் பரமரே. 9

---

7. பார்-நிலவுலகத்தார். விண்-வானுலகத்தார். ஆர-பொருந்த. கூர-மிக.

8. மலையதனார்-போர் செய்தற்கு உரியரானவர். சிலை-மலைவில். தருக்கு-செருக்கு.

9. நாடவல்ல மலரான்-ஆராயவல்லவனாகிய நான்முகன், தேட நின்றார் - தோற்றமும் முடிவும் காண முடியாதவாறு நின்றவர்.

குண்டு முற்றிக் கூறை இன்றியே
பிண்டம் உண்ணும் பிராந்தர் சொல்கொளேல்!
வண்டு பாட மலர்ஆர் திருப்புன்கூர்க்
கண்டு தொழுமின், கபாலி வேடமே! 10

மாடம் மல்கு மதில்சூழ் காழிமன்,
சேடர் செல்வர் உறையும் திருப்புன்கூர்
நாட வல்ல ஞான சம்பந்தன்
பாடல் பத்தும் பரவி வாழ்மினே! 11

திருச்சிற்றம்பலம்

---

10. குண்டு முற்றி - உடல் சுமை மிகுந்து. உடல் பெருத்து. கூறை இன்றி–அரையில் ஆடை இல்லாமல். பிண்டம் உண்ணும் பிராந்தர்–உணவைக் கவளமாகவே விழுங்குபவரான மயக்க அறிவினர்,

11. சேடர் - 26 : 11 உரை காண்க.

1 : 28 திருச்சோற்றுத்துறை பண்: தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

செப்ப நெஞ்சே ! நெறி கொள் ! சிற்றின்பம்
துப்பன் என்னாது, அருளே துணையாக,
ஒப்பர் ஒப்பர் பெருமான், ஒளி வெண்ணீற்று
அப்பர் சோற்றுத்துறை சென்றடைவோமே. 1

பாலும் நெய்யும் தயிரும் பயின்று ஆடித்,
தோலும் நூலும் துதைந்த வரைமார்பர்,
மாலும் சோலை புடைசூழ், மடமஞ்ஞை
ஆலும், சோற்றுத்துறை சென்றடைவோமே. 2

---

1. செப்ப நெஞ்சே ! - ஒழுங்காக நினையவல்ல நெஞ்சமே ! நெறி கொள் சிற்றின்பம் - முறையான சிற்றின்பம். துப்பன் - துய்ப்பேன் - நுகர்வேன்: அருளே துணையாக - அருளையே துணையாகக் கொண்டு. ஒப்பர் ஒப்பர் - தமக்கு ஒப்பானவர் தாமே ஆனவர்.

2. பாலும் நெய்யும் தயிரும் – ஆன் ஐந்தில் திரு மஞ்சனத்திற்குச் சிறந்தன வான மூன்று. தோல் - புலித்தோல், மான்தோல்கள். நூல் - முப்புரி நூல்: துதைந்த - பொருந்திய. வரை மார்பு - மலை போன்ற மார்பு. மாலும் சோலை - மலராலும் தழையாலும் மணத்தாலும் நிறத்தாலும் மயக்க வல்ல சோலை. பலவண்ண மலர்களாலும் விரவப்பெற்ற சோலை எனினும் ஆம்: மஞ்ஞை - மயில். ஆலும் - ஒலிக்கும்.

செய்யர், செய்ய சடையர், விடை ஊர்வர்,
கைகொள் வேலர், கழலர், கரி காடர்,
தையலாள் ஓர் பாகம் ஆய எம்
ஐயர் - சோற்றுத்துறை சென்றடைவோமே. 3

பிணிகொள் ஆக்கை ஒழியப், பிறப்பு உளீர் !
துணிகொள் போரார், துளங்கும் மழுவாளர்,
மணிகொள் கண்டர் மேய, வார்பொழில்
அணிகொள், சோற்றுத்துறை சென்றடைவோமே. 4

பிறையும், அரவும், புனலும் சடை வைத்து
மறையும் ஓதி, மயானம் இடமாக
உறையும் செல்வம் உடையார், காவிரி
அறையும் சோற்றுத்துறை சென்றடைவோமே. 5

---

3. செய்யர் - சிவந்த மேனியர். வேலர் - முத்தலை வேற்படையை உடையவர்: கழலர் - காலில் கழல் அணிந்தவர். கரி காடர் - சுடுகாட்டில் ஆடு பவர். ஐயர் - உயர்ந்தோர்.

4. பிணிகொள் ஆக்கை ஒழியப் பிறப்பு உளீர்! - பாசக் கட்டுக்களால் விளைந்த உடம்பினை இனித் தொடர்பு அறுத்துக் கொள்வதற்காகவே எடுத்துக் கொண்ட பிறப்பினை உடையவரே ! - சோற்றுத்துறை சென்று, கருதியதனை அடைவோமாக: பிறப்பு உளீர்! ஆக்கை ஒழிய, சோற்றுத்துறை சென்றடைவோம் எனலும் ஆம்.

5. மயானம் - சுடுகாடு. சுடுகாட்டில் தங்குவதே அவர்க்குச் சிறந்த செல்வம் எனக் கொண்டவர். அறையும் - ஒலிக்கும், மோதும்.

துடிகளோடு முழவம் விம்மவே,
பொடிகள் பூசிப், புறங்காடு அரங்காகப்,
படிகொள் பாணி பாடல் பயின்ருடும்,
அடிகொள் சோற்றுத்துறை சென்றடைவோமே. 6

சாடிக் காலன் மாளத், தலைமாலை
சூடி, மிக்குச் சுவண்டாய் வருவார்தாம்,
பாடி ஆடிப் பரவுவார் உள்ளத்து
ஆடி - சோற்றுத்துறை சென்றடைவோமே. 7

பெண் ஓர் பாகம் உடையார், பிறைச் சென்னிக்,
கண் ஓர் பாகம் கலந்த நுதலினர்,
எண்ணுது அரக்கன் எடுக்க, ஊன்றிய
அண்ணல் - சோற்றுத்துறை சென்றடைவோமே. 8

---

6. துடி - உடுக்கை. முழவம் - முரசு. விம்ம - பெரிதாக முழங்க. புறங்காடு - சுடுகாடு. அரங்கு - ஆடும் இடம். படிகொள் பாணி - பொருந்திய தாளம். பாணியும் பாடலும்.

7. காலன் - எமன். காலன் மாளச் சாடி; சுவண்டாய் - பொருத்தமாக. பரவுவார் உள்ளத்தும் ஆடி நிற்பார்.

8. நுதலினர் - நெற்றியை உடையவர்; எண்ணுது - இறைவன் பெருமையை நினையாமல். ஊன்றிய - விரலால் அழுத்திய. அண்ணல் - தலைவர்; பெரியோர்.

தொழுவார் இருவர் துயரம நீங்கவே,
அழலாய் ஓங்கி, அருள்கள் செய்தவன்,
விழவு ஆர் மறுகில் விதியான் மிக்க எம்
எழில் ஆர் சோற்றுத்துறை சென்றடைவோமே. 9

கோது சாற்றித் திரிவார், அமண்குண்டர்,
ஓதும் ஓத்தை உணராது, எழு, நெஞ்சே!
நீதி நின்று நினைவார் வேடமாம்
ஆதி - சோற்றுத்துறை சென்றடைவோமே. 10

அம்தண் சோற்றுத்துறை எம் ஆதியைச்
சிந்தை செய்ம்மின்! அடியார் ஆயினீர்!
சந்தம் பரவு ஞான சம்பந்தன்
வந்தவாறே புனைதல் வழிபாடே. 11

திருச்சிற்றம்பலம்

---

9. இருவர் - மாலும் அயனும். துயரம் - அடி முடி காணாது வருந்திய வருத்தம். மறுகு - தெரு.

10. கோது - குற்றம் உடையன. சாற்றி - சொல்லி. ஓதும் ஒத்து - புத்தர் ஓதும் பிடக நூல். உணராது - ஆராயாமல், நீதி நின்று நினைவார் - மெய்ந்நெறியில் நின்று உண்மையை அறியமுயல்வார். வேடம் ஆம் - அவர் எண்ணும் உருவில் எழுந்தருளுவார்.

11. சம்பந்தன் வழியாக வந்த இப்பாடலைப் பாடிப் பரவுதல் வழிபாடாகும்.

1 : 2 திருநறையூர்ச் சித்தீச்சரம் பண்; தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

ஊர் உலாவு பலிகொண்டு, உலகேத்த,
நீர் உலாவு நிமிர்புன்சடை அண்ணல்,
சீர் உலாவும் மறையோர் நறையூரில்,
சேரும் சித்தீச்சரம் சென்றடை, நெஞ்சே ! 1

காடும், நாடும் கலக்கப் பலி நண்ணி,
ஓடு கங்கை ஒளிர் புன்சடை தாழ,
வீடும் ஆக மறையோர் நறையூரில்.
நீடும் சித்தீச்சரமே நினை, நெஞ்சே ! 2

கல்வியாளர், கனகம் அழல் மேனி
புல்கு கங்கை புரிபுன்சடையான் ஊர் -
மல்கு திங்கள் பொழில்சூழ் நறையூரில்,
செல்வர் சித்தீச்சரம் சென்றடை, நெஞ்சே ! 3

---

1. ஊர் உலாவு பலி கொண்டு - ஊர் தோறும் சென்று பெற்ற பிச்சையைக் கொண்டு. நறையூர் - தலப்பெயர். சித்தீச்சரம் - திருக்கோயில் பெயர்.

2. வீடும் ஆகம் மறையோர் - ஆகம் வீடும் மறையோர் என மாற்றிக் கொள்க. உடம்பின் பிறவியிலிருந்தும் வீடு பெறும் தகுதியையுடைய அந்தணர்.

3. கனகம் அழல் மேனி - பொன் போலவும் தீப்போலவும் ஒளிவிடும் உடம்பு. திங்கள் - சந்திரன்.

நீட வல்ல நிமிர் புன்சடை தாழ,
ஆட வல்ல அடிகள் இடமாகும் –
பாடல் வண்டு பயிலும் நறையூரில்,
சேடர் சித்தீச்சரமே தெளி, நெஞ்சே! 4

உம்பராலும், உலகின்னவராலும்,
தம் பெருமை அளத்தற்கு அரியான் ஊர் –
நண்பு உலாவும் மறையோர் நறையூரில்
செம்பொன் சித்தீச்சரமே தெளி, நெஞ்சே! 5

கூர் உலாவு படையான், விடை ஏறி,
போர் உலாவு மழுவான் அனல் ஆடி,
பேர் உலாவு பெருமான் நறையூரில்,
சேரும் சித்தீச்சரமே இடம் ஆமே. 6

---

4. நீட - மேலும் மேலும் நீண்டுசெல்ல.

5. உம்பர் - வானோர் உலகின்னவர் - நிலவுலகத்தவர். தம் பெருமை - தம் உண்மை இயல்பை. அளத்தற்கு அரியன் - உயிரறிவு கொண்டு அறிய முடியாதவன். நண்பு - நட்பு.

6. கூர் உலாவு - கூர்மை பொருந்திய. போர் உலாவு - போர்த்திறம் உடைய.

அன்றி நின்ற அவுணர் புரம் எய்த,
வென்றி வில்லி, விமலன், விரும்பும் ஊர் -
மன்றில் வாச மணம்ஆர் நறையூரில்
சென்று சித்தீச்சரமே தெளி, நெஞ்சே! 7

அரக்கன் ஆண்மை அழிய வரைதன்னால்
நெருக்க ஊன்றும் விரலான் விரும்பும் ஊர் -
பரக்கும் கீர்த்தி உடையார் நறையூரில்
திருக்கொள் சித்தீச்சரமே தெளி, நெஞ்சே! 8

ஆழியானும், அலரின் உறைவானும்,
ஊழி நாடி உணரார் திரிந்து, மேல்
சூழும் நேட, எரியாம் ஒருவன். சீர்
நீழல் சித்தீச்சரமே நினை, நெஞ்சே! 9

---

7. அன்றி - மாறுபட்டு. அவுணர் - முப்புரத்து அசுரர். வென்றி - வெற்றி. விமலன் - மலம் அற்றவன் மன்றில் - மக்கள் கூடும் பொது இடங்களில்.

8. ஆண்மை - ஆற்றல். வரை தன்னால் நெருக்க - மலையின் கீழாக நசுங்கும் படி. கீர்த்தி - புகழ்.

9. ஆழியான் - சக்கரப்படையை உடைய திருமால். அலரில் உறைவான் - தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகன். ஊழி நாடி பல்லாயிரம் ஆண்டுக்காலமாக ஆராய்ந்தும். நேட - தேட. எரியாய ஒருவன் - தீயுருவான ஒருவன்.

மெய்யின் மாசர், விரிநுண் துகில் இலார்,
கையில் உண்டு கழறும் உரை கொள்ளேல்!
உய்ய வேணடில், இறைவன் நறையூரில்
செய்யும சித்தீச்சரமே தவமாமே. 10

மெய்த்து உலாவும மறையோர் நறையூரில்,
சித்தன சித்தீச்சரத்தை, உயர் காழி
அத்தன் பாதம அணி ஞானசம்பந்தன்
பத்தும பாடப் பறையும் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

---

10 மெய்யில் மாசர் - உடம்பில் அழுக்கு உடையவர். விரிநுண் துகில் இலார் – விரிந்த ஆடை இல்லாதவர் கையில் உண்டு - பிச்சை ஏற்று உண்டு. கழறும் உரை - சொல்லும் சொல்

11. மெய்த்து உலாவு - நெறிப்பட்ட வாழ்க்கையை நடைமுறையில் கொண் சித்தன்–இங்கு எழுந்தருளி யுள்ள இறைவன் திருப்பெயர்.

1 : 30 திருப்புகலி பண்: தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

விதியாய், விளைவாய், விளைவின் பயனாகிக்,
கொதியா வரு கூற்றை உதைத்தவர் சேரும்
பதிஆவது - பங்கயம் நின்று அலரத், தேன்
பொதி ஆர் பொழில்சூழ் புகலிந் நகர்தானே, 1

ஒன்னார் புரம் மூன்றும் எரித்த ஒருவன்
மின் ஆர் இடையாளொடும் கூடிய வேடம்
தன்னால் உறைவு ஆவது - தண் கடல் சூழ்ந்த,
பொன் ஆர் வயல் பூம் புகலிந்நகர்தானே. 2

வலிஇல் மதி செஞ்சடை வைத்த மணாளன்,
புலியின் அதள்கொண்டு அரை ஆர்த்தபுனிதன்,
மலியும் பதி - மா மறையோர் நிறைந்து ஈண்டிப்
பொலியும் புனல் பூம்புகலிந்நகர்தானே. 3

---

1. விதியாய் விளைவாய் விளைவின் பயனாகி - பண்டை வினையாகி, அதனில் பக்குவப்பட்டுப், பின்னர் எடுத்த பிறவிக்கு ஏதுவாகி வந்த ஊழ்வினை யாகி, அதன் பயனாக இன்ன பொழுதில் இறத்தல் வேண்டும் என்ற முடிவின் காரணமாக இப்பொழுது உயிரைப் பிரித்துக் கொண்டு செல்லும் முறைமை உடையவனாதலின்.

2. ஒன்னார் - பகைவர். உறைவு - உறைவிடம், பொன் ஆர் வயல் - பொன் போல முற்றிய கதிர்களை உடைய வயல்.

3. வலி இல் மதி - வலிமை இழந்த பிறைத் திங்கள்; மலியும் பதி - மகிழ்ந்து கொண்ட நகர்.

கயல் ஆர் தடம் கண்ணியொடும் எருது ஏறி
அயலார் கடையில் பலி கொண்ட அழகன்
இயலால் உறையும் இடம் – எண்திசையோர்க்கும்
புயல் ஆர் கடல் பூம்புகலிந் நகர்தானே. 4

காதுஆர் கன பொன் குழை, தோடு அது இலங்கத்,
தாதுஆர் மலர் தண் சடை ஏற முடித்து,
நாதான் உறையும் இடம் ஆவது – நாளும்
போது ஆர் பொழில் பூம்புகலிந் நகர் தானே. 5

வலம் ஆர் படை மான் மழு ஏந்திய மைந்தன்,
கலம் ஆர் கடல்நஞ்சு அமுதுண்ட கருத்தன்,
குலம் ஆர் பதி-கொன்றைகள் பொன் சொரியத் தேன்
புலம் ஆர் வயல் பூம்புகலிந் நகர்தானே. 6

---

4. கயல் - கயல்மீன். தடங்கண்ணி - கயல் மீன் போன்ற அகன்ற பெரிய கண்ணையுடைய அங்கயற்கண்ணி. (மீனுட்சியம்மை) தடங்கண்ணி: விசாலாட்சி.

5. குழை தோடு - குழையும் தோடும். தாது - பூந்தாது. ஆர் - நிறைந்த. தண்சடை - குளிர் சடை, பனித்தசடை. நாதான் - நாதன். போது - மலர்.

6. வலம் - வெற்றி. படை - மூவிலை வேற்படை. சூலமும், மான் கன்றும் மழுப்படையும் ஏந்திய. மைந்தன் - வலிமை உடையான். கலம் - மரக்கலம் - கப்பல். கருத்தன் - திருவுளம் கொண்டவன்; தலைவன். குலம் - நன்மக்கள் கூட்டம். புலம் - நிலம்.

கறுத்தான், கனலால் மதில் மூன்றையும் வேவச்
செறுத்தான், திகழும் கடல் நஞ்சு அமுதாக,
அறுத்தான் அயன்தன் சிரம் ஐந்திலும் ஒன்றைப்,
பொறுத்தான், இடம் - பூம் புகலிந் நகர்தானே. 7

தொழிலால் மிகு தொண்டர்கள் தோத்திரம் சொல்ல,
எழில் ஆர் வரையால் அன்று அரக்கனைச் செற்ற
கழலான் உறையும் இடம் - கண்டல்கள் மிண்டிப்,
பொழிலால் மலி பூம் புகலிந் நகர்தானே. 8

மாண்டார் சுடலைப் பொடி பூசி, மயானத்து
ஈண்டா, நடம் ஆடிய ஏந்தல் தன் மேனி
நீண்டான் இருவர்க்கு எரியாய், அரவு ஆரம்
பூண்டான் நகர் - பூம் புகலிந்நகர் தானே. 9

---

7. 'மதில் மூன்றையும் வேவ கனலால் கறுத்தான்' என மாறுக. கனலால் கறுத்தான்-தீயால் அழித்தான். அயனுக்கு இருந்த ஐந்து தலைகளில் ஒரு தலையை அறுத்து நான்முகன் ஆக்கினான். பொறுத்தான் - கையில் தாங்கிக் கொண்டான்.

8. மிண்டி - மேலெழுந்து.

9. ஈண்டா - நெருங்கி நின்று. ஏந்தல்-தலைவன்.

உடை ஆர் துகில் போர்த்து உழல்வார், சமண்கையர்
அடையாதன சொல்லுவர், ஆதர்கள், ஓத்தைக்
கிடையாதவன்தன் நகர் - நன் மலி பூகம்
புடை ஆர்தரு பூம் புகலிந் நகர்தானே. 10

இரைக்கும் புனல் செஞ்சடை வைத்த எம்மான்தன்,
புரைக்கும் பொழில் பூம்புகலிந் நகர்தன்மேல்,
உரைக்கும் தமிழ் ஞானசம்பந்தன் ஒண் மாலை
வரைக்கும் தொழில் வல்லவர் நல்லவர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. கையர் - கீழோர். அடையாதன - பொருந்தாதன. ஆதர்கள் - கீழ்மக்கள். ஓத்து - நூல். கிடையாதவன் - பெறப்படாதவன். பூகம்-கமுகு.

11. இரைக்கும் - ஒலிக்கும். புரைக்கும் - உயர்ச்சி காட்டும். ஒண்மாலை - ஒளி பொருந்திய பாமாலை. வரைக்கும் தொழில் வல்லவர் - தமது இசை அளவில் கொணர்ந்து பாடவல்லவர்.

1 : 31 திருக்குரங்கணின்முட்டம் பண் : தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

விழுநீர்; மழுவாள்படை, அண்ணல் விளங்கும்-
கழுநீர் குவளை மலரக் கயல்பாயும்
கொழுநீர் வயல்சூழ்ந்த குரங்கணில் முட்டம்
தொழும் நீர்மையர் தீதுஉறு துன்பம் இலரே. 1

விடைசேர் கொடிஅண்ணல் விளங்கு உயர்மாடக்
கடைசேர் கருமென் குளத்து ஓங்கிய காட்டில்,
குடைஆர் புனல் மல்கு, குரங்கணில் முட்டம்
உடையான், எனை ஆள்உடை எந்தை பிரானே. 2

---

1. விழு நீர் - பெருமை சிறந்த நீராகிய கங்கை. மழு வாள் படை - மழுவாகியஒளி பொருந்திய கருவி. அண்ணல் - தலைவன். கழு நீர், குவளை - நீர்ப்பூக்கள். கொழு நீர் - வளமான நீர், நீர்மை - நற்செயல் உடைமை. தீது உறு துன்பம் - தீய வினையின் பயனாகி வந்த துன்பம்.

2. கடை - கடைவாயில். கரு மென் குளத்து ஓங்கிய - இருண்ட நிறம் உடைய நன்னீரால் நிரம்பிய குளத்தால் சிறப்புற்ற. குடை ஆர் புனல் மல்கு - மக்கள் கையால் குடைந்து குடைந்து நீராடற்கு உரிய நீர் மிகுந்த. ஆளுடைய - அடிமை யாக்கிக் கொண்ட. எந்தை பிரான் - எனக்குத் தந்தையும் தலைவனும் ஆனவன்.

சூலப்படையான், விடையான், சுடுநீற்றன்,
காலன்தனை ஆர்உயிர் வவ்விய காலன்;
கோலப் பொழில்சூழ்ந்த குரங்கணில் முட்டத்து
ஏலம் கமழ்புன்சடை எந்தை பிரானே. 3

வாடா விரிகொன்றை, வலத்து, ஒருகாதில்,
தோடு, ஆர்குழையான், நல பாலனம் நோக்கிக்,
கூடா தனசெய்த குரங்கணில் முட்டம்,
ஆடா வருவார்அவர் அன்புடையாரே. 4

---

3. காலன் - 1. எமன். 2. கால்களை உடையவன், காலத்தை வரையறுப்பவன். கோலம் - அழகு. ஏலம் - மயிர்ச் சாந்து. கூந்தலில் தடவும் மணக் கலவை.

4 வாடா விரி கொன்றை - வாடாமல் விரிந்த கொன்றை மலர். வலத்து ஒரு காதில் தோடு ஆர் குழையான் - வலத்து ஆர் குழையும், இடத்தான் ஒரு காதில் தோடும் உடையான் என இயைக்க. நல பாலனம் நோக்கி - நல்ல முறையில் செய்யும் பாதுகாத்தலைக் கருதி, கூடாதன - வேறு யார்க்கும் செய்ய முடியாதவற்றை, ஆடா வருவார் - நடம் ஆடி வருவார்.

இறைஆர் வளையாளை ஓர்பாகத்து அடக்கிக்,
கறைஆர் மிடற்றன், கரிகீறிய கையான்,
குறைஆர் மதிசூடி, குரங்கணில் முட்டத்து,
உறைவான், எமை ஆளுடை ஒண்சுடரானே. 5

பலவும் பயன் உள்ளன பற்றும் ஒழிந்தோம்
கலவம் மயில் காமுறு பேடையொடு ஆடிக்
குலவும், பொழில் சூழ்ந்த குரங்கணில் முட்டம்-
நிலவும் பெருமான் அடி நித்தல் நினைந்தே. 6

மாடுஆர் மலர்க் கொன்றை வளர்சடை வைத்துத்,
தோடு ஆர் குழைதான் ஒரு காதில் இலங்கக்,
கூடார் மதில் எய்து, குரங்கணில் முட்டத்து,
ஆடுஆர் அரவம் அரை ஆர்த்து அமர்வானே. 7

---

5. இறை - முன்கை. ஆர் - செறிந்த. வளை - வளையல். கறை - நஞ்சுக் கறை; கரி கீறிய - யானையை உரித்த. குறை ஆர் மதி - பிறைமதி ஒண் சுடரான் - ஒளி வீசும் சுடராக இருப்பவன்.

6. பலவும் பயன் உள்ளன பற்றும் ஒழிந்தோம் - உலகத்துப் பயன் உள்ளனவான பலபொருள்களிலும் இருந்த பற்று நீங்கினோம் (விடயப்பற்று ஒழிந்தோம்). கலவம் - தோகை. கலவமயில் - ஆண் மயில். பெடை - பெண் மயில். காமுறு - விருப்பம் மிகுந்த. ஆடி - அளவளாவி. பெருமான் அடி நித்தல் நினைந்தமையால் பற்று ஒழிந்தோம் என இயைக்க.

7. மாடு ஆர் - பொன்நிறம் பொருந்திய. வளர் சடை - மேன்மேலும் உயர்கின்ற சடை, தோடு

மைஆர் நிற மேனி அரக்கர்தம் கோனை
உய்யா வகையால் அடர்த்து, இன்னருள் செய்த,
கொய்ஆர் மலர் சூடி குரங்கணில் முட்டம்
கையால் தொழுவார் வினை காண்டல் அரிதே. 8

வெறிஆர் மலர்த் தாமரை யானொடு மாலும்
அறியாது அசைந்துஏத்த, ஓர் ஆர் அழல்ஆகும்
குறியால் நிமிர்ந்தான்தன் குரங்கணில் முட்டம்
நெறியால் தொழுவார் வினை நிற்ககிலாவே. 9

ஆர் குழைதான் ஒரு காதில் இலங்க - தோடு ஒரு காதில், குழை ஒரு காதில் இலங்க என்க. கூடார் - பகைத்தவர், முப்புரத்து அசுரர் மூவர். மதில் - முப்புரம். ஆடு அரவம் - ஆடும் பாம்பு. அரை ஆர்த்து - அரையில் கட்டி.

8. மை - இருள், கருமை. உய்யா வகையால் - தப்பித்துக் கொள்ள முடியாதபடி. அடர்த்து இன் அருள் செய்த - முதலில் அழுத்திப் பின்னர் இசைக்கு இரங்கி அருள் செய்த. கொய் ஆர் மலர் - பறித்த மலர். கையால் தொழுவார் - கை கூப்பித் தொழுவார்.

9. வெறி - மணம். ஆர் - நிறைந்த. மலர்த் தாமரையான் - தாமரை மலரான்; நான் முகன். அறியாது - அடி முடி காணமுடியாமல், அசைந்து - வருந்தி. குறி - வடிவம். நெறியால் - நூல் விதிப்படி.

கழுவார், துவர் ஆடை கலந்துமெய் போர்க்கும்
வழுவாச் சமண் சாக்கியர் வாக்குஅவை கொள்ளேல்!
குழுமின் சடை அண்ணல் குரங்கணில் முட்டத்து
எழில் வெண்பிறையான் அடி சேர்வது இயல்பே, 10

கல்ஆர் மதில் காழியுள் ஞான சம்பந்தன்
கொல்ஆர் மழு ஏந்தி குரங்கணில் முட்டம்
சொல்ஆர் தமிழ்மாலை - செவிக்கு இனிதாக
வல்லார்க்கு எளிதாம், பிறவா வகை வீடே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. கழுவார் - அழுக்கினைப் போக்கார். துவர் - காவி. வழுவா - தம் கொள்கையில் விடாப் பிடியாயுள்ள, சமண் சாக்கியர் வாக்கு - சமணர் புத்தர் ஆகியோரின் உரை. குழு மின் சடை - மின் குழுச் சடை - மின்னலின் தொகுதிபோல் விளங்கும் திருச்சடை, இய்ல்பு - அடியை அடைவதனை இயல் பாகக் கொள்ளல் வேண்டும்.

11. கல் ஆர் மதில் - கல்லால் நெருக்கிக் கட்டப் பட்ட மதில்சுவர். கொல் ஆர் மழு - பகையைக் கொன்றழிக்க வல்ல மழுப்படை. செவிக்கு இனிது ஆக வல்லார் - கேட்கும் செவிக்கு இன்பம் உண்டாக இசையொடு பாடவல்லார். பிறவா வகை வீடு எளிது ஆம் - இனிப் பிறவியில்லாதபடி அதற்கு ஒப்பப் பாசத்திலிருந்து விடுபடுதல் என்பது எளிதாகும்.

1 : 32 **திருஇடைமருதூர்**

பண்: தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

ஓடே கலன்; உண்பதும் ஊர் இடு பிச்சை;
காடே இடமாவது; கல்ஆல் நிழல்கீழ்
வாடா முலை மங்கையும் தானும் மகிழ்ந்து,
ஈடா உறைகின்ற இடைமருது ஈதோ. 1

தடம் கொண்டதோர் தாமரைப் பொன்முடி தன்மேல்
குடம் கொண்டு அடியார் குளிர்நீர் சுமந்து ஆட்டப்,
படம் கொண்டதோர் பாம்பு அரை ஆர்த்த பரமன்
இடம் கொண்டிருந்தான்தன் இடைமருது ஈதோ. 2

வெண்கோவணம் கொண்டு, ஒரு வெண்தலை ஏந்தி,
அம்கோல் வளையாளை ஓர் பாகம் அமர்ந்து,
பொங்காவரு காவிரிக் கோலக் கரைமேல்,
எம்கோன் உறைகின்ற இடைமருது ஈதோ. 3

---

1. ஓடு - நான்முகனது மண்டை ஓடு. கலன் - பிச்சைப் பாத்திரம். ஈடு - பெருமையாக.

2. தடம் - பெரிது, குளம்.

3. அம் - அழகு. கோல் - திரட்சி. அமர்ந்து - விரும்பி. பொங்கா வரு - பொங்கி வரும் - நீர் மிகுந்து வரும். கோலக்கரை - அழகிய திரண்ட கரை.

அந்தம் அறியாத, அரும் கலம் உந்திக்
கந்தம் கமழ் காவிரிக் கோலக் கரைமேல்,
வெந்த பொடிப் பூசிய வேத முதல்வன்,
எந்தை உறைகின்ற இடைமருது ஈதோ. 4

வாசம் கமழ் மாமலர்ச் சோலையில், வண்டே
தேசம் புகுந்து ஈண்டி ஓர் செம்மை உடைத்தாய்,
பூசம் புகுந்தாடிப் பொலிந்து அழகாய
ஈசன் உறைகின்ற இடைமருது ஈதோ. 5

வன்புற்று இளநாகம் அசைத்து, அழகாக,
என்பில் பல மாலையும் பூண்டு, எருதேறி,
அன்பில் பிரியாதவளோடும் உடனாய்
இன்புற் றிருந்தான்தன் இடைமருது ஈதோ. 6

---

4. அந்தம் - முடிவு. தொடக்கம் என்பதும் சேர்த்துக் கொள்க. அரும்கலம்-அரிய அணிகலன்கள். உந்தி - தள்ளி, வீசி. கந்தம் - மலர்களால் உண்டான மணம். கோலக்கரை - அழகிய திரண்ட கரை. வெந்த பொடி - திருநீறு.

5. தேசம் - பல இடங்கள். ஈண்டி ஓர் செம்மை உடைத்தாய் - செறிந்து ஒலிக்கும் ஓர் அழகினை உடையதாகி. பூசம் புகுந்து ஆடி - தைப்பூச நாளில் தீர்த்த நீராடி. திருவிடைமருதூரில் சிறந்த விழாக்களில் ஒன்று தைப்பூச விழா. அன்று காவிரியில் தீர்த்தவாரி சிறப்பாக நிகழும்.

6. வன் - வலிய. அசைத்து - கட்டி. 'அழகாக' என்பதனை 'அசைத்து' என்பதனோடும், 'பூண்டு' என்பதனோடும் தனித்தனி சேர்க்க, என்பு-எலும்பு.

தேக்கும் திமிலும் பலவும் சுமந்து உந்திப்
போக்கிப் புறம், பூசல் அடிப்ப வருமால்
ஆர்க்கும் திரைக் காவிரிக் கோலக் கரைமேல்
ஏற்க இருந்தான்தன் இடைமருது ஈதோ. 7

பூஆர் குழலார் அகில் கொண்டு புகைப்ப,
ஓவாது, அடியார், அடி உள்குளிர்ந்து ஏத்த,
ஆவா ! அரக்கன்தலை ஆற்றல் அழித்த,
ஏஆர் சிலையான்தன் இடைமருது ஈதோ. 8

---

7. திமில் - வேங்கை மரம். பல - பலாமரம். உந்திப் போக்கி - தள்ளிக் கொண்டு சென்று. புறம் போக்கி - இருகரைப் பக்கங்களிலும் வீசி. பூசல் அடிப்ப வரும் - கரைகளை மோதியடித்து வரும். ஆர்க்கும் திரை - ஆரவாரிக்கும் அலைகள். ஏற்க - பொருந்த.

8. பூ ஆர் குழலார் - பூக்களைச் சூடியுள்ள கூந்தலை உடைய பெண்டிர். மகளிர் நீராடியபின் தம் கூந்தலை உலர்த்த அகில் புகையைப் பயன்படுத்துவது உண்டு. ஓவாது - இடை விடாமல். உள் - உள்ளம். ஆவா - இரக்க மொழி. ஏ-ஆர் சிலை - பெரியதான கயிலைமலை.

முற்றுதது ஓர் பால்மதி சூடும் முதல்வன்,
நல் தாமரையானெடு மால் நயந்து ஏத்த
பொன் தோளியும் தானும் பொலிந்து அழகாக
எற்றே உறைகின்ற இடைமருது ஈதோ. 9

சிறு தேரரும் சில்சமணும் புறம் கூற,
நெறியே பலபத்தர்கள் கைதொழுது ஏத்த,
வெறியாவரு காவிரிக் கோலக் கரைமேல்
எறிஆர் மழுவாளன் இடைமருது ஈதோ. 10

கண்ஆர் கமழ் காழியுள் ஞானசம்பந்தன்
எண்ஆர் புகழ் எந்தை இடைமருதின்மேல்
பண்ணோடு இசை பாடிய பத்தும் வல்லார்கள்
விண்ணோர் உலகத்தினில் வீற்றிருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

9. முற்றாத மதி - பிறைமதி. பால் மதி - பால் போன்ற வெண்ணிற ஒளி வீசும் மதி. எற்றே - என்னே ! என்ற வியப்பு.

10. தேரர் - புத்தர். சமண் - சமணர். வெறியா வரு காவிரி - மலர்களால் மணம் வீசிவரும் காவிரி. எறி - எறிதல்.

11. கண் ஆர் - இடம் அகன்ற. எண் ஆர் புகழ் - எல்லார் எண்ணத்திலும் நிறைந்து நிற்கும் புகழ். விண்ணோர் உலகம் - வானுலகம், தேவர் உலகம்.

1 ; 33 திரு அன்பில்ஆலந்துறை

பண் : தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

கணை நீடு எரி, மால்; அரவம், வரை வில்லா,
இணையா, எயில் மூன்றும் எரித்த இறைவர் –
பிணைமா மயிலும், குயில், சேர் மட அன்னம்
அணையும் பொழில் அன்பில் ஆலந்துறையாரே. – 1

சடை ஆர் சதுரன், முதிரா மதி சூடி,
விடை ஆர் கொடி ஒன்று உடை எந்தை, விமலன் –
கிடை ஆர் ஒலி ஓத்து அரவத்து இசை கிள்ளை
அடை ஆர்பொழில் அன்பில் ஆலந்துறையாரே. – 2

---

1. நீடு எரி, மால் கணையா - நீண்டு எரிகின்ற தீயும் திருமாலும் அம்பாக. அரவம், வரை வில்லா – வாசுகிப் பாம்பும் மேரு மலையும் நாணும் வில்லுமாக. இணையா - இணைத்து. இணையா எயில்-எனக் கொண்டு பகைத்த திரிபுரம் எனவும் ஆம். பிணை - பெண். பெண்ணொடு கூடிய மயில் முதலியன. அணையும் – வந்து சேரும்.

2. சதுரன் - சமர்த்தன். முதிராமதி-பிறைமதி. விமலன்-மலம் இல்லாதவன். கிடை - வேதம் பயிலும் மாணவர் கூட்டம். ஓத்து – வேதம். அரவம் - ஒலி. இசை கிள்ளை - இசைக்கும் கிளிகள். அடை ஆர் பொழில் - கிளிகள் வந்தடையும் செறிவான சோலை.

ஊரும் அரவம் சடைமேல் உற வைத்துப்,
பாரும் பலி கொண்டு, ஒலி பாடும் பரமர் -
நீர் உண் கயலும், வயல் வாளை, வராலோடு
ஆரும் புனல் அன்பில் ஆலந்துறையாரே. - 3

பிறையும் அரவும் உற வைத்த முடிமேல்
நறை உண்டு எழு வன்னியும் மன்னுசடையார் -
மறையும் பலவேதியர் ஓத, ஒலி சென்று
அறையும் புனல் அன்பில் ஆலந்துறையாரே. - 4

நீடும் புனல் கங்கையும் தங்க முடிமேல்,
கூடும் மலையாள் ஒரு பாகம் அமர்ந்தார் -
மாடும் முழவம் அதிர, மடமாதர்
ஆடும் பதி அன்பில் ஆலந்துறையாரே. - 5

---

3. ஊரும் - ஊர்ந்து செல்லும். அரவம் - பாம்பு. உறவைத்து - பொருந்த வைத்து. பாரும் - உலகில்.

4. உறவைத்த - பகையில்லாது ஒரு சேர வைத்த. நறை - மணம். வன்னி - வன்னி இலை. அறையும் - முழங்கும்.

5. முடிமேல் கங்கையாள் தங்கவும் உடம்பில் ஒரு பாகத்தில் உமையாளையும் விரும்பி வைத்தார். மாடு - பக்கம். முழவம் - முரசு.

நீறு ஆர் திருமேனியர், ஊனம் இலார்பால்
ஊறு ஆர் சுவை ஆகிய உம்பர் பெருமான் –
வேறு ஆர் அகிலும், மிகு சந்தனம், உந்தி
ஆறு ஆர் வயல் அன்பில் ஆலந்துறையாரே. 6

செடி ஆர் தலையில் பலிகொண்டு இனிது உண்ட்
படி ஆர் பரமன், பரமேட்டி – தன்சீரைக்
கடி ஆர் மலரும், புனல் தூவி நின்று ஏத்தும்
அடியார் தொழும் அன்பில் ஆலந்துறையாரே. 7

விடத்தார் திகழும் மிடறன், நட்டம் ஆடி,
பட்த்து ஆர் அரவம் விரவும் சடை ஆதி –
கொடித்தேர் இலங்கைக் குலக்கோன் வரை ஆர
அடர்த்தார், அருள் அன்பில் ஆலந்துறையாரே 8

---

6. நீறு ஆர் - திரு நீறு நிறையப் பூசப்பெற்ற. ஊனம் இலார் பால் - குற்றம் அற்றவரிடம். ஊறு ஆர் சுவை - ஊறிப்போன சுவை வேறு ஆர் - வேறு வேறான. ஆறு ஆர் வயல் - ஆற்று நீர் வளம் சிறந்த வயல்கள்.

7. செடி - முடை நாற்றம். படி - தன்மை. பரமேட்டி – பரமன். சீர் – புகழ். கடி - மணம். மலரும் புனலும் தூவி.

8. விடம் - நஞ்சு. ஆதி - முதல்வன். இலங்கைக் குலக் கோன் – அரக்கர் குல மன்னன் இராவணன். வரை ஆர - மலையை எடுக்க. அடர்த்தார் - அழுத்தியவர்.

வணங்கி மலர்மேல் அயனும், நெடுமாலும்,
பிணங்கி அறிகின்றிலர், மற்றும் பெருமை;
சுணங்கு முகத்து அம் முலையாள் ஒரு பாகம்
அணங்கும் நிகழ் அன்பில் ஆலந்துறையாரே. 9

தறிஆர் துகில் போர்த்து உழல்வார், சமண் கையர்,
நெறியா உணரா நிலை கேடினர், நித்தல்
வெறி ஆர் மலர் கொண்டு அடி வீழும் அவரை
அறிவார் அவர் - அன்பில் ஆலந்துறையாரே. – 10

அரவு ஆர் புனல் அன்பில் ஆலந்துறைதன்மேல்
கரவாதவர் காழியுள் ஞான சம்பந்தன்
பரவு ஆர் தமிழ் பத்து இசை பாட வல்லார் போய்
விரவு ஆகுவர் வானிடை; வீடு எளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

---

9. பிணங்கி - மாறுபட்டு, சுணங்கு - தேமல்; அம் - அழகிய. அணங்கு - தெய்வ மகள்.

10. தறி ஆர் துகில் - தறியில் நெய்யப்பட்ட ஆடை: உழல்வார் - திரிவார். கையர் - கீழோர். நெறியா உணரார் - முறையான உணர்வினைப் பெறாதவர். நிலைக் கேடினர் - நிலை கெட்டவர். நித்தல் - நாள்தோறும். வெறி ஆர் - மணம் நிறைந்த. வீழும் - விரும்பித் தொழும். அறிவார் - அறிந்து அருள் செய்வார்.

11. கரவாதவர் - வஞ்சம் இல்லாத தவத்தை உடையவர். பரவு ஆர் - பரவுதலை உடைய. வானிடை விரவு ஆகுவர்; வீடு (ம்) எளிதாம் என்க.

1 ; 34 சீகாழி பண்: தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

அடல் ஏறு அமரும் கொடி அண்ணல்
மடல் ஆர் குழலாளொடு மன்னும்
கடல் ஆர் புடைசூழ்தரு காழி
தொடர்வார் அவர் தூ நெறியாரே. 1

திரை ஆர் புனல் சூடிய செல்வன்
வரையார் மகளோடும் மகிழ்ந்தான்,
கரை ஆர் புனல் சூழ்தரு காழி,
நிரை ஆர் மலர் தூவுமின், நின்றே. 2

---

1. அடல் ஏறு - வலிமை உடைய எருது. அமரும் கொடி – எழுதப்பட்ட கொடி. மடல் - மலர். குழலாள் - கூந்தலையுடைய உமையம்மை. மன்னும் - நிலைபெற வீற்றிருக்கும். தொடர்வார் - இடைவிடாமல் எண்ணுபவர். தூநெறி - தூய நெறியாகிய அருள் நெறி அல்லது சிவநெறி.

2. திரை – அலை. புனல் - கங்கை. வரையார் – இமவான். வரையார் மகள் – உமையம்மை. நிரை ஆர் மலர் - வரிசையான மலர்கள். நின்றே - நிலையாகவே.

இடி ஆர் குரல் ஏறு உடை எந்தை,
துடி ஆர் இடையாளொடு துன்னும்-
கடி ஆர் பொழில் சூழ்தரு காழி
அடியார் அறியார் அவலம்மே. 3

ஒளி ஆர் விடம் உண்ட ஒருவன்,
அளி ஆர் குழல் மங்கையொடு அன்பாய்க்,
களி ஆர் பொழில் சூழ்தரு காழி,
எளிதாம் அது கண்டவர் இன்பே. 4

பனி ஆர்மலர் ஆர்தரு பாதன்
முனிதான், உமையோடு முயங்கிக்,
கனி ஆர் பொழில் சூழ்தரு காழி,
இனிதாம் அது கண்டவர் ஈடே. 5

---

3. இடி ஆர் குரல்-இடி முழக்கம் போன்ற குரல். ஏறு - எருது. துடி ஆர் இடையாள் - உடுக்குப் போன்ற மெல்லிய இடுப்பினை உடைய உமை. துன்னும் - பொருந்தும். கடி - மணம். அவலம் - வருத்தம்.

4. ஒளி - நீலநிற ஒளி. அளி ஆர் குழல் - வண்டு மொய்க்கும் கூந்தல். களி - மகிழ்ச்சி. ஆர் - மிகும். காழியது கண்டவர்க்கு இன்பு எளிதாம்.

5. பனி - குளிர்ச்சி. ஆர் - பொருந்திய. மலர் - தாமரை மலர். ஆர் தரு - போன்ற பாதன்-அடிகளை உடையவன். முனிதான் உமையோடு முயங்கி - உமையோடு கூடியிருந்தும் அவன் ஓர் யோகியே. ஈடு - பெருமை.

கொலை ஆர்தரும் கூற்றம் உதைத்து,
மலையான் மகளோடு உடன் ஆனான்,
கரு ஆர் பொழில் சூழ்தரு காழி
மருவாதவர் வான் மருவாரே. 6

திருஆர்சிலையால் எயில் எய்து,
உரு ஆர் உமையோடு உடன் ஆனான்,
கரு ஆர் பொழில் சூழ்தரு காழி
மருவாதவர் வான் மருவாரே. 7

அரக்கன் வலி ஒல்க அடர்த்து,
வரைக்கு மகளோடு மகிழ்ந்தான்,
சுரக்கும் புனல் சூழ்தரு காழி
நிரக்கும் மலர் தூவு நினைந்தே. 8

---

6. கொலை ஆர்தரு கூற்றம் - மார்க்கண்டர் உயிரைக் கொண்டு போக வந்த எமன். கலையார் - கலைஞானம் உடையார். தலையார் - தலைமையை அடைந்தோர், உயர்வு பெற்றோர்.

7. திரு - அழகு. ஆர் - நிறைந்த. சிலை – மலைவில். எயில் - மூவர் அரண். திரிபுரம், உரு – அழகு. கரு - பசுமை இருள். மருவாதவர் - அடையாதவர். வான் – வானுலகம்.

8. வலி - வலிமை. ஒல்க - அடங்க. அடர்த்து - கால் விரலால் மலையின் கீழ் அழுத்தி. வரைக்கு மகள் - மலைமகள். சுரக்கும் - மிகுந்து வரும். நிரக்கும் - ஒழுங்கு அமைந்த, நிறைந்த. தூவு நினைந்தே - அவனையே நினைவில் கொண்டு மலர்களைத் தூவி வழிபடுக.

இருவர்க்கு எரியாகி நிமிர்ந்தான,
உருவில் பெரியாளொடு சேரும்,
கருநல் பரவை கமழ் காழி
மருவப், பிரியும் வினை மாய்ந்தே. 9

சமண் சாக்கியர்தாம் அலர்தூற்ற,
அமைந்தான் உமையோடு உடன் அன்பாய்க்
கமழ்ந்து ஆர் பொழில் சூழ்தரு காழி
சுமந்தார் மலர் தூவுதல் தொண்டே, 10

நலம் ஆகிய ஞான சம்பந்தன்,
கலம் ஆர் கடல் சூழ்தரு காழி
நிலையாக நினைந்தவர் பாட்டல்
வலர் ஆனவர் வான் அடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

9. இருவர் - மாலும் நான்முகனும். உருவில் பெரியாள் - பெரிய நாயகி. பரவை - கடல். கமழ் - விளங்கும். காழி மருவ வினை மாய்ந்து பிரியும் எனக் கூட்டுக. மாய்ந்து பிரியும் - கெட்டொழியும். பிரிந்து மாயும் என இயைத்து நீங்கியொழியும் என உரைத்தலும் ஆம்.

10. அலர் தூற்ற - புறம் கூற. சுமந்தார் - காழியை நினைவில் கொண்டவர்.

11. நலம் ஆகிய ஞானம் - நன்மை ஆகிய ஞானம், சிவஞானம். சிவஞான சம்பந்தன் என்க. கலம் - மரக்கலன்கள்-(கப்பல்கள்). நிலையாக தமக்கு நிலைத்த இடமாக. வலர் - வல்லவர்.

1 : 35   திருவீழிமிழலை   பண்: தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

அரை ஆர் விரி கோவண ஆடை,
நரை ஆர் விடை ஊர்தி, நயந்தான்,
விரை ஆர் பொழில் வீழிம்மிழலை
உரையால் உணர்வார் உயர்வாரே. 1

புனைதல்புரி புன்சடை தன்மேல்
கனைதல் ஒரு கங்கை கரந்தான்,
வினை இல்லவர் வீழிம்மிழலை
நினைவில்லவர் நெஞ்சமும் நெஞ்சே? 2

---

1. அரை ஆர் - அரையில் கட்டிய. நரை - வெள்ளை நிறம். விடை ஊர்தி - எருதினைத் தனக்கு வாகனமாக. நயந்தான் - விரும்பியவன். விரை - மணம். உரையால் - வேத ஆகம உரைகளால். உணர்வார் - மெய்ப்பொருளை உணர்பவர்.

2. புனைதல் புரி சடை - முடித்தலை உடைய சடை. கனைதல் ஒரு கங்கை - ஒலிக்கும் நீரை உடைய கங்கை. கரந்தான் - சடையினுள் அடக்கினவர். வினை இல்லவர் - நினைத்த மாத்திரத்திலேயே எல்லாம் செய்யவல்லவர் ஆதலால் செய்யும் வினைகளால் கட்டுக்கு உள்ளாகாதவர். நினைவில்லவர் - நினையாதவர். நெஞ்சமும் நெஞ்சே - அவர் நெஞ்சம் ஒரு நெஞ்சம் அன்று.

அழ வல்லவர், ஆடியும் பாடி
எழ வல்லவர், எந்தை அடிமேல்
விழ வல்லவர், வீழிம்மிழலை
தொழ வல்லவர் - நல்லவர் தொண்டே. 3

உரவம் புரி புன்சடை தன்மேல்,
அரவம் அரை ஆர்த்த அழகன்,
விரவும் பொழில் வீழிம்மிழலை
பரவும் அடியார் அடியாரே. 4

கரிது ஆகிய நஞ்சுஅணி கண்டன்
வரிது ஆகிய வண்டுஅறை கொன்றை
விரிதார் பொழில் வீழிம்மிழலை
உரிதா நினைவார் உயர்வாரே. 5

---

3. நல்லவர் தொண்டே - சிறந்த தொண்டர் ஆவர்.

4. உரவம் - வலிமை. அரவம் - பாம்பு. பரவும்- துதிக்கும்.

5. வரி(ய)தாகிய - வரிகளை உடையதாகிய. அறை - ஒலிக்கும். உரிதாஉரி(ய)தாக - தமக்கு உரிமைஉடையதாக.

சடை ஆர் பிறையான், சரி பூதப்
படையான், கொடி மேலது ஓர் பைங்கண்
விடையான், உறை, வீழிமிழலை
அடைவார், அடியார் அவர்தாமே, 6

செறி ஆர் கழலும், சிலம்பு ஆர்க்க,
நெறி ஆர் குழலாளொடு நின்றான்,
வெறி ஆர் பொழில் வீழிமிழலை
அறிவார் அவலம் அறியாரே, 7

உளையா, வலி ஒல்க அரக்கன்,
வளையா விரல் ஊன்றிய மைந்தன்,
விளை ஆர் வயல் வீழிமிழலை
அளையா வருவார் அடியாரே. 8

---

6. சடை ஆர் - சடையில் சூடிய. சரி - அங்கும் இங்குமாகப் போய்வந்து கொண்டிருக்கும், இயங்கும். பைங்கண் — பசுமையான கண், இளங்கண்.

7. செறி ஆர் கழலும் சிலம்பு - செறிவாகக் கட்டப் பட்ட கழலும், சிலம்பும், ஆர்க்க - ஒலி செய்ய. நெறி ஆர் குழலாள் - சுருண்ட கூந்தலை உடையாள். வெறி - மணம். அறிவார் - ஒன்றி உணர்வார், அவலம் அறியார் - துன்பம் அடையார்.

8. உளையா - வருந்தி. வலி ஒல்க - வலிமை குறைய. வளையா - வளைத்து. விளை - விளைச்சல். அளையா — பொருந்தி.

மருள்செய்து இருவர் மயலாக,
அருள் செய்தவன், ஆர் அழல் ஆகி
வெருள் செய்தவன், வீழிம்மிழலை
தெருள் செய்தவர் தீவினை தேய்வே. 9

துளங்கும் நெறியார் அவர் தொன்மை
வளம் கொள்ளல் மின், புல் அமண் தேரை!
விளங்கும் பொழில் வீழிம்மிழலை
உளம் கொள்பவர்தம் வினை ஓய்வே. 10

நளிர் காழியுள் ஞானசம்பந்தன்,
குளிர் ஆர் சடையான் அடி கூற,
மிளிர் ஆர் பொழில் வீழிம்மிழலை,
கிளர் பாடல் வல்லார்க்கு இலை கேடே. 11

திருச்சிற்றம்பலம்

---

9. இருவர் - மாலும் அயனும். மருள் செய்து மயலாக - அறியாமை கொண்டு மயங்க. ஆர் அழல் - செறிந்த தீ. வெருள் செய்தவன் - அஞ்சுவித்தவன். தெருள் செய்தவர் - தெளிவுற்றவர்.

10. துளங்கும் நெறியாரவர் - ஆராய்ச்சியில் நிலைகலங்கி விடும் கொள்கையை உடையவர். தொன்மை வளம் கொள்ளல்மின்.

11. நளிர் - நீர் வளத்தால் உண்டான குளிர்ச்சி. அடி கூற - அடி எனப்படும் அருளைப் புகழ்ந்து சொல்ல. மிளிர் – விளக்கம்.

1 : 36 திருஐயாறு பண்: தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

கலை ஆர் மதியோடு உரநீரும்
நிலை ஆர் சடையார் இடமாகும்;
மலை ஆரமும், மாமணி, செந்தோடு
அலை ஆர் புனல் சேரும் ஐயாறே. 1

மதி ஒன்றிய கொன்றை வடத்தன்,
மதி ஒன்ற உதைத்தவர் வாழ்வு—
மதியினொடு சேர் கொடி மாடம்
மதியம் பயில்கின்ற ஐயாறே. 2

கொக்கின் இறகினொடு, வன்னி
புக்க சடையார்க்கு இடமாகும்,
திக்கின் இசை தேவர் வணங்கும்,
அக்கின் அரையாரது ஐயாறே. 3

---

1. கலை ஆர் மதி - ஒரு நாள் பிறை. உர நீர் - வலிமையோடு பாய்ந்து வந்த கங்கை. நிலை ஆர் சடை - தன்னிடம் நிலைபெறக் கொண்ட சடை. சடையார் - சடையை உடையவர். ஆரம் - சந்தன வகை.

2. வடம் - மாலை. ஒன்ற – தேயுமாறு. வாழ்வு - வாழிடம். மதி தவழும் கொடி மாடம் என்க.

3. வன்னி - வன்னிஇலை; புக்க - சேர்ந்துள்ள: திக்கின் இசை தேவர் - எட்டுத் திசைகளிலும் உள்ள தேவர்கள். அக்கு - சங்குமணி.

சிறை கொண்ட புரம்அவை சிந்தக்,
கறை கொண்டவர் காதல்செய் கோயில்-
மறைகொண்ட நல் வானவர், தம்மில்
அறையும் ஒலி சேரும் ஐயாறே. 4

உமையாள் ஒரு பாகம் அது ஆகச்
சமைவார் அவர் சார்வு இடமாகும்,
அமை ஆர் உடல் சொர்தர முத்தம்
அமையாவரும் அம்தண் ஐயாறே. 5

தலையின் தொடை மாலை அணிந்து,
கலை கொண்டது ஓர் கையினர் சேர்வுஆம்,
நிலை கொண்ட மனத்தவர், நித்தம்
மலர்கொண்டு வணங்கும் ஐயாறே. 6

---

4. சிறைகொண்டபுரம் - சிறகுகளைக் கொண்டு வானத்தில் திரியும் புரங்கள், திரிபுரம். சிந்த - அழிய கறைகொண்டவர் - சினம் கொண்டவர். மறை கொண்ட வானவர் - கண்ணுக்குப் புலப்படாத தேவர்கள். அறையும் - ஆரவாரிக்கும்.

5. சமைவார் - உருவம் கொண்டவர். சார்வு இடம் - சார்ந்திருக்கும் இடம். அமை ஆர் உடல் சோர்தர - மூங்கிலின் உடல் போன்ற பகுதி வெடித்து. முத்தம் அமையாவகும் - முத்துக்கள் சிதறும். அம் தண் - அழகிய குளிர்ந்த;

6. தொடை மாலை - தொடுக்கப்பட்ட மாலை; கலை - மான்.

வரம் ஒன்றிய, மா மலரோன்தன்
சிரம் ஒன்றை அறுத்தவர் சேர்வுஆம்,
வரைநின்று இழி வார்தரு பொன்னி
அரவம் கொடு சேரும் ஐயாறே. 7

வரை ஒன்றுஅது எடுத்த அரக்கன்
சிரம். அங்கம் நெரித்தவர் சேர்வு ஆம்,
விரையின் மலர் மேதகு பொன்னித்
திரைதன்னொடு சேரும் ஐயாறே. 8

சங்கக் கயனும் அறியாமைப்
பொங்கும் சுடரானவர் கோயில் —
கொங்கில் பொலியும் புனல் கொண்டு
அங்கிக்கு எதிர்காட்டும் ஐயாறே. 9

---

7. வரம் ஒன்றிய - வரம் பொருந்திய. வரை நின்று இழி - மலையிலிருந்தும் இறங்கி வரும். வார் தரு - ஓடிவரும். பொன்னி - காவிரி. அரவம் - ஆரவார ஒலி.

8. சிரம் அங்கம் - தலையும் பிற உறுப்பாகிய கைகளும். விரை - மணம்.

9. சங்கக் கயன் - சங்கு ஏந்திய கையனாகிய திருமால். கையனும் என்னும் 'உம்'மையால் நான்முகனும் கொள்ளப்படுவான். கொங்கு - தேன். அங்கிக்கு எதிர் காட்டும் — தீ வளர்த்துச் செய்யும் வேள்வியில் தீக்கு எதிராக் கொடுக்கும் நீரையுடைய.

துவர் ஆடையர், தோல் உடையார்கள்
கவர் வாய்மொழி காதல் செய்யாதே,
தவ ராசர்கள் தாமரையானோடு
அவர்தாம் அணை அம்தண் ஐயாறே. 10

கலைஆர், கலிக் காழியர் மன்னன்,
நலம் ஆர்தரு ஞானசம்பந்தன்
அலை ஆர் புனல் சூழும் ஐயாற்றைச்
சொலும் மாலை வல்லார் துயர் வீடே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. கவர் வாய் மொழி - வஞ்சம் உடைய சொல். காதல் செய்யாதே - விரும்பாமல்.

11. கலை - கலை ஞானவகை. கலி - ஆரவாரம். மாலை - சொல்மாலை. வீடு - நீங்கும்.

1 : 37　　**திருப்பனையூர்**　　**பண் : தக்கராகம்**

திருச்சிற்றம்பலம்

அரவச் சடைமேல் மதி, மத்தம்
விரவிப் பொலிகின்றவன். ஊராம்,
நிரவிப் பல தொண்டர்கள், நாளும்,
பரவிப் பொலியும் பனையூரே. 1

எண் ஒன்றி நினைந்தவர் தம்பால்
உள்நின்று மகிழ்ந்தவன் ஊராம்,
கள் நின்று எழு சோலையில், வண்டு
பண் நின்று ஒலிசெய் பனையூரே. 2

அலரும் எறி செஞ்சடை தன்மேல்
மலரும் பிறை ஒன்று உடையான் ஊர்,
சிலர் என்றும் இருந்து அடிபேணப்,
பலரும் பரவும் பனையூரே. 3

---

1. மதி மத்தம் - பிறையும் ஊமத்தையும். நிரவி- கலந்து.

2. எண் - உணர்வு. உள்நின்று - நினைந்தவர் உணர்வின் உள்ளேயே நிலையாக இருந்து. மகிழ்ந்தவன் - உணர்ந்தவர் மகிழுமாறு உடனிருந்து மகிழ்ந்து மகிழ்வித்தவன். கள் நின்று எழு - தேன் மிகுந்து சொரியும். பண் நின்று ஒலி செய் - பண்போல் இசைக்கும்.

3. அலர் எறி செஞ்சடை - அருச்சிப்பார் மலர்களை இடும் சிவந்த சடை. மலரும் பிறை - வளர் பிறை.

இடிஆர் கடல் நஞ்சு அமுது உண்டு
பொடி ஆடிய மேனியினுன் ஊர்,
அடியார் தொழ, மன்னவர் ஏத்தப்,
படியார் பணியும் பனையூரே. 4

அறை ஆர் கழல்மேல் அரவு ஆட,
இறை ஆர் பலி தேர்ந்தவன் ஊராம்,
பொறை ஆர் மிகுசீர் விழ மல்கப்,
பறை ஆர் ஒலிசெய் பனையூரே. 5

அணியார் தொழ, வல்லவர் ஏத்த,
மணிஆர் மிடறு ஒன்று உடையான் ஊர்,
தணி, ஆர் மலர் கொண்டு, இரு போதும்
பணிவார் பயிலும் பனையூரே. 6

---

4. இடி ஆர் கடல் - இடிபோன்று முழங்கும் கடல். பொடி - திருநீறு. ஆடிய-முழுமையும் பூசிய. படியார் – உலகில் உள்ள மற்றைய மக்கள்.

5. அறை ஆர் கழல் - ஒலிக்கும் கழல். இறை - முன்கை. பொறை - நிலஉலகம். விழ - விழா. பறை - முரசு வகை.

6. அணியார் - நெருங்கி நிற்பவர். மணி - நீல மணி. தணி - தண்ணீர் என்பதன் திரிபு. ஆர் - நிறைந்த. பயிலும் - நெருங்கியிருக்கும்.

அடையாதவர் மூ எயில் சீறும்
விடையான், விறல் ஆர் கரியின் தோல்
உடையான், அவன் எண் பல பூதப்
படையான், அவன் ஊர் பனையூரே. 7

இலகும் முடி பத்து உடையானை
அலல் கண்டு அருள் செய்த எம் அண்ணல்,
உலகில் உயிர், நீர், நிலம், மற்றும்
பல கண்டவன் ஊர் பனையூரே. 8

வரம் முன்னி மகிழ்ந்து எழுவீர்காள் !
சிரம் முன் அடி தாழ வணங்கும் !
பிரமனொடு மால் அறியாத
பரமன் உறையும் பனையூரே. 9

---

7. அடையாதவர் - பகைவர். மூ எயில் - திரிபுரம். சீறும் - சினக்கும். விறல் - வலிமை. கரி - யானை. எண்பல - மிகப்பல.

8. இலகும் - விளங்கும். அலல் - அ(ல்)லல். நீர் நிலம் மற்றும் பல என்றது ஐம்பெரும் பூதங்கள் நுண் பூதங்கள் முதலான எல்லாவற்றையும். கண்டவன் - ஆக்கியவன்.

9. வரம் முன்னி மகிழ்ந்து எழுவீர்காள்! - வரங்கள் பெற எண்ணி மகிழ்ச்சியுடன் புறப்படும் மக்களே! சிரம் - தலை. அடி முன் சிரம் தாழ வணங்கும் - திருவடிகளில் உம் தலை தாழ்ந்து வணங்குங்கள். பரமன் - உயர்ந்தோன்.

அழிவல் அமணரொடு, தேரர்,
மொழி வல்லன சொல்லிய போதும்,
இழிவு இல்லது ஓர் செம்மையினுன் ஊர்,
பழி இல்லவர் சேர் பனையூரே. 10

பாரார் விடையான் பனையூர்மேல்,
நீர் ஆர் தமிழ் ஞான சம்பந்தன்
ஆராத சொல் மாலைகள் பத்தும்
ஊர் ஊர் நினைவார் உயர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

10: அழிவல் அமணர் - பிறரை மயக்கிக் கெடுத்தலில் வல்லவரான அமணர். தேரர் - புத்தர். வல்லன மொழி - திறம் மிகுந்த சொற்களை. இழிவு இல் - தன் நிலையில் குறைவுடாத.

11. பார் - உலகம். நீர் - நீர்மை. ஆராத - பாடியும் பொருளை உணர்ந்தும் நிரம்பாத.

1 : 38 திருமயிலாடுதுறை

பண் : தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

கரவுஇன்றி, நல் மாமலர் கொண்டு,
இரவும் பகலும் தொழுவார்கள்,
சிரம் ஒன்றிய செம்சடையான் வாழ்
வரம் மா மயிலாடு துறையே. 1

உர வெம் கரியின் உரிபோர்த்த
பரமன் உறையும் பதி என்பர்,
குரவம், சுரபுன்னையும், வன்னி
மருவும் மயிலாடுதுறையே. 2

---

1. கரவு - கள்ளம். சிரம் - தலை மாலை. வரம் - மேன்மை.

2. உர வெம் கரி - வலிமை பொருந்திய கொடிய யானை. பதி - ஊர், இடம். குரவம் - குராமலர். சுரபுன்னை - நாகலிங்கம்.

ஊனத்து இருள் நீங்கிட வேண்டில்,
ஞானப் பொருள் கொண்டு அடிபேணும்!
தேன் ஒத்து இனியான் அமரும், சேர்
வானம், மயிலாடு துறையே. 3

அஞ்சு ஒண் புலனும் அவை செற்ற
மஞ்சன் மயிலாடு துறையை
நெஞ்சு ஒன்றி நினைந்து எழுவார்மேல்
துஞ்சும் பிணியாயின தாமே 4

---

3. ஊனத்து இருள் - உயிரை அதன் தூய நிலையிலிருந்து குற்றப்படச் செய்த ஆணவ மலம். வேண்டில் - விரும்பினால். ஞானப் பொருள் - சிவஞானம் ஆகிய நிலைத்த பொருள். பேணும் - போற்றுங்கள். தேன் ஒத்து இனியான் - சிவானுப காலத்தில் நுகரப்படும் தேனைப் போன்ற இன்ப மானவன். அமரும் - விரும்பும். வானம் சேர் - உயிர்கட்கு உயிர் நிலையை அடைவிக்கும் இடமான.

4. அஞ்சு ஒண் புலனும்-ஐந்து அறிகருவிகளான ஐம்பொறிகளும். செற்ற - அடக்கிய. மஞ்சன் - மைந்தன் - வலிமையை உடையவன். துஞ்சும் - செயலற்றுவிடும், பயன் செய்யாது போம். பிணி - துன்பம், மூவகைப் பாசக் கட்டும்.

தணி ஆர் மதி செஞ்சடையான் தன்
அணி ஆர்ந்தவருக்கு அருள் என்றும்
பிணி ஆயின தீர்த்து அருள் செய்யும்
மணியான் மயிலாடு துறையே. 5

தொண்டர், இசை பாடியும், கூடிக்,
கண்டு துதிசெய்பவன் ஊராம்,
பண்டும் பல வேதியர் ஓத,
வண்டுஆர் மயிலாடு துறையே. 6

அணங்கோடு ஒரு பாகம் அமர்ந்து,
இணங்கி அருள் செய்தவன் ஊராம்,
நுணங்கும் புரிநூலர்கள் கூடி
வணங்கும் மயிலாடு துறையே. 7

---

5. தணி ஆர் மதி - குளிர்ச்சி பொருந்திய பிறை. அணி ஆர்ந்தவர் - நெருங்கி நின்றவர். அருள் என்றும் - என்றும் அருளாயிருப்பவன். பிணி ஆயின - கட்டும் அதனுல் துன்பங்கள் பலவும். மணி யான் - மாணிக்க மணி போன்றவன்.

6. கண்டு துதி செய்பவன் - நேரில் கண்டு துதிக்கப் பெறுபவன்.

7. அணங்கு - பெண். நுணங்கும் புரி நூலர் - நுண்ணிய முப்புரி நூலே அணிந்துள்ளவர், நுட்பமாகச் சொல்லும் பொருளே உடைய விரும்பிக் கற்கத் தகும் மறைமுதலான உயர் நூல்களேக் கற்றலும் கேட்டலும் உடைய பெரியார்.

சிரம் கையினில் ஏந்தி இரந்த
பரம்கொள் பரமேட்டி, வரையால்
அரங்க, அரக்கன் வலி செற்ற
வரம்கொள் மயிலாடு துறையே. 8

ஞாலத்தை நுர்ந்தவன் தானும்,
கோலத்து அயனும் அறியாத
சீலத்தவன் ஊர், சிலர் கூடி,
மாலைத் தீர் மயிலாடு துறையே. 9

நின்று உண் சமணும், நெடும் தேரர்,
ஒன்றும் அறியாமை, உயர்ந்த,
வென்றி அருளான் அவன் ஊராம்,
மன்றல் மயிலாடுதுறையே. 10

---

8. சிரம் - நான்முகன் தலை ஓடு. பரம் - உயர்ச்சி. பரமேட்டி - பரமன். வரை - மலை. அரங்க - நசுங்க. வலி செற்ற - வலிமையைக் கெடுத்த.

9. ஞாலம் - உலகம். ஞாலத்தை நுகர்ந்தவன் - திருமால். கோலம் - அழகு. சீலம் - சிறப்பியல்பு. மால் - மயக்கம், அறியாமை.

10. மன்றல் - மணம்.

நயர் காழியுள் ஞானசம்பந்தன்
மயல்தீர் மயிலாடு துறைமேல்
செயலால் உரை செய்தன பத்தும்,
உயர்வு ஆம், இவை உற்று உணர்வார்க்கே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. நயர்-நயம் உடையார், நன்மை உடையவர். செயலால் - திருவருளின் செயலால். இவை உற்று உணர்வார்க்கு உயர்வு ஆம் எனக் கூட்டுக.

1 : 39 திருவேட்களம் பண் : தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

அந்தமும் ஆதியும்ஆகிய அண்ணல்,
ஆர் அழல் அங்கை அமர்ந்து இலங்க,
மந்த முழவம் இயம்ப,
மலைமகள் காண, நின்று ஆடிச்,
சந்தம் இலங்கு நகுதலை, கங்கை,
தண் மதியம், அயலே ததும்ப,
வெந்த வெண் நீறு மெய் பூசும்,
வேட்கள நல்நகராரே. 1

---

1. அந்தமும் ஆதியும் - முடிவும் முதலும், தோன்றியுள்ள எல்லாவற்றையும் அழிப்பவனும் மீண்டும் அவற்றை ஆக்குபவனும். அண்ணல் - முதல்வன். ஆர் அழல் - தாங்க முடியாத கடும் தீ. இலங்க - விளங்க. மந்த முழவம் - மெல்லிய ஓசையை உடைய முரசு. இயம்ப - ஒலிக்க. சந்தம் - அழகு, நிறம். (வெள்ளை). நகுதலை - சிரிப்பது போலத் தோன்றும் மண்டை ஓடு. அயலே ததும்ப - பக்கம் பக்கமாக இருக்க.

சடைதனைத் தாழ்தலும் ஏற முடித்துச்,
சங்க வெண்தோடு சரிந்து இலங்கப்,
புடைதனில் பாரிடம் சூழப்,
போதருமாறு இவர் போல்வார்,
உடைதனில் நால்விரல் கோவண ஆடை,
உண்பதும் ஊர் இடு பிச்சை, வெள்ளை
விடைதனை ஊர்தி நயந்தார்,
வேட்கள நன்நகராரே. 2

பூதமும் பல்கணமும் புடைசூழப்,
பூமியும் விண்ணும் உடன் பொருந்தச்,
சீதமும் வெம்மையும் ஆகிச்,
சீரொடு நின்ற எம் செல்வர்,
ஓதமும் கானலும் சூழ்தரு வேலை,
உள்ளம் கலந்து இசையால் எழுந்த,
வேதமும் வேள்வியும் ஓவா
வேட்கள நன்நகராரே. 3

---

2. ஏற முடித்து - உயரத் தூக்கிக் கட்டி. சங்க வெண்தோடு - சங்கால் ஆன வெள்ளை நிறத்தோடு. சரிந்து - தாழ்ந்து. புடை - பக்கம். பாரிடம் - பூதம். போதருமாறு-போவது. போல்வார் - உவமப் பொருள் கொள்ளப்படாத உவமச் சொல். ஊர்தி - வாகனம். நயந்தார் - விரும்பிக் கொண்டவர்.

3. பல்கணம் - பலவான சிவகணங்கள். சீதம் - குளிர்ச்சி. வெம்மை - வெப்பம். சீர் - சிறப்பு. ஓதம் - நீர்ப்பெருக்கு, அலை. கானல் - கடற்கரைச் சோலை. வேலை - கடல். ஓவா - இடையறாத.

அரை புல்கும் ஐந்தலை ஆடல் அரவம்
அமைய வெண் கோவணத்தோடு அசைத்து,
வரை புல்கு மார்பில் ஓர் ஆமை
வாங்கி அணிந்தவர்தாம்,
திரை புல்கு தெண்கடல் தண்கழி ஓதம்
தேன் நல் அம் கானலில் வண்டு பண்செய்ய,
விரை புல்கு பைம்பொழில் சூழ்ந்த
வேட்கள நல்நகராரே, 4

பண்உறு வண்டு அறை கொன்றை அலங்கல்,
பால்புரை நீறு, வெண்நூல் கிடந்த
பெண் உறு மார்பினர், பேணார்
மும்மதில் எய்த பெருமான்,
கண் உறு நெற்றி கலந்த வெண்திங்கள்
கண்ணியர், விண்ணவர் கைதொழுது ஏத்தும்
வெண்நிற மால் விடை அண்ணல்
வேட்கள நல்நகராரே. 5

---

4. புல்கு - தழுவிக் கிடக்கும். ஆடல் அரவம் - ஆடும் பாம்பு. அமைய - பொருந்த. அசைத்து-கட்டி. அரை புல்கும் வெண்கோவணத் (ஆடையோடு.) தோடு ஐந்தலை ஆடல் அரவம் அமைய அசைத்து - எனக் கூட்டுக. வரை புல்கு மார்பு - மலைபோன்ற தன்மை பொருந்திய மார்பு. ஓர் ஆமை - திருமாலின் கூர்ம அவதாரத்து ஆமையின் ஓடு. வாங்கி - உடம்பி லிருந்தும் நீக்கி எடுத்து. திரை - அலை. விரை - மணம். பை - அழகிய.

5. பண்உறு வண்டு அறை - பாட்டு ஒலியை ஒத்து வண்டு ஒலித்து மொய்க்கும். அலங்கல் - மாலை.

கறி வளர் குன்றம் எடுத்தவன் காதல்
　　கண்கவர் ஐங்கணையோன் உடலம்
பொறிவளர் ஆர் அழல் உண்ணப்
　　பொங்கிய பூத புராணர்,
மறிவளர் அங்கையர், மங்கை ஓர் பங்கர்,
　　மைஞ்ஞிற மான்உரி தோல் உடை ஆடை,
வெறிவளர் கொன்றை அம் தாரார்,
　　வேட்கள நல் நகராரே.　　6

புரை - ஒத்த. பேணூர் - பகைத்தவர். கண்ணுறு நெற்றி. கண் ஒன்று பொருந்திய நெற்றி, திங்கள் கண்ணி-பிறையாகிய அடையாள மலர், மால் விடை-திருமாலாகிய எருது, பெரியதான எருது.

6. கறி - மிளகுக் கொடி. குன்றம் எடுத்தவன் - கோவர்த்தன கிரியைக் குடையாக எடுத்துக் கோவலர் குடியைக்காத்த கண்ணனுகிய திருமால். காதல் - திருமாலின் காதல் மைந்தனுகிய மன்மதன். ஐங்கணை யோன் - ஐந்து வகை மலர்களால் ஆன அம்பினை உடைய மன்மதன். உடலம் - உடம்பு. பொங்கிய - சினந்த பூத புராணர் – பூதகணங்களை உடைய பழையவர். மறி - மான். மைஞ்ஞிற மான் - கருநிறம் உடைய விலங்காகிய யானை ; ஒரு மான் வகையும் ஆகும். வெறி-மணம். தாரார்-மாலையை அணிந்தவர்.

மண் பொடிக் கொண்டு எரித்து ஓர் சுடலை,
மாமலை வேந்தன் மகள் மகிழ,
நுண்பொடிச் சேர நின்று ஆடி,
நொய்யன செய்யல் உகந்தார்,
கண் பொடி வெண்தலை ஓடுகை ஏந்திக்
காலனைக் காலால் கடிந்து உகந்தார்,
வெண் பொடிச் சேர்திரு மார்பர்,
வேட்கள நல் நகராரே. 7

ஆழ்தரு பால்கடல் நஞ்சினை உண்டுஆர்
அமுதம் அமரர்க்கு அருளிச்,
சூழ்தரு பாம்பு அரை ஆர்த்துச்,
சூலமோடு ஒண் மழு ஏந்தித்,
தாழ்தரு புன்சடை ஒன்றினை வாங்கித்,
தண் மதியம் அயலே ததும்ப
வீழ்தரு கங்கை கரந்தார்,
வேட்கள நல் நகராரே. 8

---

7. மண் பொடிக் கொண்டு - நிலம் இறுதியாகக் கொண்ட ஆக்கப் பொருள் அத்தனையும் தம் முதற் பொருளில் ஒடுங்கச் செய்து. மாமலை வேந்தன் - இமய அரசன். மகள்-இமவான் மகளாகத் தோன்றிய உமை. நுண் பொடிச் சேர - நுண்ணிய திருநீறு திருமேனியில் பொருந்த. நொய்யன - அனைத்தையும் ஒடுக்கிய ஒடுக்க காலத்தில் செய்யப்படும் நுண்ணிய ஐந்தொழில்கள். கண் பொடி - கண்ணுகிய உறுப்பு ஒழிந்து போன.

8. ஆழ்தரும் - ஆழம் மிகுந்த. வாங்கி - சுற்றிக் கட்டி: ததும்ப - பொருந்த. வீழ்தரு - வானத்

திரு ஒளி காணிய பேதுறுகின்ற
திசை முகனும், திசைமேல் அளந்த
கரு வரை ஏந்திய மாலும்
கை தொழ நின்றதும் அல்லால்,
அருவரை ஒல்க எடுத்த அரக்கன்
ஆடு எழில் தோள்கள் ஆழத்து அழுந்த
வெருவுற ஊன்றிய பெம்மான்,
வேட்கள நல் நகராரே. 9

அத்தமண் தோய் துவர்ஆர் அமண்குண்டர்
யாதும் அல்லா உரையே உரைத்துப்,
பொய்த் தவம் பேசுவது அல்லால்,
புறன் உரை யாதொன்றும் கொள்ளேன்;
முத்துஅன வெண்முறுவல் உமை அஞ்ச
மூரிவல் ஆனையின் ஈர்உரி போர்த்த,
வித்தகர், வேத முதல்வர்,
வேட்கள நல் நகராரே. 10

திலிருந்தும் இறங்கி வந்த. கரந்தார் - அடக்கிக் கொண்டவர்.

9. திரு ஒளி - அருள் ஒளியாகிய தீப்பிழம்பின் ஒளி. காணிய பேது உறுகின்ற - பார்க்க முடியாமல் வருந்திய. திசை மேல் அளந்த - வானத்தையும் ஓரடியால் அளந்த. கருவரை - கோவர்த்தன கிரி. ஒல்க - நடுங்க. ஆடு - வெற்றி. வெருவுற - அஞ்ச.

10. அத்தம் மண் - செம்மண். துவர் - காவி. யாதும் அல்லா உரை - பொருளற்ற சொல். மூரி - வலிமை. ஈர் உரி - உரித்த தோல்.

விண்இயல் மாடம் விளங்கு ஒளிவீதி,
வெண்கொடி எங்கும் விரிந்து இலங்க,
நண்ணிய சீர் வளர் காழி
நல் தமிழ் ஞானசம்பந்தன்,
பெண்ணின் நல்லாள் ஒருபாகம் அமர்ந்து
பேணிய வேட்களம் மேல் மொழிந்த,
பண்இயல் பாடல் வல்லார்கள்
பழியொடு பாவம் இலரே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. விண் இயல் - வான் அளாவிய. பழி - இழிந்த செயலால் உண்டாவது. பாவம் - தீய செயலால் உண்டாவது.

1 - 40 திருவாழ்கொளிபுத்தூர்

பண் : தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

பொடி உடை மார்பினர், போர்விடை ஏறிப்,
பூத கணம் புடை சூழக்,
கொடியுடை ஊர் திரிந்து, ஐயம்
கொண்டு, பல பல கூறி,
வடிவு உடை வாள் நெடும் கண் உமைபாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்க்,
கடி கமழ் மாமலர் இட்டுக்,
கறை மிடற்றான் அடிகாண்போம் 1

அரைகெழு கோவண ஆடையின்மேல் ஓர்
ஆடு அரவம் அசைத்து, ஐயம்
புரை கெழு வெண்தலை ஏந்திப்,
போர் விடை ஏறிப் புகழ,
வரை கெழு மங்கையது ஆகம் ஓர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்,
விரை கமழ் மாமலர் தூவி,
விரிசடையான் அடி சேர்வோம். 2

---

1. பொடி - திருநீறு. வாள் நெடும் கண் - ஒளி பொருந்திய நீண்ட கண், கூர்மையாக நோக்க வல்ல நீண்ட கண். கடி - மணம்.

2. அசைத்து - கட்டி. ஐயம் - பிச்சை. புரை - துளை. கெழு - பொருந்திய. விரை - மணம்.

"பூண் நெடுநாகம் அசைத்து, அனல் ஆடிப்,
புன்தலை அங்கையில் ஏந்தி,
ஊண் இடு பிச்சை, ஊர் ஐயம்
உண்டி" என்று பல கூறி,
வாள் நெடும் கண் உமை மங்கை ஓர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்த்,
தாள் நெடு மாமலர் இட்டுத்,
தலைவன தாள் நிழல் சார்வோம். 3

"தார் இடு கொன்றை, ஓர் வெண்மதி, கங்கை,
தாழ் சடைமேல் அவை சூடி,
ஊர் இடு பிச்சைகொள் செல்வம்
உண்டி" என்று பல கூறி,
வார் இடு மென்முலை மாது ஒரு பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்க்,
கார் இடு மாமலர் தூவிக்,
கறை மிடற்றான் அடி காண்போம் 4

---

3. நெடு நாகம் பூண் அசைத்து - நாகத்தை அணியாகக் கட்டி. ஊர் இடு பிச்சை ஊண், ஊர் (இடும்) ஐயம் உண்டி என்று இவ்வாறு பல தடவை சொல்லிக் கொண்டு. தாள் - காம்பு, நெடும்தாள் மா மலர் என்க. தலைவன தாள் - தலைவனின் இரண்டு திருவடிகள்.

4. தார் - மாலை. வார் - ச்சு (மார்பில் அணிவது) கார் - கார் காலம்.

"கன மலர்க் கொன்றை அலங்கல் இலங்கக்,
காதில் ஓர் வெண் குழையோடு,
புனை மலர் மாலை புனைந்து, ஊர்
புகுதி" என்றே பலகூறி;
வனமுலை மாமலை மங்கை ஓர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்,
இன மலர் ஏய்ந்தன தூவி,
எம்பெருமான் அடி சேர்வோம். 5

"அளைவளர் நாகம் அசைத்து, அனல் ஆடி,
அலர்மிசை அந்தணன் உச்சிக்
களைதலையில் பலி கொள்ளும்,
கருத்தனே! கள்வனே!" என்று
வளைஒலி முன்கை மடந்தை ஓர்பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்த்,
தளை அவிழ் மாமலர் தூவித்,
தலைவன் தாள்இணை சார்வோம். 6

---

5. கனம் - பொன், பெருமை. அலங்கல் - மாலை. புகுதி - புகுவாய். வன - அழகிய, வனப்பு உடைய. ஏய்ந்தன - பொருந்துவன.

6. அளை - புற்று. அலர் மிசை அந்தணன் - மலர் மேல் வீற்றிருக்கும் நான்முகன். உச்சிக் களை தலை - ஐந்தாவதாக உச்சியில் இருந்ததும் சிவ பெருமானால் கிள்ளிக் களையப்பட்டதுமான நான் முகனது தலை யோடு. கருத்தன் - எல்லாத் தொழிலை யும் தானே செய்யும் முதல்வன், தலைவன். வளை ஒலி - வளையல் ஒலிக்கும். தளை - கட்டுடைய மொட்டு.

"அடர் செவி வேழத்தின் ஈர்உரி போர்த்து,
அழிதலை அங்கையில் ஏந்தி,
உடல் இடு பிச்சையோடு ஐயம்
உண்டி" என்று பல கூறி,
மடல் நெடு மாமலர்க் கண்ணிஓர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்த்,
தடமலர் ஆயின தூவித்
தலைவன தாள்நிழல் சார்வோம். 7

"உயர் வரை ஒல்க எடுத்த அரக்கன்
ஒளிர் கடகக்கை அடர்த்து,
அயல் இடு பிச்சையோடு ஐயம்
ஆர்தலை" என்று அடி போற்றி,
வயல் விரிநீல நெடும் கணிபாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்ச்,
சயவிரி மாமலர் தூவித்,
தாழ் சடையான் அடி சார்வோம். 8

---

7. அடர் செவி - தகடுபோல் பரந்த செவி. வேழம் - ஆண் யானை. அழி தலை - உடம்பிலிருந்து நீக்கப்பட்ட தலை. உடல் இடு பிச்சை - தன் வசம் இழந்த நிலையில் இட்ட பிச்சை. மடல் - அகன்ற இதழ். தட - பெரிய.

8. உயர் வரை ஒல்க - உயர்ந்த கயிலைமலை அசையுமாறு. ஒளிர் - ஒளி வீசும். கடகம் - கை வளை. ஆர்தல் - உண்டல். வயல் விரி - வயலிடத்து விரிந்த.

" கரியவன் நான்முகன் கைதொழுது ஏத்தக்,
காணுலும் சாரலும் ஆகா
எரிஉரு ஆகி, ஊர் ஐயம்
இடுபலி உண்ணி " என்று ஏத்தி,
வரி அரவு அல்குல் மடந்தை ஓர்பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்,
விரிமலர் ஆயின தூவி,
விகிர்தன் சேவடி சேர்வோம். 9

" குண்டு அமணர், துவர்க் கூறைகள் மெய்யில்
கொள்கையினுர் புறம் கூற,
வெண் தலையில் பலி கொண்டல்
விரும்பினை " என்று விளம்பி,
வண்டு அமர் பூங்குழல் மங்கை ஓர்பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்,
தொண்டர்கள் மாமலர் தூவத்,
தோன்றி நின்ருன் அடிசேர்வோம். 10

---

9. கரியவன் - திருமால். காணலும் சாரலும் ஆகா - காணவும் சேரவும் முடியாத. பலி உண்ணி - பிச்சையை உண்பவன். வரி அரவு - வரிகளோடு கூடிய பாம்பின் படம். அல்குல் - அடிவயிறு. விகிர்தன் - சமர்த்தனுடைய.

10. துவர்க் கூறை - காவி ஆடை. மெய்யில் கொள் கையினுர் - உடம்பில் போர்த்துக் கொள்ளும் ஒழுக்கத்தை உடையவர். அமர் - விரும்பும். தோன்றி நின்ருன் - எழுந்தருளியிருப்பவன்.

கல்உயர் மாக்கடல் நின்று முழங்கும்
கரைபொரு காழிஅம்மூதூர்
நல் உயர் நால்மறை நாவின்
நல்தமிழ் ஞானசம்பந்தன்,
வல்உயர் சூலமும் வெண்மழு வாளும்
வல்லவன் வாழ்கொளி புத்தூர்ச்,
சொல்லிய பாடல்கள் வல்லார்
துயர் கெடுதல் எளிது ஆமே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. கல் உயர் நின்று முழங்கும் மாக் கடல் - அலைகள் மலைபோல் உயர்ந்து முழங்கிவரும் இருண்ட பெரிய கடல். காழியமூதூர் - சீகாழியாகிய பழைமை யான நகரம். வல் - வலிமை.

1 : 41 திருப்பாம்புரம்

பண்: தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

சீர் அணி திகழ் திருமார்பில் வெண்நூலர்,
திரிபுரம் எரிசெய்த செல்வர்,
வார் அணி வனமுலை மங்கை ஓர் பங்கர்,
மான்மறி ஏந்திய மைந்தர்,
கார் அணி மணி திகழ் மிடறு உடை அண்ணல்,
கண்நுதல், விண்ணவர் ஏத்தும்
பார் அணி திகழ்தரு நான்மறையாளர்
பாம்புர நன்நகராரே. 1

கொக்கு இறகோடு கூவிளம் மத்தம்
கொன்றையொடு எருக்கு அணிசடையர்,
அக்கினொடு ஆமை பூண்டு அழகாக
அனல் அது ஆடும் எம் அடிகள்,
மிக்கநல் வேத வேள்வியுள் எங்கும்
விண்ணவர் விரைமலர் தூவப்,
பக்கம் பல்பூதம் பாடிட வருவார்,
பாம்புர நன்நகராரே. 2

சீர் அணி திகழ் - சிறப்பும் அழகும் விளங்குகின்ற. வார் - கச்சு. வன - வனப்பு உடைய. கார் - கருமை, அணி - அழகு; மிடறு - கழுத்து. கண்ணுதல்-நெற்றிக் கண்ணர்.

2. கூவிளம் - வில்வம். அக்கு - சங்குமணி. ஆமை - ஆமை ஓடு.

துன்னலின் ஆடை உடுத்து, அதன்மேல் ஓர்
சூறை நல் அரவு அது சுற்றிப்,
பின்னு வார் சடைகள் தாழ விட்டு ஆடிப்,
பித்தராய்த் திரியும் எம்பெருமான்,
மன்னும் மாமலர்கள் தூவிட நாளும்,
மாமலையாட்டியும் தாமும்
பன்னும் நால்மறைகள் பாடிட வருவார்,
பாம்புர நல்நகராரே. 3

துஞ்சும் நாள்துறந்து, தோற்றமும் இல்லாச்,
சுடர் விடு சோதி, எம்பெருமான்,
நஞ்சு சேர் கண்டம் உடைய என் நாதர்,
நள் இருள் நடம் செயும் நம்பர்,
மஞ்சு தோய் சோலை மாமயில் ஆட,
மாட மாளிகை தன்மேல் ஏறிப்,
பஞ்சுசேர் மெல் அடிப் பாவையர் பயிலும்
பாம்புர நல்நகராரே. 4

3. துன்னலின் ஆடை - கோவண ஆடை. சூறை நல்அரவு - சூறைக் காற்றுப் போலச் சீறும் தன்மையை உடைய பாம்பு. வார் - நீண்ட. மலையாட்டி - உமை.

4. துஞ்சும் நாள் - அழியும் காலம். துறந்து - இல்லாமல். கண்டம் - கழுத்து.

நதி அதன் அயலே நகுதலை மாலை,
நாள்மதி, சடை மிசை அணிந்து,
கதி அதுவாகக், காளி முன் காணக்,
கான்இடை நடம் செய்த கருத்தர்,
விதி அது வழுவா வேதியர் வேள்வி
செய்தவர் ஓத்து ஒலி ஓவாப்
பதி அது ஆகப், பாவையும் தாமும்,
பாம்புர நல்நகராரே. 5

ஓதி நன்கு உணர்வார்க்கு உணர்வு உடை ஒருவர்,
ஒளி திகழ் உருவம் சேர் ஒருவர்,
மாதினை இடமா வைத்த எம் வள்ளல்,
மான்மறி ஏந்திய மைந்தர்,
" ஆதி, நீ அருள் ! " என்று அமரர்கள் பணிய,
அலைகடல் கடைய அன்று எழுந்த
பாதி வெண்பிறை சடை வைத்த எம்பரமர்,
பாம்புர நல்நகராரே. 6

---

5. நதி - கங்கை ஆறு. நாள்மதி - ஒருநாள் பிறை. மிசை - மேல். ஓத்து - ஓதப்படும் வேதம். ஓவா - இடையறாத.

6. உணர்வு உடை ஒருவர் - அந்த உணர்வில் நின்று விளங்கும் ஒப்பற்ற ஒருவர். ஆதி - முதல்வன்;

மாலினுக்கு அன்று சக்கரம் ஈந்து,
மலரவற்த ஒருமுகம் ஒழித்து,
ஆலின் கீழ் அறம் ஓர் நால்வருக்கு அருளி,
அனல் அது ஆடும் எம் அடிகள்,
காலனைக் காய்ந்து தம் கழல் அடியால்,
காமனைப் பொடிபட நோக்கிப்,
பாலனுக்கு அருள்கள் செய்த எம் அடிகள்
பாம்புர நல்நகராரே. 7

விடைத்த வல்அரக்கன் வெற்பினை எடுக்க,
மெல்லிய திருவிரல் ஊன்றி
அடர்த்து, அவன் தனக்கு அன்று அருள் செய்த அடிகள்,
அனல்அது ஆடும் எம் அண்ணல்,
மடக்கொடி அவர்கள் வருபுனல் ஆட,
வந்து கிழி அரிசிலின் கரைமேல்,
படப்பையில் கொணர்ந்து பருமணி சிதறும்
பாம்புர நல்நகராரே. 8

---

7. மலரவன் - நான்முகன். ஒரு முகம் ஒழித்து - இருந்த தலைகள் ஐந்தில் உச்சித்தலையைக் கிள்ளி எடுத்து, நால்வர் - சனற்குமாரர் முதலான முனிவர்: நால்வர்: சனற்குமாரர், சனுதனர்; சனகர், சனந்தனர் பாலன் - மார்க்கண்டன்.

8. விடைத்த - செருக்கால் வேறுபட்ட. வெற்பு-மலை (கயிலை). அடர்த்து - அழுத்தி. மடக் கொடி அவர்கள் - மடப்பம் பொருந்திய கொடி போன்ற இடையை உடைய பெண்கள், வரு புனல் - புதுப்புனல் படப்பை - தோட்டம்.

கடிபடு கமலத்து அயனொடு மாலும்
காதலோடு அடிமுடி தேடச்,
செடிபடு வினைகள் தீர்த்து அருள் செய்யும்
தீவணர், எம்உடைச் செல்வர்,
முடிஉடை அமரர், முனி கணத்தவர்கள்,
முறைமுறை அடிபணிந்து ஏத்தப்,
படி அதுவாகப் பாவையும் தாமும்
பாம்புர நல்நகராரே. 9

குண்டர், சாக்கியரும், குணம் இலாதாரும்,
குற்று விட்டு உடுக்கையர் தாமும்,
கண்டவாறு உரைத்துக், கால்நிமிர்த்து உண்ணும்
கையர்தாம் உள்ளவாறு அறியார்,
வண்டுசேர் குழலி மலைமகள் நடுங்க
வாரணம் உரிசெய்து போர்த்தார்,
பண்டுநாம் செய்த பாவங்கள் தீர்ப்பார்
பாம்புர நல்நகராரே. 10

---

9. கடி படு-மணம் பொருந்திய. கமலம்-தாமரை மலர். காதல் - விருப்பம். செடிபடு வினை - குற்றம் உடைய வினைகள். அமரர் - தேவர்கள். படி-முறைமை.

10. குண்டர் - சமணர். சாக்கியர் - புத்தர். குற்றுவிட்டு உடுக்கையர் - மிகச் சிறிய ஆடையை உடையவர். கண்டவாறு - மனத்திற்குத் தோன்றிய படியெல்லாம். கால் நிமிர்த்து - நின்று கொண்டு. கையர் - தொழிலை உடையவர், சிறியோர். உள்ள வாறு-உண்மை இயல்பு. குழலி - கூந்தலை உடையாள். வாரணம் - யானை.

பார்மலிந்து ஓங்கிப் பருமதில் சூழ்ந்த
பாம்புர நல் நகராரைக்
கார்மலிந்து அழகுஆர் கழனிசூழ் மாடக்
கழுமல முதுபதிக் கவுணி,
நார்மலிந்து ஓங்கும் நால்மறைஞான
சம்பந்தன் செந்தமிழ் வல்லார்-
சீர்மலிந்து அழகுஆர் செல்வம் அதுஓங்கிச்
சிவன் அடி நண்ணுவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

11. பார் - நிலம். கார் - மழை ; பசுமை நிறம்; கழனி - வயல். கவுணி - கவுணியர் குலத் தோன்றல் திருஞானசம்பந்தர்.

1 : 42 திருப்பேணு பெருந்துறை

பண்: தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

பைம் மாநாகம், பன்மலர்க் கொன்றை,
பன்றி வெண் கொம்புஒன்று, பூண்டு,
செம்மாந்து, "ஐயம் பெய்க!" என்று சொல்லிச்
செய்தொழில் பேணியோர் செல்வர்,
அம்மான் நோக்குஇயல், அம்தளிர் மேனி,
அரிவை-ஓர் பாகம் அமர்ந்த
பெம்மான், நல்கிய தொல் புகழாளர்,
பேணு பெருந்துறையாரே. 1

மூவரும் ஆகி, இருவரும் ஆகி,
முதல்வனுமாய் நின்ற மூர்த்தி,
பாவங்கள் தீர்தர நல்வினை நல்கிப்,
பல்கணம் நின்று பணியச்,
சாவம் அது ஆகிய மால்வரை கொண்டு
தண்மதில் மூன்றும் எரித்த
தேவர்கள் தேவர், எம்பெருமானார்,
தீது இல் பெருந்துறையாரே. 2

---

1. பை - படம். செம்மாந்து - பெருமிதத்தோடு. பெய்க - இடுக. அம் - அழகிய.

2. மூவர் - அயன், அரி, அரன். இருவர் - சிவம், சத்தி. முதல்வன் - பரசிவம். சாவம் - வில்: மால்வரை - மேருமலை.

செய் பூங்கொன்றை, கூவிள மாலை
சென்னியுள் சேர்புனல் சேர்த்திக்
கொய் பூங்கோதை மாது உமை வேடர்
கூடி,ஓர் பீடுஉடை பாகம்
கைபோல் நான்ற கனிகுலை வாழை,
காய் குலைஇன் கமுகு - ஈனப்,
பெய் பூம்பாளை பாய்ந்து இழி தேறல்
பில்கு பெருந்துறையாரே. 3

நிலனொடு வானும் நீரொடு தீயும்
வாயுவும் ஆகி, ஓர் ஐந்து
புலனொடு வென்று, பொய்ம்மைகள் தீர்ந்த
புண்ணியர், வெண்பொடிப் பூசி,
நலனொடு தீங்கும் தான் அலது இன்றி,
நன்கு எழு சிந்தையர் ஆகி,
மலன் ஒடு மாசும் இல்லவர் வாழும்
மல்கு பெருந்துறையாரே. 4

---

3. செய் மாலை என இயைக்க. சென்னி - தலை: சேர்புனல் - வானிலிருந்து வந்தடைந்த. பீடு - பெருமை: நான்ற - தொங்கிய. தேறல் - தேன்: பில்குதல் - மிகுதல்.

4. நிலன் வான் நீர் தீ வாயு - ஐந்து பூதங்கள். ஐந்து புலன் - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்து. மலன் - ஆணவமலம். மாசு - வினையும் மாயையும்.

பணிவாய் உள்ள நன்குஎழு நாவின்
பத்தர்கள் பத்திமை செய்யத்,
துணியார்; தங்கள் உள்ளம் இலாத
சுமடர்கள், சோதிப்ப அரியார்;
அணிஆர் நீலம் ஆகிய கண்டர்,
அரிசில் உரிஞ்சு கரைமேல்
மணிவாய் நீலம் வாய் கமழ் தேறல்
மல்கு பெருந்துறையாரே. 5

எண்ணார் தங்கள் மும்மதில் வேவ
ஏ வலம் காட்டிய எந்தை,
விண்ணோர் சாரத் தன்அருள் செய்த
வித்தகர், வேத முதல்வர்,
பண் ஆர் பாடல் ஆடல் அறாத,
பசுபதி, ஈசன், ஓர்பாகம்
பெண் ஆண் ஆய வார்சடை அண்ணல்,
பேணு பெருந்துறையாரே. 6

---

5. துணியார் - அவரை விட்டும் நீங்கார் உள்ளம்இலாத சுமடர் - அன்பு இல்லாத அறிவற்றவர். சோதிப்ப அரியார் - ஆராய்ந்து காண்டற்கு அகப் படாதவர். அணி - அழகு. கண்டர் - கழுத்தை உடையவர். அரிசில் - அரிசில் ஆறு. உரிஞ்சு - உராய்ந்து செல்லும். மணிவாய் நீலம் - நீல மணி போன்ற நீலமலர். தேறல் - தேன்.

6. எண்ணார் - சிவன் பெருமையை உணராத திரிபுரத் தலைவர்கள். ஏ வலம் - அம்பின் வலிமையை. சார - வந்தடைய. பாடல் ஆடல் அறாத பெருந்துறை என இயைக்க.

விழையார் உள்ளம் நன்கு எழு நாவில்
வினைகெட, வேதம் ஆறு அங்கம்
பிழையா வண்ணம் பண்ணிய ஆற்றல்,
பெரியோர் ஏத்தும் பெருமான்,
தழை ஆர் மாவின் தாழ்கனி உந்தித்,
தண் அரிசில் புடை சூழ்ந்த,
குழை ஆர் சோலை மெல்நடை அன்னம்
கூடு பெருந்துறையாரே 7

பொன் அம்கானல் வெண்திரை சூழ்ந்த
பொருகடல் வேலி இலங்கை
மன்னன் ஒல்க மால்வரை ஊன்றி,
மாமுரண் ஆகமும் தோளும்
முன்அவை வாட்டிப், பின் அருள் செய்த,
மூஇலை வேல்உடை மூர்த்தி,
அன்னம் கன்னிப் பேடையொடு ஆடி
அணவு பெருந்துறையாரே. 8

---

7. விழை ஆர் - விருப்பம் நிறைந்த. தாழ் கனி-தாழ்ந்து தொங்கும் பழம். குழை - தளிர். அன்னம் சோலை கூடும் பெருந்துறை என்க.

8. பொன் - அழகு. கானல் - கடற்கரைச் சோலை. திரை – அலை. பொரு கடல் - கரையை மோதும் கடல். கடல் வேலி இலங்கை - கடலை நீர் அரணுகக் கொண்ட இலங்கை. ஒல்க - அழுந்த. மால் வரை – பெரிதான கயிலை மலை. மா முரண் ஆகம் - மிக்க வலிமை பொருந்திய மார்பு. முன் - தொடக்கத்தில். பின் - அரக்கன் உணர்ந்து அடங்கித் துதித்த பின். மூ இலை வேல் - சூலப்படை. அணவுதல் - தழுவியிருத்தல்.

புள்வாய் போழ்ந்து மாநிலம் கீண்ட
பொருகடல் வண்ணனும், பூவின்
உள்வாய் அல்லி மேல் உறைவானும்
உணர்வு அரியான், உமை கேள்வன்,
முள்வாய் தாளின் தாமரை மொட்டு இன்
முகம் மலரக், கயல் பாயக்,
கள்வாய் நீலம் கண்மலர் ஏய்க்கும்
காமர் பெருந்துறையாரே. 9

குண்டும் தேரும், கூறை களைந்தும்,
கூப்புஇலர் செப்புஇலர் ஆகி,
மிண்டும் மிண்டர் மிண்டவை கண்டு
மிண்டு செயாது விரும்பும்!
தண்டும், பாம்பும், வெண்தலை, சூலம்-
தாங்கிய தேவர் தலைவர்,
வண்டும் தேனும் வாழ்பொழில் சோலை
மல்கு பெருந்துறையாரே. 10

---

9. புள் - கொக்காகிய பறவை. போழ்ந்து - பிளந்து. நிலம் கீண்ட - பன்றியாய் நிலத்தைக் கிளறிய. அல்லி - அக இதழ். உறைவான் - நான்முகன். முள் வாய்தாள் - முள்ளை உடைய தண்டு. கள் - தேன். கண் மலர் - கண்ணாகிய மலர். ஏய்க்கும் - ஒக்கும்.

10. குண்டும் தேரும் - குண்டரும் தேரரும், சமணரும் புத்தரும். கூறை - ஆடை. களைந்தும் - நீக்கியும். கூப்பு இலர் – கை கூப்பி வணங்கார். செப்பு இலர் – நாவால் துதித்திலர். மிண்டர் - குறும்பு செய்பவர். மிண்டு - குறும்பு. தண்டு - ஒரு கருவி. தேன் - வண்டின் வகை.

கடைஆர் மாடம் நன்கு எழு வீதிக்
கழுமல ஊரன், கலந்து
நடைஆர் இன்சொல் ஞான சம்பந்தன்,
நல்ல பெருந்துறை மேய
படை ஆர் சூலம் வல்லவன் பாதம்
பரவிய பத்து இவை வல்லார்—
உடையார் ஆகி, உள்ளமும் ஒன்றி,
உலகினில் மன்னுவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. கடை - வாயில். மன்னுவர் - நீண்டகாலம் வாழ்வார்.

1 ; 43 திருக்கற்குடி

பண் : தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

வடம்திகழ் மென்முலையாளைப்
பாகம் அது ஆக மதித்துத்,
தடம்திரை சேர் புனல் மாதைத்
தாழ்சடைட் வைத்த சதுரர்,
இடம்திகழ் முப்புரி நூலர்,
துன்பமொடு இன்பம் அது எல்லாம்
கடந்தவர், காதலில் வாழும்
கற்குடி மாமலை யாரே. 1

அங்கம் ஓர் ஆறுடு, ஐவேள்வி,
ஆன அரும்மறை நான்கும்,
பங்கம் இல் பாடலோடு ஆடல்
பாணி பயின்ற படிறர்,
சங்கம் அது ஆர் குறமாதர்தம்
கையின் மைந்தர்கள் தாவிக்
கங்குலின மாமதி பற்றும்
கற்குடி மாமலை யாரே. 2

---

1. வடம் - கச்சு. தடம் - பெரிய. திரை - அலை: புனல் மாது - கங்கையாகிய பெண்.

2. பங்கம் - குற்றம். பாணி - தாளம். படிறர் - கள்ளம் உடையவர். சங்கம் - சங்கு வளையல். தாவி - துள்ளி. கங்குல் - இரவு.

நீர் அகலம் தரு சென்னி
நீடிய மத்தமும் வைத்துத்,
தாரகையின் ஒளி சூழ்ந்த
தண்மதி சூடிய சைவர்,
போர் அகலம் தரு வேடர்
புனத்து இடை இட்ட விறகில்
கார் அகிலின் புகை விம்மும்
கற்குடி மாமலையாரே. 3

"ஒருங்குஅளி, நீ, இறைவா!" என்று
உம்பர்கள் ஓலம் இடக்கண்டு,
இரும்களம் ஆர, விடத்தை
இன் அமுது உண்ணிய ஈசர்,
மருங்கு அளிஆர் பிடி வாயில்
வாழ் வெதிரின் முளைவாரிக்
கரும்களி யானை கொடுக்கும்
கற்குடி மாமலையாரே. 4

---

3. நீர் அகலம் தரு சென்னி - கங்கை சூடிய திருமுடி. தாரகை - விண்மீன். போர் அகலம் தரு வேடர் - போர் செய்யத்தக்க மார்பினை உடைய வேடர்கள். விம்மும் - மிகுந்து எழும்.

4. அளி - அருள் செய்க!. உம்பர் - வானவர். இரும் களம் ஆர - பெரிதான கழுத்து நிறைய. இன் அமுது உண்ணிய - இனிய அமுதாக உண்ட. மருங்கு - பக்கம். அளி ஆர் பிடி - அன்பு நிறைந்த பெண்யானை. வெதிர் - மூங்கில். கரும் களி யானை - கரிய நிறம் உடைய மகிழ்ச்சி பொருந்திய யானை.

போர்மலி திண்சிலை கொண்டு,
பூத கணம் புடை சூழப்,
பார்மலி வேடு உருவாகிப்,
பண்டு ஒருவர்க்கு அருள் செய்தார்,
ஏர்மலி கேழல் கிளைத்த
இன்ஒளி மாமணி எங்கும்
கார்மலி வேடர் குவிக்கும்
கற்குடி மாமலையாரே. 5

உலந்தவர் என்புஅது அணிந்தே,
ஊர்இடு பிச்சையர் ஆகி,
விலங்கல்வில் வெம்கனலாலே
மூ எயில் வேவ முனிந்தார்,
நலம்தரு சிந்தையர் ஆகி,
நாமலி மாலையினாலே
கலந்தவர் - காதலில் வாழும்
கற்குடி மாமலையாரே. 6

---

5. போர் மலி - போரில் வல்ல. சிலை - வில். பார் - உலகம். மலி வேடு உரு - சிறந்தது ஒரு வேட்டுவ உருவம். ஒருவர்க்கு - அர்ச்சுனர்க்கு. ஏர் - எழுச்சி, அழகு. கேழல் - ஆண் பன்றி. இன் ஒளி - கண்ணுக்கு இனிதான ஒளி. கார் - கருநிறம்.

6. உலந்தவர் - இறந்தவர். என்பு - எலும்பு; பிச்சையர் - பிச்சை ஏற்பவர். விலங்கல் - மலை. வெம் கனல் - வெம்மை மிக்க தீ.

மான் இடம் ஆர் தரு கையர்,
மா மழு ஆரும் வலத்தார்,
ஊன் இடை ஆர் தலைஓட்டில்
உண்கலனாக உகந்தார்,
தேன் இடை ஆர்தரு சந்தின்
திண்சிறையால் தினை வித்திக்
கான்இடை வேடர் விளைக்கும்
கற்குடி மாமலையாரே. 7

வாள்அமர் வீரம் நினைந்த
இராவணன், மாமலையின் கீழ்த்,
தோள்அமர் வன்தலை குன்றத்
தொல்விரல் ஊன்று துணைவர்,
தாள்அமர் வேய்தலை பற்றித்
தாழ் கரி விட்ட விசைபோய்க்
காளம்அது ஆர்முகில் கீறும்
கற்குடி மாமலையாரே. 8

---

7. இடம் - இடப்பக்கம். வலத்தார் - வலிமையை உடையவர். உண் கலம் - உணவுப் பாத்திரம். உகந்தார் - விரும்பியவர். சந்து - சந்தனம். சந்தின் திண் சிறை - சந்தனமரங்கள் சுற்றிலும் பாதுகாப்பாக அமைந்த நடு இடத்தில். தினை வித்தி - தினையை விதைத்து. கான் - காடு.

8. வாள் அமர் - வாளால் செய்யும் போர். வன் தலை - வலிமையான தலை. குன்ற - நசுங்க. துணைவர் - என்றும் உயிர்களுக்குத் தோன்றாத் துணையாயிருப்பவர். தாள் - அடி. வேய் - மூங்கில் கரி - யானை. காளம் - கருநிறம். முகில் - மேகம்.

தண்டு அமர் தாமரையானும்,
தாவி இம் மண்ணை அளந்து
கொண்டவனும் அறிவொண்ணாக்
கொள்கையர், வெள்விடை ஊர்வர்,
வண்டு இசை ஆயின பாட,
நீடிய வார் பொழில் நீழல்
கண்டு அமர் மாமயில் ஆடும்
கற்குடி மாமலையாரே. 9

மூத் துவர் ஆடையினரும்
மூசு கடுப்பொடி யாரும்
நாத் துவர் பொய்ம் மொழியார்கள்,
நயம் இலரா மதி வைத்தார்,
ஏத்து உயர் பத்தர்கள் சித்தர்
இறைஞ்ச, அவர் இடர் எல்லாம்
காத்தவர், காமரு சோலைக்
கற்குடி மாமலையாரே. 10

---

9. மண்ணை அளந்து கொண்டவன் - திருமால். அறிவொண்ணா - அறிய முடியாத. அமர் – விரும்பி.

10. மூத் துவர் ஆடையினர் - முதிர்ந்த காவி தோய்த்த ஆடையை உடைய சமணர். மூசு - நிறைந்த. கடுப் பொடி - கடுக்காய்த் துவர்ப் பொடி. நா துவர் பொய்ம் மொழி - நாவிற்கு வெறுப்பைத் தரும் பொய்ச் சொல். நயம் - நன்மை. மதி - அறிவு. காத்தவர் - தடுத்தவர். காமரு - அழகிய.

காமரு வார்பொழில் சூழும்
கற்குடி மாமலையாரை
நாமரு வண்புகழ்க் காழி
நலம்திகழ் ஞானசம்பந்தன்
பாமரு செந்தமிழ் மாலை
பத்து இவை பாட வல்லார்கள்
பூமலி வானவ ரோடும்
பொன் உலகில் பொலிவாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. வார் - நீண்ட. வண் புகழ் - வளமான புகழ். பூ மலி வானவர் - கற்பக மலர் சிறந்த வானுலகத்தவர். பொன் உலகம் - தேவருலகம்.

1 : 44 திருப்பாச்சில் ஆச்சிராமம்

பண் ; தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச் சடை சுற்றி முடித்துப்,
பணி வளர்கொள்கையர் பாரிடம் சூழ
ஆர் இடமும் பலி தேர்வர்,
அணிவளர் கோலம் எலாம் செய்து, பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற,
மணிவளர் கண்டரோ, மங்கையை வாட,
மயல் செய்வதோ, இவர் மாண்பே! 1

---

1. துணி - துண்டம், கீற்று. இங்குப் பிறை மதி. துளங்கி - அசைந்து, பணி - பாம்பு. வளர் கொள் - வளர் தலைக் கொள்ளும், கையர் - கைகளை உடையவர். பாரிடம் - பூதம். ஆர் இடமும் - யாவரிடத்தும். மங்கை - கொல்லி மழவனது மகள் என்பது வரலாறு. பெருமானை அடையக் காமுற்றாள் ஒரு பெண் எனினும் ஆம். மயல் - மயக்கம்.

"கலை புனை மான் உரி; தோல் உடை ஆடை;
கனல் சுடர் ஆல் இவர் கண்கள்;
தலை அணி சென்னியர்; தார் அணி மார்பர்;
தம் அடிகள் இவர்" என்ன,
அலை புனல் பூம் பொழில் சூழ்ந்து அமர் பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற,
இலை புனை வேலரோ, ஏழையை வாட,
இடர் செய்வதோ, இவர் ஈடே! 2

வெம் சுடர் ஆடுவர், துஞ்சு இருள்; மாலை
வேண்டுவர்; பூண்பது வெண்நூல்;
நஞ்சு அடை கண்டர்; நெஞ்சு இடமாக
நண்ணுவர் நம்மை நயந்து;
மஞ்சு உடை மாளிகை சூழ்தரு பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற,
செம்சடை வண்ணரோ, பைந்தொடி வாடச்,
சிதைசெய்வதோ, இவர் சீரே! 3

---

2. மான் உரி - மான்தோல். புனை கலை - மேலே அணியும் ஆடை. தோல் உடை, ஆடை - யானைத் தோல் உடுத்தும் ஆடை. கனல் சுடர் - எரியும் தீ. ஆல் - அசைச் சொல். தலை - இறந்தார் தலை ஓடு. சென்னி - திருமுடி. தார் - மாலை. தம் அடிகள் - தம்மை உடையவர். இலை புனை வேலர் - இலை வடிவில் அமைந்துள்ள வேற்படையை உடையவர். ஏழை - பெண். ஈடு - பெருமை.

3. துஞ்சு இருள் வெம் சுடர் ஆடுவர் என்க. துஞ்சு இருள் - தோன்றிய எல்லாம் ஒடுங்கிநிற்கும் ஊழிக்காலம் ஆகிய இருள். வெம் சுடர் ஆடுவர் -

" கனம் மலர்க் கொன்றை அலங்கல் இலங்கக்,
கனல்தரு தூமதிக் கண்ணி,
புனமலர் மாலை அணிந்து, அழகாய
புனிதர்கொலாம் இவர்'' என்ன,
வனம் மலி வண் பொழில் சூழ்தரு பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற,
மனம் மலி மைந்தரோ மங்கையை வாட,
மயல் செய்வதோ, இவர் மாண்பே! 4

கடுமையான தீயாய் நின்று ஆடுவார். மாலை வேண்டுவர் - மாலையை விரும்புவார். கண்டர் - கழுத்தினை உடையவர். நெஞ்சு இடமாக நயந்து நம்மை நண்ணுவர் - நம் நெஞ்சினைத் தமக்கு எழுந்தருளும் இடமாக விரும்பி நம்மை நெருங்குவார். மஞ்சு - மேகம். பைந் தொடி - அழகிய செறிந்த வளை அணிந்துள்ள பெண். சிதை செய்வது - வாடச் செய்வது.

4. கனம் - மேகம்: இங்குக் கார்காலம். கார் காலத்து மலரும் கொன்றை. அலங்கல் - மாலை. இலங்க - விளங்க. கனல் - ஒளி. தூமதிக் கண்ணி - தூய பிறைத் திங்களாகிய அடையாள மலர். புனம் - காடு. புனிதர் - மலமாசு நீண்டப் பெருதவர். வனம் மலி வண் பொழில் - காடுபோன்ற வளம் மிகுந்த சோலை. வனம் - அழகு எனவும் உரைப்பர். மனம் மலி மைந்தர் - நன் மனம் உடைய ஆண்மை சிறந்தவர். மாண்பு – பெருமை.

மாந்தர்தம் பால், நறு நெய் மகிழ்ந்து ஆடி,
வளர் சடைமேல் புனல் வைத்து,
மோந்தை, முழாக், குழல், தாளம், ஓர் வீணை,
முதிர, ஓர் வாய்மூரி பாடி,
ஆந்தை விழிச் சிறு பூதத்தர், பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற,
சாந்து அணி மார்பரோ, தையலை வாடச்
சதுர் செய்வதோ, இவர் சார்வே! 5

நீறு மெய்பூசி, நிறைசடை தாழ,
நெற்றிக் கண்ணால் உற்று நோக்கி,
ஆறுஅது சூடி, ஆடுஅரவு ஆட்டி,
ஐவிரல் கோவண ஆடை,
பால்தரு மேனியர், பூதத்தார், பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற,
ஏறுஅது ஏறியர், ஏழையை வாட
இடர் செய்வதோ, இவர் ஈடே. 6

---

5. மோந்தை - மொந்தை - ஒரு கண் பறை. முதிர - ஒலிக்க. வாய் மூரி - ஆந்தை விழி போன்ற கண்களை உடைய சிறு பூதங்கள் என்க. சதுர் - திறமை

6. ஆறு - கங்கையாறு. பால்தரு மேனியர் - திரு வெண்ணீற்றால் பால் போன்ற வெண்ணிறம் தோன்றும் திருமேனியை உடையவர். பால் என்றது பகுப்பு எனக் கொண்டு தாம் ஒரு பாகம், உமை ஒரு பாகம் ஆன பகுப்பினை உடையதான திருமேனியை உடையவர் என்றும் ஆம். ஏறு - எருது. ஏறியர் - ஏறிவருபவர்.

"பொங்கு இள நாகம், ஓர் ஏக வடத்தோடு,
ஆமை, வெண்நூல், புனை கொன்றை,
கொங்கு இள மாலை புனைந்து அழகாய,
குழகர் கொலாம் இவர்" என்ன,
அங்கு இள மங்கை ஓர் பங்கினர், பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற,
சங்கு ஒளி வண்ணரோ, தாழ்குழல் வாடச்
சதிர் செய்வதோ இவர் சார்வே! 7

ஏவலத்தால் விசயற்கு அருள்செய்து,
இராவணனை ஈடு அழித்து,
மூவரிலும் முதல் ஆய் நடு ஆய
மூர்த்தியை அன்றி மொழியாள்,
யாவர்களும் பரவும், எழில் பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற,
தேவர்கள் தேவரோ, சேயிழை வாடச்
சிதை செய்வதோ, இவர் சேர்வே! 8

---

7. பொங்கு - சீறுதலைக் கொண்ட. ஏகவடம் - ஒற்றை ஆடை. ஆமை - ஆமை ஓடு. வெண்ணூல் - முப்புரிநூல். கொங்கு - தேன், மணம். குழகர் - இளையர். சங்கு ஒளிவண்ணர் - மேனி வெண்ணீறு காரணமாக சங்கின் ஒளி போன்ற வெண்ணிறம் பொருந்தியவர். சதிர் - சாமர்த்தியம், திறமை.

8. ஏ வலம் - அம்பின் திறம் அல்லது வல்லமை. விசயன் - அருச்சுனன். ஈடு - வலிமை. மூவர் - மும்மூர்த்திகள்.

"மேலது நான்முகன் எய்தியதில்லை;
கீழது சேவடி தன்னை
நீல்அது வண்ணனும் எய்தியதில்லை",
என இவர் நின்றதும் அல்லால்,
ஆல்அது மாமதி தோய் பொழில், பாச்சில்
ஆச்சிரமத்து உறைகின்ற
பால்அது வண்ணரோ, பைங்தொடி வாடப்
பழிசெய்வதோ, இவர் பண்பே! 9

நாணொடு கூடிய சாயினரேனும்,
நகுவர், அவர் இருபோதும்
ஊணொடு கூடிய உட்குநகையார்
உரைகள் அவை கொளவேண்டா!
ஆணொடு பெண் வடிவு ஆயினர்,பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
பூண் நெடு மார்பரோ, பூங்கொடி வாட்ப்
புனை செய்வதோ, இவர் பொற்பே! 10

---

9. மேலது - முடி, முடிவு. கீழது - அடி. தொடக்கம். நீலது வண்ணன் - நீலநிறத்தவன் ஆகிய திருமால், பாலது வண்ணர் - பால்வண்ணர்.

10. நாணொடு கூடிய சாயினர் - நாணம் முதலான நல்லகுணங்களை இழந்தவர்; நகுவர் - சிரிப்பிற்கு இடமானவர். உட்கு நகை - பிறர் அஞ்சத் தக்க சிரிப்பு.

''அகம் மலி அன்பொடு தொண்டர் வணங்க
ஆச்சிராமத்து உறைகின்ற,
புகை மலி மாலை புனைந்து அழகாய
புனிதர்கொலாம் இவர்'' என்ன,
நகை மலி தண்பொழில் சூழ்தரு காழி
நல்தமிழ் ஞானசம்பந்தன்
தகை மலி தண்தமிழ் கொண்டு இவைஏத்தச்,
சாரகிலா வினைதானே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. அகம் - உள்ளம். மலி அன்பு - மிகும் அன்பு. தகை - தகுதி.

1 : 45 திருஆலங்காடு

பண்: தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

துஞ்ச வருவாரும், தொழுவிப்பாரும், வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்து என்னை நினைவிப்பாரும், முனைநட்பாய்
வஞ்சப்படுத்து ஒருத்தி வாழ்நாள் கொள்ளும் வகைகேட்டு
அஞ்சும் பழையனூர் ஆலங்காட்டு அடிகளே. 1

கேடும் பிறவியும் ஆக்கினாரும், கேடுஇலா
வீடுமாநெறி விளம்பினார், எம் விகிர்தனார்,
காடும் சுடலையும் கைக்கொண்டு, எல்லிக், கணப்பேயோடு
ஆடும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே. 2

---

1. துஞ்ச வருவார் - உறக்கத்தின் இடையே கனவில் தோன்றியருள்பவர். தொழுவிப்பார் - தம்மைத் தொழுமாறு செய்பவர். வழுவிப் போய் - உயிரின் முனைப்புக் காரணமாக விளங்காது விலகி நின்று. முனை நட்பாய் - முன்னமேயே நட்புடையார் போலக் காட்டி. ஒருத்தி - பழைய நல்லூர் நீலி. வாணாள் கொள்ளும் வகை - தரிசனச் செட்டி என்றவனின் உயிரைக் கவரும் முயற்சி. அஞ்சும் பழையனூர் - தம்மிடம் அடைக்கலம் புகுந்த செட்டிக்கு உயிர்க் கேடு உண்டாகி விடக் கூடாதே என்று வேளாண் பெருமக்கள் அஞ்சிய இடமாகிய பழையனூர்.

2. கேடு - இறப்பு. கேடு இலா - அழிவில்லாத. வீடு மா நெறி - முத்தியடைதற்கான சிறந்த நெறி:

கந்தம் கமழ்கொன்றைக் கண்ணிசூடிக், கனல்ஆடி,
வெந்த பொடி நீற்றை விளங்கப் பூசும் விகிர்தனூர்,
கொந்துஅண் பொழில், சோலை, அரவின் தோன்றிக்
கோடல் பூத்த,
அம்தண் பழையனூர் ஆலங்காட்டுஎம் அடிகளே. 3

பாலமதி சென்னி படரச்சூடிப், பழி ஓராக்
காலன் உயிர் செற்ற காலன்ஆய கருத்தனூர்,
கோலம் பொழில், சோலைப் பெடையோடு ஆடி
மடமஞ்ஞை
ஆலும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே. 4

விளம்பினூர் - சொன்னவர். எல்லி - இரவு. கணப் பேய் - கூட்டமாகிய பேய்கள். பேய்க் கணம் - பேய்க் கூட்டம்.

3. கந்தம் கமழ் - மணம் வீசும். கொந்து அண் பொழில் - பூக்கொத்துக்கள் செறிந்துள்ள சோலை; கோடல் அரவின் தோன்றிப் பூத்து - செங்காந்தள் மலர் பாம்பின் தோற்றத்தோடு பூத்து. அம் தண் - அழகிய குளிர்ந்த.

4. பால மதி - இளந்திங்கள், பிறை மதி. சென்னி - தலை; படர - ஒளி விளங்க, வளர்ச்சியுற. பழி - சிவவழிபாடு செய்வார் உயிரைக் கவர்வதால் தனக்கு வரும் பெருங் குற்றத்தை. ஓரா - நினையாத. காலன் - எமன். காலன் - காலை உடையவன். கருத்தனூர் - எல்லாவற்றையும் தொழிற்படுத்தும் தலைவனூர். கோல - அழகு. பெடை - பெண். ஆலும் - ஆரவாரிக்கும்.

ஈர்க்கும் புனல்சூடி, இளவெண் திங்கள் முதிரவே
பார்க்கும் அரவம் பூண்டுஆடி, வேடம் பயின்றாரும்,
கார்க்கொள் கொடிமுல்லை குருந்தம்ஏறி, கரும்தேன்
மொய்த்து,
ஆர்க்கும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே. 5

பறையும் சிறுகுழலும் யாழும் பூதம் பயிற்றவே,
மறையும் பல பாடி, மயானத்து உறையும் மைந்தனார்,
பிறையும் பெரும்புனல் சேர் சடையினாரும், பேடைவண்டு
அறையும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே. 6

---

5. ஈர்க்கும் புனல் - தன்னிடம் அகப்பட்ட வற்றையெல்லாம் இழுத்துவரும் வேகத்தை உடைய நீராகிய கங்கை. முதிர - வளர. வேடம் பயின்றார் - உயிர்களுக்கு ஆக்கம் கருதி அதற்காகச் செயல் புரியும் அருள் திரு மேனிகளை மீண்டும் மீண்டும் மேற் கொண்டவர். கார் கொள் - கார் காலத்தில் மலரும். குருந்தம் - குருந்த மரம். ஏறி - மேலே பற்றிப் படர்ந்து, கரும் தேன் - கரு நிற வண்டு. ஆர்க்கும் - மிகுதியாக ஒலிக்கும்.

6. மைந்தனார் - அனைத்தையும் அழித்துவிட்டுத் தான் மட்டும் அழிவில்லாத பேராற்றலை உடையவர். பெரும் புனல் - கங்கை. அறையும் - ஒலிக்கும்.

நுணங்கு மறைபாடி, ஆடி, வேடம் பயின்ருரும்,
இணங்கும் மலைமகளோடு இருகூறு ஒன்ருய் இசைந்
தாரும்,
வணங்கும் சிறுத்தொண்டர் வைகல் ஏத்தும் வாழ்த்தும்
கேட்டு,
அணங்கும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே. 7

கணையும் வரிசிலையும் எரியும் கூடிக் கவர்ந்து உண்ண,
இணை இல் எயில் மூன்றும் எரித்திட்டார் எம் இறைவனூர்,
பிணையும் சிறுமறியும் கலையும் எல்லாம் கங்குல் சேர்ந்து
அணையும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே. 8

---

7. நுணங்கும் மறை - சிந்திக்கச் சிந்திக்க. நுட்பமாகச் செல்லும் பொருளைக் கொண்டுள்ள வேதம். இணங்கும் - தம்மோடு பொருந்தும். இரு கூறு ஒன்ருய் இசைந்தார் - ஆணும் பெண்ணும் என்னும் இரண்டு கூறுகளும் ஒருருவில் அமைந்தவர். வைகல் - நாள் தோறும். ஏத்தும் வாழ்த்தும் - ஏத்துதலும் வாழ்த்துதலும். அணங்கும் - தெய்வத் தன்மை விளங்கும்.

8. கணை - அம்பு. வரி சிலை – இறுக்கிக் கட்டப் பட்ட வில். எரி - தீக்கடவுள். கவர்ந்து உண்ண - அழிக்குமாறு. இணை இல் எயில் - ஒப்பில்லாத மதில். பிணை - பெண் மான். மறி – மான் கன்று. கலை - ஆண் மான். கங்குல் - இரவு.

கவிழ மலை, தரளக் கடகக் கையால் எடுத்தான்தோள்
பவழ நுனை விரலால் பைய ஊன்றிப், பரிந்தாரும்,
தவழும் கொடி முல்லை புறவம் சேர, நறவம் பூத்து
அவிழும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே. 9

பகலும் இரவும் சேர் பண்பினரும், நண்பு ஓராது
இகலும் இருவர்க்கும் எரியாய்த் தோன்றி நிமிர்ந்தாரும்,
புகலும் வழிபாடு வல்லார்க்கு என்றும் தீயபோய்
அகலும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே. 10

---

9. மலை கவிழ என மாறுக. தரளக் கடகக் கை - முத்துவளை செறிந்த கை. பரிந்தார் - இரங்கி அருள் செய்தவர். புறவம் - முல்லை நிலக் காடு; நறவம் - குங்கும மரம் அல்லது மயிற்கொன்றை.

10. பகலும் இரவும் சேர் பண்பினர் - நிறத்தால் முறையே பகலும் இரவும் போன்ற நிறத்தை உடைய நான்முகனும் திருமாலும். பகலும் இரவும் ஓரிடத்தில் சேர்ந்தாற் போல முரண்பட்ட இருவர். நண்பு ஓராது இகலும் - தாம் தந்தையும் (மால்) மகனும் (அயன்) என்ற உறவுமுறையையும் எண்ணாது மாறுபட்டுப் போர் செய்த. நிமிர்ந்தார் - உயர்ந்து சென்றவர். புகலும் - நூல்களில் சொல்லப் பட்ட முறையோடு பொருந்திய; விருப்பத் தோடு செய்யும். தீய - தீவினைப் பயன்கள்.

போழம் பலபேசிப் போது சாற்றித் திரிவாரும்,
வேழம் வரும்அளவும் வெயிலே துற்றித் திரிவாரும்,
கேழல் வினைபோகக் கேட்பிப்பாரும், கேடு இலா
ஆழ்வர், பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே. 11

சாந்தம் கமழ் மறுகில் சண்பை ஞானசம்பந்தன்
ஆம்தண் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளை,
வேந்தன் அருளாலே, விரித்த பாடல் இவைவல்லார்
சேர்ந்த இடம் எல்லாம் தீர்த்தமாகச் சேர்வாரே. 12

திருச்சிற்றம்பலம்

---

11. போழம் - முரணான சொல். போது சாற்றி - காலம் அறிந்து சொல்லி. வேழம் - வெப்பம் மிகுதியால் உண்டாகும் யானைத் தீ என்னும் ஒருவகை நோய். துற்றி - உண்டு. கேழல் வினை - பொருந்திய வினை.

12. சாந்தம் - சந்தனம். மறுகு - வீதி. தீர்த்தம்- பாவங்களைத் தீர்க்கும் இடம்.

1 : 46 திருஅதிகைவீரட்டானம்

பண்: தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

குண்டைக் குறள் பூதம் குழும அனல் ஏந்திக்,
கெண்டைப் பிறழ் தெள்நீர்க் கெடில வட்பக்கம்,
வண்டு மருள் பாட, வளர் பொன் விரிகொன்றை
விண்ட தொடையலான் ஆடும், வீரட்டானத்தே. 1

அரும்பும் குரும்பையும் அலைத்த மென்கொங்கைக்.
கரும்புஇன் மொழியாளோடு உடன் கைஅனல் வீசிச்,
சுரும்புஉண் விரிகொன்றைச் சுடர்பொன் சடைதாழ,
விரும்பும் அதிகையுள் ஆடும், வீரட்டானத்தே. 2

---

1. குண்டை - பருத்த. குறள் - குட்டை. குழும - கூட்டமாகக் கூட. தெண்ணிர் - தெளிந்த நீர். கெடிலம் - ஆற்றின் பெயர். மருள் - ஒருவகைப்பண். பொன் - பொன்னின் நிறம். விண்ட - மலர்ந்த. தொடையல் - மாலை.

2. அரும்பு - தாமரை மொட்டு. குரும்பை - தென்னங்குரும்பை, அலைத்த - அழகில் தோற்கச் செய்த, இன் - இனிய. சுரும்பு - வண்டினம். உண் - தேனை உண்ணும், சுடர் பொன் சடை - ஒளிவீசும் அழகியசடை, தாழ - தொங்க.

ஆடல் அழல்நாகம் அரைக்கு இட்டு அசைத்துஆட்ப்,
பாடல் மறைவல்லான் படுதம் பலி பெயர்வான்,
மாட முகட்டின்மேல் மதி தோய் அதிகையுள்,
வேடம் பல வல்லான் ஆடும், வீரட்டானத்தே. 3

எண்ணார் எயில் எய்தான், இறைவன், அனல்ஏந்தி,
மண் ஆர் முழவு அதிர,முதிரா மதிசூடிப்,
பண் ஆர் மறை பாடல், பரமன்-அதிகையுள்,
விண்ணோர் பரவ நின்று ஆடும், வீரட்டானத்தே. 4

கரிபுன் புறம் ஆய கழிந்தார் இடுகாட்டில்,
திரு நின்று ஒருகையால், திருஆம் அதிகையுள்,
எரி ஏந்திய பெருமான், எரிபுன் சடைதாழ
விரியும் புனல் சூடி ஆடும், வீரட்டானத்தே. 5

---

3. ஆடல் அழல் நாகம் - வலிமையும் கொடுமையும் உடைய பாம்பு. மறை பாடல் வல்லான் என்க. படுதம் - ஒருவகைக் கூத்து. பலி பெயர்வான் - பிச்சைக்காகத் திரிபவன். முகடு - உச்சி.

4. எண்ணார் - தன் ஆற்றலையும் தலைமையையும் நினையாத பகைவர், மண் - முரசுக் கண்ணிடத்தில் வைப்பது. பரவ - துதிக்க.

5. கரி புன் புறம் - கரிந்து கிடக்கும் பொலிவற்ற காடு, கழிந்தார் - இறந்துபோனவர். திருநின்று ஒருகையால் - செல்வம் நிலை பெற்று வேற்றிடம் செல்வதைத் தவிர்வதால். திரு ஆம் அதிகை - செல்வ வளம் சிறந்த அதிகை. எரி சடை - செஞ்சடை. விரியும் புனல் - பரந்து வந்த கங்கை.

துளங்கும் சுடர் அம்கைத் துதைய விளையாடி,
இளம் கொம்பு அணையசாயல் உடையோடு இசைபாடி,
வளம்கொள்புனல் சூழ்ந்த வயல் ஆர் அதிகையுள்,
விளங்கும் பிறை சூடி ஆடும், வீரட்டானத்தே. 6

பாதம் பலர் ஏத்தப் பரமன் பரமேட்டி
பூதம் புடை சூழப், புலித்தோல் உடையாகக்,
கீதம் உமைபாடக், கெடில வடபக்கம்,
வேத முதல்வன் நின்று ஆடும், வீரட்டானத்தே. 7

கல்ஆர் வரை அரக்கன் தடம்தோள் கவின் வாட,
ஒல்லை அடர்த்து, அவனுக்கு அருள்செய்து, அதிகையுள்,
பல்ஆர் பகுவாய நகு வெண் தலைசூடி,
வில்லால் எயில் எய்தான் ஆடும், வீரட்டானத்தே. 8

---

6. துளங்கும் - அசையும். துதைய - நெருங்க: சாயல் - மகளிர்க்கே உரிய மென்மைத் தன்மை.

7. பாதம் - திருவடி. புடை - பக்கம்.

8. கல் ஆர் வரை - கல்லைப் போல வலிமை நிறைந்த கயிலாய மலை, கவின் - அழகு. ஒல்லை - விரைந்து: அடர்த்து - அழுத்தி. பகுவாய - பிளந்த வாயினை உடைய. நகு - ஒளிவீசும்.

நெடியான் நான்முகனும் நிமிர்ந்தானைக் காண்கிலார்,
பொடி ஆடும் மார்பானைப், புரிநூல் உடையானைக்,
கடிஆர் கழுநீலம் மலரும் அதிகையுள்,
வெடிஆர் தலை ஏந்தி ஆடும், வீரட்டானத்தே. 9

அரையோடு அலர் பிண்டி மருவிக், குண்டிகை
சுரையோடு உடன் ஏந்தி, உடை விட்டு உழல்வார்கள்
உரையோடு உரை ஒவ்வாது; உமையோடு உடன் ஆகி,
விரை தோய் அலர் தாரான் ஆடும், வீரட்டானத்தே. 10

---

9. நெடியான் - திருமால். நிமிர்ந்தான் - ஒளி வண்ணமாய் உயர்ந்த சிவபெருமான். பொடி ஆடும் - திரு நீறு விளங்கும். கடி-மணம். கழுநீலம் - நீலமலர். வெடி - முடை நாற்றம்.

10. அரையோடு அலர் பிண்டி மருவி - அரையில் அசோகந் தளிரை உடுத்தி. குண்டிகைச் சுரையோடு - சுரைக்குடுக்கை, உடை விட்டு - வேறு உடைகளை நீக்கி. விரை - மணம். அலர் - மலர். தாரான் - மாலை அணிந்தவன்.

ஞாழல் கமழ் காழியுள் ஞான சம்பந்தன்,
வேழம் பொரு தெள்நீர் அதிகை விரட்டானத்துச்
சூழும் கழலானைச் சொன்ன தமிழ் மாலை,
வாழும் துணையாக நினைவார் வினை இலரே. 11

திருச்சிற்றம்பலம்

11; ஞாழல் - புலிநகக் கொன்றை. வேழம் - நாணல். பொரு - மோதிச் செல்லும். சூழும் கழலான் - கழல் அணிந்த திருவடி உடையவன். வாழும் துணை - நம்மை வாழ்விக்கும் துணை.

1 : 47

திருச்சிரபுரம்

பண் : பழம்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

பல் அடைந்த வெண்தலையில்
பலி கொள்வது அன்றியும், போய்,
வில் அடைந்த புருவ நல்லாள்
மேனியில் வைத்தல் என்னே ?
சொல் அடைந்த தொல் மறையோடு
அங்கம் கலைகள் எல்லாம்
செல் அடைந்த செல்வர் வாழும்
சிரபுரம் மேயவனே ! 1

கொல்லை முல்லை நகையினாள் ஓர்
கூறுஅது அன்றியும், போய்,
அல்லல் வாழ்க்கைப் பலிகொண்டு உண்ணும்
ஆதரவு என்னை கொலாம் ?
சொல்ல நீண்ட பெருமையாளர்,
தொல்கலை கற்று வல்லார்,
செல்ல நீண்ட செல்வம் மல்கு
சிரபுரம் மேயவனே ! 2

1: வில் அடைந்த புருவ நல்லாள் - வில்லை ஒத்த புருவத்தை உடைய அழகிய நன்மையே உருவான உமையம்மை. செல் அடைந்த செல்வர் - தம் அறிவில் வந்தடையப் பெற்ற செல்வரான மறையோர். சிர புரம் - சீகாழி.

2: கொல்லை - முல்லை நிலக்காடு. முல்லை நகை - முல்லை அரும்பு போன்ற பல். ஆதரவு - விருப்பம், சொல்ல நீண்டபெருமை - சொல்லளவைக் கடந்த பெருமை.

நீர் அடைந்த சடையின் மேல் ஓர்
நிகழ் மதி அன்றியும், போய்,
ஊர் அடைந்த ஏறுஅதுஏறி
உண்பலி கொள்வது என்னே ?
கார் அடைந்த சோலை சூழ்ந்து
காமரம் வண்டு இசைப்பச்,
சீர் அடைந்த செல்வம் ஓங்கு
சிரபுரம் மேயவனே ! 3

கை அடைந்த மானினோடு
கார் அரவு அன்றியும், போய்,
மெய் அடைந்த வேட்கையோடு,
மெல்இயல் வைத்தல் என்னே?
கை அடைந்த களைகளாகச்
செங்கழுநீர் மலர்கள்
செய் அடைந்த வயல்கள் சூழ்ந்த
சிரபுரம் மேயவனே ! 4

---

3. நீர்-கங்கை. நிகழ் - வளர வேண்டிய நிலையில் உள்ளதான பிறை. கார் அடைந்த - பசுமையாலும் செறிவாலும் இருண்டு தோன்றும். காமரம்-பண்.

4. கார் அரவு – கருநிறப் பாம்பு. மெய் அடைந்த வேட்கை - உடம்பொடு பொருந்திய விருப்பம். மெல் இயல் - உமையம்மை. கை - பக்கங்கள். செங்கழுநீர் மலர்கள் கை அடைந்த களைகளாகச் செய் (ஒழுங்கு) அடைந்த வயல்கள்.

புரம் எரித்த பெற்றியோடும்,
போர் மத யானைதன்னைக்
கரம் எடுத்துத் தோல் உரித்த
காரணம் ஆவது என்னே?
மரம் உரித்த தோல் உடுத்த
மாதவர் தேவரோடும்
சிரம் எடுத்த கைகள் கூப்பும்
சிரபுரம் மேயவனே! 5

கண்ணு மூன்றும் உடையது அன்றிக்
கையினில் வெண் மழுவும்
பண்ணு மூன்று வீணையோடு
பாம்பு உடன் வைத்தல் என்னே?
எண்ணு மூன்று கனலும் ஓம்பி,
எழுமையும் விழுமையராய்த்,
திண்ணம் மூன்று வேள்வியாளர்
சிரபுரம் மேயவனே! 6

---

5. பெற்றி - தன்மை. போர் மதம் - போரில் வல்ல செருக்கு. மரம் உரித்த தோல் - மரவுரி.

6. எண்ணு மூன்று கனல் - முத்தீ. மூன்று வேள்வி - தேவவேள்வி, இறந்தார் வேள்வி, இருடி வேள்வி என்பன.

குறை படாத வேட்கையோடு
கோல் வளையாள் ஒருபால்
பொறை படாத இன்பமொடு
புணர்தரு மெய்ம்மை என்னே ?
இறை படாத மெல்முலையார்
மாளிகை மேல் இருந்து,
சிறை படாத பாடல் ஓங்கு
சிரபுரம் மேயவனே ! 7

மலை எடுத்த வாள் அரக்கன்
அஞ்ச, ஒரு விரலால்
நிலை எடுத்த கொள்கையானே !
நின்மலனே ! நினைவார்
துலை எடுத்த சொல் பயில்வார்
மேதகு வீதிதோறும்
சிலை எடுத்த தோளினனே !
சிரபுரம் மேயவனே ! 8

---

7. கோல் வளை - திரண்ட வளையல். பொறை படாத இன்பம் - தாங்கமுடியாத பெரிய இன்பம். மெய்ம்மை - உண்மையான கருத்து. இறைபடாத - சிறிதும் தளராத. சிறைபடாத பாடல் - தடைபடாத பாடல்.

8. நிலை எடுத்த கொள்கை - நிலைகுலையுமாறு செய்த கோட்பாடு. நின்மலன் - மலச்சார்பு இல்லாதவன். துலை எடுத்த சொல் - நடுவு நிலைமை தவறாத சொல். மேதகு - மேன்மை பொருந்திய. சிலை எடுத்த - மலையை வில்லாக எடுத்த ; வில்லைச் சுமந்த ; மலை போன்ற திண்ணிய.

மாலினோடு மலரினனும்
வந்தவர் காணாது,
சாலும் அஞ்சப்பண்ணி நீண்ட
தத்துவம் மேயது என்னே ?
நாலு வேதம் ஓதலார்கள்
நம் துணை என்று இறைஞ்சச்,
சேலு மேயும் கழனி சூழ்ந்த
சிரபுரம் மேயவனே ! 9

புத்தரோடு சமணர் சொற்கள்
புறன் உரை என்று இருக்கும்
பத்தர் வந்து பணிய வைத்த
பான்மையது என்னை கொலாம் ?
மத்த யானை உரியும் போர்த்து
மங்கையொடும் உடனே,
சித்தர் வந்து பணியும் செல்வச்
சிரபுரம் மேயவனே ! 10

---

9. மலரினன் - நான்முகன். சாலும்-மிகுதியாக. தத்துவம் - உண்மை. சேல் - மீன்வகை.

10. பான்மை - தன்மை.

தெங்கு நீண்ட சோலை சூழ்ந்த
 சிரபுரம் மேயவனை
அங்கம் நீண்ட மறைகள் வல்ல
 அணிகொள் சம்பந்தன் உரை
பங்கம் நீங்கப் பாட வல்ல
 பத்தர்கள் பார் இதன்மேல்
சங்கமோடு நீடி வாழ்வர்,
 தன்மையினால் அவரே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. தெங்கு-தென்னை. அங்கம் நீண்ட மறைகள் - ஆறு அங்கங்களாலும் விரிந்த வேதங்கள். பங்கம் - பாசக்கட்டாகிய குற்றம். சங்கம் - அடியார் கூட்டம்.

1 : 48 திருச்சேய்ஞலூர்

பண்: பழம்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

நூல் அடைந்த கொள்கையாலே
நுண் அடி கூடுதற்கு
மால் அடைந்த நால்வர் கேட்க,
நல்கிய நல் அறத்தை,
ஆல் அடைந்த நீழல் மேவி,
அருமறை சொன்னது என்னே ?
சேல் அடைந்த தண் கழனிச்
சேய்ஞலூர் மேயவனே. 1

நீறு அடைந்த மேனியின்கண்
நேர் இழையாள் ஒருபால்
கூறு அடைந்த கொள்கை அன்றிக்,
கோல வளர் சடைமேல்
ஆறு அடைந்த திங்கள் சூடி,
அரவம் அணிந்தது என்னே ?
சேறு அடைந்த தண் கழனிச்
சேய்ஞலூர் மேயவனே ! 2

---

1. நூல் - மெய்ந்நூல்கள். மால் - உண்மைப் பொருள் பற்றிய தெளிவில்லாத மயக்கம். நால்வர் - சனகர் முதலான நான்கு முனிவர். அருமறை-பொருள் உணர்தற்கு அரிய மறைச் செய்தி. கழனி-வயல்.

2. கோல - அழகிய. ஆறு அடைந்த கோல வளர் சடை மேல் திங்கள் சூடி என இயைக்க.

ஊன் அடைந்த வெண்தலையினோடு
பலி திரிந்து,
கான் அடைந்த பேய்களோடு
பூதம் கலந்து உடனே,
மான் அடைந்த நோக்கி காண,
மகிழ்ந்து எரியாடல் என்னே ?
தேன் அடைந்த சோலை மல்கு
சேய்ஞலூர் மேயவனே. 3

விண் அடைந்த மும் மதிலும்,
வில் மலையா. அரவின்
நாண் அடைந்த வெம் சரத்தால்,
நல் எரியூட்டல் என்னே ?
பாண் அடைந்த வண்டு பாடும்
பைம் பொழில் சூழ்ந்து அழகு ஆர்
சேண் அடைந்த மாடம் மல்கு
சேய்ஞலூர் மேயவனே ! 4

---

3. கான் – சுடு காடு. மான் அடைந்த நோக்கி - மான் போன்ற மருண்ட பார்வையை உடையவள் தேன் - வண்டு எனலும் ஆம்.

4. வீண் - விண் 'வீண்' என நீண்டது - விண்ணில் திரியும் மும்மதில். வீண் எனக் கொண்டு நிலைத்த பயனைத்தராமை என உரைத்தலும்ஆம். அரா-வாசுகி என்னும் பாம்பு. எரியூட்டல் – தீயால் அழித்தல்: பாண் - பாட்டிசை ; பண் 'பாண்' என நீண்டது எனலும் ஆம். அழகு ஆர் - அழகு நிறைந்த. சேண் - மிகுந்தஉயரம், வானத்தில் தொலைவு;

பேய் அடைந்த காடு இடமாப்
பேணுவது அன்றியும், போய்,
வேய் அடைந்த தோளி அஞ்ச
வேழம் உரித்தது என்னே ?
வாய் அடைந்த நான் மறை
ஆறு அங்கமோடு ஐவேள்வித்
தீ அடைந்த செங்கையாளர்
சேய்ஞலூர் மேயவனே ! 5

காடு அடைந்த ஏனம் ஒன்றின்
காரணம் ஆகி வந்து,
வேடு அடைந்த வேடன் ஆகி
விசயனோடு எய்தது என்னே?
கோடு அடைந்த மால் களிற்றுக்
கோச் செங்கணற்கு அருள்செய்
சேடு அடைந்த செல்வர் வாழும்
சேய்ஞலூர் மேயவனே! 6

---

5. காடு - சுடுகாடு. பேணுவது - போற்றிக் கொள்வது. வேய் அடைந்த தோளி - மூங்கிலை ஒத்த தோளை உடைய உமை. வேழம் - ஆண் யானை. வாய் அடைந்த - ஓதப் பெற்ற ; உண்மையைப் பொருளாக் கொண்ட. ஐவேள்வி - தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றம், தான் என்னும் ஐவர்க்கும் செய்யப் பெறுவது என உரைப்பர்.

6. ஏனம் - ஆண்பன்றி. வேடு - வேட்டைத் தொழில்; வேடர்க்குரிய வேடம். விசயன்-அர்ச்சுனன். கோடு - தந்தம். மால் களிறு - பெரிய ஆண் யானை. சேடு - பெருமை.

பீர் அடைந்த பால்அது ஆட்டப்,
பேணுத வன் தாதை
வேர் அடைந்து பாய்ந்த தாளை
வேர்த் தடிந்தான்தனக்குத்
தார் அடைந்த மாலை சூட்டித்
தலைமை வகுத்தது என்னே?
சீர் அடைந்த கோயில் மல்கு
சேய்ஞலூர் மேயவனே! 7

மா அடைந்த தேர் அரக்கன்
வலி தொலைவித்து, அவன்தன்
நா அடைந்த பாடல் கேட்டு,
நயந்து அருள்செய்தது என்னே?
பூ அடைந்த நான் முகன்போல்
பூசுரர் போற்றிசெய்யும்,
சே அடைந்த ஊர்தியானே!
சேய்ஞலூர் மேயவனே! 8

---

7. பீர்-சுரப்பு. பேணுத-போற்றிக் கொள்ளாத. வன் தாதை – கடுமையை உடைய தந்தை. வேர் - சினம். வேர்த்தடிந்தான் - நிற்றற்கு இயலாத நிலைமையில் வெட்டினன். தார் அடைந்த மாலை - மார்பு மாலையும் தலையிற் சூடிய மாலையும்.

8. மா அடைந்த தேர் – குதிரைகள் பூட்டப் பெற்ற தேர். வலி தொலைவித்து - வலிமையைக் கெடுத்து. நா அடைந்த பாடல் - நாவால் இசைத்த பாடல். நயந்து - விரும்பி. பூ - தாமரை மலர். பூசுரர்-நிலத்தேவர் எனப்படும் அந்தணர். சே - எருது.

கார் அடைந்த வண்ணனோடு
கனகம் அனையானும்
பார் அடைந்தும் விண் பறந்தும்
பாதம் முடி காணார்,
சீர் அடைந்து வந்து போற்றச்,
சென்று அருள் செய்தது என்னே?
தேர் அடைந்த மாமறுகின்
சேய்ஞலூர் மேயவனே! 9

மாசு அடைந்த மேனியாரும்,
மனம் திரியாத கஞ்சி
நேசு அடைந்த ஊணினாரும்,
நேசம் இலாதது என்னே?
வீசு அடைந்த தோகை ஆட,
விரை கமழும் பொழில்வாய்த்,
தேசு அடைந்த வண்டு பாடும்
சேய்ஞலூர் மேயவனே! 10

---

9. கார் - கருமை, மேகம். கார் அடைந்த வண்ணன் - மால். கனகம் - பொன். கனகம் அனையான்-நான்முகன். பார் அடைந்தும் - நிலத்தைக் கிளைத்தும். கார்வண்ணன் பார் அடைந்தும் பாதம் காணான். கனகம் அனையான் விண் பறந்தும் முடி காணான். சீர் அடைந்து - தன்முனைப்பாகிய குற்றம் ஒழிந்து பணிந்து. மாமறுகு – பெருந்தெரு, தேர்வீதி.

10. மாசு - அழுக்கு. கஞ்சி ஊணினர். நேசு - விருப்பம். ஊணினர் - உணவாகக் கொண்டவர். நேசம் – அன்பு. வீசு - வீச்சு. வீசு அடைந்த தோகை- விரிந்த தோகையை உடைய ஆண்மயில். விரை-மணம். தேசு - ஒளி.

சேய் அடைந்த சேய்ஞலூரில்
செல்வன சீர் பரவித்,
தோய் அடைந்த தண்வயல்சூழ்
தோணிபுரத் தலைவன்,
சாய் அடைந்த ஞானம் மல்கு
சம்பந்தன் இன்னுரைகள்
வாய் அடைந்து பாட வல்லார்
வானுலகு ஆள்பவரே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. சேய் - முருகக் கடவுள். சேய் அடைந்த - முருகக் கடவுள் சிவனை வழிபட்ட. செல்வன சீர் - செல்வனாகிய சிவபெருமானின் புகழ்கள். தோய் - நீர். சாய் அடைந்த ஞானம் - நுண்ணிய ஞானமாகிய சிவஞானம். வாய் அடைந்து பாட - நாவால்பாட

1:49 ## திருநள்ளாறு

பண்: பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

போகம் ஆர்த்த பூண் முலையாள்
தன்னோடும் பொன் அகலம்
பாகம் ஆர்த்த பைங்கண்
வெள் ஏற்று அண்ணல், பரமேட்டி,
ஆகம் ஆர்த்த தோல் உடையன்,
கோவண ஆடையின்மேல்
நாகம் ஆர்த்த நம் பெருமான்-
மேயது நள்ளாறே. 1

தோடு உடைய காது உடையன்,
தோல் உடையன், தொலையாப்
பீடு உடைய போர் விடையன்,
பெண்ணும் ஓர் பால் உடையன்,
ஏடு உடைய மேல் உலகோடு
ஏழ் கடலும் சூழ்ந்த
நாடு உடைய நம் பெருமான்-
மேயது நள்ளாறே. 2

1: ஆர்த்த - நெருக்கம் கொண்ட, நிறைந்த. அகலம்-மார்பு. ஆகம் - உடம்பு. ஆர்த்த - போர்த்த; உடுத்த; கட்டிய. மேயது - விரும்பி எழுந்தருளிய பதி.

2: தொலையா - அழியாத. பீடு - பெருமை, பெருமிதம், ஏடு - அடுக்கு.

ஆன் முறையால் ஆற்ற வெண்ணீறு
ஆடி, அணிஇழை ஓர்
பால் முறையால் வைத்த பாதம்
பத்தர் பணிந்து ஏத்த,
மான் மறியும் வெண் மழுவும்
சூலமும் பற்றிய கை
நான் மறையான், நம் பெருமான்
மேயது நள்ளாறே. 3

புல்க வல்ல வார் சடைமேல்
பூம்புனல் பெய்து, அயலே
மல்க வல்ல கொன்றை மாலை
மதியோடு உடன் சூடிப்,
பல்க வல்ல தொண்டர் தம்
பொன் பாத நிழல் சேர,
நல்க வல்ல நம் பெருமான்
மேயது நள்ளாறே. 4

3: ஆன் முறையால் - பசுவினிடமிருந்து கொள்ளும் முறைப்படி, ஆற்ற - மிகுதியும்.

4: புல்க - தழுவ. வார் - நீண்ட. பூம் புனல் - கங்கை. மல்க - மிக, பல்க - பெருக, நல்க - கொடுத்தருள.

ஏறு தாங்கி, ஊர்தி பேணி,
ஏர் கொள் இள மதியம்
ஆறு தாங்கும் சென்னிமேல் ஓர்
ஆடு அரவம் சூடி,
நீறு தாங்கி நூல் கிடந்த
மார்பன், நிரை கொன்றை
நாறு தாங்கும் நம் பெருமான் -
மேயது நள்ளாறே. 5

திங்கள் உச்சிமேல் விளங்கும்
தேவன், இமையோர்கள்,
"எங்கள் உச்சி எம் இறைவன்!"
என்று அடியே இறைஞ்சத்,
தங்கள் உச்சியால் வணங்கும்
தன் அடியார்கட்கு எல்லாம்
நங்கள் உச்சி நம் பெருமான் -
மேயது நள்ளாறே. 6

5: ஏறு தாங்கி, ஊர்தி பேணி - எருதினைக் கொடியில் தாங்கியும், ஊர்தியாகக் கொண்டும். ஏர் - எழுச்சி பொருந்தி அழகு. நிரை - வரிசை. நாறு - மணம்.

6: திங்கள் - பிறைத்திங்கள். தேவன் - கடவுள், இமையோர் - தேவர்கள், இறைஞ்ச - வணங்க. உச்சியால் வணங்கும் - தலையால் வணங்கும், நங்கள் உச்சி - நமது உயர்ந்த இடமாகிய.

வெம் சுடர் தீ அங்கை ஏந்தி,
விண்கொள் முழவு அதிர,
அஞ்சு இடத்து ஓர் ஆடல் பாடல்
பேணுவது அன்றியும், போய்ச்,
செம்சடைக்கு ஓர் திங்கள் சூடி,
திகழ்தரு கண்டத்துள்ளே
நஞ்சு அடைத்த நம் பெருமான் -
மேயது நள்ளாறே. 7

சிட்டம் ஆர்ந்த மும்மதிலும்
சிலை வரைத் தீ அம்பினால்
சுட்டு மாட்டிச், சுண்ண வெண்ணீறு
ஆடுவது அன்றியும், போய்ப்,
பட்டம் ஆர்ந்த சென்னிமேல் ஓர்
பால் மதியம் சூடி,
நட்டம் ஆடும் நம் பெருமான் -
மேயது நள்ளாறே. 8

7: வெம் சுடர் - வெப்பமான ஒளி. விண் கொள் முழவு அதிர - மேகத்தை ஒத்து முரசு ஒலிக்க; ஒலி வானத்தில் சென்று பரவுமாறு முரசுமுழங்க. அஞ்சு இடம் - மக்கள் அஞ்சத்தக்க இடமாகிய சுடுகாடு.

8: சிட்டம் - பெருமை. ஆர்ந்த - பொருந்திய. சிலை வரை - வரை சிலை - மலைவில். பட்டம் - நெற்றிப் பட்டம். பால்மதியம் - பால்போன்ற வெண்ணிறமதி; ஒரு கீற்றாகிய பிறைமதி.

உண்ணல் ஆகா நஞ்சு கண்டத்து
உண்டு, உடனே ஒடுக்கி,
"அண்ணல் ஆகா அண்ணல் நீழல்
ஆர் அழல்போல் உருவம்
எண்ணல் ஆகா உள் வினை" என்று
எள்க வலித்து, இருவர்
நண்ணல் ஆகா நம் பெருமான்
மேயது நள்ளாறே. 9

மாசு மெய்யர், மண்டைத் தேரர்,
குண்டர் குணம் இலிகள்
பேசும் பேச்சை மெய் என்று எண்ணி,
அந்நெறி செல்லன்மின்!
மூசு வண்டு ஆர் கொன்றை சூடி,
மும் மதிலும் உடனே
நாசம் செய்த நம் பெருமான்
மேயது நள்ளாறே. 10

9: உண்ணல் ஆகா - உண்ணத்தகாத. உண்டு உடனே கண்டத்து ஒடுக்கி என இயைக்க, அண்ணல் ஆகா - அணுகமுடியாத. நண்ணல் ஆகா - நெருங்க முடியாத.

10: மாசு மெய்யர் - அழுக்கு உடம்பை உடையவர், மண்டை - உண்கலம். தேரர் - புத்தர். செல்லன்மின் - செல்லாதீர்கள். மூசு - மொய்க்கும், உடனே - ஒருசேர. நாசம் செய்த - அழித்த.

தண் புனலும் வெண்பிறையும்
தாங்கிய தாழ் சடையன்,
நண்பு நல்லார் மல்கு காழி
ஞான சம்பந்தன், நல்ல
பண்பு நள்ளாறு ஏத்து பாடல்
பத்தும் இவை வல்லார்
உண்பு நீங்கி, வானவரோடு
உலகில் உறைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

11: நண்பு - நட்பு. உண்பு - மண்ணுலகத்து நுகர்ச்சி.

1 : 50 திருவலிவலம்

பண் : பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

ஒல்லை ஆறி, உள்ளம் ஒன்றிக்,
கள்ளம் ஒழிந்து, வெய்ய
சொல்லை ஆறித், தூய்மை செய்து,
காம வினை அகற்றி,
நல்லவாறே உன்தன் நாமம்
நாவின் நவின்று ஏத்த,
வல்லவாறே வந்து நல்காய்!
வலிவலம் மேயவனே! 1

இயங்குகின்ற இரவி, திங்கள்,
மற்றும் நல் தேவரெல்லாம்
பயங்களாலே பற்றி, நின்பால்
சித்தம் தெளிகின்றிலர்;
தயங்கு சோதீ ! சாம வேதா !
காமனைக் காய்ந்தவனே !
மயங்குகின்றேன், வந்து நல்காய் !
வலிவலம் மேயவனே ! 2

1: ஒல்லை - மனவேகம். ஆறி - அமைதியுற்று, வெய்ய சொல் - கடும் சொல். ஆறி - நீக்கி, காமவினை - காமம் முதலான தீயன; பற்றுக் கொண்டு செய்யும் செயல்கள், நல்காய் - அருள்வாயாக.

2: இரவி - கதிரவன், காய்ந்தவன் - சினந்து அழித்தவன்.

பெண்டிர், மக்கள், சுற்றம் என்னும்
பேதைப் பெரும் கடலை
விண்டு, பண்டே வாழமாட்டேன்;
வேதனை நோய் நலியக்,
கண்டு கண்டே உன்தன் நாமம்
காதலிக்கின்றது உள்ளம்
வண்டு கிண்டிப் பாடும் சோலை
வலிவலம் மேயவனே ! 3

மெய்யர் ஆகிப், பொய்யை நீக்கி,
வேதனையைத் துறந்து,
செய்யர் ஆனார் சிந்தையானே !
தேவர் குலக் கொழுந்தே !
நைவன் நாயேன்; உன்தன் நாமம்
நாளும் நவிற்றுகின்றேன்;
வையம் முன்னே வந்து நல்காய் !
வலிவலம் மேயவனே ! 4

3: பேதை பெருங்கடல் — அறியாமையால் உண்டான பெரிதான பாசக் கடல். விண்டு - விட்டு நீங்கி, நலிய - துன்புறுத்த, கிண்டி - கிளறி.

4: மெய்யர் - உண்மை உணர்வு பெற்றவர், பொய்யை நீக்கி மெய்யர் ஆகி என மாறுக. பொய் - நிலையாப் பொருள்கள், துறந்து - விலக்கி. செய்யர் - செம்மை உடையார், சிந்தையான் - சிந்தையில் விளங்குபவன், நவிற்று - சொல்லு. வையம் - உலகம்.

துஞ்சும் போதும், துற்றும் போதும்,
சொல்லுவன் உன் திறமே;
தஞ்சம் இல்லாத் தேவர் வந்து, உன்
தாள் இணைக்கீழ்ப் பணிய,
நஞ்சை உண்டாய்க்கு என் செய்கேனோ ?
நாளும் நினைந்து, அடியேன்,
'வஞ்சம் உண்டு' என்று
அஞ்சுகின்றேன், வலிவலம் மேயவனே ! 5

" புரிசடையாய் ! புண்ணியனே !
நண்ணலார் மூ எயிலும்
எரிய எய்தாய், எம் பெருமான் ! "
என்று இமையோர் பரவும்,
கரி உரியாய் ! கால காலா !
நீல மணி மிடற்று,
வரி அரவா ! வந்து நல்காய்,
வலிவலம் மேயவனே ! 6

---

5. துஞ்சும் போது - உறங்கும் போது. துற்றும் போது - உண்ணும் போது. திறம் – புகழ். தஞ்சம் - புகலிடம்.

6. நண்ணலார் - தன்னை அடையாதார் ஆகிய பகைவர். வரி அரவா - வரி அல்லது புள்ளிகளை உடைய பாம்பினை அணிந்தவனே !; சுற்றிக் கட்டிய பாம்பினை உடையவனே!

தாயும் நீயே, தந்தை நீயே,
சங்கரனே ! அடியேன்,
ஆயும் நின்பால் அன்பு செய்வான்
ஆதரிக்கின்றது உள்ளம்.
ஆயம் ஆய காயம்தன்உள்
ஐவர் நின்று ஒன்றல் ஒட்டார்.
மாயமே என்று அஞ்சுகின்றேன்,
வலிவலம் மேயவனே ! 7

நீர் ஒடுங்கும் செஞ்சடையாய் !
நின்னுடைய பொன் மலையை
வேரோடும் பீழ்ந்து ஏந்தல் உற்ற
வேந்தன் இராவணனைத்
தேரோடும் போய் வீழ்ந்து அலறத்,
திருவிரலால் அடர்த்த,
வார் ஒடுங்கும் கொங்கை பங்கா!
வலிவலம் மேயவனே! 8

---

7. ஆயும் நின்பால் - தொன்மை முதற் கொண்டே எனக்குத் தோன்றாத் துணையாயிருந்து நடத்திவரும் உனது அருள் உதவியை என் உணர்வில் ஆராய்ந்து அறியப்படும் உன்னிடம். ஆயம் ஆய காயம் - நெருங்கிய தொடர்புடைய உடம்பினுள். ஐவர் - ஐம் பொறிகள். ஒன்றல் - இறைவனோடு ஒன்றி யிருத்தல்.

8. நீர் - கங்கை. பீழ்ந்து - பிடுங்கி.

ஆதி ஆய நான்முகனும்
மாலும் அறிவு அரிய
சோதியானே! நீதி இல்லேன்
சொல்லுவன் நின் திறமே,
ஓதி நாளும் உன்னை ஏத்தும்
என்னை, வினை அவலம்
வாதியாமே வந்து நல்காய்,
வலிவலம் மேயவனே! 9

பொதியிலானே! பூவணத்தாய்!
பொன் திகழும் கயிலைப்
பதிஇலானே! பத்தர் சித்தம்
பற்று விடாதவனே!
விதி இலாதார் வெம் சமணர்
சாக்கியர் என்று இவர்கள்
மதி இலாதார் என் செய்வாரோ?
வலிவலம் மேயவனே! 10

---

9. ஆதி - படைப்போன். அவலம் - துன்பம்.

10. பொதியிலான் - பொதியில் எனப்படும் பொதியமலையினை உரித்தாகக் கொண்டவன். பத்தர் சித்தம் பற்று விடாதவனே - அன்பர் எண்ணத்தை விட்டும் அல்லாதவன்.

வன்னி கொன்றை மத்தம் சூடும்
வலிவலம் மேயவனைப்
பொன்னி நாடன், புகலி வேந்தன்,
ஞான சம்பந்தன் – சொன்ன
பன்னு பாடல் பத்தும் வல்லார்
மெய்த்தவத்தோர் விரும்பும்
மன்னு சோதி ஈசனோடே
மன்னி இருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொன்னி நாடன் - காவிரி பாயும் சோழன் நாட்டவன். மன்னி யிருப்பார் - என்றும் ஒரு நிலையாக நிலைத்திருப்பர்.

1 : 51 திருச்சோபுரம்

பண் : பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

வெம்கண் ஆனை ஈர் உரிவை
போர்த்து, விளங்கும் மொழி
மங்கை பாகம் வைத்து, உகந்த
மாண்புஅது என்னைகொலாம்?
கங்கையோடு திங்கள் சூடி!
கடி கமழும் கொன்றைத்
தொங்கலானே! தூயநீற்றாய்!
சோபுரம் மேயவனே! 1

விடை அமர்ந்து, வெண்மழு ஒன்று
ஏந்தி, விரிந்து இலங்கு
சடை ஒடுங்கத் தண்புனலைத்
தாங்கியது என்னைகொலாம்?
கடை உயர்ந்த மும்மதிலும்
காய்ந்து அனலுள் அழுந்தத்,
தொடை நெகிழ்ந்த வெம் சிலையாய்!
சோபுரம் மேயவனே! 2

---

1. வெங்கண் - கொடுந்தன்மை. ஈர் உரிவை - உரித்த தோல். என்னை கொல் - என்ன காரணமோ? தொங்கல் - மாலை.

2. ஒடுங்க - உள்ளே அடங்க. கடை - தலைவாசல். காய்ந்து - எரிந்து. அழுந்த - மூழ்கிப்போக. தொடை நெகிழ்ந்த - அம்பைச் செலுத்திய.

தீயர் ஆய வல் அரக்கர்
செம் தழலுள் அழுந்தச்,
சாய எய்து, வானவரைத்
தாங்கியது என்னைகொலாம்?
பாயும் வெள்ளை ஏற்றை ஏறிப்,
பாய் புலித் தோல் உடுத்த
தூய வெள்ளை நீற்றினனே!
சோபுரம் மேயவனே! 3

பல்இல் ஓடு கையில் ஏந்திப்,
பல் கடையும் பலி தேர்ந்து,
அல்லல் வாழ்க்கைமேலது ஆன
ஆதரவு என்னைகொலாம்?
வில்லை வென்ற நுண் புருவ
வேல்நெடும் கண்ணியோடும்
தொல்லை ஊழி ஆகி நின்றாய்
சோபுரம் மேயவனே! 4

---

3. சாய - அழிய. தாங்கியது - துன்பம் நீங்கச் செய்தது.

4. இல் - இல்லாத. கடை - வீட்டுத் தலைவாசல். ஆதரவு - விருப்பம். வென்ற - ஒத்த. வேல் - வேல் போன்ற வடிவமும் கூர்த்த பார்வையும். கண்ணி - கண்ணை உடையாள். தொல்லை ஊழி - தோற்றிய அனைத்தையும் ஒன்று விடாமல் ஒடுங்கச் செய்த பேரொடுக்க காலம், மாப் பேர் ஊழி - மகா சங்கார காலம். ஊழி ஆகி - அவ் வொடுக்கத்தைச் செய்யும் முதல்வன் ஆகி.

நாற்றம் மிக்க கொன்றை துன்று
செஞ்சடை மேல் மதியம்
ஏற்றம் ஆக வைத்து உகந்த
காரணம் என்னைகொலாம் ?
ஊற்றம் மிக்க காலன் தன்னை
ஒல்க உதைத்து அருளித்,
தோற்றம் ஈறும் ஆகி நின்றாய் !
சோபுரம் மேயவனே ! 5

---

5. நாற்றம் - மணம். துன்று - சேரப் பெற்ற. ஏற்றம் ஆக - மேன்மை பெறுவதாக. உகந்த - உயர்த்திய, மகிழ்ந்த. ஊற்றம் - மனத்திடம். ஒல்க - வலிமை கெட, தோற்றம் ஈறு ஆகி - எல்லா வற்றையும் தோன்றச் செய்பவனும் ஒடுங்கச் செய்பவனும் தானே ஆகி. எல்லா வற்றுக்கும் முதலும் முடிவும் ஆகி. நின்றாய் - தான் மட்டும் தோற்றமும் முடிவும் இல்லாத ஒருவனாய் என்றும் ஒரு தன்மையனாய் இருந்தாய்.

கொல் [கொன்] நவின்ற மூஇலைவேல்,
கூர் மழுவாள் படையன்
பொன்னை வென்ற கொன்றை மாலை
சூடும் பொற்பு என்னைகொலாம் ?
அன்னம் அன்ன மெல் நடையாள்
பாகம் அமர்ந்து, அரை சேர்
துன்ன, வண்ண ஆடையினாய் !
சோபுரம் மேயவனே ! 6

" குற்றம் இன்மை, உண்மை நீ " என்று
உன் அடியார் பணிவார்
கற்ற, கேள்வி, ஞானம் ஆன
காரணம் என்னைகொலாம் ?
வற்றல் ஆமை, வாள் அரவம்
பூண்டு, அயன் வெண்தலையில்
துற்றலான கொள்கையானே !
சோபுரம் மேயவனே ! 7

---

6. கொல் - கொல்லும் திறம், கொன் - பெருமை. நவின்ற - வெளிப்படுத்திய, விளங்கிய. பொன் - பொன்னின் நிறம். பொற்பு - அழகு, அழகிய இயல்பு. துன்ன, வண்ண ஆடை - வலப் புறம் கோவண ஆடையும் இடப் புறம் நல்ல நிறமுடைய ஆடையும்.

7. குற்றம் இன்மை உண்மை நீ - குற்றம் இன்மையும் குற்றம் உண்மையும் நீ, குணங்கள் நீ குற்றம் நீ. கற்ற கேள்வி ஞானம் - கற்ற கல்வியும் கற்றார்வாய்க் கேட்ட கேள்வியும் அவ்விரண்டாலும்

விலங்கல் ஒன்று வெம் சிலையாக்
கொண்டு, விறல் அரக்கர்
குலங்கள் வாழும் ஊர் எரித்த
கொள்கை இது என்னைகொலாம் ?
இலங்கை மன்னும் வாள் அவுணர்
கோனை எழில் விரலால்
துலங்க ஊன்றி வைத்து உகந்தாய் !
சோபுரம் மேயவனே ! 8

பெற்ற அறிவும். வற்றல் ஆமை - ஆமை வற்றல் - ஆமையின் பதம் அற்ற ஓடு. வாள் - ஒளி. துற்றல் - உண்டல்.

8. விலங்கல் - மலை விலங்கல் ஒன்று - மேருமலை. வெம் சிலை - கடுமையான வில். விறல் - வலிமை, வீரம். அரக்கர் - முப்புரத்தார். ஊர் - முப்புரம். வாள் - வாள் படை. கோன் - தலைவன், அரசன். துலங்க - தனது பெருமையும் செருக்கினது சிறுமையும் உலகிற்கு விளங்க.

விடம்கொள் நாகம் மால் வரையைச்
சுற்றி விரிதிரை நீர்
கடைந்த நஞ்சை உண்டு உகந்த
காரணம் என்னை கொலாம்?
இடந்து மண்ணை உண்ட மாலும்
இன் மலர்மேல் அயனும்
தொடர்ந்து முன்னம் காணமாட்டாச்
சோபுரம் மேயவனே! 9

புத்தரோடு புன் சமணர்
பொய் உரையே உரைத்துப்
பித்தராகக் கண்டு உகந்த
பெற்றிமை என்னைகொலாம்?
மத்த யானை ஈர்உரிவை
போர்த்து வளர்சடைமேல்
துத்தி நாகம் சூடினனே!
சோபுரம் மேயவனே! 10

---

9. விடம் - நஞ்சு. நாகம் - வாசுகி. மால் வரை - மந்திர மலையாகிய பெரிய மலை. விரி திரை நீர் - கடல் நீர். இடந்து - கிளறி. இன் மலர் - காண்பதற்கு இனிய தாமரை மலர். தொடர்ந்தும் - மேலும் மேலும் முயன்றும்.

10. பெற்றி - தன்மை. மத்தம் - மதச் செருக்கு. துத்தி - பாம்பின்படம்.

சோலை மிக்க தண்வயல்சூழ்
சோபுரம் மேயவனைச்
சீலம் மிக்க தொல் புகழ் ஆர்
சிரபுரக்கோன் நலத்தான்
ஞாலம் மிக்க தண்தமிழான்
ஞானசம்பந்தன் சொன்ன
கோலம் மிக்க மாலை வல்லார்
கூடுவர் வான் உலகே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. ஞாலம் மிக்க - உலகில் உயர்ந்த. மாலை - பாமாலை.

1 : 52 திருநெடுங்களம்

பண் : பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

"மறை உடையாய்! தோல் உடையாய்!
வார்சடைமேல் வளரும்
பிறை உடையாய்! பிஞ்ஞகனே!"
என்று உனைப் பேசின் அல்லால்,
குறை உடையார் குற்றம் ஓராய்,
கொள்கையினல் உயர்ந்த
நிறை உடையார் இடர் களையாய்!
நெடும் களம் மேயவனே! 1

கனைத்து எழுந்த வெண்திரை சூழ்
கடல் இடை நஞ்சுதன்னைத்
தினைத் தனையா மிடற்றில் வைத்த
திருந்திய தேவ! நின்னை
மனத்து அகத்தோர் பாடல் ஆடல்
பேணி இராப் பகலும்
நினைத்து எழுவார் இடர் களையாய்!
நெடும்களம் மேயவனே! 2

---

1. பிஞ்ஞகன் - தலைக்கோலம் செய்துள்ள திருச்சடையை உடைய சிவபெருமான். ஓராய் - ஆராய்ந்து பார்க்க மாட்டாய்; காண மாட்டாய். நிறை - மனத்தைத் தீயவற்றில் செல்லாது நிறுத்தல்.

2. கனைத்து - ஆரவாரித்துக் கொண்டு. தினைத் தனை - தினை அளவினதாக, மிடற்றில் - கழுத்தில். வைத்த - நிறுத்திக் கொண்ட.

நின் அடியே வழிபடுவான்,
　　நிமலா! நினைக் கருத,
"என் அடியான் உயிரை வவ்வேல்!"
　　என்று அடல் கூற்று உதைத்த
பொன் அடியே பரவி நாளும்
　　பூவொடு நீர் சுமக்கும்
நின் அடியார் இடர் களையாய்!
　　நெடுங்களம் மேயவனே! 3

மலைபுரிந்த மன்னவன்தன்
　　மகளை ஓர் பால் மகிழ்ந்தாய்,
அலைபுரிந்த கங்கை தங்கும்
　　அவிர்சடை ஆரூரா!
தலைபுரிந்த பலி மகிழ்வாய்,
　　தலைவ! நின் தாள் நிழல்கீழ்
நிலைபுரிந்தார் இடர் களையாய்!
　　நெடுங்களம் மேயவனே! 4

---

3. வவ்வேல்! - கவராதே! அடல் கூற்று - கொல்ல வல்ல எமன்.

4. மலை புரிந்த மன்னவன் - இமய அரசன். ஓர் பால் - ஒரு பாகம். அவிர் - ஒளி வீசும். தலை புரிந்த பலி - தலை ஓட்டில் பெறும் பிச்சை. நிலை புரிந்தார் - நிலையாயிருத்தலை விரும்பி முயல்பவர், திருவடியில் நிலையாயிருக்கும் அணைந்தோர். (சீவன் முத்தர்).

பாங்கின் நல்லார், படிமம் செய்வார்,
பாரிடமும் பலிசேர்
தூங்கி நல்லார் பாடலோடு
தொழு கழலே வணங்கித்,
தாங்கி நில்லா அன்பினோடும்,
தலைவ! நின்தாள் நிழல் கீழ்
நீங்கி நில்லார் இடர் களையாய்!
நெடுங்களம் மேயவனே! 5

விருத்தன் ஆகிப், பாலன் ஆகி,
வேதம் ஓர் நான்கு உணர்ந்து,
கருத்தன் ஆகிக், கங்கை யாளைக்
கமழ்சடைமேல் கரந்தாய்!
அருத்தன் ஆய ஆதி தேவன்
அடியிணையே பரவும்
நிருத்தர், கீதர் இடர் களையாய்!
நெடுங்களம் மேயவனே! 6

---

5. பாங்கு - குணம். படிமம் - திருவேடம் பாரிடம் - பூத கணம். தூங்கி - உலகத்தை மறந்து. நல்லார் - மெய்யுணர்வில் நிலை பெற்றார். தொழு கழல் - தொழத்தக்கதான திருவடி. தாங்கி நில்லா அன்பு - அளவு கடந்த அன்பு.

6. விருத்தன் - முதியவன். கருத்தன் - முதல்வன். கரந்தாய் - அடக்கினாய். அருத்தன் - பொருளன். நிருத்தர் கீதர் - இன்ப மேலீட்டால் ஆடுவாரும் பாடுவாரும்.

கூறு கொண்டாய், மூன்றும் ஒன்றுக்
கூட்டி ஓர்வெம் கணையால்
மாறு கொண்டார் புரம் எரித்த
மன்னவனே! கொடிமேல்
ஏறு கொண்டாய்! சாந்தம் ஈது என்று,
எம் பெருமான் அணிந்த
நீறு கொண்டார் இடர் களையாய்!
நெடும்களம் மேயவனே! 7

"குன்றின் உச்சிமேல் விளங்கும்
கொடி மதில் சூழ் இலங்கை,
அன்றி நின்ற அரக்கர் கோனை
அரு வரைக்கீழ் அடர்த்தாய்!"
என்று, நல்ல வாய்மொழியால்
ஏத்தி இராப் பகலும்
நின்று நைவார் இடர் களையாய்!
நெடும்களம் மேயவனே! 8

---

7. கூறு - உமைபாகம். மூன்றும் - திருமால், தீ, காற்று ஆகிய மூன்றையும். மாறு கொண்டார் - பகைவர். சாந்தம் - சந்தனம். திருநீற்றையே சந்தனம் எனக் கொண்டவர்.

8. அன்றி - மாறுபட்டு, சினந்து. வரை - கயிலைமலை. நைவார் - உள்ளம் நெகிழ்வார்.

வேழ வெண் கொம்பு ஒசித்த மாலும்,
விளங்கிய நான்முகனும்
சூடி எங்கும் நேட், ஆங்கு ஓர்
சோதியுள் ஆகி நின்றாய்!
கேழல் வெண் கொம்பு அணிந்த பெம்மான்!
கேடு இலாப் பொன் அடியின்
நீழல் வாழ்வார் இடர் களையாய்!
நெடுங்களம் மேயவனே! 9

வெம் சொல் தம்சொல் ஆக்கிநின்ற
வேடம் இலாச் சமணும்,
தஞ்சம் இல்லாச் சாக்கியரும் –
தத்துவம் ஒன்று அறியார்.
துஞ்சல் இல்லா வாய்மொழியால்
தோத்திரம், நின் அடியே
நெஞ்சில் வைப்பார் இடர் களையாய்!
நெடுங்களம் மேயவனே! 10

---

9. வேழ வெண்கொம்பு - பகைவர் விடுத்த ஆண் யானையின் வெண்ணிறத் தந்தம். ஒசித்த - முறித்த. நேட - தேட. கேழல் - ஆண்பன்றி.

10. வெம் சொல்–கடுமொழி. தஞ்சம்–புகலிடம், சார்பு. தத்துவம் – பொருள். துஞ்சல் – அழிவு, கேடு.

நீட வல்ல வார் சடையான்
மேய நெடும்களத்தைச்,
சேடர் வாழும் மாமறுகின்
சிரபுரக்கோன், நலத்தால்
நாட வல்ல பனுவல் மாலை,
ஞான சம்பந்தன் சொன்ன
பாடல் பத்தும் பாடவல்லார்
பாவம் பறையுமே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. நீட — மேன் மேலும் வளர. வார்சடை — நீண்ட சடை. சேடர்-இளையார். பறையும் - விலகும்.

1 : 53 திருமுதுகுன்றம்

பண் : பழம்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

தேவராயும், அசுரராயும்,
சித்தர், செழுமறை சேர்
நாவராயும், நண்ணு பாரும்
விண் எரிகால் நீரும்
மேவராய, விரை மலரோன்
செங்கண் மால் ஈசன் என்னும்
மூவராய முதல் ஒருவன்
மேயது முதுகுன்றே. 1

பற்றும் ஆகிவான் உளோர்க்குப்,
பல்கதிரோன் மதி பார்
எற்று நீர் தீக் காலும் மேலை
விண் இயமானனோடு
மற்று மாது ஓர், பல் உயிராய்
மால் அயனும் மறைகள்
முற்றும் ஆகி வேறும் ஆனான்
மேயது முதுகுன்றே. 2

---

1 மறைசேர் நாவர் - வேதியர், அந்தணர். பார் - நிலம். விண் - வானம். எரி - தீ, கால்-காற்று. பார் முதலான ஐந்து பூதங்கள். மேவர்-பொருந்தியுள்ளவர். ஈசன் - உருத்திரன். முதல் ஒருவன் - ஒருவனே ஆன முதல்வன். மேவியது - விரும்பி எழுந்தருளியது.

2. பற்று - சார்பு, ஆதாரம் - வானுளோர்க்குப் பற்றுமாகி என மாறிக் கொள்க. கதிரோன் முதலான

வாரி மாகம் வைகு திங்கள்
வாள் அரவஞ் சூடி,
நாரி பாகம் நயந்து, பூமேல்
நான்முகன்தன் தலையில்
சீரிதாகப் பலிகொள் செல்வன்
செற்றலும், தோன்றியது ஓர்
மூரி நாகித்து உரிவை போர்த்தான்
மேயது முதுகுன்றே, 3

பாடுவாருக்கு அருளும் எந்தை
பனிமுது பௌவ முந்நீர்
நீடு பாரும் முழுதும் ஓடி
அண்டர் நிலை கெடலும்,
நாடுதானும் ஊடும் ஓடி
ஞாலமும் நான்முகனும்
ஊடு காண மூடும் வெள்ளத்து
உயர்ந்தது முதுகுன்றே. 4

எட்டு மா உருவினன். இயமானன் - புருடனாகிய உயிர், உலக நுகர்ச்சியில் செல்லும் உயிர். முற்றும் ஆகி வேறும் ஆனான் - கலந்து நிற்கும் நிலையில் அவையே ஆகியும் பொருள் தன்மையால் வேறாகியும் விளங்கும் சிவபெருமான்.

3. வாரி - கங்கைப் பெருக்கு. மாகம் வைகு திங்கள் - வானத்தில் தங்கியுள்ள சந்திரன். வாள்-ஒளி நாரி - பெண். நயந்து - விரும்பி. செற்றலும் - சினத்தலும், மூரி நாகம் - வலிமையுடைய யானை.

4. பனிமுது பௌவம் - குளிர்ந்த பழமையான கடல். முந்நீர் - ஆற்று நீர், ஊற்று நீர், மழை நீர் மூன்றும் கூடிய கடல் நீர். அண்டர் - தேவர்கள்;

வழங்கு திங்கள், வன்னி, மத்தம்,
மாசுணம் மீது அணவிச்,
செழும்கல் வேந்தன் செல்வி காணத்,
தேவர் திசை வணங்கத்,
தழங்கு மொந்தை தக்கை மிக்க
பேய்க் கணம் பூதம் சூழ,
முழங்கு செந்தீ ஏந்தி ஆடி
மேயது முதுகுன்றே. 5

கழிந்த கங்கை தோய்ந்த திங்கள்
தோல் அரா நல் இதழி
சழிந்த சென்னிச் சைவ வேடம்
தாள் இணைத்து ஐம்புலனும்
அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு
அறம் பொருள் இன்பம் வீடு
மொழிந்த வாயான் முக்கண் ஆதி
மேயது முதுகுன்றே. 6

... ... 7

5. மாசுணம் - பாம்பு. மீது - முடியின்மேல். அணவி - பொருந்தி. செழும் கல் வேந்தன் - இமய மலைக்கு அரசன். செல்வி - இமவான் மகளாகத் தோன்றிய உமை. திசை - திசைதோறும். மொந்தை - பறை வகை. தக்கையும் அவ்வாறே மொந்தை ஒரு கண் உடையது. தக்கை இருகண் உடையது.

6. இதழி - கொன்றை. சழிந்த - நெருங்கிக் கிடக்கும். தாள் இணைத்து - கால்களைப் பின்னி ஆசனம் இட்டு. ஐம்புலனும் அழிந்த சிந்தை - பொறிவழிச் செல்லாது அடங்கப் பெற்ற மனம். ஆதி - முதல்வன்.

மயங்கு மாயம் வல்லர் ஆகி,
　　வானினெடு நீரும்
இயங்குவோருக்கு இறைவன் ஆய
　　இராவணன் தோள் நெரித்த
புயங்கராக மா நடத்தன்,
　　புணர்முலை மாது உமையாள்
முயங்கு மார்பன், முனிவர் ஏத்த
　　மேயது முதுகுன்றே.　8

ஞாலம் உண்ட மாலும், மற்றை
　　நான்முகனும் அறியாக்,
கோலம் அண்டர் சிந்தை கொள்ளார்
　　ஆயினும், கொய் மலரால்
ஏல இண்டை கட்டி, நாமம்
　　இசைய எப்போதும் ஏத்தும்
மூலம் உண்ட நீற்றர் வாயான்
　　மேயது முதுகுன்றே.　9

---

8. மயங்கு மாயம் - பிறரை மயங்க வைக்கும் மாயங்கள். புயங்கர் - பாம்புக் கூத்து வல்லார், சிவபெருமான். புணர் - இணைந்த.

9. ஞாலம் - உலகம். கோலம் - தீயுரு. அண்டர்- தேவர்கள். சிந்தை கொள்ளார் – நினையார். ஏல - பொருத்தமாக. இண்டை - மாலை வகை. நாமம் - சிவன் திருப்பெயரான திரு ஐந்தெழுத்து. மூலம் உண்ட நீற்றர் - மூலமலத்தை நீறாகச் செய்த திருநீற்றை அணிந்த அடியார். வாயான் துதிப்பார் - வாய்மொழி யில் நின்று விளங்குபவன்.

உறி கொள்கையர், சீவரத்தர்,
உண்டு உழல் மிண்டர் சொல்லை
நெறிகள் என்ன நினைவுறாதே,
நித்தலும் கை தொழுமின்!
மறிகொள் கையன், வங்க முந்நீர்ப்
பொங்கு விடத்தை உண்ட,
முறிகொள் மேனி மங்கை பங்கன்
மேயது முதுகுன்றே. 10

மொய்த்து வானோர் பல் கணங்கள்
வணங்கும் முதுகுன்றைப்
பித்தர் வேடம் பெருமை என்னும்
பிரமபுரத் தலைவன்.
... ... 11

திருச்சிற்றம்பலம்

---

10. உறி-குண்டிகையைத் தாங்கும் கயிற்று உறி. சீவரம் - காவி ஆடை, மிண்டர் - மிண்டுசெய்பவர், உடல் வலிமை உடையவர். மறி - மான் கன்று; வங்க முந்நீர் - கப்பல் செல்லும் கடல். முறிகொள் மேனி-மாந்தளிர் போன்ற நிறத்தை உடைய உடம்பு;

1 : 54 திரு ஓத்தூர்

பண்: பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

பூத் தேர்ந்து ஆயன கொண்டு நின் பொன் அடி
ஏத்தாதார் இல்லை எண்ணுங்கால்,
ஓத்தூர் மேய ஒளி மழுவாள் அங்கைக்
கூத்தீர்! உம்ம குணங்களே. 1

இடை ஈர் போகா இளமுலையாளை ஓர்
புடையீரே! புள்ளிமான் உரி
உடையீரே! உம்மை ஏத்துதும், ஓத்தூர்ச்
சடையீரே! உமதாளே 2

உள் வேர் போல நொடிமையினார் திறம்
கொள்வீர் அல்குல் ஓர் கோவணம்;
ஒள் வாழைக் கனிதேன் சொரி ஓத்தூர்க்
கள்வீரே! உம காதலே. 3

---

1. ஆயன - பூசைக்கு வேண்டியன. கூத்தீர் - கூத்தினை உடையவரே !

2. ஈர் - ஈர்க்கு. ஓர் புடையீர் - ஒரு பாகத்தில் கொண்டவரே !

3. உள்வேர் போல நொடிமையினார்-உள்ளத்தில் நினைப்புடையவரே போன்று வெளியே பொய்யாகப் பேசுபவர். அல்குல் - அரை.

தோட்டிரே! துத்தி ஐந்தலை நாகத்தை
ஆட்டிரே! அடியார் வினை
ஓட்டிரே! உம்மை ஏத்துதும், ஒத்தூர்
நாட்டிரே! அருள் நல்குமே! 4

குழை ஆர் காதீர்! கொடு மழுவாள் படை
உழை ஆள்வீர்! திரு ஒத்தூர்
பிழையா வண்ணங்கள் பாடி நின்று ஆடுவார்
அழையாமே அருள் நல்குமே! 5

மிக்கார் வந்து விரும்பிப் பலியிடத்,
தக்கார் தம் மக்களீர் என்று
உட்காதார் உளரோ? திரு ஒத்தூர்
நக்கீரே! அருள் நல்குமே! 6

---

4. தோட்டிர் - ஒரு காதில் தோட்டினை அணிந்தவரே! துத்தி - பாம்பின் படத்தில் உள்ள புள்ளி. ஆட்டிர் - ஆட்டுபவரே!

5. உழை - மான். பிழையா - தவறுபடா. வண்ணம் - பா ஓசை வகை.

6. மிக்கார் - பலர். உட்காதார் - அஞ்சாதவர். நக்கிர் - மகிழ்ச்சி உடையீர்!

" தாதார் கொன்றை தயங்கு முடிஉடை
நாதா! " என்றி நலம் புகழ்ந்து
ஓதாதார் உளரோ ? திரு ஓத்தூர்
ஆதீரே! அருள் நல்குமே! 7

" என்தான், இம்மலே! " என்ற அரக்கனே
வென்ருர் போலும், விரலினுல் !
ஒன்ருர் மும்மதில் எய்தவன் ஓத்தூர்
என்ருர் மேல் வினே ஏகுமே. 8

நன்ரும் ! நால்மறையாளுெடு மாலுமாய்ச்
சென்ருர் போலும், திசை எலாம்!
ஒன்ருய் ஒள் எரியாய் மிக; ஓத்தூர்
நின்றீரே! உமை நேடியே. 9

---

7. தாது ஆர் - மகரந்தம் நிறைந்த. ஆதீர் - முதல்வரே !

8. என்தான் - எம் மாத்திரம்! ஒன்ருர் - பகைவர். ஏகும் - ஒழியும்.

9. நன்ரும் ! - என்னே அழகு ! என்னும் இகழ் மொழி.

கார் அமண் கலிங்கத் துவர் ஆடையர்
தேரர் சொல் அவை தேறல்மின்!
ஓர் அம்பால் எயில் எய்தவன் ஓத்தூர்ச்
சீரவன் கழல் சேர்மினே! 10

குரும்பை ஆண்பனை ஈன் குலை ஓத்தூர்
அரும்பு கொன்றை அடிகளைப்
பெரும் புகலியுள் ஞானசம்பந்தன் சொல்
விரும்புவார் வினை வீடே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. கலிங்கம் - ஆடை, கலிங்க நாடு: துவர் - காவி. தேறல் மின் - பொருளாகக் கொள்ளாதீர்.

11. திருவருளால் ஆண்பனை குரும்பை ஈன்ற பெருமையை உடைய திருவோத்தூர்; வீடே - விட்டொழியும்.

1 : 55 திருமாற்பேறு

பண் : பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

ஊறி ஆர்தரு நஞ்சினை உண்டு உமை
நீறு சேர்திரு மேனியர்,
சேறு சேர்வயல் தென் திருமாற்பேற்றின்
மாறிலா மணி கண்டரே. 1

தொடைஆர் மாமலர் கொண்டு இருபோது உம்மை
அடைவாராம் அடிகள் என,
மடைஆர் நீர் மல்கு மன்னிய மாற்பேறு
உடையீரே! உமை உள்கியே. 2

பை ஆரும் அரவம் கொடு ஆட்டிய
கையான் என்று வணங்குவர்
மை ஆர் நஞ்சு உண்டு மாற்பேற்று இருக்கின்ற
ஐயா நின் அடியார்களே. 3

---

1. ஊறி ஆர் தரு - கடலில் ஊறி நிறைய வந்த. உமை நீறு சேர் - உமையம்மையும் திருநீறும் சேர்ந்த. மாறு இலா - தீமை இல்லாத. மணி கண்டர் - நஞ்சுக் கறையால் நீல மணி போன்ற நிறம் பொருந்திய கழுத்தினர்.

2. தொடை - மாலை. உள்கி - நினைந்து.

3. பை - படம். மை - கருநிறம்.

சால மாமலர் கொண்டு சரண் என்று
மேலையார்கள் விரும்புவர்
மாலினுர் வழிபாடுசெய் மாற்பேற்று
நீலம் ஆர் கண்ட! நின்னையே. 4

"மாறு இலா மணியே!" என்று வானவர்
ஏறவே மிக ஏத்துவர்;
கூறனே! குலவும் திருமாற்பேற்றின்,
நீறனே! என்று நின்னையே. 5

உரையாதார் இல்லை ஒன்று நின் தன்மையைப்
பரவாதார் இல்லை நாள்களும்;
திரைஆர் பாலியின் தென்கரை மாற்பேற்று
அரையானே! அருள் நல்கிடே. 6

---

4. சால - மிகுதியாக. சரண் - அடைக்கலம். மேலையார் - மேலோர். மாலினுர் வழிபாடு செய் மாற்பேறு - திருமால் வழிபட்டுப் பேறு பெற்ற தலமாகிய மாற்பேறு.

5. மாறு இலா மணி - நன்மையே செய்யும் மாணிக்கம் போன்ற செந்நிறம் உடையவன். ஏற - உயர்ச்சியாக.

6. சொல்லாதவரும் துதிக்காதவரும் இல்லை.

... ... 7

அரசு அளிக்கும் அரக்கன் அவன்தனை
உரை கெடுத்து, அவன் ஒல்கிட,
வரம் மிகுத்த எம் மாற்பேற்று அடிகளைப்
பரவிடக் கெடும் பாவமே. 8

இருவர் தேவரும் தேடித் திரிந்து,இனி
ஒருவரால் அறிவொண்ணிலன்;
மருவு நீள்கழல் மாற்பேற்று அடிகளைப்
பரவுவார் வினை பாறுமே. 9

தூசு போர்த்து உழல்வார் கையில் துற்றுஉணும்
நீசர்தம் உரை கொள்ளெலும்!
தேசம் மல்கிய தென் திருமாற்பேற்றின்
ஈசன் என்று எடுத்து ஏத்துமே. 10

---

7. ... ...

8: அரசு அளிக்கும் அரக்கன் - அரசனாகிய அரக்கன் இராவணன். உரை - புகழ். ஒல்கிட - அடங்க.

9: மருவுதல் - பொருந்துதல். பாறும் – கெடும்.

10: தூசு - ஆடை. துற்று - உணவு. கொள்ளெல் - கொள்ளாதீர். தேசம் - புகழொளி.

மன்னி மாலொடு சோமன் பணிசெயும்
மன்னும் மாற்பேற்று அடிகளை
மன்னு காழியுள் ஞானசம்பந்தன்சொல்
பன்னவே வினை பாறுமே. 11

திருச்சிற்றம்பலம்

11. சோமன் - சந்திரன். பன்ன - சொல்ல.

1 : 56 திருப்பாற்றுறை

பண் : பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

கார் ஆர் கொன்றை கலந்த முடியினர்
சீர் ஆர் சிந்தை செலச்செய்தார்;
பாரார் நாளும் பரவிய பாற்றுறை
ஆரார், ஆதி முதல்வரே. 1

நல்லாரும் அவர்; தீயர் எனப்படும்
சொல்லார்; நன்மலர் சூடினார்;
பல் ஆர் வெண்தலைச் செல்வர், எம் பாற்றுறை,
எல்லாரும் தொழும் ஈசரே. 2

விண் ஆர் திங்கள் விளங்கும் நுதலினர்.
எண் ஆர்வத்தேன் எழில் கொண்டார்;
பண் ஆர் வண்டினம் பாடல்செய் பாற்றுறை
யுள் நாள்நாளும் உறைவரே. 3

---

1. கார் - கார் காலம். சிந்தை செல - அன்பர் எண்ண மெல்லாம் தம்மிடம் சேருமாறு. பாரார் - உலகத்தவர். ஆதி முதல்வர் - திருமூல நாதர்.

2. சொல்லார் - சொல்லப் படுவார்.

3. நுதல் - நெற்றி. எண்ணார் - எனக்கு உண்டாகும் வருத்தம் நினையார். எழில் - அழகு. நாள் நாளும் - நாள் தோறும்.

பூவும் திங்கள் புனைந்த முடியினர்
ஏவின் அல்லார் எயில் எய்தார்;
பாவம் தீர்புனல் மல்கிய பாற்றுறை
ஓ என் சிந்தை ஒருவரே. 4

மாகம் தோய் மதிசூடி மகிழ்ந்து,எனது
ஆகம் பொன் நிறம் ஆக்கினர்;
பாகம் பெண்ணும் உடையவர், பாற்றுறை
நாகம் பூண்ட நயவரே. 5

போது பொன்திகழ் கொன்றை புனைமுடி
நாதர் வந்து என் நலம் கொண்டார்;
பாதம் தொண்டர் பரவிய, பாற்றுறை
வேதம் ஓதும் விகிர்தரே. 6

---

4. ஏவின்-அம்பினல். அல்லார் - பகைவர்.

5. மாகம் - வானம். ஆகம் - மேனி. நயவர் - நன்மையானவர்.

6. போது - மலர்; நலம் - அழகு.

வாடல் வெண்தலை சூடினர், மால்விடை
கோடல் செய்த குறிப்பினர்,
பாடல் வண்டினம் பண்செயும் பாற்றுறை
ஆடல் நாகம் அசைத்தாரே. 7

வெவ்வ மேனியராய், வெள்ளை நீற்றினர்,
எவ்வம் செய்து என்எழில் கொண்டார்;
பவ்வ நஞ்சு அடை கண்டர்,எம் பாற்றுறை
மவ்வல் சூடிய மைந்தரே. 8

ஏனம் அன்னமும் ஆனவருக்கு, எரி
ஆன வண்ணத்து எம் அண்ணலார்;
பானல் அம்மலர் விம்மிய பாற்றுறை,
வான வெண்பிறை மைந்தரே. 9

---

7. வாடல் - உலர்ந்த. மால் - பெரிய. கோடல் - கொள்ளல்.

8. வெவ்வ - வெம்மையான. எவ்வம் - துன்பம். பவ்வம் - கடல். மவ்வல் - முல்லை.

9. ஏனம் - பன்றி. பானல் - நீலோற்பலம்.

வெந்த நீற்றினர், வேலினர், நூலினர்,
வந்து என் நல் நலம் வௌவினர்;
பைந்தண் மாதவி சூழ்தரு பாற்றுறை
மைந்தர்தாம் ஓர் மணாளரே. 10

பத்தர் மன்னிய பாற்றுறை மேவிய
பத்து நூறு பெயரனைப்
பத்தன் ஞான சம்பந்தனது இன் தமிழ்
பத்தும் பாடிப் பரவுமே! 11

திருச்சிற்றம்பலம்

10. வௌவினர் - கவர்ந்தார். மாதவி - குருக்கத்தி.

11. பத்து நூறு பெயரன் - ஆயிரம் திருப்பெயர் உடையான்.

1 : 57

திருவேற்காடு

பண் : பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

ஒள்ளிது உள்ளக் கதிக்காம்; இவன் ஒளி
வெள்ளியான் உறை வேற்காடு
உள்ளியார் உயர்ந்தார், இவ் உலகினில்,
தெள்ளியார் அவர் தேவரே. 1

ஆடல் நாகம் அசைத்து, அளவு இல்லது ஓர்
வேடம் கொண்டவன் வேற்காடு
பாடியும், பணிந்தார், இவ் உலகினில்
சேடர் ஆகிய செல்வரே. 2

பூதம் பாடப் புறங்காட்டிடை ஆடி
வேத வித்தகன் வேற்காடு
போதும் சாந்தும் புகையும் கொடுத்தவர்க்கு
ஏதம் எய்துதல் இல்லையே. 3

---

1. ஒள்ளிது உள்ள - சிறந்த பொருளைப் பெற எண்ணினால். கதிக்கு ஆம் - உயர் கதிக்கு வழியாகும். தெள்ளியார் - தெளிவுடையார்.

2. சேடர் – பெருமை உடையவர்.

3. போது - மலர். ஏதம் – குற்றம், கேடு.

ஆழ் கடல் எனக் கங்கை கரந்தவன்
வீழ் சடையினன் வேற்காடு
தாழ்வுடை மனத்தால் பணிந்து ஏத்திடப்
பாழ்படும் அவர் பாவமே. 4

காட்டினானும் அயர்த்திடு அக்காலனை
வீட்டினான் உறை வேற்காடு
பாட்டினால் பணிந்து ஏத்திட வல்லவர்
ஓட்டினார் வினை ஒல்லையே 5

தோலினால் உடை மேவ வல்லான் சுடர்
வேலினான் உறை வேற்காடு
நூலினால் பணிந்து ஏத்திட வல்லவர்
மாலினார் வினை மாயுமே. 6

---

4. கரந்தவன் - சடையில் அடக்கிக் கொண்டவன். வீழ் சடை - தாழ்ந்த சடை. தாழ்வுடை மனம் - பணிவுடைய மனம். 'பாவம் பாழ்படும்' என மாறுக.

5. அயர்த்திடு - மறந்து விடும். வீட்டினான் - அழித்தவன். ஒல்லை - விரைவில்.

6. மாலினார் - மயக்கத்தை உடையவர்.

மல்லல் மும்மதில் மாய்தர எய்தது ஓர்
வில்லினன் உறை வேற்காடு
சொல்ல வல்ல சுருங்கா மனத்தவர்
செல்ல வல்லவர், தீர்க்கமே. 7

மூரல் வெண் மதி சூடும் முடி உடை
வீரன் மேவிய வேற்காடு
வாரமாய் வழிபாடு நினைந்தவர்
சேர்வர் செய்கழல், திண்ணமே. 8

பரக்கினர் படு வெண்தலையில் பலி
விரக்கினன் உறை வேற்காட்டூர்,
அரக்கன் ஆண்மை அட்டரப்படான், இறை
நெருக்கினனை நினைமினே. 9

---

7. மல்லல் - வலிமை, வளம். மாய்தர - அழிய. தீர்க்கம் - உறுதி.

8. மூரல் - இளமை. மூரல் மதி - பிறைத் திங்கள் வாரமாய் - அன்புடன். செய் கழல் - சேவடி.

9. பரக்கினர் - அலைந்து திரிந்தவர். படுவெண் தலை - இறந்து போனவரது தலை ஓடு. விரக்கினன் - சமர்த்தன்.

மாறுஇலா மலரானொடு மாலவன்
வேறலான் உறை வேற்காடு,
ஈறுஇலா மொழியே மொழியா எழில்
கூறினார்க்கு இல்லை குற்றமே. 10

விண்ட மாம்பொழில் சூழ் திருவேற்காடு
கண்டு நம்பன் கழல் பேணிச்
சண்பை ஞான சம்பந்தன் செந்தமிழ்
கொண்டு பாடக் குணம் ஆமே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. மாறிலா - வேறுபாடு இல்லாத. வேறலான்- வேறல் ஆன் - வெற்றி பெறுதலை உடையவன்.

11. விண்ட - மலர்ந்த.

1 : 58 திருக்கரவீரம்

பண்: பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

அரியும் நம்வினை உள்ளன ஆசுஅற;
வரிகொள் மாமணிபோல் கண்டம்
கரியவன் திகழும் கரவீரத்து எம்
பெரியவன் கழல் பேணவே. 1

தங்குமோ, வினை? தாழ்சடை மேலவன்
திங்களோடு உடன் சூடிய
கங்கையான் திகழும் கரவீரத்து எம்
சங்கரன் கழல் சாரவே. 2

ஏதம் வந்தடையா இனி, நல்லன
பூதம் பல்படை ஆக்கிய
காதலான் திகழும் கரவீரத்து எம்
நாதன் பாதம் நணுகவே. 3

---

1. அரியும் - அழியும். ஆசு-குற்றம். வரி - நிறம். பேண - போற்ற.

2. தங்குமோ? - தங்காது ஒழியும். சங்கரன் - இன்பத்தைச் செய்பவன்.

3. ஏதம் - குற்றம், துன்பம்.

பறையும் நம்வினை உள்ளன பாழ்பட,
மறையும் மா மணிபோல் கண்டம்
கறையவன் திகழும் கரவீரத்து எம்
இறையவன் கழல் ஏத்தவே. 4

பண்ணின் ஆர் மறை பாடலன், ஆடலன்,
விண்ணின் ஆர் மதில் எய்த முக்
கண்ணினன் உறையும் கரவீரத்தை
நண்ணுவார் வினை நாசமே. 5

நிழலின் ஆர்மதி சூடிய நீள்சடை,
அழலின் ஆர் அழல் ஏந்திய
கழலினன் உறையும் கரவீரத்தைத்
தொழ வல்லார்க்கு இல்லை துக்கமே. 6

---

4. பறையும் - நீங்கும்.

5. ... ...

6. நிழலின் ஆர் - ஒளியால் நிறைந்த.

வண்டர் மும்மதில் மாய்தர எய்தவன்,
அண்டனுர், அழல்போல் ஒளிர்
கண்டனுர் உறையும் கரவீரத்துத்
தொண்டர்மேல் துயர் தூரமே. 7

"புனல் இலங்கையர் கோன் முடிபத்து இறச்
சினவல் ஆண்மை செகுத்தவன்,
கனலவன் உறைகின்ற கரவீரம்"
என வல்லார்க்கு இடர் இல்லையே. 8

வெள்ளத் தாமரையானெடு மாலுமாய்த்
தெள்ளத் தீத்திரள் ஆகிய
கள்ளத்தான் உறையும் கரவீரத்தை
உள்ளத்தான் வினை ஓயுமே. 9

---

7. வண்டர் - தீயவர். அண்டன் - தேவன்.

8. சினவல் ஆண்மை - சினத்தொடு கூடிய வலிய ஆண்மை. செகுத்தவன் - அழித்தவன்.

9. வெள்ளத் தாமரை - நீரில் மலர்வதாகிய தாமரை. கள்ளத்தான் - தன்னைப் பிறர் அறியாத் தன்மையர்ன்.

செடி அமணொடு சீவரத்தார் அவர்
கொடிய வெவ்உரை கொள்ளேன்மின்!
கடியவன் உறைகின்ற கரவீரத்து
அடியவர்க்கு இல்லை அல்லலே. 10

வீடு இலான் விளங்கும் கரவீரத்து எம்
சேடன்மேல் கசிவால், தமிழ்
நாடு ஞானசம்பந்தன் சொல் இவை
பாடு வார்க்கு இல்லை பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. செடி - தீ நாற்றம். வெவ்வுரை - வெம்மை மொழி.

11. வீடு இலான் - கட்டிலிருந்து ஒருகால் நீக்கம் என்பது இல்லாதவன், இயல்பாகவே கட்டற்றவன்; அழிவு இல்லாதவன். சேடன் - பெரியோன்;

1:59 திருத்தூங்கானைமாடம்

பண் : பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

ஒடுங்கும் பிணி, பிறவி, கேடு-என்று இவை
உடைத்தாய வாழ்க்கை ஒழியத், தவம்
அடங்கும் இடம் கருதி நின்றீர் எல்லாம்,
அடிகள் அடிநிழல்கீழ் ஆள்ஆம் வண்ணம்,
கிடங்கும் மதிலும் சுலாவி, எங்கும்
கெழுமனைகள் தோறும், மறையின் ஒலி
தொடங்கும் கடந்தைத் தடம் கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே! 1

---

1. ஒடுங்கும் பிணி - தான் ஒடுங்குதற்குக் காரணமான நோய், மலநோய்: தன் அளவில் சுருங்குதற்குக் காரணமான ஆணவமலம், அம்மலம் நீங்குதற்கெனத் தரப்பட்ட பிறவி, அப் பிறவியில் உண்டாகிய துன்பங்கள் என்னும் இவற்றை ஒருங்கே கொண்ட வாழ்க்கை என்றது உயிரின் கட்டுண்ட கால வாழ்க்கையை. ஆளாம்வண்ணம்-அடிமையாகும்படி. கிடங்கு - அகழி. சுலாவி - சூழ்ந்து. கெழு - பொருந்தி யுள்ள: தடம் கோயில் - பெரிதான கோயில். தூங்கானை மாடம் - வடிவம் காரணமாகப் பெற்ற இக் கோயிற் பெயர்.

பிணிநீர் சாதல், பிறத்தல் இவை
பிரியப், பிரியாத பேரின்பத்தோடு,
அணிநீர மேல் உலகம் எய்தல் உறின்,
அறிமின்! குறைவில்லை; ஆன் ஏறுஉடை,
மணி நீல கண்டம் உடைய பிரான்,
மலைமகளும் தானும் மகிழ்ந்து வாழும்
துணிநீர்க் கடந்தைத் தடம்கோயில் சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே! 2

சாம்நாளும் வாழ்நாளும் தோற்றம் இவை
சலிப்பாய வாழ்க்கை ஒழியத், தவம்
ஆமாறு அறியாது அலமந்து நீர்
அயர்ந்தும் குறைவில்லை. ஆன் ஏறுஉடைப்
பூமான் அலங்கல் இலங்கு கொன்றை,
புனல் பொதிந்த புன்சடையினான் உறையும்
தூமாண் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே! 3

---

2. பிணி நீர - ஆணவ மலக்கட்டோடு கூடிய. பிரியாத - என்றுமே தன்னை விட்டு நீங்காது இருந்து வரும். மேல் உலகம் - சிவன் உலகம். ஆன் ஏறு - எருது. துணிநீர் - விளங்கித் தோன்றும் தன்மையை உடைய.

3. அலமந்து அயர்ந்தும் - வருந்தித் தளர்ந்தும். அலங்கல் - மாலை. புனல் - கங்கை.

ஊன்றும் பிணி, பிறவி, கேடு-என்று இவை
உடைத்தாய வாழ்க்கை ஒழியத், தவம்
மான்று மனம் கருதி நின்றீர் எல்லாம்,
மனம் திரிந்து மண்ணில் மயங்காது, நீர்
மூன்று மதில் எய்தமூவாச் சிலை
முதல்வர்க்கு இடம்போலும், முகில்தோய்கொடி
தோன்றும் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே! 4

மயல்தீர்மை இல்லாத தோற்றம் இவை
மரணத்தொடு ஒத்து அழியுமாறு, ஆதலால்,
வியல்தீர மேல் உலகம் எய்தல் உறின்,
மிக்கு ஒன்றும் வேண்டா; விமலன் இடம்
உயர்தீர ஓங்கிய நாமங்களால்
ஓவாது நாளும் அடிபரவல்செய்
துயர்தீர் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே! 5

---

4. ஊன்றும் பிணி - தொன்மையே தொடர்ந்திருந்து வரும் மலக்கட்டு. மான்று - மயங்கி. மண்ணின் – உலக நுகர்ச்சிகளில். மூவா - முதிராத. சிலை - மலை வில். முகில் – மேகம்.

5. மயல் தீர்மை - மயக்கம் ஒழியுமாறு. வியல் - பரந்துபட்டு வரும் கட்டுநிலை. உயர் தீர ஓங்கிய - தமக்கு மேற்பட்டன வேறு இல்லாது உயர்ந்த. ஓவாது - இடையறாது.

பல்நீர்மை குன்றிச், செவி கேட்புஇலா,
படர் நோக்கின்கண், பவளந் நிற
நல்நீர்மை குன்றித்,திரை தோலோடு,
நரை தோன்றுங்கால் நமக்கு ஆதல் முன்,
பொன் நீர்மை துன்றப்,புறம் தோன்றும் நல்
புனல் பொதிந்த புன்சடையினன் உறையும்
தொல்நீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே! 6

இறை ஊண் துகளோடு இடுக்கண் எய்தி
இழிப்பு ஆய வாழ்க்கை ஒழியத், தவம்,
நிறை ஊண் நெறி கருதி நின்றீர் எல்லாம்,
நீள் கழலே நாளும் நினைமின்! சென்னிப்
பிறை சூழ் அலங்கல் இலங்கு கொன்றை
பிணையும் பெருமான் பிரியாத, நீர்த்
துறை சூழ் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே! 7

---

6. பல் நீர்மை குன்றி - பற்கள் தம் நிலைமை கெட்டு. செவி கேட்பு இலா - காது செவிடாகி. படர் நோக்கின் கண்-தெளிவற்ற பரவிய பார்வையை உடைய கண். திரை தோல் - சுருக்கு விழுந்த தோல். ஆதல் முன் - வருதலுக்கு முன்பே. துன்ற - நிறைய.

7. இறை ஊண் - உலகத்துச் சிற்றின்ப நுகர்ச்சிகள். துகள் - குற்றம். இடுக்கண் - துன்பம். நிறை ஊண் - குறைவில்லாத பேரின்ப நுகர்ச்சியாகிய சிவப்பேறு. நீள் கழல் - நீண்டு செல்லும் திருவடியாகிய திரு அருள். அலங்கல் - மாலை.

பல் வீழ்ந்து, நாத் தளர்ந்து மெய்யில் வாடிப்
பழிப்பு ஆய வாழ்க்கை ஒழியத், தவம்,
இல் சூழ் இடம் கருதி நின்றீர் எல்லாம்,
இறையே பிரியாது, எழுந்து போதும்!
கல் சூழ் அரக்கன் கதறச்செய்தான்
காதலியும் தானும் கருதி வாழும்
தொல் சீர்க் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே! 8

நோயும், பிணியும், அரும் துயரமும்
நுகருடைய வாழ்க்கை ஒழியத், தவம்,
வாயும் மனம் கருதி நின்றீர் எல்லாம்,
மலர் மிசைய நான்முகனும், மண்ணும் விண்ணும்
தாய அடி அளந்தான் காணமாட்டாத்
தலைவர்க்கு இடம் போலும், தண்சோலை விண்
தோயும் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே! 9

---

8. போதும் – வாருங்கள். கல் சூழ் - மலையை எடுத்த.

9. நோயும் பிணியும் துயரமும் - மல நோயும் பிறவிப் பிணியும் உலகத்துத் துன்பங்களும். வாயும் மனம் கருதி - வாய்க்க விரும்பிய எண்ணம் கொண்டு. மண்ணும் விண்ணும் தாய அளந்தான் – வானத்தையும் நிலத்தையும் தாவி அளந்த திருமால்.

பகடு ஊர் பசி நலிய நோய் வருதலான்
பழிப்பு ஆய வாழ்க்கை ஒழியத், தவம்,
முகடு ஊர் மயிர் கடிந்த செய்கையாரும்
மூடு துவர் ஆடையரும் நாடிச் சொன்ன
திகழ் தீர்ந்த பொய்ம் மொழிகள் தேற வேண்டா!
திருந்துஇழையும் தானும் பொருந்தி வாழும்,
துகள் தீர் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே! 10

மண் ஆர் முழவு அதிரும் மாட வீதி,
வயல் – காழி ஞானசம்பந்தன், நல்ல
பெண்ணாகடத்துப் பெருங்கோயில் சேர்
பிறை உரிஞ்சும் தூங்கானை மாடம் மேயான்
கண் ஆர் கழல் பரவு பாடல் பத்தும்
கருத்து உணரக் கற்றாரும், கேட்டாரும் – போய்
விண்ணோர் உலகத்து மேவி வாழும்
விதியதுவே ஆகும், வினைமாயுமே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. பகடு ஊர் பசி - யானைத் தீ என்றும் அடங்காப் பசி, பசித்து உண்டு பின்னும் பசிப்பதான உலக நுகர்ச்சியில் மேன்மேலும் உண்டாம் விருப்பம். நோய் - ஆகாமிய வினைக் கட்டாகிய நோய். முகடு - தலைமேல் உண்டான, திகழ் தீர்ந்த – விளக்கம் அற்ற, தேற - பொருளாக் கொள்ள. துகள் - குற்றம்.

11. மண் - முழவின் கண்ணில் வைக்கும் மார்ச்சனை.

1:60 திருத்தோணிபுரம்

பண் : பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

வண் தரங்கப் புனல் கமல
மது மாந்திப், பெடையினொடும்
ஒண் தரங்க இசை பாடும்
அளி அரசே! ஒளி மதியத்
துண்டர், அங்கப் பூண் மார்பர்,
திருத்தோணிபுரத்து உறையும்
பண்டரங்கர்க்கு என் நிலைமை
பரிந்து ஒருகால் பகராயே! 1

---

1. வண் தரங்கம் - வளமை உடைய அலை. கமலம் - தாமரை. மது - தேன். மாந்தி - உண்டு. தரங்க இசை - அலை போன்று அசைகின்ற இசையின் ஆலத்தி என்பர். அளி அரசு - தலைமை வண்டு. மதியத் துண்டர் - பிறை மதியைச் சூடியவர். அங்கப் பூண் - எலும்பு அணி. பண்டரங்கர் - பாண்டரங்கக் கூத்தைச் செய்பவர். பரிந்து பகராயே - மனம் இரங்கிச் சொல்லமாட்டாயா, எடுத்துச் சொல்லு வாயாக !

எறிசுறவம் கழிக்கானல்
இளம்குருகே! என்பயலை
அறிவுறுது ஒழிவதுவும்
அருவினையேன் பயன் அன்றே!
செறி சிறார் பதம் ஓதும்
திருத்தோணிபுரத்து உறையும்
வெறி நிற ஆர் மலர்க்கண்ணி
வேதியர்க்கு விளம்பாயே! 2

பண் பழனக் கோட்டகத்து
வாட்டம் இலாச் செம் சூட்டுக்
கண்பு அகத்தின் வாரணமே!
கடுவினையேன் உறு பயலை,
செண்பகம் சேர் பொழில் புடைசூழ்
திருத் தோணிபுரத்து உறையும்
பண்பனுக்கு என் பரிசு உரைத்தால்
பழி ஆமோ மொழியாயே ! 3

---

2. எறி சுறவம் - எற்றும் சுறுமீன். குருகு - நாரை. பயலை - மேனியில் உண்டான நிறவேறுபாடு, மாந்தளிர் நிறம் பொன் நிறமானது. செறிசிறார் - ஒன்று கூடிய சிறுவர். பதம் - மந்திரம். வெறி நிற ஆர் மலர் - மணமும் நிறமும் நிறைந்த மலர். வேதியர் - சிவபெருமான். விளம்பாய் - எடுத்துச் சொல்லுக !

3, பழனம் - வயல், கோடு - கரை, செஞ்சூடு - செந்நிறமான உச்சிக்கொண்டை. கண்பு - சம்பங் கோரை. வாரணம் - சேவல். உறு - உற்ற, மிகுந்த. பரிசு - தன்மை.

காண் தகைய செங்கால் ஒண்
கழி நாராய் ! காதலால்
பூண்தகைய முலை மெலிந்து,
பொன் பயந்தாள் என்று, வளர்
சேண்தகைய மணி மாடத்
திருத் தோணிபுரத்து உறையும்
ஆண் தகையாற்கு இன்றே சென்று
அடி அறிய உணர்த்தாயே ! 4

பாராரே எனை ஒருகால்;
தொழுகின்றேன்; பாங்கு அமைந்த
கார் ஆரும் செழுநிறத்துப்
பவளத்தாள் கபோதகங்காள் !
தேர் ஆரும் நெடுவீதித்
திருத் தோணிபுரத்து உறையும்
நீர் ஆரும் சடையாருக்கு
என் நிலைமை நிகழ்த்தீரே ! 5

---

4. காண் தகைய - அழகு சிறந்த. பொன் - பொன்னிறமான பசலை. பயந்தாள் - பெற்றாள். சேண் - மிகுந்த உயரம். அடி அறிய - காரணம் விளங்க.

5. "எனை ஒரு கால் பாரார் !" என மாறுக. கபோதகம் - மாடப்புறு.

சேற்று எழுந்த மலர்க் கமலச்
செம்சாலிக் கதிர்வீச,
வீற்றிருந்த அன்னங்காள்!
விண்ணோடு மண், மறைகள்
தோற்றுவித்த திருத் தோணிபுரத்து
ஈசன் துளங்காத
கூற்று உதைத்த திருவடியே
கூடுமா கூறீரே! 6

முன்றில்வாய் மடல் பெண்ணைக்
குரம்பை வாழ் முயங்கு சிறை
அன்றில்காள்! பிரிவுறு நோய்
அறியாதீர், மிகவல்லீர்;
தென்றலார் புகுந்து உலவும்
திருத் தோணிபுரத்து உறையும்
கொன்றை வார்சடையார்க்கு என்
கூர் பயலை கூறீரே! 7

---

6. செஞ்சாலி-செந்நெற்பயிர். விண்ணோடுமண் - பொருளுலகு. மறை - சொல்லுலகு. துளங்காத - கலங்காமல் வந்த.

7. முன்றில் வாய் - முற்றத்தில் உள்ள. பெண்ணை - பனை. குரம்பை - கூடு. முயங்கு - ஆணும் பெண்ணுமாய் ஒன்றை விட்டு ஒன்று பிரியாதிருக்கும். பிரிவுறு நோய் அறியாதீர் - பிரிவினால் உண்டாம் துயரம் தெரியாதவர். கூர் - மிகுந்த.

பால் நாறும் மலர்ச் சூதப்
பல்லவங்கள் அவை கோதி,
ஏனோர்க்கும் இனிது ஆக
மொழியும் எழில் இளம்குயிலே!
தேன் ஆரும் பொழில் புடைசூழ்
திருத் தோணிபுரத்து, அமரர்
கோனாரை என் இடைக்கே
வரு ஒருகால் கூவாயே! 8

நல் பதங்கள் மிக அறிவாய்;
நான் உன்னை வேண்டுகின்றேன்.
பொற்பு அமைந்த வாய் அலகின்
பூவை நல்லாய்! போற்றுகின்றேன்.
சொல் பதம் சேர் மறையாளர்
திருத் தோணிபுரத்து உறையும்
வில் பொலி தோள் விகிர்தனுக்கு என்
மெய்ப் பயலை விளம்பாயே! 9

---

8. பால் நாறும் - பால் மணக்கும். சூதப் பல்லவம் - மாந்தளிர். இனிதாக மொழியும் - இன்பம் உண்டாக இசைக்கும். அமரர் கோனார் - தேவர் தலைவர். என்னிடை - என்னிடத்திற்கு.

9. நல்பதங்கள் - தக்க காலங்கள். பொற்பு - அழகு. பூவை - நாகணவாய்ப் பறவை.

சிறை ஆரும் மடக்கிளியே!
இங்கே வா! தேனொடு பால்
முறையாலே உணத் தருவன்.
மொய் பவளத்தொடு தரளம்
துறை ஆரும் கடல் - தோணிபுரத்து
ஈசன், துளங்கும் இளம்
பிறையாளன் திருநாமம்
எனக்கு ஒருகால் பேசாயே! 10

போர் மிகுத்த வயல் தோணிபுரத்து
உறையும் புரிசடை, எம்,
கார் மிகுத்த கறைக் கண்டத்து
இறையவனை, வண்கமலத்
தார் மிகுத்த வரை மார்பன்
சம்பந்தன் உரைசெய்த
சீர் மிகுத்த தமிழ் வல்லார்
சிவலோகம் சேர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. சிறை - சிறகு. தரளம் - முத்து. துறை - கடற்கரை.

11. போர் - வைக்கோல் போர். கார் - கருமை. வரை மார்பன் - மலைபோன்று உயர்ந்த திண்ணிய மார்பினன்.

1 : 61 திருச்செங்காட்டங்குடி

பண்: பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

நறை கொண்ட மலர் தூவி,
விரை அளிப்ப, நாள்தோறும்
முறைகொண்டு நின்று, அடியார்
முட்டாமே பணி செய்ய,
சிறை கொண்ட வண்டு அறையும்
செங்காட்டங்குடியதனுள்
கறை கொண்ட கண்டத்தான்
கணபதீச்சரத்தானே. 1

வார் ஏற்ற பறை ஒலியும்
சங்கு ஒலியும் வந்து இயம்ப,
ஊர் ஏற்ற செல்வத்தோடு
ஓங்கிய சீர் விழவு ஓவாச்
சீர் ஏற்றும் உடைத்தாய
செங்காட்டங்குடியதனுள்
கார் ஏற்ற கொன்றையான்
கணபதீச்சரத்தானே. 2

---

1. நறை - தேன். விரை - மணம். முட்டாமே - இடைவிடாமல். அறையும் - ஒலிக்கும்.

2. வார் ஏற்ற - வாரால் இழுத்துக் கட்டப்பட்ட இயம்ப - ஒலிக்க. சீர் - புகழ். ஏற்றம் - உயர்ச்சி.

வரந்தையான், சோபுரத்தான்,
மந்திரத்தான், தந்திரத்தான்,
கிரந்தையான், கோவணத்தான்,
கிண் கிணியான், கையது ஓர்
சிரந்தையான், செங்காட்டங்குடியான்,
செஞ்சடைச் சேரும்
கரந்தையான், வெண்நீற்றான்
கணபதீச்சரத்தானே. 3

தொங்கலும் கமழ் சாந்தும்
அகில் புகையும் தொண்டர் கொண்டு,
அங்கையால் தொழுது ஏத்த,
அருச்சுனற்கு அன்று அருள்செய்தான்;
செங்கயல் பாய் வயல் உடுத்த
செங்காட்டங்குடியதனுள்
கங்கை சேர் வார்சடையான்
கணபதீச்சரத்தானே, 4

---

3. வரந்தை, சோபுரம், கிரந்தை - ஊர்ப்பெயர்கள். தந்திரம் - ஆகமநூல். சிரந்தை - தலை. கரந்தை- சிவகரந்தை என்னும் மணப்பூண்டு.

4. தொங்கல் - மாலை.

பாலினுல் நறு நெய்யால்
பழத்தினுல் பயின்று ஆட்டி,
நூலினுல் மணமாலை கொணர்ந்து,
அடியார் புரிந்து ஏத்த,
சேலின் ஆர் வயல் புடை சூழ்
செங்காட்டங்குடியதனுள்
காலினுல் கூற்று உதைத்தான்
கணபதீச்சரத்தானே. 5

நுண்ணியான், மிகப் பெரியான்,
நோயுளார் வாயுளான்,
தண்ணியான், வெய்யான், நம்
தலைமேலான், மனத்துளான்,
திண்ணியான், செங்காட்டங்குடியான்,
செஞ்சடை மதியக்
கண்ணியான், கண்ணுதலான்
கணபதீச்சரத்தானே 6

---

5. பயின்று - அடிக்கடி, நூலினுல் - நூலில் கூறிய முறைப்படி. புரிந்து - விரும்பி. சேல் - மீன் வகை.

6. நோவுளார் - நொந்து வருந்தியவர். தண்ணியான் - குளிர்ச்சியானவன். வெய்யான் - வெம்மையானவன்.

மையின் ஆர் மலர் நெடுங்கண்
மலை மகள் ஓர்பாகமாம்
மெய்யினன், பை அரவம்
அரைக்கு அசைத்தான், மீன் பிறழ் அச்
செய்யின் ஆர் அகன் கழனிச்
செங்காட்டங்குடியதனுள்
கையின் ஆர் கூர் எரியான்
கணபதீச்சரத்தானே. 7

தோடுடையான், குழையுடையான்,
அரக்கன்தன் தோள் அடர்த்த
பீடு உடையான், போர் விடையான்,
பெண்பாகம் மிகப்பெரியான்
சேடுடையான் செங்காட்டங்குடி
யுடையான், சேர்ந்தாடும்
காடுடையான், நாடுடையான்
கணபதீச்சரத்தானே. 8

---

7. மையின் ஆர் மலர் - நீலமலர். மெய் - உடம்பு செய் - பண்படுத்தப்பட்ட வயல். கழனி - விளைநிலம்.

8. பீடு - பெருமை. சேடு - அழகு.

ஆன் ஊரா உழிதருவான்,
அன்று இருவர் தேர்ந்துணரா
வான் ஊரான், வையகத்தான்,
வாழ்த்துவார் மனத்துளான்,
தேன் ஊரான், செங்காட்டங்குடியான்,
சிற்றம்பலத்தான்
கானூரான், கழுமலத்தான்
கணபதீச்சரத்தானே. 9

செடிநுகரும் சமணர்களும்,
சீவரத்த சாக்கியரும்,
படி நுகராது அயர் உழப்பார்க்கு
அருளாத பண்பினன்
பொடி நுகரும் சிறுத் தொண்டர்க்கு
அருள் செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான்
கணபதீச் சரத்தானே. 10

---

9. ஆன் - எருது. ஊரா-ஊர்ந்து. உழிதருவான்—போதல் வருதல்களைச் செய்வான். இருவர் - மாலும் அயனும். வான் ஊரான் - வானத்தில் உயர்ந்து சென்றான். வையகத்தான் - நிலத்தில் ஆழ்ந்து சென்றான்.

10. செடி - தீ நாற்றம். சீவரம் - காவி ஆடை. படி நுகராது - உலகில் நுகரத்தகுவன நுகராமல். அயர் உழப்பார் - துன்பத்தில் உழலுவார். பொடி - திருநீறு. கடி நகர் - காவல் நகரம்.

கறை இலங்கு மலர்க்குவளை
கண்காட்டக் கடிபொழிலின்
நறை இலங்கு வயல் காழித்
தமிழ் ஞானசம்பந்தன்,
சிறை இலங்கு புனல் படப்பைச்
செங்காட்டங்குடி சேர்த்தும்
மறை இலங்கு தமிழ் வல்லார்
வானுலகத்து இருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. கறை - இருண்ட நிறம். சிறை - கரை.
படைப்பை - மருதநிலத்து ஊர்.

1 : 62

திருக்கோளிலி

பண் : பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

நாளாய போகாமே
நஞ்சு அணியும் கண்டனுக்கே
ஆளாய அன்பு செய்வோம்;
மடநெஞ்சே! அரன்நாமம்
கேளாய்! நம் கிளைகிளைக்கும்
கேடுபடாத் திறம் அருளிக்
கோள்ஆய நீக்கும் அவன்
கோளிலி எம்பெருமானே. 1

ஆடுஅரவத்து, அழகு ஆமை,
அணி கேழல் கொம்பு, ஆர்த்த
தோடு அரவத்து ஒருகாதன்,
துணைமலர் நல் சேவடிக்கே
பாடு அரவத்து இசைபயின்று,
பணிந்து எழுவார்தம் மனத்தில்
கோடரவம் தீர்க்கும் அவன்
கோளிலி எம் பெருமானே. 2

---

1. கிளை கிளைக்கும் - விரிந்து வரும் சுற்றத்தார் எல்லார்க்கும். கோள் - மாறுக வருவன.

2. ஆமை - ஆமை ஓடு. கேழல் கொம்பு - பன்றிக் கொம்பு. தோடு அரவம் - பாம்புத் தோடு. பாடு அரவம் - பாடும் ஒலி. கோடரவம் - மனக்கோட்டம்.

நன்றுநகு நாள்மலரால்,
நல் இருக்கு மந்திரம் கொண்டு,
ஒன்றி வழிபாடு செயல்
உற்றவன்தன் ஓங்கு உயிர்மேல்
கன்றிவரு காலன் உயிர் கண்டு,
அவனுக்கு அன்று அளித்தான்
கொன்றை மலர் கொன் திகழும்
கோளிலி எம் பெருமானே 3

வந்த மணலால் இலிங்கம்
மண்ணியின்கண் பாலாட்டும்
சிந்தை செய்வோன்தன் கருமம்
தேர்ந்து சிதைப்பான் வரும் அத்
தந்தைதனைச் சாடுதலும்,
“ சண்டீசன் ” என்றருளிக்
கொந்து அணவும் மலர் கொடுத்தான்
கோளிலி எம் பெருமானே. 4

---

3. நகு நாள் மலர்-அன்று மலர்ந்த பூ. வழிபாடு செயல் உற்றவன் - மார்க்கண்டன். கன்றி - சினந்து. உயிர் கண்டு - உயிர் போகச் செய்து.

4. மண்ணி - ஆற்றின் பெயர். சிந்தை செய்வோன் - விசாரசருமர். சண்டீசன்-ஒரு பதவிப் பெயர். கொந்து அணவு - கொத்தாகக் கூடிய.

வஞ்சமனத்து அஞ்சு ஒடுக்கி,
　　வைகலும் நல் பூசனையால்,
" நஞ்சு அமுதுசெய்தருளும்
　　நம்பி " எனவே நினையும்
பஞ்சவரில் பார்த்தனுக்குப்
　　பாசுபதம் ஈந்து உகந்தான்
கொஞ்சு கிளி மஞ்சு அணவும்
　　கோளிலி எம் பெருமானே. 5

தாவியவன் உடனிருந்தும்
　　காணாத தற்பரனை,
ஆவினில் அஞ்சு ஒடுக்கி,
　　" அங்கணன் " என்று ஆதரிக்கும்
நாஇயல் சீர் நமிநந்தி
　　யடிகளுக்கு நல்கும்அவன்
கோ இயலும் பூ எழுகோல்
　　கோளிலி எம் பெருமானே. 6

---

5. அஞ்சு - ஐம்பொறிகள். வைகலும் - நாள் தோறும். பூசனை – பூசை. நம்பி - தலைவன். பஞ்சவர்- பஞ்ச பாண்டவர். பார்த்தன்-அருச்சுனன். பாசுபதம் - ஒரு படைக்கலம். மஞ்சு - மேகம். அணவும் - நெருங்கும்.

6. தாவியவன் – திருமால். உடன் இருந்தும் - சிவனது திருமேனியில் ஓரிடம் பெற்றிருந்தும். தற்பரன் - தனக்கு உயர்ந்தோன். அங்கணன் - சிவபெருமான். ஆதரிக்கும் - அன்பு செலுத்தும்; நமிநந்தியடிகள் - அறுபத்து மூவருள் ஒருவர்.

கல்நவிலும் மால்வரையான்,
　　கார் திகழும் மாமிட்றான்,
சொல் நவிலும் மாமறையான்,
　　தோத்திரம் செய் வாயின் உளான்,
மின் நவிலும் செஞ்சடையான்,
　　வெண்பொடியான், அங்கையினில்
கொல்நவிலும் சூலத்தான்
　　கோளிலி எம் பெருமானே. 7

அந்தரத்தில் தேர் ஊரும்
　　அரக்கன், மலை அன்று எடுப்ப,
சுந்தரத் தன் திருவிரலால்
　　ஊன்ற, அவன் உடல் நெரிந்து,
மந்திரத்த மறை பாட,
　　வாள் அவனுக்கு ஈந்தானும்
கொந்து அரத்த மதிச் சென்னிக்
　　கோளிலி எம் பெருமானே. 8

---

7. கொல்நவிலும் - கொலைத் திறத்தை உடைய தான.

8. அரக்கன் - இராவணன்; சுந்தர - அழகிய;

நாணம் உடை வேதியனும்
நாரணனும் நண்ண ஒணாத்
தாணு, எனை ஆளுடையான்,
தன் அடியார்க்கு அன்புடைமை
பாணன் இசை பத்திமையால்
பாடுதலும் பரிந்தளித்தான்
கோணல் இளம் பிறைச் சென்னிக்
கோளிலி எம் பெருமானே. 9

தடுக்கு அமரும் சமணரொடு
தர்க்க சாத்திரத்தவர் சொல்
இடுக்கண் வரும் மொழி கேளாது,
ஈசனையே ஏத்துமின்கள்!
நடுக்கம் இலா அமருலகம்
நண்ணலுமாம் அண்ணல் கழல்
கொடுக்ககிலா வரம் கொடுக்கும்
கோளிலி எம் பெருமானே. 10

---

9. நாணம் உடை வேதியன் - நான்முகன். தாணு - நிலைத்த பொருளான சிவபரம்பொருள். பாணன் - பாணபத்திரன்.

10. தடுக்கு அமரும் சமணர் - தடுக்கை உடுத்திக் கொள்ள விரும்பும் சமணர். இடுக்கண் வரும் மொழி- துன்பத்தையே தரும் சொல். கொடுக்ககிலாவரம் - பிறர் யாரும் தர முடியாத வரங்கள்.

நம்பனை, நல் அடியார்கள்
"நாம் உடை மாடு" என்றிருக்கும்
கொம்பு அனையாள் பாகன், எழில்
கோளிலி எம் பெருமானை,
வம்பு அமரும் தண்காழிச்
சம்பந்தன் வண்தமிழ் கொண்டு
இன்பு அமர வல்லார்கள்
எய்துவர்கள், ஈசனையே 11

திருச்சிற்றம்பலம்

---

11. நாம் உடைமாடு - நமது செல்வம். கொம்பு அனையாள் - மெல்லிய பூங்கொம்பை ஒத்த உமையம்மை. வம்பு - மணம்.

1 : 63

திருப்பிரமபுரம்

(பல் பெயர்ப் பத்து) பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

எரி ஆர் மழு ஒன்று ஏந்தி, அங்கை
இடுதலையே கலனா,
வரி ஆர் வளையார் ஐயம் வவ்வாய்,
மாநலம் வவ்வுதியே ?
சரியா நாவின் வேத கீதன்,
தாமரை நான்முகத்தன்,
பெரியான், பிரமன் பேணி ஆண்ட
பிரமபுரத்தானே! 1

பியல் ஆர் சடைக்கு ஓர் திங்கள் சூடிப்,
பெய் பலிக்கென்று, அயலே
கயல் ஆர் தடம்கண் அம்சொல் நல்லார்
கண்துயில் வவ்வுதியே?
இயலால் நடாவி, இன்பம் எய்தி,
இந்திரன் ஆள் மண்மேல்
வியல் ஆர் முரசம் ஓங்கு செம்மை
வேணுபுரத்தானே! 2

---

1. ஐயம் வவ்வாய்-பிச்சையை வாங்க மாட்டாய் மா நலம் வவ்வுதி - பேரழகைக் கவர்கின்றாய். சரியா நாவின் வேத கீதன் - நிலைதவறாத நாவால் வேதங்களை இசைப்பவன். பிரமன் வழிபட்ட தலம் ஆதலால் பிரமபுரம் ஆயிற்று.

2. பெயல் - கங்கை. நடாவி - நடத்தி. அசுரர்க்கு அஞ்சி இந்திரன் இங்கு வந்து மூங்கில் உருவாகி மறைந்திருந்தான். அதனால் வேணுவனம் ஆயிற்று.

நகல் ஆர் தலையும் வெண்பிறையும்
நளிர்சடைமாட்டு, அயலே
பகலாப் பலி தேர்ந்து, ஐயம் வவ்வாய்,
பாய்கலை வவ்வுதியே?
அகலாது உறையும் மாநிலத்தில்
அயல் இன்மையால், அமரர்
புகலால் மலிந்த பூம் புகலி
மேவிய புண்ணியனே! 3

சங்கோடு இலங்கத் தோடு பெய்து,
காதில் ஒர் தாழ்குழையன்,
அம்கோல் வளையார் ஐயம் வவ்வாய்,
ஆய்நலம் வவ்வுதியே?
செங்கோல் நடாவிப் பல்லுயிர்க்கும்
செய்வினை மெய் தெரிய,
வெம்கோத் தருமன் மேவி ஆண்ட
வெங்குரு மேவியவனே! 4

---

3. நகல் - சிரித்தல். நளிர் - குளிர்ந்த. பகலாப் பலி - பகல் காலத்துப் பிச்சை, நடுவற்ற பிச்சை எனவும் கூறுவர். பாய் கலை - பரந்த ஆடை. அயல் - வேறு புகலிடம். அமரர் - தேவர். தேவர்கள் தங்களுக்குப் புகலிடம் இவ்வூரே என வந்து தங்கியதால் புகலி என்று ஆனது.

4. சங்கு - சங்கக் குழை. அம் கோல் வளை - அழகிய திரண்ட வளையல். வெம் கோத் தருமன் - எமதருமன். எமதருமன் மேவி ஆண்ட இடம் ஆதலின் சீகாழி வெங்குரு என்ற பெயர் கொண்டது.

தணிநீர் மதியம் சூடி, நீடு
தாங்கிய தாழ்சடையன்,
பிணிநீர் மடவார் ஐயம் வவ்வாய்,
பெய்கலை வவ்வுதியே?
அணிநீர் உலகமாகி, எங்கும்
ஆழ்கடலால் அழுங்கத்,
துணிநீர் பணியத் தான் மிதந்த
தோணிபுரத்தானே! 5

கவர் பூம்புனலும் தண்மதியும்
கமழ் சடைமாட்டு, அயலே
அவர் பூம் பலியோடு ஐயம் வவ்வாய்,
ஆய் நலம் வவ்வுதியே?
அவர் பூண் அரையர்க்கு ஆதி ஆய
அடல் மன்னன் ஆள் மண்மேல்
தவர் பூம் பதிகள் எங்கும் ஓங்கும்
தங்கு தராயவனே! 6

---

5. தணி நீர் மதியம் - குளிர்ச்சி பொருந்திய மதி; தன் கலைகள் குறைந்த நிலையிலுள்ள பிறை மதி. பிணி - காமநோய். பெய் கலை - உடுத்திய ஆடை. துணி நீர் - மேலெழுந்துவந்த வெள்ளம். உலகம் கடலுள் ஆழ்ந்தபோது இப்பதிமட்டும் நீர் மேல் மிதந்தது ஆதலால் தோணிபுரம் ஆயிற்று.

6. பூண் அரையர் அவர்க்கு ஆதி ஆய அடல் மன்னன் - உலகில் ஆட்சி மேற்கொண்ட காவலர்க்கெல்லாம் முதல்வனாகிய காத்தல் கடவுளான திருமால். திருமால் பூக் கொண்டு வழிபட்ட தலம் ஆதலால் பூந்தராய் எனப் பெயர் கொண்டது.

முலை யாழ் கெழும, மொந்தை கொட்ட,
முன் கடைமாட்டு, அயலே,
நிலையாப் பலி தேர்ந்து, ஐயம் வவ்வாய்,
நீ நலம் வவ்வுதியே?
தலையாய்க் கிடந்து இவ் வையமெல்லாம்
தனது ஓர் ஆணை நடாய்,
சிலையால் மலிந்த சீர்ச் சிலம்பன்
சிரபுரம் மேயவனே! 7

'எருதே கொணர்க!' என்று ஏறி, அங்கை
இடுதலையே கலனா;
கருது ஏர் மடவார் ஐயம் வவ்வாய்,
நீ நலம் வவ்வுதியே?
ஒரு தேர் கடாவி ஆர் அமருள்
ஒருபது தேர் தொலையப்
பொருதேர் வலவன் மேவி ஆண்ட
புறவு அமர் புண்ணியனே! 8

---

7. முலை யாழ் கெழுவ - முல்லை யாழ் இசை கூட. முன் கடை - முன் வாசல். நடாய் - நடத்தி; தலை மாத்திரமான இராகு வழிபட்டதால் சிரபுரம் எனப்பட்டது.

8. ஏர் - விளங்கும் அழகு; கண்துயில் - உறக்கம்; கடாவி - செலுத்தி. ஒருபது தேர் தொலையப் பொரு தேர் வலவன் - ஒரு தேரைக் கொண்டே பத்துத் தேர் வல்லவரை வென்ற சிபி மன்னன். புரு வடிவில் வந்த தீக்கடவுள் பாவம் நீங்க வழிபட்ட தலம் ஆதலின் புறவம் ஆயிற்று.

துவர்சேர் கலிங்கப் போர்வையாரும்,
　　தூய்மை இலாச் சமணும்,
கவர் செய்து உழலக் கண்ட வண்ணம்,
　　காரிகை வார்குழலார்,
அவர் பூம் பலியோடு ஐயம் வவ்வாய்,
　　ஆய் நலம் வவ்வுதியே?
தவர்செய் நெடுவேல் சண்டன் ஆளச்
　　சண்பை அமர்ந்தவனே! 9

நிழலால் மலிந்த கொன்றை சூடி,
　　நீறு மெய்பூசி, நல்ல
குழல் ஆர் மடவார் ஐயம் வவ்வாய்,
　　கோல்வளை வவ்வுதியே?
அழலாய் உலகம் கவ்வைதீர,
　　ஐந்தலை நீள் முடிய
கழல் நாக அரையன் காவலாகக்
　　காழி அமர்ந்தவனே! 10

---

9. கவர் செய்து - அறிவு திரிந்து. காரிகை - அழகு. தவர் - தொளை. சண்டன் ஆள - எமனை அடக்க. சண்பைப் புல்லைப் படைக்கலமாகக் கொண்டு போரிட்டு இறந்த யாதவர் கொலைப்பழி நீங்கக் கண்ணன் வழிபட்டது ஆதலின் சண்பை எனலாயிற்று.

10. நிழல் - ஒளி. கவ்வை - துன்பம். நாக அரையன் - நாகராசனாகிய காளிதன். காளிதன் வழிபட்டமையால் காழி என்னும் பெயர் பெற்றது.

கட்டு ஆர் துழாயன், தாமரையான்,
என்று இவர் காண்பு அரிய
சிட்டார் பலி தேர்ந்து, ஐயம் வவ்வாய்,
செய்கலே வவ்வுதியே?
நட்டார் நடுவே நந்தன் ஆள,
நல்வினையால் உயர்ந்த
கொட்டாறு உடுத்த தண்வயல் சூழ்
கொச்சை அமர்ந்தவனே! 11

கடை ஆர் கொடி நல் மாட வீதிக்
கழுமல ஊர்க் கவுணி
நடை ஆர் பனுவல் மாலையாக
ஞானசம்பந்தன் நல்ல
படை ஆர் மழுவன்மேல் மொழிந்த
பல்பெயர்ப் பத்தும் வல்லார்க்கு
அடையா, வினைகள் உலகில் நாளும்,
அமர் உலகு ஆள்பவரே. 12

திருச்சிற்றம்பலம்

---

11. துழாயன் - துளசி மாலே அணிந்தவன், திருமால். சிட்டார் - நேர்மையானவர். | நந்தன் - பராசரர், நட்டார்(று) நடுவே ஆள - ஆற்றின் இடையே மச்சகந்தியைக் கூட. பராசரர் பழி தீர, தீ நாற்றமும் தீர வழிபட்டமையின் கொச்சை வயம் என்று சொல்லப்பட்டது.

12. கடை - வாயில். அமர் உலகு - அமரர் உலகு. உரோமச முனிவர் இறைவனே வழிபட்டு ஞானுேபதேசம் பெற்றுத் தம் மலம் நீங்கப் பெற்ற மையால் கழுமலம் என்ற பெயரைக் கொண்டது.

இப்பதிகத்தில் சீகாழியின் பெயர்களுள் பதிஞெரு பெயர்கள் விளக்கப்பட்டன.

1 : 64 திருப்பூவணம்

பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

அறை ஆர் புனலும் மா மலரும்
ஆடு அரவு ஆர் சடைமேல்
குறை ஆர் மதியம் சூடி,
மாது ஓர் கூறுடையான் இடமாம்,
முறை ஆர் முடிசேர் தென்னர், சேரர்,
சோழர்கள்தாம் வணங்கும்,
திறை ஆர் ஒளி சேர் செம்மை ஓங்கும்
தென்திருப் பூவணமே. 1

மருவார் மதில் மூன்று ஒன்ற எய்து,
மாமலையான் மடந்தை
ஒரு பால் பாகமாகச் செய்த
உம்பர் பிரானவன் ஊர்,
கரு ஆர் சாலி, ஆலை மல்கிக்,
கழல் மன்னர் காத்தளித்த,
திருவால் மலிந்த சேடர் வாழும்
தென்திருப் பூவணமே. 2

---

1. அறை - ஒலி. குறை ஆர் மதி - பிறை மதி. முறை ஆர் முடி - மரபுவழி வந்த அரசு முடி. தென்னர் - பாண்டியர். திறை - கப்பம்.

2. மருவார் - பகைவர். ஒன்ற - ஒருசேர எரிந்து அழிய. உம்பர் - வானவர். பிரான் - பெருமான், தலைவன். கரு ஆர் சாலி - கருக்கொண்ட நெல். ஆலை - கரும்பு ஆலை. திரு - செல்வம்.

போர் ஆர் மதமா உரிவை போர்த்துப்
பொடி அணி மேனியனும்
கார் ஆர் கடலில் நஞ்சம் உண்ட
கண்ணுதல், விண்ணவன் ஊர்,
பார் ஆர் வைகைப் புனல் வாய் பரப்பிப்,
பல் மணி பொன் கொழித்துச்
சீர் ஆர் வாரி சேர நின்ற
தென்திருப் பூவணமே. 3

கடி ஆர் அலங்கல் கொன்றை சூடிக்,
காதில் ஓர் வார் குழையன்,
கொடி ஆர் வெள்ளை ஏறு உகந்த
கோவணவன் இடமாம்,
படியார் கூடி, நீடி ஓங்கும்
பால் புகழால் பரவச்,
செடி ஆர் வைகை சூழ நின்ற
தென்திருப் பூவணமே. 4

---

3. மதமா - யானை. பார் – நிலம். வாய் - கால் வாய். மணி பொன் - மணியும் பொன்னும். வாரி - வெள்ளநீர்.

4. கடி ஆர் அலங்கல் - மணம் நிறைந்த மாலை. வார் - நீண்ட. கொடி ஆர் ஏறு - கொடியில் எழுதப் பட்ட எருது. கோவணவன் - கோவண ஆடையினன். படியார் - நிலவுலகத்தார். நீடி ஓங்கும் - நீண்டு உயர்ந்த. செடி - செடிகள்.

கூர் ஆர் வாளி சிலையில் கோத்துக்
கொடி மதில் கூட்டு அழித்த
போர் ஆர் வில்லி, மெல்லியலாள் ஓர் பால்
மகிழ்ந்தான் இடமாம்,
ஆரா அன்பில் தென்னர், சேரர்,
சோழர்கள் போற்று இசைப்பத்,
தேர் ஆர் வீதி மாடம் நீடும்
தென்திருப் பூவணமே. 5

நன்று தீது என்று ஒன்று இலாத
நால் மறையோன், கழலே
சென்று பேணி ஏத்த நின்ற
தேவர் பிரான் இடமாம்,
குன்றில் ஒன்றி ஓங்க மல்கு
குளிர் பொழில் சூழ் மலர்மேல்
தென்றல் ஒன்றி முன்றில் ஆரும்
தென்திருப் பூவணமே. 6

5. வாளி - அம்பு. வில்லி - வில்லை உடையவன்.

6. பேணி ஏத்த - போற்றித் துதிக்க.

பைவாய் அரவம் அரையில் சாத்திப்,
பாரிடம் போற்றிசைப்ப,
மெய்வாய் மேனி நீறு பூசி
ஏறு உகந்தான் இடமாம்,
கை வாழ் வளையார் மைந்தரோடும்
கலவியினால் நெருங்கிச்
செய்வார் தொழிலின் பாடல் ஓவாத்
தென்திருப் பூவணமே. 7

மாட வீதி மன் இலங்கை
மன்னனை மாண்பு அழித்துக்,
கூட வென்றி வாள் கொடுத்து ஆள்
கொள்கையினார்க்கு இடமாம்,
பாட்லோடும் ஆடல் ஓங்கிப்,
பல் மணி பொன் கொழித்து
ஓடி நீரால் வைகை சூழும்
உயர் திருப் பூவணமே. 8

. மெய்வாய் - திருவுடம்பில்.

8. வென்றி வாள் - வெற்றி பெற்றுத் தரும்வாள்,

பொய்யா வேத நாவினனும்
　　பூமகள் காதலனும்
கையால் தொழுது கழல்கள் போற்றக்
　　கனல் எரியானவன் ஊர்,
மை ஆர் பொழிலின் வண்டுபாட,
　　வைகை மணி கொழித்துச்,
செய் ஆர் கமலம் தேன் அரும்பும்
　　தென்திருப் பூவணமே. 9

அலை ஆர் புனலை நீத்தவரும்
　　தேரரும் அன்பு செய்யா
நிலையா வண்ணம் மாயம் வைத்த
　　நின்மலன்தன் இடமாம்,
மலைபோல் துன்னி வென்றி ஓங்கும்
　　மாளிகை சூழ்ந்து, அயலே
சிலை ஆர் புரிசை பரிசு பண்ணும்
　　தென்திருப் பூவணமே. 10

---

9. வேத நாவினன் - நான்முகன். பூமகள் - தாமரையாளாகிய திருமகள்; நிலமகளும் ஆம். காதலன் - திருமால். மை ஆர் - பசுமையாலும் மரச் செறிவாலும் இருண்டு தோன்றும். செய் - வயல்.

10. புனலை நீத்தவர் - நீராடாதவரான சமணர். தேரர் - புத்தர். துன்னி - ஒன்றேடொன்று நெருங்கி. சிலை ஆர் புரிசை - மலைபோல் தோன்றும் மதில். பரிசு - அழகு.

திண் ஆர் புரிசை மாடம் ஓங்கும்
தென்திருப் பூவணத்துப்
பொன் ஆர் மேனி எம்இறையைப்,
பேரியல் இன் தமிழால்,
நண்ணார் உட்கக், காழிமல்கு
ஞானசம்பந்தன் சொன்ன
பண் ஆர் பாடல் பத்தும் வல்லார்
பயில்வது வானிடையே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. நண்ணார் - பகைவர். உட்க - அஞ்ச.

1 : 65 காவிரிப்பூம்பட்டினத்துத்
திருப்பல்லவன் ஈச்சரம் பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

அடையார்தம் புரங்கள் மூன்றும்
ஆர் அழலில் அழுந்த
விடையார் மேனியராய்ச் சீறும்
வித்தகர் மேய இடம்,
கடை ஆர் மாடம் நீடி எங்கும்
கங்குல் புறம் தடவ,
படை ஆர் புரிசைப் பட்டினம் சேர்
பல்லவன் ஈச்சரமே. 1

எண் ஆர் எயில்கள் மூன்றும் சீறும்
எந்தை பிரான், இமையோர்
கண்ணுய் உலகம் காக்க நின்ற
கண்ணுதல், நண்ணும் இடம்,
மண்ஆர் சோலைக் கோல வண்டு
வைகலும் தேன் அருந்திப்
பண் ஆர்செய்யும் பட்டினத்துப்
பல்லவன் ஈச்சரமே. 2

---

1. அடையார் - பகைவர். சீறும் - சினக்கும்; படை - மதில் உறுப்பு. புரிசை - மதில்.

2. எண்ணர் - பகைவர். பண் ஆர் செய்யும் - பாட்டு இசைக்கும்.

மங்கை அங்கு ஓர் பாகமாக,
வாள் நிலவு ஆர் சடைமேல்
கங்கை அங்கே வாழவைத்த
கள்வன் இருந்த இடம்,
பொங்கு அயம் சேர் புணரி ஓதம்
மீது உயர் பொய்கையின்மேல்
பங்கயம் சேர் பட்டினத்துப்
பல்லவன் ஈச்சரமே. 3

தார் ஆர் கொன்றை பொன் தயங்கச்
சாத்திய மார்பு அகலம்
நீர் ஆர் நீறு சாந்தம் வைத்த
நின்மலன் மன்னும் இடம்,
போர் ஆர் வேல் கண் மாதர் மைந்தர்
புக்கு இசை பாட்லினல்,
பார் ஆர்கின்ற பட்டினத்துப்
பல்லவன் ஈச்சரமே. 4

---

3. பொங்கு அயம் சேர் புணரி - மிகுந்த ஆழம் பொருந்திய கடல். ஓதம் - நீர். மீது - மேல் பங்கயம் - தாமரை.

4. தயங்க - விளங்க. நீறுசாந்தம்வைத்த - நீற்றையே சந்தனம் எனக் கொண்ட. புக்கு - புகுந்து. பார் - உலகம்.

மை சேர் கண்டர், அண்ட வாணர்,
வானவரும் துதிப்ப,
மெய் சேர் பொடியர், அடியார் ஏத்த
மேவியிருந்த இடம்,
சை சேர் வளையார் விழைவினேடு
காதன்மையால், கழலே,
பை சேர் அரவுஆர் அல்குலார்சேர்
பல்லவன் ஈச்சரமே. 5

குழலின் ஓசை, வீணை, மொந்தை
கொட்ட, முழவு அதிரக்,
கழலின் ஓசை ஆர்க்க ஆடும்
கடவுள் இருந்த இடம்
சுழியில் ஆரும் கடலில் ஓதம்
தெண்திரை மொண்டு எறியப்,
பழிஇலார்கள் பயில் புகாரில்
பல்லவன் ஈச்சரமே. 6

---

5. பொடி - திருநீறு. விழைவு - விருப்பம். காதன்மை - மிகுந்த அன்புடைமை.

6. பயில் - நெருங்கியுள்ள. புகார் - காவிரிப்பூம் பட்டினம்.

வெந்தல் ஆய வேந்தன் வேள்வி
வேர் அறச் சாடி விண்ணோர்
வந்து எலாம் முன் பேண நின்ற
மைந்தன் மகிழ்ந்த இடம்,
மந்தல் ஆய மல்லிகையும்
புன்னை வளர் குரவின்
பந்தல் ஆரும் பட்டினத்துப்
பல்லவன் ஈச்சரமே. 7

தேர் அரக்கன் மால்வரையைத்
தெற்றி எடுக்க, அவன்
தார் அரக்கும் திண்முடிகள்
ஊன்றிய சங்கரன் ஊர்,
கார் அரக்கும் கடல் கிளர்ந்த
காலம் எலாம் உணரப்
பார் அரக்கம் பயில் புகாரில்
பல்லவன் ஈச்சரமே. 8

---

7. வெந்தல் ஆய வேந்தன் - தக்கன். மந்தல் - மென்மை. குரவு - குராமரம்.

8. தெற்றி – பெயர்த்து. தார் – மாலை. அரக்கும் – அழுத்தும். கார் அரக்கும் - மேகம் தவழும்; கருமை மிகுந்த. பார் அரக்கம் பயில் புகார் - நிலப்பகுதி சுருங்கி வந்த காவிரிப்பூம்பட்டினம்.

அங்கம் ஆறும் வேதம் நான்கும்
ஓதும் அயன், நெடுமால்
தம்கணும் நேட நின்ற
சங்கரன் தங்கும் இடம்.
வங்கம் ஆரும் முத்தம் இப்பி
வார்கடல் ஊடு அலைப்பப்,
பங்கம் இல்லார் பயில் புகாரில்
பல்லவன் ஈச்சரமே. 9

உண்டு, உடுக்கை இன்றியே நின்று
ஊர் நகவே திரிவார்,
கண்டு உடுக்கை மெய்யில் போர்த்தார்,
கண்டறியாத இடம்,
தண்டு, உடுக்கை, தாளம், தக்கை,
சார நடம் பயில்வார்
பண்டு இடுக்கண் தீர நல்கும்
பல்லவன் ஈச்சரமே. 10

---

9. நேட - தேட, ஆராய்ந்து காண. வங்கம் - கப்பல்.

10. உடுக்கை - ஆடை. ஊர் நக - ஊரார் சிரிக்க. தண்டு முதலியன இசைக் கருவிகள்.

பத்தர் ஏத்தும் பட்டினத்துப்
பல்லவன் ஈச்சரத்து, எம்
அத்தன்தன்னை அணிகொள் காழி
ஞானசம்பந்தன் சொல்
சித்தம் சேரச் செப்பும் மாந்தர்
தீவினை நோய் இலராய்,
ஒத்து அமைந்த உம்பர் வானில்
உயர்வினொடு ஓங்குவரே. 11

திருச்சிற்றம்பலம்

11: உம்பர் வான் - மேலிடமாகிய வானுலகம்.

1 : 66 திருச்சண்பைநகர்

பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

பங்கம் ஏறு மதிசேர் சடையார்,
விடையார், பல வேதம்
அங்கம் ஆறும் மறைநான்கு அவையும்
ஆனார், மீன் ஆரும்
வங்கம் மேவு கடல் வாழ் பரதர்
மனைக்கே நுனைமுக்கின்
சங்கம் ஏறி முத்தம் ஈனும்
சண்பை நகராரே. 1

சூதகம் சேர் கொங்கையாள் ஓர்
பங்கர், சுடர்க் கமலப்
போது அகம்சேர் புண்ணியனார்
பூதகண நாதர்,
மேதகம் சேர் மேகம் அம்தண்
சோலையில், விண் ஆர்ந்த
சாதகம் சேர் பாளை நீர் சேர்
சண்பை நகராரே. 2

---

1. பங்கம் - குறைபாடு. வங்கம் - கப்பல், தோணி: நுனை - கூர்மையான

2. சூதகம் - சூதாடும் வட்டுப் போன்ற கண். கமலப்போது - தாமரை மலர். மேதகம் மேன்மை: சாதகம் - தம் இனவிருத்திக்குச் சாதகம்: நீர் - கமுகு முதலியவற்றின் கருநீர். சாதகம் - சாதகப் பறவை என்வும் கூறுவர்.

மகரத்து ஆடு கொடியோன் உடலம்
பொடி செய்து, அவனுடைய
நிகர் ஒப்பில்லாத் தேவிக்கு அருள்செய்
நீலகண்டனார்,
பகரத் தாரா, அன்னம், பகன்றில்,
பாதம் பணிந்து ஏத்த,
தகரப் புன்னை தாழைப் பொழில்சேர்
சண்பை நகராரே. 3

மொய்வல் அசுரர் தேவர் கடைந்த
முழுநஞ்சது உண்ட
தெய்வர், செய்ய உருவர், கரிய
கண்டர், திகழ் சுத்திக்
கையர், கட்டங்கத்தர், கரியின்
உரியர், காதலால்,
சைவர் பாசுபதர்கள் வணங்கும்
சண்பை நகராரே. 4

---

3. மகரத்து ஆடு கொடியோன் - மீன் எழுதப் பெற்ற வெற்றிக் கொடியை உடைய மன்மதன். பொடி செய்தவன் - நீறுக்கிய சிவபெருமான். தேவி - மன்மதன் மனைவியாகிய இரதி. தாரா - சிறு நாரை. பகன்றில் - அன்றில் பறவை. தகரம் - மரவகை.

4. சுத்தி - மழுப்படை. கட்டங்கம் - கத்தி.

கலம்ஆர் கடலுள் விடம் உண்டு
அமரர்க்கு அமுதம் அருள்செய்த
குலம்ஆர் கயிலைக் குன்றது உடையர்,
கொல்லை எருதேறி,
நலம்ஆர் வெள்ளை, நாளிகேரம்,
விரியா நறும்பாளை
சலம்ஆர் கரியின் மருப்புக் காட்டும்
சண்பை நகராரே. 5

மா கரம் சேர் அத்தியின் தோல் போர்த்து,
மெய்ம்மால் ஆன
சூகரம் சேர் எயிறு பூண்ட
சோதியன் மேதக்க
ஆகரம் சேர் இப்பி முத்தை
அம்தண் வயலுக்கே
சாகரம் சேர் திரைகள் உந்தும்
சண்பை நகராரே. 6

---

5. கலம் - மரக்கலம். கொல்லை - முல்லை நிலம். நாளிகேரம் - தென்னை. சலம் ஆர் - அசைந்து கொண்டே நிற்கும் இயல்புடைய. சலம் - வஞ்சம் எனலும் ஆம். மருப்பு - தந்தம்.

6. மா கரம் - நீண்ட பெரிய கை, துதிக்கை: அத்தி - யானை. மெய்ம்மாலான் - திருமாலையும் உடம்பில் கூறுகொண்ட சிவன்; மெய்ம்மாலான் சூகரம் - திருமால் வராக அவதாரத்தில் உருக் கொண்ட பன்றி. எயிறு - கொம்பு. ஆகரம் - கடல். சாகரம் - கடல். திரைகள் - அலைகள். உந்தும் - கொண்டு தள்ளும்.

... ... 7

இருளைப் புரையும் நிறத்தின் அரக்கன்தனை
ஈடு அழிவித்து,
அருளைச் செய்யும் அம்மான், ஏர் ஆர்
அம் தண் கந்தத்தின்
மருளைச் சுரும்பு பாடி, அளக்கர்
வரை ஆர் திரைக் கையால்
தரளத்தோடு பவளம் ஈனும்
சண்பை நகராரே. 8

மண்தான் முழுதும் உண்ட மாலும்,
மலர் மிசைமேல் அயனும்,
எண்தான் அறியா வண்ணம் நின்ற
இறைவன், மறை ஓதி,
தண்டு ஆர் குவளைக்கள் அருந்தித்,
தாமரைத் தாதின்மேல்,
பண்தான் கொண்டு வண்டு பாடும்
சண்பை நகராரே. 9

---

7. ... ...

8. புரையும் - ஒக்கும். அரக்கன் - இராவணன்.

9. எண் - எள்ளளவு, சிறிதும். கள் - தேன். தாது - பூந்தாது. பண் - இசை.

போதியாரும் பிண்டியாரும்
புகழ் அல சொன்னாலும்
நீதியாகக் கொண்டு அங்கு அருளும்
நிமலன், இரு நான்கின்
மாதி சித்தர், மாமறையின்
மன்னிய தொல்நூலர்,
சாதி கீத வர்த்தமானர்,
சண்பை நகராரே. 10

வந்தியோடு, பூசை அல்லாப்
போழ்தில் மறை பேசிச்,
சந்திபோதில் சமாதி செய்யும்
சண்பை நகர் மேய
அந்தி வண்ணன்தன்னை, அழகு ஆர்
ஞானசம்பந்தன் சொல்
சிந்தை செய்து பாட வல்லார்
சிவகதி சேர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. போதியார் - போதி மரத்தின் கீழ் ஞானம் பெற்றவர் வழியில் நிற்கும் புத்தர்கள். பிண்டியார் - அசோக மரத்தின் நிழற்கீழ் இருக்கும் அருகக் கடவுளை முதல்வரர்கக் கொண்ட சமணர்கள். இரு நான்கின் மாதி சித்தர் - எண்வகைச் சித்திகளைப் பெற்ற சித்தர்கள். மறையின் மன்னிய தொன்னூலர் - மறையோர் சாதி கீத வர்த்தமானர் - இசையில் நிலைபெற்றவர்.

11. வந்தி - உமை. பூசை அல்லாப் போழ்தின் - பூசைக் காலங்கள் அல்லாத மற்றைய காலங்களில். மறை பேசி - மறைப் பொருள் பற்றி உரையாடி. சந்தி போது - காலை மாலை அந்திகள்;

1 : 67 **திருப்பழனம்**

பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வேதம் ஓதி, வெண்ணூல் பூண்டு,
வெள்ளை எருதேறிப்,
பூதம் சூழப், பொலிய வருவார்;
புலியின் உரி தோலார்;
"நாதா!" எனவும், "நக்கா!" எனவும்,
"நம்பா!" என நின்று,
பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார்
பழன நகராரே. 1

கண்மேல் கண்ணும், சடைமேல் பிறையும்
உடையார்; காலனைப்
புண் ஆறு உதிரம் எதிர் ஆறு ஓடப்,
பொன்றப், புறம் தாளால்
எண்ணாது உதைத்த எந்தை பெருமான்;
இமவான் மகளோடும்,
பண் ஆர் களி வண்டு அறை பூஞ்சோலைப்
பழன நகராரே. 2

---

1. நக்கன் - மறைப்பு அற்றவன்.

2. கண் மேல் கண் - நெற்றிக் கண். புண் ஆறு உதிரம் - புண் வழி ஒழுகும் குருதி. பொன்ற - இறக்க. புறந்தாள் - புறங்கால். எண்ணாது - தன் ஆணைவழி முறை செய்பவன் என்பதனையும் கருத்தில் கொள்ளாமல்.

பிறையும் புனலும் சடைமேல் உடையார்;
பறைபோல் விழிகண் பேய்
உறையும் மயானம் இடமா உடையார்;
உலகர் தலைமகன்;
அறையும், மலர்கொண்டு அடியார் பரவி,
ஆடல் பாட்டல் செய்,
பறையும், சங்கும், பலியும் ஓவாப்
பழன நகராரே. 3

உரம் மன்னு உயர் கோட்டு உலறு, கூகை
அலறு மயானத்தில்,
இரவில் பூதம் பாட ஆடி,
எழில்ஆர் அலர் மேலைப்
பிரமன் தலையில் நறவம் ஏற்ற
பெம்மான்; எமை ஆளும்
பரமன்; பகவன்; பரமேச்சுவரன்;
பழன நகரானே. 4

---

3. அறை - ஒலி.

4. உரம் - வலிமை. கோடு - மரக்கிளை. உலறு கோடு - வற்றிய கிளை. அலர் மேலைப் பிரமன் - மலர் மேல் வீற்றிருக்கும் நான்முகன். நறவம் - தேன் எனக் கருதும் உணவு.

குலவெம் சிலையால் மதில் மூன்று எரித்த
கொல் ஏறு உடை அண்ணல்,
கலவ மயிலும் குயிலும் பயிலும்,
கடல் போல் காவேரி,
நல மஞ்சு உடைய, நறு மாங்கனிகள்,
குதிகொண்டு எதிர் உந்திப்,
பலவின் கனிகள், திரைமுன் சேர்க்கும்
பழன நகராரே. 5

வீளைக் குரலும், விளிச் சங்கு ஒலியும்,
விழவின் ஒலி ஓவா,
மூளைத் தலை கொண்டு, அடியார் ஏத்தப்,
பொடியா மதில் எய்தார்;
ஈளைப் படுகில் இலைஆர் தெங்கின்,
குலைஆர் வாழையின்,
பாளைக் கமுகின் பழம் வீழ்சோலைப்
பழன நகராரே. 6

கலவம் - தோகை.

6. வீளைக்குரல் – அழைக்கும் குரல். விளி - அழைப்பது போன்ற ஒலி. பொடியா எய்தார் - எரிந்து நீறும் படி அம்பு எய்தார். ஈளைப் படுகு - ஈரப்பதம் உள்ள ஆற்றுப்படுகை.

பொய்யா மொழியார் முறையால் ஏத்திப்
புகழ்வார்; திருமேனி
செய்யார்; கரிய மிடற்ருர்; வெண்ணூல்
சேர்ந்த அகலத்தார்;
கை ஆடலினுர்; புனலால் மல்கு
சடைமேல் பிறையோடும்
பைஆடு அரவம் உடனே வைத்தார்;
பழன நகராரே. 7

மஞ்சு ஓங்கு உயரம் உடையான், மலையை
மாருய் எடுத்தான் தோள்
அஞ்சோடு அஞ்சும் ஆறும் நான்கும்
அடர ஊன்றினுர்;
நஞ்சார் சுடலைப் பொடி நீறு அணிந்த
நம்பான்; வம்பு ஆரும்
பைங் தாமரைகள் கழனி சூழ்ந்த
பழன நகராரே. 8

---

7. பொய்யா மொழியார் - உண்மையே பேசுவார். அகலம் - மார்பு.

8. மஞ்சு ஓங்கு உயரம் உடையான் - மேகம் தவழும் வான் அளாவ உயர்ந்த உயரமான வடிவம் உடைய இராவணன். மலை - கயிலைமலை. அஞ்சோடு அஞ்சும் ஆறும் நான்கும் - இருபது தோள்களும். அடர - நெருங்க. ' நஞ்சு ஆர் நம்பன் ' என இயைக்க. நஞ்சார் சுடலை - இறந்தாரைச் சுடும் காடு எனவும் கொள்க. நம்பான் - சிவன். வம்பு - மணம்.

கடி ஆர் கொன்றைச் சுரும்பின் மாலை
　　கமழ்புன் சடையார்; விண்
முடியாப் படி மூ அடியால் உலகம்
　　முழுதும் தாவிய
நெடியான், நீள் தாமரைமேல் அயனும்,
　　நேடிக் காணாத
படியார்; பொடி ஆடு அகலம் உடையார்;
　　பழன நகராரே. 9

கண்தான் கழுவாமுன்னே ஓடிக்
　　கலவைக் கஞ்சியை
உண்டு ஆங்கு அவர்கள் உரைக்கும் சிறுசொல்
　　ஓரார், பாராட்ட,
வண் தாமரையின் மலர்மேல் நறவ
　　மது வாய் மிக உண்டு,
பண்தான் கெழும வண்டு யாழ்செய்யும்
　　பழன நகராரே. 10

---

9. படி - மண்ணுலகம். நெடியான் - நீண்டு உயர்ந்த திருமால். படியார் - தன்மையர்.

10. ஓரார் - சிந்தனையில் கொள்ளார். நறவ மது — தேனாகிய மது.

வேய்முத்து ஓங்கி,விரை முன்பரக்கும்
வேணுபுரம் தன்னுள்,
நா உய்த்தனைய திறலான் மிக்க
ஞானசம்பந்தன்,
பேசர்க்கு இனிய பாடல் பயிலும்
பெருமான் பழனத்தை
வாயில் பொலிந்த மாலை பத்தும்
வல்லார் நல்லாரே. 11

திருச்சிற்றம்பலம்

11, வேய் முத்து - மூங்கிலில் விளையும் முத்து. விரை - மணம்.

1 : 68 திருக்கயிலாயம்

பண்: தக்கேசி

திருச்சிற்றம்பலம்

பொடிகொள் உருவர்; புலியின் அதளர்;
புரிநூல் திகழ் மார்பில்
கடிகொள் கொன்றை கலந்த நீற்றர்;
கறைசேர் கண்டத்தர்;
இடிய குரலால் இரியும் மடங்கல்
தொடங்கு முனைச் சாரல்,
கடிய விடைமேல் கொடி ஒன்று உடையார்;
கயிலைமலையாரே. 1

புரிகொள் சடையர்; அடியார்க்கு எளியார்;
கிளிசேர் மொழி மங்கை
தெரிய உருவில் வைத்து உகந்த
தேவர் பெருமானார்;
பரிய களிற்றை அரவு விழுங்கி
மழுங்க, இருள் கூர்ந்த
கரிய மிடற்றர், செய்ய மேனிக்;
கயிலை மலையாரே. 2

---

1. அதளர்-தோலை உடையவர்; இடிய குரலால் இரியும் மடங்கல் - இடிக்குரல் கேட்டு அஞ்சி ஓடும் சிங்கம்.

2. மழுங்க - மறைய.

மாவின் உரிவை மங்கை வெருவ
மூடி, முடிதன்மேல்
மேவு மதியும் நதியும் வைத்த
இறைவர்; கழல் உன்னும்
தேவர் தேவர்; திரிசூலத்தர்;
திரங்கல் முகவன் சேர்
காவும் பொழிலும் கடும்கல் சுனைசூழ்
கயிலை மலையாரே. 3

முந்நீர் சூழ்ந்த நஞ்சம் உண்ட
முதல்வர்; மதனன்தன்
தென் நீர் உருவம் அழியத் திருக்கண்
சிவந்த நுதலினர்;
மன் நீர் மடுவும், படுகல் அறையின்
உழுவை சினம்கொண்டு
கல் நீர் வரைமேல் இரை முன்தேடும்
கயிலை மலையாரே. 4

---

3. மா - யானை. உன்னும் - நினைக்கும். திரங்கல் முகவன் - குரங்கு.

4. முந்நீர் - கடல். மதனன் - மன்மதன். தென்நீர் - அழகிய. மடு - சுனை. கல்அறை - குகை. உழுவை - புலி.

ஒன்றும் பலவும் ஆய வேடத்து
ஒருவர்; கழல் சேர்வார்
நன்று நினைந்து நாடற்கு உரியார்,
கூடித் திரண்டு எங்கும்
தென்றி இருளில் திகைத்த கரி தண்
சாரல் நெறி ஓடிக்,
கன்றும் பிடியும் அடிவாரம் சேர்
கயிலை மலையாரே. 5

தாது ஆர் கொன்றை தயங்கும் முடியர்;
முயங்கும் மடவாளைப்
போது ஆர் பாகமாக வைத்த
புனிதர்; பனி மல்கும்
மூது ஆர் உலகில் முனிவர் உடனாய்
அறம் நான்கு அருள்செய்த
காது ஆர் குழையர்; வேதத் திரளர்;
கயிலை மலையாரே. 6

---

5. தென்றி - சிதறி. நெறி - வழி. பிடி - பெண் யானை.

6. முயங்கும் - தழுவும். போது ஆர் பாகம் - பூப்போன்ற மென்மை இயல்புடைய இடப்பாகம். மூது ஆர் உலகின் - மிகப்பழமையான இவ் உலகத்தில். வேதத்திரள் - மறைத் தொகுதி.

... ... 7

தொடுத்தார், புரம் மூன்று எரியச் சிலைமேல்
எரி ஒண் பகழியால்;
எடுத்தான் திரள்தோள் முடிகள் பத்தும்
இடிய விரல் வைத்தார்;
கொடுத்தார் படைகள்; கொண்டார் ஆளாக்;
குறுகி வரும் கூற்றைக்
கடுத்து ஆங்கு அவனைக் கழலால் உதைத்தார்
கயிலை மலையாரே. 8

ஊனாப் பலிகொண்டு உலகில் ஏற்றார்;
இலகு மணி நாகம்
பூண், நாண், ஆரம் ஆகப் பூண்டார்;
புகழும் இருவர்தாம்
பேணா ஓடி நேட எங்கும்
பிறங்கும் எரியாகிக்,
காணா வண்ணம் உயர்ந்தார் போலும்;
கயிலை மலையாரே. 9

---

7. ... ...

8. எரி ஒண்பகழி - தீயை நுனியில் கொண்ட அம்பு. கடுத்து - சினந்து.

9. பூண்நாண் ஆரம் - அணியத்தக்க மாலை. இருவர் - அரியும் அயனும். பிறங்கும் - விளங்கும்.

விருது பகரும் வெஞ்சொல் சமணர்,
வஞ்சச் சாக்கியர்
பொருது பகரும் மொழியைக் கொள்ளார்,
புகழ்வார்க்கு அணியராய்,
எருது ஒன்று உகைத்து, இங்கு இடுவார் தம்பால்
இரந்து உண்டு, இகழ்வார்கள்
கருதும் வண்ணம் உடையார் போலும்;
கயிலை மலையாரே. 10

போர் ஆர் கடலில் புனல்சூழ் காழிப்
புகழ் ஆர் சம்பந்தன்,
கார் ஆர் மேகம் குடிகொள் சாரல்
கயிலை மலையார்மேல்,
தேரா உரைத்த செஞ்சொல்மாலை
செப்பும் அடியார்மேல்
வாராப் பிணிகள்; வானோர் உலகில்
மருவும் மனத்தாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. விருது - பாராட்டு. பொருது பகரும் - வாது செய்வதையே பொருளாகக் கொண்டு சொல்லும். உகைத்து-ஏறிச் செலுத்தி.

11. போர் ஆர் கடல் - அலைகள் மோதும் கடல். தேரா உரைத்த - தேர்ந்து சொல்லிய.

1 : 69 திருஅண்ணுமலை

பண்: தக்கேசி

திருச்சிற்றம்பலம்

பூஆர் மலர்கொண்டு அடியார் தொழுவார்;
புகழ்வார், வானேர்கள்;
மூஆர் புரங்கள் எரித்த அன்று
மூவர்க்கு அருள்செய்தார்;
தூமா மழை நின்று அதிர, வெருவித்
தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணை வந்து அணையும் சாரல்
அண்ணுமலையாரே. 1

மஞ்சைப் போழ்ந்த மதியம் சூடும்
வானேர் பெருமானர்,
நஞ்சைக் கண்டத்து அடக்கும் அதுவும்
நன்மைப் பொருள் போலும்;
வெம் சொல் பேசும் வேடர் மடவார்
இதணம் அது ஏறி,
அம் சொல் கிளிகள் ''ஆயோ!'' என்னும்
அண்ணுமலையாரே. 2

---

1. பூ ஆர் மலர் - அழகு நிறைந்த மலர்; பூத்த நிலையில் உள்ள மலர்களும் நன்ருக விரிந்த மலர்களும் எனலும் ஆம். மூ ஆர்புரங்கள் - முப்புரங்கள். மூவர் - திரிபுராதிகள். தொறுவின் நிரை - மாட்டுக் கூட்ட வரிசை. ஆமாம் பிணை - காட்டுப் பசு.

2. மஞ்சைப் போழ்ந்த - மேகத்தை ஊடுருவிய. வெம்சொல் - கடும் சொல். இதணம் - காவல் பரண்.

ஞானத் திரளாய் நின்ற பெருமான்,
நல்ல அடியார்மேல்
ஊனத் திரளை நீக்கும் அதுவும்
உண்மைப் பொருள்போலும்;
ஏனத் திரளோடு, இன மான், கரடி
இழியும் இரவின்கண்
ஆனைத் திரள் வந்து அணையும் சாரல்
அண்ணாமலையாரே. 3

இழைத்த இடையாள் உமையாள் பங்கர்,
இமையோர் பெருமானார்,
தழைத்த சடையார், விடை ஒன்று ஏறித்
தரியார் புரம் எய்தார்.
பிழைத்த பிடியைக் காணாது ஓடிப்,
பெரும் கை மத வேழம்
அழைத்துத் திரிந்து அங்கு உறங்கும் சாரல்
அண்ணாமலையாரே. 4

---

3. ஊனம் - குற்றம். ஏனம் - பன்றி. இழியும் - இறங்கி ஓடும்.

4. இழைத்த இடை - நூல்போல் மெல்லிய இடுப்பு. தரியார் - பகைவர். பிழைத்த - தப்பிப் போன. பிடி - பெண்யானை.

உருவில் திகழும் உமையாள் பங்கர்,
இமையோர் பெருமானார்,
செருவில் ஒருகால் வளைய ஊன்றிச்
செந்தீ எழுவித்தார்;
பருவில் குறவர் புனத்தில் குவித்த
பருமாமணி, முத்தம்,
அருவித் திரளோடு இழியும் சாரல்
அண்ணாமலையாரே. 5

எனைத்து! ஓர் ஊழி அடியார் ஏத்த,
இமையோர் பெருமானார்,
நினைத்துத் தொழுவார் பாவம் தீர்க்கும்
நிமலர், உறை கோயில்,
கனைத்த மேதி காணாது, ஆயன்,
கைம்மேல் குழல் ஊத,
அனைத்தும் சென்று திரளும் சாரல்
அண்ணாமலையாரே. 6

---

5. செரு - போர். பருவில் - பருமையான வில். பருமாமணிமுத்தம் - பருமையான மாணிக்கங்களும் முத்துக்களும்.

6. எனைத்து ஓர் ஊழி - எந்த வகையான ஓர் ஊழிக் காலத்திலும். மேதி-எருமை. ஆயன்–இடையன்.

வந்தித்திருக்கும் அடியார் தங்கள்
வருமேல் வினையோடு,
பந்தித் திருந்த பாவம் தீர்க்கும்
பரமன் உறைகோயில்,
முந்தி எழுந்த முழவின் ஓசை
முதுகல் வரைகள் மேல்
அந்திப் பிறை வந்து அணையும் சாரல்
அண்ணுமலையாரே. 7

மறம்தான் கருதி, வலியை நினைந்து,
மாறுய் எடுத்தான் தோள்,
நிறம்தான் முரிய, நெரிய ஊன்றி,
நிறைய அருள்செய்தார்,
''திறம்தான் காட்டி அருளாய்!'' என்று
தேவர் அவர் வேண்ட,
அறம்தான் காட்டி அருளிச் செய்தார்
அண்ணுமலையாரே. 8

---

7. வந்தித்து - வழிபட்டு. வரும் மேல் வினை - மேல் வரும் வினை, ஆகாமிய வினை. பந்தித்திருந்த பாவம்-சஞ்சித வினை. கல்வரை - கல்பொருந்திய மலை

8. மறம் - வீரம். வலி - வலிமை. மாறுய் - மாறுபட்டு. தோள் நிறம் - தோள்களும் மார்பும்.

தேடிக் காணார், திருமால் பிரமன்
தேவர் பெருமானை;
மூடி ஓங்கி முதுவேய் உகுத்த
முத்தம் பல கொண்டு,
கூடிக் குறவர் மடவார் குவித்துக்,
"கொள்ளவம்மின்!" என்று,
ஆடிப் பாடி அளக்கும் சாரல்
அண்ணாமலையாரே. 9

தட்டை இடுக்கித், தலையைப் பறித்துச்
சமணே நின்றுண்ணும்
பிட்டர் சொல்லுக் கொள்ள வேண்டா;
பேணித் தொழுமின்கள்!
வட்ட முலையாள் உமையாள் பங்கர்
மன்னி உறை கோயில்,
அட்டம் ஆளித்திரள் வந்து அணையும்
அண்ணாமலையாரே. 10

---

9. முது வேய் உகுத்த-முற்றிய மூங்கில் உதிர்த்த. முத்தம் - முத்து. வம்மின் - வாருங்கள்.

10. தட்டு - தடுக்கு. பிட்டர் - பித்தர். அட்டம் - பக்கம். ஆளி - சிங்கம்.

அல் ஆடு அரவம் இயங்கும் சாரல்
அண்ணுமலையாரை,
நல்லார் பரவப்படுவான் காழி
ஞானசம்பந்தன்
சொல்லால் மலிந்த பாடல் ஆன
பத்தும் இவை கற்று
வல்லார் எல்லாம் வானோர் வணங்க
மன்னி வாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. அல் - இரவு. மன்னி - நிலைபெற்று.

1 : 70   திருஈங்கோய்மலை

பண்: தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வானத்து உயர் தண்மதி தோய் சடைமேல்
மத்த மலர் சூடித்,
தேன் ஒத்தன மென்மொழி மான்விழியாள்
தேவி பாகமாக்,
கானத்து இரவில் எரிகொண்டு ஆடும்
கடவுள், உலகேத்த,
ஏனத் திரள் வந்து இழியும் சாரல்
ஈங்கோய் மலையாரே. 1

சூலப் படை ஒன்று ஏந்தி, இரவில்
சுடுகாடு இடமாகக்,
கோலச் சடைகள் தாழக், குழல், யாழ்,
மொந்தை கொட்டவே,
பால் ஒத்தனைய மொழியாள் காண,
ஆடும் பரமனர்,
ஏலத்தொடு நல் இலவம் கமழும்
ஈங்கோய் மலையாரே. 2

---

1. மத்தமலர் - ஊமத்த மலர்; ஏனத்திரள் - பன்றிக் கூட்டம்.

2. ஏலம் - ஏலக்காய்.

கண்கொள் நுதலார், கறை கொள் மிடற்றார்,
கரியின் உரிதோலார்,
விண்கொள் மதிசேர் சடையார்,
விடை ஆர் கொடியார், வெண்நீறு
பெண்கொள் திருமார்பு அதனில்
பூசும் பெம்மான்,
எமை ஆள்வார்,
எண்கும் அரியும் திரியும் சாரல்
ஈங்கோய் மலையாரே. 3

மறையின் இசையார், நெறி மென்கூந்தல்
மலையான் மகளோடும்,
குறை வெண் பிறையும் புனலும் நிலவும்
குளிர் புன்சடை தாழப்,
பறையும் குழலும் கழலும் ஆர்ப்பப்,
படுகாட்டு எரி ஆடும்
இறைவர், சிறைவண்டு அறை பூஞ்சாரல்
ஈங்கோய் மலையாரே. 4

---

3. விடை ஆர் கொடியார் - எருது எழுதிய கொடியை உடையார். எண்கு - கரடி. அரி – சிங்கம்.

4. படு காடு - பிணம்படு காடு, சுடு காடு.

நொந்த சுடலைப் பொடிநீறு அணிவார்
நுதல்சேர் கண்ணினார்,
கந்த மலர்கள் பலவும் நிலவு
கமழ் புன்சடை தாழப்,
பந்து அண் விரலாள் பாகமாகப்,
படுகாட்டு எரி ஆடும்
எந்தம் அடிகள், கடிகொள் சாரல்
ஈங்கோய் மலையாரே. 5

நீறு ஆர் அகலம் உடையார், நிரை ஆர்
கொன்றை அரவோடும்
ஆறு ஆர் சடையார், அயில் வெம் கணையால்
அவுணர் புரம் மூன்றும்
சீறு எரிசெய் தேவர் பெருமான்,
செங்கண் அடல் வெள்ளை
ஏறு ஆர் கொடியார், உமையாளோடும்
ஈங்கோய் மலையாரே. 6

---

5. நுதல் - நெற்றி. பந்து அண் விரல் - பந்தினைப் பொருந்தும் விரல். கடி - மணம்.

6. நீறு - திருநீறு. அகலம் - மார்பு நிரை - வரிசை. ஆறு - கங்கை. அயில் - கூர்மை. சீறு-சினந்து எரிசெய் - எரித்த.

வினை ஆயின தீர்த்து அருளே புரியும்
விகிர்தன், விரிகொன்றை
நனை ஆர் முடிமேல் மதியம் சூடும்
நம்பான், நலம் மல்கு
தனை ஆர் கமல மலர்மேல் உறைவான்
தலையோடு, அனல் ஏந்தும்,
ஏனை ஆளுடையான், உமையாளோடும்,
ஈங்கோய் மலையாரே. 7

பரக்கும் பெருமை இலங்கை என்னும்
பதியில் பொலிவு ஆய,
அரக்கர்க்கு இறைவன் முடியும் தோளும்,
அணி ஆர் விரல்தன்னால்
நெருக்கி அடர்த்து, "நிமலா போற்றி!"
என்று நின்று ஏத்த,
இரக்கம் புரிந்தார் உமையாளோடும்,
ஈங்கோய் மலையாரே. 8

---

7. நனை - அரும்பு.

வரி ஆர் புலியின் உரிதோல் உடையான்,
மலையான் மகளோடும்
பிரியாது உடனாய் ஆடல் பேணும்
பெம்மான் திருமேனி
அரியோடு அயனும் அறியா வண்ணம்
அளவுஇல் பெருமையோடு
எரியாய் நிமிர்ந்த எங்கள் பெருமான்
ஈங்கோய் மலையாரே. 9

பிண்டி ஏன்று பெயரா நிற்கும்
பிணங்கு சமணரும்,
மண்டை கலனாக் கொண்டு திரியும்
மதி இல்தேரரும்
உண்டி வயிறார் உரைகள் கொள்ளாது
உமையோடு உடனாகி
இண்டைச் சடையான், இமையோர் பெருமான்
ஈங்கோய் மலையாரே. 10

---

10. பிண்டி - அசோகந்தளிர். மண்டை - பிச்சைப் பாத்திரம். இண்டை - திருமுடி மாலைவகை.

விழவு ஆர் ஒலியும் முழவும் ஓவா
வேணுபுரம் தன்னுள்
அழல் ஆர் வண்ணத்து அடிகள் அருள்சேர்
அணிகொள் சம்பந்தன்
எழில் ஆர் சுனையும் பொழிலும் புடைசூழ்
ஈங்கோய்மலை ஈசன்
கழல்சேர் பாடல் பத்தும் வல்லார்
கவலை களைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

1 : 71 திருநறையூர்ச் சித்தீச்சுரம்

பண்: தக்கேசி

திருச்சிற்றம்பலம்

பிறைகொள் சடையர்; புலியின் உரியர்;
பேய்வாழ் நாகத்தர்;
கறைகொள் கண்டர்; கபாலம் ஏந்தும்
கையர்; கங்காளர்;
மறைகொள் கீதம் பாடச், சேடர்
மனையில் மகிழ்வு எய்திச்,
சிறைகொள் வண்டு தேன்ஆர் நறையூர்ச்
சித்தீச்சரத்தாரே. 1

பொங்குஆர் சடையர்; புனலர்; அனலர்;
பூதம் பாடவே.
தம் காதலியும் தாமும் உடனாய்த்
தனிஓர் விடை ஏறிக்,
கொங்கு ஆர் கொன்றை, வன்னி, மத்தம்
சூடிக், குளிர் பொய்கைச்
செங்கால் அனமும் பெடையும் சேரும்
சித்தீச்சரத்தாரே. 2

---

1. பேழ் வாய் - பிளந்த வாய். கறை - நஞ்சுக் கறை. கண்டர் - கழுத்தர். கபாலம் - தலை ஓடு. கங்காளர் - எலும்புக் கூட்டை அணிந்த திரு வேடத்தர். சேடர் - பெருமையை உடையவர்.

2. பொங்கு ஆர் சடையர் - வளர்ந்த கட்டிய சடையினர். கொங்கு - தேன்,

முடிகொள் சடையர்; முளை வெண்மதியர்;
மூவா மேனிமேல்
பொடிகொள் நூலர்; புலியின் அதளர்;
புரிபுன் சடை தாழக்,
கடிகொள் சோலை வயல்சூழ், மடுவில்
கயல்ஆர் இனம் பாயக்,
கொடிகொள் மாடக் குழாம்ஆர் நறையூர்ச்
சித்தீச்சரத்தாரே. 3

பின்தாழ் சடைமேல் நகுவெண் தலையர்;
பிரமன் தலை ஏந்தி,
மின்தாழ் உருவில் சங்குஆர் குழைதான்
மிளிரும் ஒரு காதர்;
பொன்தாழ் கொன்றை, செருந்தி. புன்னை,
பொருந்து செண்பகம்,
சென்றுஆர் செல்வத் திருஆர் நறையூர்ச்
சித்தீச்சரத்தாரே. 4

---

3. முடி கொள் சடையர் - முடித்த சடையினர். முளை மதி - ஒரு நாள் பிறை. மூவா - மூப்பில்லாத. அதளர் - தோலை அணிந்தவர்.

4. தலை - தலை ஓடு. மின் - ஒளி. தாழ் - தங்கிய குழைமின் தாழ் உருவின் மிளிரும் காதர் என இயைக்க.

நீர்ஆர் முடியர்; கறைகொள் கண்டர்;
மறைகள் நிறை நாவர்;
பார்ஆர் புகழால் பத்தர், சித்தர்
பாடி ஆடவே,
தேர்ஆர் வீதி முழவுஆர் விழவின்
ஒலியும் திசை செல்லச்
சீர்ஆர் கோலம் பொலியும் நறையூர்ச்
சித்தீச்சரத்தாரே. 5

நீண்ட சடையர்; நிரைகொள் கொன்றை
விரைகொள் மலர்மாலை,
தூண்டு சுடர் பொன் ஒளிகொள் மேனிப்
பவளத்து எழிலார், வந்து
ஈண்டு மாடம், எழில் ஆர்சோலை,
இலங்கு கோபுரம்,
தீண்டு மதியம் திகழும் நறையூர்ச்
சித்தீச்சரத்தாரே. 6

குழல்ஆர் சடையர்; கொக்கின் இறகர்;
கோல நிற மத்தம்
தழல்ஆர் மேனித் தவள நீற்றர்;
சரி கோவணக் கீளர்,
எழில் ஆர் நாகம் புலியின் உடைமேல்
இசைத்து, விடை ஏறிக்,
கழல் ஆர் சிலம்பு புலம்ப வருவார்
சித்தீச்சரத்தாரே. 7

கரை ஆர் கடல்சூழ் இலங்கை மன்னன்
கயிலை மலைதன்னை
வரை ஆர் தோளால் எடுக்க, முடிகள்
நெரிந்து மனம் ஒன்றி
உரை ஆர் கீதம் பாட, நல்ல
உலப்பு இல் அருள் செய்தார்.
திரை ஆர் புனல் சூழ் செல்வ நறையூர்ச்
சித்தீச்சரத்தாரே. 8

---

7. கீள் - கிழித்தெடுத்த ஆடை. சிலம்பு - கால் அணி. புலம்ப - ஒலிக்க.

8. வரை ஆர் தோள் - மலை போன்ற தோள். உலப்பு இல் - அழிவற்ற.

நெடியான், பிரமன் நேடிக் காணார்,
நினைப்பார் மனத்தாராய்,
அடியார் அவரும் அருமா மறையும்
அண்டத்து அமரரும்
முடியால் வணங்கிக், குணங்கள் ஏத்தி,
"முதல்வா! அருள்!" என்னச்,
செடி ஆர் செந்நெல் திகழும் நறையூர்ச்
சித்தீச் சரத்தாரே. 9

நின்று உண் சமணர், இருந்து உண் தேரர்,
நீண்ட போர்வையார்,
ஒன்றும் உணரா ஊமர் வாயில்
உரை கேட்டு உழல்வீர்காள் !
கன்று உண் பயப்பால் உண்ண முலையில்,
கபாலம் அயல் வழிய,
சென்று, உண்டு ஆர்ந்து சேரும் நறையூர்ச்
சித்தீச்சரத்தாரே. 10

---

9. செடி - நெருக்கம்.

10. கபாலம் அயல் பொழிய - கறவைப் பாத்திரம் நிறைந்து வழிய என்று உரைப்பர்.

குயில் ஆர்கோல மாதவிகள்,
குளிர் பூஞ் சுரபுன்னை,
செயில் ஆர் பொய்கை, சேரும் நறையூர்ச்
சித்தீச்சரத்தாரை,
மயில் ஆர் சோலை சூழ்ந்த காழி
மல்கு சம்பந்தன்,
பயில்வார்க்கு இனிய, பாடல் வல்லார்
பாவம் நாசமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

11. மாதவி - குருக்கத்தி. செயில் – செய்யில், வயலில்.

1 : 72 திருக்குடந்தைக் காரோணம்

பண்: தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வார் ஆர் கொங்கை மாது ஓர்பாகம்
ஆக, வார் சடை
நீர் ஆர் கங்கை திங்கள் சூடி,
நெற்றி ஒற்றைக் கண்,
கூர் ஆர் மழு ஒன்று ஏந்தி, அந்தண்
குழகன் குடமூக்கில்,
கார் ஆர் கண்டத்து எண்தோள் எந்தை
காரோணத்தாரே. 1

முடி ஆர் மன்னர், மடமான் விழியார்,
மூ உலகும் ஏத்தும்
படியார், பவள வாயார் பலரும்
பரவிப் பணிந்து ஏத்தக்,
கொடி ஆர் விடையார், மாடவீதிக்
குடந்தைக், குழகு ஆரும்
கடி ஆர் சோலைக் கலவ மயில் ஆர்
காரோணத்தாரே, 2

---

1. வார் ஆர் - கச்சு அணியப் பெற்ற. குழகன் - இளமை உடையவன்.

2. முடி ஆர் மன்னர் - முடிமன்னர்; படியார் - தகுதி உடையார். குழகு - இளமை, அழகு.

மலையார் மங்கை பங்கர், அங்கை
அனலர், மடல் ஆரும்
குலை ஆர் தெங்கு, குளிர்கொள் வாழை
அழகார் குடமூக்கில்,
முலையார் அணி பொன், முளை வெண் நகையார்,
மூவா மதியினர்,
கலைஆர் மொழியார் காதல்செய்யும்
காரோணத்தாரே. 3

போது ஆர் புனல்சேர் கந்தம் உந்திப்
பொலிய, அழகு ஆரும்
தாது ஆர் பொழில் சூழ்ந்து எழில் ஆர் புறவில்,
அம் தண் குடமூக்கில்,
மாது ஆர் மங்கை பாகமாக
மனைகள் பலி தேர்வார்,
காது ஆர் குழையார், காளகண்டர்
காரோணத்தாரே. 4

---

3. மூவா மதியினர் - முழுமைபெறாத பாதித் திங்கள் போன்ற நெற்றியை உடையவர்.

4. போது - மலர். கந்தம் - மணம். புறவு - காடு. மாதார் - மாதர் - காதல். காளகண்டர் - நஞ்சுசேர் கழுத்தர்.

பூஆர் பொய்கை அலர் தாமரை,
செங்கழுநீர், புறவெல்லாம்
தேவுஆர் சிந்தை அந்தணாளர்
சீரால் அடி போற்றக்,
கூடஆர் குயில்கள், ஆலும் மயில்கள்,
இன்சொல் கிளிப்பிள்ளை.
காஆர் பொழில் சூழ்ந்து அழகுஆர் குடந்தைக்
காரோணத்தாரே. 5

மூப்பு ஊர் நலிய, நெதிஆர் விதியாய்,
முன்னே அனல் வாளி
கோப்பார், பார்த்தன் நிலை கண்டு அருளும்
குழகர், குடமூக்கில்,
தீர்ப்பார், உடலில் அடுநோய் அவலம்
வினைகள் நலியாமை;
காப்பார், காலன் அடையா வண்ணம்
காரோணத்தாரே. 6

---

5. தேவு ஆர் சிந்தை - தெய்வச் சிந்தனை. புறவு - முல்லை நிலப்பகுதி.

6. மூப்பு ஊர் நலிய - முதுமை வந்து வருத்தம் செய்ய. நெதி ஆர் விதி - முறைமையோடு பொருந்திய விதி. பார்த்தன் - அருச்சுனன். காப்பார் - தடுத்தருள்வார்.

ஊன்ஆர் தலை கைஏந்தி உலகம்
பலிதேர்ந்து உழல் வாழ்க்கை,
மான்ஆர் தோலார்; புலியின் உடையார்,
கரியின் உரிபோர்வை
தேன்ஆர் மொழியார் திளைத்து அங்கு ஆடித்
திகழும் குடமூக்கில்,
கான்ஆர் நட்டம் உடையார், செல்வக்
காரோணத்தாரே. 7

வரைஆர் திரள்தோள் மதவாள் அரக்கன்
எடுப்ப மலை, சேரும்
விரைஆர் பாத நுதியால் ஊன்ற,
நெரிந்து சிரம் பத்தும்,
உரைஆர் கீதம் பாடக் கேட்டு, அங்கு
ஒளிவாள் கொடுத்தாரும்,
கறைஆர் பொன்னி சூழ் தண் குடந்தைக்
காரோணத்தாரே, 8

---

7. கான் - சுடுகாடு,

8. மதம் - செருக்கு. நுதி - நுனி.

கரிய மாலும், செய்ய பூமேல்
அயனும் கழறிப்போய்
அரிய அண்டம் தேடிப் புக்கும்
அளக்க ஒண்கிலார்,
தெரியஅரிய தேவர், செல்வம்
திகழும் குடமூக்கில்,
கரிய கண்டர், கால காலர்,
காரோணத்தாரே. 9

நாணுர் அமணர், நல்லது அறியார்;
நாளும் குரத்திகள்,
பேணுர் தூய்மை; மாசு கழியார்;
பேசேல், அவரோடும்!
சேண்ஆர் மதிதோய் மாடம் மல்கு
செல்வ நெடுவீதிக்
கோண் ஆகரம் ஒன்றுடையார், குடந்தைக்
காரோணத்தாரே. 10

---

9. செய்ய பூ - செந்தாமரை மலர். கழறி - கடிந்து பேசி. அண்டம் - பேருலகம். புக்கும் - புகுந்தும். அளக்க ஒண்கிலார் - அளந்தறியப் படாதவர். தெரிய அரிய தேவர் - இன்ன தன்மையர் என்று அவரது உண்மை இயல்பை எவரும் கண்டு கொள்ள முடியாத கடவுள்.

10. குரத்திகள் - ஆரவாரம் செய்பவர். கோண் ஆகரம் - கோணமான இருப்பிடம்.

கருஆர் பொழில் சூழ்ந்து அழகுஆர் செல்வக்
காரோணத்தாரைத்,
திரு ஆர் செல்வம் மல்கு சண்பைத்
திகழும் சம்பந்தன்
உரு ஆர் செஞ்சொல் மாலை இவைபத்து
உரைப்பார், உலகத்துக்
கரு ஆர் இடும்பைப் பிறப்பு அது அறுத்துக்,
கவலை கழிவாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. கரு - கருமை நிறம், இருண்ட நிறம். திரு ஆர் செல்வம் - தக்கோரால் விரும்பத் தக்க செல்வம், அறவழியில் பெற்ற செல்வம். உரு ஆர் செஞ்சொல் மாலை – பொருள் நிறைந்த செவ்விய சொல் மாலை. கரு ஆர் இடும்பைப் பிறப்பு - ஒரு கருவில் சேர்வதான துன்பப் பிறவி.

1 : 73 **திருக்கானூர்**

பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வான் ஆர்சோதி மன்னு சென்னி,
வன்னி, புனக் கொன்றைத்
தேன் ஆர் போது தான் ஆர்கங்கை,
திங்களொடு சூடி,
மானேர் நோக்கி கண்டு அங்கு
உவப்ப, மாலை ஆடுவார்,
கானூர் மேய, கண் ஆர் நெற்றி,
ஆன் ஊர் செல்வரே. 1

---

1. வான் ஆர் சோதி - கதிரவனும் திங்களும். வன்னி - வன்னிஇலை. மான் நேர் - மானின் விழியை ஒத்த. மாலை - மாலைக்காலம். உலகம் ஒடுங்க வரும் காலம். மானேர் நோக்கி என்றது காட்சி கண்டு உவந்த தலைவியை. அங்கு 'மாலை ஆடுவார்' என்பதற்கு மயக்கத்தை உண்டு பண்ணினர் எனப் பொருள் கொள்க. ஆன் ஊர் - எருதின் மேல் ஏறி வரும்.

நீந்தல் ஆகா வெள்ளம் மூழ்த
நீள் சடைதன்மேல் ஓர்
ஏய்ந்த கோணல் பிறையோடு அரவு,
கொன்றை எழில் ஆரப்,
போந்த மென்சொல் இன்பம் பயந்த
மைந்தர் அவர் போலாம்,
காந்தள் விம்மு கானூர் மேய
சாந்த நீற்றரே. 2

சிறை ஆர் வண்டும், தேனும் விம்மு
செய்ய மலர்க் கொன்றை,
மறை ஆர் பாடல் ஆடலோடு,
மால் விடைமேல் வருவார்;
இறையார்; வந்து என் இல் புகுந்து, என்
எழில் நலமும் கொண்டார்,
கறை ஆர் சோலைக் கானூர் மேய
பிறை ஆர் சடையாரே. 3

---

2. வெள்ளம் - கங்கைப் பெருக்கு. மூழ்கு - அடங்கியுள்ள. கோணல் ஏய்ந்த பிறை என்று இயைக்க. ஏய்ந்த-பொருந்திய. போந்த - வாயிலிருந்து வந்த.

3. தேன் - வண்டின் இனமும் ஆம். செய்ய - செந்நிறம் உடைய. மால் விடை - பெரிய எருது. இறையார் - இறைவராகிய சிவன். கறை - பசுமை இருள்.

விண் ஆர் திங்கள், கண்ணி, வெள்ளை
மாலையது சூடித்,
தண் ஆர் அக்கோடு ஆமை பூண்டு,
தழை புன்சடை தாழ,
எண்ணா வந்து, என் இல் புகுந்து, அங்கு
எவ்வநோய் செய்தான்,
கண் ஆர் சோலைக் கானூர் மேய
விண்ணோர் பெருமானே. 4

தார்கொள் கொன்றைக் கண்ணியோடும்
தண்மதியம் சூடிச்
சீர்கொள் பாடல் ஆடலோடு
சேட்ராய் வந்து,
ஊர்கள் தோறும் ஐயம் ஏற்று, என்
உள் வெம்நோய் செய்தார்,
கார்கொள் சோலைக் கானூர் மேய
கறைக்கண்டத்தாரே, 5

---

4. அக்கு - எலும்பு மாலை. ஆமை - ஆமையின் ஓடு. எண்ணா வந்து - வேண்டுமென்றே வந்து. எவ்வ நோய் - பிரிவாற்றாமைத் துன்பமாகிய ஒரு நோய். கண் ஆர் - இடம் நிறைந்த.

5. தார் - மார்பு மாலை. கண்ணி - தலைமாலை. மார்பிலும் தலையிலும் சூடியது கொன்றை. சீர் - தாள அறுதியும் ஆகும். உள் வெம் நோய் - உள்ளத்தில் வேட்கையாகிய பெரியநோய்.

முளி வெள் எலும்பும், நீறும், நூலும்
மூழ்கும் மார்பராய்,
எளிவந்தார் போல், "ஐயம்" என்று, என்
இல்லே புகுந்து, உள்ளத்
தெளிவும் நாணும் கொண்ட கள்வர்,
தேறல் ஆர் பூவில்
களிவண்டு யாழ்செய் கானூர் மேய
ஒளி வெண் பிறையாரே. 6

மூவா வண்ணர், முளைவெண் பிறையர்,
முறுவல் செய்து இங்கே
பூ ஆர் கொன்றை புனைந்து வந்தார்,
பொக்கம் பல பேசிப்,
போவார் போல மால் செய்து உள்ளம்
புக்க புரிநூலர்,
தேவுஆர் சோலைக் கானூர் மேய
தேவதேவரே. 7

---

6. முளி - காய்ந்த. எளி வந்தார் - எளிமையாகி வந்தவர். தேறல் - தேன். களி - மகிழ்ச்சி கொண்ட. யாழ் செய் - யாழ் போல ஒலிக்கும்.

7. மூவா வண்ணர் - மூப்பு இலார். முளை வெண் பிறை - முதல் நாள் பிறை. பொக்கம் - உண்மை யில்லாத சொற்கள். போவார் போல .... புக்க - புறத்தளவில் போவாராகி என் எண்ணத்தளவில் புகுந்து நிலைபெற இருந்த.

தமிழின் நீர்மை பேசித், தாளம்
　　வீணை பண்ணி, நல்ல
முழவம், மொந்தை மல்கு பாடல்
　　செய்கை இடம் ஓவார்,
குமிழின் மேனிதந்து, கோல
　　நீர்மையது, கொண்டார்,
கமழும் சோலைக் கானூர் மேய
　　பவளவண்ணரே. 8

அந்தம் ஆதி, அயனும் மாலும்,
　　ஆர்க்கும் அறிவரியான்,
சிந்தையுள்ளும், நாவின்மேலும்,
　　சென்னியும் மன்னினான்,
வந்து என் உள்ளம் புகுந்து
　　மாலை காலை ஆடுவான்,
கந்தம் மல்கு கானூர் மேய
　　எந்தை பெம்மானே. 9

---

8. தமிழின் நீர்மை - இனிமை. குமிழின் மேனி - குமிழம்பூ நிறமாகிய பசலை. கோலநீர்மை - ஏற்கெனவே இருந்த அழகு.

9. அந்தம் அயனும், ஆதி மாலும் என இயைக்க. சிந்தை, நா, சென்னி - மனம் மொழி மெய்கள். மன்னினான் - நிலைத்திருந்தான்.

ஆமை, அரவோடு, ஏன வெண் கொம்பு,
அக்கு மாலை பூண்டு,
ஆம் ஓர் கள்வர், வெள்ளர் போல
உள்வெம் நோய் செய்தார்,
ஓம, வேத நான்முகனும், கோள்
நாக அணையானும்
சேமம் ஆய செல்வர், கானூர்
மேய சேடரே. 10

கழுது துஞ்சும் கங்குல் ஆடும்
கானூர் மேயானைப்,
பழுதுஇல் ஞானசம்பந்தன் சொல்
பத்தும் பாடியே,
தொழுது பொழுது தோத்திரங்கள்
சொல்லித் துதித்து நின்று,
அழுதும் நக்கும் அன்பு செய்வார்
அல்லல் அறுப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. வெள்ளர் - கள்ளம் இல்லாத வெள்ளை உள்ளத்தர்; ஓமம் - வேள்வி. கோள் நாக அணையான் - உயிரைக் கொள்ளை கொள்ளும் இயல்பின தான பாம்பினால் ஆன படுக்கையை உடைய திருமால். சேமம் ஆய செல்வர் - இருவர்க்கும் பாதுகாப்பாகிய செல்வரான சிவபெருமான்.

11. கழுது - பேய். துஞ்சும் - உறங்கும். கங்குல் - நள் இரவு. பொழுது - மூன்று காலமும். நக்கும் - பித்தர் போலச் சிரித்தும்.

1 : 74 திருப்புறவம்

பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

நறவம் நிறை வண்டு அறை தார்க் கொன்றை
நயந்து, நயனத்தால்,
சுறவம் செறிவண் கொடியோன் உடலம்
பொடியா விழிசெய்தான்,
புறவம் உறை வண் பதியா, மதியார்
புரம் மூன்று எரிசெய்த
இறைவன், அறவன், இமையோர் ஏத்த,
உமையோ டிருந்தானே. 1

---

1. நறவம் - தேன். அறை - ஒலிக்கும். நயந்து - விரும்பி. நயனத்தால் - (நெற்றிக்) கண்ணால். சுறவக் கொடியோன் - மன்மதன். பொடி - சாம்பர். விழிசெய்தான் - நோக்கினன். புறவம் - சீகாழி. மதியார் - தன்னை மதிக்காத பகைவர். அறவன் - அறவடிவானவன்.

உரவன், புலியின் உரிதோல் ஆடை
உடைமேல் பட நாகம்
விரவி விரி பூங்கச்சா அசைத்த
விகிர்தன், உகிர்தன்னால்
பொரு வெம் களிறு பிளிற உரித்துப்,
புறவம் பதியாக
இரவும் பகலும் இமையோர் ஏத்த,
உமையோடிருந்தானே. 2

பந்தம் உடைய பூதம் பாடப்,
பாதம் சிலப்பு ஆர்க்கக்,
கந்தம் மல்கு குழலி காணக்,
கரி காட்டு எரியாடி,
அம்தண் கடல் சூழ்ந்து அழகார் புறவம்
பதியா அமர்வு எய்தி,
எம்தம பெருமான். இமையோர் ஏத்த,
உமையோ டிருந்தானே. 3

---

2. உரவன் - வலிமை உடையவன், உரவன் புலி எனக் கொண்டு மன வலிமையும் உடல் வலிமையும் ஒருங்கு கொண்ட புலி. அசைத்த - கட்டிய. உகிர் - நகம்.

3. பந்தம் - வயிற்றில் சுற்றிக் கட்டும் ஓர் அணி. 'உதரபந்தம்'. கந்தம் - மணம். குழல் - கூந்தல். கரி காடு - சுடுகாடு. அமர்வு எய்தி - விரும்பி.

நினைவார் நினைய இனியான்,
பணி ஆர் மலர் தூய், நித்தலும்,
கனை ஆர் விடை ஒன்று உடையான்;
கங்கை, திங்கள், கமழ் கொன்றை
புனை வார் சடையின் முடியான்; கடல் சூழ்
புறவம் பதியாக
எனை ஆளுடையான், இமையோர் ஏத்த,
உமையோ டிருந்தானே. 4

செங்கண் அரவும், நகு வெண்தலையும்
முகிழ் வெண் திங்களும்,
தங்கு சடையன்; விடையன்; உடையன்,
சரி கோவண ஆடை;
பொங்கு திரை வண்கடல் சூழ்ந்து அழகு ஆர்
புறவம் பதியாக,
எங்கும் பரவி இமையோர் ஏத்த,
உமையோ டிருந்தானே. 5

---

4. பனி - குளிர்ச்சி. கனைத்தல் - கத்துதல்.

5. முகிழ் - இளைய.

பின்னு சடைகள் தாழக், கேழல்
எயிறு பிறழப், போய்,
அன்ன நடையார் மனைகள் தோறும்
அழகு ஆர் பலி தேர்ந்து,
புன்னை மடலின் பொழில் சூழ்ந்து,
அழகுஆர் புறவம் பதியாக,
என்னை உடையான், இமையோர் ஏத்த,
உமையோ டிருந்தானே. 6

உண்ணற்கு அரிய நஞ்சை உண்டு,
ஒரு தோழம் தேவர்
விண்ணில் பொலிய அமுதம் அளித்த
விடைசேர் கொடி அண்ணல்,
பண்ணின் சிறை வண்டு அறை பூஞ்சோலைப்
புறவம் பதியாக,
எண்ணில் சிறந்த இமையோர் ஏத்த,
உமையோ டிருந்தானே, 7

---

6. கேழல் - பன்றி. எயிறு - பல்.

7. தோழம் - ஒரு பேரெண். எண்ணில் சிறந்த எண்ணிக்கை மிகுந்த.

விண்தான் அதிர வியன் ஆர் கயிலை
வேரோடு எடுத்தான்தன்
திண்தோள், உடலும், முடியும் நெரியச்
சிறிதே ஊன்றிய
புண்தான் ஒழிய அருள்செய் பெருமான்,
புறவம் பதியாக,
எண்தோள் உடையான், இமையோர் ஏத்த,
உமையோ டிருந்தானே. 8

நெடியான், நீள் தாமரைமேல் அயனும்
நேடிக் காண்கில்லாப்
படி ஆம் மேனி உடையான், பவள
வரைபோல் திருமார்பில்
பொடிஆர் கோலம் உடையான், கடல்சூழ்
புறவம் பதியாக,
இடி ஆர் முழவு ஆர் இமையோர் ஏத்த,
உமையோ டிருந்தானே. 9

8, வியன் ஆர் - இடம் அகன்ற.

9. நெடியான் - திருமால். நேடி - தேடி: இடி முழக்கம் போல முரசு முழங்கும்.

ஆலும் மயிலின் பீலி அமணர்
அறிவு இல் சிறு தேரர்,
கோலும் மொழிகள் ஒழியக், குழுவும்
தழலும், எழில் வானும்
போலும் வடிவும் உடையான், கடல் சூழ்
புறவம் பதியாக,
ஏலும் வகையால் இமையோர் ஏத்த,
உமையோ டிருந்தானே. 10

பொன் ஆர் மாடம் நீடும் செல்வப்
புறவம் பதியாக
மின் ஆர் இடையாள் உமையாளோடும்
இருந்த விமலனைத்,
தன் ஆர்வம்செய் தமிழின் விரகன்
உரைத்த தமிழ்மாலை
பல்நாள் பாடி யாடப், பிரியார்
பரலோகம்தானே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. ஆலும் - ஆரவாரமாக ஒலிக்கும். பீலி - தோகை. கோலும் - வகுத்துரைக்கும். குழுவும் தழல் - கூடி எரியும் தீ. எழில் வான் - அழகிய அந்தி வானம். வடிவு - நிறம். ஏலும் - பொருந்தும்.

11. விரகன் - அறிவன்.

1:75　**திருவெங்குரு**

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

காலை நல் மாமலர் கொண்டு அடி பரவிக்
　கைதொழு மாணியைக் கறுத்த வெம்காலன்
ஓலம் அதுஇட, முன் உயிரொடு மாள
　உதைத்தவன் ; உமையவள் விருப்பன் ; எம்
　　பெருமான்,
மாலை வந்து அணுக, ஓதம் வந்து உலவி,
　மறிதிரை சங்கொடு பவளம் முன் உந்தி,
வேலை வந்து அணையும் சோலைகள் சூழ்ந்த
　வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே. 1

பெண்ணினைப் பாகம் அமர்ந்து, செஞ்சடைமேல்
　பிறையொடும் அரவினை அணிந்து, அழகாகப்
பண்ணினைப் பாடி, ஆடி, முன் பலிகொள்
　பரமர், எம் அடிகளார் பரிசுகள் பேணி,
மண்ணினை மூடி, வான் முகடு ஏறி,
　மறிதிரை கடல் முகந்து எடுப்ப, மற்று உயர்ந்து
விண் அளவு ஓங்கி, வந்து இழிகோயில்
　வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே. 2

---

1. கறுத்த - சினந்த. திரை - அலை. ஓதம் - நீர். உந்தி - தள்ளி. கடல்அலை.

2. அமர்ந்து - விரும்பி. அடிகள் - முதல்வன். பரிசு - தன்மை. பேணி - போற்றி. வந்து இழி - கீழே இறங்கி வந்த.

ஓர் இயல்பு இல்லா உருவம் அது ஆகி,
ஒண்திறல் வேடனது உரு அதுகொண்டு,
காரிகை காணத் தனஞ்சயன் தன்னைக்
கறுத்து, அவற்கு அளித்து, உடன் காதல்செய் பெருமான்,
நேர்இசையாக அறுபதம் முரன்று,
நிரைமலர்த் தாதுகள் மூச, விண்டு உதிர்ந்து,
வேரிகள் எங்கும் விம்மிய சோலை
வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே. 3

3. இயல்பு - தன்மை. ஒண்திறல் - புகழத்தக்க வலிமை. காரிகை - பெண், உமை. தனஞ்சயன் - அருச்சுனன். கறுத்து - சினந்து. அளித்து - அருள் செய்து. காதல் செய் - அன்பு செய்த. நேர்இசை - பண்வகை. அறுபதம் - ஆறுகாலை உடைய வண்டு. முரன்று - ஒலியிசைத்து மொய்க்க. விண்டு - மலர்கள் விரிய. தாதுகள் உதிர்ந்து மூச - மகரந்தம் உதிர்ந்து மூட. வேரி - தேன். விம்மிய - மிகுந்த.

வண்டு அணை கொன்றை, வன்னியும், மத்தம்,
மருவிய கூவிளம், எருக்கொடு, மிக்க
கொண்டு அணி சடையர் ; விடையினர் ; பூதம்
கொடுகொட்டி குடமுழாக் கூடியும், முழவப்,
பண் திகழ்வாகப் பாடி, ஓர் வேதம்
பயில்வர், முன் பாய் புனல் கங்கையைச்சடைமேல்
வெண்பிறை சூடி, உமையவளோடும்
வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே. 4

சடையினர், மேனி நீறது பூசித்,
தக்கைகொள் பொக்கணம் இட்டு, உட்டுகக்
கடைதொறும் வந்து, பலியது கொண்டு,
கண்டவர் மனமவை கவர்ந்து, அழகாகப்
படையது ஏந்திப், பைங்கயல் கண்ணி
உமையவள் பாகமும் அமர்ந்து, அருள்செய்து,
விடையொடு பூதம் சூழ்தரச் சென்று,
வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே. 5

---

4. கூவிளம் - வில்வம். வன்னி, வில்வம் இலைகள். கொன்றை, ஊமத்தம், எருக்கு, மலர்கள். கொடு கொட்டி, குடமுழா - முரச வகைகள்

5. தக்கை-ஒருவகை இசைக்கருவி. பொக்கணம்-துணிமூட்டை. கடை - வீட்டு வாசல்கள். படை - கருவி. பைங்கயல் கண்ணி - அழகிய, மீன்போன்ற கண்களை உடைய உமை. அங்கயற்கண்ணி. 'பூதம் சூழ்தர விடையொடு சென்று' என இயைக்க.

கரைபொரு கடலில் திரையது மோதக்,
கங்குல் வந்து ஏறிய சங்கமும், இப்பி,
உரை உடை முத்தம் மணலிடை வைகி,
ஓங்கு ஒளி இருள் அற்த்துரப்ப, எண்திசையும்
புரை மலி வேதம் போற்று பூசுரர்கள்
புரிந்தவர் நலங்கொள் ஆகுதியினின் நிறைந்த
விரை மலி தூபம் விசும்பினை மறைக்கும்
வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே. 6

வல்லிநுண் இடையாள் உமையவள் தன்னை
மறுகிட வரு மத களிற்றினை மயங்க
ஒல்லையில் பிடித்து, அங்கு உரித்து, அவள் வெருவல்
கெடுத்தவர்; விரிபொழில் மிகு திரு ஆலின்
நல்அறம் உரைத்து ஞானமோடிருப்ப,
நலிந்திடல் உற்று வந்த அக் கருப்பு
வில்லியைப் பொடிபட விழித்தவர்; விருப்பி
வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே. 7

---

6. உரை - புகழ்ச்சி, மதிப்பு. அறத்துரப்ப - முழுதும் நீக்க. சங்கும் இப்பியும் முத்தும் கூடி இருளை அறத்துரப்ப. புரை - உயர்ச்சி. பூசுரர் - நிலத்தேவரான அந்தணர். ஆகுதித் தூபம் விசும்பினை மறைக்கும் - வேள்விப் புகையானது வானத்தை மறைக்கும்.

7. வல்லி - கொடி. மறுகிட - மனம் கலங்க. ஒல்லையில் - விரைவில். வெருவல் - அஞ்சுதல். நலிந்திடல் உற்று வந்த - வருத்த வந்த. கருப்புவில்லி - கரும்பை வில்லாகக் கொண்ட மன்மதன். பொடிபட - எரிந்து சாம்பர் ஆகும்படி.

பாங்குஇலா அரக்கன் கயிலை அன்று எடுப்பப்,
　　பலதலை முடியொடு தோள்அவை நெரிய,
ஓங்கிய விரலால் ஊன்றி, அன்று, அவற்கே
　　ஒளிதிகழ் வாளது கொடுத்து, அழகாய
கோங்கொடு, செருந்தி, கூவிளம், மத்தம்,
　　கொன்றையும் குலாவிய செஞ்சடைச் செல்வர்,
வேங்கை பொன்மலர் ஆர்விரை தரு கோயில்
　　வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே. 8

ஆறுடைச் சடைஎம் அடிகளைக் காண,
　　அரியொடு பிரமனும் அளப்பதற்காகிச்,
சேறுஇடை, திகழ்வானத்திடை புக்கும்
　　செலவு அறத் தவிர்ந்தனர் ; எழில் உடைத்
　　　　திகழ்வெண்
நீறுடைக் கோல மேனியர் ; நெற்றிக்
　　கண்ணினர் ; விண்ணவர் கைதொழுது ஏத்த,
வேறு எமை ஆள விரும்பிய விகிர்தர்,
　　வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே. 9

---

8. பாங்கு - நல்லபண்பு. பலதலை - பத்துத் தலைகளும். தோள் அவை - இருபது தோள்களும். அவற்கே - அவனுக்கே.

9. ஆறு - கங்கை. சேறு - நிலம். செலவு அறத் தவிர்ந்தனர் - மேலும் செல்ல முடியாமல் முயற்சியைக் கைவிட்டனர். எழில் - அழகு.

பாடுடைக் குண்டர், சாக்கியர், சமணர்
பயில்தரும் மற உரை விட்டு, அழகாக
ஏடுடை மலராள் பொருட்டு வண் தக்கன்
எல்லைஇல் வேள்வியைத் தகர்த்து அருள் செய்து,
காடிடைக் கடிநாய் கலந்துடன் சூழக்,
கண்டவர் வெருவுற விளித்து, வெய்துஆய
வேடுஉடைக் கோலம் விரும்பிய விகிர்தர்,
வெங்குரு மேவி உள்வீற்றிருந்தாரே. 10

விண்இயல் விமானம் விரும்பிய பெருமான்,
வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரை,
நண்ணிய நூலன் ஞானசம்பந்தன்
நவின்ற இவ் வாய்மொழி நலமிகு பத்தும்
பண்ணியல்பாகப் பத்திமை யாலே
பாடியும், ஆடியும், பயில வல்லார்கள்
விண்ணவர் விமானம் கொடுவர ஏறி
வியனுலகு ஆண்டு வீற்றிருப்பவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. பாடு - துன்பம். மற உரை - அறமுறைக்கு மாறான உரை. ஏடு - இதழ். மலராள் - தக்கன் மகளாகத் தோன்றிய உமையாள். எல்லையில் வேள்வி - பெரு வேள்வி. தகர்த்து - அழித்து. வெருவுற விளித்து - அஞ்சுமாறு கூவி. வெய்து - கொடுமை. வேடு உடைக் கோலம் - வேடர்க் குரிய வேடம்.

11. வாய்மொழி - மெய்ம் மொழி, நன்மையை வாய்க்கச் செய்யும் மொழி.

1 : 76　　திருஇலம்பையங்கோட்டூர்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

மலையினார் பருப்பதம், துருத்தி, மாற்பேறு,
　　மாசு இலாச் சீர்மறைக்காடு, நெய்த்தானம்,
நிலையினான், எனது உரை தனது உரையாக,
　　நீறு அணிந்து ஏறு உகந்து ஏறிய நிமலன் –
கலையின் ஆர் மடப்பிணை துணையொடும் துயிலக்
　　கானல் அம்பெடை புல்கிக் கணமயில்ஆலும்
இலையின் ஆர் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர்
　　இருக்கையாப் பேணி, என் எழில் கொள்வது
　　　　இயல்பே? 1

---

1. நிலையினான் - நிலையாயிருப்பவன்: கலையின் ஆர் மடப்பிணை - கலையாகிய ஆன்மானோடு கூடிய பெண்மான். கானல் - சோலை. புல்கி - தழுவி- பொருந்தி. கண மயில் - மயில் கூட்டம். ஆலும், ஒலிசெய்யும். இருக்கை - இருப்பிடம்.

திரு மலர்க் கொன்றையான், நின்றியூர் மேயான்,
தேவர்கள் தலைமகன், திருக் கழிப்பாலை
நிருமலன், எனது உரை தனது உரை ஆக,
நீறு அணிந்து ஏறு உகந்து ஏறிய நிமலன்-
கருமலர்க் கமழ் சுனை நீள் மலர்க் குவளை
கதிர் முலை இளையவர் மதிமுகத்து உலவும்
இருமலர்த் தண்பொய்கை இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணி, என் எழில் கொள்வது
இயல்பே? 2

பாலன் ஆம், விருத்தன் ஆம், பசுபதிதான் ஆம்,
பண்டு வெங்கூற்று உதைத்து அடியவர்க்கு அருளும்
காலன் ஆம், எனது உரை தனது உரை ஆகக்.
கனல்எரி அங்கையில் ஏந்திய கடவுள்-
நீலமாமலர்ச் சுனை வண்டு பண்செய்ய,
நீர் மலர்க்குவளைகள் தாது விண்டு ஓங்கும்
ஏலம் நாறும் பொழில் இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப் பேணி, என் எழில் கொள்வது
இயல்பே? 3

---

2. கருமலர் - இருண்ட நிறமான நெய்தல் மலர்: குவளை - குவளை போன்ற கண்கள். மதி முகம் திங்களை ஒத்த முகம். இரு மலர் - பெரிய மலர்.

3. காலன் - காலை உடையவன். கனல் எரி வெம்மை மிகு தீ:

உளம் கொள்வார் உச்சி ஆர் கச்சி ஏகம்பன்.
ஒற்றியூர் உறையும் அண்ணாமலை அண்ணல்,
விளம்புவான் எனது உரை தனது உரைஆக,
வெள்ளநீர் விரிசடைத் தாங்கிய விமலன்—
குளம்பு உறக் கலை துள, மலைகளும் சிலம்ப,
கொழுங்கொடி எழுந்து எங்கும் கூவிளம் கொள்ள
இளம்பிறை தவழ் பொழில் இலம்பையங்கோட்டூர்
இருக்கையாய்ப் பேணி, என் எழில் கொள்வது
இயல்பே ? 4

தேனும்ஆய், அமுதம்ஆய்த், தெய்வமும் தான்ஆய்த்,
தீயொடு நீர்உடன் வாயு ஆம்,தெரியில்
வானும் ஆம், எனது உரை தனது உரைஆக,
வரிஅரா அரைக்கு அசைத்து உழிதரு மைந்தன்-
கானமான் வெருஉறக், கருவிரல்ஊகம்
கடுவனோடு உகளும் ஊர்,கல்கடுஞ்சாரல்
ஏனம் ஆன் உழிதரும் இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப் பேணி, என் எழில் கொள்வது
இயல்பே ? 5

---

4. உளம் கொள்வார் உச்சியார் - ஆழ்ந்து நினைப்பாரின் தலைமேல் விளங்கிநிற்பார், கலை குளம்பு உறத் து(ள்)ள - கலைமான் தன் குளம்பு நிலத்தில் அழுந்த எழுந்து துள்ள. சிலம்ப - எதிர் ஒலி செய்ய. கூவிளம் கொள்ள - வில்வ மரத்தில் பற்றிக் கொள்ள.

5. தீ முதலாயின - பஞ்ச பூதங்கள். அரைக்கு அசைத்து - அரையில் கட்டி. உழிதரல் – அலைந்து திரிதல். கானம் – காடு. வெருவுற - அஞ்ச. ஊகம் – பெண் குரங்கு கடுவன் - ஆண் குரங்கு. உகளும் – பாய்ந்து ஓடித் திரியும். கல் - மலை. ஏனம் ஆன் காட்டுப் பன்றியும் பசுவும்.

மனம் உலாம் அடியவர்க்கு அருள்புரிகின்ற
வகை அலால்,பலி திரிந்து உண்பு இலான், மற்றுஓர்
தனம் இலான், எனது உரை தனது உரைஆகத்,
தாழ்சடை இளமதி தாங்கிய தலைவன்-
புனம்எலாம் அருவிகள் இருவி சேர் முத்தம்
பொன்னொடு மணி கொழித்து, ஈண்டி வந்து, எங்கும்
இனம்எலாம் அடைகரை இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப் பேணி. என் எழில் கொள்வது
இயல்பே? 6

நீர் உளான், தீ உளான், அந்தரத்து உள்ளான்,
நினைப்பவர் மனத்து உளான், நித்தமா ஏத்தும்
ஊர் உளான், எனது உரை தனது உரைஆக,
ஒற்றை வெள் ஏறு உகந்து ஏறிய ஒருவன்-
பார்உளார் பாடலோடு,ஆடல் அறாத
பண் முரன்று அம்சிறைவண்டுஇனம் பாடும்
ஏர் உளார் பைம்பொழில் இலம்பையங்கோட்டூர்,
இருக்கையாப் பேணி, என்எழில் கொள்வது
இயல்பே? 7

---

6. மனம் உலாம் அடியவர் - தம் மனத்தை எப்போதும் இறைவன்பாலே நிலவச் செய்யும மெய்யடியார். பலி திரிந்து உண்பு இலான் - பிச்சை ஏற்றும் தான் உண்ணாதவன். இருவி சேர்முத்தம் - தினைத் தாளைச் சேர்ந்த முத்துக்கள். அருவி நீர் முத்து, பொன், மணிகளைக் கொழித்துச் செல்லும்.

7. அந்தரம் - வானம் நித்தமா - நாள்தோறும். பார் உளார் - உலகத்தவர். பண் முரன்று பாடும் - பண் இசைத்துப் பாடும். ஏர் - அழகு. எழில் - அழகு.

வேர் உலாம் ஆழ்கடல் வரு திரை இலங்கை
வேந்தன தடக்கைகள் அடர்த்தவன், உலகில்
ஆர் உலாம் எனது உரை தனது உரை ஆக,
ஆகம் ஓர் அரவு அணிந்து உழிதரும் அண்ணல்-
வார் உலாம் நல்லன மாக்களும் சார,
வாரணம் உழிதரும் மல்லல் அம் கானல்,
ஏர் உலாம் பொழில் அணி இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப் பேணி, என் எழில் கொள்வது
இயல்பே? 8

8. வேர் உலாம் - நிலத்தின் அடிவரை செல்லும். தடக்கைகள் - பெரியகைகள். அடர்த்தவன் - நெருக்கி அழுத்தியவன். ஆர் உலாம் உரை - பொருள் செறிவு உடைய மொழி. ஆகம் - மார்பு. மாக்கள் - விலங்குகள். வாரணம் - யானை. மல்லல் - வளம்.

கிளர் மழை தாங்கினன், நான்முகம் உடையோன்,
கீழ் அடி, மேல்முடி, தேர்ந்து அளக்கில்லா,
உளமழை எனது உரை தனது உரை ஆக,
ஒள் அழல் அங்கையில் ஏந்திய ஒருவன்—
வளமழை எனக்கழை வளர் துளி சோர,
மாசுணம் உழிதரு மணி அணி மாலை,
இளமழை தவழ் பொழில் இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப்பேணி, என் எழில் கொள்வது
இயல்பே? 9

9. கிளர் மழை தாங்கினன் - இந்திரனால் ஏவப்பட்டு வந்த பெருமழையைக் கோவர்த்தன மலையைத் தூக்கிப் பிடித்துத் தடுத்து நின்ற கண்ணனாகிய திருமால். தேர்ந்து அளக்கில்லா - ஆராய்ந்து அறிய முடியாத. உள மழை - உள்ளிருந்தும் மழை போலக் கொட்டும்; வள மழை - வளமான மழை. கழை - மூங்கில். துளி - நீர்த்துளி. சோர - சொரிய. மாசுணம் - மலைப் பாம்பு.

உரிஞ்சன கூறைகள் உடம்பினர் ஆகி
உழிதரு சமணரும் சாக்கியப்பேய்கள்
பெருஞ்செல்வன், எனது உரை தனது உரைஆக,
பெய் பலிக்கு என்று உழல் பெரியவர்பெருமான்-
கருஞ்சினைமுல்லை, நன்பொன் அடைவேங்கைக்,
களிமுக வண்டொடுதேன் இனம் முரலும்,
இருஞ்சுனை மல்கிய இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப் பேணி, என் எழில் கொள்வது
இயல்பே ? 10

கந்தனை மலி கனைகடல் ஒலி ஓதம்
கானல் அம் கழி வளர் கழுமலம் என்னும்
நந்தியார் உறைபதி நால்மறை நாவன்-
நல் - தமிழ்க்கு இன்துணை, ஞானசம்பந்தன்
எந்தையார் வள நகர் இலம்பையங்கோட்டூர்
இசையொடு கூடிய பத்தும் வல்லார், போய்
வெந்துயர் கெடுகிட, விண்ணவரோடும்
வீடுபெற்று, இம்மையின் வீடு எளிது ஆமே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. உரிஞ்சன கூறை - உரிந்தால் போன்ற ஆடை. கரும் சினை - பெரிதான அரும்பு. பொன் அடை வேங்கை - பொன்போன்ற நிறத்தையுடைய வேங்கை மலர். களி - மகிழ்ச்சி.

11. கந்தனை - மணம். நந்தியார்-சிவபெருமான். கெடுகிட - கெட

1 : 77 திருஅச்சிறுபாக்கம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பொன் திரண்டன்ன புரிசடை புரள,
பொருகடல் பவளமொடு அழல்நிறம் புரைய,
குன்று இரண்டு அன்ன தோள் உடை அகலம்
குலாய வெண்நூலொடு கொழும்பொடி அணிவர்;
மின் திரண்டன்ன நுண் இடை அரிவை
மெல்லியலாளை ஓர்பாகமாப் பேணி,
அன்று இரண்டு உருவம் ஆய எம் அடிகள் -
அச்சிறுபாக்கம் அது ஆட்சிகொண்டாரே. 1

---

1. புரி சடை - சுற்றியசடை: மின் திரண்ட அன்ன - மின்னலைப் போன்ற: அரிவை - பெண்: இரண்டு உருவம் - ஆணும் பெண்ணுமான இரண்டுரு:

தேனினும் இனியர், பால் அன நீற்றர்,
தீம்கரும்பு அனையர், தம் திருவடி தொழுவார்
ஊன் நயந்து உருக உவகைகள் தருவார்,
உச்சிமேல் உறைபவர், ஒன்று அலாது ஊரார்,
வானகம் இறந்து வையகம் வணங்க
வயம் கொள நிற்பது ஓர் வடிவினை உடையார்,
ஆனையின் உரிவை போர்த்த எம் அடிகள்
அச்சிறுபாக்கம் அது ஆட்சிகொண்டாரே. 2

---

2. பால் அன - பால் போன்ற வெண்ணிறமான. தீங் கரும்பு அனையர் - முயல்வார்க்கு அவர் முயற்சிக்குத் தக்கவாறு இன்பப் பொருளானவர். ஊன் நயந்து உருக - உடம்பும் சேர்ந்து உருகுமாறு. உச்சி - ஆயிர இதழ்த் தாமரை இருக்கையாகிய உயர்ந்த இடம். ஒன்று - ஒப்பில்லாத ஒன்றேயான எருது. இறந்து - கடந்து. வையகம் வணங்க - நிலவுலகத்திற்கு வந்து பெருமானை வணங்க. வயம் - வெற்றி.

கார்இருள்உருவ மால்வரை புரையக்
களிற்றினது உரிவை கொண்டு அரிவைமேல் ஓடி,
நீர்உருமகளை நிமிர்சடைத் தாங்கி,
நீறு அணிந்து ஏறு உகந்து ஏறிய நிமலர்;
பேர்அருளாளர்; பிறவியில் சேரார்;
பிணி இலர்; கேடு இலர்; பேய்க்கணம் சூழ
ஆர்இருள் மாலை ஆடும் எம் அடிகள்—
அச்சிறுபாக்கம்அது ஆட்சி கொண்டாரே. 3

"மைம்மலர்க்கோதை மார்பினர்" எனவும்,
"மலைமகள்அவளொடு மருவினர்" எனவும்,
"செம்மலர்ப்பிறையும் சிறை அணி புனலும்
சென்னிமேல் உடையர், எம் சென்னிமேல்
தம் மலர் அடி ஒன்று அடியவர் பரவ, [உறைவார்"
தமிழ்ச்சொலும் வடசொலும் தாள்நிழல் சேர,
அம் மலர்க்கொன்றை அணிந்த எம் அடிகள் —
அச்சிறுபாக்கம்அது ஆட்சி கொண்டாரே. 4

---

3. மால் வரை - பெரிய மலை. புரைய - ஒப்ப. களிறு - ஆண்யானை. அரிவை - பெண், உமை. மேல் ஓடி - அச்ச முறச்செய்து. ஆர் இருள் - செறிந்த இருள்.

4. மைம்மலர்க் கோதை - நீலமலர் மாலை; சிறை - கரை.

"விண் உலாம் மதியம் சூடினர்" எனவும்,
"விரிசடை உள்ளது, வெள்ளநீர்" எனவும்,
"பண் உலாம் மறைகள் பாடினர்" எனவும்,
"பலபுகழ் அல்லது பழி இலர்" எனவும்,
எண்ணல் ஆகாத இமையவர், நாளும்,
ஏத்து அரவங்களோடு எழில் பெற நின்ற
அண்ணல்; ஆன் ஊர்தி ஏறும் எம் அடிகள் –
அச்சிறுபாக்கம் அது ஆட்சி கொண்டாரே. 5

நீடுஇருஞ்சடைமேல் இளம்பிறை துளங்க,
நிழல் திகழ் மழுவொடு, நீறு மெய் பூசி,
தோடு ஒரு காதினில் பெய்து, வெய்துஆய
சுடலையில் ஆடுவர்; தோல் உடைஆக,
காடு அரங்குஆக, கங்குலும் பகலும்,
கழுதொடு பாரிடம் கைதொழுது ஏத்த,
ஆடுஅரவுஆட, ஆடும் எம் அடிகள் –
அச்சிறுபாக்கம் அது ஆட்சி கொண்டாரே. 6

---

5. அண்ணல் - தலைவன். ஆன் - எருது.

6. துலங்க - விளங்க. நிழல் - ஒளி. வெய்து - வெம்மை உடையது. கழுது - பேய். பாரிடம் - பூதகணம்.

ஏறும் ஒன்று ஏறி, நீறு மெய் பூசி,
இளங்கிளை அரிவையொடு ஒருங்குஉடன்ஆகிக்
கூறும் ஒன்று அருளி, கொன்றைஅம்தாரும்
குளிர்இளமதியமும் கூவிளமலரும்
நாறும் மல்லிகையும், எருக்கொடு, முருக்கும்,
மகிழ், இளவன்னியும் இவை நலம் பகர,
ஆறும் ஓர் சடைமேல் அணிந்த எம் அடிகள் –
அச்சிறுபாக்கம்அது ஆட்சி கொண்டாரே. 7

கச்சும் ஒள்வாளும் கட்டிய உடையர்,
கதிர் முடி சுடர்விடக், கவரியும் குடையும்
பிச்சமும் பிறவும் பெண் அணங்குஆய
பிறை நுதலவர், தமைப் பெரியவர் பேணப்,
பச்சமும் வலியும் கருதிய அரக்கன்
பருவரை எடுத்த திண்தோள்களை அடர்வித்து,
அச்சமும் அருளும் கொடுத்த எம் அடிகள் –
அச்சிறுபாக்கம்அது ஆட்சி கொண்டாரே. 8

---

7. இளம் கிளை - இளமையானகிளி. கி(ள்)ளை - கிளி. நாறும் - மணம் வீசும். எருக்கு - எருக்க மலர். முருக்கு - முருக்க மலர். மகிழ் - மகிழம்பூ. நலம் பகர - அழகு செய்ய.

8. பிச்சம் - மயிலிறகுக் குஞ்சம். அணங்கு - தெய்வம். பச்சம் - அன்பு.

நோற்றலாரேனும், வேட்டலாரேனும்,
நுகர் புகர், சாந்தமோடு ஏந்திய மாலைக்
கூற்றலாரேனும், இன்னஆறு என்றும்
எய்தல் ஆகாதது ஓர் இயல்பினை உடையார்;
தோற்றலார் மாலும் நான்முகம் உடைய
தோன்றலும், அடியொடு முடி உறத்தங்கள்
ஆற்றலால் காணார்ஆய எம் அடிகள் –
அச்சிறுபாக்கம்அது ஆட்சி கொண்டாரே. 9

வாதுசெய் சமணும், சாக்கியப்பேய்கள், –
நல்வினை நீக்கிய வல்வினையாளர்,
ஓதியும் கேட்டும் உணர்வினை இலாதார் –
உள்கல் ஆகாதது ஓர் இயல்பினை உடையார்;
வேதமும் வேதநெறிகளும் ஆகி,
விமலவேடத்தொடு, கமல மா மதி போல்
ஆதியும் ஈறும் ஆய எம்அடிகள் –
அச்சிறுபாக்கம்அது ஆட்சி கொண்டாரே. 10

---

9. நோற்றலார் - தவம் செய்யாதவர். வேட்டலார் - வேள்வி செய்யாதவர் புகல் - உண்பொருள், நிவேதனப் பொருள். மாலைக் கூற்றலார் - இயல்பைத் தமதாகக் கொள்ளாதவர். தோற்றலார் - பிறப்பினை உடையார்.

10. உள்கல் ஆகாதது ஓர் இயல்பு - நினைத்துப் பார்க்கவும் முடியாத குணம். கமல மாமதிபோல் கதிரவனால் மலர்தலும் கூம்பலுமான தாமரையைப் போலவும், வளர்தலும் தேய்தலுமான திங்களைப் போலவும், நிகழ்கின்ற உலகிற்கு.

மைச் செறி குவளை தவளை வாய் நிறைய
மதுமலர்ப் பொய்கையில் புதுமலர் கிழியப்
பச்சிறவு எறிவயல் வெறி கமழ் காழிப் -
பதியவர் அதிபதி - கவுணியர்பெருமான்,
கைச் சிறுமறியவன் கழல்அலால் பேணுக்
கருத்துஉடை ஞானசம்பந்தன் - தமிழ்கொண்டு,
அச்சிறுபாக்கத்து அடிகளை ஏத்தும்
அன்பு உடைஅடியவர் அருவினை இலரே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. மை - நீலநிறம். பச்சு இறவு - பசுமையான இருல்மீன். எறிய - துள்ள. வெறி - மணம். அதிபதி - தலைவன்.

1 : 78 திருஇடைச்சுரம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

வரி வளர் அவிர்ஒளி அரவு அரை தாழ,
வார்சடைமுடிமிசை வளர்மதி சூடி,
கரி வளர்தரு கழல்கால் வலன் ஏந்தி,
கனல்எரிஆடுவர், காடு அரங்குஆக;
விரி வளர்தரு பொழில் இனமயில் ஆல,
வெண்நிறத்து அருவிகள் திண்ணென வீழும்,
எரி வளர் இனமணி புனம் அணி சாரல்
இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே? 1

ஆற்றையும் ஏற்றது ஓர் அவிர்சடை உடையர்;
அழகினை அருளுவர்; குழகுஅலது அறியார்;
கூற்று உயிர் செகுப்பது ஓர் கொடுமையை உடையர்;
நடுஇருள் ஆடுவர்; கொன்றை அம்தாரார்;
சேற்று அயல் மிளிர்வன கயல், இளவாளை
செருச் செய, ஓர்ப்பன செம்முக மந்தி
ஏற்றையொடு உழிதரும் எழில் திகழ் சாரல்
இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே? 2

---

1. கரி - இங்கு, அத்தியாளியின் உருவம் என்பர். அது பொறிக்கப் பெற்ற கழல். இவர் வணம்என்னே? - இவரது உண்மை இயல்புதான் யாதோ ?

2. குழகு-இளமை. ஓர்ப்பன-உற்று நோக்குவன. மந்தி - பெண்குரங்கு. ஏற்றை - ஆண்குரங்கு.

கானமும், சுடலையும், கல் படு நிலனும்,
காதலர்; தீது இலர்; கனல் மழுவாளர்;
வானமும் நிலமையும் இருமையும் ஆனார்;
வணங்கவும் இணங்கவும் வாழ்த்தவும்படுவார்;
நானமும், புகை, ஒளி, விரையொடு கமழ,
நளிர்பொழில் இள மஞ்ஞை மன்னிய பாங்கர்,
ஏனமும் பிணையலும் எழில் திகழ் சாரல்
இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே? 3

கட மணி மார்பினர்; கடல்தனில் உறைவார்
காதலர்; தீது இலர்; கனல் மழுவாளர்,
விடம் அணி மிடறினர்; மிளிர்வது ஓர் அரவர்;
வேறும் ஓர் சரிதையர்; வேடமும் உடையர்;
வடம் உலை அயலன கருங்குருந்து ஏறி,
வாழையின் தீம்கனி வார்ந்து தேன் அட்டும்
இடம் முலை அரிவையர் எழில் திகழ்சாரல்
இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே? 4

---

3. கானம் - காடு. கல்படு நிலன் - மலைப் பகுதி. வானம் நிலமை இருமை - மறுமை இம்மை என்னும் இருமையும். நானம்-கத்தூரி. ஏனமும் பிணையலும் - ஆண்பன்றியும் பெண்பன்றியும்.

4. கடம் - மலைச்சாரல். மிளிர்வது - ஒளியுடன் விளங்குவது. சரிதை - ஒழுக்கம், நடைமுறை. வடம் - ஆலமரம். உலைதல் - அசைதல். அயலன - பக்கத்தில் இருப்பனவாகிய. கரும் குருந்து - பெரிய குருந்த மரங்கள். வார்ந்து-ஒழுகி. அட்டும் - வடித்தெடுக்கும்,

கார் கொண்டகடி கமழ் விரிமலர்க் கொன்றைக் -
கண்ணியர்; வளர்மதி கதிர்விட, கங்கை -
நீர் கொண்ட சடையினர்; விடை உயர் கொடியர்;
நிழல் திகழ் மழுவினர்; அழல்திகழ் நிறத்தர்;
சீர் கொண்டமென்சிறைவண்டு பண்செய்யும்
செழும் புனல் அனையன செங்குலை வாழை
ஏர் கொண்ட பலவினொடு எழில் திகழ் சாரல்
இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே? 5

தோடு அணி குழையினர்; சுண்ணவெண்நீற்றர்;
சுடலையின் ஆடுவர்; தோல் உடைஆகப்
பீடு உயர்செய்தது ஓர் பெருமையை உடையர்;
பேய்உடன் ஆடுவர்; பெரியவர் பெருமான்;
கோடல்கள் ஒழுகுவ முழுகுவ தும்பி,
குரவமும் மரவமும் மன்னிய பாங்கர்,
ஏடு அவிழ் புதுமலர் கடிகமழ் சாரல்,
இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே? 6

---

5. கார் - கார்காலம்.

6. பீடு - மேன்மை. கோடல் - செங்காந்தள் மலர். ஒழுகுவ-தேனைச் சொரிவன. தும்பி - வண்டினம். குரவம் - குராமரம். மரவம் - வெண் கடப்பமரம். ஏடு - இதழ்.

கழல் மல்கு காலினர்; வேலினர் ; நூலர்;
கவர்தலை அரவொடு கண்டியும் பூண்பர்;
அழல் மல்கும் எரியொடும் அணிமழு ஏந்தி
ஆடுவர்; பாடுவர்; ஆர்அணங்கு உடையர்;
பொழில் மல்கு நீடிய அரவமும் மரவம்
மன்னிய கவட்டு இடைப் புணர்குயில் ஆலும்
எழில் மல்கு சோலையில் வண்டு இசை பாடும்
இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே? 7

தேம் கமழ் கொன்றை அம்திருமலர் புனைவார்;
திகழ்தரு சடைமிசைத் திங்களும் சூடி,
வீந்தவர் சுடலை வெண்நீறு மெய் பூசி,
வேறும் ஓர் சரிதையர்; வேடமும் உடையர்;
சாந்தமும் அகிலொடு முகில் பொதிந்து அலம்பித்,
தவழ் கன மணியொடு மிகு பளிங்கு இடறி,
ஏந்து வெள் அருவிகள் எழில் திகழ் சாரல்
இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே? 8

---

7. கவர் தலை - ஐந்தாகிய தலை. கண்டி - உருத்திராக்கம். கவடு - கிளை. புணர் குயில் - கூடிய குயில்கள்.

8. வீந்தவர் - இறந்தவர். கன மணி - மதிப்புடைய மாணிக்கம்.

பலஇலம் இடு பலி கையில் ஒன்று ஏற்பர்;
பலபுகழ் அல்லது பழி இலர், தாமும்;
தலை இலங்கு அவிர்ஒளி நெடுமுடி அரக்கன்
தடக்கைகள் அடர்த்தது ஓர் தன்மையை உடையர்;
மலை இலங்கு அருவிகள் மணமுழவு அதிர,
மழை தவழ் இள மஞ்ஞை மல்கிய சாரல்,
இலை இலவங்கமும் ஏலமும் கமழும்
இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே? 9

பெருமைகள் தருக்கி ஓர் பேது உறுகின்ற
பெருங்கடல்வண்ணனும் பிரமனும் ஓரா
அருமையர்; அடிநிழல் பரவி நின்று ஏத்தும்
அன்பு உடை அடியவர்க்கு அணியரும் ஆவர்;
கருமை கொள் வடிவொடு சுனை வளர் குவளைக்
கயல்இனம் வயல் இளவாளைகள் இரிய,
எருமைகள் படிதர, இள அனம் ஆலும்
இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே? 10

---

9. மணமுழவு அதிர - மணமுரசு போல ஒலிக்க. மஞ்ஞை - மயில்.

10. பேது - அறியாமை. ஓரா - அறியாத இரிய - விலகிஓட. படிதர - சென்றுதோய. அனம் - அன்னம். ஆலும் - ஒலிக்கும்.

மடைச்சுரம் மறிவன வாளையும் கயலும்
மருவிய வயல்தனில் வருபுனல் காழிச்,
சடைச்சுரத்து உறைவது ஓர் பிறை உடை அண்ணல்
சரிதைகள் பரவி நின்று உருகு சம்பந்தன்,
புடைச் சுரத்து அருவரைப் பூக் கமழ் சாரல்
புணர் மடநடையவர் புடை இடை ஆர்ந்த
இடைச்சுரம் ஏத்திய இசையொடு பாடல்,
இவை சொல வல்லவர் பிணி இலர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. மறிவன - மாறித் துள்ளுவன. சடைச் சுரம்- சடைக்காடு.

1 - 79 திருக்கழுமலம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

அயில் உறு படையினர் ; விடையினர் ; முடிமேல்
அரவமும் மதியமும் விரவிய அழகர் ;
மயில் உறு சாயல வனமுலை ஒருபால்
மகிழ்பவர் ; வான்இடை முகில் புல்கும் மிடறர் ;
பயில்வுஉறு சரிதையர் ; எருது உகந்து ஏறிப்
பாடியும் ஆடியும் பலி கொள்வர் ; வலி சேர்
கயிலையும் பொதியிலும் இடம் என உடையார்
கழுமலம் நினைய, நம் வினை கரிசு அறுமே. 1

---

1. அயில் - கூர்மை. மயிலுறு சாயல வனமுலை - உமையம்மை. முகில் புல்கு மிடறர் - இருண்ட மேகம் போன்ற நிறம் பொருந்திய, மேகம் மக்களை மழையால் காத்து உதவுவது போலத் தேவரை, நஞ்சுண்டமை யால் காத்தருளிய தன்மை பொருந்திய கழுத்தினர். சரிதை - நல்நடை. பொதியில் - தென் தமிழ் நாட்டு மலை. கரிசு - தீமை. அறும் - முற்றும் நீங்கும்.

கொண்டலும் நீலமும் புரை திருமிடறர்;
கொடுமுடி உறைபவர் ; படுதலைக் கையர் ;
பண்டு அலர் அயன் சிரம் அரிந்தவர்; பொருந்தும்
படர்சடை அடிகளார் பதி அதன் அயலே
வண்டலும் வங்கமும் சங்கமும் சுறவும்
மறிகடல் - திரை கொணர்ந்து எற்றிய கரைமேல்
கண்டலும் கைதையும் நெய்தலும் குலவும்
கழுமலம் நினைய, நம் வினை கரிசு அறுமே. 2

எண் இடை ஒன்றினர்; இரண்டினர் உருவம் ;
எரிஇடை மூன்றினர் ; நால்மறையாளர் ;
மண் இடை ஐந்தினர் ; ஆறினர் அங்கம் ;
வகுத்தனர் ஏழ் இசை ; எட்டு இருங்கலை சேர்
பண்இடை ஒன்பதும் உணர்ந்தவர் ; பத்தர்
பாடி நின்று அடி தொழ, மதனனை வெகுண்ட
கண் இடைக் கனலினர் கருதிய கோயில்
கழுமலம் நினைய, நம் வினை கரிசு அறுமே 3

---

2. கொண்டல் - மேகம். நீலம் - நீல மலர். புரை - ஒக்கும். கொடுமுடி - திருப் பாண்டிக் கொடுமுடி என்னும் தலம். படுதலை - இறந்தவர் தலை. அலர் - தாமரை மலர். அயன் - நான் முகன். வண்டல் - கடல் ஒதுக்கிய மண் வகை. வங்கம் - தோணி. கைதை - தாழை. நெய்தல் - மலர்வகை.

3. எண் - நினைப்பு, சிந்தனை. ஒன்றினர் - ஒன்றாய் இணைந்தவர். உருவம் இரண்டு - ஆணும் பெண்ணும், சிவமும் அருளும். எரியிடை மூன்று - ஓசையும் ஊறும் உருவும். மண்ணிடை ஐந்து - ஓசை,

எரி ஒரு கரத்தினர்; இமையவர்க்கு இறைவர் ;
ஏறு உகந்து ஏறுவர்; நீறு மெய் பூசித்
திரிதரும் இயல்பினர் ; அயலவர் புரங்கள்
தீ எழ விழித்தனர் ; வேய் புரை தோளி,
வரி தரு கண் இணை மடவரல், அஞ்ச,
மஞ்சு உற நிமிர்ந்தது ஓர் வடிவொடும் வந்த
கரி உரி மருவிய அடிகளுக்கு இடம் ஆம்
கழுமலம் நினைய, நம் வினை கரிசு அறுமே. 4

ஊர் எதிர்ந்து இடு பலி, தலை கலன் ஆக
உண்பவர்; விண் பொலிந்து இலங்கிய உருவர்;
பார் எதிர்ந்து அடி தொழ, விரை தரும் மார்பில்
பட அரவு, ஆமை, அக்கு அணிந்தவர்க்கு இடம்ஆம்—
நீர் எதிர்ந்து இழி மணி, நித்திலம், முத்தம்,
நிரை சொரி சங்கமொடு, ஒண்மணி வரன்றிக்,
கார் எதிர்ந்து ஓதம் வன் திரை கரைக்கு எற்றும்
கழுமலம் நினைய, நம் வினை கரிசு அறுமே. 5

ஊறு, உருவம், சுவை, நாற்றம் ஆகிய ஐந்து. ஏழ் இசை - குரல், கைக்கிளை, துத்தம், இழை, இளி, விளரி, தாரம் என்பன. எட்டு இருங்கலை - அணிமா, இலகிமா, மகிமா, பிராத்தி, கரிமா, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் சித்திகள்.

4. அயலவர் - வேறுபட்ட முப்புரத்தலைவர்கள். வேய் - மூங்கில். வரி - செவ்வரி. மஞ்சு — மேகம். நிமிர்ந்த - உயர்ந்த.

5. பார் - உலகத்தவர். நித்திலம் - பவளம். நிரை — வரிசை. ஒண் - ஒளி பொருந்திய. வரன்றி - கொழித்து, வன்திரை - வலிய அலைகள்.

முன் உயிர்த் தோற்றமும் இறுதியும் ஆகி,
முடி உடை அமரர்கள் அடி பணிந்து ஏத்தப்,
பின்னிய சடைமிசைப் பிறை நிறைவித்த
பேர் அருளாளனார் பேணிய கோயில் -
பொன் இயல் நறுமலர் புனலொடு தூபம்
சாந்தமும் ஏந்திய கையினர் ஆகிக்,
கன்னியர் நாள்தொறும் வேடமே பரவும்
கழுமலம் நினைய, நம்வினை கரிசு அறுமே. 6

கொலைக்கு அணித்தா வரு கூற்று உதைசெய்தார்,
குரைகழல் பணிந்தவர்க்கு அருளிய பொருளின்
நிலைக்கு அணித்தா வர நினைய வல்லார்தம்
நெடுந் துயர் தவிர்த்த எம் நிமலருக்கு இடம்ஆம் -
மலைக்கு அணித்தா வர வன் திரை முரல,
மது விரி புன்னைகள் முத்து என அரும்ப,
கலைக்கணம் கானலின் நீழலில் வாழும்
கழுமலம் நினைய, நம் வினை கரிசு அறுமே. 7

---

6. முன் – தொன்றுதொட்டே.

7. கொலைக்கு அணித்தா - உயிரைக் கொண்டு செல்ல நெருங்கி. குரை-ஒலிக்கும். பொருள் - உறுதிப் பொருளாகிய வீடுபேறு. அணித்தா - நெருக்கமாக. நெடும் துயர் :- நீண்டகாலமாக வரும் பிறவித் துயரம். முரல - ஒலிக்க. மது விரி - தேன் சொரியும். கலை - கலை மான். கானல் - கடற்கரைச் சோலை.

புயம் பல உடைய தென்இலங்கையர்வேந்தன்,
பொருவரை எடுத்தவன், பொன்முடி திண்தோள்
பயம் பல அடர்த்து, அருளிய பெருமான்
பரிவொடும் இனிது உறை கோயில்அது ஆகும் -
வியன் பல விண்ணினும் மண்ணினும் எங்கும்
வேறுவேறு உகங்களில் பெயர் உளது என்ன,
இயம் பல படக் கடல் திரை கரைக்கு எற்றும்
கழுமலம் நினைய, நம் வினை கரிசு அறுமே. 8

விலங்கல் ஒன்று ஏந்தி வன்மழை தடுத்தோனும்,
வெறி கமழ் தாமரையோனும், என்று இவர், தம்
பலங்களால் நேடியும் அறிவு அரிதுஆய்
பரிசினன் மருவி நின்று இனிது உறைகோயில் -
மலங்கி வன் திரை வரை எனப் பரந்து, எங்கும்
மறிகடல் ஓங்கி, வெள்இப்பியும் சுமந்து,
கலங்கள் தம் சரக்கொடு நிரக்க வந்து ஏறும்
கழுமலம் நினைய, நம் வினை கரிசு அறுமே. 9

---

8. புயம் - தோள். பல - (இங்கு) இருபது. பரிவு - இரக்கம். வியன் - அகன்ற இடம்.

9. விலங்கல் - மலை. மழை தடுத்தோன் - கண்ணனாகிய திருமால். தம்பலங்களால் - வெறும் தம் முனைப்பாற்றல் ஒன்று கொண்டே; நேடியும் - ஆராய்ந்தும். மலங்கி - கலங்கி. வரை என - மலை போல. கலங்கள் - கப்பல்கள். நிரக்க - நிரம்ப.

ஆம் பல தவம் முயன்று அறஉரை சொல்லும்
அறிவு இலாச் சமணரும். தேரரும், கணிசேர்
நோம் பல தவம் அறியாதவர் நொடிந்த
மூதுரை கொள்கிலா முதல்வர் - தம் மேனிச்
சாம்பலும் பூசி, வெண்தலை கலன்ஆகத்
தையலார் இடு பலி வையகத்து ஏற்றுக்,
காம்பு அன தோளியொடு இனிது உறை கோயில்
கழுமலம் நினைய, நம் வினை கரிசு அறுமே. 10

கலி கெழு பார்இடை ஊர் என உளதுஆம்
கழுமலம் விரும்பிய கோயில் கொண்டவர்மேல்,
வலி கெழு மனம் மிக வைத்தவன், மறை சேர்-
வரும் கலை ஞானசம்பந்தன் தமிழின்
ஒலிகெழு மாலை என்று உரைசெய்த பத்தும்
உண்மையினால் நினைந்து ஏத்தவல்லார்மேல்
மெலி கெழு துயர் அடையா; வினை சிந்தும்;
விண்ணவர் ஆற்றலின் மிகப் பெறுவாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. கணி சேர் பல தவம்- எண்ணிக்கையுடைய பல தவங்கள். நோம் பல தவம் - வருந்திச் செய்யும் பல தவங்கள். நொடிந்த - சொல்லிய. காம்பு - மூங்கில்.

11. கலி - ஆரவாரம். மெலி கெழு துயர் - மெலிவைச் செய்யும் துயரங்கள். விண்ணவர் ஆற்றலின் மிக - வானவரை விடவும் மிகுந்த ஆற்றல்.

1 :80 கோயில்

பண்: குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கற்றுங்கு எரி ஓம்பிக், கலியை வாராமே
செற்றூர் வாழ் தில்லைச் சிற்றம்பலம் மேய
முற்று வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்று நின்றாரைப் பற்று, பாவமே.

பறப்பைப் படுத்து எங்கும் பசு வேட்டு, எரி ஓம்பும்
சிறப்பர் வாழ் தில்லைச் சிற்றம்பலம் மேய
பிறப்புஇல்பெருமானைப், பின் தாழ்சடையானை,
மறப்புஇலார்கண்டீர், மையல் தீர்வாரே. 2

---

1. எரி ஓம்பி - வேள்வி செய்து. கலி - துன்பம். செற்றூர் - அழித்தவர். முற்றுத் திங்கள் - பிறை மதி. பற்று - பற்றுக. பற்று - அணுக மாட்டா.

2. பறப்பைப் படுத்து - வேள்விச் சாலைகளை அமைத்து பசு வேட்டு எரி ஓம்பும் - ஆன்ம போதத்தைச் சிவஞானத் தீயில் இட்டு அச் சிவஞானத்தீயை மேலோங்கச் செய்யும். சிறப்பர் - சிறந்தாரான தில்லை வாழ் அந்தணர். பிறப்பு இல் பெருமான் - பிறப்பு இல்லாத ஒருவனே ஆன பெரியோன் சிவபெருமான். மையல் - மயக்கவுணர்வு. கண்டீர் - அறிவீராக.

மைம ஆர் ஒண்கண்ணார் மாடம் நெடுவீதிக்,
கையால் பந்து ஓச்சும் கழி சூழ் தில்லையுள்,
பொய்யா மறை பாடல் புரிந்தான், உலகு ஏத்தச்,
செய்யான், உறை கோயில் சிற்றம்பலம் தானே. 3

நிறை வெண் கொடி மாட நெற்றி நேர் தீண்டப்
பிறை வந்து இறை தாக்கும், பேரம்பலம். தில்லைச்
சிறைவண்டு அறை ஓவாச் சிற்றம்பலம் மேய
இறைவன் கழல் ஏத்தும் இன்பம் இன்பமே. 4

செல்வ நெடுமாடம் சென்று சேண் ஓங்கிச்
செல்வ மதி தோயச், செல்வம் உயர்கின்ற,
செல்வர் வாழ் தில்லைச் சிற்றம்பலம் மேய
செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே. 5

---

3. மை - கருமை. மை தீட்டப் பெற்ற எனினும் ஆம். ஓச்சும் - எறிந்து விளையாடும். பொய்யா - மெய்யே உரைக்கும். செய்யான் - சிவந்த மேனியன்.

4. இறை - சிறிது. அறை - ஒலி. ஓவா - நீங்காத.

5. சேண் - நெடுந் தொலைவு.

வரு மாந்தளிர் மேனி மாது ஓர் பாகம் ஆம்.
திரு மாந் தில்லையுள், சிற்றம்பலம் மேய,
கருமான்உரி ஆடைக் கறைசேர் கண்டத்து,எம்
பெருமான் கழல்அல்லால் பேணாது. உள்ளமே. 6

அலை ஆர் புனல் சூடி, ஆகத்து ஒருபாகம்
மலையான் மகளோடும் மகிழ்ந்தான், உலகு ஏத்தச்
சிலையால் எயில் எய்தான், சிற்றம்பலம்தன்னைத்
தலையால் வணங்குவார் தலைஆனார்களே. 7

கூர்வாள் அரக்கன்தன் வலியைக் குறைவித்துச்,
சீராலே மல்கு சிற்றம்பலம் மேய,
நீர் ஆர் சடையானை நித்தல் ஏத்துவார்
தீரா நோய்எல்லாம் தீர்தல் திண்ணமே. 8

---

6. திருமாம் - திருமகள் பொருந்தும்.

7. அலை ஆர் புனல் - கங்கை. ஆகம் - உடம்பு. சிலை – மலைவில். எயில் - முப்புரம். தலை ஆனார் - எல்லார்க்கும் மேலானவர் ஆவர்.

8. வலி - வலிமை. சீரால் மிகு - சிறப்பு மிகுந்த.

கோள் நாக(அ)ணையானும், குளிர்தாமரையானும்
காணார் கழல் ஏத்தக் கனல்ஆய் ஓங்கினான்,
சேணார் வாழ்தில்லைச் சிற்றம்பலம் ஏத்த,
மாணா நோய்எல்லாம் வாளா மாயுமே. 9

பட்டைத் துவர்ஆடைப் படிமம் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே,
சிட்டர் வாழ் தில்லைச் சிற்றம்பலம் மேய
நட்டப் பெருமானை நாளும் தொழுவோமே. 10

ஞாலத்து உயர் காழி ஞானசம்பந்தன்
சீலத்தார் கொள்கைச் சிற்றம்பலம் மேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத்தால் பாட வல்லார் நல்லாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

9. கோள் நாக அணையான் - உயிர் கொள்ளும் திறன்வாய்ந்த ஆதிசேடனாகிய பாம்புப் படுக்கையை உடைய திருமால். சேணார் - பெருமையால் உயர்ந்தாரான அந்தணர். மாணாநோய்-கொடிய நோய்கள். வாளா மாயும் - பயன் செய்யாது கெடும்.

10. பட்டைத்துவர்-மரப்பட்டையிலிருந்து ஆக்கப் பட்ட காவி. படிமம் - நோன்பு. காவிஉடுத்த தோற்றம் எனினும் ஆம். கொண்டாடும் - பாராட்டிக் கொள்ளும். முட்டைக் கட்டுரை - அறிவுக்குப் பொருந்தாத. சிட்டர் - ஒழுக்கத்தால் உயர்ந்தோர். நட்டம் - கூத்து.

11. சீலத்து ஆர் கொள்கை - ஒழுக்கத்தால் நிறைந்த கோட்பாடு. கோலத்தால்-இசை அழகுடன்;

1 : 81 சீகாழி

பண்: குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நல்லார், தீ மேவும் தொழிலார், நால்வேதஞ்
சொல்லார் கேண்மையார், சுடர் பொன் கழல் ஏத்த
வில்லால் புரம் செற்றான் மேவும் பதிபோலும்—
கல் ஆர் மதில் சூழ்ந்த காழி(ந்) நகர்தானே 1

துளிவண் தேன் பாயும் இதழி, தூ மத்தம்,
தெளிவெண்திங்கள், மாசுணம், நீர் திகழ் சென்னி,
ஒளி வெண்தலை மாலை உகந்தான் ஊர்போலும்—
களி வண்டு யாழ்செய்யும் காழி(ந்)நகர்தானே. 2

ஆலக் கோலத்தின் நஞ்சு உண்டு, அமுதத்தைச்
சாலத் தேவர்க்கு ஈந்து அளித்தான், தன்மையால்
பாலர்க்குஆய் நன்றும் பரிந்து, பாதத்தால்
காலற் காய்ந்தான், ஊர் காழி(ந்)நகர்தானே. 3

---

1. நால்வேதம் சொல் ஆர் கேண்மையர்-நான்கு வேதங்களின் சொற்களிலேயே நெருங்கிய தொடர்பினை உடையவர், வேதத்தையே பயின்ற நாவினர். கல் ஆர் - மலையை ஒத்த.

2. இதழி - கொன்றை. மாசுணம் - பாம்பு. களி - தேன் உண்ட மகிழ்ச்சி.

3. ஆலக்கோல நஞ்சு - ஆலகால நஞ்சு. பாலன்- மார்க்கண்டேயர்.

.... 4, 5, 6. 7.

இரவில் திரிவோர்கட்கு இறை தோள்இணைபத்தும்
நிரவிக்கர வாளை நேர்ந்தான் இடம்போலும்-
பரவித் திரிவோர்க்கும், பால்நீறு அணிவோர்க்கும்
கரவு இல் தடக்கையார் காழி(ந்)நகர்தானே. 8

மாலும் பிரமனும் அறியா மாட்சியான்,
தோலும் புரிநூலும் துதைந்த வரைமார்பன்,
ஏலும் பதிபோலும்—இரந்தோர்க்கு எந்நாளும்
காலம் பகராதார் காழி(ந்)நகர்தானே. 9

---

4. 5. 6. 7. ... ...

8. இரவில் திரிவோர்-நிசிசரர் - அரக்கர். நிரவி-ஒன்று போல் நசுக்கி. கரவாளை-கைவாள். நேர்ந்தான்-மகிழ்ந்து கொடுத்தவன். கரவு இல் தடக்கை-வஞ்சகம் இல்லாமல் கொடுத்தருளும் பெரியகை.

9. துதைந்த - தோய்ந்த. வரை - மலை. ஏலும் - விரும்பி ஏற்றுக் கொண்ட. காலம் பகராதார் - காலம் வேறு சொல்லாமல் உடனுக்குடன் கொடுப்பவர்.

தம் கை இட்ட உண்பார், தாழ் சீவரத்தார்கள்,
பெங்கை உணராதே பேணித் தொழுமின்கள்!
மங்கை ஒருபாகம் மகிழ்ந்தான், மலர்ச் சென்னிக்
கங்கை தரித்தான் ஊர் காழி(ந்)நகர்தானே. 10

வாசம் கமழ் காழி, மதி செஞ்சடை வைத்த
ஈசன் நகர் தன்னை, இணை இல் சம்பந்தன்
பேசும் தமிழ் வல்லோர் பெருநீர் உலகத்துப்
பாசம்தனை அற்றுப் பழி இல் புகழாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. கை இட்ட உண்பார் - பிச்சையைக் கையில் வாங்கி அப்படியே உண்பவர். சீவரம் - காவி ஆடை. பெங்கை - போலி ஒழுக்கம். உணராது - அறிவில் கொள்ளாமல். பேணி - சிவன் சேவடியைப் போற்றி.

11. பெருநீர் - கடல்.

1 : 82 திருவீழிமிழலை

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

இரும் பொன்மலை வில்லா, எரி அம்பா, நாணில்,
திரிந்த புரம்மூன்றும் செற்றான் உறை கோயில்-
தெரிந்த அடியார்கள் சென்ற திசைதோறும்
விரும்பி எதிர்கொள்வார் வீழி(ம்)மிழலையே. 1

வாதைப்படுகின்ற வானோர் துயர் தீர,
ஓதக் கடல்நஞ்சை உண்டான் உறை கோயில் -
கீதத்து இசையோடும், கேள்விக் கிடையோடும்,
வேதத்து ஒளி ஓவா வீழி(ம்) மிழலையே. 2

பயிலும் மறையாளன் தலையில் பலிகொண்டு,
துயிலும் பொழுது ஆடும் சோதிஉறை கோயில் -
மயிலும் மடமானும் மதியும் இளவேயும்
வெயிலும் பொலி மாதர் வீழி(ம்)மிழலையே. 3

---

1. இரும் - பெரிய. நாண் - (இங்கு) வாசுகியாகிய நாண். செற்றான் - அழித்தான்.

2. வாதை - வேதனை. ஓதக் கடல் - நீர் மிகுந்த ஆழமான கடல். கேள்விக் கிடை - வேதம் பயில்வார் கூட்டம். ஓவா - நீங்காத.

3. பயிலும் மறையாளன் - வேதம் பயிலும் நான்முகன். துயிலும் பொழுது- நள்ளிரவு, தோற்றிய எல்லாம் ஒடுக்கம் பெற்ற காலம் என்பது மயில்,

இரவன், பகலோனும், எச்சத்து, இமையோரை
நிரவிட்டு, அருள்செய்த நிமலன் உறைகோயில்-
குரவம், சுரபுன்னை, குளிர்கோங்கு, இளவேங்கை,
விரவும் பொழில் அம் தண் வீழி(ம்)மிழலையே. 4

கண்ணின் கனலாலே காமன் பொடி ஆகப்,
பெண்ணுக்கு அருள்செய்த பெருமான் உறைகோயில் -
மண்ணில் பெரு வேள்வி வளர் தீப்புகை நாளும்
விண்ணில் புயல் காட்டும் வீழி(ம்)மிழலையே. 5

மால் ஆயிரம் கொண்டு மலர்க்கண் இட, ஆழி,
ஏலா வலயத்தோடு ஈந்தான் உறைகோயில் -
சேல் ஆகிய பொய்கைச் செழு நீர்க்கமலங்கள்
மேலால் எரி காட்டும் வீழி(ம்)மிழலையே. 6

மான், மதி, வேய், வெயில் நான்கும் முறையே பெண்டிரின் சாயல், நோக்கு, நெற்றி, தோள், மேனி ஒளி அல்லது கற்பின் வெம்மை ஆகியவற்றிற்கு உவமை ஆயின:

4. இரவன் - மதி. பகலோன் - கதிரவன். எச்சத்து - தக்கன் செய்த வேள்வியில், நிரவிட்டு - ஒன்றுபோல் எல்லார்க்கும் தண்டனை கொடுத்து.

5. கண்ணின் கனல் - நெற்றிக் கண்ணில் தோன்றிய தீ. பெண் - மன்மதன் மனைவியாகிய இரதி. புயல் - மேகம்.

6. ஆயிரம் - ஆயிரம் மலர்கள். மலர்க்கண் - குறைந்த ஒன்றிற்கு ஈடாகத் தன் கண் மலரை. ஆழி - சக்கரப்படை. ஏலாவளையம்-தாங்கிக்கொள்ள எளிதல்லாத சக்கரப்படை. கமலம் - தாமரை மலர். எரி காட்டும்-தீப்போலத் தோன்றும்.

மதியால் வழிபட்டான் வாழ்நாள் கொடுபோவான்,
கொதியா வரு கூற்றைக் குமைத்தான் உறைகோயில் -
நெதியால் மிகு செல்வர் நித்தம் நியமங்கள்
விதியால் நிற்கின்றார் வீழி(ம்)மிழலையே. 7

எடுத்தான் தருக்கினை இழித்தான், விரல் ஊன்றிக்,
கொடுத்தான், வாள்; ஆளாக் கொண்டான்
உறை கோயில் -
படித்தார் மறை, வேள்வி பயின்றார், பாவத்தை
விடுத்தார், மிக வாழும் வீழி(ம்)மிழலையே. 8

கிடந்தான் இருந்தானும், கீழ் மேல் காணாது,
தொடர்ந்து ஆங்கு அவர் ஏத்தச் சுடர்ஆயவன் கோயில் -
படம் தாங்கு அரவுஅல்குல், பவளத் துவர்வாய், மேல்
விடம் தாங்கிய கண்ணார் வீழி(ம்)மிழலையே. 9

---

7. மதி - உணர்வு. கொதியா வரு - சினங் கொண்டு வந்த. குமைத்தான் - அழித்தவன். நெதி - மன ஒருக்கம். விதி - நூல் முறை.

8. எடுத்தான் - கயிலை மலையை எடுத்த இராவணன். தருக்கு - செருக்கு. இழித்தான் - தாழச்செய்தவன்.

9. கிடந்தான் - பள்ளி கொண்ட திருமால். இருந்தான் - மலர் மேல் வீற்றிருந்த நான் முகன். படம் தாங்கு அரவு - படம் விரித்த பாம்பு. அல்குல் - அடிவயிறு. துவர் வாய் - சிவந்த வாய். விடம் - காணும் ஆடவரின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும், நஞ்சு போன்ற, திறன்.

சிக்கு ஆர் துவர்ஆடைச், சிறு தட்டு உடையாரும்
நக்கு, ஆங்கு அலர் தூற்றும், நம்பான் உறை கோயில்-
தக்கார், மறை வேள்வித், தலைஆய் உலகுக்கு
மிக்கார்அவர் வாழும் வீழி(ம்)மிழலையே. 10

மேல் நின்று இழி கோயில் வீழி(ம்)மிழலையுள்
ஏனத்துஎயிற்றானை, எழில் ஆர் பொழில் காழி,
ஞானத்து உயர்கின்ற நலம்கொள் சம்பந்தன்
வாய்மைத்துஇவை சொல்ல வல்லோர் நல்லோரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. சிக்கு - அழுக்கு. தட்டு - ஓலைத்தடுக்கு. நக்கு - இகழ்ந்து சிரித்து. அலர் - புறமொழி. நம்பான் - சிவபெருமான்.

11. மேல் நின்று இழி கோயில் - விண் இழி கோயில். வாய்மைத்து இவை - மெய்ம் மொழிகளான பாடல்களாகிய இப்பத்தும்.

1 : 83 திரு அம்பர்மாகாளம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

அடையார் புரம்மூன்றும் அனல்வாய் விழ எய்து,
மடை ஆர் புனல் அம்பர் மாகாளம் மேய
விடை ஆர் கொடி எந்தை, வெள்ளைப்பிறை சூடும்
சடையான் கழல் ஏத்த, சாரா, வினைதானே. 1

தேன் ஆர் மதமத்தம், திங்கள், புனல் சூடி,
வான் ஆர் பொழில் அம்பர் மாகாளம் மேய,
ஊன் ஆர் தலைதன்னில் பலிகொண்டு உழல் வாழ்க்கை
ஆனான் கழல் ஏத்த, அல்லல் அடையாவே. 2

திரை ஆர் புனலோடு செல்வ மதி சூடி,
விரை ஆர் பொழில் அம்பர் மாகாளம் மேய,
நரை ஆர் விடை ஊரும் நம்பான் கழல், நாளும்
உரையாதவர்கள்மேல் ஒழியா. ஊன(ம்)மே. 3

---

1. அடையார் - தன்னை வந்தடையாத பகைவர். வாய்-இடம்.

2. ... ...

3. நரை - வெண்ணிறம்.

கொந்து அண் பொழில் சோலைக் கோல வரிவண்டு,
மந்தம் மலி அம்பர் மாகாளம் மேய,
கந்தம் கமழ்கொன்றை கமழ் புன்சடை வைத்த
எந்தை கழல் ஏத்த, இடர் வந்து அடையாவே. 4

அணி ஆர் மலைமங்கை ஆகம் பாகம்ஆய்,
மணி ஆர் புனல் அம்பர் மாகாளம் மேய,
துணி ஆர் உடையினன் துதை பொன்கழல், நாளும்
பணியாதவர் தம்மேல் பறையா, பாவ(ம்)மே. 5

பண்டு ஆழ்கடல்நஞ்சை உண்டு, களி மாந்தி,
வண்டு ஆர் பொழில் அம்பர் மாகாளம் மேய,
விண்டார் புரம் வேவ மேருச் சிலைஆகக்
கொண்டான் கழல் ஏத்தக், குறுகா, குற்ற(ம்)மே. 6

---

4. கொந்து அண் - கொத்துக்கள் செறிந்த. மந்தம் - வண்டின் மென்மையான ஒலி.

5. மணி - மணிவகை, முத்து.

6. களி மாந்தி - மகிழ்ச்சியில் திளைத்து. விண்டார் - வேறுபட்டவர். சிலை - வில். குற்றம் - உயிர்க் குற்றமான ஆணவமலமும் ஆம்.

மிளிரும் அரவோடு வெள்ளைப் பிறை சூடி,
வளரும் பொழில் அம்பர் மாகாளம் மேய,
கிளரும் சடை அண்ணல் கேடு இல் கழல் ஏத்தத்,
தளரும், உறுநோய்கள்; சாரும், தவம்தானே. 7

கொலை ஆர் மழுவோடு கோலச் சிலை ஏந்தி,
மலை ஆர் புனல் அம்பர் மாகாளம் மேய,
இலை ஆர் திரிசூலப் படையான் கழல், நாளும்
நிலையா நினைவார்மேல் நில்லா, வினைதானே. 8

சிறை ஆர் வரிவண்டு தேன் உண்டு இசை பாட,
மறையார் நிறை அம்பர் மாகாளம் மேய,
நறை ஆர் மலரானும் மாலும் காண்பு ஒண்ணு
இறையான் கழல் ஏத்த, எய்தும், இன்பமே. 9

---

7. மிளிரும் - ஒளி விளங்கும். கேடு இல் கழல் - குற்றம் இல்லாத, உயிர்க்கு உண்டாகிய கேட்டினை ஒழிக்க வல்ல, என்றும் ஒரு தன்மையாய் நிலைத்துள்ள திருவருளாகிய திருவடி நோய்கள் தளரும், தவம் சாரும்.

8. ... ...

9. மறையார் - அந்தணர்; நறை - தேன்; காண்பு ஒண்ணு - காணமுடியாத;

மாசு ஊர் வடிவி(ன்)னர், மண்டை உணல் கொள்வார்,
கூசாது உரைக்கும் சொல் கொள்கை குணம் அல்ல:
"வாசு ஆர் பொழில் அம்பர் மாகாளம் மேய
ஈசா!" என்பார்கட்கு இல்லை, இடர்தானே. 10

வெரு நீர் கொள ஓங்கும் வேணுபுரம்தன்னுள்-
திரு மாமறை ஞானசம்பந்தன, சேண் ஆர்
பெருமான் மலி அம்பர் மாகாளம் பேணி,
உருகா, உரைசெய்வார் உயர்வான் அடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

10: மாசு ஊர் வடிவினர் - அழுக்குப் படிந்த உடம்பினர். மண்டை - உண்கலம். வாசு - வாசனை

11: வெரு நீர் - அச்சத்தை உண்டாக்கிய கடல் நீர். உருகா - உருகி.

1 : 84 திருநாகைக்காரோணம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

புனையும் விரிகொன்றைக் கடவுள், புனல் பாய
நனையும் சடைமேல் ஓர் நகுவெண்தலை சூடி
வினை இல் அடியார்கள் விதியால் வழிபட்டுக்,
கனையும் கடல் நாகைக் காரோணத்தானே, 1

பெண் ஆண் என நின்ற பெம்மான், பிறைச் சென்னி,
அண்ணாமலை நாடன், ஆரூர் உறை அம்மான்-
மண் ஆர் முழவு ஓவா, மாட நெடுவீதிக்,
கண் ஆர் கடல் நாகைக் காரோணத்தானே. 2

பாரோர் தொழ, விண்ணோர் பணிய, மதில் மூன்றும்
ஆரார், அழல்ஊட்டி. அடியார்க்கு அருள்செய்தான் ;
தேர் ஆர் விழவு ஓவாச்செல்வன் - திரை சூழ்ந்த
கார் ஆர் கடல் நாகைக் காரோணத்தானே. 3

---

1. கனையும் - நீர் செறிந்த.

2. மண் - முழவில் சேர்க்கும் மார்ச்சனை. கண் ஆர் - இடம் அகன்ற.

3. ஆரார் - நெருங்காதாரான பகைவர். கார் - கருமை.

மொழி சூழ் மறை பாடி, முதிரும் சடைதன்மேல்
அழி சூழ் புனல் ஏற்ற அண்ணல் அணிஆய
பழி சூழ்விலர் ஆய பத்தர் பணிந்து ஏத்தக்
கழி சூழ் கடல் நாகைக் காரோணத்தானே. 4

ஆணும் பெண்ணும் ஆய் அடியார்க்கு அருள்நல்கிச்,
சேண் நின்றவர்க்கு இன்னம் சிந்தைசெய வல்லான்-
பேணி வழிபாடு பிரியாது எழும் தொண்டர்
காணும் கடல் நாகைக் காரோணத்தானே, 5

ஏனத்து எயிரோடும் அரவம் மெய் பூண்டு,
வானத்து இளந்திங்கள் வளரும் சடை அண்ணல்-
ஞானத்து உரைவல்லார் நாளும் பணிந்து ஏத்தக்,
கானல் கடல் நாகைக் காரோணத்தானே. 6

---

4. அழிசூழ் புனல் - அழிக்கும் திறலோடு வந்த கங்கை. பழிசூழ்வு இலர் - குற்றம் எதுவும் பொருந்தாதார்.

5. சேண் நின்றவர் - மிகவும் விலகி நின்றவர்.

6. ஏனத்து எயிறு - பன்றிக் கொம்பு.

அரை ஆர் அழல் நாகம் அக்கோடு அசைத்திட்டு,
விரை ஆர் வரை மார்பின் வெண்நீறு அணி அண்ணல்-
வரை ஆர்வன போல வளரும் வங்கங்கள்
கரை ஆர் கடல் நாகைக் காரோணத்தானே. 7

வலம் கொள் புகழ் பேணி, வரையால் உயர் திண்தோள்
இலங்கைக்கு இறைவாட அடர்த்து, அங்கு அருள்செய்தான்
பலம் கொள் புகழ் மண்ணில் பத்தர் பணிந்து ஏத்த,
கலம் கொள் கடல் நாகைக் காரோணத்தானே. 8

திருமால் அடி வீழத்திசை நான்முகன் ஏத்தப்
பெருமான் என நின்ற பெம்மான் ; பிறைச்சென்னிச்
செரு மால் விடை ஊரும் செல்வன் - திரைசூழ்ந்த
கரு மால் கடல் நாகைக் காரோணத்தானே. 9

---

7. அக்கு - சங்கு மணி. அசைத்திட்டு - கட்டி. விரை - மணம். வரை - மலை. வரை ஆர்வனபோல் - மலைகள் வரிசையாக நிற்பனபோல. வங்கம் - கப்பல்.

8. வலம் கொள் புகழ் - பெற்ற வெற்றிகளால் உண்டான புகழ்.

9. செரு மால் விடை - போரில் வல்ல பெரிதான எருது.

நல்லார் அறம் சொல்லப் பொல்லார் புறம்கூற,
அல்லார் அலர் தூற்ற, அடியார்க்கு அருள்செய்வான்;
பல் ஆர் தலைமாலை அணிவான் - பணிந்து ஏத்தக்,
கல் ஆர் கடல் நாகைக் காரோணத்தானே. *10*

கரை ஆர் கடல் நாகைக் காரோணம் மேய
நரை ஆர் விடையானை நவிலும் சம்பந்தன்
உரை ஆர் தமிழ்மாலை பாடும் அவர் எல்லாம்
கரையா உரு ஆகிக், கலி வான் அடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. அல்லார் - அயலவர். அலர் – பழிச்சொல்.

11. கரை ஆர் - ஒலிக்கும்.

1 : 85 **திருநல்லம்**

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

"கல்லால் நிழல் மேய கறை சேர் கண்டா!" என்று
எல்லா மொழியாலும் இமையோர் தொழுது ஏத்த,
வில்லால் அரண் மூன்றும் வெந்து விழ எய்த
நல்லான்; நமை ஆள்வான் - நல்லம் நகரானே 1

தக்கன் பெருவேள்விதன்னில் அமரரைத்
துக்கம் பல செய்து, சுடர்பொன்சடை தாழ,
கொக்கின் இறகோடு குளிர் வெண்பிறை சூடும்
நக்கன்; நமை ஆள்வான்—நல்லம் நகரானே 2

அந்தி மதியோடும் அரவர் சடை தாழ,
முந்தி அனல் ஏந்தி, முதுகாட்டு எரிஆடி;
சிந்தித்து எழ வல்லார் தீரா வினை தீர்க்கும்
நந்தி; நமை ஆள்வான்—நல்லம் நகரானே. 3

---

1. கல் ஆல் - கல் ஆலமரம்.
2. நக்கன் - சிவபெருமான்.
3. அந்தி மதி - மாலை மதியம்.

குளிரும் மதி சூடிக் கொன்றைச் சடை தாழ,
மிளிரும் அரவோடு வெண்நூல் திகழ் மார்பில்,
தளிரும் திகழ் மேனித் தையல் பாகம்ஆய்,
நளிரும் வயல் சூழ்ந்த நல்லம் நகரானே. 4

மணி ஆர் திகழ் கண்டம் உடையான்; மலர் மல்கு
பிணி வார்சடை எந்தை பெருமான்; கழல் பேணித்
துணிவு ஆர்மலர்கொண்டு தொண்டர் தொழுது ஏத்த,
நணியான்; நமை ஆள்வான்—நல்லம் நகரானே. 5

''வாசம் மலர் மல்கு மலையான் மகளோடும்,
பூசும் சுடுநீறு புனைந்தான், விரிகொன்றை
ஈசன்!'' என உள்கி எழுவார் வினைகட்கு
நாசன்; நமை ஆள்வான்—நல்லம் நகரானே. 6

---

4. தளிரும் திகழ் - மாந்தளிர் போல விளங்குகின்ற. நளிரும் - குளிரும்.

5. மணி - நீல மணி. பிணி :வார் சடை - கட்டிய நீண்ட சடை துணிவார் - மன உறைப்புள்ளவர். துணிவார் தொண்டர் மலர் கொண்டு தொழுது ஏத்த என இயைக்க.

6. வினைகட்கு நாசன் - வினைகளை அழிப்பவன்.

அம் கோல்வளை மங்கை காண, அனல் ஏந்திக்,
கொங்கு ஆர் நறுங்கொன்றை சூடிக்குழகுஆக,
வெங்காடு இடம்ஆக, வெந்தீ விளையாடும்
நம் கோன்; நமை ஆள்வான்—நல்லம் நகரானே. 7

பெண் ஆர் திருமேனிப் பெருமான்; பிறை மல்கு
கண் ஆர் நுதலினன், கயிலை கருத்திஞல்
எண்ணது எடுத்தானை இறையே விரல் ஊன்றி,
நண்ணார் புரம் எய்தான்—நல்லம் நகரானே. 8

நாகத்து அணையானும் நளிர் மா மலரானும்
போகத்து இயல்பினல் பொலிய, அழகு ஆகும்
ஆகத்தவளோடும் அமர்ந்து, அங்கு அழகு ஆரும்
நாகம் அரை ஆர்த்தான்—நல்லம் நகரானே. 9

---

7. அம் கோல் வளை - அழகிய திரண்ட வளையல். கொங்கு - மணத்தேன். குழகாக - இளமையாக. வெம்காடு - சுடுகாடு.

8. இறையே - சிறிதே. நண்ணார் - பகைவர்.

9. நளிர் - குளிர்ச்சி பொருந்திய. போகத்து இயல்பினல் பொலிய - போகிகளாக விளங்க.

குறி இல் சமணோடு, குண்டர் வண்தேரர்,
அறிவு இல் உரைகேட்டு, அங்கு அவமே கழியாதே!
பொறி கொள் அரவு ஆர்த்தான்—பொல்லா வினை தீர்க்கும்,
நறை கொள் பொழில் சூழ்ந்த, நல்லம் நகரானே. 10

நலம் ஆர் மறையோர் வாழ் நல்லம்நகர் மேய
கொலை சேர் மழுவானை, கொச்சை அமர்ந்து ஓங்கு
தலம் ஆர் தமிழ் ஞானசம்பந்தன், சொன்ன
கலைகள் இவை வல்லார் கவலை கழிவாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. குறி - குறிக்கோள்: அவமே - வீணாக: பொறி - பாம்பின் படத்தில் உள்ள புள்ளி.

11. கொச்சை - சீகாழி.

1 : 86 திருநல்லூர்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கொட்டும் பறை சீரால் குழும, அனல் ஏந்தி
நட்டம் பயின்று ஆடும் நல்லூர்ப் பெருமானை
முட்டு இன்று இருபோதும், முனியாதுஎழுந்து, அன்பு
பட்ட மனத்தார்கள் அறியார் பாவமே. 1

ஏறில் எருது ஏறும், எழில் ஆயிழையோடும்,
வேறும் உடனும்ஆம் விகிர்தர் அவர் என்ன,
நாறும் மலர்ப் பொய்கை நல்லூர்ப் பெருமானைக்
கூறும் அடியார்கட்கு அடையா குற்றமே. 2

சூடும் இளந்திங்கள் சுடர் பொன்சடைதாழ,
ஓடு உண்கலன் ஆக, ஊர் ஊர் இடுபிச்சை
நாடும் நெறியானை, நல்லூர்ப் பெருமானைப்
பாடும் அடியார்கட்கு அடையா பாவமே. 3

---

1. குழும-ஒன்றுகூட. முட்டு இன்று - இடையூறு இல்லாமல். முனியாது - வெறுப்பில்லாமல்.

2. ஏறில் - ஊர்வதனுல்.

3. ... ...

நீத்த நெறியானை, நீங்காத் தவத்தானை,
நாத்த நெறியானை, நல்லூர்ப் பெருமானைக்,
காத்த நெறியானைக் கைகூப்பித் தொழுது
ஏத்தும் அடியார்கட்கு இல்லை இடர்தானே. 4

ஆகத்து உமைகேள்வன், அரவச் சடைதாழ
நாகம் அசைத்தானை, நல்லூர்ப் பெருமானை,
தாகம் புகுந்து அண்மித், தாள்கள் தொழும் தொண்டர்
போக மனத்தாராய்ப், புகழத் திரிவாரே. 5

கொல்லும் களி யானை உரி போர்த்து, உமை அஞ்ச,
நல்ல நெறியானை, நல்லூர்ப் பெருமானை,
செல்லும் நெறியானைச் சேர்ந்தார் இடர் தீரச்,
சொல்லும் அடியார்கள் அறியார் துக்கமே. 6

---

4. நீத்த நெறியான் - பற்று நீங்கிய நெறியில் விளக்குபவன். நாத்த நெறியான் - செம்மையாக வரையறுக்கப்பட்ட நெறிக்கு உரியவன்.

5. தாகம் - அடையவேண்டும் என்ற ஆராத வேட்கை. அண்மி - பக்கமாக நெருங்கி வந்து.

6. ... ...

எங்கள் பெருமானை, இமையோர் தொழுது ஏத்தும்
நங்கள் பெருமானை, நல்லூர் பிரிவு இல்லார்,
தம்மை தலைக்கு ஏற்றி, " ஆள் " என்று அடிநீழல்
தங்கும் மனத்தார்கள் தடுமாற்று அறுப்பரே. 7

காமன் எழில் வாட்டிக், கடல் சூழ் இலங்கைக்கோன்
நாமம் இறுத்தானை, நல்லூர்ப் பெருமானை,
ஏம மனத்தாராய் இகழாது எழும் தொண்டர்
தீப மனத்தார்கள்; ஆரியார் தீயவே. 8

வண்ண மலரானும் வையம் அளந்தானும்
நண்ணல் அரியானை, நல்லூர்ப் பெருமானை,
தண்ண மலர் தூவித் தாள்கள் தொழுது ஏத்த
எண்ணும் அடியார்கட்கு இல்லை இடுக்கணே. 9

---

7. ... ...

8. காமன்-மன்மதன். நாமம்-புகழ். இறுத்தான் அழித்தவன். ஏமம் - பாதுகாப்பு.

9. வண்ண மலரான் - நான்முகன். வையம் அளந்தான்-திருமால். நண்ணல் அரியான் - அடையப் பெறாதவன்; தண்ண மலர் - குளிர்ந்த மலர். இடுக்கண் - துன்பம்.

பிச்சக் குடை நீழல் சமணர், சாக்கியர்,
நிச்சம் அலர் தூற்ற நின்ற பெருமானை,
நச்சுமிடற்றானை, நல்லூர்ப் பெருமானை,
எச்சும் அடியார்கட்கு இல்லை இடர்தானே. 10

தண்ணம் காழி ஞானசம்பந்தன்,
நண்ணும் புனல் வேலி நல்லூர்ப் பெருமானை,
வண்ணம் புனை மாலை, வைகல் ஏத்துவார்
விண்ணும் நிலனும் ஆய் விளங்கும் புகழாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. பிச்சக்குடை - மயிற்பீலிக் குடை. நிச்சம் - நாள்தோறும். எச்சும் - போற்றும்.

11. வண்ணம் - இறைவன் தன்மைகள்.

1 : 87

திருவடுகூர்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

சுடு கூர் எரி மாலை அணிவர்; சுடர் வேலர்;
கொடுகு ஊர் மழுவாள் ஒன்று உடையார்; விடை ஊர்வர்;
கடுகு ஊர் பசி, காமம், கவலை, பிணி இல்லார் -
வடு கூர் புனல் சூழ்ந்த வடுகூர் அடிகளே. 1

பாலும் நறுநெய்யும் தயிரும் பயின்று ஆடி,
ஏலும் சுடுநீறும், என்பும் ஒளி மல்க,
கோலம் பொழில் சோலைக் கூடி மடஅன்னம்
ஆலும் வடுகூரில் ஆடும் அடிகளே. 2

சூடும், இளந்திங்கள் சுடர்பொன்சடைதன்மேல் -
ஓடும் களியானை உரி போர்த்து, உமை அஞ்ச,
ஏடு மலர் மோந்து அங்கு எழில் ஆர் வரிவண்டு
பாடும் வடுகூரில் ஆடும் அடிகளே. 3

---

1. கூர் எரிமாலை - மிகுந்த தீ வரிசை. வேல் - மூவிலை வேல். கடு கூர் பசி - கடுமை மிகுந்த பசி.

2. பயின்று - பலமுறை. ஏலும் - தமக்குப் பொருந்திய.

3. ... ...

துவரும் புரிசையும் துதைத்த மணி மாடம்
கவர எரியூட்டிக்,கடிய மதில் எய்தார் —
கவரும் அணி கொல்லைக் கடிய முலை நல்லார்
பவரும் வடுகூரில் ஆடும் அடிகளே. 4

துணி ஆர் உடைஆடைதுன்னி, அரைதன்மேல்,
தணியா அழல்நாகம் தரியா வகை வைத்தார் —
பணி ஆர் அடியார்கள் பலரும் பயின்று ஏத்த,
அணி ஆர் வடுகூரில் ஆடும் அடிகளே. 5

தளரும் கொடி அன்னாள்தன்னோடு உடன்ஆகிக்,
கிளரும் அரவு ஆர்த்து, கிளரும் முடிமேல் ஓர்
வளரும் பிறை சூடி, வரிவண்டு இசை பாட
ஒளிரும் வடுகூரில் ஆடும் அடிகளே. 6

நெடியர்; சிறிதுஆய நிரம்பா மதி சூடும்
முடியர்; விடை ஊர்வர்; கொடியர் மொழி கொள்ளார்;
கடிய தொழில் காலன் மடிய, உதைகொண்ட
அடியர் — வடுகூரில் ஆடும் அடிகளே. 7

---

4. துவர் - காவி பூசிய. புரிசை - மதில். கவர - தீக்கொள்ள. பவரும் - நெருங்கும், கூடும்.

5. துணி ஆர் உடை ஆடை - கோவண ஆடை. துன்னி - சேர்த்து. தரியாவகை - அணிந்து.

6. ஒளிரும் - ஒளிவீசும்.

7. நிரம்பா மதி-பிறைமதி. அடியர்-திருவடிகளை உடையவர்.

பிறையும் நெடுநீரும் பிரியா முடியினர்,
மறையும் பல பாடி மயானத்து உறைவாரும் -
பறையும் அதிர் குழலும் போலப் பலவண்டு ஆங்கு
அறையும் வடகூரில் ஆடும் அடிகளே. 8

சந்த மலர் வேய்ந்த சடையின் இடை விம்மு
கந்தம் மிகு, திங்கள் சிந்து கதிர் மாலை.
வந்து நயந்து, எம்மை நன்று மருள் செய்வார் -
அம் தண் வடகூரில் ஆடும் அடிகளே. 9

திருமால் அடி வீழத்திசை நான்முகன் ஆய
பெருமான் உணர்கில்லாப் பெருமான், நெடு முடி சேர்,
செரு மால்விடை ஊரும் செம்மான் — திசை வில்லா
அரு மா வடகூரில் ஆடும் அடிகளே, 10

படி நோன்புஅவை ஆவர், பழி இல் புகழ்ஆன,
கடி நாள் நிகழ் சோலை கமழும் வடகூரைப்,
படிஆன சிந்தை மொழி ஆர் சம்பந்தன்
அடிஞானம் வல்லார் அடி சேர்வார்களே. 11

திருச்சிற்றம்பலம்

---

8. ... ...

9. சந்தமலர் - அழகிய மலர். மாலை-வரிசை.

10. செம்மான் - செந்நிறம் உடையவன். வில் - ஒளி. திசை வில்லா - திசையெல்லாம் விளங்கச் செய்யும்.

11. படி - ஒழுக்கம். கடி நாள் - மணமும் ஒளியும். படியான சிந்தை - அடக்கமான சிந்தை.

1 : 88

திருஆப்பனூர்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

முற்றும் சடைமுடிமேல் முதிரா இளம்பிறையன்,
ஒற்றைப்பட அரவம்அது கொண்டு அரைக்கு
அணிந்தான்,
செற்றம் இல் சீரானைத், திரு ஆப்பனூரானைப்
பற்றும் மனம் உடையார் வினைபற்று அறுப்பாரே. 1

குரவம் கமழ் குழலாள் குடிகொண்டு நின்று, விண்ணோர்
விரவும் திருமேனி, விளங்கும் வளை எயிற்றின்
அரவம் அணிந்தானை, அணி ஆப்பனூரானைப்
பரவும் மனம் உடையார் வினை பற்று
அறுப்பாரே. 2

முருகு விரி குழலார் மனம் கொள் அநங்கனை முன்
பெரிதும் முனிந்து உகந்தான், பெருமான்,
பெருங்காட்டின்
அரவம் அணிந்தானை, அணி ஆப்பனூரானைப்
பரவும் மனம் உடையார் வினை பற்று அறுப்பாரே. 3

---

1. செற்றம் - கோபம்

2. வளைஎயிற்றின் - வளைந்த பல்லை உடைய. பரவும் - துதிக்கும்.

3. முருகு - மணம். அநங்கன் - மன்மதன். முனிந்து - சினந்து.

பிணியும் பிறப்பு அறுப்பான், பெருமான்,
பெருங்காட்டில்,
துணியின் உடை தாழச் சுடர் ஏந்தி ஆடுவான்,
அணியும் புனலானை, அணி ஆப்பனூரானைப்
பணியும் மனம் உடையார் வினை பற்று அறுப்பாரே. 4

தகரம் அணி அருவித் தடமால்வரை சிலையா,
நகரம் ஒருமூன்றும் நலம் குன்ற வென்று உகந்தான்
அகர முதலானை, அணி ஆப்பனூரானைப்
பகரும் மனம் உடையார் வினை பற்று அறுப்பாரே. 5

ஓடும் திரிபுரங்கள் உடனே உலந்து அவியக்,
காடு அது இடம் ஆகக், கனல் கொண்டு நின்று, இரவில்
ஆடும் தொழிலானை, அணி ஆப்பனூரானைப்
பாடும் மனம் உடையார் வினை பற்று அறுப்பாரே. 6

---

4. பிணி - பாசக்கட்டு, உலகத்துன்பம், பிணியும் பிறப்பும் அறுப்பான், துணியின் உடை-கோவண ஆடை

5. தகரம் - மயிர்ச்சார்ந்து. தடமால் வரை - அகன்று உயர்ந்த மலை. நகரம் மூன்று - முப்புரம். நலம் - அழகு. குன்ற - கெட. அகர முதலான் - எழுத்துக்களுக்கு அகர உயிர்போல அறிவுளதும் அறிவுஇலதுமான இருவகை உலகிற்கும் முதலானவன். பகரும் - பலவகையாலும் புகழ்ந்து துதிக்கும்.

6. உடனே - ஒன்றாக. உலந்து அவிய - கெட்டொழிய.

இயலும் விடை ஏறி எரிகொள் மழு வீசிக்
கயலின் இணைக்கண்ணாள் ஒருபால் கலந்து ஆட,
இயலும் இசையானை, எழில் ஆப்பனூரானைப்
பயிலும் மனம் உடையார் வினை பற்று அறுப்பாரே. 7

கருக்கும் மணிமிடற்றன், கதநாகக் கச்சையினன்,
உருக்கும் அடியவரை, ஒளி வெண்பிறை சூடி,
அரக்கன் திறல் அழித்தான், அணி ஆப்பனூரானைப்
பரு(க்)கும் மனம் உடையார் வினை பற்று அறுப்பாரே. 8

கண்ணன், கடிக் கமல மலர் மேல் இனிது உறையும்
அண்ணற்கு அளப்பு அரிது ஆய் நின்று, அங்கு அடியார்மேல்
எண் இல் வினை களைவான், எழில் ஆப்பனூரானைப்
பண்ணின் இசை பகர்வார் வினை பற்று அறுப்பாரே, 9

---

7. இயலும் - தன் குறிப்பின் வழி இயங்குதலை இயல்பாக உடைய. கயலின் - கயல் மீன் போன்ற. இணை - இரண்டு. இயலும் இசையான் - இயல் தமிழும் இசைத்தமிழும் தானே ஆன தன்மையான். பயிலும் - இடை விடாமல் சிந்திக்கும்.

8. கருக்கும் - கரு நிறம் காட்டும். மணி - நீல மணி. கத நாகம் - சினம் கொண்ட பாம்பு. கச்சை - அரைக் கச்சை. உருக்கும் - உருகும். திறல் - வலிமை. பருக்கும் - பருகும்.

9. கடிக் கமலம் - மணம் உடைய தாமரை. மலர் மேல் உறை அண்ணல் - நான்முகன். எண் இல் வினை - கணக்கற்ற வினைகள்.

செய்ய கலிங்கத்தார், சிறு தட்டு உடையார்கள்,
பொய்யர் புறம் கூறப், புரிந்த அடியாரை
ஐயம் அகற்றுவான், அணி ஆப்பனூரானைப்
பைய நினைந்து எழுவார் வினை பற்று அறுப்பாரே. 10

அம் தண் புனல் வைகை அணி ஆப்பனூர் மேய
சந்த மலர்க்கொன்றை சடைமேல் உடையானை,
நந்தி அடி பரவும் நல ஞானசம்பந்தன்
சந்தம் இவை வல்லார் தடுமாற்று அறுப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. செய்ய கலிங்கம் - சிவந்த காவி ஆடை. தட்டு - தடுக்கு. புரிந்த - மனம் விரும்பிய. பைய - மன அமைதியோடு. வினை பற்று - வினையையும் அதன் வாசனை என்னும் தொடர்ச்சியையும்.

11. சந்த மலர்-அழகியபூ. நந்தி - சிவன். சந்தம்- இனிய ஓசை பொருந்திய பாடல்.

1:89 திருஎருக்கத்தம்புலியூர்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

படை ஆர் தரு பூதப் பகடு ஆர் உரி போர்வை
உடையான், உமையோடும் உடன் ஆய், இடு கங்கைச்
சடையான் - எருக்கத்ததம்புலியூர்த் தகு கோயில்,
விடையான் அடி ஏத்த, மேவா வினைதானே. 1

இலை ஆர் தரு சூலப்படை எம்பெருமானாய்,
நிலையார் மதில் மூன்றும் நீறு ஆய் விழ எய்த
சிலையான்—எருக்கத்தம்புலியூர்த் திகழ் கோயில்,
கலையான் அடி ஏத்தக், கருதா வினைதானே. 2

"விண்ணோர்பெருமானே! விகிர்தா! விடை ஊர்தீ!
பெண், ஆண், அலி, ஆகும் பித்தா! பிறைசூடீ!
எண் ஆர் எருக்கத்தம்புலியூர் உறைகின்ற
அண்ணா!" என வல்லார்க்கு அடையா, வினைதானே. 3

---

1. பகடு - யானை.

2. நிலையார் - நிலையற்றவர். சிலையான் – வில்லை உடையவன்.

3. எண் ஆர் - எண்ணத்தக்க சிறப்பு வாய்ந்த. அண்ணா ! - தலைவனே !

அரை ஆர்தரு நாகம் அணிவான், அலர் மாலை
விரை ஆர்தரு கொன்றை உடையான், விடைஏறி,
வரையான், எருக்கத்தம்புலியூர் மகிழ்கின்ற
திரை ஆர் சடையானைச் சேரத், திரு ஆமே. 4

வீறு ஆர் முலையாளைப் பாகம் மிக வைத்து,
சீறு வரு காலன் சினத்தை அழிவித்தான்,
ஏறன், எருக்கத்தம்புலியூர் இறையானை
வேறு நினைவாரை விரும்பா வினைதானே. 5

நகு வெண்தலை எந்தி நாளுவிதம் பாடிப்
புகுவான் அயம் பெய்யப், புலித்தோல் பியற்கு இட்டுத்,
தகுவான்–எருக்கத்தம்புலியூர்த் தகைந்து அங்கே
தொகுவான் கழல் ஏத்தத், தொடரா, வினைதானே. 6

---

4. அரை ஆர் தரும் - அரையில் கட்டிய. அலர் மாலை - பூ மாலை. வரையான் - கயிலை மலையை உடையவன்.

5. வீறு - பிறரிலிருந்தும் வேறான சிறப்புடைய. ஏறன் - எருதினை ஊர்பவன். வேறு நினை வார் - தனி ஒரு முழு முதற் கடவுளாக நினைபவர்.

6. அயம் - பிச்சை. பியல் - பிடரி. தகைந்து - தங்கி. தொகுவான் - சேர்ந்திருப்பவன்.

... ... 7.

"ஆவா!" என அரக்கன் அலற அடர்த்திட்டுத்,
"தேவா!" என, அருள் ஆர் செல்வம் கொடுத்திட்ட
கோவே! எருக்கத்தம்புலியூர் மிகு கோயில்
'தேவே!' என, அல்லல் தீர்தல் திடம்ஆமே. 8

மறையான், நெடுமால், காண்பு அரியான், மழு
நிறையா மதி சூடி நிகழ் முத்தின் தொத்து ஏய் [ஏந்தி
இறையான், எருக்கத்தம்புலியூர் இடம்கொண்ட
கறை ஆர் மிடற்றானைக் கருதக், கெடும், வினையே. 9

புத்தர் அருகர்தம் பொய்கள் புறம்போக்கி,
சுத்தி தரித்து உறையும் சோதி, உமையோடும்
நித்தன், எருக்கத்தம்புலியூர் நிகழ்வு ஆய
அத்தன்: அறவன்தன் அடியே அடைவோமே. 10

---

7. ... ...

8. ஆ ஆ - இரக்கக் குறிப்பு ஒலி. திடம் - உறுதி.

9. மறையான் - நான்முகன். தொத்து - தொகுதி.

10. அருகர் - சமணர். சுத்திதரித்து - தூய தன்மையைப் பொருந்தி. அறவன் - அறவடிவானவன்.

ஏர் ஆர் எருக்கத்தம்புலியூர் உறைவானைச்,
சீர் ஆர் திகழ் காழித் திரு ஆர் சம்பந்தன்
ஆரா அருந்தமிழ் மாலைஇவை வல்லார்
பாரார்அவர் ஏத்தப், பதி வான் உறைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. ஏர் - எழுச்சி, திரு - ஞானம், ஆரா - நுகர்ந்து முடியாத, போதும் என்று அமையாத. 'வான் பதி' என மாறுக.

1 : 90

திருப்பிரமபுரம்

திரு இருக்குக் குறள் பண் : குறிஞ்சி

(நான்கு அடிகளையுடைய வஞ்சித்துறை யாப்பு இரண்டு அடிகளாகத் தரப்பட்டுள்ளது, பிற இடத்தும் கொள்க.)

திருச்சிற்றம்பலம்

அரனை உள்குவீர்! பிரமன் ஊருள் எம்
பரனையே மனம் பரவி உய்ம்மினே! 1

காண உள்குவீர்! வேணு நல்புரத்
தாணுவின் கழல் பேணி; உய்ம்மினே! 2

நாதன் என்பிர்காள்! காதல் ஒண்புகல்
ஆதி பாதமே ஓதி, உய்ம்மினே! 3

---

1. அரன் - உயிர்க்குப் பாசத்தை அழிப்பவன்: சிவபெருமான். பிரமன் ஊர் - பிரமபுரம்: பரன் - உயர்ந்தோன்: உய்ம்மின் - கட்டுநீங்கிச் செல்லுங்கள்; வீடு பெறுங்கள்.

2. உள்குவீர்! - நினைப்பவர்களே! தாணு - நிலையான தன்மையை உடையவன், சிவபெருமான்; பேணி - போற்றி.

3. நாதன் - தலைவன். காதல் ஒண் புகல் - விரும்பத்தக்க விளக்கமான சேர்விடம். ஆதி - முதல்வன்.

அங்கம் மாது சேர் பங்கம் ஆயவன்,
வெங்குரு மன்னும் எங்கள் ஈசனே. 4

வாள் நிலாச் சடைத் தோணி வண்புரத்து
ஆணி நன்பொனைக் காணுமின்களே! 5

"பாந்தள் ஆர் சடைப் பூந்தராய் மன்னும்,
ஏந்து கொங்கையாள் வேந்தன்" என்பரே. 6

கரிய கண்டனை, சிவபுரத்துள் எம்
அரசை, நாள் தொறும் பரவி, உய்ம்மினே! 7

நறவம் ஆர் பொழில் புறவம் நல் பதி
இறைவன் நாமமே மறவல், நெஞ்சமே! 8

---

4. அங்கம் - உடம்பு. பங்கம் - பாகம்.

5. வாள் நிலா - ஒளி பொருந்திய பிறை. வண் - வளம் உடைய. ஆணி நல் பொன் - மாற்று யர்ந்த பொன்.

6. பாந்தள் - பாம்பு. ஏந்து - உயர்ந்த.

7. கண்டன் - கழுத்தினன்.

8. நறவம் - தேன். புறவம் - சீகாழி. மறவல் - மறவாதீர்.

தென்றில் அரக்கனைக் குன்றில் சண்பைமன்
அன்று நெரித்தவா, நின்று நினைமினே! 9

அயனும் மாலும் ஆய் முயலும் காழியான்
பெயல்வை எய்தி நின்று இயலும், உள்ளமே. 10

தேரர் அமணரைச் சேர்வு இல் கொச்சை மன்
நேர் இல் கழல் நினைந்து ஓரும், உள்ளமே. 11

தொழு மனத்தவர், கழுமலத்து உறை
பழுது இல் சம்பந்தன் மொழிகள் பத்துமே. 12

திருச்சிற்றம்பலம்

---

9. தென்றில் - தென்திசையில் உள்ள. குன்றின் நெரித்தவா - மலையை அழுத்தி நெரித்தபடியை.

10. முயலும் - அறிய முயன்ற. பெயல்வு - அருள் மழை. இயலும் - உணருங்கள்.

11. கொச்சை மன் - சீகாழித் தலைவன். ஓரும் - உணருங்கள்.

1 : 91 திருஆரூர்

திரு இருக்குக் குறள் பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

சித்தம் தெளிவீர்காள்! அத்தன் ஆரூரைப்
பத்தி மலர் தூவ, முத்தி ஆகுமே.

பிறவி அறுப்பீர்காள்! அறவன் ஆரூரை
மறவாது ஏத்துமின்! துறவி ஆகுமே. 2

துன்பம் துடைப்பீர்காள்! அன்பன் அணி ஆரூர்
நன்பொன் மலர் தூவ, இன்பம் ஆகுமே. 3

உய்யல் உறுவீர்காள்! ஐயன் ஆரூரைக்
கையினல் தொழ, நையும், வினைதானே. 4

பிண்டம் அறுப்பீர்கள்! அண்டன் ஆரூரைக்
கண்டு மலர் தூவ, விண்டு வினைபோமே. 5

---

1. பத்தி மலர் - அன்பாகிய மலர்.

2. துறவி ஆகும் - உலகைத் துறத்தல் எளிதாகும்.

3. 4. ... ...

5. பிண்டம் - கருவுறுதலை. வினை விண்டுபோம்- வினை சிதறிப்போம்.

பாசம் அறுப்பீர்காள்! ஈசன் அணி ஆரூர்
வாச மலர் தூவ, நேசம் ஆகுமே. 6

வெய்ய வினை தீர, ஐயன் அணி ஆரூர்
செய்ய மலர் தூவ, வையம் உமது ஆமே. 7

அரக்கன் ஆண்மையை நெருக்கினன் ஆரூர்
கரத்தினல் தொழத், திருத்தம் ஆகுமே. 8

துள்ளும் இருவர்க்கும் வள்ளல் ஆரூரை
உள்ளும் அவர்தம்மேல் விள்ளும், வினைதானே. 9

---

6. ... ... — ...

7. செய்ய மலர் - செந்நிறமான மலர்கள்.

8. ... .

9. துள்ளும் இருவர் - தன் முனைப்பால் கிளர்ந்து எழுந்த மாலும் அயனும். உள்ளுமவர் - நினைப்பவர்.

கடுக்கொள் சீவரை அடக்கினான் ஆரூர்
எடுத்து வாழ்த்துவார் விடுப்பர், வேட்கையே. 10

சீர் ஊர் சம்பந்தன் ஆரூரைச் சொன்ன
பார் ஊர் பாடலார் பேரார், இன்பமே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. கடுக்கொள் சீவர் - பிறர்க்கு நஞ்சு அனையரும் சீவரம் ஆகிய காவி ஆடையை உடையவருமான புத்தர். வேட்கை - உலகப் பற்று.

11. பார் ஊர் பாடலார் - உலக முழுதும் பரவும் பாடலைப் பாடியவர். இன்பம் பேரார் - பேரின்பத்தைவிட்டு அகலார்.

1 : 92 திருவீழிமிழலை

திரு இருக்குக் குறள் பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

வாசி தீரவே, காசு நல்குவீர் !
மாசு இல் மிழலையீர்! ஏசல் இல்லையே. 1

இறைவர் ஆயினீர் ! மறை கொள் மிழலையீர் !
கறை கொள் காசினை முறைமை நல்குமே ! 2

செய்ய மேனியீர் ! மெய் கொள் மிழலையீர் !
பை கொள் அரவினீர் ! உய்ய, நல்குமே ! 3

நீறு பூசினீர் ! ஏறு அது ஏறினீர் !
கூறு மிழலையீர் ! பேறும் அருளுமே ! 4

---

1. வாசி - தர வேறு பாடு. ஏசல் - குறை கூறுதல்.

2. கறை கொள் காசு - குற்றம் உடைய காசு.

3. மெய் - உண்மை பை - படம்.

4. ... ...

காமன் வேவ, ஓர் தூமக் கண்ணினீர் !
நாம மிழலையீர் ! சேமம் நல்குமே ! 5

பிணி கொள் சடையினீர் ! மணி கொள் மிடறினீர்!
அணி கொள் மிழலையீர் ! பணிகொண்டு அருளுமே ! 6

மங்கை பங்கினீர் ! துங்க மிழலையீர் !
கங்கை முடியினீர் ! சங்கை தவிர்மினே ! 7

அரக்கன் நெரிதர, ! இரக்கம் எய்தினீர் !
பரக்கும் மிழலையீர் ! கரக்கை தவிர்மினே ! 8

---

5. தூமம் - புகை. இங்கு, தீ. நாமம் - பேரும் புகழும். சேமம் - பாதுகாப்பு. நல்கும் - தரும்.

6. ... ...

7. துங்கம் - உயர்வு. சங்கை - ஐயம்.

8. பரக்கும் - புகழ் பரக்கும். கரக்கை - வஞ்சகத்தை.

அயனும் மாலும்ஆய்! முயலும் முடியினீர்!
இயலும் மிழலையீர்! பயனும் அருளுமே! 9

பறிகொள் தலையினர்! அறிவது அறிகிலார்;
வெறிகொள் மிழலையீர்! பிரிவுஅது அரியதே. 10

காழி மா நகர்! வாழி சம்பந்தன்
வீழிமிழலைமேல்! தாழும் மொழிகளே. 11

திருச்சிற்றம்பலம்

9: ... ...

10: வெறி - மணம்.

11: ... ...

1 : 93 திரு முதுகுன்றம்

திரு இருக்குக் குறள் பண்:குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நின்று மலர் தூவி, இன்று முதுகுன்றை
நன்றும் ஏத்துவீர்க்கு என்றும் இன்பமே. 1

அத்தன் முதுகுன்றைப் பத்தி ஆகி, நீர்,
நித்தம் ஏத்துவீர்க்கு உய்த்தல் செல்வமே, 2

ஐயன் முதுகுன்றைப், பொய்கள் கெட நின்று,
கைகள் கூப்புவீர்! வையம் உமது ஆமே. 3

ஈசன் முதுகுன்றை நேசம்ஆகி, நீர்
வாச மலர் தூவப், பாசவினை போமே. 4

மணி ஆர் முதுகுன்றைப் பணிவார் அவர்கண்டீர்,
பிணி ஆயின கெட்டுத் தணிவார், உலகிலே. 5

---

1. ... ...

2. உய்த்தல் - சேரப் பெறுவது.

3. 4. 5. ... ...

"மொய் ஆர் முதுகுன்றில் ஐயா !'' என வல்லார்
பொய்யார், இரவோர்க்குச், செய்யாள் அணியாளே. 6

விடையான் முதுகுன்றை இடையாது ஏத்துவார்
படை ஆயின சூழ, உடையார், உலகமே. 7

பத்துத் தலையோனைக் கத்த, விரல் ஊன்றும்
அத்தன் முதுகுன்றை மொய்த்துப் பணிமினே! 8

இருவர் அறியாத ஒருவன் முதுகுன்றை
உருகி நினைவார்கள் பெருகி நிகழ்வோரே, 9

---

6. இரவோர்க்குப் பொய்யார் - தம்மிடம் வந்து வேண்டுவார்க்கு இல்லை யென்னாது கொடுப்பார். செய்யாள் அணியாள் - திருமகளான செல்வம் வந்தடையும்.

7. இடையாது - இடைவிடாமல்.

8. ... ...

9. இருவர் அறியாத ஒருவன் - மாலும் அயனும் கண்டு கொள்ள முடியாது போன ஒருவனாகிய சிவபெருமான்.

தேரர் அமணரும் சேரும் வகை இல்லான்,
நேர் இல் முதுகுன்றை நீர் நின்று உள்குமே! 10

நின்று முதுகுன்றை நன்று சம்பந்தன்
ஒன்றும் உரை வல்லார் என்றும் உயர்வோரே. 11

திருச்சிற்றம்பலம்

10: ... ...

11: ஒன்றும் உரை - சிவத்தோடு பொருந்தி நின்று கூறிய மொழி.

1 : 94

திரு ஆலவாய்

திரு இருக்குக்குறள் பண்:குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நீல மாமிடற்று ஆலவாயிலான்
பால்அது ஆயினுர் ஞாலம் ஆள்வரே. 1

ஞாலம் ஏழும் ஆம் ஆலவாயிலார்
சீலமே சொலீர், காலன் வீடவே! 2

ஆல நீழலார், ஆலவாயிலார்,
கால காலனுர் பால்அது ஆமினே! 3

அந்தம் இல் புகழ் எந்தை ஆலவாய்,
பந்தி ஆர் கழல் சிந்தைசெய்ம்மினே! 4

ஆடல் ஏற்றினுன் கூடல் ஆலவாய்
பாடியே, மனம் நாடி, வாழ்மினே! 5

---

1. பாலது - பக்கமாக. ஞாலம் - உலகம்.

2. காலன் வீட - எமன் அழிய.

3. ... ...

4. பந்தியார் - இயல்பாகவே பாசக் கட்டு இல்லாதவர்.

5. ஆடல் ஏறு - வெற்றி பொருந்திய எருது கூடல் - மதுரை.

அண்ணல் ஆலவாய் நண்ணினான் தனை
எண்ணியே தொழத், திண்ணம் இன்பமே. 6

அம் பொன் ஆலவாய் நம்பனார் கழல்
நம்பி வாழ்பவர் துன்பம் வீடுமே. 7

அரக்கனார் வலி நெருக்கன் ஆலவாய்
உரைக்கும் உள்ளத்தார்க்கு இரக்கம் உண்மையே. 8

அருவன், ஆலவாய் மருவினான் தனை
இருவர் ஏத்த, நின்று உருவம் ஓங்குமே. 9

"ஆரம் நாகம் ஆம் சீரன், ஆலவாய்த்
தேர் அமண் செற்ற வீரன்" என்பரே. 10

அடிகள் ஆலவாய்ப், படி கொள் சம்பந்தன்,
முடிவுஇல் இன்தமிழ் செடிகள் நீக்குமே. 11

திருச்சிற்றம்பலம்

---

6. ... ...

7. வீடும் – ஒழியும்.

8. வலி நெருக்கன் - வலிமையை ஒடுக்கியவன்.

9. அருவன் - அருவமானவன். உருவம் - தீயுரு ஓங்கும் - உயரும்.

10. ஆரம் - மாலை; தேர் – தேரர்; அமண் - அமரர்.

11. செடிகள் - குற்றங்கள், தீமைகள்.

1 : 95

திருஇடைமருதூர்

திரு இருக்குக்குறள் பண்:குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

தோடு ஓர் காதினன்; பாடு மறையினன் -
காடு பேணி நின்று ஆடும் மருதனே. 1

கருதார் புரம் எய்வர்; எருதே இனிது ஊர்வர்;
மருதே இடம் ஆகும்; விருது ஆம், வினை தீர்ப்பே. 2

எண்ணும் அடியார்கள் அண்ணல் மருதரை,
பண்ணின் மொழி சொல்ல, விண்ணும் தமது ஆமே. 3

விரி 'ஆர் சடைமேனி எரி ஆர் மருதரைத்
தரியாது ஏத்துவார் பெரியார், உலகிலே. 4

---

1. மருதன் - திருஇடைமருதூர் இடம் கொண்டவன்.

2. கருதார் - பகைவர். விருது - பெருமை. வினை தீர்ப்பு விருது ஆம்.

3. ....

4. தரியாது - தாமதிக்காமல்.

பந்த விடை ஏறும் எந்தை மருதரைச்
சிந்தை செய்பவர் புந்தி நல்லரே. 5

கழலும் சிலம்பு ஆர்க்கும் எழில் ஆர் மருதரைத்
தொழலே பேணுவார்க்கு உழலும் வினை போமே. 6

பிறை ஆர் சடை அண்ணல் மறை ஆர் மருதரை
நிறையால் நினைபவர் குறையார், இன்பமே. 7

எடுத்தான் புயம்தன்னை அடுத்தார் மருதரைத்
தொடுத்து ஆர்மலர் சூட்ட, விடுத்தார், வேட்கையே, 8

---

5. பந்த விடை - தமக்கு உரித்தான எருது. தம் கட்டுக்கு உட்பட்ட எருது. புந்தி - அறிவு.

6. ... ...

7. நிறையால் நினைபவர் - வேறு எதனிலும் செல்லாது மனத்தைச் சிவன்பால் நிலை பெறச் செய்து நினைப்பவர்.

8. எடுத்தான் - கயிலை மலையை எடுத்த இராவணன். அடுத்தார் - நெருக்கினர். சூட்ட மலர் தொடுத்தார் வேட்கை விடுத்தார் எனக் கூட்டுக.

இருவர்க்கு எரி ஆய உருவம் மருதரைப்
பரவி ஏத்துவார் மருவி வாழ்வரே. 9

நின்று உண் சமண், தேரர், என்றும் மருதரை
அன்றி உரை சொல்ல, நன்று மொழியாரே. 10

கருது சம்பந்தன், மருதர் அடி பாடி,
பெரிதும் தமிழ் சொல்லப், பொருத வினை போமே. 11

திருச்சிற்றம்பலம்

9. 10. ... .

11. பொருத வினை - துன்புறுத்த வந்த வினைகள்.

1 : 96 ## திருஅன்னியூர்

திரு இருக்குக்குறள் பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மன்னி ஊர் இறை; சென்னியார், பிறை –
அன்னியூர் அமர் மன்னு சோதியே. 1

பழகும் தொண்டர், வம்! அழகன், அன்னியூர்க்
குழகன், சேவடி தொழுது வாழ்மினே! 2

நீதி பேணுவீர் ! ஆதி, அன்னியூர்ச்
சோதி, நாமமே ஓதி உய்ம்மினே ! 3

பத்தர்ஆயினீர்! அத்தர், அன்னியூர்ச்
சித்தர், தாள் தொழ முத்தர் ஆவரே. 4

---

1. மன்னி ஊர் இறை - என்றும் நிலையாயிருக்கும் முதல்வன்;

2. வம் ! - வாருங்கள். குழகன் - இளையான்

3. 4: ... ...

நிறைவு வேண்டுவீர் ! அறவன், அன்னியூர்
மறை உளான், கழற்கு உறவு செய்ம்மினே ! 5

இன்பம் வேண்டுவீர் ! "அன்பன், அன்னியூர்
நன்பொன்" என்னுமின், உம்பர் ஆகவே ! 6

'அந்தணாளர் தம் தந்தை ! அன்னியூர்
எந்தையே !" எனப், பந்தம் நீங்குமே. 7

தூர்த்தனைச் செற்ற தீர்த்தன் அன்னியூர்
ஆத்தமா அடைந்து, ஏத்தி வாழ்மினே ! 8

. ...

6. உம்பர் ஆக - உயர்ந்த உலகத்தவர் ஆக.

7. ....

8. தூர்த்தன் - காமுகனாகிய இராவணன். தீர்த்தன் - உயிர்களின் மல மாசு போக்கும் அருள் - நீரானவன். ஆத்தமா - அன்பொடு கூடி.

இருவர் நாடிய அரவன் அன்னியூர்
பரவுவார், விண்ணுக்கு ஒருவர் ஆவரே. 9

குண்டர், தேரருக்கு அண்டன் அன்னியூர்த்
தொண்டுஉளார் வினை விண்டு போகுமே. 10

பூந்தராய்ப் பந்தன் ஆய்ந்த பாடலால்,
வேந்தன் அன்னியூர் சேர்ந்து, வாழ்மினே! 11

திருச்சிற்றம்பலம்

---

9. 10. ....

11. பூந்தராய்ப் பந்தன் - சீகாழிப் பதியினன் ஆகிய திருஞானசம்பந்தன்; ஆய்ந்த பாடல் - நுண்ணிய பொருளைக் கொண்ட பாடல்கள்.

1 : 97 திருப்புறவம்

பண்: குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

எய்யா வென்றித் தானவர் ஊர்மூன்று எரிசெய்த
மைஆர்கண்டன், மாதுஉமை வைகும் திருமேனிச்
செய்யான், வெண்நீறு அணிவான், திகழ் பொன் பதிபோலும் -
பொய்யா நாவின் அந்தணர் வாழும் புறவ(ம்)மே. 1

"மாது ஒருபாலும் மால் ஒருபாலும் மகிழ்கின்ற
நாதன்" என்று ஏத்தும் நம்பான் வைகும் நகர்போலும் -
மாதவி மேய வண்டு இசை பாட, மயில் ஆட்ப்,
போது அலர் செம்பொன் புன்னை கொடுக்கும் புறவ(ம்)மே. 2

வற்று நதியும் மதியும் பொதியும் சடைமேலே
புற்று ஆடு அரவின் பட்டம் ஆடவும், இப் புவனிக்கு ஓர்
பற்று ஆய், "இடுமின், பலி!" என்று அடைவார் பதிபோலும் -
பொன் தாமரையின் பொய்கை நிலாவும் புறவ(ம்)மே. 3

---

1. எய்யா வென்றி - அறியப்படாத வெற்றி. தானவர் - அசுரர். பொன்பதி - அழகிய நகரம்.

2. மாதவி - குருக்கத்தி மலர். மேய-பொருந்திய போது - பூ. அலர் - மலர்கின்ற. செம்பொன் - செம்பொன் துகள் போன்ற பூந்தாதுக்கள்.

3. புவனி - மண்ணுலகம்.

துன்னார் புரமும் பிரமன் சிரமும் துணிசெய்து,
மின் ஆர் சடைமேல் அரவும் மதியும் விளையாட,
பல்நாள், "இடுமின், பலி!" என்று அடைவார் பதிபோலும் -
பொன் ஆர் புரிநூல் அந்தணர் வாழும் புறவ(ம்)மே. 4

"தேவா! அரனே! சரண்!" என்று இமையோர் திசைதோறும்,
"காவாய்!" என்று வந்து அடையக்கார்விடம் உண்டு,
பா ஆர் மறையும் பயில்வோர் உறையும் பதிபோலும் -
பூ ஆர் கோலச் சோலை சுலாவும் புறவ(ம்)மே. 5

'கற்று அறிவு எய்தி, காமன் முன் ஆகும் உகவு எல்லாம்
அற்று, "அரனே! நின் அடி சரண்!" என்னும் அடியோர்க்குப்
பற்று அது ஆய பாசுபதன் சேர் பதி' என்பர் -
பொன் திகழ் மாடத்து ஒளிகள் நிலாவும் புறவ(ம்)மே. 6

---

4. துன்னார் - பகைவர். துணி செய்து - புரத்தை அழித்து, சிரத்தைக் கிள்ளி எடுத்து.

5. கார் விடம் - கருமை பொருந்திய ஆலகால நஞ்சு. சுலாவும் - சூழ்ந்துள்ள.

6. முகவு - முகத்தின் ஒளி.

"எண் திசையோர் அஞ்சிடு வகை கார்சேர் வரை என்னக்,
கொண்டு எழு கோல முகில் போல், பெரிய கரிதன்னைப்
பண்டு உரிசெய்தோன் பாவனைசெய்யும் பதி" என்பர்
புண்டரிகத்தோன் போல் மறையோர் சேர் புறவ(ம்)மே. 7

பரக்கும் தொல்சீர்த் தேவர்கள் சேனைப் பௌவத்தைத்
துரக்கும் செந்தீப் போல் அமர் செய்யும் தொழில் மேவும்
அரக்கன் திண்தோள் அழிவித்தான், அக் காலத்தில்;
புரக்கும் வேந்தன்; சேர்தரு மூதூர் — புறவ(ம்)மே. 8

"மீத் திகழ் அண்டம் தந்த(அ)யனோடு மிகு மாலும்,
மூர்த்தியை நாடிக் காண ஒணாது, முயல் விட்டு, ஆங்கு
ஏத்த, வெளிப்பாடு எய்தியவன் தன் இடம்" என்பர்—
பூத் திகழ் சோலைத் தென்றல் உலாவும் புறவ(ம்) மே, 9

---

7. கார் சேர் வரை - கருநிறம் பொருந்திய மலை; என்ன - போல. கோலம் கொண்டு எழுமுகில் - திரண்டு அழகாக உயர்ந்தெழும் மேகம். கரி - யானை. பாவனை செய்யும் - கருதிக் கொண்ட. புண்டரிகத்தோன் - தாமரை மலரோனாகிய நான்முகன்.

8 பௌவம் - பெருங்கடல். துரக்கும் - ஓடச் செய்யும். மூதூர் - பழமையான நகர்.

9. மீத் திகழ் அண்டம் - மேலே உயர்ந்து விளங்கும் உலகம். மூர்த்தியை - தீயுருவில் விளங்கும் சிவபெருமானை. நாடி - ஆராய்ந்து. முயல் விட்டு - முயற்சியைக் கைவிட்டு. ஆங்கு - அவ்விடத்தில்.

வையகம், நீர், தீ, வாயுவும், விண்ணும் முதல் ஆனான்;
மெய் அல தேரர், "உண்டு, இலை" என்றே நின்றே தம்
கையினில் உண்போர், காண ஒணாதான்; நகர் என்பர்—
பொய் அகம் இல்லாப் பூசுரர் வாழும் புறவ(ம்)மே. 10

பொன் இயல் மாடப் புரிசை நிலாவும் புறவத்து
மன்னிய ஈசன் சேவடி நாளும் பணிகின்ற
தன் இயல்பு இல்லாச் சண்பையர்கோன் - சீர்ச் சம்பந்தன்
இன் இசைஈர் - ஐந்து ஏத்த வல்லோர்கட்கு இடர்
போமே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. வையகம் - நிலம் ஆகிய பூதம். நீர் முதலியனவும் பூதங்கள். உண்டு இலை என்றே - உண்டுமாம் இல்லையுமாம் என்னும் கொள்கை. பொய் அகம் இல்லா - உள்ளத்தில் கள்ளம் இல்லாத. பூசுரர் - அந்தணர்.

11. புரிசை - மதில். தன் இயல்பு இல்லா - தனதான உயிரியல்பு விளங்காமல் உடையவனான இறைவன் தன்மையே தன்னிடம் விளங்கப் பெற்ற;

1 : 98 திருச்சிராப்பள்ளி

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நன்று உடையானை, தீயது இலானை, நரை – வெள்ஏறு
ஒன்று உடையானை, உமை ஒருபாகம் உடையானை,
சென்று அடையாத திரு உடையானை, சிராப்பள்ளிக் -
குன்று உடையானைக் கூற, என் உள்ளம்
குளிரு(ம்)மே. 1

கைம் மகவு ஏந்திக் கடுவனொடு ஊடிக் கழை பாய்வான்,
செம்முக மந்தி கருவரை ஏறும் சிராப்பள்ளி,
வெம் முக வேழத்து ஈர் உரிபோர்த்த விகிர்தா! நீ
பைம்முக நாகம் மதிஉடன் வைத்தல் பழி அன்றே? 2

---

1. நன்று - நன்மையானது. நரை வெள் ஏறு - நரை போன்ற வெண்ணிற எருது. சென்று அடையாத திரு - இயல்பாகவே என்றும் தன்பால் இருக்கும் செல்வம். குன்று - மலை. கூற - பாடுவதால்.

2. கைம் மகவு - கைக்குழந்தை, சிறு குழந்தை: கடுவன் - ஆண் குரங்கு. ஊடி - சிறு வெறுப்புக் கொண்டு. கழைபாய்வான் - மூங்கில்மேல் ஏறிக் கீழே பாயும் பொருட்டு. மந்தி - பெண் குரங்கு. வெம்முகம் - கொடுந்தன்மை. கடுமை. ஈர் உரி

மந்தம் முழவம் மழலை ததும்ப, வரை நீழல்,
செந்தண் புனமும் சுனையும் சூழ்ந்த சிராப்பள்ளி,
சந்த மலர்கள் சடைமேல் உடையார், விடை ஊரும்
எம்தம் அடிகள், அடியார்க்கு அல்லல் இல்லையே. 3

துறை மல்கு சாரல், சுனை மல்கு நீலத்து இடைவைகி,
சிறை மல்கு வண்டும் தும்பியும் பாடும் சிராப்பள்ளி,
கறை மல்கு கண்டன், கனல் எரி ஆடும் கடவுள் எம்
பிறை மல்கு சென்னி உடையவன், எங்கள்
பெருமானே! 4

உரித்த தோல். பைம் முக நாகம் - படம் உடைய பாம்பு. பழி அன்றே? - பாம்பும் மதியும் பகைப் பொருளாயிருக்க இரண்டையும் ஓரிடத்தில் பக்கமாக வைத்திருப்பது பின்னர்ப் பழிப்புக்கு இடமாகி விடாதோ? என்றது நயம்.

3. மந்தம் - மெல்லிய ஓசையை எழுப்பும். மழலைததும்ப - மழலை போல ஒலிக்க. வரை நீழல் - மலையின் சாரலில். சந்தம் - அழகு.

4. ... ...

கொலை வரையாத கொள்கையர்தங்கள் மதில் மூன்றும்
சிலை வரை ஆகச் செற்றனரேனும், சிராப்பள்ளித்
தலைவரை நாளும் தலைவர் அல்லாமை உரைப்பீர்காள் !
நிலவரை நீலம் உண்டதும் வெள்ளைநிறம் ஆமே ? 5

வெய்ய தண்சாரல் விரி நிற வேங்கைத் தண்போது
செய்யபொன் சேரும் சிராப்பள்ளி மேய செல்வனார்,
தையல் ஓர்பாகம் மகிழ்வர்; நஞ்சு உண்பர்; தலைஓட்டில்
ஐயமும் கொள்வர்; ஆர், இவர் செய்கை அறிவாரே? 6

வேய் உயர் சாரல் கருவிரல் ஊகம் விளையாடும்
சேய் உயர் கோயில் சிராப்பள்ளி மேய செல்வனார்,
பேய் உயர் கொள்ளி கைவிளக்கு ஆகப், பெருமானார்,
தீ உகந்து ஆடல் திருக்குறிப்பு ஆயிற்று; ஆகாதே! 7

---

5. கொலை வரையாத – கொல்லும் தொழிலை விலக்காத. வரை சிலையாக - மலையை வில்லாகக் கொண்டு. செற்றனர் - அழித்தார். தலைவர் அல்லாமை உரைப்பீர்காள் ! - இவரே முழுமுதற் கடவுள் அல்லர் என்று சொல்லுபவர்களே !

6. வெய்ய தண் சாரல் - யாரும் விரும்பத்தக்க குளிர்ந்த மலைச்சாரல். நிறம் விரிவேங்கைத் தண்போது என்க.

7. வேய் – மூங்கில். உயர் - உயர்ந்து வளரும். கருவிரல் ஊகம் - கருங்குரங்கு. சேய் உயர் - மிகவும் உயர்ந்த.

மலை மல்கு தோளன் வலிகெட ஊன்றி, மலரோன்தன்
தலை கலன்ஆகப் பலி திரிந்து உண்பர்; பழி ஓரார் -
சொல வல வேதம் சொல வல கீதம் சொல்லுங்கால்,
சில அலபோலும், சிராப்பள்ளிச் சேடர் செய்கையே! 8

அரப்பள்ளியானும் அலர் உறைவானும், அறியாமைக்
கரப்பு உள்ளி, நாடிக் கண்டிலரேனும், கல் சூழ்ந்த
சிரப்பள்ளி மேய வார்சடைச் செல்வர் மனைதோறும்
இரப்பு உள்ளீர்; உம்மை ஏதிலர் கண்டால் இகழாரே? 9

---

8. மலைமல்கு - மலைபோன்ற. தோளன் - இராவணன். பழி - இழிவு. ஓரார் - நினையார். சொலவல - சொல்லவல்ல. சிலஅல - சில அல்ல.

9. அரப்பள்ளி - பாம்புப் படுக்கை. கரப்பு உள்ளி நாடி - மறைப்பு எண்ணி ஆராய்ந்து. இரப்பு உள்ளீர் - இரத்தலைக் கருதினீர். ஏதிலர் - அயலவர். இகழாரே ! - இகழமாட்டார்களோ !

“நாணாது உடை நீத்தோர்களும், கஞ்சி நாள்காலை
ஊணாப் பகல் உண்டு ஓதுவோர்கள், உரைக்கும் சொல்
பேணாது, உறு சீர் பெறுதும்” என்பீர்! எம்பெருமானார்
சேண் ஆர் கோயில் சிராப்பள்ளி சென்று சேர்மினே! 10

தேன் நயம் பாடும் சிராப்பள்ளியானை, திரை சூழ்ந்த
கானல் சங்கு ஏறும் கழுமல ஊரில் கவுணியன் –
ஞானசம்பந்தன் – நலம் மிகு பாடல் இவை வல்லார்
வான சம்பந்தத்தவரொடும் மன்னி வாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. உறுசீர் பெறுதும் - மிக்க சிறப்பினை அடைவோம். சேண் - தொலைவு.

11. தேன் நயம்பாடும் - வண்டுகள் இனிதாய் இசைக்கும்.

1 : 99 திருக்குற்றாலம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

வம்பு ஆர் குன்றம், நீடு உயர் சாரல், வளர் வேங்கைக்
கொம்பு ஆர் சோலைக் கோல வண்டுயாழ்செய்
குற்றாலம் -
அம் பால் நெய்யோடு ஆடல் அமர்ந்தான்,
அலர்கொன்றை
நம்பான் மேய நல்நகர்போலும்; நமரங்காள்! 1

பொடிகள் பூசித் தொண்டர் பின்செல்லப் புகழ்
விம்மக்,
கொடிகளோடும் நாள் விழ மல்கு குற்றாலம் –
கடி கொள் கொன்றை, கூவிள மாலை, காதல்செய்
அடிகள் மேய நல்நகர்போலும்; அடியீர்காள்! 2

---

1. வம்பு - புதுமை. நீடு - நீண்டு. கொம்பு - கிளை. கோல – அழகிய. யாழ் செய் - யாழிசை போல ஒலிக்கும். நமரம் - நம்மவர்.

2. பொடி - திருநீறு. விம்ம – மேலோங்க. விழ - விழா. மல்கும் - மிகும். கடி - மணம். கூவிளமாலை - வில்வமாலை. காதல் செய் - விரும்பும்.

செல்வம் மல்கு செண்பகம், வேங்கை சென்று ஏறிக்,
கொல்லை முல்லை மெல்அரும்பு ஈனும் குற்றாலம் –
வில்லின் ஒல்க மும்மதில் எய்து, வினை போக
நல்கும் நம்பான் நல்நகர்போலும்; நமரங்காள்! 3

பக்கம் வாழைப் பாய் கனியோடு பலவின் தேன்,
கொக்கின் கோட்டுப் பைங்கனி தூங்கும் குற்றாலம் -
அக்கும் பாம்பும் ஆமையும் பூண்டு, ஓர் அனல் ஏந்தும்
நக்கன் மேய நல்நகர்போலும்; நமரங்காள்! 4

மலை ஆர் சாரல் மகவுடன் வந்த மடமந்தி
குலை ஆர் வாழைத் தீம்கனி மாந்தும் குற்றாலம்—
இலை ஆர் சூலம் ஏந்திய கையான், எயில் எய்த
சிலையான், மேய நல்நகர்போலும்; சிறு தொண்டீர்! 5

---

3. கொல்லை - முல்லை நிலம். வில்லின் - வில்லால் ஒல்க - அழிய.

4. கொக்கின் கோடு - மாமரக் கிளை. அக்கு - உருத்திராக்கம், சங்குமணி, ஆமை - ஆமை ஓடு. நக்கன் - சிவன்.

5. தீங்கனி - இனிய பழம். மாந்தும் - உண்ணும்

மைம் மா நீலக் கண்ணியர், சாரல் மணிவாரிக்,
கொய்ம் மா ஏனல் உண் கிளி ஓப்பும் குற்றாலம்—
கைம்மா வேழத்து ஈர்உரி போர்த்த கடவுள், எம்
பெம்மான், மேய நல்நகர் போலும்; பெரியீர்காள்! 6

நீலம், நெய்தல், தண்சுனை சூழ்ந்த நீள்சோலைக்,
கோல மஞ்ஞை பேடையொடு ஆடும் குற்றாலம்—
காலன் தன்னைக் காலால் காய்ந்த கடவுள் எம்
சூலபாணி, நல்நகர்போலும்: தொழுவீர்காள்! 7

போதும் பொன்னும் உந்தி அருவி புடைசூழக்,
கூதல் மாரி நுண்துளி தூங்கும் குற்றாலம்—
மூதூர் இலங்கை முட்டிய கோனை முறைசெய்த
நாதன் மேய நல்நகர்போலும்; நமரங்காள்! 8

---

6. மை மா நீலக் கண்ணியர் - கருமையான பெரிய நீல மலர்போன்ற கண்ணை உடைய குறப் பெண்டிர். கொய் மா ஏனல் – கதிர் கொய்யும் பருவத்தில் உள்ள பெரியதினை. ஓப்பும் - விரட்டும். கை - துதிக்கை. மாவேழம் - பெரிய ஆண்யானை.

7. சூலபாணி - சூலம் ஏந்திய கையினன்.

8. போது - பூ. உந்தி – தள்ளிக் கொண்டு. புடை - பக்கம். கூதல் மாரி - குளிர்ந்த மழை. தூங்கும் – தங்கும். முட்டிய - மோதிய. கோன் - இராவணன். மிறை செய்த - வருத்தமுறச் செய்த.

அரவின் வாயின் முள்எயிறு ஏய்ப்ப அரும்பு ஈன்று,
குரவம் பாவை முருகு அமர் சோலைக் குற்றாலம்—
பிரம(ன்)னேடு மால் அறியாத பெருமை எம்
பரமன் மேய நல்நகர் போலும்; பணிவீர்காள்! 9

பெருந் தண் சாரல் வாழ் சிறைவண்டு பெடை புல்கி,
குருந்தம் ஏறிச் செவ்வழி பாடும் குற்றாலம்—
இருந்து உண் தேரும், நின்று உண் சமணும் எடுத்து
ஆர்ப்ப,
அருந் தண் மேய நல்நகர்போலும்; அடியீர்காள்! 10

மாட வீதி வருபுனல் காழியார் மன்னன்,
கோடல் ஈன்று கொழுமுனை கூம்பும் குற்றாலம்
நாட வல்ல, நல் தமிழ் ஞானசம்பந்தன்,
பாடல் பத்தும் பாட, நம் பாவம் பறையுமே. 11

திருச்சிற்றம்பலம்

---

9. முள் எயிறு – முள் போன்ற கூர்மையான பல். ஏய்ப்ப – போல. அரும்பு ஈன்று - அரும்பு விட்டு. குரவம் பாவை - பாவை வடிவான குரவம்பூ. முருகு - அழகு.

10. புல்கி - தழுவி. செவ்வழி – ஒரு பண்.

11. கோடல் - செங்காந்தள்; முனை - உச்சி.

1 : 100 திருப்பரங்குன்றம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நீடு அலர் சோதி வெண்பிறையோடு நிறை கொன்றை
சூட்டலன், அந்திச், சுடர்எரி ஏந்திச், சுடுகானில்
ஆட்டலன், அம் சொல் அணியிழையாளை ஒருபாகம்
பாட்டலன், மேய நல்நகர்போலும்—பரங்குன்றே. 1

அங்கம்ஓர்ஆறும் அருமறைநான்கும் அருள்செய்து,
பொங்கு வெண்நூலும் பொடி அணி மார்பில் பொலிவித்து,
திங்களும் பாம்பும் திகழ்சடை வைத்து, ஓர் தேன்மொழி
பங்கினன் மேய நல்நகர்போலும்—பரங்குன்றே. 2

நீர் இடம்கொண்ட நிமிர்சடைதன்மேல் நிரைகொன்றை
சீர் இடம்கொண்ட எம் இறைபோலும், சேய்து ஆய
ஓர் உடம்புள்ளே உமை ஒருபாகம் உடன்ஆகி,
பாரிடம் பாட, இனிது உறை கோயில்—பரங்குன்றே. 3

---

1. நீடு அலர் சோதி - நீண்டு விளங்கும் ஒளி. சூடலன் - சூடியவன். ஆடலன் - ஆடுபவன்: பாடலன் - பொருந்தக் கொண்டவன்.

2. பொலி வித்து – விளங்கச் செய்து.

3. சேய்து - செம்மையுடையது. பாரிடம் - பூத கணம்.

வளர் பூங் கோங்கம், மாதவியோடு, மல்லிகைக்
குளிர் பூஞ் சாரல் வண்டு அறை சோலைப் பரங்குன்றம்,
தளிர் போல் மேனி தையல் நல்லாளோடு ஒரு பாகம்,
நளிர் பூங்கொன்றை சூடினன் மேய நகர்தானே. 4

பொன் இயல் கொன்றை, பொறி கிளர் நாகம் புரிசடைத்
துன்னிய சோதி ஆகிய ஈசன், தொல்மறை
பன்னிய பாடல் ஆடலன், மேய பரங்குன்றை
உன்னிய சிந்தை உடையவர்க்கு இல்லை, உறுநோயே. 5

கடை நெடு மாடக் கடி அரண் மூன்றும் கனல் மூழ்கத்
தொடை நவில்கின்ற வில்லினன், அந்திச், சுடுகானில்
புடை நவில் பூதம் பாட, நின்று ஆடும் பொரு சூலப்,
படை நவில்வான்தன் நல்நகர்போலும் – பரங்குன்றே. 6

---

4. நளிர் - குளிர்ந்த.

5. பொறி - புள்ளி. கிளர்-விளங்கும். துன்னிய-செறிவுற்ற. பன்னிய – சொன்ன. உன்னிய - நினைத்த.

6. கடை-வாயில். கடி - காவல். அரண் மூன்று-முப்புரம், மும்மதில், தொடை நவில்கின்ற வில் - அம்பு தொடுத்த வில். அந்தி - இரவு. எல்லாம் ஒடுங்கிய காலம்.

அயில் உடை வேல், ஓர் அனல் புல்கு கையின்,
அம்பு ஒன்றால்
எயில் பட எய்த எம்இறை மேய இடம்போலும் –
மயில் பெடை புல்கி மா நடம்ஆடும் வளர் சோலைப்,
பயில் பெடைவண்டு பாடல் அறாத பரங்குன்றே. 7

மைத் தகு மேனி வாள் அரக்கன்தன் மகுடங்கள்
பத்தின, திண்தோள் இருபதும் செற்றான் பரங்குன்றைச்
சித்தம் அது ஒன்றிச் செய் கழல் உன்னிச் "சிவன்"
என்று
நித்தலும் ஏத்தத், தொல்வினை நம்மேல் நில்லாவே. 8

முந்தி இவ்வையம் தாவிய மாலும், மொய் ஒளி
உந்தியில் வந்து இங்கு அருமறை ஈந்த உரவோனும்,
சிந்தையினாலும் தெரிவு அரிதுஆகித் திகழ்சோதி,
பந்து இயல் அம்கை மங்கை ஓர்பங்கன்,
பரங்குன்றே! 9

---

7. அயில் - கூர்மை. எயில் பட - அரண் அழிய.

8. மைத் தகு மேனி - மை போல் இருண்டமேனி. செய் கழல் – சிவந்த திருவடி.

9. உந்தியில் வந்து மறை ஈந்த உரவோன் - நான்முகன்.

குண்டுஆய் முற்றும் திரிவார், கூறை மெய் போர்த்து,
மிண்டுஆய் மிண்டர் பேசிய பேச்சு மெய் அல்ல;
பண்டுஆல் நீழல் மேவிய ஈசன் பரங்குன்றைத்
தொண்டால் ஏத்தத், தொல்வினை நம்மேல்
நில்லாவே. 10

தடமலி பொய்கைச் சண்பை மன் ஞானசம்பந்தன்,
படம் மலி நாகம் அரைக்கு அசைத்தான்தன்
பரங்குன்றைத்
தொடைமலி பாடல் பத்தும் வல்லார், தம் துயர் போகி,
விடம்மலி கண்டன் அருள் பெறும் தன்மை
மிக்கோரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. குண்டு ஆய் - பருத்த உடம்பினராய். கூறை - காவியாடை. மிண்டு - விதண்டா வாதம்; மிண்டர் - முரடர்.

11. சண்பை - சீகாழி. மிக்கோர் - மிகுந்தோர்.

1 : 101 திருக்கண்ணார்கோயில்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

தண்ஆர் திங்கள், பொங்கு அரவம், தாழ்புனல் சூடி,
பெண் ஆண் ஆய பேர்அருளாளன் பிரியாத
கண்ணார்கோயில் கைதொழுவோர்கட்கு, இடர்பாவம்
நண்ணா ஆகும்; நல்வினை ஆய நணுகு(ம்)மே. 1

கந்து அமர் சந்தும், கார் அகிலும், தண்கதிர் முத்தும்,
வந்து அமர் தெண்நீர் மண்ணி வளம் சேர்
வயல் மண்டி
கொந்து அலர் சோலைக் கோகிலம் ஆட்க்குளிர் வண்டு
செந்து இசை பாடும்சீர் திகழ் கண்ணார்கோயிலே. 2

---

1 பொங்கு - சினம் மிகுந்த. தாழ் புனல் - விண்ணிலிருந்து இறங்கிய. நண்ணா - சேரா. நணுகும் - வந்தடையும்,

2. கந்து அமர் சந்து - மணம் நிறைந்த சந்தனம். தெள் நீர் - தெளிவான நீர். கோகிலம் - குயில். செந்திசை - செவ்வழி என்னும் பண்.

"பல்இயல் பாணிப் பாரிடம் ஏத்தப், படுகானில்
எல்லி நட்டம்செய் ஈசன் எம்மான்தன் இடம்" என்பர் -
கொல்லையின் முல்லை, மல்லிகை, மௌவல் கொடி
பின்னி,
கல் இயல் இஞ்சி மஞ்சு அமர், கண்ணார்கோயிலே. 3

தரு வளர் கானம் தங்கிய தூங்கப் பெருவேழம்,
மருவளர்கோதை அஞ்ச, உரித்து, மறை நால்வர்க்கு
உரு வளர் ஆல்நீழல் அமர்ந்து ஈங்கு உரைசெய்தார்
கரு வளர் கண்ணார்கோயில் அடைந்தோர் கற்றோரே. 4

---

3. பல் இயல் பாணி - பலவாய் நிகழும் பாடல். எல்லி - இரவு. கொல்லை - முல்லை நிலக் காடு. மௌவல் - காட்டு மல்லிகை. கல் இயல் இஞ்சி - கல்லால் அமைந்த மதில், மலை போல் அமைந்த மதில். மஞ்சு - மேகம்.

4. தரு - மரம். துங்கம் - உயர்ச்சி. மரு வளர் கோதை - மணம் மிகும் மலர் மாலை போன்ற பெண்ணாகிய உமை. உரு - தெய்வத்தன்மை கண்டு உண்டாம் அச்சம். அச்சம் மிகுவதற்கு ஏதுவான தெய்வத் தன்மை பொருந்திய ஆல். உரை செய்தார் - உண்மையை விளக்கினார். கரு - எல்லாவற்றுக்கும் மூலமான சிவ பரம் பொருள்.

மறு மாண் உருஆய் மற்று இணை இன்றி, வானோரைச்
செறு மாவலிபால் சென்று, உலகு எல்லாம் அளவிட்ட
குறு மாண் உருவன், தற்குறியாகக் கொண்டாடும்
கறு மா கண்டன் மேயது – கண்ணார்கோயிலே. 5

விண்ணவருக்குஆய் வேலையுள் நஞ்சம் விருப்பாக
உண்ணவனைத், தேவர்க்கு அமுது ஈந்து, எவ்உலகிற்கும்
கண்ணவனைக் கண்ணார் திகழ் கோயில் கனிதன்னை,
நண்ண வல்லோர்கட்கு இல்லை, நமன்பால் நடலையே. 6

5: மறு மாண் உருவாய் – கருத்தில் கள்ளமாகிய குற்றம் சிறந்ததோர் உருவம் கொண்டு. செறும் - வருத்திய. மாவலி - மாவலி என்னும் மன்னன். குறு மாண் உருவன் - குறள் உருவன். வாமன அவதாரச் செய்தி. தன் குறி - தனது அருட்குறியாகிய சிவலிங்கத் திருமேனி. கறுமா கண்டன் - நீல கண்டன்.

6: வேலை - கடல். உண்ணவன் - உண்டவன்; நடலை - துன்பம்.

" முன் ஒரு காலத்து இந்திரன் உற்ற முனிசாபம்,
பின் ஒரு நாள் அவ் விண்ணவர் ஏத்தப், பெயர்வு எய்தித்,
தன் அருளால் கண் ஆயிரம் ஈந்தோன் சார்பு" என்பர் –
கன்னியர் நாளும் துன் அமர் கண்ணார்கோயிலே. 7

" பெருக்கு எண்ணாத பேதை அரக்கன் வரைக்கீழால்
நெருக்குண்ணாத், தன் நீள்கழல் நெஞ்சில் நினைந்து ஏத்த,
முருக்குண்ணாது ஓர் மொய் கதிர் வாள், தேர், முன் ஈந்த
திருக்கண்ணார் " என்பார் சிவலோகம் சேர்வாரே. 8

---

7. முனி சாபம் - கோதம முனிவரால் அடைந்த சாபம். பெயர்வு எய்தி - மாற்றம் அடைந்து. இத் தலத்து வழிபட்டு ஆயிரம் கண்ணைப் பெற அருள் செய்த இறைவன் சிவபெருமான். சார்பு - எழுந்தருளியுள்ள இடம். துன் அமர் - கூடியிருக்கும்.

8. பெருக்கு - சிவனது பெருமை. பேதை அரக்கன் - அறிவில்லாத இராவணன். நெருக்குண்ணா- நெருக்குண்டு; நீள் கழல் - நிலைப் பொருளான திருவடி. முருக்குண்ணாத - தோல்வி அடையாத.

செங்கமலப் போதில் திகழ் செல்வன், திருமாலும் ::
அங்கு அ(ம்)மலக் கண் நோக்க(அ)ரும் வண்ணத்து அழல் ஆனன்
தங்கு அமலக் கண்ணார்திகழ்கோயில் தமது உள்ளத்து
அங்கு அமலத்தோடு ஏத்திட, அண்டத்து அமர்வாரே. 9

தாறு இடு பெண்ணைத் தட்டுஉடையாரும், தாம் உண்ணும்
சோறு உடையார் சொல் தேறன்மின் ! வெண்நூல் சேர் மார்பன்,
ஏறு உடையன், பரன், என்பு அணிவான், நீள்சடைமேல் ஓர்
ஆறு உடை அண்ணல், சேர்வது • கண்ணார்கோயிலே. 10

காமரு கண்ணார்கோயில் உளானை, கடல் சூழ்ந்த
பூ மரு சோலைப் பொன் இயல் மாடப் புகலிக் கோன் -
நா மரு தொன்மைத்தன்மை உள் ஞானசம்பந்தன் -
பா மரு பாடல் பத்தும் வல்லார்மேல் பழி போமே. 11

திருச்சிற்றம்பலம்

---

9. அங்கு அம் மலக்கண் நோக்கு அரும் வண்ணம் – அவ்விடத்து அவர் ஊனக்கண் பார்வைக்கு அகப்படாதபடி. அமலத்தோடு – மலம் நீங்கியவராய்

10. தாறு - குலை. பெண்ணை - பனை. தட்டு - ஓலைத் தடுக்கு. தேறல் மின் - பொருளெனக் கொள்ளாதீர்.

11. காமரு - அழகிய. பா மரு பாடல் - பரந்து பட்டு வரும் ஓசை பொருந்திய பாடல், இசையொடு பொருந்திய பாடல்.

1 : 102

சீகாழி

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

"உரவு ஆர் கலையின் கவிதைப் புலவர்க்கு, ஒருநாளும்
கரவா வண்கைக் கற்றவர் சேரும் கலிக் காழி
அரவு ஆர் அரையா ! அவுணர் புரம் மூன்று எரிசெய்த
சரவா !" என்பார் தத்துவ ஞானத் தலையாரே. 1

"மொய் சேர் வண்டு உண் மும்மதம் நால்வாய் முரண் வேழக்
கைபோல் வாழை காய்குலை ஈனும் கலிக் காழி
மை சேர் கண்டத்து எண்தோள் முக்கண் மறையோனே!
ஐயா !" என்பார்க்கு அல்லல்கள் ஆன அடையாவே. 2

---

1. உரவு - அறிவு வன்மை. கரவா வண்கை - ஒளிக்காமல் கொடுக்கும் கொடைத்தன்மை உடைய கை. கலி - மகிழ்ச்சி ஆரவாரம். அரவு ஆர் அரையா!- பாம்பைக் கட்டியுள்ள அரையை உடையவனே !; சரவா ! - அம்பை உடையாய் !

2. மும்மதம் - யானையின் கன்னம், கரடம், ஆணுறுப்பு ஆகிய மூன்றிடத்தும் ஒழுகும் மத நீர். நால் வாய் – தொங்குகின்ற வாய். முரண் வேழக் கை - வலிமை யுடைய ஆண்யானையின் துதிக்கை. மை - இருள்நிறம்.

''இளகக் கமலத்து ஈன்கள் இயங்கும் கழி சூழக்,
களகப் புரிசைக் கவின் ஆர் சாரும் கலிக் காழி,
அளகத் திரு நல்நுதலி பங்கா! அரனே! '' என்று
உளகப் பாடும் அடியார்க்கு உறு நோய் அடையாவே. 3

'' எண் ஆர் முத்தம் ஈன்று, மரகதம் போல் காய்த்து,
கண் ஆர் கமுகு பவளம் பழுக்கும் கலிக் காழி,
பெண் ஓர்பாகா! பித்தா ! பிரானே! '' என்பார்க்கு
நண்ணா, வினைகள் ; நாள்தொறும் இன்பம்
நணுகு(ம்)மே. 4

---

3. இளகக் கமலம் - முறுக்கு அவிழ்ந்து மலரும் தாமரை மலர். ஈன் கள் இயங்கும் - மலரிலிருந்து வெளிப்பட்ட தேன் ஓடும். களகப் புரிசை - சாந்து பூசப்பெற்ற மதில். கவின் - அழகு. அளகம் - கூந்தல். நல் நுதலி - அழகிய நெற்றியை உடையாள். உள் அகப்பாடும் - மனம் பொருந்திநின்று பாடும்.

4. எண் ஆர் முத்தம் - நினைக்கத் தக்க முத்து. மரகதம் - பச்சைக் கல். கண் ஆர் கமுகு - கண்ணுக்கு இனிய பாக்குமரம். பவளம் பழுக்கும் - பவளம் போல் செந் நிறமாகப் பழுக்கும்.

“ மழை ஆர் சாரல் செம்புனல் வந்து அங்கு அடி வருடக்,
கழை ஆர் கரும்பு கண்வளர் சோலைக் கலிக் காழி,
உழை ஆர் கரவா ! உமையாள் கணவா ! ஒளிர் சங்கக்
குழையா ! ” என்று கூறவல்லார்கள் குணவோரே.

“ குறி ஆர் திரைகள் வரைகள் நின்றும் கோட்டாறு
கறி ஆர் கழி சம்புஇரசம் கொடுக்கும் கலிக் காழி,
வெறி ஆர் கொன்றைச் சடையா ! விடையா ! ”
என்பாரை,
அறியா, வினைகள்; அருநோய், பாவம் அடையாவே. 6

... . 7

---

5. மழை ஆர் சாரல் - மழை பெய்த மலைச் சாரல். செம்புனல் – செந்நிறம் பெற்ற நீர். கழை ஆர் கரும்பு - மூங்கில் போலப் பருத்த கரும்பு. உழை - மான். கரவா - கையை உடையவனே!

6. வரைகள் நின்றும் - மலைகளிலிருந்தும்- கோட்டு ஆறு – கரை பொருந்திய ஆறுகள். கறி ஆர் கழி சம்பிரசம் கொடுக்கும் - மிளகில் இருந்து கழிக்கப்பட்ட சம்பிரசத்தைக் கொடுக்கும். வெறி- மணம்.

7. ... ...

"உலம் கொள் சங்கத்து ஆர்கலி ஓதத்து உதையுண்டு,
கலங்கள் வந்து கார்வயல் ஏறும் கலிக் காழி.
இலங்கை மன்னன் தன்னை இடர் கண்டு அருள்செய்த
சலம் கொள் சென்னி மன்னா!" என்னத்தவம் ஆமே. 8

"ஆவிக் கமலத்து அன்னம் இயங்கும் கழி சூழக்,
காவிக் கண்ணார் மங்கலம் ஓவாக் கலிக் காழிப்,
பூவில் தோன்றும் புத்தேளொடு மாலவன்தானும்
மேவிப் பரவும் அரசே!" என்ன, வினைபோமே. 9

---

8. உலம் கொள் சங்கம் - திரட்சி உடைய சங்குகள். ஆர் கலி ஓதம் - கடல் நீர். உதையுண்டு - தள்ளப்பட்டு. கலங்கள் - தோணிகள். கார் வயல் - பசுமை பொருந்திய வயல். சலம் - கங்கை நீர்.

9. ஆவி - பொய்கை. கமலம் - தாமரை. காவி - நீல மலர். ஓவா - நீங்காத. பூவில் தோன்றும் புத்தேள் - நான்முகன்.

"மலை ஆர் மாடம், நீடுஉயர் இஞ்சி, மஞ்சு ஆரும்
கலை ஆர் மதியம் சேர்தரும் அம்தண் கலிக்காழித்
தலைவா! சமணர் சாக்கியர்க்கு என்றும் அறிவு ஒண்ணா
நிலையாய்!" என்னத், தொல்வினை ஆய நில்லாவே. 10

வடி கொள் வாவிச் செங்கழுநீரில் கொங்கு ஆடிக்
கடி கொள் தென்றல் முன்றிலில் வைகும் கலிக் காழி
அடிகள்தம்மை, அந்தம் இல் ஞானசம்பந்தன்
படி கொள் பாடல் வல்லவர்தம்மேல் பழி போமே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. இஞ்சி - மதில். மஞ்சு - மேகம். கலை ஆர் மதியம் - கலைகள் நிரம்பிய மதி.

11. கொங்கு ஆடி - தேனில் துளைந்து. கடி - மணம். முன்றில் - முற்றம்.

1 : 103 திருக்கழுக்குன்றம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

தோடு உடையான் ஒரு காதில், தூய குழை தாழ,
ஏடு உடையான், தலை கலன் ஆக இரந்து உண்ணும்
நாடு உடையான் நள்இருள் ஏமம் நடம் ஆடும்
காடு உடையான், காதல்செய் கோயில் - கழுக்குன்றே. 1

கேண வல்லான், கேழல்வெண்கொம்பு; குறள்ஆமை
பூண வல்லான்; புரிசடைமேல் ஓர் புனல், கொன்றை,
பேண வல்லான்; பெண்மகள் தன்னை ஒருபாகம்
காண வல்லான் காதல்செய் கோயில் - கழுக்குன்றே. 2

தேன் அகத்து ஆர் வண்டு அது உண்ட திகழ் கொன்றை -
தான் நக, தார்; தண்மதி சூடி, தலைமேல்; ஓர்
வானகத்தார் வையகத்தார்கள் தொழுது ஏத்தும்
கானகத்தான் காதல்செய் கோயில் - கழுக்குன்றே. 3

---

1. ஏடு - மலர். கலன் - உணவுப் பாத்திரம். இரந்து - பிச்சை ஏற்று. ஏம நடம் - இன்பக் கூத்து.

2. கேண - கொள்ள. கேழல் - திருமாலாகிய பன்றி. புனலும் கொன்றையும் பேண வல்லவன். காண - ஆக்கிக் கொள்ள. காதல் செய் - விரும்பிய.

3. வண்டு அகத்து ஆர் தேன் உண்ட கொன்றை நக. நக-மலர்ந்து விளங்க. வானகத்தார்-விண்ணோர். வையகத்தார் - மண்ணுலகத்தார்.

துணையல் செய்தான், தூய வண்டு யாழ்செய் சுடர்க் கொன்றை
பிணையல் செய்தான், பெண்ணின் நல்லாளை ஒருபாகம்
இணையல்செய்யா, இலங்கு எயில்மூன்றும் எரியுண்ணக்
கணையல்செய்தான் காதல்செய் கோயில் – கழுக்குன்றே, 4

பை உடைய பாம்பொடு நீறு பயில்கின்ற
மெய் உடையான், வெண்பிறைசூடி, விரிகொன்ற
மை உடைய மா மிடற்று அண்ணல், மறி சேர்ந்த
கை உடையான் காதல்செய் கோயில் - கழுக்குன்றே. 5

வெள்ளம்எல்லாம் விரிசடைமேல் ஓர் விரிகொன்றை
கொள்ள வல்லான், குரைகழல்ஏத்தும் சிறுத்தொண்டர்
உள்ளம்எல்லாம் உள்கி நின்று ஆங்கே உடன் ஆடும்
கள்ளம் வல்லான் காதல்செய் கோயில் - கழுக்குன்றே. 6

---

4. துணையல் - மாலை வகை. கொன்றைத் துணையல் செய்தான் - கொன்றை மாலை அணிந்தான்; பிணையல் செய்தான் - சேர்த்துக் கொண்டான்: இணையல் செய்யா – உறவாக்கிக் கொள்ளாத பகைவர். கணையல் செய்தான் - அம்புகொண்டு எய்தவன்.

5. பை - பாம்பு. பயில்கின்ற - பொருந்தியுள்ள. மை - இருண்ட நிறம். மறி - மான்கன்று.

6. வெள்ளம் - கங்கை. குரை கழல் - ஒலிக்கும் கழலை அணிந்துள்ள திருவடி. உள்கி - எண்ணி. கள்ளம் - தன்னைக் காட்டிக் கொள்ளாமை.

... ... 7

ஆதல் செய்தான்: அரக்கர்தம் கோனை அரு வரையின்
நோதல் செய்தான், நொடிவரையின்கண் விரல் ஊன்றிப்;
பேர்தல் செய்தான்; பெண்மகள்தன்னோடு ஒருபாகம்
காதல் செய்தான் காதல்செய் கோயில் - கழுக்குன்றே. 8

இடந்த பெம்மான் ஏனம்அதுஆயும், அனம்ஆயும்,
தொடர்ந்த பெம்மான்; தூமதிசூடி; வரையார்தம்
மடந்தை பெம்மான்; வார்கழல் ஓச்சிக் காலனைக்
கடந்த பெம்மான் காதல்செய் கோயில் - கழுக்குன்றே. 9

---

7. ... ...

8. ஆதல் செய்தான் - தன் செருக்கினால் ஆம் செயலைச் செய்தவன். நோதல் - வருந்தல். நொடி வரையின் - கணப்பொழுதில். பேர்தல் செய்தான் - செருக்கு ஒழிந்து மாறச் செய்தான்.

9. ஏனம் அது ஆய் இடந்த பெம்மான் - பன்றி வடிவு கொண்டு நிலத்தைக் கிளறிச் சென்ற பெரியோனான திருமால். அ(ன்)னம் ஆய்த்தொடர்ந்த பெம்மான் - நான்முகன். வரையார் - இமய அரசன். ஓச்சி - உதைத்து. கடந்த - அடக்கிய.

தேய நின்றான் திரிபுரம், கங்கை சடைமேலே
பாய நின்றான், பலர் புகழ்ந்து ஏத்த உலகுஎல்லாம்
சாய நின்றான், வன்சமண்குண்டர் சாக்கீயர்
காய நின்றான் காதல்செய் கோயில் - கழுக்குன்றே, 10

கண்நுதலான் காதல்செய் கோயில் கழுக்குன்றை.
நண்ணிய சீர் ஞானசம்பந்தன் தமிழ்மாலை,
பண் இயல்பால் பாடிய பத்தும் இவை வல்லார்
புண்ணியராய் விண்ணவரோடும் புகுவாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. தேய - அழிய. உலகெல்லாம் சாய-எல்லாம் தன்பால் ஒடுங்க. சாய - நுண்நிலையாகிய அருவ நிலையை அடைய.

1 : 104 திருப்புகலி

பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

ஆடல் அரவு அசைத்தான், அருமாமறைதான் விரித்தான், கொன்றை
சூடிய செஞ்சடையான், சுடுகாடு அமர்ந்த பிரான்,
ஏடு அவிழ் மாமலையாள் ஒருபாகம் அமர்ந்து அடியார் ஏத்த
ஆடிய எம் இறை, ஊர் - புகலிப்பதி ஆமே. 1

ஏலம் மலி குழலார் இசைபாடி எழுந்து, அருளால் சென்று,
சோலை மலி சுனையில் குடைந்து ஆடித் துதிசெய்ய,
ஆலை மலி புகை போய் அண்டர்வானத்தை மூடி நின்று நல்ல
மாலைஅது செய்யும் புகலிப்பதி ஆமே. 2

---

1. அசைத்தான் - கட்டியவன். ஏடு அவிழ் - இதழ் விரிந்த மலரின் இடமாத் தோன்றிய.

2. ஏலம் - மயிர்ச் சாந்து. மாலையது செய்யும் - மாலைக் காலம் போல ஆக்கும்.

ஆறு அணி செஞ்சடையான்; அழகு ஆர் புரம்மூன்றும்
அன்று வேவ,
நீறு அணிஆக வைத்த நிமிர்புன்சடை எம் இறைவன்;
பாறு அணி வெண்தலையில் பகலே "பலி" என்று
வந்து நின்ற
வேறு அணி கோலத்தினன் விரும்பும் புகலிஅதே. 3

வெள்ளம்அது சடைமேல் கரந்தான், விரவார்
புரங்கள் மூன்றும்
கொள்ள எரி மடுத்தான், குறைவு இன்றி உறை கோயில் —
அள்ளல் விளை கழனி அழகு ஆர் விரைத் தாமரைமேல்
அன்னப்
புள்இனம் வைகி எழும் புகலிப்பதிதானே. 4

சூடும் மதிச் சடைமேல் சுரும்பு ஆர் மலர்க்கொன்றை
துன்ற, நட்டம்
ஆடும் அமரர் பிரான், அழகு ஆர் உமையோடும் உடன்
வேடுபட நடந்த விகிர்தன், குணம் பரவித் தொண்டர்
பாட, இனிது உறையும் புகலிப்பதி ஆமே. 5

---

3. பாறு - பருந்து. வேறு அணி கோலம் - பிச்சை ஏற்பார் வேடம்.

4. அள்ளல் - சேறு. கழனி - வயல்.

5. துன்ற - பொருந்த. வேடு - வேடன் தோற்றம்.

மைந்து அணி சோலையின்வாய் மதுப் பாய் வரிவண்டு
இனங்கள் வந்து
நந்துஇசை பாட, நடம் பயில்கின்ற நம்பன் இடம் -
அந்தி செய் மந்திரத்தால் அடியார்கள் பரவி எழ, விரும்பும்
புந்திசெய் நால்மறையோர் புகலிப்பதிதானே, 6

மங்கை ஓர்கூறு உகந்த மழுவாளன், வார்சடைமேல்
திங்கள்,
கங்கைதனைக் கரந்த கறைக்கண்டன் கருதும் இடம் -
செங்கயல் வார் கழனி திகழும் புகலிதனைச் சென்று, தம்
அம்கையினுல் தொழுவார் அவலம் அறியாரே. 7

வில் இயல் நுண் இடையாள் உமையாள் விருப்பன்
அவன் நண்ணும்
நல் இடம் என்று அறியான் நலியும் விறல் அரக்கன்
பல்லொடு தோள் நெரிய விரல்ஊன்றிப், பாட்லுமே,
கை வாள்
ஒல்லை அருள்புரிந்தான் உறையும் புகலிஅதே. 8

---

6. மைந்து - இளமை. வாய் - இடம். மது - தேன்: நந்து இசை - ஆக்கமான இசை. மேன்மேல் தொடர் இசை. அந்தி செய் மந்திரம் - காலை மாலை அந்திக் கடன்களில் ஓதும் மந்திரம். புந்திசெய் - சிந்திக்கும்.

7. கரந்த - அடக்கிக் கொண்ட. அவலம் - வருத்தம்.

8. நல்லிடம் - திருக்கயிலை. நலியும் - இடையூறு விளைத்த.

தாது அலர்தாமரைமேல் அயனும் திருமாலும் தேடி
ஓதியும் காண்பு அரிய உமைகோன் உறையும் இடம் -
மாதவி, வான் வகுளம், மலர்ந்து எங்கும் விரை
தோய, வாய்ந்த
போது அலர் சோலைகள் சூழ் புகலிப்பதிதானே. 9

வெந்துவர் மேனியினர், விரிகோவணம் நீத்தார் சொல்லும்
அந்தர ஞானம் எல்லாம் அவை ஓர் பொருள் என்னேல்!
வந்து எதிரும் புரம் மூன்று எரித்தான் உறை கோயில்
– வாய்ந்த
புந்தியினர் பயிலும் புகலிப்பதிதானே. 10

---

9. தாது - மகரந்தம். மாதவி - குருக்கத்தி வகுளம் - மகிழ், விரை - மணம். போது அலர் - பூக்கள் மலரும்.

10. வெம் துவர் - வெப்பம் தரும் காவி ஆடை. கோவணம் நீத்தார் - கோவண ஆடை நீக்கினவர். அந்தர ஞானம் - வெற்றுரை, வெளிற்றுரை. எதிரும்- போரில் முனைந்து நிற்கும். வாய்ந்த புந்தியினர் - மெய்யுணர்வு உடையார். பயிலும் - கூடியிருக்கும்.

வேதம் ஓர் கீதம் உணர்வாணர் தொழுது ஏத்த, மிகு வாசப்
போதனைப் போல் மறையோர் பயிலும் புகலிதன்னுள்
நாதனை, ஞானம் மிகு சம்பந்தன் தமிழ்மாலை நாவில்
ஓத வல்லார் உலகில் உறு நோய் களைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. வேதம் ஓர் கீதம் உணர் வாணர் - வேத கீதம் உணர்ந்த வாழ்க்கையை உடையவர். வாசப் போதன் - மணமுடைய தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகன்.

1 : 105

திருஆரூர்

பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பாட்லன் நால்மறையன்; படிபட்ட கோலத்தன்; திங்கள்
சூடலன்; மூஇலையசூலம் வலன் ஏந்தி;
கூடலர் மூஎயிலும் (ம்) எரியுண்ணக், கூர் எரிகொண்டு,
எல்லி
ஆடலன்; ஆதிரையன் – ஆரூர் அமர்ந்தானே. 1

சோலையில் வண்டு இனங்கள் சுரும்போடு இசை முரலச்,
சூழ்ந்த
ஆலையின் வெம்புகை போய் முகில் தோயும் ஆரூரில்,
பாலொடு நெய் தயிரும் பயின்று ஆடும் பரமேட்டி பாதம்,
காலையும் மாலையும் போய்ப் பணிதல் கருமமே. 2

1: நான் மறை பாடலன் என்க. படிபட்ட - ஒப்பு அற்ற; சூடலன் - சூடியவன். வலன் - வலக் கையில் வெற்றியுடன். கூடலர் – பகைவர். கூர் எரி - மிக்க தீ. எல்லி - இரவில்.

2. முரல - ஒலிக்க. ஆலை - கரும்பு ஆலை. வெம் - வெப்பமான. முகில் - மேகம். பரமேட்டி - சிவ பெருமான். கருமம் - செய்யத்தக்க கடமை.

உள்ளம் ஓர் இச்சையினுல் உகந்து ஏந்தித் தொழுமின்,
தொண்டீர் ! மெய்யே
கள்ளம் ஒழிந்திடுமின் ! கரவாது இருபொழுதும்,
வெள்ளம் ஓர் வார்சடைமேல் கரந்திட்ட வெள்
ஏற்றுன் மேய,
அள்ளல் அகன் கழனி ஆரூர் அடைவோமே, 3

வெந்துஉறு வெண்மழு வாள் படையான், மணி
மிடற்றுன், அரையின்
ஐந்தலை ஆடு அரவம் அசைத்தான், அணி ஆரூர்ப்
பைந்தளிர்க் கொன்றை அம் தார்ப் பரமன் (ன்)அடி
பரவப், பாவம்
நைந்து அறும்; வந்து அணையும் நாள்தொறும்
நல்லனவே. 4

வீடு பிறப்பு எளிதுஆம் ; அதனை வினவுதிரேல், வெய்ய
காடு இடம் ஆக நின்று கனல் ஏந்திக் கைவீசி
ஆடும் அவிர்சடையான் அவன் மேய ஆரூரைச் சென்று
பாடுதல், கைதொழுதல், பணிதல் கருமமே. 5

---

3. இச்சை - விருப்பம். உகந்து - உயர்த்தி, மகிழ்ந்து. கரவாது - உள்ளத்தில் மறைக்காமல். ஏற்றுன் - எருதினை உடையவன்.

4. நைந்து அறும் - வலிமை இழந்து ஒழிந்து விடும்.

5. வீடு பிறப்பு எளிது - பிறப்பு வீடு எளிது - பிறப்பினைத் தவிர்தல் எளியது. அதனை - அதற்குரிய வழியை. பாடுதலும் கை தொழுதலும் பணிதலும்.

கங்கை ஓர் வார்சடைமேல் கரந்தான், கிளி மழலைக்
கேடு இல்
மங்கை ஓர் கூறு உடையான், மறையான், மழு ஏந்தும்
அம் கையினான், அடியே பரவி, அவன் மேய ஆரூர்
தம் கையினால் தொழுவார் தடுமாற்று அறுப்பாரே. 6

நீறு அணி மேனியனாய், நிரம்பா மதி சூடி, நீண்ட
ஆறு அணி வார்சடையான், ஆரூர் இனிது அமர்ந்தான்;
சேறு அணி மா மலர்மேல் பிரமன் சிரம் அரிந்த,
செங்கண்
ஏறு அணி வெல் கொடியான் அவன் – எம்பெருமானே, 7

... ... 8

வல்லியந் தோல் உடையான், வளர்திங்கள்
கண்ணியினான், வாய்த்த
நல் இயல் நான்முகத்தோன் தலையில் நறவு ஏற்றான்,
அல்லி அம்கோதைதன்னை ஆகத்து அமர்ந்து அருளி,
ஆரூர்ப்
புல்லிய புண்ணியனைத் தொழுவாரும் புண்ணியரே, 9

---

6. ... ...

7. நிரம்பா மதி - பிறை மதி.

8. ... ...

9. வல்லியம் - புலி. நறவு - அமுதம். அல்லியம் கோதை - நீலோற்பல அம்மையார். புல்லிய - பொருந்திய.

செந்துவர் ஆடையினர், உடை விட்டு நின்று உழல்வார்,
சொன்ன
இந்திரஞாலம் ஒழிந்து, இன்பு உற வேண்டுதிரேல்,
அந்தர மூஎயிலும் (ம்) அரணம் எரியூட்டி, ஆரூர்த்
தம் திரமா உடையான் அவன் எம் தலைமையனே. 10

நல்ல புனல் புகலித் தமிழ் ஞானசம்பந்தன், நல்ல
அல்லிமலர்க் கழனி ஆரூர் அமர்ந்தானை,
வல்லது ஓர் இச்சையினால், வழிபாடு இவைபத்தும்
வாய்க்கச்
சொல்லுதல், கேட்டல், வல்லார் துன்பம்
துடைப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. இந்திர ஞாலம் – மெய்யல்லாத வெற்றுரை. அந்தரம் – வானம். அரணம் – கோட்டை, காவல். திரம் – நிலையான இடம்.

11. வல்லது ஓர் இச்சை – அழுத்தமான அன்பு அல்லது விருப்பம்.

1 : 106

திருஊறல்

பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மாறு இல் அவுணர் அரணம் (ம்)அவை மாய, ஓர்
வெங்கணையால், அன்று,
நீறு எழ எய்த எங்கள் நிமலன் இடம் வினவில்-
தேறல் இரும் பொழிலும், திகழ் செங்கயல் பாய்
வயலும், சூழ்ந்த
ஊறல் அமர்ந்த பிரான் ஒலி ஆர் கழல் உள்குதுமே. 1

மத்தமதக்கரியை, மலையான்மகள் அஞ்ச, அன்று, கையால்
மெத்த உரித்த எங்கள் விமலன் விரும்பும் இடம்—
தொத்து அலரும் பொழில் சூழ் வயல் சேர்ந்து, ஒளிர்
நீலம் நாளும் நயனம்
ஒத்து அலரும் கழனி—திரு ஊறலை உள்குதுமே. 2

---

1. மாறு - ஒத்தது. வெம் கணை - கொடிய அம்பு. நீறு எழ - சாம்பர் ஆக. தேறல் - தேன். இரும் - பெரிய.

2. மத்தம் - களிப்பு. மெத்த - மிகவும். தொத்து- கொத்து. அலரும் - மலரும். நீலம் - நீலமலர். நயனம்- கண். கழனி - வயல்.

ஏனமருப்பினொடும் எழில் ஆமையும் பூண்ட் அழகார்,
நன்றும்
கான் அமர் மான்மறிக் கைக் கடவுள், கருதும் இடம்—
வானமதி தடவும் வளர் சோலைகள் சூழ்ந்து, அழகு ஆர்,
நம்மை
ஊனம் அறுத்த பிரான்—திரு ஊறலை உள்குதுமே. 3

நெய் அணி மூஇலைவேல், நிறை வெண்மழுவும்(ம்),
அனலும், அன்று,
கை அணி கொள்கையினுன் கடவுள் இடம் வினவில்—
மை அணி! கண் மடவார் பலர் வந்து இறைஞ்ச, மன்னி
நம்மை
உய்யும் வகை புரிந்தான்—திரு ஊறலை உள்குதுமே. 4

எண்திசையோர் மகிழ, எழில் மாலையும் போனகமும்,
பண்டு,
சண்டி தொழ அளித்தான் அவன் தாழும் இடம் வினவில்—
கொண்டல்கள் தங்கும் பொழில் குளிர்பொய்கைகள்
சூழ்ந்து, நஞ்சை
உண்ட் பிரான் அமரும்—திரு ஊறலை உள்குதுமே. 5

---

3. மருப்பு - கொம்பு. ஊனம் - குற்றம், உயிர்க் குற்றமாகிய மலம்.

4. நெய் - எண்ணெய். உய்யும் வகை - பாசக் கட்டிலிருந்தும் விடுபட்டுச் செல்லும் வகை.

5. போனகம் - உணவு. சண்டி - சண்டீசர். தாழும் இடம் - தங்கியுள்ள ஊர். கொண்டல் - மேகம்.

... . 6, 7

கறுத்த மனத்தினொடும் கடுங்காலன் வந்து எய்துதலும்,
கலங்கி,
மறுக்குஉறும் மாணிக்கு அருள மகிழ்ந்தான் இடம்
வினவில் -
செறுத்து எழு வாள் அரக்கன் சிரம் தோளும் மெய்யும்
நெரிய அன்று
ஒறுத்து, அருள்செய்த பிரான்-திருஊறலை உள்குதுமே. 8

நீரின்மிசைத் துயின்றோன் நிறை நான்முகனும் அறியாது,
அன்று,
தேரும் வகை நிமிர்ந்தான் அவன் சேரும் இடம் வினவில் -
பாரின்மிசை அடியார் பலர் வந்து இறைஞ்ச, மகிழ்ந்து,
ஆகம்
ஊரும் அரவு அசைத்தான்—திரு ஊறலை உள்குதுமே. 9

---

6. 7. ... ...

8. கறுத்த - சினம் கொண்ட. மறுக்கு உறும் - மயங்கிய. மாணி - இளையானாகிய மார்க்கண்டன். செறுத்து - கோபங் கொண்டு. ஒறுத்து - தண்டித்து. உள்குதும் - நினைக்கின்றோம்.

9. நீரின் மிசைத் துயின்றோன் - பாற் கடலில் பள்ளி கொண்ட திருமால். தேரும் வகை - ஆராயும் படி. பாரின் மிசை - நிலவுலகத்தின்மேல். ஆகம் - உடம்பு. ஊரும் அரவு - ஊர்தலையுடைய பாம்பு. அசைத்தான் - கட்டியவன்.

பொன் இயல் சீவரத்தார், புளித்தட்டையர், மோட்டு
அமணர்குண்டர்,
என்னும் இவர்க்கு அருளா ஈசன் இடம் வினவில் –
தென்னென வண்டு இனங்கள் செறி ஆர் பொழில் சூழ்ந்து,
அழகு ஆர், தன்னை
உன்ன வினை கெடுப்பான்—திரு ஊறலை உள்குதுமே. 10

கோடல் இரும் புறவில் கொடிமாடக் கொச்சையர்மன்,
ஓடுபுனல் சடைமேல் கரந்தான் திரு ஊறல், [மெச்ச
நாடல் அரும்புகழான் மிகு ஞானசம்பந்தன், சொன்னநல்ல
பாடல்கள் பத்தும் வல்லார் பரலோகத்து இருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. பொன்னியல் - பொன் போன்ற நிறம் உடைய. சீவரத்தர் - காவி ஆடை அணிந்தவர். புளித்தட்டையர் - புளித்த பழஞ் சோற்றைத் தட்டில் இட்டு உண்பவர். உன்ன - இடையறுது நினைக்க. வினை கெடுப்பான் - வினைக் கட்டை ஒழிப்பவன்.

11. கோடல் - செங்காந்தள்: இரும் புறவு - பெரிய நகராகிய சீகாழி. கொச்சையர் - சீகாழி மக்கள். மன் - தலைவன். நாடல் அரும் புகழ் - தேடிப் பெறுதற்கு அரிய புகழ். பரலோகம் - உயர்ந்த உலகம்.

1:107 திருக்கொடிமாடச்செங்குன்றூர்

பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

வெந்த வெண்நீறு அணிந்து, விரிநூல் திகழ் மார்பில் நல்ல
பந்து அணவும் விரலாள் ஒருபாகம் அமர்ந்துஅருளி,
கொந்து அணவும் பொழில் சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
அந்தணனைத் தொழுவார் அவலம் அறுப்பாரே. 1

அலை மலி தண்புனலோடு அரவம் சடைக்கு அணிந்து,
ஆகம்
மலைமகள் கூறு உடையான், மலை ஆர் இள வாழைக்
குலை மலி தண்பொழில் சூழ் கொடிமாடச் செங்குன்றூர்
நின்ற
தலைமகனைத் தொழுவார் தடுமாற்று அறுப்பாரே. 2

பால் அன நீறு புனை திருமார்பில், பல்வளைக்கை நல்ல
ஏலமலர்க் குழலாள் ஒருபாகம் அமர்ந்து அருளி,
கோல மலர்ப்பொழில் சூழ் கொடிமாடச் செங்குன்றூர்
மல்கும்
நீல நல் மாமிடற்றன் கழல் ஏத்தல் நீதியே.

---

1. அணவும்-பொருந்தும். கொந்து-பூங்கொத்து
கொடிமாடம் - கொடிகளை உடைய மாடம்.

2. ... ...

3. வார் - கச்சு. கார் - கார்காலம். கதம் - கோபம்.

வார் உறு கொங்கை நல்ல மடவாள் திகழ்
மார்பில், நண்ணும்
கார் உறு கொன்றையொடும் கதநாகம் பூண்டுஅருளி,
சீர் உறும் அந்தணர் வாழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
நீர் உறு செஞ்சடையான் கழல் ஏத்தல் நீதியே. 4

பொன் திகழ் ஆமையொடு புரிநூல் திகழ் மார்பில், நல்ல
பன்றியின் கொம்பு அணிந்து, பணைத்தோளி ஓர்பாகம்
ஆக,
குன்று அன மாளிகை சூழ் கொடிமாடச் செங்குன்றூர்,
வானில்
மின்திகழ் செஞ்சடையான் கழல் ஏத்தல்
மெய்ப்பொருளே. 5

ஓங்கிய மூஇலை நல் சூலம் ஒருகையன், சென்னி
தாங்கிய கங்கையொடு மதியம் சடைக்கு அணிந்து,
கோங்கு அணவும் பொழில் சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் வாய்ந்த
பாங்கன தாள் தொழுவார் வினைஆய பற்று அறுமே. 6

---

4. பணை - மூங்கில்.

5. மின் - ஒளி

6. ஓங்கிய - உயர்ந்த. பாங்கன் - தோழன்.

நீடு அலர் கொன்றையொடு நிமிர் புன்சடை தாழ,
வெள்ளை -
வாடல்உடை தலையில் பலி கொள்ளும் வாழ்க்கையனாய்,
கோடல் வளம் புறவில் கொடிமாடச் செங்குன்றூர்
நின்ற
சேடன தாள் தொழுவார் வினை ஆய தேயுமே. 7

மத்த நல் மாமலரும், மதியும் வளர் கொன்றை
உடன் துன்று
தொத்து அலர் செஞ்சடைமேல் துதைய உடன் சூடிக்,
கொத்து அலர் தண்பொழில் சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் மேய
தத்துவனைத் தொழுவார் தடுமாற்று அறுப்பாரே. 8

செம்பொனின் மேனியன் ஆம் பிரமன் திருமாலும்
தேட நின்ற
அம் பவளத்திரள் போல் ஒளிஆய ஆதிபிரான்,
கொம்பு அணவும் பொழில் சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் மேய
நம்பன தாள் தொழுவார் வினைஆய நாசமே. 9

---

7. வாடல் - வறட்சி. சேடன் - பெருமையை உடையவன்.

8. மத்தம் - ஊமத்தை. துன்று - கூடிய. தொத்து - கொத்து. அலர் - மலர்ந்த. துதைய - நெருங்க. உடன்-உடனாக; தத்துவன்-பொருளானவன்

9. கொம்பு-மரக்கிளைகள். அணவும்-செறிந்துள்ள.

போதியர் பிண்டியர் என்று இவர்கள் புறம்கூறும் பொய்ந்நூல்
ஓதிய கட்டுரை கேட்டு உழல்வீர்! வரிக்குயில்கள்
கோதிய தண்பொழில் சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
வேதியனைத் தொழ, நும்வினை ஆன வீடுமே. 10

அலைமலி தண்புனல் சூழ்ந்து அழகு ஆர் புகலி (ந்) நகர் பேணும்
தலைமகன்ஆகி நின்ற தமிழ் ஞானசம்பந்தன்,
கொலை மலி மூஇலையான் கொடிமாடச் செங்குன்றூர் ஏத்தும்
நலம்மலி பாடல் வல்லார் வினைஆன நாசமே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. போதியர் - புத்தர். பிண்டியர் – சமணர். போதி - போதி என்னும் மரம். பிண்டி - அசோக மரம். வீடும் - விட்டு நீங்கும்.

11. நாசம் - அழியும்.

1 : 108

திருப்பாதாளீச்சுரம்

பண்: வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மின் இயல் செஞ்சடைமேல் விளங்கும் மதி
மத்தமொடு நல்ல
பொன் இயல் கொன்றையினன்; புனல்சூடி;
பொற்பு அமரும்
அன்னம் அன நடையாள் ஒருபாகத்து அமர்ந்து
அருளி; நாளும்
பன்னிய பாடலினன் உறை கோயில் - பாதாளே. 1

நீடு அலர் கொன்றையொடு நிரம்பா மதி சூடி; வெள்ளைத்
தோடு அமர் காதில் நல்ல குழையான்; சுடுநீற்றன்;
ஆடு அரவம் பெருக அனல் ஏந்திக் கை வீசி, வேதம்
பாடலினல் இனியான் உறை கோயில் - பாதாளே. 2

---

1. பொற்பு அமரும் - அழகு பொருந்திய. பன்னிய - சொல்லிய.

2. ... ...

நாகமும் வான்மதியும் நலம் மல்கு செஞ்சடையான்,
சாமம்
போக நல் வில்வரையால் புரம் மூன்று எரித்து உகந்தான்,
தோகை நல் மாமயில் போல் வளர் சாயல் தூமொழியைக்
கூட்ப்
பாகமும் வைத்து உகந்தான் உறை கோயில் - பாதாளே. 3

அங்கமும் நால்மறையும் அருள்செய்து, அழகு ஆர்ந்த
அம் சொல்
மங்கை ஓர் கூறு உடையான், மறையோன், உறை
கோயில்-
செங்கயல் நின்று உகளும் செறுவில் திகழ்கின்ற சோதிப்
பங்கயம் நின்று அலரும் வயல் சூழ்ந்த பாதாளே. 4

பேய்பலவும் நிலவப் பெருங்காடு அரங்கு ஆக உன்னி
நின்று,
தீயொடு மான்மறியும் மழுவும் திகழ்வித்துத்,
தேய்பிறையும் அரவும் பொலி கொன்றைச் சடைதன்மேல்
சேரப்,
பாய்புனலும் உடையான் உறை கோயில் - பாதாளே. 5

---

3. சாமம் போக - காலம் கழியவே. 'வரை வில்லால்' என மாறுக. வரை - மலை.

4. அம்சொல் - அழகான பேச்சு. உகளும் - துள்ளும். செறு - வயல். சோதி - ஒளி. பங்கயம் - தாமரை.

5. உன்னி - நினைத்து.

கண் அமர் நெற்றியினன், கமழ்கொன்றைச் சடைதன்
மேல் நன்றும்
விண் இயல் மா மதியும் உடன்வைத்தவன், விரும்பும்
பெண் அமர் மேனியினன் பெருங்காடு அரங்குஆக ஆடும்
பண் இயல் பாடலினன் உறை கோயில் - பாதாளே. 6

விண்டு அலர் மத்தமொடு மிளிரும் இள நாகம், வன்னி,
திகழ்
வண்டு அலர்கொன்றை, நகு மதி புல்கு வார்சடையான்;
விண்டவர்தம் புரம் மூன்று எரிசெய்து, உரை வேதம்
நான்கும் அவை
பண்டு இசை பாடலினன் உறை கோயில் - பாதாளே. 7

மல்கிய நுண் இடையாள் உமை நங்கை மறுக,
அன்று, கையால்
தொல்லை மலை எடுத்த அரக்கன் தலைதோள் நெரித்தான்;
கொல்லை விடை உகந்தான்; குளிர்திங்கள் சடைக்கு
அணிந்தோன்;
பல் இசை பாடலினன் உறை கோயில் - பாதாளே. 8

---

6. விண்இயல் மதி-வானத்தில் இயங்கும் திங்கள்.

7. விண்டு - முறுக்கு அவிழ்ந்து. வன்னி - தீ. வண்டு அலர் - வண்டு மொய்க்கும். நகும் - மலரும். புல்கு - பொருந்திய. வார் சடையான் - நீண்ட சடை உடையவன். விண்டவர் - மாறுபட்ட பகைவர்.

8. மறுக - மயங்க. கொல்லை - முல்லை நிலம்.

தாமரைமேல் அயனும் அரியும் தமது ஆள்வினையால்
தேடிக்,
காமனை வீடுவித்தான் கழல் காண்பு இலராய் அகன்றார்;
பூ மருவும் குழலாள் உமை நங்கை பொருந்தியிட்ட நல்ல
பா மருவும் குணத்தான் உறை கோயில் - பாதாளே. 9

காலையில் உண்பவரும் சமண்கையரும் கட்டுரை விட்டு
அன்று
ஆலவிடம் நுகர்ந்தான் அவன்தன் அடியே பரவி,
மாலையில் வண்டுஇனங்கள் மது உண்டு இசை முரல,
வாய்த்த
பாலையாழ்ப் பாட்டு உகந்தான் உறை கோயில் -
பாதாளே. 10

பல்மலர் வைகு பொழில் புடை சூழ்ந்த பாதாளைச் சேர,
பொன் இயல் மாடம் மல்கு புகலி நகர் மன்னன்
தன் ஒளி மிக்கு உயர்ந்த தமிழ் ஞானசம்பந்தன் சொன்ன
இன் இசைபத்தும் வல்லார் எழில் வானத்து
இருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

9. ஆள்வினை - முயற்சி. காமன் - மன்மதன். வீடுவித்தான் - இறக்கச் செய்தான்.

10. கையர் - கீழோர். ஆல விடம் - ஆல கால நஞ்சு. நுகர்ந்தான் - உண்டவன். பாலை யாழ் - பாலைப் பண்.

11. ஒளி - புகழ். எழில் - எழுச்சி பொருந்திய

1 - 109 திருச்சிரபுரம்

பண்: வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

வார் உறு வனமுலை மங்கை பங்கன்,
நீர் உறுசடைமுடி நிமலன், இடம்-
கார் உறு கடிபொழில் சூழ்ந்து அழகு ஆர்
சீர் உறு வளவயல் சிரபுரமே. 1

அங்கமொடு அருமறை அருள்புரிந்தான்,
திங்களொடு அரவு அணி திகழ் முடியன்,
மங்கையொடு இனிது உறை வள நகரம்—
செங்கயல் மிளிர் வயல் சிரபுரமே. 2

பரிந்தவன், பல் முடி அமரர்க்கு ஆகித்
திரிந்தவர் புரம்அவை தீயின் வேவ
வரிந்த வெஞ்சிலை பிடித்து, அடுசரத்தைத்
தெரிந்தவன் வள நகர் சிரபுரமே. 3

---

1. கார் - இருள். கடி - மணம்.

2. ... .

3. பரிந்தவன் - அன்பு மிகுந்தவன். திரிந்தவர் - திரிபுரத்து அசுரர். வரிந்த - இறுகக் கட்டிய; அடு சரம் - அழிக்க வல்ல அம்பு. தெரிந்தவன் - தேர்ந்தெடுத்துத் தொடுத்தவன்.

நீறு அணி மேனியன், நீள் மதியோடு
ஆறு அணி சடையினன், அணியிழை ஓர்
கூறு அணிந்து இனிது உறை குளிர் நகரம்—
சேறு அணி வளவயல் சிரபுரமே. 4

அருந்திறல் அவுணர்கள் அரண் அழியச்
சரம் துரத்து எரிசெய்த சங்கரன் ஊர்—
குருந்தொடு கொடிவிடு மாதவிகள்
திருந்திய புறவு அணி சிரபுரமே. 5

கலை அவன், மறை அவன், காற்றொடு தீ,
மலை அவன், விண்ணொடு மண்ணும் அவன்,
கொலை அவன் கொடி மதில் கூட்டுஅழித்த
சிலையவன் வள நகர் சிரபுரமே. 6

---

4. ... ...

5. அரும் திறல் - பிறரால் வெல்லுதற்கு முடியாத வலிமை. அரண் - காவல் மதில். சரம் துரந்து - அம்பு விடுத்து, புறவு – காடு,

6. கலையவன் - கலைஞானம் உடையவன், தானே கலைகளின் வடிவானவன். சிலையவன் - வில்லை உடையவன்.

வான் அமர் மதியொடு மத்தம் சூடித்
தானவர் புரம் எய்த சைவன் இடம்—
கான் அமர் மடமயில் பெடை பயிலும்
தேன் அமர் பொழில் அணிசிரபுரமே. 7

மறுத்தவர் திரிபுரம் மாய்ந்து அழியக்
கறுத்தவன், கார் அரக்கன் முடிதோள்
இறுத்தவன், இருஞ் சினக் காலனை முன்
செறுத்தவன் வளநகர் சிரபுரமே. 8

வண்ண நல்மலர் உறை மறையவனும்
கண்ணனும் கழல்தொழக், கனல்உருஆய்
விண் உற ஓங்கிய விமலன் இடம்—
திண்ண நல்மதில் அணி சிரபுரமே. 9

---

7. தானவர் - அசுரர். புரம் - முப்புரம். கான் - காடு.

8. மறுத்தவர் - பகைவர். கறுத்தவன் - சினந்தவன். கார் - கரு நிறம். இறுத்தவன் - நெரித்தவன். இரும் சினம் - பெரும் கோபம்.

9. வண்ணம் - நிறம். மலர் - தாமரை மலர். மறையவன் - நான்முகன். கண்ணன் - திருமால். திண்ணம் - உறுதி.

வெற்று அரை உழல்பவர், விரி துகிலார்,
கற்றிலர் அறஉரை புறன்உரைக்கப்,
பற்றலர் திரிபுரம் மூன்றும் வேவச்
செற்றவன் வள நகர் சிரபுரமே. 10

அருமறை ஞானசம்பந்தன், அம் தண்
சிரபுர நகர் உறை சிவன் அடியைப்
பரவிய செந்தமிழ் பத்தும் வல்லார்
திருவொடு புகழ் மல்கு தேசினரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. வெற்று அரை - ஆடையில்லாத இடை. உழல்பவர் - திரிபவர். பற்றலர் - பகைவர். திரிபுரம் - வானில் திரிகின்ற கோட்டைகள். செற்றவன் - அழித்தவன்.

11. திரு - செல்வம். தேசினர் - ஒளியை உடையவர்.

1 - 110 திருஇடைமருதூர்

பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மருந்து அவன், வானவர் தானவர்க்கும்
பெருந்தகை, பிறவினொடு இறவும் ஆனான்,
அருந்தவ முனிவரொடு ஆல்நிழல்கீழ்
இருந்தவன் வள நகர் இடைமருதே. 1

தோற்று அவன் கேடு அவன், துணைமுலையாள்
கூற்றவன், கொல் புலித் தோல் அசைத்த
நீற்றவன், நிறைபுனல் நீள்சடைமேல்
ஏற்றவன் வள நகர் இடைமருதே. 2

படை உடை மழுவினன், பால்வெண் நீற்றன்,
நடை நவில் ஏற்றினன், ஞாலம் எல்லாம்
உடைதலை இடு பலி கொண்டு உழல்வான்,
இடைமருது இனிது உறை எம் இறையே. 3

---

1. தானவர் - அசுரர். பிறவு - பிறப்பு. இறவு - இறப்பு.

2. தோற்றவன் கேடவன் - உலகிற்கு ஆதியும் அந்தமும் ஆனவன். துணை - இரண்டு. கூற்றவன் - ஒரு கூறுகக் கொண்டவன். அசைத்த - கட்டிய.

3. ... .

பணைமுலை உமை ஒருபங்கன், ஒன்னார்
துணை மதில்மூன்றையும் சுடரில் மூழ்கக்
கணை துரந்து, அடு திறல் காலற் செற்ற
இணைஇலி வள நகர் இடைமருதே. 4

பொழில் அவன், புயல் அவன், புயல் இயக்கும்
தொழில் அவன், துயர் அவன், துயர் அகற்றும்
கழலவன், கரிஉரி போர்த்து உகந்த
எழிலவன் வள நகர் இடைமருதே. 5

நிறை அவன், புனலொடு மதியும் வைத்த
பொறையவன், புகழ் அவன், புகழ நின்ற
மறை அவன், மறிகடல் நஞ்சை உண்ட
இறையவன் வள நகர் இடைமருதே. 6

---

4. பணை - பருத்த. ஒன்னார் - பகைவர். கணை துரந்து - அம்பினை விடுத்து. அடுதிறல் - அழிக்கும் வலிமை. இணைஇலி - ஒப்பு இல்லாதவன்.

5. புயல் - மேகம். கழல் - கழலணிந்த திருவடி எனப்படும் அருள்.

6. பொறையவன் - தாங்குபவன், சுமையை உடையவன். மறிகடல் - மறிந்து விழும் அலைகளை உடைய கடல்.

நனி வளர் மதியொடு நாகம் வைத்த
பனிமலர்க் கொன்றை அம் படர்சடையன்,
முனிவரொடு அமரர்கள் முறை வணங்க,
இனிது உறை வள நகர் இடைமருதே. 7

தருக்கின அரக்கன தாளும் தோளும்
நெரித்தவன், நெடுங்கை மாமத கரி அன்று
உரித்தவன், ஒன்னலர் புரங்கள் மூன்றும்
எரித்தவன், வள நகர் இடைமருதே. 8

பெரியவன், பெண்ணினொடு ஆணும் ஆனான்,
வரி அரவு அணை மறிகடல் துயின்ற
கரியவன், அலரவன் காண்பு அரிய
எரியவன் வள நகர் இடைமருதே. 9

---

7. நனி வளர் - மிகுந்து வளர்கின்ற. பனி - குளிர்ந்த. படர் சடை - விரிந்த சடை. அமரர் - தேவர். முறை வணங்க - முறையாக வணங்க.

8. தருக்கின அரக்கன் - இராவணன். நெடும் கை - நீண்ட துதிக்கை. ஒன்னலர் - பகைவர்.

9 அரவு அணை - பாம்புப் படுக்கை. கரியவன் - இருண்ட நீல நிறம் உடையவன், திருமால். அலரவன் - மலரவன் ஆன நான்முகன். காண்பு அரிய - காண இயலாத. எரி - தீ உரு.

சிந்தை இல் சமணொடு தேரர் சொன்ன
புந்தி இல் உரைஅவை பொருள் கொளாதே,
அந்தணர் ஓத்தினொடு அரவம் ஓவா,
எந்தைதன் வள நகர் இடைமருதே. 10

இலை மலி பொழில் இடைமருது இறையை
நலம் மிகு ஞானசம்பந்தன் சொன்ன
பலம் மிகு தமிழ் இவை பத்தும் வல்லார்
உலகு உறு புகழினொடு ஓங்குவரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. சிந்தை இல் - சிந்தனை அற்ற. சமண் - அமணர். தேரர் - புத்தர். புந்தி இல் உரை - அறிவொடு பொருந்தாத சொல். பொருள் கொளாதே - பொருளாகக் கொள்ளாமல். ஓத்து - நூல்.

11. பலம் - பயன். உலகு உறு புகழ் - உலகில் மிகுந்த புகழ். ஓங்குவர் - உயர்வார்.

1 - 111

திருக்கடைமுடி

பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

அருத்தனை, அறவனை, அமுதனை, நீர்,
விருத்தனை, பாலனை, வினவுதிரேல்,
ஒருத்தனை, அல்லது இங்கு உலகம் ஏத்தும்
கருத்தவன் வள நகர் கடைமுடியே. 1

திரை பொரு திருமுடி திங்கள் விம்மும்
அரை பொரு புலிஅதள் அடிகள் இடம்
திரையொடு நுரை பொரு தெண்சுனைநீர்
கரை பொருவள நகர் கடைமுடியே. 2

---

1. அருத்தன் - பொருளானவன். விருத்தன் - முதியவன். பாலன் - இளையவன். ஒருத்தன் - தன்னை ஒப்பார் யாரையும் இல்லாத ஒருவன். கருத்தவன் - ஏத்துவார் கருத்தில் இருப்பவன்.

2. திரை - அலையை உடைய கங்கை. பொரு - மோதிக் கொண்டிருக்கும். விம்மும் - மேற்பட விளங்கும். அரை பொரு - அரையில் கட்டியுள்ள. அதள் - தோல். அடிகள் - முதல்வன். பொரு - மோதும். தெண் - தெளிவான.

ஆல் இளமதியினொடு, அரவு, கங்கை,
கோல வெண்நீற்றனைத் தொழுது இறைஞ்சி,
ஏல நல் மலரொடு விரை கமழும்
காலன வள நகர் கடைமுடியே. 3

கொய் அணி நறுமலர்க் கொன்றை அம் தார்
மைஅணி மிடற்று உடை மறையவன் ஊர்,
பைஅணி அரவொடு மான் மழுவாள்
கை அணிபவன் இடம் கடைமுடியே. 4

"மறை அவன், உலகு அவன், மாயம் அவன்,
பிறையவன், புனல் அவன், அனலும் அவன்,
இறையவன்" என உலகு ஏத்தும் கண்டம்
கறையவன் வளநகர் கடைமுடியே. 5

---

3. ஆல் - அகன்ற; விரை - மணம்.

4. கொய் அணி - கொய்து அழகு செய்யப்பட்ட அம்தார் - அழகான மாலை.

5. ... ...

பட அரவு ஏர் அல்குல், பல்வளைக்கை
மடவரலாளை ஒர்பாகம் வைத்து,
குடதிசை மதி அது சூடு சென்னிக்
கடவுள்தன் வளநகர் கடைமுடியே. 6

பொடி புல்கு மார்பினில் புரிபுல்கு நூல்,
அடிபுல்கு பைங்கழல், அடிகள் இடம்,
கொடி புல்கு, மலரொடு குளிர்சுனைநீர்
கடிபுல்கு வளநகர் கடைமுடியே. 7

நோதல்செய்து, அரக்கனை, நோக்கு அழியச்
சாதல்செய்து, அவன், "அடிசரண்!" எனலும்,
ஆதரவு அருள்செய்த அடிகள் அவர்
காதல்செய் வளநகர் கடைமுடியே. 8

---

6. பட அரவு ஏர் அல்குல் - பாம்பினுடைய படம் போன்ற எழுச்சி உடைய அடிவயிறு. குட திசை மதி - மேற்குத் திசையில் தோன்றும் பிறை மதி

7. பொடி - திரு நீறு கடி - மணம்.

8. நோதல் செய்து - வருந்தச் செய்து. நோக்கு- பெருமிதப் பார்வை. சரண் - அடைக்கலம். ஆதரவு- மிக்க அன்பு.

அடிமுடி காண்கிலர் ஓர் இருவர்,
புடைபுல்கி; "அருள் !" என்று போற்று இசைப்ப
சடைஇடைப் புனல் வைத்த சதுரன் இடம் –
கடைமுடி; அதன் அயல் காவிரியே. 9

மண்ணுதல் பறித்தலும் மாயம் இவை;
எண்ணிய கால், அவை இன்பம் அல்ல;
ஒண்நுதல் உமையை ஓர் பாகம் வைத்த
கண்ணுதல் வளநகர் கடைமுடியே. 10

பொன் திகழ் காவிரிப் பொரு புனல் சீர்
சென்று அடை கடைமுடிச் சிவன் அடியை
நன்று உணர் ஞானசம்பந்தன் சொன்ன
இன்தமிழ் இவை சொல, இன்பம் ஆமே. 11

திருச்சிற்றம்பலம்

---

9. இருவர் - நான்முகனும் திருமாலும். புடைபுல்கி - பக்கமாக வந்தடைந்து. சதுரன்-சதுரப்பாடு உடையவன்.

10. மண்ணுதல் - நீராடுதல். பறித்தல்-மயிர்களைதல். மாயம் - வஞ்சகச் செயல். எண்ணிய கால் - எண்ணிப்பார்த்தால். ஒள்நுதல் - ஒளிவிளங்கும் நெற்றி. கண்நுதல் - நெற்றிக் கண்ணர்.

11. பொன் திகழ் காவிரி - பொன்னி எனப் பெயர் விளங்கும் காவிரி. நன்று உணர் - தெளிவாக உணர்ந்த.

1-112 திருச்சிவபுரம்

பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

இன்குரல் இசை கெழும் யாழ் முரலத்
தன்கரம் மருவிய சதுரன் நகர் -
பொன் கரை பொரு பழங்காவிரியின்
தென்கரை மருவிய சிவபுரமே. 1

அன்று அடல் காலனைப் பாலனுக்குஆய்ப்
பொன்றிட உதைசெய்த புனிதன் நகர்—
வென்றி கொள் எயிற்று வெண்பன்றி முன்னாள்
சென்று அடி வீழ்தரு சிவபுரமே. 2

மலைமகள் மறுகிட, மதகரியைக்
கொலை மல்க உரிசெய்த குழகன் நகர்—
அலை மல்கும் அரிசிலின் அதன் அயலே
சிலை மல்கு மதில் அணி சிவபுரமே. 3

---

1. கெழும் - பொருந்தும். முரல - ஒலிக்க; கரம் - கை.

2. பாலன் - மார்க்கண்டன். பொன்றிட-அழிய; புனிதன்-மாசு அற்றவன்; வெண் பன்றி-திருமாலாகிய பன்றி.

3. சிலைமல்கு மதிள் - மலையை ஒத்த மதில்.

மண், புனல், அனலொடு, மாருதமும்,
விண், புனை மருவிய விகிர்தன் நகர்—
பண் புனை குரல்வலி வண்டு கெண்டிச்
செண்பகம் அலர் பொழில் சிவபுரமே. 4

வீறு நன்கு உடையவள் மேனி பாகம்
கூறு நன்கு உடையவன் குளிர் நகர்தான்—
நாறு நன் குர விரிவண்டு கெண்டித்
தேறல் உண்டு எழுதரு சிவபுரமே. 5

மாறு எதிர்வரு திரிபுரம் எரித்து,
நீறுஅது ஆகிய நிமலன் நகர்—
நாறு உடை நடுபவர் உழவரொடும்
சேறு உடை வயல் அணி சிவபுரமே. 6

---

4. மாருதம் - காற்று. பண் புனை குரல் - பண்போன்று இசைக்கும் குரல்

5. வீறு - சிறப்பு. நாறும் - மணக்கும். தேறல் - தேன்.

6. மாறு எதிர் வரும் - பகைகொண்டு எதிர்த்து வந்த. நாறு - நாற்று

ஆவில்ஐந்து அமர்ந்தவன் அரிவையொடு
மேவி நன்கு இருந்தது ஓர் வியல்நகர்தான்—
பூவில் வண்டு அமர்தரு பொய்கை அன்னச்
சேவல் தன் பெடை புல்கு சிவபுரமே. 7

எழில் மலை எடுத்த வல் இராவணன்தன்
முழுவலி அடக்கிய முதல்வன் நகர்—
விழவினில் எடுத்த வெண்கொடி மிடைந்து,
செழு முகில் அடுக்கும் வண் சிவபுரமே. 8

சங்கு அளவிய கையன், சதுர்முகனும்,
அங்கு அளவு அறிவு அரியவன் நகர்தான்—
கங்குலும் பறவைகள் கமுகுதொறும்
செங்கனி நுகர்தரு சிவபுரமே. 9

---

7. ஆவில் ஐந்து - ஆன் ஐந்து. பால் தயிர் நெய் கோமூத்திரம் சாணம் ஆகியன. அமர்ந்தவன் - ஆட்டப் பெற்றவன், விரும்பியவன்.

8. மிடைந்து - கூடி. செழுமுகில் - நீரால் செழுமையடைந்த மேகம். அடுக்கும் - தழுவும்.

9 சங்கு அளவிய கையன் - சங்கு ஏந்திய கையனான திருமால். சதுர் முகன் - நால்முகன். அளவு அறிவு அரியன் - இவன் இப்படிப்பட்டவன் என்று அறிய முடியாதவன். செம்கனி - முற்றிச் சிவந்த பாக்கு. நுகர்தரும் - தின்னும்.

மண்டையின், குண்டிகை, மாசு தரும்,
மிண்டரை விலக்கிய விமலன் நகர்—
பண்டு அமர்தரு பழங்காவிரியின்
தெண்திரை பொருது எழு சிவபுரமே. 10

சிவன் உறைதரு சிவபுர நகரைக்
கவுணியர் குலபதி—காழியர் கோன்—
தவம் மல்கு தமிழ் இவை சொல்ல வல்லார்
நவமொடு சிவகதி நண்ணுவரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. மண்டை - உண்கலம், குண்டிகை-குடுக்கை, கமண்டலம். மாசு தரும் - அழுக்குப் பொருந்திய. மிண்டர் - விதண்டா வாதம் செய்பவர். தெண் திரை - தெளிந்த அலை.

11. குல பதி - குலத்திற்குத் தலைவர். நவம் - புதுமை.

1 - 113

திருவல்லம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

எரித்தவன், முப்புரம் எரியில் மூழ்கத்,
தரித்தவன் கங்கையைத் தாழ்சடைமேல்;
விரித்தவன் வேதங்கள் வேறுவேறு
தெரித்தவன்; உறைவுஇடம்-திருவல்லமே. 1

தாயவன் உலகுக்கு, தன் ஒப்பு இலாத்
தூயவன், தூ மதிசூடி, எல்லாம்
ஆயவன், அமரர்க்கும் முனிவர்கட்கும்
சேயவன் உறைவு இடம் திரு வல்லமே. 2

பார்த்தவன், காமனைப் பண்பு அழிய;
போர்த்தவன், போதகத்தின் உரிவை;
ஆர்த்தவன் நான்முகன் தலையை, அன்று
சேர்த்தவன் உறைவுஇடம் திருவல்லமே. 3

---

1. தெரித்தவன் - தெரியச் செய்தவன்.

2. சேயவன் - எட்டாதவன்.

3. பார்த்தவன் - நெற்றிக் கண்ணில் தீ எழ நோக்கியவன். பண்பு - (அவனுக்கு உரித்தான) காமம் உண்டுபண்ணும் குணமும் செயலும். போதகம் - யானை. ஆர்த்தவன் சேர்த்தவன் - கிள்ளி எடுத்துக் கொண்டவன்.

கொய்த அம் மலர் அடி கூடுவார்தம்
மை, தவழ் திருமகள் வணங்க வைத்துப்,
பெய்தவன் பெரு மழை; உலகம் உய்யச்
செய்தவன் ; உறைவுஇடம் திருவல்லமே. 4

சார்ந்தவர்க்கு இன்பங்கள் தழைக்கும் வண்ணம்
நேர்ந்தவன் ; நேரிழையோடும் கூடி,
தேர்ந்தவர் தேடுவார் தேடச் செய்தே
சேர்ந்தவன் ; உறைவுஇடம் திருவல்லமே. 5

பதைத்து எழு காலனைப் பாதம் ஒன்றால்
உதைத்து, எழு மா முனிக்கு உண்மை நின்று,
விதிர்த்து எழு தக்கன்தன் வேள்வி அன்று
சிதைத்தவன் உறைவுஇடம் திருவல்லமே. 6

---

4. தவழ் - இளமை பொருந்திய, வளர்ச்சி யுடைய. உலகம் உய்யப் பெருமழை பெய்தவன் என்க.

5. சார்ந்தவர் - தன் அடியை அடைந்தவர். தழைக்கும் வண்ணம் நேர்ந்தவன் - மேன்மேலும் சிறக்கும்படிச் செய்தவன். தேர்ந்தவர் - ஆராய்ந்து தெளிந்தவர், ஆராய்ச்சி அறிவில் மிக்கவர். தேடுவார்- ஆராய்பவர். தேடச் செய்து - தேடிக் கொண்டே இருக்கச் செய்து.

6. பதைத்து - நடுங்கி. மா முனி - சிறந்த முனிவர் மரபில் வந்த மார்க்கண்டன். உண்மை நின்று - உள்ள வாறே தோன்றி நின்று. விதிர்த்து - நடுங்கி. சிதைத்தவன் - அழித்தவன்.

...　　...　　...　　...　　7.

இகழ்ந்து அரு வரையினை எடுக்கல்உற்று, ஆங்கு
அகழ்ந்த வல்அரக்கனை அடர்த்த பாதம்
நிகழ்ந்தவர், நேடுவார், நேடச் செய்தே
திகழ்ந்தவன் உறைவுஇடம் திருவல்லமே.　　8

பெரியவன் ; சிறியவர் சிந்தைசெய்ய
அரியவன் ; அருமறை அங்கம் ஆனான் ;
கரியவன், நான்முகன், காண ஒண்ணாத்
தெரியவன்; உறைவுஇடம் திருவல்லமே.　　9

7.　　...　　...　　....

8. இகழ்ந்து - பொருட்படுத்தாமல். அரு வரை- திருக்கயிலைமலை. அகழ்ந்த - அடியைப் பெயர்த்த. வல் அரக்கன் - இராவணன். நிகழ்ந்தவர் நேடுவார் - அறிவாளரும் ஆராய்பவரும். (நிகழ்ச்சி அறிவின் தொழிற்பாடு). நேடச்செய்து - தேடுமாறு செய்து. திகழ்ந்தவன் - பிறர் கண்டு கொள்ள முடியாத படி, ஆனால் விளங்குபவன்.

9. சிறியவர் - பண்பாட்டில் ஒழுக்கத்தில் சிறுமை உடையவர். சிந்தை செய்ய - எண்ணிப் பார்க்கவும். கரியவன் - திருமால். தெரியவன் - தனிப்பட்டதோர் ஒளிப் பிழம்பாய்த் தெரிந்தவன்.

அன்றிய அமணர்கள், சாக்கியர்கள்,
குன்றிய அறஉரை கூறு வண்ணம்
வென்றவன் புலன்ஐந்தும் ; விளங்க எங்கும்
சென்றவன் உறைவுஇடம் திருவல்லமே. 10

கற்றவர் திரு வல்லம் கண்டு சென்று,
நல் தமிழ் ஞானசம்பந்தன் சொன்ன
குற்றம் இல் செந்தமிழ் கூற வல்லார்
பற்றுவர் ஈசன் பொன் பாதங்களே, 11

திருச்சிற்றம்பலம்

---

10. அன்றிய - மாறுபட்ட. குன்றிய - பொருள் குறைவுடைய.

11. கற்றவர் - மெய்ந்நூல் கற்ற அறிவாளர்.

1-114 திருமாற்பேறு

பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

குருந்து அவன், குருகு அவன், கூர்மை அவன்,
பெருந்தகை, பெண் அவன், ஆணும் அவன்,
கருந் தடமலர்க் கண்ணி காதல் செய்யும்
மருந்து அவன் வள நகர் மாற்பேறே. 1

பாறு அணி வெண்தலை கையில் ஏந்தி,
வேறு அணி பலி கொளும் வேட்கையனாய்,
நீறு அணிந்து, உமை ஒருபாகம் வைத்த
மாறு இலி வள நகர் மாற்பேறே. 2

---

1. குருந்தவன் - குருந்த மரத்தின் கீழ் இருந்தவன். குருகு அவன் - மணிவகை அவன். கூர்மையன் - நுண்ணியன். பெருந்தகை - பெரியவன். கரும் தட மலர்க் கண்ணி - கருமையான பெரிய மலர் போன்ற கண்ணை உடைய உமை. மருந்து - உயிர்க்குப் பிறவி நோயையும் மல நோயையும் தீர்க்கும் மருந்தானவன்.

2. பாறு - பருந்து. அணி - விரும்பி நெருங்கும். வேறு அணி பலி - எண்ணத்திற்கு வேறான பிச்சை. வேட்கை - விருப்பம். மாறு இலி - மாறுபாடு இல்லாதவன்.

கரு உடையார் உலகங்கள் வேவச்,
செரு விடை ஏறி முன் சென்று நின்று,
உரு உடையாள் உமையாளும் தானும்
மருவிய வள நகர் மாற்பேறே. 3

தலையவன், தலை அணி மாலை பூண்டு
கொலை நவில் கூற்றினைக் கொன்று உகந்தான்,
கலை நவின்றான், கயிலாயம் என்னும்
மலையவன், வள நகர்—மாற்பேறே. 4

துறை அவன், தொழிலவன், தொல் உயிர்க்கும்
பிறை அணி சடைமுடிப் பெண் ஓர் பாகன்
கறை அணி மிடற்று அண்ணல், காலற் செற்ற
மறையவன் வள நகர் மாற்பேறே, 5

---

3. கருஉடையார் - பிறப்புக்கு ஆளான உயிர்கள் உலகங்கள் - (அவ்) உயிர்களின் வினை நுகர்ச்சிக்கெனப் படைக்கப்பட்ட படைப்புக்கள். வேவ - அழிய; செரு விடை — போர் வலிமை உடைய எருது. உரு - அழகிய.

4. கலை நவின்றான் — கலைகளை உண்டாக்கியவன்.

5. தொல் உயிர்க்கும் துறை அவன், தொழில் அவன் - தொன்மையே இருந்துவரும் உயிர்கள் அனைத்திற்கும் அவற்றின் பல்வேறு நுகர்ச்சிகளிலும் அந்நுகர்ச்சிகளுக்குக் காரணமான அவற்றின் வினைகளிலும் உடனாயிருந்து உதவிவருபவன்.

பெண்ணின் நல்லாளை ஓர் பாகம் வைத்துக்
கண்ணினால் காமனைக் காய்ந்தவன்தன்,
விண்ணவர் தானவர் முனிவரொடு
மண்ணவர் வணங்கும், நல் மாற் பேறே. 6

.. .. 7

தீது இலா மலை எடுத்த அரக்கன்
நீதியால் வேத கீதங்கள் பாட,
ஆதியான் ஆகிய அண்ணல் எங்கள்
மாதிதன் வள நகர் மாற்பேறே. 8

செய்ய தண் தாமரைக் கண்ணனொடும்
கொய் அணி நறுமலர்மேல் அயனும்
ஐயன் நன் சேவடி அதனை உள்க,
மையல் செய் வளநகர் மாற்பேறே, 9

---

6. கண் - கண்ணிலிருந்தும் வெளிப்பட்ட தீ. காய்ந்தவன் – அழித்தவன். விண்ணவர் - வானவர். தானவர் - அசுரர். மண்ணவர் - நிலவுலகத்தவர்.

7: ... ...

8. தீதுஇலாமலை - கயிலாயமலை. நீதி - முறை. ஆதியான் - எல்லாவற்றையும் தோற்றுவிப்பவன். மாதி - மாதினைப் பாகம் உடையவன்.

9. செய்ய தாமரைக் கண்ணன் - செந்தாமரைக் கண்ணன் திருமால். அயன் - நான்முகன். சேவடி - சிவந்த அடி. உள்க - நினைக்க. மையல் செய் - விருப்பத்தை உண்டுபண்ணும்.

குளித்து உணா அமணர், குண்டு ஆக்கர், என்றும்
களித்து நன் கழல்அடி காணல் உறார்;
முளைத்த வெண்மதியினொடு அரவம் சென்னி
வளைத்தவன் வள நகர் மாற்பேறே. 10

அந்தம் இல் ஞானசம்பந்தன் நல்ல
செந்துஇசை பாடல்செய் மாற்பேற்றைச்
சந்தம் இன் தமிழ்கள் கொண்டு ஏத்தவல்லார்
எந்தைதன் கழல்அடி எய்துவரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. குளித்துஉணா - நீராடிப் பின்னர் உண்ணும் பழக்கம் இல்லாத. குண்டாக்கர் - பருத்த உடம்பினரான புத்தர். களித்து - செருக்குக் கொண்டமையால். முளைத்தமதி - ஒரு நாள் பிறை. வளைத்தவன் - அணிந்தவன்.

11. அந்தம் - அழிவு. அந்தம் இல் ஞானம் - மெய்ஞ்ஞானம். செந்து இசை - செம்மையான இசை. சந்தம் இன் தமிழ் - ஓசை ஒழுங்கு சிறந்த இனியதமிழ்.

1-115 திருஇராமன்நந்தீச்சுரம்

பண் : வியாழக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

சங்கு ஒளிர் முன்கையர் தம் இடையே
அங்கு இடுபலி கொளுமவன், கோபப்
பொங்கு அரவு ஆடலோன், புவனி ஓங்க
எங்கும் மன் இராமனதீச்சரமே, 1

சந்த நல்மலர் அணி தாழ் சடையன்,
தந்த மதத்தவன் தாதையோ தான்,
அந்தம் பல் பாடலோன், அழகன், நல்ல
எம் தவன் இராமனதீச்சரமே. 2

தழைமயில் ஏறவன் தாதையோ தான்,
மழை பொதி சடையவன், மன்னு காதில்
குழைஅது விலங்கிய கோல மார்பின்
இழையவன் இராமனதீச்சரமே. 3

---

1. சங்கு - சங்கால் ஆன வளை. ஒளிர் - விளங்கும். முன்கை - மணிக்கட்டு. புவனி - நிலவுலகம்.

2. சந்தம் - அழகு. தந்த மதத்தவன் - தந்தமும் மதமும் உடைய ஆனை முகத்தவன். தாதை - தந்தை. அந்தம் - முடிவு. எந்தவன் - எங்களவன்.

3. தழை மயில் ஏறு அவன் - முருகன். விலங்கிய - ஒளி குறுக்கிட்ட.

சத்தியுள் ஆதி ஓர் தையல் பங்கன்,
முத்திஅது ஆகிய மூர்த்தியோ தான்,
அத்திய கையினில் அழகு சூலம்
வைத்தவன் இராமனதீச்சரமே. 4

தாழ்ந்த குழல் சடைமுடி அதன்மேல்
தோய்ந்த இளம்பிறை துளங்கு சென்னிப்
பாய்ந்த கங்கையொடு பட அரவம்
ஏய்ந்தவன் இராமனதீச்சரமே. 5

சரிகுழல் இலங்கிய தையல் காணும்
பெரியவன், காளிதன் பெரிய கூத்தை
அரியவன், ஆடலோன், அங்கை ஏந்தும்
எரியவன் இராமனதீச்சரமே. 6

---

4. சத்தியுள் ஆதி – ஆதி சத்தி. அத்தியகை - அழித்தல் வல்ல தீயினை ஏந்திய கை.

5. துலங்கு - விளங்குகிற. ஏய்ந்தவன் - பொருந்தியவன்.

6. சரிகுழல் – சரிந்த கூந்தல். இலங்கிய விளங்கிய. அரியவன் - ஆடுதற்கு அரியவன்.

மாறு இலா மாது ஒருபங்கன், மேனி
நீறுஅது ஆடலோன், நீள்சடைமேல்
ஆறுஅது சூடுவான், அழகன், விடை
ஏறவன் இராமனதீச்சரமே. 7

தட வரை அரக்கனைத் தலை நெரித்தோன்,
பட அரவு ஆட்டிய படர்சடையன்,
நடம்அது ஆடலான், நால்மறைக்கும்
இடமவன் இராமனதீச்சரமே. 8

7. மாறு இலா மாது - தன்னொடு வேறு இன்றிக் கூடி நிற்கும் சத்தி. ஏறவன் - ஏறுபவன்.

8. தடவரை - பெரிய மலை.

தனம் அணி தையல்தன் பாகன்தன்னை,
அனம் அணி அயன் அணி முடியும் காணான்;
பன மணி அரவு அரி பாதம் காணான்
இன மணி இராமனதீச்சரமே. 9

தறி போல் ஆம் சமணர், சாக்கியர் சொல் கொளேல்!
அறிவோர் அரன் நாமம் அறிந்து உரைமின்!
மறி கையோன், தன் முடி மணி ஆர் கங்கை
எறியவன் இராமனதீச்சரமே. 10

தேன்மலர்க் கொன்றையோன் 11

திருச்சிற்றம்பலம்

---

9. அனம் அணி அயன் – அன்னத்தின் உருக் கொண்ட நான்முகன். பன மணி அரவு அரி - படத்தையும் மணியையும் உடைய பாம்பினைப் படுக்கையாகக் கொண்ட திருமால்.

10. தறி - தடி. அறிவு ஓரான் - உயிரின் அறிவுக்கு அகப்படாதவன். நாமம் - பெயர். மறி - மான் கன்று. எறிபவன் – அலை வீசும் திருச் சடையை உடையவன்.

11. ... ...

பொது

1 : 116

திருநீலகண்டம்

பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

" அவ் வினைக்கு இவ் வினை ஆம் " என்று சொல்லும் அஃது அறிவீர்!
உய்வினை நாடாது இருப்பதும் உம்தமக்கு ஊனம் அன்றே?
கை வினை செய்து எம்பிரான் கழல் போற்றதும், நாம் அடியோம்;
செய்வினை வந்து எமைத் தீண்டப்பெறு; - திருநீலகண்டம்! 1

காவினை இட்டும், குளம் பல தொட்டும், கனி மனத்தால்,
" ஏ வினையால் எயில்மூன்று எரித்தீர் " என்று, இரு பொழுதும்,
பூவினைக் கொய்து, மலர் அடி போற்றுதும், நாம் அடியோம்;
தீவினை வந்து எமைத் தீண்டப்பெறு; - திருநீலகண்டம்! 2

---

1. அவ் வினை – முன் செய்த வினை. இவ் வினை - இது பயன். உய்வு - துன்ப நீக்கம். உந்தமக்கு - உங்களுக்கு. ஊனம் அன்றே? - குற்றமல்லவா? கை வினை - கைத் தொண்டு.

2. கா - சோலை. இட்டும் - அமைத்தும். தொட்டும் – தோண்டியும். கனி மனம் - நெகிழ்ந்த மனம். ஏ வினை - அம்பினைத் தொடுப்பதால்.

முலைத்தடம் மூழ்கிய போகங்களும் மற்று எவையும் எல்லாம்,
விலைத்தலை ஆவணம் கொண்டு எமை ஆண்ட விரிசடையீர்!
இலைத்தலை சூலமும் தண்டும் மழுவும் இவை உடையீர்!
சிலைத்து எமை தீவினை தீண்டப்பெறா; - திருநீலகண்டம்! 3

விண்ணுலகு ஆள்கின்ற விச்சாதரர்களும் வேதியரும்,
"புண்ணியர்" என்று இருபோதும் தொழப்படும் புண்ணியரே!
கண் இமையாதன மூன்று உடையீர்! உம்கழல் அடைந்தோம்;
திண்ணிய தீவினை தீண்டப்பெறா; - திருநீலகண்டம்! 4

---

3. விலைத்தலை ஆவணம் கொண்டு - விலைப் பொருட்டுப் பெறுவதுபோல் தன் பக்கமாக ஆக்கிக் கொண்டு. சிலைத்து - ஆரவாரத்துடன் வந்து.

4 விச்சாதரர் - வானவர் கூட்டத்துள் ஒரு வகையினர். திண்ணிய - வன்மையான.

மற்றுஇணை இல்லா மலை திரண்டன்ன திண்தோள்
உடையீர் !
கிற்று எமை ஆட்கொண்டு கேளாது ஒழிவதும்
தன்மைகொல்லோ ?
சொல் – துணை வாழ்க்கை துறந்து உம் திருவடியே
அடைந்தோம்;
செற்று எமைத் தீவினை தீண்டப்பெறா; –திருநீலகண்டம்! 5

மறக்கும் மனத்தினை மாற்றி, எம் ஆவியை வற்புறுத்தி,
பிறப்புஇல் பெருமான் திருந்து அடிக்கீழ்ப் பிழையாத
வண்ணம்
பரித்த மலர் கொடுவந்து, உமை ஏத்தும் பணி அடியோம்;
சிறப்புஇலித் தீவினை தீண்டப்பெறா; - திருநீலகண்டம் ! 6

... ... 7

---

5. இணை - ஒப்பு. கிற்று - வலிமை உடையாராகி. சொல் துணை வாழ்க்கை - சொல்லப்பட்ட துணைகளோடு பொருந்திய உலக வாழ்க்கை. துறந்து - நீக்கி விட்டு.

6. ஆவி - உயிர்.

7. ... ...

கருவைக் கழித்திட்டு, வாழ்க்கை கடித்து, உம் கழல்
அடிக்கே
உருகி, மலர் கொடுவந்து, உமை ஏத்துதும் நாம்
அடியோம் ;
செருஇல் அரக்கனைச் சீரில் அடர்த்து அருள் செய்தவரே!
திருஇலித் தீவினை தீண்டப்பெறா; – திருநீலகண்டம்! 8

நாற்ற மலர்மிசை நான்முகன், நாரணன் வாதுசெய்து
தோற்றம் உடைய அடியும் முடியும் தொடர்வு அரியீர்!
தோற்றினும் தோற்றும், தொழுது வணங்குதும்,
நாம் அடியோம்;
சீற்றம்அது ஆம் வினை தீண்டப்பெறா:-திருநீலகண்டம்! 9

---

8. கருவைக் கழித்திட்டு - பிறவிக்கு ஏதுவான வற்றை ஒழித்து. வாழ்க்கை கடிந்து - உலக வாழ்க்கையையும் விட்டு. செரு - போர். சீரில் - சீரால்.

9. தோற்றினும் தோற்றும் - தோன்றினாலும் தோன்றும். சீற்றம் அது ஆம் - கடுமையான.

சாக்கியப் பட்டும், சமண் உரு ஆகி உடை ஒழிந்தும்,
பாக்கியம் இன்றி இருதலைப் போகமும் பற்றுவிட்டார்;
பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர்! அடி போற்றுகின்றோம்;
தீக்குழித் தீவினை தீண்டப்பெறா; - திருநீலகண்டம்! 10

பிறந்த பிறவியில் பேணிஎம் செல்வன் கழல் அடைவான்,
இறந்த பிறவி உண்டாகில், இமையவர்கோன் அடிக்கண்
திறம் பயில் ஞானசம்பந்தன் செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோனொடும் கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்

10: பாக்கியம் - நல்வினைப் பேறு. இருதலைப் போகம் - இம்மை இன்பமும் மறுமை இன்பமும். பற்று விட்டார் - அடையப் பெறார் ஆயினர். புரி சடை - முறுக்கிய சடை; தீக் குழி - தீக் குழி போன்ற.

11: இறந்த பிறவி உண்டாகில் - இப்பிறவியைக் கடந்து மற்றும் ஓர் பிறவி உண்டாம் என்றால்;

மொழிமாற்று

1 : 117 - திருப்பிரமபுரம்

பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

காடுஅது, அணிகலம் கார்அரவம், பதி; கால்அதனில்,
தோடுஅது அணிகுவர் சுந்தரக் காதினில், தூச் சிலம்பர்;
வேடுஅது அணிவர், விசயற்கு, உருவம், வில்லும் கொடுப்பர்; -
பீடுஅது அணிமணி மாடப் பிரமபுரத்து அரரே. 1

கற்றைச் சடையது, கங்கணம் முன்கையில், திங்கள் கங்கை;
பற்றித்து, முப்புரம், பார் படைத்தோன் தலை, சுட்டது பண்டு;
எற்றித்து, பாம்பை அணிந்தது, கூற்றை; - எழில் விளங்கும்
வெற்றிச் சிலைமதில் வேணுபுரத்து எங்கள் வேதியரே. 2

---

1. காடது பதி, அணிகலம் கார் அரவம், எனவும், கால் அதனில் தூச் சிலம்பர், சுந்தரக் காதினில் தோடு அது அணிகுவர் எனவும் கூட்டுக. வேடது உருவம் அது அணிவர்; விசயற்கு வில்லும் கொடுப்பர் என இயைக்க. சுந்தரம் - அழகு. தூ - தூய. சிலம்பர் - சிலம்பு அணிந்தவர். விசயன் - அருச்சுனன். பீடம் - மேடை.

2. கற்றைச் சடையது திங்கள், கங்கை; முன் கையில் கங்கணம் ; பற்றித்து பார் படைத்தோன்

கூவிளம், கையது பேரி, சடைமுடிக் கூட்டத்தது;
தூவிளங்கும் பொடி, பூண்டது, பூசிற்று, துத்திநாகம்;
ஏவிளங்கும் நுதல், ஆனையும், பாகம், உரித்தனர்; - இன்
பூஇளஞ் சோலைப் புகலியுள் மேவிய புண்ணியரே. 3

தலை ; சுட்டது முப்புரம் ; பண்டு எற்றித்துக் கூற்றை ; அணிந்தது பாம்பை - எனமாறி இயைத்துக் கொள்க. கற்றை – தொகுதி. கங்கணம் - கையணி. பற்றித்து - கையில் கொண்டது. ஏற்றித்து - காலால் உதைத்தது. சிலைமதில் – மலைபோன்று உயர்ந்த மதில்.

3. சடைமுடிக் கூட்டத்தது கூவிளம் ; கையது பேரி; பூண்டது துத்தி நாகம்; பூசிற்றுத் தூ விளங்கும் பொடி என மாறிக் கொள்க. கூவிளம் - வில்வம். பேரி - உடுக்கு. தூ - தூய்மை. பொடி - திருநீறு. துத்தி – பாம்பின் படத்துப் புள்ளி. ஏ விளங்கும் நுதலாள் - வில்லை ஒத்து வளைந்து விளங்கும் நெற்றியை உடைய உமையாள். உரித்தனர் - உரித்தாகக் கொண்டவர்.

உரித்தது, பாம்பை உடல்மிசை இட்டது, ஓர் ஒண் களிற்றை;
எரித்தது, ஓர் ஆமையை இன்புஉறப் பூண்டது, முப்புரத்தைச்;
செருத்தது, சூலத்தை ஏந்திற்று, தக்கனை வேள்வி; பல் நூல்
விரித்தவர் வாழ்தரு வெங்குருவில் வீற்றிருந்தவரே. 4

கொட்டுவர், அக்கு அரை ஆர்ப்பது, தக்கை; குறுந்தாளன
இட்டுவர் பூதம், கலப்புஇலர், இன்புகழ், என்பு; உலவின்
மட்டு வரும் தழல், சூடுவர் மத்தமும், ஏந்துவர்; வான்
தொட்டு வரும் கொடித் தோணிபுரத்து உறை சுந்தரரே. 5

---

4. உரித்தது ஓர் ஒண் களிற்றை; உடல் மிசை இட்டது பாம்பை; எரித்தது முப்புரத்தை; இன்புறப் பூண்டது ஆமையை; செருத்தது தக்கனை வேள்வி; ஏந்திற்றுச் சூலத்தை என இயைக்க. பன்னூல் - மறை முதலிய நூல்கள்.

5. தக்கை கொட்டுவர்; அக்கு அரை ஆர்ப்பது; குறும்தாளன பூதம் இன்புகழ் இட்டுவர்; என்பு கலப்பு இலர்; மத்தமும் சூடுவர்; உலவின் மட்டு வரும் தழல் ஏந்துவர்; என இயைக்க. அக்கு - சங்குமணி; தக்கை - ஓர் இசைக்கருவி. விட்டுவர் - சொல்லுவர்; உலவின் மட்டுவரும் தழல் - உலகினை அழிக்கும் அளவுக்கு வரும் தீ, சுந்தரர் – அழகர்.

சாத்துவர், பாசம் தடக்கையில் ஏந்துவர், கோவணம்; தம்
கூத்து, அவர், கச்சுக் குலவி நின்று, ஆடுவர்; கொக்கு
இறகும்,
பேர்த்தவர் பல்படை பேய்அவை, சூடுவர்; பேர் எழிலார்;
பூத்தவர் கைதொழு பூந்தராய் மேவிய புண்ணியரே. 6

காலது, கங்கை கற்றைச் சடையுள்ளால், கழல் சிலம்பு;
மாலது, ஏந்தல் மழுஅது, பாகம்; வளர் கொழுங் கோட்டு
ஆல்அது ஊர்வர் அடல் ஏற்று, இருப்பர்; அணிமணி நீர்ச்
சேல்அது கண்ணி ஓர் பங்கர் சிரபுரம் மேயவரே. 7

---

6. கோவணம் சாத்துவர்; தடக்கையில் பாசம் ஏந்துவர்; தம் கூத்தவர்; கொக்கிறகும் சூடுவர்; பல் படை பேய் அவை பேர்த்தவர் - என இயைக்க. பேர்த்தவர் - அடி பெயர்த்து ஆடினவர்.

7. காலது கழல் சிலம்பு; கற்றைச் சடை உள்ளால் கங்கை; மால் அது பாகம்; ஏந்தல் மழு அது; வளர் கொழும் கோட்டு ஆல் அது இருப்பர்; அடல் ஏற்று ஊர்வர் என இயைக்க. உள்ளால் - உள்ளிருப்பது. மால் - திருமால். கோடு - கிளை. ஆல் - கல்லால மரம். சேலது கண்ணி - சேல் மீன் போன்ற கண்ணை உடையாள். பங்கர் - பாகம் உடையார்.

நெருப்பு உரு, வெள்விடை, மேனியர், ஏறுவர்; நெற்றி
யின்கண்
மருப்பு உருவன், கண்ணர், தாதையைக் காட்டுவர்;
மா முருகன்
விருப்பு உறு, பாம்புக்கு மெய், தந்தையார்; விறல் மா
தவர் வாழ்
பொருப்பு உறு மாளிகைத் தென்புறவத்து அணி
புண்ணியரே. 8

இலங்கைத் தலைவனை, ஏந்திற்று, இறுத்தது, இரலை;
இல் நாள்
கலங்கிய கூற்று, உயிர்பெற்றது மாணி, குமைபெற்றது;
கலம் கிளர் மொந்தையின், ஆடுவர், கொட்டுவர், காட்டு
அகத்துச்
சலம் கிளர் வாழ் வயல் சண்பையுள் மேவிய தத்துவரே. 9

---

8. நெருப்பு உறு மேனியர்; வெள் விடை ஏறுவர், நெற்றியின்கண் கண்ணர் ; மருப்பு உருவன் தாதை; மா முருகன் விருப்புறு தந்தையார்; பாம்புக்கு மெய் காட்டுவர் - என இயைக்க. மருப்பு உருவன் - யானை முகத்தனுகிய மூத்த பிள்ளையார். மெய் - உடம்பு' விறல் - வீரம், வலிமை. பொருப்பு - மலை.

9. இலங்கைத் தலைவனை இறுத்தது ; இரலை ஏந்திற்று ; கலங்கிய கூற்று குமை பெற்றது; இல் நாள் மாணி உயிர் பெற்றது ; கலம் கிளர் மொந்தையின் கொட்டுவர் ; காட்டகத்து ஆடுவர் - என இயைக்க இறுத்தது - நெருக்கியது. இரலை - மான். குமை பெற்றது - அழிவுற்றது. மாணி - மார்க்கண்டன் கலம் - இசைக்கருவி. மொந்தை - இசைக் கருவி வகை சலம் - நீர். தத்துவர் - பொருளானவர்.

அடிஇணை கண்டிலன், தாமரையோன், மால், முடி
கண்டிலன்;
கொடி அணியும், புலி, ஏறு, உகந்து ஏறுவர், தோல்
உடுப்பர்;
பிடி அணியும் நடையாள், வெற்பு இருப்பது, ஓர்
கூறு உடையர்;
கடி அணியும் பொழில் காழியுள் மேய கறைக்கண்டரே. 10

கையது, வெண் குழை காதது, சூலம்; அமணர், புத்தர்,
எய்துவர், தம்மை, அடியவர், எய்தார்; ஓர் ஏனக்கொம்பு
மெய் திகழ் கோவணம், பூண்பது, உடுப்பது; மேதகைய
கொய்து அலர் பூம்பொழில் கொச்சையுள் மேவிய
கொற்றவரே. 11

---

10. மால் இணைஅடி கண்டிலன்; தாமரையோன் முடி கண்டிலன்; கொடி அணியும் ஏறு உகந்து ஏறுவர்; புலித்தோல் உடுப்பர்; பிடி அணியும் நடையாள் கூறு உடையர்; வெற்பு இருப்பது - என இயைக்க. இணை - இரண்டு. வெற்பு - கயிலைமலை; கடி - மணம். கறைக்கண்டர் - நீலகண்டர்.

11. கையது சூலம்; காதது வெண் குழை; அமணர், புத்தர் தம்மை எய்தார்; அடியவர் தம்மை எய்துவர்; ஓர் ஏனக் கொம்பு மெய் திகழ் பூண்பது; கோவணம் உடுப்பது – என இயைக்க. மேதகைய - மேன்மை உடைய. கொற்றவர் - வெற்றி உடையவர்;

கல் உயர்இஞ்சிக் கழுமலம் மேய கடவுள்தன்னை
நல்உரை ஞானசம்பந்தன் ஞானத் தமிழ் நன்கு உணரச்
சொல்லிடல் கேட்டல் வல்லோர், தொல்லை வானவர் தங்களொடும்
செல்குவர்; சீர் அருளால் பெறல்ஆம் சிவலோகம் அதே. 12

திருச்சிற்றம்பலம்

12. கல் உயர் இஞ்சிக் கழுமலத்துள் மேவிய கடவுள் எனக்கூட்டுக. கல்-மலை, இஞ்சி-மதில்.

1 : 118 **திருப்பருப்பதம்**

பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

சுடுமணி உமிழ் நாகம் சூழ்தர அரைக்கு அசைத்தான்;
இடு மணி எழில் ஆனை ஏறலன், எருதுஏறி;
விடம் அணி மிடறு உடையான்; மேவிய-நெடுங்கோட்டுப்
படு மணி விடு சுடர் ஆர் பருப்பதம் பரவுதுமே. 1

நோய் புல்கு தோல் திரைய, நரை வரு, நுகர் உடம்பில்
நீ புல்கு தோற்றம் எல்லாம் நினை-உள்கு மட நெஞ்சே!
வாய் புல்கு தோத்திரத்தால், வலம்செய்து, தலைவணங்கி,
பாய் புலித்தோல் உடையான் பருப்பதம் பரவுதுமே. 2

---

1. சுடு மணி – ஒளிவீசும் மாணிக்கம்; ஏறலன் - ஏறுமல், கோடு - உச்சி.

2. புல்கு – பொருந்தும், திரைய - சுருக்கு விழ. நினை உள்கு - எண்ணிப்பார் !

துனி உறு துயர் தீரத் தோன்றி ஓர் நல்வினையால்
இனி உறு பயன் ஆதல் இரண்டு உற மனம் வையேல்!
கனி உறு மரம் ஏறிக் கருமுசுக் கழை உகளும்,
பனி உறு கதிர் மதியான், பருப்பதம் பரவுதுமே. 3

"கொங்கு அணி நறுங்கொன்றைத் தொங்கலன், குளிர் சடையான்,
எங்கள் நோய் அகல நின்றான்" என, அருள் ஈசன் இடம்-
ஐங்கணை வரி சிலையான் அநங்கனை அழகு அழித்த
பைங்கண் வெள்ஏறு உடையான்-பருப்பதம் பரவுதுமே. 4

---

3. துனிஉறு - வெறுக்கத்தக்க. தோன்றி-பிறந்து. இனிஉறு பயன் ஆதல் - இன்பம் சிறந்ததான பயன் வந்துசேரும். இரண்டு உறமனம் வையேல் - மனத்தை உலகினிடத்தும் இறைவனிடத்துமாக இரண்டு படச் செய்யாதே! இறைவன் பக்கமாக ஒன்றிய நிலை உறுக! ஓவா - நீங்காத.

4. கொங்கு - தேன். தொங்கல் - மாலை, ஐங்கணை - ஐந்துவகையான மலர் அம்பு. அநங்கன் - மன்மதன். பைங்கண் - பசுமையானகண்.

துறைபல சுனை மூழ்கித், தூமலர் சுமந்து ஓடி,
மறை ஒலி வாய்மொழியால், வானவர் மகிழ்ந்து ஏத்தச்,
சிறை ஒலி கிளி பயிலும், தேன்இனம் ஒலி ஓவாப்
பறை படு விளங்கு அருவிப் பருப்பதம் பரவுதுமே. 5

சீர் கெழு சிறப்பு ஓவாச் செய்தவ நெறி வேண்டில்,
ஏர் கெழு மட நெஞ்சே! இரண்டுஉற மனம் வையேல்!
கார் கெழு நறுங்கொன்றைக் கடவுளது இடம், வகையால்
பார் கெழு புகழ்ஓவாப் பருப்பதம் பரவுதுமே- 6

புடை புல்கு படர் கமலம் புகையொடு விரை கமழத்,
தொடை புல்கு நறுமாலை திருமுடிமிசை ஏற,
விடை புல்கு கொடி ஏந்தி, வெந்த வெண்ணீறு அணிவான்,
படை புல்கு மழுவாளன் பருப்பதம் பரவுதுமே. 7

---

5. சிறை - சிறகு. தேன் - வண்டு; பறைபாடும் - முரசு ஒலிபோல் ஒலிக்கும்.

6. பார் - உலகம்.

7. புடை - பக்கம், கமலம் - தாமரை மலர், தொடை - தொடுத்தல், மிசை - மேல்;

நினைப்பு எனும் நெடுங்கிணற்றை நின்றுநின்று அயராதே
மனத்தினை வலித்து ஒழிந்தேன்; அவலம் வந்து அடையாமை,
கனைத்து எழு திரள் கங்கை கமழ்சடைக் கரந்தான் தன்,
பனைத்திரள் பாய் அருவிப் பருப்பதம் பரவுதுமே. 8

மருவிய வல்வினை நோய் அவலம் வந்து அடையாமல்,
திருஉரு அமர்ந்தானும், திசைமுகம் உடையானும்,
இருவரும் அறியாமை எழுந்தது ஒர் எரி நடுவே
பருவரை உற நிமிர்ந்தான் பருப்பதம் பரவுதுமே. 9

---

8. அயராது - தளராமல், வலித்து - இழுத்து, அவலம் - துன்பம், கனைத்து - ஒலித்து.

9. திரு - திருமகள். திருஉரு அமர்ந்தான் - திருமால். திசை முகம் உடையான் - நான்முகன், பருவரை - பெரிய மலை.

சடம் கொண்ட சாத்திரத்தார் சாக்கியர், சமண்குண்டர்
மடம் கொண்ட விரும்பியராய் மயங்கி, ஓர்
பேய்த்தேர்ப் பின்
குடம் கொண்டு நீர்க்குச் செல்வார்; போதுமின்!
குஞ்சரத்தின்
படம் கொண்ட போர்வையினன் பருப்பதம் பரவுதுமே. 10

வெண் செ(ந்)நெல் விளை கழனி விழவு ஒலி கழுமலத்தான்.
பண் செலப் பலபாடல் இசை முரல் பருப்பதத்தை
நன்சொலினால் பரவும் ஞானசம்பந்தன், நல்ல
ஒண் சொலின் இவை மாலை உரு எணத், தவம் ஆமே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. சடம் - அறிவின்மை, மடம் - அறியாமை. பேய்த் தேர் - கானல் நீர், போதுமின் - வாருங்கள்! குஞ்சரம் - யானை, படம் - தோலாடை.

11. வெண் செந்நெல் - வெண்ணெல்லும் செந்நெல்லும், இசைமுரல் - இசை முழங்கும். ஒண் சொல் - பெரும் பொருளுடைய சொல். உரு எ(ண்)ண - மீண்டும் மீண்டும் பொருளை நினைவில் கொள்ள, சிந்திக்க.

1 : 119 திருக்கள்ளில்

பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

முள்ளின்மேல் முது கூகை முரலும் சோலை,
வெள்ளின்மேல் விடு கூறைக் கொடி விளைந்த
கள்ளில் மேய அண்ணல் கழல்கள் நாளும்
உள்ளும்! மேல் உயர்வு எய்தல் ஒருதலையே. 1

ஆட்லான், பாட்லான், அரவங்கள் பூண்டான்,
ஓடு அலால் கலன் இல்லான் உறை பதியாக்
காடு அலால் கருதாத கள்ளில் மேயான்;
பாடு எலாம் பெரியார்கள் பரசுவாரே. 2

எண்ணார் மும்மதில் எய்த இமையா முக்கண்,
பண் ஆர் நால்மறை பாடும் பரமயோகி,
கண் ஆர் நீறு அணி மார்பன் கள்ளில் மேயான்,
பெண் ஆண் ஆம்பெருமான், எம் பிஞ்ஞகனே. 3

---

1. முள் - முள்மரம், கூகை - கோட்டான் பறவை. வெள்ளில் - விளாமரம். கூறைக் கொடி - ஆடையால் ஆனகொடி. ஒருதலை - உறுதி.

2. கலன் - உண்கலம். பாடு - பெருமை. பரசுவார் - புகழ்ந்து துதிப்பார்.

3. கண்ஆர் - கண்ணுக்கு இனிதான. பிஞ்ஞகன்- சிவபெருமான்.

பிறை பெற்ற சடை அண்ணல், பெடைவண்டு ஆலும்
நறை பெற்ற விரிகொன்றைத் தார் நயந்த
கறை பெற்ற மிடற்று அண்ணல், கள்ளில் மேயான்,
நிறை பெற்ற அடியார்கள் நெஞ்சு உளானே, 4

விரையாலும் மலராலும் விழுமை குன்ரு
உரையாலும் எதிர்கொள்ள, ஊரார், அம் மாக்
கரை ஆர் பொன் புனல் வேலிக் கள்ளில் மேயான்;
அரை ஆர் வெண் கோவணத்த அண்ணல்தானே. 5

நலன் ஆய பலி கொள்கை நம்பான், நல்ல
வலன் ஆய மழுவாளும் வேலும் வல்லான்,
கலன் ஆய தலையோட்டான், கள்ளில் மேயான்;
மலன் ஆய தீர்த்து எய்தும், மா தவத்தோர்க்கே, 6

---

4. ஆலும் - ஒலிக்கும். நறை - தேன். நயந்த - விரும்பிய. கறை - நஞ்சக்கறை.

5. விழுமை - மேன்மை. குன்ரு - குறையாத.

6, நலன் - நன்மை. வலன் - வெற்றி. மலன் - மலம்.

பொடியார் மெய் பூசினும், புறவின் நறவம்
குடியா ஊர் திரியினும், கூப்பிடினும்,
கடி ஆர் பூம்பொழில் சோலைக் கள்ளில் மேயான்-
அடியார் பண்பு இகழ்வார்கள் ஆதர்களே. 7

திரு நீலமலர் ஒண்கண் தேவி பாகம்
புரிநூலும் திருநீறும் புல்கு மார்பில்,
கரு நீல மலர் விம்மு கள்ளில், என்றும்
பெரு நீலமிடற்று அண்ணல் பேணுவதே. 8

" வரி ஆய மலரானும், வையம் தன்னை
உரிது ஆய அளந்தானும் உள்ளுதற்கு அங்கு
அரியானும் அரிது ஆய கள்ளில் மேயான்,
பெரியான் '' என்று, அறிவார்கள் பேசுவாரே. 9

---

7. நறவம் - தேன். குடியா - குடித்து. ஆதர் - அறிவிலார், குருடர்.

8. திரு - அழகிய.

9. ... .

ஆச்சியப் பேய்களோடு அமணர், குண்டர்
பேச்சு இவை நெறி அல்ல ; பேணுமின்கள்,
மாச்செய்த வளவயல் மல்கு கள்ளில்
தீச் செய்த சடை அண்ணல் திருந்து அடியே! 10

திகை நான்கும் புகழ் காழிச் செல்வம் மல்கு
பகல் போலும் பேர் ஒளியான் – பந்தன் – நல்ல
முகை மேவு முதிர்சடையான் கள்ளில் ஏத்த,
புகழோடும் பேர் இன்பம் புகுதும் அன்றே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. ஆச்சிய - இகழத்தக்க. மா - பெருமை.

11. திகை - திசை; பகல் - கதிரோன். பந்தன் - ஞானசம்பந்தன். முகை - அரும்பு.

1 : 120 திருஐயாறு

திருவிராகம் பண் : [வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பணிந்தவர் அருவினை பற்று அறுத்து அருள்செயத்
துணிந்தவன், தோலொடு நூல் துதை மார்பினில்
பிணிந்தவன், அரவொடு பேர் எழில் ஆமை கொண்டு
அணிந்தவன், வள நகர் - அம் தண் ஐயாறே. 1

கீர்த்தி மிக்கவன் நகர் கிளர் ஒலி உடன் அடப்
பார்த்தவன்; பனிமதி படர் சடை வைத்துப்,
போர்த்தவன் கரிஉரி; புலிஅதள், அரவு, அரை
ஆர்த்தவன்; வள நகர் - அம் தண் ஐயாறே. 2

வரிந்த வெஞ்சிலை பிடித்து, அவுணர்தம் வள நகர்
எரிந்து அற எய்தவன்; எழில் திகழ் மலர்மேல்
இருந்தவன் சிரம்அது, இமையவர் குறைகொள,
அரிந்தவன்; வள நகர் - அம் தண் ஐயாறே. 3

---

1. பிணிந்தவன் - பிணித்தவன்.

2. கீர்த்தி - மிகுந்த புகழ்; அடப்பார்த்தவன் - அழியுமாறு பார்த்தவன்.

3. சிரம் அரிந்தவன் - தலையைக் கொய்தவன்.

வாய்ந்த வல் அவுணர்தம் வள நகர் எரிஇடை
மாய்ந்து அற எய்தவன், வளர்பிறை விரிபுனல்
தோய்ந்து எழு சடையினன், தொல் மறை ஆறு அங்கம்
ஆய்ந்தவன், வள நகர் - அம் தண் ஐயாறே. 4

வான் அமர் மதி புல்த சடைஇடை அரவொடு
தேன் அமர் கொன்றையன், திகழ்தரு மார்பினன்,
மான் அன மென் விழி மங்கை ஓர் பாகமும்
ஆனவன், வள நகர் - அம் தண் ஐயாறே. 5

முன்பனை, முனிவரொடு அமரர்கள் தொழுது எழும்
இன்பனை, இணை இல இறைவனை, எழில் திகழ்
என் பொனை, ஏதம் இல் வேதியர்தாம் தொழும்
அன்பன வள நகர் - அம் தண் ஐயாறே. 6

---

4. ஆய்ந்தவன் - ஆராய்ந்தவன்.

5. மான்அன மென்விழி - மான்போன்ற மென்மையான பார்வை.

6. முன்பன் - வலிமை உடையவன். ஏதம் - குற்றம். அன்பன - அன்பனது.

வன்திறல் அவுணர்தம் வள நகர் எரிஇடை
வெந்து அற எய்தவன், விளங்கிய மார்பினில்
பந்து அமர் மெல்விரல் பாகம்அது ஆகித், தன்
அந்தம் இல் வள நகர் - அம் தண் ஐயாறே. 7

விடைத்த வல் அரக்கன் நல்வெற்பினை எடுத்தலும்,
அடித்தலத்தால் இறை ஊன்றி, மற்று அவனது
முடித்தலை தோள்அவை நெரிதர, முறைமுறை
அடர்த்தவன் வள நகர் – அம் தண் ஐயாறே. 8

விண்ணவர் தம்மொடு, வெங்கதிரோன், அனல்
எண்இலி தேவர்கள், இந்திரன், வழிபட,
கண்ணனும் பிரமனும் காண்பு அரிது ஆகிய
அண்ணல்தன் வள நகர் - அம் தண் ஐயாறே. 9

---

7. பாகம் அது ஆகி - பாகம் கொண்டவன்.

8. விடைத்த-செருக்குக் கொண்ட. இறை-சிறிது.

9. அண்ணல் - தலைவன்.

மருள்உடை மனத்து வன்சமணர்கள், மாசு அரு
இருள்உடை இணைத் துவர்ப் போர்வையினர்களும்,
தெருள்உடை மனத்தவர்; தேறுமின், திண்ணமா
அருள்உடை அடிகள்தம் அம் தண் ஐயாறே! 10

நலம் மலி ஞானசம்பந்தனது இன்தமிழ்
அலை மலி புனல் மல்கும் அம் தண் ஐயாற்றினைக்
கலைமலி தமிழ்இவை கற்று வல்லார் மிக
நலம் மலி புகழ் மிகு நன்மையர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. மருள் - மயக்கம். தேறுமின்-தெளிவுறுங்கள்.

11. ... ...

1:121 திருஇடைமருதூர்

திருவிராகம் பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நடைமரு திரிபுரம் எரியுண நகைசெய்த
படைமரு தழல் எழ மழு வல பகவன்,
புடைமருது இள முகில் வளம் அமர் பொதுளிய,
இடைமருது அடைய, நம் இடர் கெடல் எளிதே. 1

மழை நுழை மதியமொடு, அழி தலை, மட மஞ்ஞை
கழை நுழை புனல், பெய்த கமழ் சடைமுடியன்;
குழை நுழை திகழ் செவி, அழகொடு மிளிர்வது ஒர்
இழை நுழை புரி அணல் இடம் - இடைமருதே. 2

---

1. நடைமரு - இயக்கம் உடைய. படைமரு - படைக்கலம் போன்ற, புடைமருது - பக்கம்பக்கமாக உள்ள மருதமரங்கள். பொதுளிய - நிறைந்த.

2. மழை - மேகம், அழிதலை - தசை ஒழிந்த தலைஓடு, மஞ்ஞை - மயில், அணல் - அண்ணல்.

அருமையன், எளிமையன், அழல் விட மிடறினன்,
கருமையின் ஒளி பெறு கமழ் சடைமுடியன்,
பெருமையன், சிறுமையன், பிணை பெணொடு ஒருமையின்
இருமையும் உடை அணல் இடம் - இடைமருதே. 3

பொரி படு முதுகு உற முளி களி புடை புல்கு
நரி வளர் சுடலையுள் நடம் என நவில்வோன்,
வரி வளர் குளிர்மதி ஒளி பெற மிளிர்வது ஓர்
எரி வளர்சடை அணல் இடம் - இடைமருதே. 4

வரு நல மயில் அன மடநடை மலைமகள்
பெரு நல முலை இணை பிணைசெய்த பெருமான்,
செரு நல மதில் எய்த சிவன், உறை செழு நகர்
இரு நல புகழ் மல்கும் இடம் - இடைமருதே. 5

---

3. அன்பர்க்கு எளிமையின், அல்லார்க்கு. அருமையன், அழல்-தீப்போன்ற கொடிய, ஒருமையின் இருமையும் உடை அண்ணல் - ஒரு திருமேனியில் ஆண் பெண் என்ற இருதன்மையும் உடையவன்.

4. பொரிபடுமுதுகு - பொரிந்த முதுகு முளி - காய்ந்த. களி - மகிழ்ச்சி.

5, பிணை செய்த - இணைந்துள்ள.

கலை உடைவிரி துகில், கமழ் குழல், அகில் புகை,
மலை உடை மடமகள்தனை இடம் உடையோன்;
விலை உடை அணிகலன் இலன் என மழுவினொடு
இலை உடை படையவன் இடம் - இடைமருதே. 6

வளம் என வளர்வன வரி முரல் பறவைகள்
இளமணல் அணை கரை இசைசெயும் இடைமருது
உளம் என நினைபவர் ஒலிகழல் இணைஅடி,
குளம் அணல் உற மூழ்கி வழிபடல் குணமே. 7

"மறை அவன், உலகு அவன், மதியவன், மதி புல்கு
துறையவன்" என வல அடியவர் துயர் இலர்;
கறையவன் மிடறுஅது, கனல்செய்த கமழ் சடை
இறையவன் உறைதரும் இடம் - இடைமருதே. 8

---

6. ... ...

7. குளம் அணல் உறமூழ்கி - குளத்தில் நீர் கழுத்தளவாக நின்று.

8 ... ...

மருதுஇடை நட்விய மணிவணர், பிரமரும்,
இருது உடை அகலமொடு இகலினர், இனது எனக்
கருதிடல் அரியது ஓர் உருவொடு பெரியது ஓர்
எருது உடை அடிகள்தம் இடம் - இடைமருதே. 9

துவர் உறு விரிதுகில் உடையரும் அமணரும்
அவர் உறு சிறுசொலை நயவன்மின் ! இடுமணல்
கவர்உறு புனல் இடைமருது கைதொழுது எழு
மவர் உறு வினை கெடல் அணுகுதல் குணமே. 10

தட மலி புகலியர் தமிழ் கெழுவிரகினன்,
இடம் மலி பொழில் இடைமருதினை இசைசெய்த,
படம் மலி, தமிழ்இவை பரவ வல்லவர் வினை
கெட, மலி புகழொடு கிளர் ஒளியினரே. 11

திருச்சிற்றம்பலம்

---

9. மருது இடை நடவிய மணிவ(ண்)ணர் - கட்டிய உரலொடும் இரு மருத மரங்களின் இடையே தவழ்ந்த கண்ணனை திருமால். இகலினர் - மாறு பட்டனர்.

10. கெடல் அணுகுதல் - கெடுதலை அடைதல்.

11: தடம் - பொய்கை.

1 : 122 ## திருஇடைமருதூர்

திருவிராகம் பண்: வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

விரிதரு புலி உரி விரவிய அரையினர்,
திரிதரும் எயில் அவை புனை கணையினில் எய்த
எரிதரு சடையினர், இடைமருது அடைவு உனல்
புரிதரும் மனனவர் புகழ் மிக உளதே. 1

''மறிதிரை படு கடல் விடம் அடை மிடறினர்
எறி திரை கரை பொரும் இடைமருது'' எனும் அவர்
செறி திரை, நரையொடு செலவு இலர் உலகினில்;
பிறிது இரை பெறும் உடல் பெருகுவது அரிதே. 2

சலசல சொரி புனல் சடையினர், மலைமகள்
நிலவிய உடலினர், நிறை மறைமொழியினர்,
இலர் என இடுபலியவர், இடைமருதினை
வலம்இட, உடல் நலிபு இலது, உள வினையே. 3

---

1. உ(ன்)னல் - நினைத்தல். மனன் அவர் - மனத்தை உடையவர்.

2. மிடை - சேர்ந்த. செலவு இலர்-பொருந்தார். பிறிது இரை பெறும் உடல் - இப்புலால் உடம்பு. உடல் பெருகுவது அரிது - பிறப்பினை அடையார்.

3. சலசல - ஒலிக்குறிப்பு. இலர் என - வறியவர் போல. இடு பலியவர் - இடப்படும் பிச்சை ஏற்பவர்.

விடையினர், வெளியதுஓர்தலை கலன் என நனி
கடைகடைதொறு;, "பலி இடுக !" என முடுகுவர்,
இடைவிடல் அரியவர் இடைமருது எனும் நகர்
உடையவர்; அடிஇணை தொழுவது எம் உயர்வே. 4

"உரைஅரும் உருவினர், உணர்வுஅரு வகையினர்,
அரை பொரு புலிஅதள் உடையினர், அதன்மிசை
இரை மரும் அரவினர், இடைமருது" என உளம்
உரைகள்அது உடையவர் புகழ் மிக உளதே. 5

ஒழுகிய புனல் மதி அரவமொடு உறைதரும்
அழகிய முடிஉடை அடிகளது, அறைகழல்
எழிலினர் உறை, இடைமருதினை மலர்கொடு
தொழுதல் செய்து எழும் அவர் துயர் உறல் இலரே. 6

---

4. முடுகுவர் - விரைந்து செல்வார். இடைவிடல் அரியர் - உயிர்களால் விடமுடியாதவர்.

5. உளம் உரைகள் - நினைதலும் மொழிதலும்.

6. ... ...

கலை மலி விரலினர், கடியது ஓர் மழுவொடும்
நிலையினர், சலமகள் உலவிய சடையினர்,
மலைமகள் முலை இணை மருவிய வடிவினர்,
இலைமலி படையவர் இடம் இடைமருதே. 7

செருவு அடை இல வல செயல் செய் அத் திறலொடும்
அரு வரையினில் ஒருபது முடி நெரிதர,
இருவகை விரல் நிறியவர் இடைமருது அது
பரவுவர் அருவினை ஒருவுதல் பெரிதே? 8

அரியொடு மலரவன் என இவர் அடிமுடி
தெரிவகை அரியவர், திருவடி தொழுது எழ,
எரிதரும் உருவர்தம் இடைமருது அடைவுஉறல்
புரிதரும் மனனவர் புகழ் உளதே. 9

7: சலமகள் - கங்கை. இலைமலியடை - திரி சூலம்.

8. செருவு - போர். அடை இல வ(ல்)ல செயல் - முறை இல்லாத வன் செயல். விரல் நிறியவர் - விரலால் அழுத்தியவர். ஒருவுதல் - நீங்குதல்.

9: அடைவுறல் - அடைவதனை. புரிதரு மனனவர் - விரும்பிய மனத்தவர்.

குடை மயிலின தழை மருவிய உருவினர்,
உடை மரு துவரினர், பலசொல உறவு இலை;
அடை மரு திருவினர் தொழுது எழு கழலவர்
இடைமருது என மனம் நினைவதும் எழிலே. 10

பொருகடல் அடைதரு புகலியர் தமிழொடு
விரகினன், விரிதரு பொழில் இடைமருதினைப்
பரவிய ஒருபது பயில வல்லவர் இடர்
விரவிலர், வினையொடு; வியன் உலகு உறவே. 11

திருச்சிற்றம்பலம்

10. மயிலின தழை - மயில் பீலி. உறவு இலை - பொருத்தம் இல்லை. அடை மரு - அடைதலைப் பொருந்திய.

11. வியன் உலகு - அகன்ற வானுலகம்.

1 : 123 திருவலிவலம்

திருவிராகம் பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பூ இயல் புரிகுழல், வரிசிலை நிகர் நுதல்,
ஏ இயல் கணை, பிணை, எதிர் விழி உமையவள்
மேவிய திருஉரு உடையவன்—விரைமலர்
மா இயல் பொழில் வலிவலம் உறை இறையே. 1

இட்டம் அது அமர் பொடி இசைதலின், நசைபெறு
பட்டு அவிர் பவள நல்மணி என அணி பெறு
விட்டு ஒளிர் திருஉரு உடையவன் - விரைமலர்
மட்டு அமர் பொழில் வலிவலம் உறை இறையே. 2

---

1. சிலை - வில். ஏவு இயல் கணை - செலுத்தப்பட்ட அம்பு. பிணை - மான். எதிர் – ஒத்த. உரு - மேனி. மா - மாமரங்கள்.

2. இட்டம் - விருப்பம். பொடி - திருநீறு. நசை - விருப்பம். அவிர் - விளங்கும். அணி - அழகு. மட்டு - தேன்.

உரு மலி கடல் கடைவுழி உலகு அமர் உயிர்
வெறுஉறு வகை எழு விடம், வெளிமலை அணி
கருமணி நிகர் களம் உடையவன் - மிடைதரு
மரு மலி பொழில் வலிவலம் உறை இறையே. 3

அனல் நிகர் சடை அழல் அவிஉற என வரு
புனல் நிகழ்வதும், மதி நனை பொறி அரவமும்
என நினைவொடு வரும் இதும், மல முடிமிசை
மனம் உடையவர் - வலிவலம் உறை இறையே. 4

பிடி அதன் உரு உமை கொள, மிகு கரி அது
வடிகொடு, தனது அடி வழிபடுமவர் இடர்
கடி, கணபதி வர அருளினன் - மிகு கொடை
வடிவினர் பயில் வலிவலம் உறை இறையே. 5

---

3. வெளி மலை - வெள்ளி மலையாகிய திருக் கயிலை. களம் - கறை. மிடைதரு - நெருங்கிய. மரு - மணம்.

4. அனல் - தீ. அழல் அவியுற - தீத் தணிய.

5. பிடி - பெண் யானை. கரி - ஆண்யானை. கடி - நீக்கும்.

தரை முதல் உலகினில் உயிர் புணர் தகை மிக,
விரை மலி குழல் உமையொடு விரவு அது செய்து,
நரை, திரை கெடு தகை அது அருளினன் – எழில்
வரைதிகழ் மதில் வலிவலம் உறை இறையே. 6

நலிதரு தரை வர நடை வரும் இடையவர்
பொலிதரு மடவரலியர் மனை அதுபுத
பலி கொள வருபவன் – எழில் மிகு தொழில் வளர்
வலி வரு மதில் வலிவலம் உறை இறையே. 7

இரவணன் இருபதுகரம் எழில் மலைதனின்
இரவணம் நினைதர அவன் முடி பொடிசெய்து,
இரவணம் அமர் பெயர் அருளினன் – நகநெதி
இரவு அண நிகர் வலிவலம் உறை இறையே. 8

---

6. உயிர் புணர் தகை – உயிர்கள் உலக போகங்களை நுகரும் பொருட்டு.

7. தரை வர நலிதரும் நடை வரும் இடையவர் எனக் கூட்டுக. தரையில் மிதிக்கத் தாங்காத மெல்லிய பாதத்தை உடைய முனிவர் மனைவியர் என்க.

8. இரவணன் - இராவணன். இர(ா)வணம் - இருக்காத படி, இரவணம் - அழுதல். இரவு அண்ணா - அடியவர் யாசித்தலைச் செய்ய.

தேன் அமர்தரு மலர் அணைபவன், வலி மிகும்
ஏனம் அது ஆய் நிலம் அகழ் அரி, அடி முடி
தான் அணையா உரு உடையவன் - மிடை கொடி
வான் அணை மதில் வலிவலம் உறை இறையே. 9

இலை மலிதர மிகு துவர் உடையவர்களும்,
நிலைமையில் உணல் உடையவர்களும், நினைவது
தொலை வலி நெடுமறை தொடர் வகை உருவினன் -
மலை மலி மதில் வலிவலம் உறை இறையே. 10

மன்னிய வலிபல நகர் உறை இறைவனை,
இன் இயல் கழுமலநகர் இறை - எழில் மறை
தன் இயல் கலைவல தமிழ்விரகனது - உரை
உன்னிய ஒருபதும் உயர்பொருள் தருமே. 11

திருச்சிற்றம்பலம்

---

9. ... ...

10. இலை மலிதர - வாயில் வெற்றிலை மிக. நிலைமையில் - நின்றபடியே.

11. உன்னிய - கருதிச் சொன்ன.

1 : 124 திருவீழிமிழலை

திருவிராகம் பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

அலர்மகள் மலிதர, அவனியில் நிகழ்பவர்
மலர் மலி குழல் உமை தனை இடம் மகிழ்பவர்,
நலம் மலி உரு உடையவர், நகர் மிகு புகழ்
நிலம் மலி மிழலையை நினைய வல்லவரே. 1

இருநிலம் இதன்மிசை எழில் பெறும் உருவினர் -
கரு மலிதரு மிகுபுவி முதல் உலகினில்
இருள் அறு மதியினர், இமையவர் தொழுது எழு
நிருபமன், மிழலையை நினைய வல்லவரே. 2

---

1. அலர் மகள் - தாமரையாள், திருமகள், செல்வம், மலிதர - மிகுதியாகி, அவனி - நிலவுலகம், நிகழ்பவர் - வாழ்பவர். இடம் - இடப்பாகம். நலம் - நன்மை. நன்மை மிகுந்து விளங்கும் உருவுடையவர் இறைவர்: நிலம் மிகுபுகழ் மலிமிழலை எனக் கூட்டுக. வலவர் – வல்லவர்.

2. இருநிலம் - பெரிய உலகம். மிசை - மேல். கரு மலிதரு மிகு புவிமுதல் உலகு - பிறவிகள் மிகுந்த சிறந்த மண்ணுலகம் முதலான எல்லா உலகங்களிலும் உள்ள, இருள் அறு மதியினர் - அறியாமை மாசு நீங்கிய அறிவர். இமையவர் - தேவர்கள். நிருபமன் - உவமை இல்லாதவர்.

"கலைமகள் தலைமகன், இவன்" என வருபவர் -
அலை மலிதரு புனல், அரவொடு, நகுதலை,
இலைமலி இதழியும், இசைதரு சடையினர்
நிலைமலி மிழலையை நினைய வல்லவரே. 3

மாடுஅமர் சனம் மகிழ்தரு மனம் உடையவர் -
காடுஅமர் கழுதுகள் அவை முழவொடும் இசை
பாடலின் நவில்பவர் மிகுதரும் உலகினில்
நீடுஅவர் மிழலையை நினைய வல்லவரே. 4

புகழ்மகள் துணையினர் - புரிகுழல் உமைதனை
இகழ்வு செய்தவன் உடை எழில் மறைவழி வளர்
முகம்அது சிதைதர முனிவு செய்தவன் மிகு
நிகழ்தரு மிழலையை நினைய வல்லவரே. 5

---

3. தலைமகன் - தலைவன். கலைமகள் தலைமகன் - கலைஞானி. இதழி - கொன்றை. இசைதரு - கூடியிருக்கும். நிலை மலி - என்றும் நிலையாயுள்ள.

4. மாடு - பக்கம். மாடு அமர்சனம்-சுற்றத்தார். கழுது - பேய். நீடு - நீண்ட காலம்.

5. புகழ் மகள் துணையினர் - புகழுடையர் உமைதனை இகழ்வு செய்தவன் - நான்முகன். மறைவழி வளர் முகம் - வேத நெறியில் சிறந்து விளங்கும் ஒரு தலை. சிதைதர முனிவு செய்தவன் - கொய்தவனாகிய சிவன்.

'அன்றினர் அரி' என வருபவர் – அரிதினில்
ஒன்றிய திரிபுரம் ஒருநொடியினில் எரி
சென்று கொள் வகை சிறுமுறுவல்கொடு ஒளிபெற
நின்றவன் மிழலையை நினைய வல்லவரே. 6

கரம் பயில் கொடையினர் – கடிமலர் அயனது ஓர்
சிரம் பயில்வு அறஎறி சிவன் உறை செழுநகர்,
வரம் பயில் கலைபல மறை முறை அறநெறி
நிரம்பினர் மிழலையை நினைய வல்லவரே. 7

ஒருக்கிய உணர்வினொடு ஒளிநெறி செலுமவர் -
அரக்கன் நல்மணிமுடி ஒருபதும், இருபது
கரக்கனம் நெரிதர, மலர் அடிவிரல்கொடு
நெருக்கினன் மிழலையை நினைய வல்லவரே. 8

---

6. அன்றினர் அரி - பகைவர்க்குச் சிங்கம் போன்றவர். எரி சென்று கொள்வகை - தீப்பற்றி நீருகும்படி. முறுவல் - புன் சிரிப்பு. ஒளி பெற - விளக்கம் உண்டாக.

7. கரம் பயில் கொடையினர் - கொடை பயில் கரத்தினர் - வண்கையர், கொடையாளர். பயில்வு அற எறி சிவன் - கொய்த சிவன். வரம் - மேன்மை. மறை முறை - வேதநெறி.

8. ஒருக்கிய உணர்வினொடு ஒளி நெறி செலும் அவர் - முதல்வனோடு ஒன்றுபட்ட உணர்வுடையராகி அவனது ஞானமாகிய சிவஞான நெறியில், அருள் நெறியில் செல்லுபவர். கரக்கனம் - கைகளின் பெருமை.

அடியவர் குழுமிட அவனியில் நிகழ்பவர் -
கடிமலர் அயன், அரிகருத(அ)ரு வகை தழல்
வடிவு உருஇயல்பினொடு உலகுகள் நிறைதரு
நெடியவன் மிழலையை நினைய வல்லவரே. 9

மன்மதன் என ஒளி பெறுமவர் - மருது அமர்
வன்மலர் துவர் உடையவர்களும், மதிஇலர்,
துன்மதி அமணர்கள், தொடர்வு அருமிது புகழ்
நின்மலன் மிழலையை நினைய வல்லவரே. 10

நித்திலன் மிழலையை, நிகர்இலி புகலியுள்
வித்தக மறைமலி தமிழ் விரகன மொழி
பத்தியில் வருவன பத்து இவை பயில்வொடு
கற்றுவ வல்லவர் உலகினில் அடியவரே. 11

திருச்சிற்றம்பலம்

9. குழுமிட - கூட்டமாக ஒன்று சேர. அவனியின் நிகழ்பவர் - உலகில் வாழ்பவர். கருத அரு வகை - அறிய முடியாதபடி. நெடியவன் - நீண்டு உயர்ந்தவன்.

10. ஒளி - உடல் விளக்கம், வனப்பு. மருது அமர் வன் மலர் துவர் - மருத மலரால் ஊட்டப்பட்ட காவி. துன் மதி - பிறர்க்குத் தீமை கருதும் அறிவு.

11. நித்திலம் - முத்து நித்திலன் - முத்துப் போன்ற இயல்பான தூயவன்.

1 : 125 **திருச்சிவபுரம்**

திருவிராகம் பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கலைமலி அகல் அல்குல் அரிவைதன் உருவினன்,
முலை மலிதரு திருஉருவம்அது உடையவன்,
சிலைமலி மதில் பொதி சிவபுரநகர் தொழ,
இலை, நலிவினை; இருமையும் இடர் கெடுமே. 1

படர் ஒளி சடையினன், விடையினன், மதில் அவை
சுடர்எரி கொளுவிய சிவன்அவன் உறை பதி
திடல் இடு புனல் வயல் சிவபுரம் அடைய, நம்
இடர் கெடும்; உயர்கதி பெறுவது திடனே. 2

வரை திரிதர, அரவு அகடு அழல் எழ, வரு
நுரைதரு கடல்விடம் நுகர்பவன்-எழில்திகழ்
திரை பொரு புனல் அரிசில்அது அடை-சிவபுரம்
உரைதரும் அடியவர் உயர்கதியினரே. 3

---

1. கலை - ஆடை. அகன் அல்குல் - அகன்ற அடி வயிறு தன் உருவினன் - தனக்கு உருவாகக் கொண்டவன், தனது உருவில் இடம் தந்தவன்.

2. திடல் - மேடு. திடன் - உறுதி.

3. வரை - மந்தர மலை. அரவு அகடு அழல் எழ - வாசுகிப் பாம்பின் உடம்பில் வெம்மை மிகுந்து உண்டாக. கடல் கடையும் போது மந்தர மலை மத்தாகவும் வாசுகி கயிறாகவும் இருந்தன என்பது வரலாறு.

துணிவு உடையவர்; சுடு பொடியினர்; உடல் அடு
பிணி அடைவு இலர்; பிறவியும் அற விசிறுவர்-
திணிவு உடையவர் பயில் சிவபுரம் மருவிய
மணிமிடறனது அடி இணை தொழுமவரே. 4

மறையவன், மதியவன், மலையவன், நிலையவன்,
நிறையவன், உமையவள் மகிழ் நடம் நவில்பவன்,
இறையவன்–இமையவர் பணிகொடு சிவபுரம்
உறைவு என உடையவன், எமை உடையவனே. 5

முதிர்சடை இளமதி, நதிபுனல் பதிவுசெய்து,
அதிர்கழல் ஒலிசெய அருநடம் நவில்பவன்;
எதிர்பவர் புரம் எய்த இணையிலி அணை பதி-
சதிர் பெறும் உளம் உடையவர் சிவபுரமே. 6

---

4. உடல் அடுபிணி - உடம்பை வருத்தும் நோய். அற விசிறுவர் - கெடுமாறு செய்வார். தணிவு - அடக்கம்.

5. மதியவன் - பிறைமதி சூடியவன். மலையவன்- கயிலை மலைக்கு உரியவன். நிலையவன் - எக்காலத்தும், எல்லாவிடத்தும் நிலைத்த பொருளானவன். நிறை யவன் - நிறைவுடையன், எண்ணம் திரியாதவன்.

6. எதிர் பவர் - மாறுபட்டு எதிர்த்து நிற்கும் அசுரர் மூவர். இணை இலி - ஒப்பு இல்லாதவன். சதிர் - திறமை.

வடிவு உடை மலைமகள், சலமகள் உடன் அமர்,
பொடிபடும் உழைஅதள் பொலிதிருஉருவினன்,
செடி படுபலி திரி சிவன் உறை சிவபுரம்
அடைதரும் அடியவர் அருவினை இலரே. 7

கரம் இருபதும் முடி ஒருபதும் உடையவன்
உரம் நெரிதர வரை அடர்வு செய்தவன் உரை,
'பரன்' என அடியவர் பணிதரு சிவபுர
நகர்அது புகுதல் நம் உயர்கதி அதுவே. 8

" அன்று இயல் உருவு கொள் அரி அயன்எனுமவர்
சென்று அளவிடல் அரியவன் உறை சிவபுரம் "
என்று இருபொழுதும் முன் வழிபடுமவர் துயர்
ஒன்று இலர்; புகழொடும் உடையர், இவ் உலகே. 9

---

7. மலை மகள் - உமை. சல மகள் - கங்கை; உழை அதள் - மான் தோல். செடி - நாற்றம்.

8. உரம் - மார்பு, வலிமை. அடர்வு செய்தவன் - அழுத்தியவன்.

9. அன்று இயல் உருவு - முரண்பட்ட இயல்புடைய உருவம். அரி - திருமால். அயன் - நான்முகன்.

புத்தரொடு அமணர்கள் அறஉரை புறஉரை,
வித்தகம் ஒழிகில; விடை உடை அடிகள்தம்
இத்தவம் முயல்வுஉறில், இறைவன் சிவபுரம்
மெய்த்தக வழிபடல் விழுமிய குணமே. 10

புந்தியர் மறை நவில் புகலி மன் ஞானசம்
பந்தன தமிழ்கொடு, சிவபுரநகர் உறை
எந்தையை உரைசெய்த இசை மொழிபவர், வினை
சிந்தி முன்உற, உயர்கதி பெறுவர்களே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. மெய்த்தக - உண்மையாக. விழுமிய - மேன்மையான.

11. புந்தியர் - புத்தி உடையர். சிந்தி - கெட்டு.

1 : 126 திருக்கழுமலம்

திருத்தாளச்சதி பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பந்தத்தால் வந்து எப்பால் பயின்று நின்ற உம்பர், அப்
பாலே சேர்வுஆய் ஏனோர், கான் பயில் கண
முனிவர்களும்,
சிந்தித்தே வந்திப்பச், சிலம்பின் மங்கைதன்னொடும்
சேர்வார், நாள்நாள் நீள்கயிலைத் திகழ்தரு பரிசு
அதுஎலாம்
சந்தித்தே, இந்தப் பார்சனங்கள் நின்று தம் கணுல்
தாமே காண வாழ்வார் அத்தகவு செய்தவனது இடம்-
கந்தத்தால் எண்திக்கும் கமழ்ந்து இலங்கு சந்தனக்
காடு ஆர், பூ ஆர், சீர் மேவும் கழுமல வளநகரே. 1

---

1. பந்தம் - பாசக்கட்டு. எப்பால் - எவ்விடத்திலும். பயின்று - பழகி. உம்பர் - வானவர். அப்பாலே சேர்வாய் ஏனோர் - அப்பாலும் அடிசேர்ந்தார். கான்பயில் - காட்டில் தவம் செய்யும். சிலம்பின் மங்கை - மலைமகளான உமை. கந்தம் - மணம்.

பிச்சைக்கே இச்சித்துப், பிசைந்து அணிந்த வெண்பொடிப்
பீடு ஆர் நீடு ஆர் மாடு ஆரும் பிறைநுதல் அரிவை
யொடும்
உச்சத்தான் நச்சிப் போல் தொடர்ந்து அடர்ந்தவெங்
கண் ஏறு
ஊரா ஊரா, நீள்வீதிப் பயில்வொடும் ஒலிசெய் இசை
வச்சத்தால் நச்சுச் சேர் வடம் கொள்கொங்கை மங்கைமார்
வாரா, நேரே மால் ஆகும் வசி வல அவனது இடம் -
கச்சத்தான் மெச்சிப் பூக் கலந்து இலங்கு வண்டுஇனம்
கார் ஆர் கார் ஆர் நீள் சோலைக் கழுமல வள நகரே. 2

---

2. பீடு - பெருமை. நீடு - நெடுங்காலம். மாடு - பக்கம். உச்சம் - உச்சிப்பொழுது. நச்சி - விரும்பி. ஊரா - ஊர்ந்து. ஊர்ஆம் நீள்வீதி - ஊரிலுள்ள நெடுந்தெரு. இசை வச்சத்தால்-பாடலை வைத்ததால். வாரா - வந்து. மால் - மயக்கம். வசிவல அவன் - பிறரை வயப்படுத்துவதில் வல்லவன். கார்-(1) கருமை (2) மேகம்.

திங்கட்கே தும்பைக்கே திகழ்ந்து-இலங்கு மத்தையின்
சேரேசேரே, நீர்ஆகச் செறிதரு சுரநதியோடு,
அங்கைச் சேர்வு இன்றிக்கே அடைந்து உடைந்த வெண்
தலைப்
பாலே மேலே மால் ஏயப் படர்வுஉறும் அவன் இறகும்,
பொங்கப் பேர் நஞ்சைச் சேர்புயங்கமங்கள்,
கொன்றையின்
போது ஆர் தாரேதாம், மேவிப் புரிதரு சடையன்
இடம்-
கங்கைக்கு ஏயும் பொற்பு ஆர் கலந்து வந்த பொன்னியின்
காலே வாரா மேலே பாய் கழுமல வள நகரே. 3

---

3. திங்கள் - பிறை. மத்தை-ஊமத்தை. சுரநதி-கங்கை. சேர்வு இன்றி - சேராமல். அடைந்து - முடியைச் சேர்ந்து. பாலை - பக்கமாக. மால்ஏயப் படர்வுறு அவன் இறகு - அறிவு மயங்கி முடிகாண்பேன் என்று வானில் பறந்து சென்ற அயனை அன்னத்தின் இறகு. புயங்கமம் - பாம்பு. ஏயும்-ஒக்கும். பொன்னி-காவிரி. கால் - வாய்க்கால். வாரா - வந்து.

அண்டத்தால் எண்திக்கும் அமைந்து அடங்கும் மண்
தலத்து
ஆறே, வேறே வான் ஆள்வார் அவர் அவர் இடம்அது
எலாம்
மண்டிப் போய் வென்றிப் போர் மலைந்து அலைந்த
உம்பரும்
மாறு ஏலாதார்தாம் மேவும் வலி மிகு புரம் எரிய,
முண்டத்தே வெந்திட்டே முடிந்து இடிந்த இஞ்சிசூழ்
மூவா மூதூர் மூதூரா முனிவு செய்தவனது இடம்-
கண்டிட்டே செஞ்சொல் சேர் கவின் சிரந்தமந்திரக்
காலே ஓவாதார் மேவும் கழுமல வள நகரே. 4

---

4. அண்டம் - வானுலகம். அமைந்து அடங்கும் மண்டலத்து வானில் அடங்கிய - வானுலகத்தே அடங்கிய பகுதி. மண்டிப்போய் - மேலெழுந்து சென்று. வென்றி - வெற்றி. மலைந்து - போரிட்டு. உம்பர் – மேலிடத்தார். மாறு ஏலாதார் - வானவர். எதிர்த்துப் போரிட முடியாத அசுரர். புரம்-முப்புரம். இஞ்சி - மதில். முனிவு - கோபம்.

திக்கில் தேவு அற்று அற்றே திகழ்ந்து இலங்கு மண்டலச்
சீறு ஆர் வீறு ஆர் போர் ஆர் தாருகன் உடல்,
அவன் எதிரே
புக்கிட்டே வெட்டிட்டே, புகைந்து எழுந்த சண்டத்தீப்
போலே, பூ, நீர், தீ, கால், மீப்புணர்தரும் உயிர்கள்
திறம்
சொக்கத்தே நிர்த்தத்தே தொடர்ந்த மங்கை செங்கதத்
தோடு ஏயாமே, மா லோகத் துயர் களைபவனது இடம்-
கைக்கப் போய்உக்கத்தே கனன்று மிண்டு தண்தலைக்
காடே ஓடா ஊரே சேர் கழுமல வள நகரே. 5

---

5. திக்கில் தேவு அற்று அற்றே திகழ்ந்து இலங்கு மண்டலம் - திசைக் காவலர் அங்கங்கே இருந்து விளங்கும் உலகம். தாரகன் - ஓர் அசுரன். சண்டத் தீ- ஊழித் தீ. பூ - நிலம். கால் - காற்று. மீ - வானம். சொக்கம் - சொர்க்கம். நிர்த்தம் - நடனம். மங்கை - காளி. கதம் - கோபம். ஏயாமே - பொருந்தாமல். மாலோகம் - பெரிய இவ் உலகம். கைக்க - வெறுக்க. யுக்கம் - ஊழித்தீ. மிண்டு தண் தலைக்காடு - அழியாது நின்ற குளிர்ந்த காடுகள்.

செற்றிட்டே வெற்றிச் சேர் திகழ்ந்த தும்பி மொய்ம் புஉறும்
சேரே வாரா, நீள்கோதைத் தெரியிழை பிடிஅதுஆய்
ஒற்றைச் சேர் முற்றல் கொம்பு உடைத் தடக்கை முக்கண் மிக்கு
ஓவாதே பாய் மா தானத்து உறு புகர் முக இறையைப்
பெற்றிட்டே, மற்று இப் பார் பெருத்து மிக்க துக்கமும்,
பேரா நோய்தாம் ஏயாமைப் பிரிவு செய்தவனது இடம்—
கற்றிட்டே எட்டு எட்டுக் கலைத்துறைக் கரைச் செலக்
காணுதாரே சேரா மெய்க் கழுமல வள நகரே. 6

6. செற்றிட்டு - அசுரர் பலரைக் கொன்று. தும்பி-ஆண்யானை என்றது சிவபெருமானை. தெரிஇழை - உமையாள். பிடியதுவாய் - பெண் யானை உருக் கொண்டு. புகர் முகஇறை - யானை முகத்து மூத்த பிள்ளையார். பேரா நோய் - தீராநோய். காணுதார் - கற்றபின் அதன்படி நில்லாதார்.

பத்திப் பேர் வித்திட்டே, பரந்த ஐம்புலன்கள்வாய்ப்
பாலே போகாமே காவா, பகை அறும் வகைநினையா,
முத்திக்குஏவி, கத்தே முடிக்கும் முக்குணங்கள் வாய்
மூடா, ஊடா, நால்அந்தக்கரணமும் ஒரு நெறிஆய்,
சித்திக்கே உய்த்திட்டுத் திகழ்ந்த மெய்ப் பரம்பொருள்
சேர்வார்தாமே தன் ஆகச் செயுமவன் உறையும்
இடம் -
கத்திட்டோர் சட்டங்கம் கலந்து இலங்கும் நல்பொருள்
காலே ஓவாதார் மேவும் கழுமல வள நகரே, 7

---

7. பேர்வித்து - பெரிய விதை. புலன்கள் வாய்ப் பாலே போகாமே காவா - பொறிவழிச் செல்லாமல் தடுத்து: நினையா - நினைத்து. விக்கத்தே முடிக்கும் - இடையூறு செய்யும். தாமே தானாகச் செயும் அவன் - தன்னை அடைந்தவரைச் சிவமே யாக்கும் பெருமான். சட் அங்கம் - ஆறங்கங்கள், கத்திட்டோர் - கற்றவர், கலந்து இலங்கும் கால் ஓவாதார் - தம் உயிர்க்கு உயிராக, உணர்வுக்கு உணர்வாகக் கலந்து விளங்கும் திருவருளை உணர்வில் விட்டு விலகாதவர்.

செம்பைச் சேர் இஞ்சிச் சூழ் செறிந்து இலங்கு பைம்
பொழில்
சேரே வாரா வாரீசத் திரை எறி நகர் இறைவன் ,
இம்பர்க்கு ஏதம் செய்திட்டு இருந்து, அரன் பயின்ற
வெற்பு,
ஏர் ஆர், பூ நேர் ஓர்பாதத்து எழில் விரல் அவண்
நிறுவிட்டு
அம்பொன் பூண் வென்றித்தோள் அழிந்து வந்தனம்
செய்தாற்கு
ஆர் ஆர் கூர்வாள் வாழ்நாள் அன்று அருள்
புரிபவனது இடம்
கம்பத்து ஆர் தும்பித் திண் கவுள் சொரிந்த மும்மதக்
கார் ஆர், சேறு ஆர், மா வீதிக் கழுமல வள
நகரே. 8

---

8. செம்பைச்சேர் இஞ்சி - செம்புத் தகடு பொதியப் பெற்ற மதில். வாரீசம் - கடல், இம்பர் - இவ்வுலகத்தவர். நிறுவிட்டு - அழுத்தி. வந்தனம் செய்தான் - செருக்கு ஒழிந்து வணங்கி நின்ற இராவணன். கம்பத்து ஆர் தும்பி - தறியில் கட்டப் பட்ட யானை, கவுள் - கன்னம். கார் ஆர் சேறு - கரு நிறம் ஆன சேறு.

பன்றிக் கோலம் கொண்டு இப் பாடித்தடம் பயின்று இடப்
பான் ஆம் ஆறு ஆனுமே, அப் பறவையின்
உருவு கொள
ஒன்றிட்டே அம்புச் சேர் உயர்ந்த பங்கயத்து அவ
னே தான் ஓதான் அஃது உணராது, உருவினது
அடி முடியும்
சென்றிட்டே வந்திப்ப, திருக்களம் கொள் பைங்கணின்
தேசால், வேறு ஓர் ஆகாரம் தெரிவு செய்தவனது
இடம் -
கன்றுக்கே முன்றிற்கே கலந்து இலம் நிறைக்கவும்,
காலே வாரா, மேலே பாய் கழுமல வள நகரே. 9

---

9. படித்தடம் - நிலம், இடப்பான் - தோண்டு வான். தான் மேய பறவை - தான் ஊர்தியாகக் கொண்ட அன்னப்பறவை, அம்பு - நீர், ஏசால் - வல்லமையால். ஆகாரம் - உருவம், கால் வாய்க்கால்;

தட்டு இட்டே முட்டிக்கைத் தடுக்கு இடுக்கி, நின்று உணு,
தாமே பேணுதே நாளும் சமணெடும் உழல்பவரும்;
இட்டத்தாள் "அத்தம்தான் இது அன்று; அது"
என்று நின்றவர்க்கு
ஏயாமே வாய் ஏதுச்சொல், இலை மலி மருதம்பூப்
புட்டத்தே அட்டிட்டுப் புதைக்கும் மெய்க் கொள்
புத்தரும்
போல்வார்தாம் ஓராமே போய்ப் புணர்வு செய்தவன்து
இடம் -
கட்டிக் கால் வெட்டித் தீம்கரும்பு தந்த பைம்புனல்
காலே வாரா, மேலே பாய் கழுமல வள நகரே. 10

10. அத்தம் - மெய்ப்பொருள். ஏயாமே - பொருத்தம் இல்லாமல். மருதம் - மருதோன்றி: புட்டம் பின்புறம். ஓராமே - ஆராயாமல். புணர்வு - சூழ்ச்சி. கால் - கரும்பின் அடி. கரும்பு தந்த புனல் - கருப்பஞ்சாறு. காலே வாரா - வாய்க்காலில் வந்து.

கஞ்சத்தேன் உண்டிட்டே களித்து வண்டு, சண்பகக்,
கானே தேனே போர் ஆரும் கழுமலநகர் இறையைத்
தஞ்சைச் சார் சண்பைக் கோன் சமைத்த நல் கலைத்
துறை,
தாமே போல்வார் தேன் நேர் ஆர் தமிழ்விரகன
மொழிகள்,
எஞ்சத் தேய்வு இன்றிக்கே இமைத்து இசைத்து
அமைத்த கொண்டு,
ஏழே ஏழே நாலே மூன்று இயல் இசை இசை இயல்பா,
வஞ்சத்து ஏய்வு இன்றிக்கே மனம் கொளப்
பயிற்றுவோர்
மார்பே சேர்வாள், வானோர் சீர் மதிநுதல்மடவரலே, 11

திருச்சிற்றம்பலம்

11. கஞ்சம் - தாமரைமலர். சண்பகக் கான் தேன் - சண்பகமரக் காட்டு வண்டு; தஞ்சை - அடைக்கலம். எஞ்சத் தேய்வு இன்றி-குறைவில்லாமல்.

1 : 127

திருப்பிரமபுரம்

ஏகபாதம் பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான், 1

விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணி புரத்தரன், 2

புண்டரி கத்தவன் மேவிய புகலியே
புண்டரி கத்தவன் மேவிய புகலியே
புண்டரி கத்தவன் மேவிய புகலியே
புண்டரி கத்தவன் மேவிய புகலியே. 3

விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன். 4

சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன். 5

பூசுரர் சேர்பூந் தராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந் தராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந் தராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந் தராயவன் பொன்னடி. 6

செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில். 7

பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன். 8

தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான். 9

காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே. 10

கொச்சையண் ணலைக்கூட் கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட் கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட் கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட் கிலாருடன் மூடரே. 11

கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை. 12

திருச்சிற்றம்பலம்

1 : 128 திருப்பிரமபுரம்

திருஎழுகூற்றிருக்கை பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

ஓர்உரு ஆயினை; மான் ஆங்காரத்து
ஈர் இயல்புஆய், ஒரு விண் முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்து, அளித்து, அழிப்ப, மும்மூர்த்திகள் ஆயினை;
இருவரோடு ஒருவன் ஆகி நின்றனை;

---

1. ஓர் உரு - படைப்பின் பொருட்டு இச்சையால் கொண்ட திரு மேனி. மான் - சத்தி; ஆங்காரத்து - ஐந்தொழில்களைச் செய்யக் கருதிய நிலையில்.

2. ஈர் இயல்பு - சிவமும் அவனது அருளும். ஒரு - பூதங்களுள்ளே ஒப்பு அற்றதான; சிவமும் அருளும் என இரண்டாயினும் பிரிவிலாத நிலையில் ஒன்று. விண் முதல் பூதலம் - ஐந்து பூதங்கள்.

3 ஒன்றிய இரு சுடர் - ஒளிதரும் வகையில் ஒன்று பட்டனவாகிய கதிரவனும் திங்களும்; உம்பர்கள் - வானுலகத்தவர்.

4. அளித்து - காத்து. மும்மூர்த்திகள் - அயன் அரி அரன்.

5. இருவர் - அரியும் அயனும்; சதாசிவமும் ஈசுரனும்; அனந்தரும் சீகண்டரும்.

ஓர் ஆல்நீழல், ஒண்கழல் இரண்டும்
முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி
காட்டினை; நாட்டம் மூன்றுஆகக் கோட்டினை;
இருநதி அரவமோடு ஒருமதி சூடினை;
ஒருதாள் ஈர்அயில் மூஇலைச் சூலம்,

---

6. ஓர் - ஒப்பற்ற. ஒண் கழல் இரண்டு - விளக்கம் உடைய அறிவு செயல் ஆகிய இருவகை ஆற்றல்களான இரண்டு திருவடிகள்.

7. நால்வர் - அகத்தியன், புலத்தியன், சனகன், சனற்குமாரன் என்னும் முனிவர் நால்வர். சனகர், சனந்தனர், சனாதரர், சனற்குமாரர் எனவும் உரைப்பர். ஒளி நெறி - சிவஞான நெறி.

8. நாட்டம் - கண். கோட்டினை - கொண்டருளினாய்.

9. இரு நதி - பேராறு ஆகிய கங்கை. அரவம் - பாம்பு. ஒரு மதி - ஒரு நாள் பிறை மதி.

10. ஒரு தாள் - ஓங்காரமாகிய ஒப்பற்ற காம்பு. ஈர் அயில் - வகிர்ந்து செல்லும் கூர்மையான. மூ இலை - அகர உகர மகரங்கள். இச்சை அறிவு செயல் என்னும் மூன்று இலைகள்; அயன் அரன் அரி. எனினும் ஆம்.

நால்கால் மான்மறி, ஐந்தலை அரவம்,
ஏந்தினை; காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருகோட்டு ஒருகரி ஈடு அழித்து உரித்தனை;
ஒருதனு இருகால் வளைய வாங்கி,
முப்புரத்தோடு நானிலம் அஞ்சக்

கொன்று, தலத்து உற, அவுணரை அறுத்தனை;
ஐம்புலன், நால் ஆம் அந்தக்கரணம்,
முக்குணம், இருவளி, ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை; ஒருங்கிய மனத்தோடு
இருபிறப்பு ஓர்ந்து, முப்பொழுது குறைமுடித்து.

---

11. ... ...

12. காய்ந்த - கோபம் கொண்ட. நால்வாய் - தொங்கும் வாய். மும் மதம் - மூவகை மத நீர்கள்.

13. இரு கோடு - இரு தந்தங்கள். கரி - ஆண் யானை. ஈடு - வலிமை.

14. ஒரு தனு - ஒப்பற்ற மலைவில். இருகால் - இரண்டு நுனிகள். வாங்கி - வளைத்து.

15. நால்நிலம் - நிலவுலகத்து வாழ்வார்.

16. தலத்து உற - அவர் உடல்கள் நிலத்தில் பொருந்த. அறுத்தனை - அவர் செருக்கையும் பகைமையையும் ஒழித்தாய்.

17. ஐம்புலன் - மெய், வாய் முதலான ஐந்து பொறிகள். நால் ஆம் அந்தக் கரணம் - மனம் சித்தம் அகங்காரம் புத்தி என்னும் நான்கு உட்கருவிகள்;

நால்மறை ஓதி, ஐவகை வேள்வி
அமைத்து. ஆறு அங்கம் முதல் எழுத்து ஓதி,
வரல் முறை பயின்று, எழுவான்தனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை;
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை;

---

18. முக்குணம் - சத்துவம், இராசதம், தாமதம் ஆகியன. இருவளி - உயிர்க்காற்றும் மலக்காற்றும்; (பிராணன், அபானன்) ஒருங்கிய - ஒன்று கூடிய : வானோர் - உயர்ந்தோர்.

20. இரு பிறப்பு - கருவில் உற்ற உடற் பிறப்பும் குருவருளால் பெற்ற ஞானப் பிறப்பும். குறை முடித்து - செய்ய வேண்டிய கடன்களைச் செய்து.

21. ஐவகை வேள்வி - சீவ வழிபாடு, குருவழிபாடு அடியார் வழிபாடு ; அந்தணர் பேணல், விருந்து ஓம்பல் ஆகியன.

22. ஆறு அங்கம் முதல் எழுத்து ஓதி - மந்திரம் முதலான கருவி நூல்களைக் கற்று ; முதல் எழுத்து என்பதற்கு ஓம் என்னும் மூலமந்திரம் எனவும் உரை கொள்வர். ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பதும் ஓர் உரை. வேறும் கூறுவர்.

23. வரல்முறை - தொன்று தொட்டு வந்து கொண்டிருக்கும் மரபுமுறை. எழுவான் - நீர்மொண்டு எழும் மேகம். வளர்க்கும் - மழையைப் பெருக்கும்.

24. பேணினை - தனக்கு ஓர் இடமாகப் போற்றிக் கொண்டாய்.

25. அறுபதம் - ஆறுகால் உடையதான வண்டு.

இகலி அமைந்து உணர் புகலி அமர்ந்தனை;
பொங்கு நால்கடல் சூழ் வெங்குரு விளங்கினை;
பாணி மூஉலகும் புதைய, மேல் மிதந்த
தோணிபுரத்து உறைந்தனை; தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை;

---

26. இகலி அமைந்து உணர் புகலி - சூரவன்மாவுடன் போரிட்டுத் தோற்ற இந்திரன் தனக்குப் புகலிடம் இது என உணர்ந்து வந்தடைந்த புகலியாகிய சீகாழி. அமர்ந்தனை - விரும்பி வீற்றிருந்தாய்.

27. பொங்கு நால் கடல் சூழ் - நாலாபக்கமும் மேலிட்டு எழுந்த ஊழிப் பெருவெள்ளத்தால் சூழப் பெற்ற.

28. பாணி மூ உலகும் புதைய - ஊழிப் பெரு வெள்ளத்தில் மூவகை உலகமும் மூழ்கிப் போக. மேல் மிதந்த தோணிபுரம் - தான் மாத்திரம் மூழ்கிவிடாமல் நீர் மேல் தோணி போல மிதந்து நின்ற தோணிபுரம் ஆகிய சீகாழி.

29. தொலையா - கெடாத. இருநிதி - சங்கநிதியும் பதுமநிதியும்.

30. வாய்ந்த - நிரம்பிய. ஏய்ந்தனை - பொருந்தியிருந்தாய்.

வர புரம் என்று உணர் சிரபுரத்து உறைந்தனை;
ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன்
விறல் கெடுத்து அருளினை; புறவம் புரிந்தனை;
முந்நீர்த் துயின்றோன், நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை; சண்பை அமர்ந்தனை;

---

31. வரபுரம் - வேண்டுவன வேண்டிப் பெறுதற்குச் சிறந்த ஊர்.

32. ஒரு மலை - தனக்கு ஒத்தது வேறு இல்லாத ஒன்றேயான திருக்கயிலைமலை. இருதிறல் - மிகுந்த வலிமை. அரக்கன் - இராவணன்.

33. விறல் கெடுத்து அருளினை - விரலால் மலையை அழுத்தி அவனது செருக்கினை ஒழித்துப், பின்னர் அவனது இசைக்கு இரங்கி வாளும் நாளும் கொடுத்தருளினாய். புரிந்தனை - விரும்பினாய்.

34. முந்நீர்த் துயின்றோன் – பாற்கடலில் பள்ளி கொண்ட திருமால்.

35. பண்பு - தனக்கே உரியதான தன்மை.

ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை;
எச்சன் ஏழ்இசையோன் கொச்சையை மெச்சினை;
ஆறு பதமும், ஐந்து அமர் கல்வியும்,
மறை முதல் நான்கும்,
மூன்று காலமும், தோன்ற நின்றனை;
இருமையின் ஒருமையும், ஒருமையின் பெருமையும்,
மறு இலா மறையோர்

---

36. ஐயுறும் - உண்டாம், இல்லை ஆம், உண்டும் இல்லையும் ஆம், .. என்று இவ்வாறெல்லாம் ஒரு துணிவுக்கும் வராத நிலையை உடைய. தேரர் - புத்தர்.

37. ஊழியும் உணரா - ஊழிக்காலம் வரையிலுங்கூட உணரப்படாத. காழி - சீகாழி.

38. எச்சன் - வேள்வி இயற்றுவோன். ஏழிசை யோன் - ஏழிசை வல்லான். எச்சனும் இசையோனு மான பராசரமுனிவன்.

39. ஆறு பதம் - பிரபத்தி, பிரத்தியாகாரம், துரியம், துரியா தீதம், வித்தை, அவித்தை என்பது பழைய உரை. பிரம்ம பதம், விட்டுணு பதம், உருத்திர பதம், மகேசுர பதம், சதாசிவ பதம், பரம பதம் எனவும் கூறுவர். ஐந்து அமர் கல்வி - ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், விரையம் என்னும் ஐந்து என்பர்.

40. 41. ....

கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கஉணியன் அறியும்;
அனைய தன்மையை ஆதலின், நின்னை
நினைய வல்லவர் இல்லை, நீள் நிலத்தே,

திருச்சிற்றம்பலம்

---

42. இருமையின் ஒருமை - இரண்டு பொருள்கள் அதுஅதுவாய் ஒற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்றலுக்கு ஏதுவாகிய இரண்டன்மை, அத்துவிதம் என்ற உறவுநிலை. ஒருமையின் பெருமை - அத்தகைய ஒருமை உறவின் மேன்மை. சத்தி சிவங்களாய் இருந்துள்ள இரண்டும் ஒன்றாய் அர்த்த நாரீசுவர வடிவமாய் இருந்துள்ளமையும், தானே ஒரு எல்லை இல்லாத சிவமாய் இருந்துள்ளமையும், பழைய உரைக் குறிப்பு.

43. மறையோர் - மறையவர். மறை ஓர் - மறைப் பொருளை ஆராய்ந்து உணரும்.

44. கழுமல முதுபதிக் கவுணியன் - மலமாசு கழுவப் பெற்ற கவுணியர் குலத்தோன்றல். கட்டுரை - யாத்துக் கூறிய உரையின் உட்பொருளை.

45. கழுமல முதுபதி - கழுமலம் எனப்பட்ட பழமையான ஊர். க உணியன் அறியும் - நான் முகனது தலை ஓட்டில் யாசித்து உண்டவனாகிய நீயே அறிவாய்.

46. அனைய தன்மையை - தன் இயல்பைத் தானே அறியும் அத்தகைய தன்மையினை உடையாய்: பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணி புரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சை, கழுமலம் என்பன இத்தலப் பெயர்கள்

1 ; 129 திருக்கழுமலம்

பண் : மேகராகக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

"சே உயரும் திண்கொடியான் திருவடியே
சரண்" என்று, சிறந்த அன்பால்
நா இயலும் மங்கையொடு நான்முகன்தான்
வழிபட்ட நலம் கொள் கோயில் –
வாவிதொறும் வண்கமலம் முகம் காட்டச்,
செங்குமுதம் வாய்கள் காட்டக்,
காவி, இருங் கருங்குவளை, கருநெய்தல்
கண் காட்டும் கழுமலமே. 1

1. சே – எருது. சரண்-அடைக்கலம், புகலிடம். சிறந்த அன்பு - கட்டுக் காலத்தும் முத்திக்காலத்தும் உயிர்கட்கு உதவிவரும் பெருங் கருணையை உணரும் போது அப்பெருமான்பால் பெருகி வரும் அன்பு; பிறர் யார்க்கும் போன்று அல்லாமல் தனிப்படச் செலுத்தும் அன்பு. நா இயலும் மங்கை–நாமகளாகிய கலைமகள். வாவி - பொய்கை. வண் கமலம்-வளமான தாமரை மலர். குமுதம் - ஆம்பல். காவி-நீலமலர்.

பெருந்தடங்கண் செந்துவர்வாய்ப் பீடு உடைய
மலைச்செல்வி பிரியா மேனி
அருந்தகைய சுண்ணவெண் நீறு அலங்கரித்தான்,
அமரர் தொழ அமரும் கோயில் –
தரும் தடக்கை முத்தழலோர் மனைகள் தொறும்
இறைவனது தன்மை பாடிக்,
கரும் தடம் கண்ணார் கழல் பந்து அம்மானைப்
பாட்டு அயரும் கழுமலமே. 2

அலங்கல் மலி வானவரும் தானவரும்
அலைகடலைக் கடையப், பூதம்
கலங்க, எழு கடுவிடம் உண்டு இருண்ட மணி
கண்டத்தோன் கருதும் கோயில்–
விலங்கல் அமர் புயல் மறந்து, மீன் சனி புக்கு,
ஊன் சலிக்கும் காலத்தானும்
கலங்கல் இலா மனப், பெரு வண்கை உடைய
மெய்யர் வாழ் கழுமலமே. 3

---

2. பெருந்தடம் - பெரிதாய் அகன்ற. பீடு - பெருமை. மலைச்செல்வி - மலைமகள். தரும் - வழங்குதலில் சிறந்த. முத்தழல் - முத்தீ.

3. அலங்கல் - மாலை. தானவர் - அசுரர். விலங்கல் - மலை. புயல் - மேகம். மீன் - மகரராசி. புக்கு - புகுந்து. ஊன் - உடம்பு. சலிக்கும் - வாடும். மழை இல்லாமல் வறண்ட காலம். கலங்கல் இலாப் பெருமணம் பெருவண்கை என இயைக்க. மெய்யர் - உண்மையுள்ளவர்.

பார்இதனை நலிந்து, அமரர் பயம் எய்தச்,
சயம் எய்தும் பரிசு, வெம்மைப்
போர் இசையும் புரம் மூன்றும் பொன்ற ஒரு
சிலை வளைத்தோன் பொருந்தும் கோயில்—
வார் இசை மென்முலை மடவார் மாளிகையின்
சூளிகைமேல் மகப் பாராட்டக்
கார் இசையும் விசும்பு இயங்கும் கணம் கேட்டு
மகிழ்வு எய்தும் கழுமலமே. 4

ஊர்கின்ற அரவம், ஒளிவிடு திங்களொடு
வன்னி, மத்தம், மன்னும்
நீர் நின்ற கங்கை, நகுவெண்தலை சேர்
செஞ்சடையான் நிகழும் கோயில்—
'ஏர் தங்கி, மலர் நிலவி இசை வெள்ளி
மலை' என்ன நிலவி நின்ற,
கார்வண்டின் கணங்களால், கவின்பெருகு
சுதைமாடக் கழுமலமே. 5

---

4 பார் – உலகவர். நலிந்து - வருந்த. சயம் - வெற்றி. பரிசு - தன்மை. வெம்மைப் போர் - கடும் போர். பொன்ற - அழிய. ஒரு சிலை - ஒப்பற்றதான மலைவில். வார் - கச்சு. சூளிகை - மேல் மாடம். மக - குழந்தை. கார் – நீலநிறம். விசும்பு இயங்கும் கணம் - வானவர் கூட்டம்.

5 வெள்ளிமலை - கயிலைமலை. கார் - கருமை. சுதை - சுண்ணம்புச் சாந்து.

"தரும் சரதம் தந்தருள்!'' என்று அடிநினைந்து,
தழல் அணைந்து, தவங்கள் செய்த
பெருஞ் சதுரர், பெயலர்க்கும் பீடு ஆர்
தோழமை அளித்த பெருமான் கோயில்—
அரிந்த வயல் அரவிந்தம் மது உகுப்ப,
அது குடித்துக் களித்து வாளை,
கருஞ் சகடம் இளக, வளர் கரும்பு இரிய,
அகம் பாயும் கழுமலமே. 6

---

6. தரும் சரதம் - தருவேன் என்னும் உறுதி, வரம். தழல் அணைந்த தவம் – தீ நடுவாக நின்று செய்யும் தவம். சதுரர் - திறனுளர். பெயலர் - மழையில் நின்று முயல்வார். அரிந்த - பயிர் அறுத்த. அரவிந்தம் - தாமரை. மது உகுப்ப - தேன் சொரிய. வாளை - வாளைமீன். கரும் சகடம் இளக - பெரிய வண்டிகள் கட்டுஅற. கரும்பு இரிய - கரும்புகள் நெருக்கம் நீங்க.

புவி முதல் ஐம்பூதம் ஆய், புலன் ஐந்து ஆய்,
நிலன் ஐந்து ஆய், கரணம் நான்கு ஆய்,
அவைஅவை சேர் பயன்உரு ஆய், அல்ல உரு
ஆய் நின்றான் அமரும் கோயில்-
தவம் முயல்வோர் மலர் பறிப்பத், தாழ விடு
கொம்பு உதைப்பக், கொக்கின் காய்கள்
கவண் எறி கல்போல் சுனையின் கரை சேரப்.
புள் இரியும் கழுமலமே. 7

அட்டல் வந்த வானவரை அழித்து, உலகு
தெழித்து, உழலும் அரக்கர்கோமான்
மிட்டல் வந்த இருபது தோள் நெரிய விரல்
பணிகொண்டோன் மேவும் கோயில்-
நட வந்த உழவர், "இது நடவு ஒணு
வகை பரலாய்த்து" என்று துன்று
கட்டல் வந்த சங்கு ஈன்ற முத்து வயல்
கரை குவிக்கும் கழுமலமே. 8

---

7. பூதம் - பெரும்பூதங்களும் அவற்றின் முதல்களான நுண்பூதங்களும் (தன்மாத்திரைகள்), புலன்-பொறிகள். நிலன் - செயல் கருவிகள். கரணம் - உட்கருவிகள். பயன் உரு - உடம்பும் உலகமும் போகப் பொருள்களும். அல்ல உருவாய் - அவையே ஆகியும் அவை அல்லாத வேறாகியும் கொம்பு-கிளை. கொக்கு - மா. புள் இரியும் - பறவைகள் ஓடும்.

8. அடல் - வலிமை. தெழித்து - கலங்கச்செய்து. மிடல் - வலிமை. பணி - செயல். நடவொணு வகை - நடுதலைச் செய்ய முடியாதபடி. பரல் ஆய்த்து - பரல் கல்லாயிற்று. துன்று - நெருங்கி. வயல் கரை-வரப்பு.

பூமகள்தன் கோன், அயனும், புள்ளினொடு
கேழல் உருஆகிப் புக்கிட்டு,
ஆம் அளவும் சென்று, முடி அடி காணா
வகை நின்றான் அமரும் கோயில்-
பா மருவும் கலைப் புலவோர் பல்மலர்கள்
கொண்டு அணிந்து, பரிசினாலே
காமனைகள் பூரித்துக் களி கூர்ந்து
நின்று, ஏத்தும் கழுமலமே. 9

குணம் இன்றிப் புத்தர்களும், பொய்த்தவத்தை
மெய்த்தவம் ஆய் நின்று கையில்
உணல் மருவும் சமணர்களும், உணராத
வகை நின்றான் உறையும் கோயில் -
மணம் மருவும் வதுவை ஒலி, விழவின் ஒலி,
இவை இசைய மண்மேல் - தேவர்
கணம் மருவும் மறையின் ஒலி கீழ்ப்படுக்க,
மேல்படுக்கும் கழுமலமே. 10

9. பூமகள் கோன் - திருமால். புள் - அன்னப் பறவை. கேழல் - ஆண்பன்றி. புக்கிட்டு - புகுந்து, பூரித்து.

10. வதுவை ஒலி - திருமண ஒலி. மண்மேல் தேவர் - பூசுரர் ஆகிய அந்தணர்.

கற்றவர்கள் பணிந்து ஏத்தும் கழுமலத்துள்
ஈசன்தன் கழல்மேல், நல்லோர்
நல் துணை ஆம் பெருந்தன்மை ஞானசம்
பந்தன்தான் நயந்து சொன்ன
சொல் துணை ஓர் ஐந்தினெடு ஐந்து இவைவல்லார்
தூ மலராள் துணைவர் ஆகி,
முற்று உலகம்அது ஆண்டு, முக்கணுன்
அடி சேர முயல்கின்றுரே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. தூமலராள் - திருமகள். மலராள் துணைவர்-செல்வவளம் சேர்ந்தவர், நாட்டின் காவலன் ஆகிய மன்னன்.

1 : 130 திருஐயாறு

பண் : மேகராகக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

புலன் ஐந்தும் பொறி கலங்கி, நெறி மயங்கி,
அறிவு அழிந்திட்டு, ஐம் மேல் உந்தி,
அலமந்தபோதுஆக, "அஞ்சேல்!" என்று
அருள்செய்வான் அமரும் கோயில்-
வலம் வந்த மடவார்கள் நடம் ஆட,
முழவு அதிர, மழை என்று அஞ்சிச்,
சிலமந்தி அலமந்து, மரம் ஏறி,
முகில்பார்க்கும் திரு ஐயாறே. 1

---

1. மயங்கி - குழம்பி. ஐ - கபம். மேல் உந்தி - மேலிட்டு. அலமந்த போது - செய்வது அறியாது திகைத்து நிற்கும் இறுதிக் காலத்தில். 'அஞ்சேல்' - 'அஞ்சவேண்டாம்'! மழை - இடிமுழக்கம். முகில் - மேகம்.

விடல் ஏறு படநாகம் அரைக்கு அசைத்து,
வெற்பு அரையன் பாவையோடும்
அடல் ஏறு ஒன்று அது ஏறி, "அம் சொலீர்,
பலி!" என்னும் அடிகள் கோயில் -
கடல் ஏறித் திரை மோதிக் காவிரியின் உடன்
வந்து கங்குல் வைகித்,
திடல் ஏறிச் சுரிசங்கம் செழு முத்து அங்கு
ஈன்று அலைக்கும் திருஐயாறே. 2

கங்காளர், கயிலாய மலையாளர்,
கானப்பேராளர், மங்கை
பங்காளர், திரிசூலப் படையாளர்,
விடையாளர், பயிலும் கோயில் -
கொங்கு ஆள் அப் பொழில் நுழைந்து, கூர்வாயால்
இறகு உலர்த்திக் கூதல் நீங்கிச்,
செங்கால் நல் வெண்குருகு, பைங்கானல்
இரை தேரும் திரு ஐயாறே. 3

---

2. விடல் - வலிமை. வெற்பு அரையன் - மலையரசன். பாவை - உமையாள். அம் சொலீர் ! - அழகாகப் பேசும் மங்கையரே ! பலி - பிச்சை இடுவீராக ! கங்குல் - இரவு. வைகி - தங்கி. திடல் - மணல்திட்டு.

3. கொங்கு - தேன்; கூதல் - குளிர்; கானல் - கடற்கரைச் சோலை.

ஊன் பாயும் உடைதலை கொண்டு ஊர்ஊரன்
பலிக்கு உழல்வார், உமையாள் பங்கர்,
தான் பாயும் விடை ஏறும் சங்கரனுர்,
தழல் உருவர் தங்கும் கோயில்-
மான் பாய, வயல் அருகே மரம் ஏறி,
மந்தி பாய் மடுக்கள் தோறும்
தேன் பாய, மீன் பாயச், செழுங்கமல மொட்டு
அலரும் திரு ஐயாறே. 4

நீரோடு கூவிளமும், நிலாமதியும்,
வெள் எருக்கும், நிறைந்த கொன்றைத்-
தாரோடு, தண்கரந்தை சடைக்கு அணிந்த
தத்துவனுர் தங்கும் கோயில்-
கரர் ஓடி விசும்பு அளந்து, கடி நாறும்
பொழில் அணைந்த கமழ் தார் வீதித்
தேர் ஓடும் அரங்கு ஏறிச் சேயிழையார்
நடம் பயிலும் திரு ஐயாறே. 5

---

4. மடுக்கள் - நீர் நிலைகள்.

5. நீர் - கங்கை. கார் - மேகம்.

வேந்து ஆகி, விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும்
நெறி காட்டும் விகிர்தன் ஆகிப்,
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கு அணிந்த
புண்ணியனர் நண்ணும் கோயில் -
காந்தாரம் இசை அமைத்துக் காரிகையார்
பண் பாடக், கவின் ஆர் வீதி,
"தேம் தாம்" என்று, அரங்கு ஏறிச், சேயிழையார்
நடம் ஆடும் திரு ஐயாறே, 6

நின்று உலாம் நெடுவிசும்பில் நெருக்கி வரு
புரம் மூன்றும் நீள்வாய் அம்பு
சென்று உலாம்படி தொட்ட சிலையாளி,
மலையாளி, சேரும் கோயில் -
குன்று எலாம் குயில் கூவக் கொழும் பிரசமலர்
பாய்ந்து வாசம் மல்க
தென்றலார் அடி வருடச், செழுங் கரும்பு
கண்வளரும் திரு ஐயாறே. 7

---

6. தாமம் - மாலை. கவின் - அழகு. தேம், தாம் - கூத்தொலிக் குறிப்பு.

7. சிலையாளி - வில் ஏந்தியவர். மலையாளி-கயிலை மலையை உடையார். பிரசம் - தேன்.

அஞ்சாதே கயிலாயமலை எடுத்த
அரக்கர்கோன் தலைகள் பத்தும்,
மஞ்சு ஆடுதோள், நெரிய அடர்த்து, அவனுக்கு
அருள்புரிந்த மைந்தர் கோயில்-
இஞ்சாயல் இளந் தெங்கின் பழம் வீழ,
இள மேதி இரிந்து அங்கு ஓடிச்
செஞ்சாலிக் கதிர் உழக்கி, செழுங் கமல
வயல் படியும் திரு ஐயாறே. 8

மேல் ஓடி விசும்பு அணவி, வியன் நிலத்தை
மிக அகழ்ந்து, மிக்கு நாடும்
மாலோடு நான்முகனும் அறியாத
வகை நின்றான் மன்னும் கோயில் -
கோல் ஓடக், கோல்வளையார் கூத்தாடக்,
குவிமுலையார் முகத்தில் நின்று
சேல் ஓடச்சிலை ஆடச், சேயிழையார்
நடம் ஆடும் திரு ஐயாறே. 9

---

8. இன் சாயல் - இனிய நிழல், இரிந்து - நீங்கி. சாலி - நெல்

9. அணவி - பொருந்தி, வியல் - அகலம், கோல் - அவிநயக் கோல், சேல் - சேல் மீன்போன்ற விழி. சிலை - வில்போன்ற புருவம்.

குண்டாடு குற்று உடுக்கைச் சமணரொடு
சாக்கியரும் குணம் ஒன்று இல்லா
மிண்டாடும் மிண்டர் உரை கேளாதே,
ஆள் ஆமின், மேவித், தொண்டீர்!
எண்தோளர், முக்கண்ணர், எம் ஈசர்,
இறைவர், இனிது அமரும் கோயில் -
செண்டு ஆடு புனல் பொன்னிச் செழு மணிகள்
வந்து அலைக்கும் திரு ஐயாறே. 10

அன்னம் மலி பொழில் புடைசூழ் ஐயாற்று
எம் பெருமானை
அம் தண் காழி
மன்னிய சீர் மறைநாவன் - வளர் ஞானசம்பந்தன் -
மருவு பாடல்
இன் இசையால் இவைபத்தும் இசையுங்கால்,
ஈசன் அடி ஏத்துவார்கள்
தன் இசையோடு அமருலகில் தவநெறி சென்று
எய்துவார், தாழாது அன்றே! 11

திருச்சிற்றம்பலம்

---

10. செண்டு - பூச்செண்டு.

11. இசை - புகழ்.

1 : 131

திருமுதுகுன்றம்

பண் : மேகராகக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மெய்த்து ஆறு சுவையும், ஏழ் இசையும்,
எண் குணங்களும், விரும்பும் நால்வே
தத்தாலும் அறிவு ஒண்ணு நடை தெளியப்,
பளிங்கே போல், அரிவை பாகம்
ஒத்து, ஆறு சமயங்கட்கு ஒரு தலைவன்
கருதும் ஊர் – உலவு தெண்ணீர்
முத்தாறு வெதிர் உதிர நித்திலம் வாரிக்
கொழிக்கும் முதுகுன்றமே. 1

வேரி மிகு குழலியொடு வேடுவனாய்,
வெங்கானில் விசயன் மேவு
போரின் மிகு பொறை அளந்து, பாசுபதம்
புரிந்து அளித்த புராணர் கோயில் –
காரின் மலிகடி பொழில்கள் கனிகள்பல
மலர் உதிர்த்துக், கயம் முயங்கி,
மூரி வளம் கிளர் தென்றல் திருமுன்றில்
புகுந்து உலவு முதுகுன்றமே. 2

---

1. மெய்த்து - உடம்பின் தொடர்பான. முத்தாறு - மணிமுத்தாறு. வெதிர் - மூங்கில்.

2. வேரி - தேன். பொறை - பொறுமை. பாசுபதம் - ஒரு படைக்கலம். புரிந்து - விரும்பி. கயம் - குளம். முயங்கி - தோய்ந்து. மூரி – வலிமை.

தக்கனது பெருவேள்வி, சந்திரன், இந்திரன்,
எச்சன், அருக்கன், அங்கி,
மிக்க விதாதாவினொடும், விதிவழியே
தண்டித்த விமலர் கோயில் –
கொக்கு, இனிய கொழும் வருக்கை, கதலி, கமுகு,
உயர் தெங்கின் குவை கொள் சோலை,
முக்கனியின் சாறு ஒழுகிச் சேறு உலரா
நீள் வயல் சூழ் முதுகுன்றமே. 3

வெம்மை மிகு புரவாணர் மிகை செய்ய,
விறல் அழிந்து, விண்உளோர்கள்,
செம்மலரோன், இந்திரன், மால் சென்று இரப்ப;
தேவர்களே தேர் அது ஆக,
மைம் மருவு மேரு வில்லு, மாசுணம் நாண்,
அரி, எரி, கால் வாளி ஆக,
மும்மதிலும் நொடி அளவில் பொடிசெய்த
முதல்வன் இடம் முதுகுன்றமே. 4

---

3. எச்சன் - வேள்வித்தலைவன். அருக்கன் - கதிரவன். அங்கி - தீக் கடவுள். விதாதா - நான்முகன். கொக்கு - மா. வருக்கை – பலா. கதலி - வாழை. கமுகு - பாக்கு. தெங்கு – தென்னை. குவை - கூட்டம், திரள்.

4. வெம்மை - கொடுமை. புரவாணர் - முப்புரத்தார். மிகை-நெறிக்கு மாறான தீமை. விறல்-வலிமை; அரி, எரி, காற்று இத்தேவர் மூவரும் அம்பாக. வாளி – அம்பு.

இழை மேவு கலை அல்குல் ஏந்திழையாள்
ஒருபால்ஆய், ஒருபால் எள்காது
உழை மேவும் உரி உடுத்த ஒருவன் இருப்பிடம்
என்பர் — உம்பர் ஓங்கு
கழை மேவு மடமந்தி மழை கண்டு,
மகவினொடும் புக, ஒண் கல்லின்
முழை மேவு மால்யானை இரை தேரும்
வளர் சாரல் முதுகுன்றமே. 5

நகை ஆர் வெண்தலைமாலை முடிக்கு அணிந்த
நாதன் இடம் - நல் முத்தாறு
வகை ஆரும் வரைப்பண்டம் கொண்டு இரண்டு கரை
அருகும் மறிய மோதி,
தகை ஆரும் வரம்பு இடறி, சாலி, கழுநீர்,
குவளை சாயப் பாய்ந்து,
முகை ஆர் செந்தாமரைகள் முகம் மலர,
வயல் தழுவு முதுகுன்றமே. 6

---

5. கலை - ஆடை. உழை மேவும் உரி - மான் தோல்; உம்பர் - வானம்; மழை - மேகம். முழை - குகை. மால் - பெரிய.

6. நகை - சிரிப்பு, வரைப் பண்டம் - மலைபடு பொருள்கள். வரம்பு - வயல் வரப்பு. இடறி - உடைத்து. முகை - மொட்டு.

அறம் கிளரும் நால்வேதம் ஆலின்கீழ்
இருந்துஅருளி, அமரர் வேண்ட,
நிறம் கிளர் செந்தாமரையோன் சிரம்ஐந்தின்
ஒன்று அறுத்த நிமலர் கோயில் -
திறம் கொள் மணித்தரளங்கள் வரத், திரண்டு அங்கு
எழில் குறவர் சிறுமிமார்கள்
முறங்களினுல் கொழித்து, மணி செல விலக்கி,
முத்து உலைப் பெய் முதுகுன்றமே. 7

கதிர் ஒளிய நெடுமுடிபத்து உடைய கடல்
இலங்கையர்கோன் கண்ணும் வாயும்
பிதிர் ஒளிய கனல் பிறங்கப், பெருங்கயிலை மலையை
நிலைபெயர்த்த ஞான்று,
மதில் அளகைக்கு இறை முரல, மலர் அடி ஒன்று
ஊன்றி, மறை பாட, ஆங்கே,
முதிர் ஒளிய சுடர் நெடுவாள் முன் ஈந்தான்
வாய்ந்த பதி முதுகுன்றமே. 8

---

7. தரளம் - முத்து: மணி - மாணிக்கம்.

8. அளகைக்கு இறை - அளகாபுரி மன்னன் குபேரன். முரல - மகிழ்ச்சியால் ஆரவாரிக்க. மறை - சாமம்.

பூ ஆர் பொன் தவிசின்மிசை இருந்தவனும்,
பூந்துழாய் புனைந்த மாலும்,
ஓவாது கழுகு ஏனம் ஆய், உயர்ந்து ஆழ்ந்து,
உறநாடி, உண்மை காணாத்
தேஆரும் திருஉருவன் சேரும் மலை
செழு நிலத்தை மூட வந்த
மூவாத முழங்கு ஒலிநீர் கீழ் தாழ,
மேல் உயர்ந்த முதுகுன்றமே. 9

மேனியில் சீவரத்தாரும், விரிதரு தட்டுஉடையாரும்
விரவல் ஆகா
ஊனிகளாய் உள்ளார் சொல்கொள்ளாது, உம்
உள் உணர்ந்து, அங்கு உய்மின், தொண்டீர்!
ஞானிகளாய் உள்ளார்கள் நால்மறையை
முழுது உணர்ந்து, ஐம்புலன்கள் செற்று,
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்து இருந்து
தவம் புரியும் முதுகுன்றமே. 10

---

9. பூ ஆர் தவிசு - தாமரை இருக்கை. துழாய் - துளசி. கழுகு - அன்னம். தேவு - தெய்வத் தன்மை. நிலத்தை மூட வந்த நீர் - ஊழி வெள்ளம்.

10. சீவரம் - காவி ஆடை. தட்டு - தடுக்கு. ஊனிகள் - குறைவுடையர், உடலை வளர்ப்பவர்.

முழங்கு ஒலி நீர் முத்தாறு வலம்செய்யும்
முதுகுன்றத்து இறையை, மூவாப்
பழங்கிழமைப் பன்னிருபேர் உடைய
கழுமலமே பதியாக் கொண்டு,
தழங்கு எரிமூன்று ஓம்பு தொழில் தமிழ்
ஞானசம்பந்தன்
சமைத்த பாடல்
வழங்கும் இசை கூடும் வகை பாடும்அவர்
நீடு உலகம் ஆள்வர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

11. மூவா - மூப்பு இலாத.

1 - 132 திருவீழிமிழலை

பண் : மேகராகக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

ஏர் இசையும் வட ஆலின்கீழ் இருந்து, அங்கு
ஈர் இருவர்க்கு இரங்கி நின்று,
நேரிய நால்மறைப் பொருளை உரைத்து, ஒளிசேர்
நெறி அளித்தோன் நின்ற கோயில் –
பார் இசையும் பண்டிதர்கள் பல் நாளும்
பயின்று ஓதும் ஓசை கேட்டு,
வேரி மலி பொழில், கிள்ளை வேதங்கள்
பொருள் சொல்லும் மிழலைஆமே. 1

பொறி அரவம்அது சுற்றிப், பொருப்பே
மத்து ஆகப்,
புத்தேளிர் கூடி,
மறிகடலைக் கடைந்திட்ட விடம் உண்ட
கண்டத்தோன் மன்னும் கோயில் –
செறி இதழ்த் தாமரைத் தவிசில் திகழ்ந்து ஓங்கும்
இலைக்குடைக்கீழ், செய் ஆர் செந்நெல்
வெறி கதிர்ச் சாமரை இரட்ட, இள அன்னம்
வீற்றிருக்கும் மிழலைஆமே. 2

---

1. ஏர் இசையும் - அழகு பொருந்தும். ஒளி சேர் நெறி - சிவஞான நெறி. வேரி - தேன்.

2. பொறி - படத்துப் புள்ளி. பொருப்பு - மந்தர மலை. புத்தேளிர் - தேவர்கள். செய் - வயல். வெறி - மணம்.

எழுந்து உலகை நலிந்து உழலும் அவுணர்கள்தம்
புரம் மூன்றும், எழில் கண்ணுடி
உழுத்து உருளும் அளவையின், ஒள் எரி
கொள, வெஞ்சிலை
வளைத்தோன் உறையும் கோயில் -
கொழுந் தரளம் நகை காட்டக் கோகநதம்
முகம் காட்டக், குதித்து நீர்மேல்
விழுந்த கயல் விழி காட்ட, வில் பவளம்
வாய் காட்டும் மிழலையாமே. 3

உரை சேரும் எண்பந்துநான்கு நூறுஆயிரம் ஆம்
யோனி பேதம்
நிரை சேரப் படைத்து, அவற்றின் உயிர்க்கு
உயிர்ஆய்,
அங்குஅங்கே நின்ருன் கோயில் -
வரை சேரும் முகில் முழவ, மயில்கள் பல
நடம் ஆட, வண்டு பாட,
விரை சேர் பொன் இதழி தர, மென்காந்தள்
கை ஏற்கும் மிழலைஆமே. 4

---

3. அளவை - காலம். தரள நகை - முத்துப் பல். கோகநதம் - தாமரை மலர். வில் - ஒளி.

4. நிரை சேர - முறையாக. வரை - மலை. முகில் – மேகம். முழவ - முரசு போல முழங்க;

காணும்ஆறு அரிய பெருமான்ஆகி,
　　காலம்ஆய், குணங்கள் மூன்றுஆய்,
பேணும் மூன்று உருஆகிப், பேர் உலகம்
　　படைத்து அளிக்கும் பெருமான் கோயில் -
" தாணுஆய் நின்ற பரதத்துவனை,
　　உத்தமனை, இறைஞ்சீர் !" என்று
வேணு வார்கொடி விண்ணோர்தமை விளிப்ப
　　போல் ஓங்கு மிழலைஆமே. 5

அகன் அமர்ந்த அன்பினராய், அறுபகை செற்று,
　　ஐம்புலனும் அடக்கி, ஞானப்
புகல் உடையோர்தம் உள்ளப் புண்டரிகத்துள்
　　இருக்கும் புராணர் கோயில் -
தகவு உடை நீர் மணித்தலத்துச், சங்கு உள வர்க்கம்
　　திகழச் சலசத்தீயுள்,
மிக உடைய புன்கு மலர்ப்பொரி அட்ட,
　　மணம் செய்யும் மிழலைஆமே. 6

---

5. மூன்று உரு - மும்மூர்த்திகள், தாணு - நிலைப் பொருள், நடுதறி. பரதத்துவன் - பரம்பொருள், வேணு - மூங்கில்,

6. அகன் - உள்ளம், அறுபகை - காமம் குரோதம் உலோபம் மோகம் மதம் மாற்சரியம் என்பன, ஞானம் புகல் உடையோர் - சிவஞானம் அடைந்தோர். புண்டரிகம் - தாமரை. நீர் மணித்தலம் - நீரோட்டம் பொருந்திய மணிகளால் ஆன இடம். சலசம்-தாமரை அட்ட மணம் - சுட்டதால் வரும் மணம்.

ஆறு ஆடு சடைமுடியன், அனல் ஆடு
மலர்க்கையன், இமயப் பாவை
கூறு ஆடு திருஉருவன், கூத்து ஆடும்
குணம் உடையோன், குளிரும் கோயில் -
சேறு ஆடு செங்கழுநீர்த் தாது ஆடி,
மது உண்டு, சிவந்த வண்டு
வேறு ஆய உரு ஆகி, செவ்வழி நல் பண்
பாடும் மிழலைஆமே. 7

கருப்பம் மிகும் உடல் அடர்த்துத் கால் ஊன்றிக்,
கை மறித்துக், கயிலை என்னும்
பொருப்பு எடுக்கல்உறும் அரக்கன் பொன்முடி.
தோள்
நெரித்த விரல் புனிதர் கோயில் -
தருப்பம் மிகு சலந்தரன்தன் உடல் தடிந்த
சக்கரத்தை வேண்டி, ஈண்டு
விருப்பொடு மால் வழிபாடு செய்ய, இழி
விமானம் சேர் மிழலைஆமே. 8

---

7. குளிரும் - மகிழும்.

8. கருப்பம் மிகும் உடல் - கருவிலேயே வளம் சிறந்த உடம்பு. பொருப்பு - மலை. தருப்பம் - செருக்கு. இழிவிமானம் - விண் இழி விமானம்.

செந்தளிர் மா மலரோனும் திருமாலும்,
ஏனமோடு அன்னம் ஆகி,
அந்தம் அடி காணுதே, அவர் ஏத்த,
வெளிப்பட்டோன் அமரும் கோயில் –
புந்தியின் நால்மறை வழியே புல் பரப்பி,
நெய், சமிதை கையில் கொண்டு,
வெந்தழலின் வேட்டு, உலகில் மிக அளிப்போர்
சேரும் ஊர் மிழலைஆமே. 9

எண் இறந்த அமணர்களும், இழி தொழில் சேர்
சாக்கியரும், என்றும் தன்னை
நண்ண அரிய வகை மயக்கித், 'தன் அடியார்க்கு
அருள்புரியும் நாதன் கோயில் –
பண் அமரும் மென்மொழியார் பாலகரைப்
பாராட்டும் ஓசை கேட்டு,
விண்ணவர்கள் வியப்பு எய்தி, விமானத்தோடும்
இழியும் மிழலைஆமே. 10

9ஓ புல் – தருப்பைப் புல்ஓ

10ஓ ... ...

மின் இயலும் மணி மாடம் மிடைவீழி
மிழலையான் விரை ஆர் பாதம்
சென்னிமிசைக் கொண்டு ஒழுகும் சிரபுரக் கோன்,
செழுமறைகள் பயிலும் நாவன்,
பன்னிய சீர் மிகு ஞானசம்பந்தன்-
பரிந்து உரைதத பத்தும் ஏந்தி,
இன்இசையால் பாட வல்லார், இருநிலத்தில்
ஈசன் எனும் இயல்பினோரே. 11

திருச்சிற்றம்பலம்

11. மின் - ஒளி. விரை - மணம். சென்னி மிசை-தலைமேல். பன்னிய - சொல்லிய.

1 : 133 திருக்கச்சி ஏகம்பரம்

பண் : மேகராகக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

வெந்த வெண் பொடிப் பூசும் மார்பின்
விரிநூல் ஒருபால் பொருந்தக்,
கந்தம் மல்கு குழலியோடும்
கடிபொழில் கச்சிதன்னுள்,
அந்தம் இல் குணத்தார் அவர் போற்ற,
அணங்கினொடு ஆடல் புரி
எந்தை மேவிய ஏகம்பம்
தொழுது ஏத்த, இடர் கெடுமே, 1

வரம் திகழும் அவுணர் மா நகர் மூன்று
உடன் மாய்ந்து அவியச்
சரம் துரந்து, எரிசெய்த தாழ்சடைச்
சங்கரன் மேய இடம்-
குருந்தம், மல்லிகை, கோங்கு, மாதவி,
நல்ல குரா மரவம்,
திருந்து பைம்பொழில் - கச்சி ஏகம்பம்
சேர, இடர் கெடுமே.

---

1. அந்தம் - முடிவு: அணங்கு - பெண், உமையாள்.

2. வரம் - தெய்வங்களிடம் பெற்ற பேறு. மாநகர் மூன்று - முப்புரம். சரம் துரந்து - அம்பு செலுத்தி.

வண்ண வெண்பொடிப் பூசும் மார்பின்
வரி அரவம் புனைந்து,
பெண் அமர்ந்து, எரி ஆடல் பேணிய
பிஞ்ஞகன் மேய இடம்,
விண் அமர் நெடுமாடம் ஓங்கி
விளங்கிய கச்சிதன்னுள்
திண்ண மாம்பொழில் சூழ்ந்த ஏகம்பம்
சேர, இடர் கெடுமே. 3

தோலும் நூலும் துதைந்தவரைமார்பில்
சுடலை வெண்நீறு அணிந்து,
காலன் மாள் உறக் காலால் காய்ந்த
கடவுள் கருதும் இடம்,
மாலை வெண்மதி தோயும் மா மதில்
கச்சி மா நகருள்,
ஏலம் நாறிய சோலை சூழ் ஏகம்பம்
ஏத்த, இடர் கெடுமே. 4

---

3. ... ...

4. துதைந்த - பொருந்திய.

தோடு அணி மலர்க்கொன்றை சேர் சடைத்
தூ மதியம் புனைந்து,
பாடல் நால்மறை ஆக. பல்கணப்
பேய்கள் அவை சூழ,
வாடல் வெண் தலைஓடு, அனல், ஏந்தி,
மகிழ்ந்து உட்ன் ஆடல் புரி
சேடர் சேர் கலிக் கச்சி ஏகம்பம்
சேர, இடர் கெடுமே. 5

சாகம் பொன்வரை ஆகத் தானவர்
மும் மதில் சாய எய்து,
ஆகம் பெண் ஒருபாகம் ஆக,
அரவொடு நூல் அணிந்து,
மாகம் தோய் மணி மாட மா மதில்
கச்சி மா நகருள்,
ஏகம்பத்து உறை ஈசன் சேவடி
ஏத்த, இடர் கெடுமே. 6

---

5. தோடு - இதழ். சேடர் - பெரியவர்.

6. சாகம் - வில். பொன்வரை - பொன்மலை யாகிய மேருமலை. தானவர் - அசுரர். சாய - அழிய. மாகம் - வானம்.

... . 7

வாள் நிலாமதி புல்கு செஞ்சடை
    வாள் அரவம் அணிந்து,
நாண் இடத்தினில் வாழ்க்கை பேணி,
    நகுதலையில் பலி தேர்ந்து,
ஏண் இலா அரக்கன்தன் நீள் முடி
    பத்தும் இறுத்தவன் ஊர்,
சேண் உலாம் பொழில் கச்சி ஏகம்பம்
    சேர, இடர் கெடுமே. 8

பிரமனும் திருமாலும் கைதொழப்
    பேர் அழல் ஆய பெம்மான்,
அரவம் சேர் சடை அந்தணன்,
    அணங்கினொடு அமரும் இடம்,
கரவு இல் வண்கையினார்கள் வாழ் கலிக்
    கச்சி மா நகருள்,
மரவம் சூழ் பொழில் ஏகம்பம்
    தொழ, வல்வினை மாய்ந்து அறுமே. 9

---

7. ... ...

8. நாண் - நாணத்தை இயல்பாக உடைய உமையாள். ஏண் - உறுதி. சேண் - நெடும் தொலைவு.

9. கரவு இல் வண்கையினார் - உள்ளதை மறைக்காமல் கொடுக்கும் கொடையாளர். மரவம் - வெண் கடம்பு, குங்கும மரம், மல்லிகை.

குண்டுபட்டு அமண் ஆயவரொடும்,
கூறை தம் மெய் போர்க்கும்
மிண்டர் கட்டிய கட்டுரை அவை
கொண்டு விரும்பேன்மின்!
விண்டவர் புரம் மூன்றும் வெங்கணை
ஒன்றினால் அவியக்
கண்டவன் கலிக் கச்சி ஏகம்பம்
காண, இடர் கெடுமே. 10

ஏரின் ஆர் பொழில் சூழ்ந்த கச்சி
ஏகம்பம் மேயவனைக்,
காரின் ஆர் மணி மாடம் ஓங்கு
கழுமல நல் நகருள்,
பாரின் ஆர் தமிழ் ஞானசம்பந்தன்
பரவிய பத்தும் வல்லார்,
சீரின் ஆர் புகழ் ஓங்கி,
விண்ணவரோடும் சேர்பவரே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. கூறை - ஆடை.

11. ஏர் - அழகு.

1 : 134 திருப்பறியலூர்வீரட்டம்

பண் : மேகராகக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கருத்தன், கடவுள், கனல் ஏந்தி ஆடும்
நிருத்தன், சடைமேல் நிரம்பா மதியன் -
திருத்தம் உடையார் திருப் பறியலூரில்,
விருத்தன் எனத் தகும் வீரட்டத்தானே, 1

மருந்தன், அமுதன், மயானத்துள் மைந்தன்,
பெருந் தண் புனல் சென்னி வைத்த பெருமான் -
திருந்து மறையோர் திருப் பறியலூரில்,
விரிந்த மலர்ச்சோலை வீரட்டத்தானே. 2

குளிர்ந்து ஆர் சடையன், கொடுஞ்சிலை வில்காமன்
விளிந்தரன் அடங்க வீந்து எய்தச் செற்றான் -
தெளிந்தார் மறையோர் திருப் பறியலூரில்,
மிளிர்ந்து ஆர் மலர்ச்சோலை வீரட்டத்தானே. 3

---

1. கருத்தன் - முதல்வன், தலைவன், விருத்தன் - காலம் கடந்தவன், எங்கும் பரந்து நிற்பவன்.

2. ... ...

3. விளிந்தான் - இறந்தான். மிளிர்ந்து - விளங்கி.

பிறப்பு ஆதி இல்லான், பிறப்பார் பிறப்புச்
செறப்பு ஆதி அந்தம் செலச் செய்யும் தேசன் –
சிறப்பாடு உடையார் திருப் பறியலூரில்,
விறல் பாரிடம்சூழ, வீரட்டத்தானே. 4

கரிந்தார் இடுகாட்டில் ஆடும் கபாலி,
புரிந்தார் படுதம் புறங்காட்டில் ஆடும் –
தெரிந்தார் மறையோர் திருப் பறியலூரில்,
விரிந்து ஆர் மலர்ச்சோலை வீரட்டத்தானே. 5

அரவு உற்ற நாணு, அனல் அம்புஅது ஆக,
செருஉற்றவர் புரம் தீ எழச் செற்றான் –
தெருவில் கொடிசூழ் திருப்பறியலூரில்,
வெருஉற்றவர் தொழும் வீரட்டத்தானே. 6

---

4 பிறப்பு ஆதி - பிறப்பு இறப்புக்கள், செறப்பு - சிறப்பு, தேசன் - ஒளிவண்ணமானவன். விறல் - வலிமை,

5. கரிந்தார் – இறந்தவர். கபாலி - கபாலம் ஏந்தியவன். புரிந்தார் படும் - வினைசெய்தார் இறந்த. புறங்காடு - சுடுகாடு தெரிந்து - ஆராய்ந்து.

6. செரு உற்றவர் - போரிட வந்த திரிபுரத்து அசுரர். வெருவுற்றவர் - அஞ்சியவர்.

நரை ஆர் விடையான், நலம் கொள் பெருமான்,
அரை ஆர் அரவம் அழகா அசைத்தான் —
திரை ஆர் புனல் சூழ் திருப் பறியலூரில்,
விரை ஆர் மலர்ச்சேரலை வீரட்டத்தானே. 7

வளைக்கும் எயிற்றின் அரக்கன் வரைக்கீழ்
இளைக்கும்படி தான் இருந்து, ஏழை அன்னம்
திளைக்கும் படுகர்த் திருப் பறியலூரில்,
விளைக்கும் வயல் சூழ்ந்த வீரட்டத்தானே. 8

வளம் கொள் மலர்மேல் அயன், ஓதவண்ணன்,
துளங்கும் மனத்தார் தொழத் தழல்ஆய் நின்றான் —
இளங்கொம்பு அனாளோடு இணைந்தும் பிணைந்தும்
விளங்கும் திருப் பறியல் வீரட்டத்தானே. 9

---

7. நரை - வெண்மை அசைத்தான் - கட்டியவன்.

3. படுகர் - நீர் நிலை.

9. ஓதவண்ணன் - கடல் வண்ணன், திருமால், துளங்கும் - நடுங்கும்

சடையன்; பிறையன்; சமண், சாக்கியரோடு
அடை அனபு இலாதான்; அடியார் பெருமான்;
உடையன், புலியின் உரிதோல் அரைமேல்;
விடையன், திருப் பறியல் வீரட்டத்தானே. 10

நறு நீர் உகும் காழி ஞானசம்பந்தன்,
வெறி நீர்த் திருப் பறியல் வீரட்டத்தானை,
பொறி நீடு அரவன், புனைபாடல் வல்லார்க்கு
அறும், நீடு அவலம்; அறும், பிறப்புத்தானே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. நறுநீர் உகும் - நன்னீர் வளம் மிகுந்த, வெறி நீர் - மணம் பொருந்திய தேன். நீடு அவலம் - நீண்ட நாளாக இருந்து வரும் துன்பம்.

1 : 135 திருப்பராய்த்துறை

பண் : மேகராகக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நீறு சேர்வது ஓர் மேனியர், நேரிழை
கூறு சேர்வது ஓர் கோலம்ஆய்,
பாறு சேர் தலைக் கையர் - பராய்த்துறை
ஆறு சேர் சடை அண்ணலே. 1

கந்தம் ஆம் மலர்க்கொன்றை, கமழ் சடை,
வந்த பூம்புனல் வைத்தவர் -
பைந்தண் மாதவி சூழ்ந்த பராய்த்துறை
அந்தம் இல்ல அடிகளே. 2

வேதர், வேதம் எல்லாம் முறையால் விரித்து
ஓத நின்ற ஒருவனார்;
பாதி பெண்உரு ஆவர் - பராய்த்துறை
ஆதி ஆய அடிகளே. 3

---

1. பாறு - பருந்து.
2. ... ...
3. ... ...

தோலும் தம் அரை ஆடை, சுடர்விடு
நூலும் தாம் அணி மார்பினர் –
பாலும் நெய் பயின்று ஆடு, பராய்த்துறை,
ஆலநீழல் அடிகளே. 4

விரவி நீறு மெய் பூசுவர், மேனிமேல்;
இரவில் நின்று எரிஆடுவர்;
பரவினர்அவர் வேதம் – பராய்த்துறை
அரவம் ஆர்த்த அடிகளே. 5

மறையும் ஓதுவர்; மான்மறிக் கையினர்;
கறை கொள் கண்டம் உடையவர் –
பறையும் சங்கும் ஒலிசெய் பராய்த்துறை
அறைய நின்ற அடிகளே. 6

---

4. ... .

5. பரவினர் வேதம் - வேதங்களால் துதிக்கப் பெற்றவர்.

6. ... .

விடையும் ஏறுவர்; வெண்பொடிப் பூசுவர்;
சடையில் கங்கை தரித்தவர்;
படைகொள் வெண்மழுவாளர் - பராய்த்துறை
அடைய நின்ற அடிகளே. 7

தருக்கின் மிக்க தசக்கிரிவன்தனை
நெருக்கினர், விரல் ஒன்றினல்;
பருக்கினர்அவர் போலும் - பராய்த்துறை
அருக்கன்தன்னை, அடிகளே. 8

நாற்ற மாமலரானெடு மாலும்ஆய்த்
தோற்றமும் அறியாதவர்;
பாற்றினர், வினைஆன்; - பராய்த்துறை
ஆற்றல் மிக்க அடிகளே. 9

---

7. ... ...

8. தசக்கிரிவன் - பத்துத் தலைகளை உடைய இராவணன். அருக்கன் - கதிரவன். பருக்கினர் - வருத்தினர்.

9. பாற்றினர் - அழித்தார்,

திரு இலிச் சிலதேர், அமண் ஆதர்கள்,
உரு இலா உரை கொள்ளேலும்!
பரு விலால் எயில் எய்து, பராய்த்துறை
மருவினான்தனை வாழ்த்துமே! 10

செல்வம் மல்கிய செல்வர் பராய்த்துறைச்
செல்வர்மேல், சிதையாதன,
செல்வன் ஞானசம்பந்தன் செந்தமிழ்,
செல்வம்ஆம், இவை செப்பவே. 11

திருச்சிற்றம்பலம்

---

10. திரு - ஆக்கம், தேர் - தேரர், புத்தர். ஆதர் - இழிந்தோர், உருஇலா - உருப்படி இல்லாத பருவில் - மேரு மலைவில்.

11. சிதையாதன - அழிவில்லாதன.

1 : 136 திருத்தருமபுரம்

பண் : யாழ்முரி

திருச்சிற்றம்பலம்

மாதர் மடப்பிடியும் மட அன்னமும் அன்னது ஓர்
நடை உடை மலைமகள் துணை என மகிழ்வர்,
பூத இனப்படை நின்று இசை பாடவும் ஆடுவர்,
அவர் படர்சடை நெடுமுடியது ஓர் புனலர்,
வேதமொடு ஏழ்இசை பாடுவர், ஆழ்கடல் வெண்திரை
இரை நுரை கரை பொருது, விம்மி நின்று, அயலே
தாது அவிழ் புன்னை தயங்கு மலர்ச் சிறை வண்டு அறை
எழில் பொழில் குயில் பயில் தருமபுரம்பதியே. 1

பொங்கும் நடைப் புகல் இல் விடை ஆம் அவர் ஊர்தி, வெண்
பொடி அணி தடம் கொள் மார்பு பூணநூல் புரள,
மங்குல் இடைத் தவழும் மதி சூடுவர், ஆடுவர்,
வளம் கிளர்புனல், அரவம் வைகிய சடையர்,
சங்கு கடல் திரையால் உதையுண்டு, சரிந்து இரிந்து,
ஒசிந்து அசைந்து, இசைந்து சேரும் வெண்மணல் குவைமேல்
தங்கு கதிர் மணி, நித்திலம் மெல்இருள் ஒல்க நின்று,
இலங்கு ஒளி நலங்கு எழில் தருமபுரம் பதியே. 2

---

1. மாதர் - அழகிய. பிடி - பெண்யானை. மட அன்னம் - பெண் அன்னம். புனல் - கங்கை யாறு. இரை - ஒலிக்கும். சிறை - சிறகு.

2. பொங்கு நடை - உயர்ந்த நடை. மங்குல் - மேகம். வைகிய - தங்கிய. இரிந்து - நீங்கி. ஒசிந்து - வளைந்து. குவை - திட்டு. மேடு, ஒல்க - நீங்க.

விண் உறு மால்வரை போல்விடை ஏறுவர், ஆறு
சூடுவர், விரி சுரி ஒளி கொள் தோடு நின்று இலங்கக்
கண் உற நின்று ஒளிரும் கதிர் வெண்மதிக் கண்ணியர்,
கழிந்தவர் இழிந்திடும் உடைதலை கலனுப்,
பெண் உற நின்றவர், தம் உருவம் அயன் மால் தொழ
அரிவையைப் பிணைந்து இணைந்து அணைந்ததும் பிரியார்,
தண் இதழ் முல்லையொடு, எண்இதழ் மௌவல், மருங்கு அலர்
கருங்கழி நெருங்கு நல் தருமபுரம் பதியே. 3

வார் உறு மென்முலை நன்நுதல் ஏழையொடு ஆடுவர்,
வளம் கிளர் விளங்கு திங்கள் வைகிய சடையர்,
கார் உற நின்று அலரும் மலர்க்கொன்றை அம் கண்ணியர்
கடு விடை கொடி, வெடிகொள் காடு உறை பதியர்,
பார் உற விண்ணுலகம் பரவப்படுவோர், அவர்
படுதலைப் பலி கொளல் பரிபவம் நினையார்,
தார் உறு நல் அரவம் மலர் துன்னிய தாது உதிர்
தழை பொழில் மழை நுழை தருமபுரம் பதியே. 4

---

3. மௌவல் - மல்லிகை.

4. பரிபவம் - அவமானம்.

நேரும் அவர்க்கு உணரப் புகில் இல்லை; நெடுஞ்சடைக்
கடும்புனல் படர்ந்து இடம் படுவது ஓர் நிலையர்;
பேரும் அவர்க்கு எனை ஆயிரம்! முன்னைப் பிறப்பு, இறப்பு
இலாதவர்; உடற்று அடர்த்த பெற்றி யார் அறிவார்?
ஆரம் அவர்க்கு அழல் வாயது ஓர் நாகம்; அழஃகு உற
எழுஃகொழு மலர் கொள் பொன் இதழி நல் அலங்கல்;
தாரம் அவர்க்கு இமவான்மகள் ; ஊர்வது போர் விடை
கடு படு செடி பொழில் தருமபுரம் பதியே. 5

கூழை அம் கோதை குலாயவள் தம் பிணை புல்க, மல்கு
மென்முலை, பொறி கொள் பொன் கொடி இடை,
துவர்வாய்,
மாழை ஒண்கண் மடவாளை ஓர்பாகம் மகிழ்ந்தவர்;
வலம் மலி படை, விடை கொடி, கொடுமழு வாள்-
யாழையும் எஃகிட ஏழ்இசை வண்டு முரன்று, இனம்
துவன்றி, மென்சிறஃகு அறை உற நற விரியும்நல்-
தாழையும் ஞாழலும் நீடிய கானலின் நள் அல் இசை
புள்இனம் துயில் பயில் தருமபுரம் பதியே. 6

5. பெற்றி - தன்மை.

6. கூழை - கூந்தல். பொறி – தேமல், சுணங்கு.
துவன்றி - நெருங்கி. ஞாழல் - புலிநகக் கொன்றை

தே மரு வார் குழல் அன்ன நடை பெடை மான் விழித்
திருந்துஇழை பொருந்து மேனி செங்கதிர் விரிய,
தூ மரு செஞ்சடையில் துதை வெண்மதி,
துன்று கொன்றை,
தொல்புனல், சிரம், கரந்து உரித்த
தோல் உடையர் -
கா மரு தண்கழி நீடிய கானல கண்டகம்
கடல் அடைகழி இழிய, முண்டகத்து அயலே,
தாமரை சேர் குவளைப் படுகில் கழுநீர் மலர்
வெறி கமழ் செறி வயல் தருமபுரம் பதியே. 7

தூ வணநீறு அகலம் பொலிய, விரை புல்க மல்கு
மென்மலர் வரை புரை திரள் புயம் அணிவர்;
கோவணமும் உழையின் அதளும் உடை ஆடையர்,
கொலை மலி படைஓர் சூலம் ஏந்திய குழகர்,
பா வணமா அலறத் தலைபத்து உடைஅவ் அரக்கன
வலி ஓர் கவ்வை செய்து அருள்புரி தலைவர்,
தாவண ஏறு உடைஎம் அடிகட்கு இடம் - வன்தடங்
கடல் இடும் தடங்கரைத் தருமபுரம் பதியே. 8

---

7. தேம் - மணம். துதை - செறிந்த. கண்டகம் - தாழை. முண்டகம் - கடல் முள்ளி. படுகு - மடு.

8. அகலம் - மார்பு. உழை - மான். அதள் - தோல். தா வ(ண்)ண ஏறு - தாவிச் செல்லும் எருது;

வார் மலி மென்முலை மாது ஒரு பாகம் அது ஆகுவர்;
வளம் கிளர் மதி, அரவம், வைகிய சடையர்;
கூர் மலி சூலமும், வெண் மழுவும், அவர்
வெல் படை;
குனி சிலை தனிமலை அது ஏந்திய குழகர்;
ஆர் மலி ஆழி கொள் செல்வனும், அல்லி
கொள் தாமரை
மிசை அவன், அடி முடி அளவு தாம் அறியார்;
தார் மலி கொன்றை அலங்கல் உகந்தவர்தங்கு இடம் -
தடங்கடல் இடும் திரைத் தருமபுரம் பதியே. 9

புத்தர், கட்டுவர் மொய்த்து உறி புல்கிய
கையர், பொய்ம்
மொழிந்த அழிவு இல் பெற்றி உற்ற நல்
தவர், புலவோர்,
பத்தர்கள், அத்தவம் மெய்ப் பயன் ஆக உகந்தவர்;
நிகழ்ந்தவர்; சிவந்தவர்; சுடலைப் பொடி அணிவர்;
முத்து அன வெண்நகை ஒண் மலைமாது
உமை பொன் அணி
புணர் முலை இணை துணை அணைவதும் பிரியார்
தத்து அருவித் திரள் உந்திய மால் கடல் ஓதம் வந்து
அடர்த்திடும் தடம் பொழில் தருமபுரம் பதியே. 10

---

9. ஆர் - ஆரக்கால். ஆழி - சக்கரப்படை: செல்வன் - திருமால். அல்லி - அக இதழ். அலங்கல் - மாலை.

10. ... ...

"பொன் நெடுநல் மணி மாளிகை சூழ் விழவம்மலி
பொரூஉ புனல் திரூஉ அமர் புகலி"
என்று உலகில்
தன்னொடு நேர் பிறஇல் பதி ஞானசம்பந்தனது
செந்தமிழ்த் தடங்கடல் தருமபுரம் பதியைப்
பின்நெடுவார்சடையில் பிறையும் அரவும் உடையவன்
பிணை துணை கழல்கள் பேணுதல் உரியார்,
இன் நெடு நன் உலகு எய்துவர்; எய்திய போகமும்
உறுவர்கள்; இடர், பிணி, துயர், அணைவு
இலரே. 11

---

11. நேர் - ஒப்பு.

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த

தேவாரம் முதல் திருமுறை

இனிது முற்றும்.

உ

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச்செய்த

தேவாரத் திருப்பதிகங்கள்

(முதல் திருமுறை)

பாட்டு முதற்குறிப்பகராதி

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
அகமலியன்பொ	251	அடிமுடிகாண்கில	572
அகனமர்ந்தவன்	677	அடியவர்குழுமிட	629
அங்கமாதுசேர்	490	அடியிணைக்கண்டி	599
அங்கமாறும்வேத	365	அடையாதவர்	207
அங்கமுநான்மறை	558	அடையார்தம்புர	361
அங்கமும்வேதமு	33	அடையார்புர	462
அங்கமொடரு	561	அடைவாகியவடி	80
அங்மொராறு	239	அணங்கோடொரு	211
அங்கமொராறும்	522	அணிபெறுவடமர	127
அங்கோல்வளை	472	அணிமலர்மகடலை	146
அசைவுறுதவ	137	அணியார்தொழ	206
அச்சம்மிலர்	111	அணியார்மலை	463
அஞ்சாதேகயி	667	அண்டத்தாலெண்	637
அஞ்சொண்புல	210	அண்ணலாலவாய்	502
அடர்செவிவேழ	224	அத்தமண்டோய்து	219
அடல்ஏறமருங்	193	அத்தன்முதுகுன்றை	498
அடல்வந்தவான	660	அந்தணாளர்தம்	507
அடல்மலிபடை	138	அந்தண்சோற்றுத்	171
அடிகளாலவாய்	502	அந்தண்புனல்	484

அந்தமாதியயனு 411
அந்தமின்ஞான 584
அந்தமில்புகழ் 501
அந்தமுமாதியுந்நான் 37
அந்தமாதியுமாகிய [214
அந்தம்மறியாதஅரு 186
அந்தரத்தில்தேரூ 346

அந்திமதியோடு 470
அமைவனதுவரி 123
அம்பொன் 502
அயனுமாலுமா(பிரம491
அயனுமாலுமா(வீழி 497
அயனெடுமெழிலமர் 130
அயிலுடைவேலோ 524
அயிலுறுபடையினர் 445
அரக்கனுண்மையழிய174
அரக்கனுண்மையை 493
அரக்கன்வலி 195
அரக்கனூர்வலி 502
அரக்கனெரிதர 496
அரவார்புனலன்பிலா192
அரசளிக்குமரக்கன் 311
அரப்பள்ளியா 516
அரவச்சடைமேன் 205
அரவின்வாயின் 521
அரவுற்றநாணு 687
அரனுறைதரு 129
அரனையுள்குவீர் 489
அரியுநம்வினை 321
அரியொடுமலர 620
அறுகரொடு 77
அருத்தனை 569
அருநெறிய 7
அருந்திரலவு 562
அருமறைஞான 564
அருமையன் 615
அரும்புங்குரும் 258
அருவனுலவாய் 502
அரைகெழுகோ 221
அரைபுல்குமைந் 216
அரையாரழல் 468
அரையார்தரு 486
அரையார்விரி 197
அரையோடலர் 261
அலங்கன்மலி 657
அலரும் எறி 205
அலர்மகள்மலி 626
அலைமலிதண்புன 553
அலைமலிதண்பு...சூழ் 556
அலையார்புனலை 559
அலையார்புனல்சூடி 453
அல்லாடரவமிய 388
அவ்வினைக்கிவ்வினை 589
அழலவல்லவராடி 198
அழிவல்லமண 208
அளைவளர்நாக 223
அறங்கிளருநால் 672
அறையார்கடலிலங் 95

அறையார்கழலந்த 75
அறையார்கழன்மேல206

அறையார்புனலும் 355
அறையார்புனலோ 157
அறையும்மரிகுர 89
அனனிகர்சடை 623
அன்புடையானை 44
அன்றடற்காலனை 573
அன்றிநின்றஅவு 174
அன்றியலுருவு 632
அன்றியவமணர் 580
அன்றினரரியென 628
அன்னமலிபொழில் 668
ஆகத்துமைகேள்வ 475
ஆசிஆரமொழி 19
ஆச்சியப்பேய்க 609
ஆடுஅரவத்தழ 343
ஆடலரவரைத்தவா 540
ஆடலழனுக 259
ஆடலான்பாட 606
ஆடலேற்றினன் 501
ஆடல்நாக 317
ஆணும்பெண்ணுமா 467
ஆதல்செய்தானர 538
ஆதியாயநான் 285
ஆமையரவோ 412
ஆம்பலதவமு 450
ஆயாதனசம 67
ஆரம்நாகமாம் 502
ஆலக்கோலத் 455
ஆலநிழலார் 501
ஆலிள்மதியினெ 570
ஆலும்மயிலின் 418
ஆவாவெனவர 487
ஆவிக்கமலத்தன்ன 534
ஆவிலைந்தமர்ந்த 575
ஆழியானும்அலரி 174
ஆழ்கடலெனக் 318
ஆழ்தருமால்கடல் 218
ஆறணிசெஞ்சடை 541
ஆரூடுசடைமுடி 678
ஆறுடைச்சடை 423
ஆற்றலுடைய 155
ஆற்றையுமேற்ற 439
ஆனூராவுழி 341
ஆன்முறையாலாற் 276
இகழுருவொடு 130
இகழ்ந்தருவரை 579
இசைவிளங்கும் 161
இடந்தபெம்மா 538
இடியார்கடல் 206
இடியார்குரலேறு 194
இடையீர்போகா 305
இட்டமதமர்பொடி 622
இந்தணையுஞ் 47
இயங்குகின்ற 281
இயலாடிய 77
இயலும்விடை 483
இயல்வுஅழிதரவிது 147
இரவணனிருபது 624
இரவன்பகலோ 459
இரவிற்றிரிவோர் 456
இருநிலமிதன் 626
இருநிலனது 145

இரும்பொன்மலை	458	உண்ணலாகா	279
இருவரறியாத	499	உண்ணற்கரிய	416
இருவர்க்கெரியாகி	196	உண்ணுமுலை	57
இருவர்க்கெரியாய	505	உதிரும்மயி	58
இருவர்தேவருந்	311	உமையாளொரு	202
இருவர்நாடிய	508	உம்பராலு	173
இருளைப்புரை	370	உயர்வரை	224
இரைக்கும்புனல்	179	உய்யலுறு	492
இலகும்முடி	207	உரம்மன்னுயர்	373
இலங்கைத்தலை	598	உரவம்புரிபுன்	198
இலங்கைமன்னமுடி	101	உரவன்புலி	414
இலங்கையர்வேந்	25	உரவார்கலை	531
இலங்கையிராவண	43	உரவெங்கரி	209
இலைமருதேயழ	37	உரிஞ்சனகூ	431
இலைமலிதர	625	உரித்ததுபா	596
இலைமலிபொழி	568	உருமலிகட	623
இலையார்தரு	485	உருவிற்றிகழு	385
இழைத்தஇடை	384	உரைசேரு	676
இழைமேவு	671	உரையரு	619
இழைவளர்	142	உரையாததா	310
இளகக்கமலத்	532	உலங்கொள்	534
இறையார்வளை	182	உலந்தவரெ	241
இறையூண்து	328	உளங்கொள்வா	427
இறைவராயி	495	உளையாவலி	199
இன்குரலிசை	573	உள்வேர்போ	305
இன்பம்வேண்	507	உள்ளமோ	546
ஈசன்முதுகுன்	498	உறிகொள்	304
ஈர்க்கும்புனல்	254	ஊணுப்பலி	381
ஈருய்முதலொன்	64	ஊரும்மரவஞ்	190
உடையார்துகில்	179	ஊருலாவுபலி	172
உண்டுடுக்கையின்	365	ஊர்எதிர்ந்திடு	447

ஊர்கின்ற	658
ஊறியார்தரு	309
ஊனடைந்த	270
ஊனத்திருணீ	210
ஊனூர்தலை	404
ஊன்இயன்ற	16
ஊன்பாயு	665
ஊன்றும்பி	327
எங்கள்பெரு	476
எடுத்தஅரக்க	154
எடுத்தான்புய	504
எடுத்தான்றரு	460
எண்டிசையா	50
எண்டிசையோரஞ்	511
எண்டிசையோர்	550
எண்ணார்எயிலெ	259
எண்ணார்எயில்	361
எண்ணார்தங்க	235
எண்ணார்தரு	81
எண்ணார்மும்	606
எண்ணார்முத்த	532
எண்ணிடை	446
எண்ணிறந்த	679
எண்ணுமடி	503
எண்ஒன்றி	205
எந்தையென்	152
எய்யாவென்றி	509
எரித்தவன்	577
எரியார்மழு	349
எரியொருகர	447
எருதேகொணர்	352
எழின்மலை	575
எழுந்துலகை	676
எறிசுரவங்	332
எறியார்கட	150
எனைத்தோரு	385
என்தானிம்மலை	307
ஏதம்வந்த	321
ஏராரெருக்கத்	488
ஏரிசையும்	675
ஏரினார்பொழி	685
ஏலமலிகுழ	540
ஏவலத்தால்	249
ஏவார்சிலை	75
ஏரூர்தரு	79
ஏறிலெரு	474
ஏறுதாங்கியூ	277
ஏறுமொன்	436
ஏனத்தெயி	467
ஏனமருப்பினொடு	550
ஏனம்அன்ன	315
ஐயனெய்யன்	15
ஐயன்முது	498
ஒடுங்கும்பிணி	325
ஒண்துவரார்	31
ஒருக்கியவுணர்	628
ஒருங்களிநீ	240
ஒருமை பெண்மை	4
ஒல்லையாறியு	281
ஒழுகியபுனன்	619
ஒளியார்விட	194
ஒளிறூபுலி	60

ஒள்ளிதுள்ள	317	கண்ணமர்	559
ஒற்றையேறு	15	கண்ணன்கடிக்	483
ஒன்றும்பல	380	கண்ணூர்கமழ்	188
ஒன்னார்புர	176	கண்நிறைந்த	17
ஓங்கியமுவி	554	கண்ணிற்கன	459
ஓடுந்திரிபுர	482	கண்ணுதலான்	539
ஓடேகலன்	185	கண்ணுமூன்று	265
ஓதிநன்குண	229	கண்மேல்கண்	372
ஓரியல்பில்லா	420	கதமிகுகரு	136
ஓருருவாயினே	648	கதிமலிகளி	143
கங்காளர்கயி	664	கதிரொளி	672
கங்கையோர்வார்	547	கந்தங்கமழ்	253
கச்சுமொள்	436	கந்தமர்சந்து	526
கஞ்சத்தேனு	644	கந்தமாமலர்	690
கடந்தாங்கிய	52	கந்தனைமலி	431
கடமணி	440	கயலார்தடம்	177
கடலின்நஞ்ச	18	கரத்தான்	69
கடலென	122	கரமிருபது	632
கடிபடுகமல	231	கரமுதலிய	141
கடியாரலங்	356	கரம்பயில்	628
கடியார்கொன்	376	கரவின்றி	209
கடுகூரெரிமா	478	கரிகாலன	60
கடுக்கொள்	494	கரிதாகிய	198
கடைநெடு	523	கரிந்தாரிடு	687
கடையார்கொ	354	கரிபுன்புற	259
கடையார்மாட	238	கரியகண்டனை	490
கட்டார்	354	கரியமாலுஞ்	405
கணைநீடெரி	189	கரியவனன்	225
கணையும்வரி	255	கருக்கமெல்	162
கண்கொணுத	390	கருக்குமணி	483
கண்தான்கமு	376	கருதார்புர	503

கருதுசம்ப 505
கருத்தன்கட 686
கருப்பமிகு 678
கருவார்பொழில் 406
கருவுடையா 582
கருவைக்கழி 592
கரைபொரு 422
கரையார்கடல் 398
கரையார்கடனு 469
கரைஉலாவு 165
கலமார்கடலுள் 369
கலிகெழு 450
கலைபுனை 246
கலைமகள் 627
கலைமலியக 630
கலைமலிவிர 620
கலையவன் 562
கலையார்கலி 204
கலையார்மதி 201
கலையுடை 616
கல்லார்மதிற் 184
கல்லார்வரை 260
கல்லானிழற் 68
கல்லானிழன்மே 470
கல்லுயர்இஞ்சி 600
கல்லுயர்மாக் 226
கல்வியாளர் 172
கவர்பூம் 351
கவிழமலை 256
கழலினேசை 10
கழலுஞ்சிலம் 504

கழன்மல்குகா 442
கழன்மல்குபந் 22
கழுதுதுஞ்சுங் 412
கழுமலமூது 647
கழுவார்துவ 184
கறிவளர்குன் 217
கறுத்தமனத் 551
கறுத்தான் 178
கறைமலி 144
கறையார்மிட 98
கறையிலங்குமலர் 342
கற்றவர்கள் 662
கற்றவர்திரு 580
கற்றறிவெய் 510
கற்றுங்கெரி 451
கற்றைச்சடை 594
கனமலர்க்கொன்றை 229
(வாழ்கொளிபுத்தூர்)
கனமலர்க்கொன்றை 247
(பாச்சிலாச்சிராமம்)
கனைத்தெழுந்த 294
கன்னவிலு 346
கன்னியராடல் 22
காடடைந்த 271
காடதணி 594
காடும்நாடுங் 172
காட்டினுலு 318
காணவுள் 489
காணுமாறரி 677
காண்தகைய 333
காதார்கன 177

காதிலங்கு	8
காமருகண்	530
காமருவார்	244
காமன்எரிப்	24
காமனெழில்	476
காமன்வேவ	496
காரடைந்த	273
காரமண்	308
காரார்கொன்றை	313
காரார்வண்ண	158
காரார்வயல்	155
காரிருளுரு	434
கார்கொண்ட	441
காலதுகங்கை	597
காலைநன்	419
காலையிலுண்	560
காவினையிட்டுங்	589
காழிமாநகர்	497
காழியானய	647
கானமுஞ்சுட	440
கிடந்தானி	460
கிளர்மழை	430
கீர்த்திமிக்க	610
குடைமயிலி	621
குணமறிவு	138
குணமின்றிப்	661
குண்டமணர்	225
குண்டர்சா	231
குண்டர்தேரரு	508
குண்டாடுகுற்	668
குண்டாய்	525
குண்டுந்	237
குண்டுபட்ட	685
குண்டுமுற்றி	167
குண்டைக்கு	258
குயிலார்கோல	400
குரவங்கமழ்கு	481
குரவங்கமழ்நறு	79
குருந்தவன்	581
குரும்பையாண்	208
குலவெஞ்சிலை	374
குழலார்சடை	398
குழலினோசை	363
குழலின்னி	112
குழையார்	306
குளித்துணு	584
குளிரும்மதி	471
குளிர்ந்தார்	686
குறிகலந்த	8
குறியார்திரை	533
குறியில்சம்	473
குறைபடாத	266
குற்றமறுத்தார்	48
குற்றமின்மை	290
குன்றம்மது	115
குன்றினுச்சி	297
கூரார்வாளி	357
கூருலாவு	173
கூர்வாளர	453
கூவிளங்கை	595
கூழையங்	696
கூறுகொண்டா	297

கூறைபோர்க்கு	163	கோதுசாற்றி	171
கூனற்பிறை	90	கோலமுடி	95
கேடும்பிறவி	252	கோவணி	42
கேணவல்லா	536	சங்கக்கயனு	203
கைம்மகவே	513	சங்களவிய	575
கைம்மாமத	87	சங்கு ஒளியி	24
கையடைந்த	264	சங்கொளிர்	585
கையதுவெண்	599	சங்கோடு	350
கொக்கிறகோடு	227	சடங்கொண்ட	605
கொக்கின்னிற	201	சடைதனைத்	215
கொங்கணி	602	சடைமுயங்	5
கொங்குசெரு	154	சடையன்	689
கொச்சையண்	647	சடையார்	189
கொடியார்நெடு	109	சடையார்பிறை	199
கொட்டும்பறை	474	சடையார்புன	63
கொட்டுவரக்க	596	சடையினர்மே	421
கொண்டலு	446	சத்தியுளஈதி	586
கொந்தண்பொழிற்	463	சந்தநன்	585
கொய்தவம்மல	578	சந்தம்மலர்	480
கொய்யணிநறு	570	சந்து அளறேறு	23
கொலைக்கணி	448	சமண்சாக்	196
கொலையார்தரு	195	சரிகுழல்	586
கொலையார்மழு	464	சலசந்த	29
கொலைவரை	515	சலசலசொரி	618
கொல்லுங்	475	சனம்வெரு	146
கொல்லைமுல்லை	263	சாகம்பொன்	683
கொல்லைவிடை	154	சாக்கியப்பட்டு	593
கொழுமலரு	122	சாடிக்காலன்	170
கொன்னவின்ற	290	சாத்துவர்	597
கோடவிரும்பு	552	சாம்நாளும்	326
கோணுகணை	454	சாந்தங்கம	257

சார்ந்தவர்க் 578
சாலமாமலர் 310
சிக்கார் 461
சிட்டமார்ந்த 278
சித்தந்தெளி 492
சிந்தையில் 568
சிரங்கையி 212
சிலேதனை 140
சிவனுறை 576
சிறுதேரரு 188
சிறைகொண்ட 202
சிறையாரு 336
சிறையார்வண் 408
சிறையார்வரி 464
சினமலிகரி 131
சினமலியறு 135
சீரணிதி 227
சீரூர் 494
சீர்கெழு 603
சீலம்மிகு 104
சுடர்மணிமா 646
சுடுகூரெரி 478
சுடுநீறணி 93
சுடுமணி 601
சுரர்மாத 74
சுருதிகள் 136
சுழிந்தகங் 302
சூடுமதி 541
சூடுமிளந்திங்கட்
(நல்லூர்) 474
சூடுமிளந்திங்கட்
(வடுகூர்) 478
சூதகஞ்சேர் 367
சூலப்படையான் 181
சூலப்படையொன் 389
சூலப்படை 110
செங்கணர 415
செங்கமலப் 530
செடிநுகருஞ் 341
செடியமண் 324
செடியார் 191
செதுவாய் 76
செந்தளிர் 679
செந்துவராடையினு 548
செப்பநெஞ் 168
செம்மைச் 641
செம்பொனின் 555
செம்பொன்செய் 41
செம்மென் 80
செய்தவத் 12
செய்பூங் 234
செய்யக 484
செய்யதண் 583
செய்யமேனியீர் 495
செய்யமேனிவெ 10
செய்யருகே 27
செய்யர்செய்ய 169
செருக்குவாய் 646
செருவடை 620
செல்வநெடு 452
செல்வமல்கி 693
செல்வமல்கு 519

செறியார்க	199	தடுக்கையுட	108
செறியார்தரு	101	தட்டிட்டே	643
செறியார்முளரித்	25	தட்டையிடு	387
செற்றவர்	31	தணிநீர்	351
செற்றிட்டே	639	தணியார்மதிசெஞ்	211
சேயடைந்த	274	தணியார்மதியர	99
சேவுயருந்	656	தண்டமர்	243
சேற்றெழுந்	334	தண்ணம்பு	477
சோலைமிக்க	293	தண்ணறு	40
சோலையில்	545	தண்ணுர்	526
ஞாலத்துயர்	454	தண்புனலும்	280
ஞாலத்தை	212	தமிழினீர்	411
ஞாலமுண்ட	303	தருக்கினவர	567
ஞாலமேழு	501	தருக்கின்	692
ஞாழல்கம	262	தருஞ்சரத	659
ஞானத்திர	384	தருவளர்	527
தகரமணி	482	தரைமுதலு	624
தக்கனது	670	தரையொடு	126
தக்கன்பெரு	470	தலமல்கிய	96
தக்கன்தன	53	தலைமதி	120
தங்குமோ	321	தலையவன்	582
தங்கையிட	457	தலையின்	202
தசமுகனெ	646	தழல்சேர்	76
தடம்கொண்ட	185	தழுக்கொள்	149
தடநிலவிய	125	தழைமயி	585
தடமலிபுக	617	தழையார்	73
தடமலிபொ	525	தளருங்	479
தடவரைய	587	தளையவிழ்	29
தடுக்காலுட	83	தறிபோலா	588
தடுக்கமருஞ்	347	தறியார்து	192
தடுக்குடைக்	44	தனமணி	588

தாள்நுதல் 6
தாதலர் 543
தாதார்கொன் (ஒத்தூர்) 307
தாதார்கொன் (கயிலை) 380
தாமரைமே 560
தாயவனு 577
தாயுநீயே 284
தாரார்கொன் 362
தாரிடுகொன் 222
தார்கொள் கொன்றை 409
தாவியவன் 345
தாழ்ந்தகு 586
தாறிடு 530
திகழ்சிவ 139
திகைநான் 609
திக்கிற்றே 638
திங்கட்கே 636
திங்களம் 40
திங்களுச்சி 277
திண்ணூர் 360
திருநீலமல 608
திருமலர்க் 426
திருமாலடிவீழத் (நாகை) 468
திருமாலடிவீழ (வடுகூர்) 480
திருவார்சிலை 195
திருவிலிச் 693
திருஒளி 219
திரைகளை 28
திரைபொரு 569
திரையார்புனலோ 462
திரையார்புனல் 193
தீதிலாமலை 583
தீயராய 288
துஞ்சவரு 252
துஞ்சுநாள் 228
துஞ்சும்போ 283
துடிகளோடு 170
துணியாரு 479
துணிவளர் 245
துணிவுடைய 631
துணையல் 537
துவராடை 204
துவரும்புரி 479
துவருறுவிரி 617
துவர்சேர் 353
துளங்குஞ் 260
துளங்கும் 200
துளிவண்டே 455
துள்ளுமிரு 493
துறைபல 603
துறைமல் 514
துறையவன் 582
துனியுறு 602
துன்பந் 492
துன்னலின்ஆ 228
துன்னூர் 510
தூசுபோர்த் 311

தூர்த்தனைச்	507	தொழுமனத்	491
தூவணநீ	697	தொழுவார்	171
தெங்குநீண்ட	268	தோடணிகு	441
தெரிந்தில	165	தோடணிம்மலர்	683
தென்றிலரக்	491	தோடுடையகா	275
தென்னிலங்கை	11	தோடுடையசெவி	1
தேக்கும்	187	தோடுடையானொ	536
தேங்கமழ்	442	தோடுடையான்	340
தேடிக்காணூர்	387	தோடொர்காதி	503
தேமருவார்	697	தோட்டீரே	306
தேமாங்க	57	தோலினால்	318
தேயநின்றான்	539	தோலுடை	28
தேரரமணரும்	500	தோலுநூறு	682
தேரரமணரை	491	தோலுந்தம்	691
தேரரக்கன்	364	தோலொடு	34
தேரார்தரு	107	தோற்றவன்	565
தேவராயு	300	நகலார்	350
தேவாவரனே	510	நகுவெண்	486
தேவியோர்கூறி	47	நகையார்	671
தேனகத்தார்	536	நடைமரு	614
தேனமர்தரு	625	நதியதன	229
தேனயம்பாடு	517	நம்பனை	348
தேனார்மத	462	நயர்காழி	213
தேனினுமினி	433	நரையார்விடை	688
தேனுமாயமுது	427	நலம்கொள்கா	151
தேனைவென்ற	152	நலமலிஞான	613
தேன்மலர்க்	588	நலமலிதரு	128
தொங்கலு	338	நலமாகியஞான	196
தொடுத்தார்	381	நலமார்மறை	473
தொடையார்	309	நலமிகுதிரு	142
தொண்டர்	211	நலனாயபலி	607
தொழிலால்	178	நலிதருதரை	624

நல்லகேள்வி 163
நல்லபுனற் 548
நல்லம்மலர் 114
நல்லாரறஞ் 469
நல்லாரும் 313
நல்லார்தீமே 455
நளிர்காழி 200
நறவம்நிறை 413
நறவமார் 490
நறவார்புகலி 159
நறுநீருகும் 689
நறைகொண்ட 337
நறைமலி 134
நல்பதங்கள் 335
நனிவளர் 567
நன்றுநான் 307
நன்றுடை 513
நன்றுதீதென் 357
நன்றுநகு 344
நாகத்தணை 472
நாகபணம் 23
நாகமும்வான் 558
நாகம்வைத்த 12
நாடவல்ல 166
நாணமுடை 347
நாணுதுடை 517
நாணுரமணர் 405
நாணெடுகூடி 250
நாதனென் 489
நாமருகேள் 35
ஞாலுங்குலைக் 38
நாளாயபோ 343
நாறவிண்ட 161
நாற்றமலர்மிசை 592
நாற்றமலர்மேல் 150
நாற்றமாமலரா 692
நாற்றமிக்க 289
நானுவித 53
நிலனெடு 234
நிழலார்சோலை 150
நிழலார்வயல் 94
நிழலான்மலி 353
நிழலினுர் 322
நிறையவன் 566
நிறைவு 507
நிறைவெண்கொ 452
நினைப்பெனு 604
நினைவார்நினை 415
நின்றுண்சமணர் 399
நின்று உண் சமணர் 505
நின்றுண்ணும்சமண் 212
நின்றுமலர்தூவி 498
நின்றுமுது 500
நின்றுலாம் 666
நின்னடியே 295
நீடலர் கொன்றையொடு (கொடிமாடச்) 555
நீடலர்கொன்றையொடு (பாதளீச்சரம்) 557
நீடலர்சோதி 522
நீடவல்லநிமிர் 173
நீடவல்லார் 299

நீடிடுஞ்சடை	435	நூலடைந்த	269
நீடும்புனற்	196	நெடியர்சிறி	479
நீண்டசடை	397	நெடியானுன்	261
நீதிபேணு	506	நெடியான்	417
நீதியறியாதா	102	நெடியான்பிரம	399
நீத்தநெறி	475	நெய்தலாம்பல்	162
நீந்தலாகா	408	நெய்தவழ்	34
நீரகலந்தரு	240	நெய்யணிமூவி	550
நீரடைந்த	264	நெருப்புரு	598
நீரார்முடி	397	நெறிநீர்மை	106
நீரிடங்கொண்	522	நெறியில்வரு	115
நீரின்மல்	9	நேருமவர்க்	696
நீரின்மிசை	551	நொந்தகடலை	391
நீருளான்	428	நோதல்செய்	571
நீரொடுங்கு	284	நோயும்பிணி	329
நீரோடு	665	நோய்புல்கு	501
நீர்பரந்த	2	நோற்றலா	437
நீலநெய்த	520	பகடூர்பசி	330
நீலமாமிடற்	501	பகலுமிர	256
நீறடைந்த	269	பக்கம்வாழை	519
நீரணிமேனியனுய்	547	பங்கமேறு	367
நீறணிமேனியனீ	562	பங்கயங்கள்	164
நீராரகல	391	படரொளி	630
நீருர்திரு	191	படவரவே	571
நீறுசேர்வ	690	படிநோன்	480
நீறுடையார்	48	படைப்புந்	51
நீறுபூசினீர்	495	படையார்	485
நீறுமெய்பூசி	248	படைஇலங்கு	14
நீற்றேறியதிரு	106	படையுடைமழுவின	565
நுகரார	93	பட்டைத்து	454
நுணங்குமறை	255	பணிந்தவ	610
நுண்ணியான்	339		

பணியுடை	43	பல்லடைந்த	263
பணிவாயு	235	பல்லியல்	527
பணைமுலையு	566	பல்லிலோடு	288
பண்டாழ்	463	பல்வீழ்ந்து	329
பண்டேழு	70	பவளவண்ணப்	165
பண்நிலாவும்	9	பழகுந்தொ	506
பண்ணினார்மறை	322	பழுதிலகட	134
பண்ணும்பத	66	பறப்பைப்	451
பண்உறு	216	பறிகொள்தலை	457
பண்பழனக்	332	பறையின்	111
பதைத்தெழு	578	பறையுஞ்	254
பத்தராயி	506	பறையுநம்	322
பத்தரேத்தும்	366	பறையும்	92
பத்தரோடு	14	பற்றியொரு	114
பத்தர்கணம்	26	பற்றுமாகி	300
பத்தர்மன்	316	பனியார்	194
பத்திப்பேர்	640	பன்மலர்	560
பத்துத்தலையோனைக்	499	பன்றிக்கோல	642
பந்தத்தால்	634	பல்நீர்மை	328
பந்தமுடைய	414	பாகமுந்	42
பந்தவிடை	504	பாங்கிலா	423
பந்தார்விரலு	105	பாங்கினல்	296
பயிலும்மறை	458	பாங்குநல்ல	160
பரக்கினார்	319	பாசமறுப்	493
பரக்கும்தொல்	511	பாடகமெல்	39
பரக்கும்	511	பாடலனான்	545
பரக்கும்பெ	392	பாடல்முழு	35
பரிந்தவன்	561	பாடுடைக்	424
பருமாமதகரி	86	பாடுவாருக்	301
பலவிலமிடு	443	பாதம்பல	260
பலவும்பய	182	பாந்தளார்	490

பாராரே 333
பாரார்வி 208
பாரிதனே 658
பாரும்விண் 166
பாரோர் 466
பார்த்தவன் 577
பார்மலிந் 232
பாலமதி 253
பாலனநீ 553
பாலனும் 426
பாலில்நறு 339
பாலுந்நறு 478
பாலுநெய் 168
பாலுந்துறு 97
பாறணி 581
பால்நாறு 335
பிச்சக்கு 477
பிச்சைக்கே 635
பிடியதனு 623
பிணிகொள்ஆ 169
பிணிகொள் 496
பிணிநீர் 326
பிணிபடு 117
பிணியும் 482
பிண்டமறு 492
பிண்டியேன்று 393
பியல்ஆர் 349
பிரமபுரத் 645
பிரமனும் 684
பிறந்தபிறவி 593
பிறப்பாதி 687
பிறவியறுப் 492
பிறைகொள் 395
பிறைபெற்ற 607
பிறையணி 116
பிறையார்சடை 504
பிறையுடை 30
பிறையும்நெடு 480
பிறையும்புன 373
பிறையும்மரவும்முற 190
பிறையுமரவும்பு 169
பின்றாழ்சடை 396
பின்னியதாழ் 50
பின்னுசடை 416
பீரடைந்த 272
பீலிம்மயில் 58
புகழ்மகடு 627
புடைபுல்கு 603
புண்டரிகத்தவன் 645
புண்ணியார்பூதி 45
புத்தராருகர் 487
புத்தரொடமணர் 633
புத்தரோடுச 267
புத்தரோடுபுன் 292
புத்தரோடுபொ 6
புத்தர்கடத் 698
புந்தியர் 633
புந்தியொன்றி 16
புயம்பல 449
புரமெரித்த 265
புரிகொள் 378
புரிசடை 283

புலனைந்தும்	663	பெண்ணார்	472
புல்கவல்ல	276	பெண்ணினல்	583
புள்வாய்போ	237	பெண்ணினைப்	419
புவம்வளி	132	பெண்ணோர்பாகமு	170
புவிமுதலைம்	660	பெயலார்	349
புற்றில்	13	பெரியமேரு	18
புனலிலங்	323	பெரியவன்சி	579
புனைதல்	197	பெரியவன்பெண்	567
புனையழலோ	36	பெருகிய	124
புனையும்விரி	466	பெருகும்புன	59
பூசுரர்சேர்	646	பெருக்கப்	155
பூணற்பொறி	148	பெருக்கெண்	529
பூண்நெடு	222	பெருந்தடங்	657
பூண் தங்கு	36	பெருந்தண்சா	521
பூண்டவ்	112	பெருமைகள்	443
பூதமும்பல்	215	பெற்றமாசு	151
பூதம்பாடப்	317	பேயடைந்த	271
பூத்தேர்ந்தா	305	பேயாயின	92
பூந்தராய்ப்	508	பேய்பலவு	558
பூமகடன்	661	பைம்மாநா	233
பூவார்குழ	187	பைஆர்அர	153
பூஆர்கொன்	152	பையாரு	309
பூவார்பொய்	403	பையுடைய	537
பூவார்பொன்	673	பைவாயர	358
பூவார்மலர்	383	பொங்கார்	395
பூவியல்புரி	622	பொங்கிவரும்	46
பூவினில்	41	பொங்கிள	249
பூவுந்திங்	314	பொங்குநடை	694
பெண்தான்	148	பொடிகள் பூசித்	518
பெண்டிர்	282	பொடிகொள்	378
பெண்ணுணெ	466	பொடிபுல்கு	571

பொடியார் மெய்	608
பொடியுடை	221
பொதியிலா	285
பொந்தின்னி	102
பொய்யாமொழி	375
பொய்யாவேத	359
பொரிபடு	615
பொருகடல	621
பொருவாரெ	82
பொருளார்	108
பொழிலவ	566
பொழிலார்	105
பொறியரவ	675
பொன்திகழ் ஆ	554
பொன்றிகழ்கா	572
பொன்றிரண்	432
பொன்அம்கா	236
பொன்னடி	646
பொன்னுர்	418
பொன்னியல்கொ	523
பொன்னியல்சீ	552
பொறியரவ	675
பொன்னியல்தா	32
பொன்னியல்மாட	512
பொன்னெடு	699
போகமார்ந்த	275
போதார்	402
போதியர் பிண்டிய	556
போதியாரும்	371
போதுபொன்	520
போதுபொன்	314
போரார்கட	382
போரார்மத	356
போர்மலி	241
போர்மிகு	336
போழம்பல	257
மகரத்தாடு	368
மங்கைபங்கி	496
மங்கையங்	362
மங்கையோர்கூறு	542
மசங்கற்சமண்	71
மஞ்சைப்போழ்	383
மஞ்சோங்கு	375
மடைச்சுர	444
மடையில்	148
மணியார்திகழ்	471
மணியார்முது	498
மண்தான்	370
மண்டையிற்	576
மண்ணுர்முழவ	330
மண்ணுதல்	572
மண்புனலன்	574
மண்பொடி	218
மதியால்	460
மதியொன்றிய	201
மத்தக்களிரு	89
மத்தநன்	555
மத்தமத	549
மத்தமலி	96
மத்தாவரை	72
மந்தம்முழவம்	514
மயங்குமா	303

மயதீர்மை	327	மல்கிய	559
மயிலார்சா	149	மல்லல்மும்	319
மயில்புல்கு	85	மழுவாளேந்தி	157
மரவஞ்சிலே	59	மழைநுழை	614
மரவத்தொடு	88	மழையார்சா	533
மருதிடைநட	617	மறக்குமன	591
மருந்தவன்	565	மறந்தான்கரு	386
மருந்தன்	686	மறிதிரை	618
மருவலர்	127	மறுத்தவர்	563
மருஆர்கு	156	மறுமாணுரு	528
மருவார்ம	355	மறைகலந்த	4
மருவியவல்	604	மறையவனுலகவன்	616
மருவியேங்	163	மறையவனுலகவன்	570
மருளுடை	613	மறையவன்மதி	631
மருள்செய்	200	மறையானெடு	487
மலேபலவளர்	133	மறையின்னி	390
மலேபுரிந்த	295	மறையுடையாய்	294
மலேமகள் தனே	126	மறையும்மோது	691
மலேமகள்மறுகிட	573	மற்றிணே	591
மலேமல்கு	516	மனமார்தரு	103
மலேயதனுரு	166	மனமுலாமடி	428
மலேயார்சார	519	மன்மதனே	629
மலேயார்தரு	104	மன்ஞனவ	100
மலேயான்மக	54	மன்னிமாலொ	312
மலேயான்மக	157	மன்னியவலி	625
மலேயார்மாட	535	மன்னியூர்	506
மலேயார்மங்	402	மாகந்தோய்	314
மலேயான்மகளஞ்ச	54	மாகரஞ்சே	369
மலேயான்மகள்கண	98	மாசடைந்த	273
மலேயினர்	425	மாசர்ருடம்	159
மலேயெடுத்த	266	மாசுமெய்யர்	279

மாசூர்வடி	465	மின்னில்செஞ்	557
மாசேறிய	56	மீத்திகழன்	511
மாடமர்சன	627	முகில்சேர்	78
மாடமல்கு	167	முடிகையினுல்	30
மாடவீதிமன்	358	முடிகொள்	396
மாடவீதிவரு	521	முடியார்தரு	100
மாடார்மலர்க்	182	முடியார்மன்	402
மாடேயோ	153	முட்டாமுது	88
மாணுவென்றி	153	முதிருறு	121
மாண்டார்	178	முதிர்சடை	631
மாதர்மட	694	முத்தியர்	45
மாதொருபா	509	முந்திநின்ற	164
மாந்தர்தம்	248	முந்தியிவ்வைய	524
மாலாயிரம்	459	முந்நீர்சூழ்	379
மாலினுக்கு	230	முருகுவிரி	481
மாலினெடு	267	முலைத்தட	590
மாலுமயனும்	49	முலையாழ்கெழும்	352
மாலும்பிரம	456	முழங்கொலி	674
மாவடைந்த	272	முளிவெள்	410
மாவினுரிவை	379	முள்ளின்மே	606
மாறிலவுண	549	முற்றலாமையிள	2
மாறிலாமணி	310	முற்றுதசொர்	188
மாறிலாமல	320	முற்றுஞ்சடை	481
மாறிலாமாதொர்	587	மூன்பனை	611
மாறெதிர்	574	முன்றில்	334
மானுரரவு	82	முன்னிற்ப	70
மானிடமார்	242	முன்னுயிர்த்	448
மிக்கார்	306	முன்னெருகா	529
மிளிரும்மணி	86	மூத்துவராடை	243
மிளிரும்அர	464	மூப்பூர்	403
மின்னியலு	680	மூரல்வெண்	319

முரல்முறு	113	வசையறுவலி	128
மூவராய	164	வசைவிற்கொ	81
மூவருமாகிய	233	வஞ்சமனத்	345
மூவாவண்	410	மடந்திகழ்	239
மெய்த்தன்னுறும்	99	வடிகொள்வா	535
மெய்த்துலாவு	175	வடிவுடைய	632
மெய்த்தாறு	669	வணங்கிம	192
மெய்யராகி	282	வண்டணைகொன்றை	421
மெய்யின்மாசர்	175	வண்தரங்க	331
மேகத்திடி	87	வண்டர்மும்	323
மேலதுநான்	250	வண்டார்	51
மேலோடிவீசும்	667	வண்டுவைகு	20
மேனியிற்சீ	673	வண்ணநன்	563
மேனின்றிழி	461	வண்ணமல	467
மைசேர்	363	வண்ணவெண்	682
மைச்செறி	438	வந்தமணலா	344
மைத்தகுமேனி	524	வந்தித்திருக்	386
மைந்தணி	542	வந்தியோடு	371
மைம்மரு	21	வம்பார்குன்	518
மைம்மலர்க்	434	வம்மின்னடி	65
மைம்மாநீலக்	520	வயமுண்டவ	55
மையாடிய	91	வரந்திகழு	681
மையாரொண்	452	வரந்தையான்	338
மையார்நிற	183	வரமுன்னி	207
மையினார்மலர்	340	வரமொன்றி	203
மொய்சேர்	531	வரிந்தவெஞ்	610
மொய்த்து	304	வரியாயமல	608
மொய்யார்	499	வரியார்	393
மொய்வல்	368	வரியுறு	118
மொழிசூழ்	467	வரிவளரவி	439
வசையறுமலர்	147	வருநலம	615

வருமாந்த	453
வரைதிரிதர	630
வரைபொருதி	120
வரையார்சந்	156
வரையார்திர	404
வரையொன்றது	203
வலங்கொள்	468
வலமார்படை	177
வலியின்மதி	176
வல்லிநுண்	422
வல்லியந்தோலு	547
வழங்குதிங்கள்	302
வளமென	616
வளம்பட்ட	83
வளர்பூங்	523
வளைக்குமெ	688
வற்றுநதி	509
வன்புற்றிள	186
வன்றிறல	612
வன்னிகொன்	285
வாசம்கமழ்கா	457
வாசங்கமழ்மா	186
வாசம்மலர்	471
வாசிதீர	495
வாடல்வெண்டலைசூ	315
வாடாவிரி	181
வாணிலாச்	490
வாணிலாமதிபுல்	684
வாதுசெய்	437
வார்தைப்படு	458
வாய்ந்தவல்ல	611
வாரார்கொங் (குடந்தை)	401
வாரார்கொங் (செம்பொன்)	156
வாரிமாகம்	301
வாருறுகொங்	554
வாருறுமென்	695
வாருறுவன	561
வாரேற்ற	337
வார்மலி	698
வாளமர்வீ	242
வானத்துயர்	389
வானமர்மதிபுல்கு	611
வானமர்மதியொடு	563
வானூர்திங்கள்	158
வானூர்சோதி	407
வானிற்பொலி	85
விடங்கொணு	292
விடத்தார்	191
விடலேறு	664
விடைசேர்	180
விடைத்தவல் (பாம்புரம்)	230
விடைத்தவல் (ஐயாறு)	613
விடையமர்ந்து	287
விடையார்கொடியு	94
விடையான்	499
விடையினர்	619
விடையுமேறு	693
விண்டமாம்	320

விண்டலர்பொழி	645	விளங்கொளி	645
விண்டலர்மத்த	554	விளவார்கனி	61
விண்தான்	417	விளையாத	74
விண்ணவருக்	528	வினைகெட	119
விண்ணவர்தம்	612	வினையாயின	392
விண்ணோர்திங்கட்	313,409	வீடிலான்	324
விண்ணியல்மா	220	வீடுபிறப்பெ	546
விண்ணியல்வி	424	வீணடைந்த	270
விண்ணிழி	26	வீழிம்மிழலை	71
விண்ணுலகாள்	590	வீளைக்குரலு	374
விண்ணுலாமதியஞ்	435	வீரூர்முலை	486
விண்ணுறு	695	வீறுநன்	574
விண்ணோர்க	54	வெம்கணானை	287
விண்ணோர்	485	வெம்கள்விம்மு	160
விண்மகிழ்ந்	3	வெம்சுடராடு	246
விதியாய்	176	வெம்சுடர்த்	278
வியரிலங்கு	5	வெஞ்சொல்	298
விரவிநீறுமெய்	691	வெடிகொள்	149
விரிதருபுலி	618	வெண்கோவ	185
விரியார்	503	வெண்செந்நெல்	605
விருதுபகரு	382	வெண்டலைமா	49
விருத்தனுகிப்	296	வெண்ணிறத்த	162
விரையாலு	607	வெந்தலாய	364
விலங்கலொன்று	291	வெந்தநீற்றினர்	316
விலங்கலொன்றே	449	வெந்தவெண்ணீற	553
வில்லியநுண்	542	வெந்தவெண்பொடி	681
விழவாரொ	394	வெந்துவர்	543
விழுநீர்	180	வெந்துறு	546
விழையாருள்	236	வெப்புந்திய	62
விளங்கும்பி	84	வெம்மைமிகு	670
வளங்கொண்	688	வெய்யதண்	515

வெய்யவினைதீ	493	வேதமோர்	544
வெரிநீர்கொ	465	வேதர்வேதம்	690
வெவ்வமேனி	315	வேந்தாகி	666
வெள்ளத்தா	323	வேயுயர்	515
வெள்ளமது	541	வேய்முத்	377
வெள்ளமார்ந்து	11	வேரிமிகு	669
வெள்ளமெல்லாம்	537	வேருலா	429
வெறியார்மலர்த்	183	வேர்வந்து	61
வெற்றரையுழல்	564	வேழவெண்	298
வேதத்தொலி	56	வேனல்விம்மு	160
வேதமோதி	372	வையகநீர்	512

பாட்டு முதற்குறிப்பகராதி முற்றிற்று.

உ

சிவமயம்

சிவநேயச் செல்வரீர !

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்துமூன்றுவது குரு மகாசந்நிதானம்

ஸ்ரீ லஸ்ரீ சிவப்பிரகாசப் பண்டாரச்சந்நிதி அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம்

நிகழும் திருவள்ளுவர் - ஆண்டு 2026 மெய்கண்டார் - ஆண்டு 772, பவ - ஆண்டு தை மாதம் 14-ஆம் நாள் (28—1—95) சனிக்கிழமை முதல் 23 - ஆம் நாள் (6—2—95) திங்கட்கிழமை வரை

ஆதீனக் குருமுதல்வர்

அருள்திரு நமசிவாயமூர்த்திகள் மகரத்தலைநாள் குருபூசை விழா

சிறப்பாக நடைபெறும். விழா நாட்களில்

திருஞானசம்பந்தர் அருளிய முதல் திருமுறையில் "சமய விளக்கம்" பற்றிய விரிவுரைகள்

வேணுவனலிங்க விலாசத்திலும் (கொலுமண்டபம்)

கலைநிகழ்ச்சிகள் அம்பலவாணர் கலையரங்கத்திலும் நிகழும்.

6—2—95 திங்கட்கிழமையன்று குருபூசை நிகழ்வுறும்.

அன்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு குருவருளும் திருவருளும் பெற்று இன்புற விரும்புகின்றோம்.

இங்ஙனம்,

திருவாவடுதுறை
11—1—95 } **காறுபாறு - வைத்தியநாதத் தம்பிரான்.**

காலை மணி 6 - 00 - 6 - 30 கொடியேற்றம்

திருமுறை விண்ணப்பம் ; "தமிழ்மறை இன்னிசைப் பண்மணி"

மாலை மணி 5 - 30 திரு. T. M. விஸ்வலிங்க ஓதுவார்,
திருவாவடுதுறை.

வரவேற்புரை : 6 - 30 புலவர். தவத்திரு. சுயம்புநாதத் தம்பிரான்,
திருவாவடுதுறை.

சிறப்புரை : 6 - 40 திரு R. சத்தியமூர்த்தி,
காவல்துறை துணை கண்காணிப்பாளர், மயிலாடுதுறை.

சொற்பொழிவு ; 7 - 10 "சமயப் பிரசாரமணி"
திரு. சு. கந்தசாமி பிள்ளை,
ஆதீன சமயப்பிரசாரகர், சுசீந்திரம். "சம்பந்தர் காட்டும் சிவம்"

மகிழ்வுரை : 8 - 20 புலவர் திரு. பா, மகாலிங்கம்,
நூலகர், சரசுவதிமகால் நூலகம், திருவாவடுதுறை.

குருபாத வாழ்த்து : 8 - 30

கலை நிகழ்ச்சி ; இரவு மணி 8 - 30 பொம்மலாட்டம் "விநாயகர் புராணம்"
ஸ்ரீமுருகன் சங்கீத பொம்மலாட்ட குழு, கும்பகோணம்.
டெல்லி சங்கீத நாடக அகாடமி புகழ்

திருமுறை விண்ணப்பம் ;		" திருமுறைக் கலாநிதி "
	மாலை மணி 5 - 30	திரு. சொக்கலிங்க ஓதுவார், திருமுறைப் பணியாளர், அருள்மிகு மாயூரநாத சுவாமி திருக்கோயில் மயிலாடுதுறை.
வரவேற்புரை :	,, 6 - 30	தவத்திரு. காசி விசுவநாதத் தம்பிரான், திருவாவடுதுறை.
சிறப்புரை :	,, 6 - 40	திரு. சா. மேகநாதன், B.Sc , கோட்டாட்சியர், கும்பகோணம்.
சொற்பொழிவு :	,, 7 - 10	" அருவிப் பொழிஞர் " "சொல்லின் செல்வர் " புலவர். திரு. வீ. செந்தில்நாயகம், M. A., A. M. A., B. Ed., ஆதீன சமயப்பிரசாரகர், முதுகலைத் தமிழாசிரியர், இராமசேடய்யர் மேனிலைப்பள்ளி, பத்தமடை. " முதல் திருமுறையில் இயற்கைஎழில் நலம் "
மகிழ்வுரை :	,, 8 - 20	திரு. சு. நாராயணசுவாமி, M. A., M. Ed., துணை ஆசிரியர், ஆதீன நடுநிலைப்பள்ளி, திருவிடைமருதூர்.
குருமரபு வாழ்த்து :	,, 8 - 30	

கலை நிகழ்ச்சி :	இரவு மணி 8 - 30	பொம்மலாட்டம் " திருநாளைப் போவார் " டெல்லி சங்கீத நாடக அகாடமி புகழ் ஸ்ரீ முருகன் சங்கீத பொம்மலாட்ட குழு, கும்பகோணம்.

மூன்றும் திருநாள் 30—1—95 திங்கட்கிழமை

திருமுறை விண்ணப்பம் :		"தேவார இசைமணி"
	மாலே மணி 5 - 30	திரு. சு. சம்பந்த தேசிகர், திருமுறைப் பணியாளர், அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயில், திருவிடைமருதூர்.
வரவேற்புரை :	,, 6 - 30	தவத்திரு. மீனுட்சிசுந்தரத் தம்பிரான், திருவாவடுதுறை.
சிறப்புரை :	,, 6 - 40	திருமதி. பேரா. அபயாம்பிகா, முதன்மையர், இசைத்துறை, அண்ணுமலேப் பல்கலேக்கழகம்.
சொற்பொழிவு :	,, 7 - 10	"பண்பாட்டுச் செல்வர்" திரு. செ. வைத்தியலிங்கன் M. A., M. Litt., தமிழ் ஆராய்ச்சி இணைஞர், அண்ணுமலேப் பல்கலேக்கழகம். "இசைக்கலே வளர்க்கும் திருக்கோயில்"
மகிழ்வுரை :	,, 8 - 20	புலவர். திரு. பா. மகாலிங்கம், நூலகர், சரசுவதிமகால் நூலகம், திருவாவடுதுறை.
குருமரபு வாழ்த்து :	,, 8 - 30	

கலே நிகழ்ச்சி : இரவு மணி 8 - 30		மயிலாடுதுறை திரு. S. சிவசுவாமி அவர்களின் மாணவன் "இன்னிசை இளவல்" பேட்டை சுக. பாவலன் வயலின் இசை

நான்காம் திருநாள் 31—1—95 செவ்வாய்க்கிழமை

திருமுறை விண்ணப்பம் :		" தேவார இளமணி "
	மாலை மணி 5 - 30	திரு அ. செந்தில் ஓதுவார், திருமுறைப் பணியாளர், அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயில் திருவிடைமருதூர்.
வரவேற்புரை :	,, 6 - 30	தவத்திரு. காசி விசுவநாதத் தம்பிரான் திருவாவடுதுறை.
சிறப்புரை :	,, 6 - 40	பேராசிரியர். A. ராஜ்மோகன், M. Sc., M. Phill., முதல்வர், அ. வ. அ. தன்னுட்சிக் கல்லூரி, மயிலாடுதுறை.
சொற்பொழிவு :	,, 7 - 10	பேராசிரியர். மா. வைத்தியலிங்கன், M. A., M Phill., திண்டுக்கல் " கூத்தும் நடைமும் குலவும் கோயில் "
மகிழ்வுரை ;	,, 8 - 20	திரு. சு. நாராயணசுவாமி, M. A., M. Ed., துணை ஆசிரியர், ஆதீன நடுநிலைப்பள்ளி, திருவிடைமருதூர்.
குருமரபு வாழ்த்து :	,, 8 - 30	

கலை நிகழ்ச்சி : இரவு மணி 8 - 30 " மதுரகான இசைச் செல்விகள் "

T. V. சுசீலா, M. A., B. Ed., T. V. இந்திரா, M. A., B. Ed.,
திருப்பனந்தாள்;

— இன்னிசை

திருமுறை விண்ணப்பம் : "தேவார இன்னிசைமணி"
மாலை மணி 5 - 30 திரு. ந. சோமசுந்தர ஓதுவார்,
திருமுறைப் பணியாளர், அருள்மிகு ஆத்மநாதசுவாமி திருக்கோயில்,
திருப்பெருந்துறை.

வரவேற்புரை : ,, 6 - 30 புலவர். தவத்திரு. சுயம்புநாதத் தம்பிரான்
திருவாவடுதுறை.

சிறப்புரை : ,, 6 - 40 திரு. K. வெங்கட்டராமன்,
பொது மேலாளர். சிட்டி யூனியன் வங்கி, கும்பகோணம்.

சொற்பொழிவு : ,, 7 - 10 திரு. வீ. ம. சாமிநாதன், ஆதீன சமயப்பிரசாரகர்,
வீரவநல்லூர். "சம்பந்தர் புகலும் புராணச் செய்திகள்"

சிறப்புச் சொற்பொழிவு: 8 - 10 முனைவர். திரு. இராம. பெரியகருப்பன்,
"தமிழண்ணல்" மதுரை. "தமிழாகரர் ஞானசம்பந்தர்"

மகிழ்வுரை : ,, 8 - 45 திரு. ஆதி. முருகவேள், M. A.,
ஆதீனப் புலவர், திருச்சி.

குருமரபு வாழ்த்து : ,, 8 - 50

பரிசு வழங்கல் ; ,, 9 - 00 அருள்திரு நமசிவாயமூர்த்திகள் சந்நிதியில், மகாவித்துவான் பிள்ளையவர்கள் நினைவுப் பரிசு வழங்கல். பெறுபவர் : "தமிழண்ணல்"

கலை நிகழ்ச்சி : இரவு மணி 8 - 30 'மயிலாடுதுறை நாத பிரம்மம்'
திரு. கௌரி. ஆறுமுகம் குழுவினர். — இன்னிசை

திருமுறை விண்ணப்பம் :		" தமிழ்மன்ற இன்னிசைப் பண்மணி "
	மாலை மணி 5 - 30	திரு. T. M. சபாபதி ஓதுவார், திருவாவடுதுறை.
வரவேற்புரை :	,, 6 - 30	தவத்திரு. காசி விசுவநாதத் தம்பிரான், திருவாவடுதுறை.
சிறப்புரை :	,, 6 - 40	திரு. நடன காசிநாதன், இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை.
சொற்பொழிவு :	,, 7 - 10	திரு. மா. சந்திரமூர்த்தி, M. A., பதிவாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை. " திருக்கோயிற் சிற்பங்கள் "
மகிழ்வுரை :	,, 8 - 20	திரு. சு. நாராயணசுவாமி M. A., M. Ed., துணை ஆசிரியர், ஆதீன நடுநிலைப் பள்ளி, திருவிடைமருதூர்.
குருமரபு வாழ்த்து :	,, 8 - 30	

கலை நிகழ்ச்சி :	இரவு மணி 8 - 30	" மதுரகான இன்னிசைச் செல்விகள் " T. R. இந்திரா & T. R. லதா திருவிடைமருதூர்.

— தேவார இன்னிசை

ஏழாம் திருநாள்	3—2—95	வெள்ளிக்கிழமை

திருமுறை விண்ணப்பம் :		"தேவார இசைமணி"
	மாலை மணி 5-30	திரு சு. சம்பந்த தேசிகர், திருமுறைப் பணியாளர், அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயில், திருவிடைமருதூர்.
வரவேற்புரை :	,, 6-30	தவத்திரு. விசுவநாதத் தம்பிரான், ஆதீனக் கிளை மடம் (மெய்கண்டார்மடம்) காஞ்சிபுரம்.
சிறப்புரை :	,, 6-40	திரு. R. பாஸ்கரன். இ. ஆ. ப. மாவட்ட ஆட்சியர், நாகை மாவட்டம்.
சொற்பொழிவு :	,, 7-10	வித்துவான் திரு. ச. இரத்நவேலன், ஆதீன சமயப் பிரசாரகர், சங்கரன்கோவில். "சம்பந்தர் வாக்கில் சைவத்தின் மேன்மை"
மகிழ்வுரை ;	,, 8-20	புலவர். திரு. பா. மகாலிங்கம், நூலகர், சரசுவதி மகால் நூலகம், திருவாவடுதுறை.
குருமரபு வாழ்த்து :	,, 8-30	

கலை நிகழ்ச்சி :	இரவு மணி 8-30	பொம்மலாட்டம் இந்திய ஜனாதிபதி பரிசுபெற்ற ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபா மயிலாடுதுறை, — பார்வதி கல்யாணம்

எட்டாம் திருநாள்	4—2—95	சனிக்கிழமை

திருமுறை விண்ணப்பம் ;		" தேவார இசைமணி "
	மாலை மணி 5 - 30	திரு. ந. சோமசுந்தர ஓதுவார், திருமுறைப் பணியாளர், அருள்திரு ஆத்மநாதசுவாமி திருக்கோயில், திருப்பெருந்துறை.
வரவேற்புரை :	,, 6 - 30	தவத்திரு. மாசிலாமணித் தம்பிரான், ஆதீனக் கிளை மடம், புளியங்குடி.
சிறப்புரை :	,, 6 - 40	திரு. R. ராஜாராமன், அஞ்சலகக் கண்காணிப்பாளர், கும்பகோணம்.
சொற்பொழிவு :	,, 7 - 30	திரு. சு. குஞ்சிதபாதம், ஆதீன சமயப்பிரசாரகர், கூனியூர். " சம்பந்தர் அருளும் நால்வேதநெறி "
மகிழ்வுரை :	,, 8 - 20	திரு. சு. நாராயணசுவாமி, M. A., M. Ed , துணை ஆசிரியர், ஆதீன நடுநிலைப் பள்ளி, திருவிடைமருதூர்.
குருமரபு வாழ்த்து :	,, 8 - 30	

கலை நிகழ்ச்சி :	இரவு மணி 8 - 30	பொம்மலாட்டம் இந்திய ஜனாதிபதி விருது பெற்ற " ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபா " மயிலாடுதுறை.

— கந்தபுராணம்

திருமுறை விண்ணப்பம் :		" திருமுறைக் கலாநிதி " " கலை மாமணி "
	மாலை மணி 5 - 30	திரு. சா. திருஞானசம்பந்தன், திருமுறைப் பணியாளர், அருள்மிகு சட்டநாத சுவாமி திருக்கோயில் சீர்காழி.
வரவேற்புரை :	„ 6 - 30	புலவர். தவத்திரு. சுயம்புநாதத் தம்பிரான், திருவாவடுதுறை
சிறப்புரை :	„ 6 - 40	மாட்சிமிகு மகாராணி D. இந்திரா தேவி B. A., சேது சமஸ்தானம், இராமநாதபுரம்
நூல் வெளியீடு:		திருஞானசம்பந்தர் அருளிய முதல் திருமுறை (குறிப்புரையுடன்)
முதற்படி பெற்று ஏற்புரை:	7 - 00	திரு. சாவர்க்கார். இ. ஆ. ப. ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.
சொற்பொழிவு :	„ 7 - 30	ஆங்கீரஸ. S. வேங்கடேச சர்மா, ஆதீன சமயப்பிரசாரகர், சென்னை. " ஆளுடைப் பிள்ளையின் அறவுரைகள் "
மகிழ்வுரை :	„ 8 - 45	திரு. ஆதி. முருகவேள், M. A., ஆதீனப் புலவர், திருச்சி.
குருமரபு வாழ்த்து	„ 8 - 55	
கலை நிகழ்ச்சி :	இரவு மணி 9 - 00	" ஆதீன இசைப் புலவர் " டாக்டர் சீர்காழி திரு. G. சிவசிதம்பரம், M. D., சென்னை. - இன்னிசை

குருபூசைத் திருநாள்

காலை மணி 7-15 அருள்திரு நமசிவாயமூர்த்திகள் தோத்திர நூல்கள் பாராயணம் ஆதீனம், ஆதீனத் திருக்கோயில் திருமுறைப் பணியாளர்கள்.

,, 10-30 குருபூசை

,, 11-40 1994-ஆம் ஆண்டு +2, 10-ஆம் வகுப்புகளுக்கான அரசு பொதுத் மோதிரம் வழங்கல்:

தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற திருவிடைமருதூரில் உள்ள திருவாவடுதுறை ஆதீனம் மேனிலைப்பள்ளி மாணவ மாணவியர்க்கு மோதிரம் வழங்கி ஆசியருளல்.

,, 11-50 1992–1994 ஆண்டு கால அளவில் நடைபெற்ற ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையப் பேராசிரியர்களுக்கும் தேர்வில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கி ஆசியருளல்.

நண்பகல் 12-00 மாகேசுவரபூசை

மாலை மணி 4-00 ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல்.

இரவு மணி 8-30 ஆதீன வித்துவான், நாதபிரம்மம் குன்னக்குடி திரு. வைத்தியநாதன் குழுவினர். வயலின் இன்னிசை

இரவு மணி 10-30 **பட்டணப்பிரவேசம்**

மகாவித்துவான் நினைவுப் பரிசு வழங்கல் :

திருஞானசம்பந்த சுவாமிகள் பதிகம் அருளி, தம் தந்தையார் சிவவேள்வி செய்யத் திருவாவடுதுறை அருள்மிகு மாசிலாமணிப் பெருமானிடம் பசும்பொன் ஆயிரம் கொண்ட் உலவாக்கிழி பெற்ற அற்புத நிகழ்ச்சி, பெருமான் ரதசப்தமிப் பெருவிழாவின் ஐந்தாம் திருநாளில் ஐதிக விழாவாக நடைபெற்று வருகிறது.

இவ்விழா நாள், ஆதீன மகாவித்துவான் திரு மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் நினைவுநாளும் ஆகும். சீர்வளர்சீர் குரு மகாசந்நிதானம் அவர்கள் மகாவித்துவான் பிள்ளையவர்களின் இனிய நினைவுச் சின்னமாக அவர்கள் திருவாவடுதுறையில் வசித்த வீடு இருந்த இடத்தில் புதியதாக அழகிய மாளிகையை அமைப்பித்து 1993 – ஆம் ஆண்டு அந்நாளில் திறப்பு விழா நிகழ்த்தியருளினுர்கள்.

மேலும், பொற்கிழி வழங்கு அவ்விழாநாளில் தமிழ்மூதறிஞர் ஒருவர் சிறப்பிக்கப் பெற வேண்டும் எனத் திருவுளம் கொண்டு அவ்வாண்டுமுதல் தமிழ்ச் சான்ருேர் ஒருவர்க்குச் சிறப்புகள் செய்து ஆசியருளுகிருர்கள். அவ்வண்ணம்

1993-ஆம் ஆண்டில் திரு. ஆதி. முருகவேள், எம். ஏ., அவர்களும்,
1994-ஆம் ஆண்டில் திரு. ப. ஆறுமுகம், எம். ஏ., பி. எச். டி,. அவர்களும் ஆசியருளப்பெற்ருர்கள்.

இவ்வாண்டு 1 — 2 — 95 புதன்கிழமை இரவு அருள்திரு நமசிவாயமூர்த்திகள் பூசை நிறைவில் சீர்வளர்சீர் குரு மகாசந்நிதானம் அவர்கள்

மதுரை காமராசர் பல்கலைக் கழகம், முன்னைத் தமிழ்த்துறைத் தலைவர்,
முனைவர். திரு. இரா்ம. பெரியகருப்பன் “ தமிழண்ணல் ” அவர்கட்கு

மகாவித்துவான் பிள்ளையவர்கள் நினைவுப் பரிசினை வழங்கி ஆசி அருளுகின்ருர்கள்.